௨

கணபதிதுணை

திருச்சிற்றம்பலம்.

திராவிடப்பிரகாசிகை.

திருவாவடுதுறை

மாதவச்சிவஞானயோகிசுப்பிரமணியதேசிகசுவாமிகள்

அருளாணைபெற்று

அவ்வாதீன வித்துவசிரோமணியாய் விளங்காநின்ற

சபாபதிநாவலரவர்களால்

இயற்றி,

சித்தாந்தவித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிடுவிக்கப்பட்டது.

நூற்பிரகாசனம்

சாலிவாகனசகாப்தம்-௧௮௨௧.

விகாரி-ஸ்ரீ கார்த்திகை-மீ

1899

Copyright Registered.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090

திராவிடப்பிரகாசிகையின்

இயன்முறை.

பாயிரம்	க
தமிழ்நன்மொழிப்பாரம்பரியவியல்	௬
இலக்கணமரபியல்	[illegible]
இலக்கியமரபியல்	[illegible]
சாத்திரமரபியல்	௧௭௮
ஒழிபியல்	௨௦௨

விஷயசூசிகை.

அ

அகத்திணையியல்	[illegible]
அகத்தியம்	௯௭
அகத்தியநூல் [illegible]	௨௭
அசநானூறு	[illegible]
அட்டபொருள்விளக்கம்	[illegible]
அகநானூறு [illegible] பாவமும் [illegible]	௧௫
அட்டாங்கயோகம்	[illegible]
அந்தகாரதூரவிடப்பாவம்	[illegible]

ஆ

ஆதிபகவச்செயல்நிரூபணம்	௧௭௯
ஆரியவேதமுந் தமிழ்வேதமும் [illegible] கருத்தினுடைய [illegible] பூணாத்திரம்	௧௦௬

இ

இடைச்சங்கம்	௩௦
இடையியல்	௬௪
இதிகாசவிலக்கியம்	௪௭௯
இலக்கணக்கொத்து	௭௯
இலக்கணவிளக்கச் சூறாவளி	௭௯
இலக்கணவிளக்கம்	௭௯
இரகுவமிசம்	௬௭௨
இராமாயணம்	௧௭௪
இருபாவிருபஃது	௨௦௦
இறையனாரகப்பொருளுரை வரலாறு	௭௰
இறைநூல்களியல்	௯௯

ஈ

ஈசுரநிந்தை	௪௨௯

உ

உண்மைநெறிவிளக்கம்	௨௦௫
உண்மைவிளக்கம்	௨௦௩
உத்தரவேதபாலதிகாரம்	௪௯௦
உத்தரவேததாமமுத்திநிரூபணம்	௪௫௨
உபதேசகாண்டம்	௧௭௮
உயிர்மெய்யியல்	௬௬
உரிப்பொருள்	௪௬
உரியியல்	௬௯
உருபியல்	௬௯
உவமவியல்	௫௨
உழிஞைத்திணை	௪௯

எ

எச்சவியல்	௬௯

எட்டுத்தொகை ௧௬௭
எழுத்ததிகாரம் ௯௫

ஏ

ஏகான்மவாதநிருபசரிதவயிக்கி
யும் பரவிடுபேறுகாலம் ௧௫௯

ஐ

ஐக்கியவாதசைவசாத்திரம் ௧௮௪
ஐங்குறுநூறு ௧௬௭

ஒ

ஒழிவிலொடுக்கம் ௧௮௪

க

கடைச்சங்கம் ௬௯
கடைச்சங்கவிலக்கியம் ௧௬௯
கந்தபுராணம் ௧௭௯
கருப்பொருள் ௪௯
கலித்தொகை ௧௬௮
கல்லாடம் ௧௬௯
கல்விச்சிறப்பு ௨௦௨
கல்வியறிவின்பயன் ௨௪௦
களவியல் ௩௮
கற்குநன்மாணாக்கரியல்பு ௨௦௬
கற்குநூன்முறை ௨௦௮
கற்குமுறை ௨௦௭
கற்பிக்குநல்லாசிரியரியல்பு ௨௦௫
கற்பியல் ௫௦

கா

காசிகண்டம் ௧௭௫
காஞ்சித்திணை ௩௭
காஞ்சிப்புராணம் ௧௭௫
காவியவிலக்கியம் ௧௬௯

கி

கிளவியாக்கம் ௯௪

கு

குண்டலகேசி ௧௭௨
குமரகுருபரமுனிவரியற்றிய
பிரபந்தங்கள் ௧௭௭
குறிஞ்சிப்பாட்டு ௧௬௬
குறுந்தொகை ௧௬௭
குற்றியலுகரப்புணரியல் ௯௯

கை

கைவல்லியம் ௧௮௯

கொ

கொடிக்கவி ௨௦௩

கோ

கோயிற்புராணம் ௧௭௫

ச

சங்கற்பநிராகரணம் ௨௦௪
சமயாசாரியர் காலநிருணயம் ௮௫
சமயாசாரியர் சொரூபசிவசாயுச்
சியப்பேறு ௧௦௦
சமயாசாரியர் சொரூபநிரூபணம் ௭௯
சமயாசாரியர் நிராசாரசிகை. ௬௨

சி

சித்தாந்த சாத்திரம் ௧௮௨
சித்தாந்தசாத்திரோற்பத்தித்தெளிவு ௧௮௯
சித்தாந்தசைவ ஞானசாத்திரம் ௧௯௦
சிந்தாமணி ௧௬௯
சிலப்பதிகாரம் ௧௭௩
சிவஞானசித்தி ௧௯௯
சிவஞானயோகிகளியற்றிய
பிரபந்தங்கள் ௧௭௭
சிவஞானயோகிகள்மாணாக்கர்
பிரபந்தங்கள் ௧௭௭
சிவஞானபாடியம் ௧௯௮
சிவஞானபோத வியாக்கியானம் ௧௯௮
சிவஞானபோதம் ௧௯௩
சிவதருமோத்தரம் ௧௯௦
சிவப்பிரகாசமுனிவரியற்றிய
பிரபந்தங்கள் ௧௭௭
சிவப்பிரகாசம் ௨௦௦
சிறுபாணாற்றுப்படை ௧௬௫

சூ

சூளாமணி ௧௭௨

செ

செந்தமிழ்ச்சொல் ௧௨
செந்தமிழ்நிலம் ௬௦
செந்தமிழ்வழக்கு ௧௪
செய்யுளியல் ௫௫

சை

சைவசமயநெறி ௧௯௦

சொ

சொல்லதிகாரம் ௯௯

ஞா

ஞானாமிர்தம் ௧௯௦

த

தண்டியலங்காரம் — எ
தமிழ்நெறியடைமாட்சி — கூ
தமிழ்ச்சொன்முடிபு — எ
தமிழ்ப்பொதுவெல்லை — ௧0
தமிழ்வேதம் திருச்சிற்றம்பல மெழுவாயிருவராக வோதுமுறை தெரித்தல் — ௧0ரு
தமிழ்வேதமுதலிய திருமுறைத் துதலிய பரம்பொருள் பரமசிவன் — ௧0௪
தமிழ்வேதமுதலிய திருமுறைகளை பாராயணமாத்திர மந்திரவோத்தாயத்தில் வேறுத்தல் — ௧0ரு
தமிழ்வேதமுதலிய திருமுறைகளோதற்குரிய வதிகாரிகள் — ௧0௪
தமிழ்வேதமுதலிய திருமுறைகளை வைதிகசைவவோத்தாமாறு விளக்கல் — கூக
தலைச்சங்கம் — உக

தி

திரிபதார்த்தமனுநித்தியம் — ௬ரு
திருக்களிற்றுப்படி — ௪கூக
திருக்குறள் — ௪உகூ
திருக்கோவை — ௧0கூ
திருத்தணிகைப்புராணம் — ௧எரு
திருப்பல்லாண்டு — ககக
திருப்புகழ் — ௧உக
திருமந்திரம் — ௪௪உ
திருமுருகாற்றுப்படை — ௪சாகூ
திருமுறைகள் சதுர்வேதமொக்கும் தமிழ்வேதமாதறெறிதல் — கூகூ
திருமுறையிலக்கியம், திருமுறையோத்தின் முறை வைப்பு — அஉ
திருவருட்பயன் — உ00
திருவள்ளுவமாலை — ௪௬உ
திருவாசகம் — ௧0அ
திருவிசைப்பா — கக௬
திருவுந்தி — ௪கூ0

து

துடைபத்திணை — ௪கூ

தெ

தென்மொழிமுடிபு — கூ

தே

தேவாரம் — ௫0கூ

தொ

தொகைமரபு — கூகூ
தொல்காப்பியப்பாயிரவிருத்தி, சூத்திரவிருத்தி — எக
தொல்காப்பியவுரைகள் — எக
தொல்காப்பியம் — ௬0

ந

நற்றிணை — கசுஎ
நன்னூல் — எஅ

நா

நாலாயிரப்பிரபந்தம் — ௧உஉ

நூ

நூன்மரபு — கூஉ

நெ

நெஞ்சுவிடுதூது — உ0௫
நெடுநல்வாடை — ௪கூகூ

நே

நேமிநாதம் — எஎ

நை

நைடதம் — கஎகூ

ப

பகவற்கீதை — ௪அகூ
பட்டினப்பாலை — ௪கூகூ
பதிப்புரைகாரர் தொல்காப்பிய வரலாறு பொருந்தாமை விளக்கல் — கூக
பதிற்றுப்பத்து — ௪கூஅ
பதினெண்கீழ்க்கணக்கு — ௪கூகூ
பதினோராந்திருமுறைப்பிரபந்தங்கள் — க௪கூ
பத்துப்பாட்டு — ௪கூகூ
பரமகாரணநிரூபணம் — ௪சுஅ
பராபரசுப்பிரமணியநிரூபணம் — அஅ
பராபரஞானப்பாகுபாடு — கூஉ
பரிபாடல் — ௪கூஅ
பரிமேலழகியாருரை ஏகான்மவாதிகட்கிட்டவிகாதமாமாறு — கருரு
பலவகைப்பிரபந்தவிலக்கியம் — ௧எஎ
பன்னிருபடலமுதலியன — ருஎ

பா

பாடாண்டிணை — ௬எ
பாடையியல்பு — கூ

பாரதம் கஎஎ

பி

பிரபுலிங்கலீலை கஎகூ
பிரபோதசந்திரோதயம் க௯௦
பிரமகீதை உ௯௪
பிரமவிவர்த்தனவாதநிராகரணம் கஙரு
பிரமோத்தரகாண்டம் கஎ௯
பிரயோகவிவேகநூலார்கொண்ட அகத்தியவரலாறு பிழையா தல் காட்டல் ௨௯
பிரயோகவிவேகநூலார்கொண்ட தொல்காப்பியவரலாறு பிழை யாதல் நிரூபித்தல் ௫௭
பிரயோகவிவேகம் எ,௦
பிறப்பியல் ஙஙு

பு

புணரியல் ஙஙு
புராணவிலக்கியம் கஎரு
புள்ளிமயங்கியல் ரு௩
புறத்திணையியல் ௫௫
புறநானூறு உ௦௪
புறவிருளென்னு மந்தகார மாலோகத்தினாலய மாகாமை ௧௫௭

பெ

பெயரியல் ஙஎ
பெரியபுராணம் கஏஅ
பெரும்பாணாற்றுப்படை கஙரு

பொ

பொருநராற்றுப்படை உகூ௪
பொருளதிகாரம் ஙக
பொருளியல் ௫௯

போ

போற்றிப்பஃறொடை உ௦௦

ம

மணிமேகலை கஎக
மதுரைக்காஞ்சி உகூகூ
மரபியல் ௫௭
மலைபடுகடாம் உ௩௫

மு

முக்குணவசத்தரான தமிழ்ப் புலவர் பாககடிருவருடபா வம் திருமுறையுமாகாமை நிரூபித்தல் ௪௦க
முதற்பொருள் ௩௨
முதற்றிருக்குறளவிருத்தி கஉ௯
முதுமொழிவெண்பா கரு௨
முத்தமிழ்ப்பாடு [illegible]
முலைப்பாட்டு [illegible]

மூ

மூவருலா [illegible]

மெ

மெய்ப்பாட்டியல் [illegible]

மொ

மொழிமரபு ஙஎ

யா

யாப்பருங்கலக்காரிகை [illegible]
யாப்பருங்கலம் [illegible]

வ

வஞ்சி [illegible]
வினையியல் கஎஉ

வா

வாதசௌந்தரியம் [illegible]
வாமீடம் [illegible]
வாயுசங்கிதை [illegible]

வி

விசிட்டாத்துவைதபாஷியத்துகாரநாராயணசாமி மதமுதலியவைகளான மை [illegible]
விளிமரபு ஙஎ
வியாசவெண்பா உ௦௦
விரிச்சி [illegible]

வீ

வீரசோழிய முதனூல மாறுபாடு எஎ
வீரசோழியம் எஏ

வெ

வெட்சித்திணை ௫௫
வெண்பாப்பாட்டியல் எஙு
வெண்பாமாலை எகூ

வே

வேதாகமப்பிராமாணியம் ஙக
வேதாந்தசாத்திரம் உ௪உ
வேதாந்தசூடாமணி உ௫ரு
வேற்றுமைமயங்கியல் ஙஎ
வேற்றுமையியல் ஙஅ

வை

வைதிக சாத்திரம் கஎகூ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

திராவிடப்பிரகாசிகை.

தற்சிறப்புப்பாயிரம்.

மன்னுமாமுதற்கடவுளைமனத்திடைநிறுவி
யென்னையோர்பொருளாக்கொண்டாள்தூவனையிறைஞ்சி
பின்னமாண்டிராவிடப்பிரகாசிகையென்னுந்
தன்னைநேர்தருந்தமிழ்வரலாறுசாற்றுவனால்.

பாயிரம்.

ஞாலத்து மன்னுயிர்த் தொகுதியு
ளூறுஞ் சுவையு நாற்றமு மொளியு
மோசையு மென்னப் பேசுமைம் புலத்தொடு
நல்லத னல்லுந் தீயதன் றீதும்
பகுத்துணர் காட்சி யகத்துணர் வுளப்பட
வாறறி வும்முடை வீறுசால் சிறப்பின்
மக்களுயிர்த் தொகுதி மனவிருள் ளிரீஇ
மிக்கபே ரறிவு விளக்க மேவிய
வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவனன் றருளிய வெனைவகை மொழியுளு
மறம்பொரு ளின்பம் வீடெனு நான்குந்
திறம்பா மரபிற் றெளியவறி வுறுத்தலிற்
கடவுண்மா மொழியெனப் புடவிநன் றேத்தச்
சீரியல் வரம்புடை யாரிய மொழியு
மமிழ்தியல் வரம்புடைத் தமிழ்வள மொழியு
நிகருறீஇச் சிறந்து நிலவுவ வாலவை
கலிகெழு திரைவிரீஇக் கலன்பல மாய்க்கும்
வலிகெழு மூவரி வளைஇய மாட்சிக்
குறுகுநா மனங்கண் புயக்கல கூடாஅ
ரிறும்பூ துறநனி பொன்மய மியற்றுந

திராவிடப்பிரகாசிகை.

தேவலஞ் சான்ற நாவலம் பொழிலகத்
தொன்பான் வருடத் தோங்குபா ரதமெனுங்
கரும பூமி மருவுகண் டங்களு
ளாத்த னருள்வே தாகம வழக்குஞ்
சாதி வரம்புந் திறந்துமுற நலனு
மேதகத் தழுவி விளங்குந் தெய்வக்
குமரி கண்டங் குலவுறீஇ மற்றதன்
வடாதுந் தெற்கு மாமுனி மன்றுமப்
பயிலு மாமலைப் பனுவ பிரண்டிட
டமிழ் வரலாறு தனைப்பொய் யெனத்தியா
டமைவுறக் கூறுதற் கமைந்து பலரால்
தமிழின் றொன்மை பழமை மாட்சி
புலக்கண மமது மிசைக்கண பாவே
கலைக்குவை சிவனு மலைக்கும மரப்ப
யெத்தகுஞ் சிறப்புற சாத்திர மாமென
நாலவனைப் படுத்து மேலையோர் பெற்றிய
வரன்முறை நிறுவி யரிறப வகுப்பாம
புரைதபு தமிழ்முறை மிகப்புகாற பொருட்டே

இதுவுமது.

தமிழின் றொன்மை மாட்சியையும், அதனிலக்கண மாட்சியையும், இலக்கிய மாட்சியையும், சாத்திர மாட்சியையும், நல்லாசிரியர் வழிநின்று தெளிதற்குரிய நற்றவ அறிவு மாட்சி யுடையரல்லாதார் சிலர், இக்காலத்துத் தாந்தா மறிந்தவாற்றான் முறை பிறழக்கொண்டு தமிழ் மொழியினும் பிறமொழியினும் பலவாறெழுதி வெளியிட்டு வாய பழித்தலானும், அவர் உரையின் பொய்ம்மை தேறமாட்டாத பேதைகளார், அவற்றினை மெய்யெனக்கொண்டு தமிழ் நல்லாசிரியர் தெய்வப்புலமை மாட்சியினையும், அவர் நூலுரைகளின் ஒராதம்பிய முறையினையும், வரன்முறை போற்றாது புறம்பழித்துத் தமக்கும் பிறர்க்குங் கேடுசூழ்தலானும், தமிழ் உலக மற்றவற்றின் உண்மை தேறி யுறுதிப் பயனெய்துதற்பொருட்டு அத்திறனெல்லாம் விளக்கித், 'திராவிடப்பிரகாசிகை' யெனனும் பெயரினால் இவ்வசனகிரந்தம் இயற்றுவோ மாயினேம்.

இனித் தமிழ் நூலுரைகளின் கால முறையெல்லாம் இதனகண் முற்றவெடுத்து முடியக் கூற ஒருப்பட்டிலம். என்னை? தமிழ் நூலுரைகள் பிறந்த கால வெல்லைகளை அந்நூலுரை யாசிரியன்மாருட் சிலரன்றிப் பலர், அவ்வவற்றுட் டெரியக் கூறுதொழிந்தமையானென்க. அற்றாயினும், பின்னை நூலுரையாசிரியர்கண் முன்னை நூலுரைச் சொற்பொருள்களைத் தத்த நூலுரைகளுள் வழிமொழிந்து கொண் டுரைக்குமாறு பற்றி, இவை முற்றோன்றி நடக்கு நூலுரைகள், இவை பிற்றோன்றி நடக்கு நூலுரைக ளெனபது அறியப்படுதலின், நூலுரைகட்கு முற்பிற்பாடு அவ்வாற்றாற் கொண்டு, அம்முறை நிறுத்தி, நிலைபெறு நூலுரைகளுள்ளுந் தமிழ்ப்புலமைக்குஞ் சாத்திரப்புலமைக்கு மின

திராவிட பிரகாசிகை

இயல்பாகச் சொல்லாகச் சிறந்த நூலுரைகளின் விட்டுப் பகுதிப் பெற்றி மாத்திரையே இதன்கண் எனது விளக்கிக் கூறலுற்றாம்.

போலி யிலக்கண விலக்கிய சாத்திர நூலுரை வரலாறு இதன்கட் கூறுதற் கிசைந்ததாயினும், தொன்று தொட்டுவரும் [illegible] ஆசிரிய வழித் தமிழ்க்கல்வி சம்பிரதாயம் தமிழ் மாணாக்கர் [illegible] அறிதற் பொருட்டும், இவை மெய் இலக்கண இலக்கிய சாத்திர நூலுரைகள், இவை போலி இலக்கண இலக்கிய சாத்திர நூலுரைகளென்று தெரிய [illegible] அவர் அவ்வம் [illegible] பயன் [illegible] சிலவற்றினை [illegible] இப் [illegible] பகுதி [illegible] கூறி யொழி [illegible] இனி [illegible] இலக்கிய சாத்திரப் புலமை [illegible] முறையானே [illegible] இவ்வாறு [illegible] இலக்கணமாதியவ, இலக்கிய [illegible] சாத்திரவியல் [illegible] இலக்கியத்தன்மை [illegible] இலக்கணமாதியவற்றின் [illegible] முறையான் [illegible] தமிழ் [illegible] இலக்கண [illegible] முதனூலாயிற்று, அது [illegible] இலக்கிய [illegible] செய [illegible] ஆதலின் [illegible] முறை [illegible] இதுவே மாயிற் றெனக

நூல்.

[illegible]

[illegible]

மலர்த்தலை யுலகத்துச் செவிப்புலனாம் ஓசையை எழுத்தோசை யெனவும், இசையோசை யெனவும், இருவகைப்படுத்து. இவற்றுள், எழுத்தோசை விந்து முதற்காரணமாக அதனி னின்றும் விருத்தியாய்த் தோன்றிச் செவிப்புலனாவது. இசையோசை ஆகாய முதற்காரணமாக அதனின்றுந் தோன்றிச் செவிப்புலனாவது. வடநூலார் எழுத்தோசையை வர்ணாத்மக சப்தமென்றும், இசையோசையைத் தொனியாத்மக சப்தமென்றுங் கூறுப. சத்த தன்மாத்திரையின் காரியமாகிய ஆகாயமே சத்தத்திற்கெல்லாங் காரணமாகலின், எழுத்தோசைக்கு வேறு காரணமாமா றென்னையெனின்,— அற்றன்று, ஆகாய மெழுத்தோசையைப் புலப்படுத்துவதாகிய இசையோசைக்குக் காரணமாவதன்றி அதனுற் புலப்படுவதாகிய எழுத்தோசைக்குக் காரணமாகா தெனக். ஒளியு முருவமும் போலப் புலப்படுப்பதும் புலப்படுவதுமாகிய இசையோசைக்கும் எழுத்தோசைக்குந் தம்முள் வேற்றுமை அனுபவத்தின் வெளிப்படத் தோன்றுதலானும், கடலோசை முதலாயின எழுத்தோசையின் வேறாதல் எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததாகலானும், அவ்விரண்டன் காரணமும் வேறென்பது துணியப்படுமெனக். இன்னும், அங்காப்பு முதலிய அகமுயற்சியாற் புலப்படுவது எழுத்தோசையெனவும், அதனைப் புலப்படுப்பதாய் எடுத்தல் படுத்தல் முதலிய புறமுயற்சியாற் பிறப்பது இசையோசை யெனவும், தம்முள் வேற்றுமை தெரிந்துணர்ந்துகொள்க.

இன்னும், இவ்விருதலையோசை பவுதிகவோசைகளி னிலக்கண வேறுபாடுகளும், எழுத்தோசைக்குக் காரணமான விந்து வென்னுஞ் சுத்தமாயையின் றன்மைக்குப் பிரமாணமும், ஆசிரியர் சிவஞானயோகிகள் சிவஞானமாபாடியத்துட் பிரமாணவியலிரண்டாஞ் சூத்திரத் திரண்டா மதிகரணத்துத் தடைவிடைகளான் விளங்கக் கூறியருளுதலின், ஆண்டுக் காண்க. உந்தியிற் றோற்றமா யெழுந்த நாதத் தொனிகட் பைசந்தியாய்க் கண்டத்தினண் மத்திமையாய்ப் பின்னர்த் தன் செவிக்குக் கேட்குஞ் சூக்குமவைகரியும் பிறர் செவிக்குக் கேட்குந் தூலவைகரியுமாய்ப் பலவேறெழுத்துக்களாம். இவ்வெழுத்துக்கள் வடமொழி தென்மொழி முதலிய பாடைச் சொல்வடிவாய்ச் சவிகற்ப வுணர்ச்சி நிகழ்த்தற் கேதுவாம்.

இனி ஆசிரியர்கள் சொல்லிலக்கணம் பலவாறு கூறுப. சச்சநாமர் 'குடமறியாதானுக்கு இது குடமென்றால் இது வென்னுஞ் சுட்டப்படுங் குடமென்னும் பொருளும் பேதமின்றி யபேதமாய்த் தோன்றுதலின், 'சொல்னிச்சயம்' என்றும், 'விபு' என்றும், 'திரவியம்' என்றுங் கூறுவர். சேனாவரையர் "மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா" என்னுஞ் சூத்திரத்துக்கு மேற்கோள் பற்றிய "பொருளொடு சொற் கியைபு இயற்கை யாகலான், அவ்வியற்கையாக்கிய வியைபாற் சொற் பொருளுணர்த்து மென்ப" என்றுரைத்து, "ஒருசாரார் பிரகரணத்தா னுணர்த்துமென்ப" என்ப பிறர் மதங் கூறி யொழிவர். உரையாசிரியரு நச்சினார்க்கினியரும் "உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே" என்னுஞ் சூத்திரத்துரையிற் "சொல் லெழுத்தினாற் சுட்டப்பட்டுத் திணையறி வுறுக்கு மோசை" என்றும், "ஒருவன் பொருட்டன்மையை யறிதற்குச் சொற் கருவியாய் நிற்கும்" என்றும், அவரோடு மாறுபட்டோரும் இன்னுஞ் "சொல்லும் பொருளும் பேதாபேதமாம்" எனக் கொண்டாருமிருக்கின்றார்.

சத்தப் பிரபஞ்சம் அர்த்தப் பிரபஞ்சமென இருவகைப்படும். இவை யிரண்டுந் தம்முள் வேறுபாடுடையவாயினும், சத்தமென்னுஞ் சாதியின் வேறுபாடின்மையானும், சத்தப்பிரபஞ்சம் அர்த்தப்பிரபஞ்சத்தைப் பற்றி நிற்றலானும், சுத்தமாயை யொன்றுதானே சத்தரூபமு மர்த்தரூபமுமாகிய விரண்டு தன்மையுமுடைத்தாய் அவ்விரண்டற்கு முபாதானகாரண மாமெனச் சொல்லப்படும். இனிச் சொற் பொருளுணர்த்துதற் கனுகூலமாகு ஞாபகசத்திகளும், பொருள் காரியப்படுதற் குபகாரமாகுங் காரகசத்திகளும் அவ்விரண்டனையு நாயகனாகிய வுலகனாதலிற் றாபத்தையா னையாற் கொள்ளப்படும். அற்றேல், எழுத்தானின்றும் பதங்களாதல், பதங்களானின்று தகுதியண்மைகளான எழுவாய் பயனிலை முதலியவாய்த் தொடர்ந்து நிற்கும் வாக்கியங்களாதல் அவ்வப்பொருள்களை யுணர்த்துமெனவே கோடும், அவ்வாறன்றி யெழுத்தின் வேறாய பொருள்களை யறிவுறுத்துஞ் சத்திகளுண்டென்பதற்குப் பிரமாண மிலையாலோவெனின்,—அற்றன்று 'கால்' என்புழிக் ககரவாகார லகரவெழுத்துக்களையன்றி அவற்றின் வேறாய பதமென்பது தோன்றினமையானும், அவ்வாறே 'கால் கிடந்தது' என்புழி அப்பதங்களின் வேறாய வாக்கிய மொன்றின்மையானும், எழுத்தின் வேறாய பதவாக்கியங்கள் பொருளுணர்த்துவன வல்லவென்பது பெறப்படும். படவே, நையாயிகர் மதம்பற்றிக் ககரவாகார லகர வெழுத்துக்களே அப்பொருளுணர்த்துமெனக் கோடல்வேண்டும். அங்ஙனங் கொள்வுழி, அவை யொருங்குகூடிப் பொருளுணர்த்துமோ? ஓரோவொன்றே பொருளுணர்த்துமோ? எனக் கடாவினாக்கு, ஓசையுணர்வு தொழின் மூன்று முக்கணப்பொழுதே நிலைபெறுமென்பது நையாயிகர் முதலியோர்க் குடம்பாடாகலின், முறையிற் பிறந்து நின்று கெடுமெழுத்துக்கள் ஒருங்குகூடி

நின்று பொருளுணர்த்துமென்பது கூடாமையின், ஒரோவொன்றே பொருளுணர்த்து மெனல்வேண்டும். 'க' என்ற மாத்திரையானே 'கபாலம்' என்னும் பொருளுணர்த்தாமையானும், உணர்த்துமெனினுங் கடைமொழிக்கண் எழுத்துக்களை யுச்சரித்தல் பயனில்வாய் முடியுமாகலானும், ஒவ்வொன்றே பொருளுணர்த்து மென்பது பொருந்தாமையின், ஈற்றுப் பதவாக்கியங்களின் வேறாய பொருளறிவுக்குக் காரணமாகிய ஞாபகசத்திகளுண்டென்பது கண்டுகொள்க. சத்தியெனினும் போடமெனினும் ஆற்றலெனினும் பொருந்தும். இவ்வாற்றாற் சொற்களாற் பெறப்படும் பொருளறிவுக்குக் ஞாபகசத்திகள் சொற்றொறும் வெவ்வேறுண்டென்பவே கோடும். ஆயினும், 'ஆ' 'ஆண்டு' என்றற்போல்வன ஒவ்வொன்றாய் நின்று வெவ்வேறு பொருளுணர்த்தக் காண்டலின், ஒருசொற்சத்தியானே ஒருபொருளன்றிப் பலபொருளுணர்த்தலு முண்டாகச் சொல்லெனின்,— அற்றன்று, ஆ ஆண்டு என்றற்போல்வன வெவ்வேறு பொருளுணர்த்துதலின், ஒருசொல்லெனப்படா, வெவ்வேறு சொற்களேயாமெனக் கொள்க. இனி வெவ்வேறு சொற்களாயினும், எழுத்தொப்புமையானே பலபொருளொருசொல்லென்று அபிதானம் வழங்கப்பட்டனவென்பது. இன்னும், ஆவென்பது பெற்றத்தினையு மரவிசேடத்தினையு முணர்த்துமவழிப் பெயர்ச்சொல்லெனவும், இரக்கக்குறிப்பினை யுணர்த்துமவழி இடைச்சொல்லெனவும், ஆதற்பொருட் பெயர்ச்சியை யுணர்த்துமவழி உரிச்சொல்லெனவுங் கொள்ளப்படுதலின், எழுத்தொப்புமைபற்றியே உபசாரத்தான் அவ்வாறு வழங்கப்பட்டனவென்பது தெற்றென வுணர்க. இன்னும், இஞ்ஞாபக சத்தியதுண்மையைச் சிவஞானமாபாடியகாரர் சிவஞானமாபாடியத்துட் பிரமாணவோத்தி னிரண்டாம் பாதத்து ஞானகாமத்துக்கண்ணதற்கு ஏற்ற விடைகளான் மிக விரித்துரைத்தார். பொருடொறும் அவ்வக் காரியங்கட்குச் சத்தியுண்மையாதுங் காட்டுக் குணமைக்குப் பிரமாணமும் ஆண்டே மிக விரித்துரைத்தார். அவையாறெல்லாம் ஈண்டுக் கூறப்புகின் வாக்கியம் மிக விரியுமென்க.

இனிச் சேனாவரையரும் "கால முலகம்" என்னுஞ் சூத்திரத்து, "உலகமென்பது இடத்தையும் ஆகுபெயரான் இடத்து நிகழ்பொருளாகிய மக்கட்டொகுதியையு முணர்த்துமாகலான், இருதிணைக்கண்ணுஞ் சென்றதென்றாலெனின்,— அற்றன்று, வடநூலுள் உலகமென்பது இருபொருட்கு முரித்தாக ஓதப்பட்டமையின், மக்கட்டொகுதியை யுணர்த்தும் வழியும் உரிப்பெயரேயாகலின், ஆகுபெயரன்று, அஃதேல் ஒருசொல் இருபொருட்கண்ணுஞ் சென்றதெனப்படாது இருபொருட்கு முரிமையான இரண்டு சொல்லெனவே படுமென்பது. வேறு பொருளுணர்த்தலின் வேறுசொல்லாதலே துணிவாயினும், பலபொருளொருசொல்லென்பது எழுத்தொப்புமைபற்றி ஒருசொல்லென்றார்" என்றிவ்வியல்பு தொகுத்துணர்த்தியது காண்க.

இனி எழுத்துச் சொல் வடிவான பாடை பேசத்தகுரியார் முப்பத்திரண்டு அவயவத்தான் அளவிறப்பட்டு அறிவோடு புணர்ந்த ஆடூஉ மகடூஉ வென்னும் பகுப்புடைய மக்களென்ப. "மக்க டாமே யாறறி வுயிரே - பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே" என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரும். தேவருந் தானவரும் முதலாயினார் மக்கட் கிளையென ஆண்டடங்குவ ரெனக். தேவர் தானவர் மக்களினுயர்ந்தோராயினுங், காணப்படு முலக வழக்குக் கூறுகின்றாராகலின், ஆண்டு மக்களைச் சிறந்தெடுத்தோதிக் காணப்படாத தேவர் தானவர் முதலாயினாரைக் கிளையென அவ்வா றடக்குவாராயிற்றென்றுணர்க.

இனி நன்னூலாரும் இலக்கணவிளக்கநூலாரும், "பேய்பூத மந்தி கிளிப்பூவை பேசுதலா - லஃதுமே தனைமம் பொது" என்பதேபற்றி ஆசிரியர் தொல்காப்பியனாரானே

கடந்த தன்மைப் பவிரவுத்திணையெனச் சாதிகதாராலெனின்,— "பேய் பூதந் தெய்வஞ் சாதியாதலால், "தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவி" எனப்பகுத்தோதுதலானும், மக்கள் பேசுதல் யாண்டு மின்மையின், "ஈங்குரீ யெம்மை நோக்கி" என்றற்போல் வன புணர்ந்துரை வகையாற் கூறியதன்றி யுண்மைபற்றிக் கூறியதன்றாகலானும், கிளி பூவை கூறியவாறு கூறுதலல்லது இசைசொல்லு மியல்வாற் கூறியதென்பதெனச் சொல் லுண்மை யறிந்து கூறுத லுலகத்தின்மையால், "பூவையுங் கிளியுங் கேட்டு" என்றற் போல்வனவும் புணர்ந்துரைவகையாற் கூறியதேயாமாகலானும், அம்மை விரவுத்திணை யாகாதென மறுக்க. மரமுதலியன பேசுவனவாகச் சான்றோர் செய்யுட்கண் வருதலால், அவை புணர்ந்துரையெனவே படுமாகலான், இவையு மன்னவா [illegible] மெனக் [illegible] இனிப் [illegible] முதலிய உண்மையாற் பேசினவேயாமெனினும், "எறும்புகள் [illegible] தனக் கேட்டு நகைத்தாகத் தன்மனைவிக்குக் கூறித் தலைமிறசாண் [illegible] புராணங்கள் கூறுத லின், எறும்புகள் பேசுதல் பெறற்கும், அவை [illegible] குறிப்பாலுணர்த்தாலன்றி மொழியாற் பேசுதலன்றென்ப தெளிவாகத் தமொப [illegible] முடியவே, [illegible] பெயாகவெல்லாம் இவவாறென்றற் சொன்று குறிப்பாலுணர்த்துமென்பது பொருட்டு தாகலின், மக்கள் முதலிய பேசுதலும் அவ்வியல்பிற்றாயாமென்க. [illegible] உயர்திணை யஃறிணையெனும் பகுப்பேலாமை யறிக. [illegible] மொழியாற் பேசுவன வுளவாயின், அது [illegible] பொருட்டன்மையா னன்மையின், [illegible] யென்றல் சிறிதும் பொருந்தாதெனக் [illegible] திணையெனவே கூறியதூஉமெனக் [illegible] றொடு கெழீஇச் செட்டா மரபிற் [illegible] "கேட்குந் போலவுங் கிளக்குந் போலவும் [illegible] வழுவமைத்தலுடை வேண்டா வெனக்" என்று [illegible] சிவஞானயோகிகள் அது பொருந்தாமை [illegible]

தமிழின் பெருமை.

ஆரிய மொழியுந் தமிழ் மொழியும் ஆதிக்கட் பரமசிவனுற் [illegible] பெறும் தெய்வ மொழிகளாம். ஆரியம் பரமசிவனுற் [illegible] குந் தெய்வ மொழியென்பது வேதாகம முதலிய உரை [illegible] இனிது பெறு தும், தமிழ் அன்னதோர் மாட்சி யுடைத்தென்ப [illegible] பெறுதுமேயெனின்,— "[illegible] மல ரடியொன் றடியவர் பரவத் தமிழ்ச்சொலும் வடசொலுந் தாணிழற் சேர [illegible] வம்மலராக கொன்றை யணிந்தவெம் மடிகள் [illegible] பாக்கம் [illegible]" என்னுந் தமிழ் வேதத்தானும், "மாரியுங் கோடையும் வான்பனி தூங்கநின் [illegible] காலத்தே யாரியத்தோடு தமிழு முடனேகிக் காரிகை [illegible] கருணைசெய் தானே" என் னுந் திருமந்திரத் திருமுறையானும் பெறுதுமென்க. இன்னும், தென்மொழி யிலக்க ணத்து "குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகர்" எனக் காஞ்சிப்புராணம் கண்டத்துக் காஞ்சிப்புராணத்தும், "திராவிடமென்ப பெயரிய மாபாடை கிலக்கணஞ் சிவபிரான் அகத்தியனுக்கு அருளிச்செய்தான்" [illegible] தும், "திரிபுர மெரித்த விரிசடைக்கடவுளுங் குன்றமெறிந்த குமரவேளும் அகத்தியனுக்கு தலைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார்" என இறையனா ரகப்பொருளுரையுங் கூறுதலா னும், தமிழ் கடவுள் மாமொழியென்பது தேற்றென வுணர்ந்துகொள்க.

'தமிழ்'ச்சொன்முடிபு.

இனித் 'தமிழ்' என்னுஞ் சொல் இனிமைப் பண்புணர்த்தும். அது "தேனுறை தமிழுந் திருவுறை கூடலும் - மணத்தலின் மதிக்குல மன்னனுமாகியும்" என்னுங் கல்லாடத் திருப்பாடலினும், "தமிழ்தழீஇய சாயலவர் தங்குதமலாத் தாரீ-இருமிழகரக மேந்தவர் வேனமானது பூரி" என்னுஞ் சிந்தாமணியினும், "தமிழ்மென் சாயலவரோடும்" என்னும் வாயவ்விய சங்கிதையினும், "வண்டு தமிழ்ப் பாட்டிசைக்குந் தாமரையே" என்னும் இராமாயணத்தினும், செவ்விதிற் காண்க. "தமிழ் தழீஇய சாயலவர்" என்பதற்கு நச்சினார்க்கினியர் "இனிமை பொருந்திய சாயலையுடையவர்" என்று பொருளுரைத்தார். தமிழ் என்னுந் தனிமொழிச் சொல் இனிமைப் பண்புணர்த்தி நின்றது, முருகு என்னும் பண்பு முருகனென்னும் பண்பிமேனின்ற வாறுபோல் இனிமைத் தமிழ்மொழி மொழியெனினும் பாடையெனினும் ஒக்கும். பிரயோக விவேக நூலார் "திரமிளமென்னும் ஆரியச்சொற் றமிழெனத் திரிந்தது" என்று கொண்டாராலெனின்,—முதன்மையுடைய இம்மொழியைத் தோற்றியகாலத்து இறைவன் தனிச்சொல்லால் இதனை வழங்க இதற்குக் குறியீடு கருதலன்றிப் பிறபாடைச்சொல்லால் இங்ஙனம் ஒன்றோரா பெயரினைக் திரிந்து நிறுத்தினனென்றல் பொருந்தாமையின், அது செல்லாதென மறுக்க. இன்னும், இனிமைப் பொருளுணர்த்துந் தமிழென்னும் பண்புச் சொற் றனிச்சொல்லாய இதனை நிலைபெறுவதாகவும் அதனை விலக்கி அவ்வாறு கோடல் செல்லாமை யுணர்க. இதனானே, "தமிழ் த்ராவிடமென்னும் வடமொழித் திரிபு" என்று கொண்டார் மதம் மறுக்கப்பட்டவாறு மறிக. வடமொழிக் கடலுந் தென்மொழிக்கடலு நிலைகண்டுணர்ந்த வாசிரியர் சிவஞானயோகிகள் "எவ்வினையு மோப்புதலிற் றிராவிடமென் றியம்பா நின்றமொழி" யென்று வடமொழியார் தன்மொழியாற் றென்மொழியை ஆளுங் குறியீடு வேறு கூறினமையானும், "மூன்றுமூழுகத் பதிற்றெழுத்தான் முழுவதுமாயுணக் கினிதாயத்-தோன்றிநின்ற தமிழ்ப் பாடை"யென்று தென்மொழியார் தன்மொழியாற்றென்மொழியை ஆளுங் குறியீடு யாங் கூறியவாற்றே பொருந்தி வேறு நிறுத்தலின், இச்சொன் முடிபே தொல்லாசிரியர் வழக்காற்றுப் பயின்றுபோதரும் இயன் முடிபென்பது அப்பெரியார் திருவுட் கருத்தாதல் பெறாம். இன்னும், அகத்தியத் தமிழ்ச் சுதந்திர இலக்கண முதனூலாகவும், அது வடமொழிப் "பாணினீய வியாகரணத்தின் வழித் தோன்றியதோர் நூலாம்" என்றும், அகத்தியத்தின் வழித் தோன்றியது தொல்காப்பிய இலக்கண நூலாகவும், அது வடமொழி "ஐந்திர வியாகரணத்தின் வழித் தோன்றியதோர் நூலாம்" என்றும், பிரயோக விவேக நூலார் முறைதிறம்பி யுரைத்தார். அவையெல்லாம் ஆரியாபிமானங் காரணமாக வரன்முறை திறம்பிக் கூறினவேயாம். அவை வரன்முறை திறம்பிக் கூறியவாற்றை முன்னர்க் காட்டுதும்.

இனித் தொல்லோராகிய தமிழ் நல்லாசிரியர் இருவகை வழக்கே பற்றித் தமிழ் இலக்கண இலக்கிய சாத்திர வரலாற்றின் உண்மைத்தன்மை துணிவு தோன்றச் சொல்லுமிதனைக் கண் அன்னரல்லராகிய இக்காலத்தார் சிலர் தமிழ் இலக்கண இலக்கிய வரலாறென்று தாந்தா மனம் போனவாறெல்லாங் குழறுபாடாகக் கூறிய வசனங்களிற் படும் பொய்ப்பொருள்களை ஆசங்கித்தெடுத்து மறுத்துப்போதல் வேண்டற்பாலதொன்றன்றாயினும், தமிழின் றொல்லைவரம்பு சிதையாமே அதனைப் பெரிது வளர்த்து வரும் இக்காலைச் சங்கத்து நல்லாசிரியர்களை வழிபட்டு அதுதன்னைக் கசடறக் கற்றுணரப் பெறுதார் மாட்டுப் பொதுவகையால் ஒருவாறு தமிழ் பயிலு மாணாக்கர்களும் ஏனையோரும், அவர் பொய்த்திற மெய்த்திற மாங்கொலென்று கொண்டு புரைப்பட

மன் மற்றவற்றை மறுத் தன்மை நிலையிடலும் ஒருதலையாகச் வேண்டிச் செய்யற்பால தொன்றாய் மூர்ந்துறுதலின், அதுவும் இதன்கண் ஆண்டாண்டுக் கடைப்பிடித்துச் செய்து போதர ஒருப்படுகின்றாம். இது பாயிரத்துக் கூறினுமேனும், ஈண்டு அனுவதித்து ஞாபகஞ் செய்தாம்.

வீரசோழியப் பதிப்புரைகாரர் தமிழ்ச்சொற்கு முடிபு துணிபு தோன்றக் கூறுவார் போன்று தொடங்கி, "இகழ், இமிழ், உமிழ், கமழ், கவிழ், குமிழ், சிமிழ் என ழகரப் பேறு பெற்ற பதங்களைப்போலத் தமிழ் என்னுஞ் சொற் றனிமைப்பொருள் குறித்த தமியென்னும் வினையடியாற் பிறந்து வினைமுதற்பொருளுணர்த்திய விகுதி குன்றி ழகரம் விரிந்து தனக்கிணையில்லாப் பாடை யென்னும் பொருள் பயக்கும்" என்று பெரிதும் வழுப்படப் போலி முடிபு சொல்லினார். அவர் அச்சொற்குக் கூறிய அம்முடிபு போலியாதல் சிறிது காட்டுதும்.

இனிமைப் பொருள் பயக்குந் தமிழ் என்னும் இயற்சொற் றென்மொழியாய், அம்மொழிக்குப் பெயராதற் குரிமையுடைத்தாய் நிற்க, அதனை விலக்கித், "தமியென்னும் வினையடி வினைமுதற்பொருள் விகுதி குன்றி இகழ் முதலியன போல ழகரம் விரிந்து தமிழ் என்றாயது" என்று இடர்ப்பட்டு அவ்வாறு போலி முடிபு கூறுதல் அவர்க்குப் பெரியதோர் இழுக்காதல் காண்க. இனிமைப் பண்புணர்த்துந் தமிழ் தென்மொழிக்குப் பெயராதற் குரிமையுடைத்தாய் நிற்க, அதனை விலக்கி அங்ஙன் முடிபு சொற்றது அவர் தமக்குப் பெரியதோர் இழுக்காமென்பது யாவரும் ஒப்பற்பாலதொரு நியாயவுரையாம். அது நிற்க, "தமியென்னும் வினையடி வினைமுதற்பொருளுணர்த்தும் விகுதி குன்றி இமிழ் முதலியனபோல ழகரம் விரிந்து தமிழ் என்றாயது" என்று அவர் கூறிய சொன்முடிபு போலியாதல் யாங்ஙனமெனின்,— கூறுதும்.

இக என்பது நீங்கென வினைப்பொருள்படும். இகழ் என்பதோ அவமதியென வேறு வினைப்பொருள்படும். இமியென்பது தமிழிற் பொருள் குறித்து வருஞ் சொல்லாதல் கண்டிலம். இமிழ் என்பதோ ஒலியென வினைப்பொருண் முதற் பலபொருள் படும். உமி என்பது பெயர்ப்பொருள்படும். உமிழ் என்பதோ கொப்புளியென வினைப்பொருள் படும். கமம் என்பது கமவென வினையீறாயின் நிறையென வினைப்பொருள்படும். கமழ் என்பதோ நாறு என வேறு வினைப்பொருள்படும். கவி என்பது மூடு என்னும் வினைப் பொருண் முதற் பல பொருள்படும். கவிழ் என்பதோ இழக்கிடு என வினைப்பொருள் படும். இழக்கிடுதல் மேல் கீழாகச்செய்தல். குமி என்பது தமிழிற் பொருள்குறித்து வருவதோர் சொல்லாதல் கண்டிலம். குமிழ் என்பதோ முகை என்னும் வினைப்பொருண் முதற்* பலபொருள்படும். சிமி என்பது குடுமியென்ப் பெயர்ப்பொருள்படும். சிமிழ் என்பதோ பிணியென வினைப்பொருள்படும். இனி இமி குமி யென்பன பொருள் குறித்து வரினும், அவர் கருதது நிரம்பும் பொருள் குறித்து வருமாறில்லை. இவ்வாறு பொருள் குறித்தும் குறியாதும் வரும் இக இமி உமி கம கவி குமி சிமி என்னும் ஈரெழுத்து மொழிகள், அங்ஙனம் பொருள் குறித்து வரும் இகழ் இமிழ் உமிழ் கமழ் கவிழ் குமிழ் சிமிழ் என்னு மூவெழுத்து மொழிகளாயவென்றல் சிறிது மேலாது. இதனால் அவர் காட்டு உவமைப் போலியேயாம். காட்டு உவமைப்போலியாகவே, அவைபோலத் தமி ழகரம் விரிந்து தமிழ் என நின்றதென அவர் சாதித்த முடிபு சிறிதும் உணர்வில்லார் உரையேயாய் வெறும் போலியாதல் காண்க. இன்னும், தனிச்

சொல்லிறுதிக்கண் ஆன மான சோன றுடையனவைச் சாரியை பொருள் குறித்துவரினையந்துநிற்பதல்லது கொன்னே யெழுந்து விரிந்து நிற்றல் வழக்கிரண்டினுங் காணாமையானும், அது போலி முடிபேயாமென்று மறுக்க.

"தென்மொழி" முடிபு.

ஆரியம், 'சமஸ்கிருதம்' என இருமொழியின்றும் பெயர் பெறுதல் போலத் தமிழும் 'தென்மொழி' யென இருமொழியின்றும் பெயர் பெறும். தென்மொழி அழகுடைய பாஷை. தென் - அழகு இயல்வரம்பு. இயலென்னினும் இலக்கணமென்னினும் பொருந்தும். இனித் தென்மொழி யென்பதற்கு இசையுடைய மொழியென்று பொருள் கூறினும் பொருந்தும். தென் - இசையையென்றற் காரணத்தின்று செயற்படுத்திக் காணும் இசையன்றி இயல்பாக இயைந்து மொழியோடு தோற்றும் மெல்லோசை இன்பமாம். இவ்வோசை யின்பம் இதற்குப்போல ஏனைப்பாஷைகளுக்கு அத்துணை வாய்ப்பப் பொருந்தாமை செவிப்புல அனுபவத்தானே காண்க. இவ்வோசையின்பம் வடமொழிக் கின்றோவெனின்,— வடமொழிக்கண்ணும் இவ்வோசையின்ப முண்டு. ஆயினும், அது உரப்பியு மெடுத்துங் கனைத்துங் கூறும் வல்லோசைகளோடு விரவித் திரிபெய்துதலின், வல்லோசையோடு விரவாமல் மெல்லோசையே பயின்று வித்தற்கே அது சிறப்பாமென்றுணர்க. தமிழ்நூலாருங் 'கசடதபற' வென வல்லெழுத்துக்கள் கொள்வராலெனின்,— அவை 'ஙஞணநமன' 'யரலவழள' வென்னு மெழுத்தோசையை நோக்க வல்லோசையாக விசைத்தல் பற்றி யவ்வாறு கொள்பவாயினும், வடமொழிக்கண் வருக்கபஞ்சகத்தினிடைப்பட்டு நடக்கும் அவ்வல்லெழுத்துக்களை நோக்க அவையு மெல்லெழுத்தென்றே சொல்லப்படுமாதலால், அது கடாவன்றென்க. மொழியோடு இயல்பாகப் பொருந்தி யியலும் இயவினிசை யிதற்குச் சிறத்தலினன்றே இறையனார் 'தமிழ்' எனப் பண்பால் விதந்து இதற்கு ஆதிக்கண் குறியீடு செய்வாராயினாரு மென்றுணர்க.

இவ்வாற்றால், தமிழ் தென்மொழி யென்பன ஒருமொழி கொடாமொழியாய் வேறுபடினும் பொருளால் ஒற்றுமை யுடையனவேயாமென்று கடைப்பிடிக்க.

தென்மொழி யென்புழிக்கண் தென்னென்பது வடமொழி யென்பதன்கண் வட வென்பது போலத் திசை குறிக்குஞ் சொல்லேயாகலின், அவ்வடைமொழிக்கு அழகு இசையென அங்ஙனம் பொருளுரைத்தல் பொருந்தாதாம்பிறவெனின்,— ஆரியமொழி வடநாட்டினின்றும் தென்னாட்டின்கண் வந்து வழங்குதலின், தென்னாட்டாராகிய தமிழ் மாந்தரதனை வடமொழியென்று அங்ஙனந் திசையடுத்து விசேடித்தல் வழக்காறும், தென்னாட்டினர் தமிழெல்லைக்குள் ளிருந்துகொண்டு அதனைத் தென்மொழி யென்று திசையடுத்து அங்ஙனம் விசேடித்தல் வேண்டாமையின் அது வழக்காறாகாது; அதனால், 'தென்னென்பது திசைப்பொருள் குறித்துவந்த அடைமொழியன்று; அழகு இசையென்பன குறித்துவந்த அடைமொழியே யாம். இங்ஙனமாகலின், பொருந்தாமை யாண்டையதென்க. இனித் தென்னாட்டினர் தமிழினை அங்ஙனம் விசேடித்தல் செல்லாதேனும், வடநாட்டினர் தென்னாடு வழங்குதல்பற்றித் தமிழ்மொழியினை அவ்வாறு திசையடுத்து விசேடித்தல் செல்லுமெனின்,— வடநாட்டார் அங்ஙனந் தமிழினைத் தம் மொழியால் அப்பொருள்படக் குறியீடு செய்து வழங்குதல் செல்லுமல்லது, அவர் தமிழினால் அதனைத் தென்மொழியென்று அங்ஙனந் திசையடுத்து விசேடித்து வழங்குவ ரென்றல் செல்லாமையின், அது தடையாகாதென்க. தடை - ஆசங்கை.

இனிப் பரதகண்டத்தினை வடபுலந் தென்புலமென விரண்டுபடக்கொண்டு வழங்கு முறைபற்றித் தென்னாட்டின்கண் தந்நாட்டு மொழியாகிய தமிழினைத் தென்மொழியென்று இசையறிந்து அங்ஙனம் விசேடித்தல் செல்லுமெனினும், அவ்வழக்கு அவ்விரு மொழிகளையும் வடமொழி தென்மொழியென ஒன்றொன்று மற்றொன்றினை யெதிர்ந்து கூறும்வழிச் செல்லுதலன்றித், தென்மொழியென்று தனித்துக் கூறும்வழியுஞ் செல்லுமென்ற னிரம்பாது, நிரம்பினும், தமிழை அழகு இசையென்னும் பொருள்கள் பற்றித் தென்மொழியென்று அவ்வாறு விசேடித்தலே அது தனக்குரிய வழியுடைச்சாதல் இல்லை. அதனால், 'தென்மொழி' 'தென்சொல்' 'தென்கலை' யென்பவற்றின்று தனித்து வழங்குந் தொடர்மொழிகளின்கட் படியலும் அவ்வடமொழிக்கு யாங் கூறிய பொருள் சிறப்புடைய பொருளாமென்று கடைப்பிடிக்க.

தமிழ்ப் பொதுவெல்லை

ஆரியமொழி இப்புடவிற் புண்ணிய பூமியெனச் சிறப்பிக்கப்பட்ட பாரதகண்டத்தின் வடபாலைத் தனக்கு முக்கிய நிலைக்களமாகக்கொண்டு பயில்வதாகத், தமிழ்மொழி அதன் றென்பாலைத் தனக்கு முக்கிய நிலைக்களமாகக்கொண்டு பயில்வதாயிற்று. தென்பாலினுந் தமிழ்நிற்கெல்லை வடக்கண் வேங்கடமும், தெற்கண் குமரியும், கிழக்கு மேற்குங் கடலுமாம். அது "வடவேங்கடந் தென்குமரி-யாயிடைத் - தமிழ்கூறு நல்லுலகத்து" எனவருந் தொல்காப்பிய வுபோற்காதச் சூத்திரத்தானும், "நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமுந் - தமிழ்வரம் பறுத்த தண்புனனாட்டு" என வருஞ் சிலப்பதிகாரச் செய்யுளானு மறிக. "வடதிசை மருங்கின் வடுகுவரம் பாகத் - தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும் - வரைமருள் புணரியொடு பொருது கிடந்த - நாட்டியல் வழக்க நான்மையின் கடைக்கண் - யாப்பின திலக்கண மறைகுவன் முறையே" எனச் சிறுகாக்கைபாடினியார் தெற்குங் கடலெல்லை கூறியது குமரியாறு கடல்கொண்ட பிற்காலத்துச் செய்ததென வறிக. தமிழ் வரம்பு இங்ஙனஞ் சிதைந்து வேறுபட்டுச் சுருங்கியதுபோல அக்கன்று விரிந்து முன்னர் தமிழ் அவ்வாறு வளர்ந்து அக்கன்று விரிந்தன ஈழநாடு முதலியவாம்.

இனித் தென்னாடு 'தமிழ்நாடு' எனப் படிப்பாட்டு வரும் வழக்கானும், மற்றதன்கட் டமிழ்மொழிக்கு முரண்பட்டு வழங்கி வீழ்ந்தொழிந்தோர் மொழியின்மை யென்பதற்குப் பிரமாண மின்மையானும், தமிழ்மொழி தென்னாடு தோன்றுங்காலத் துடன்றோன்றி அதன்கண் வாழ் நன்மக்கள் பயிலு மொழியாயிற்றென்பது தேற்றமாம்.

செந்தமிழ்நிலம்.

இனிச் செந்தமிழ் நிலம் இப்பொதுவெல்லையுள் வைத்து வரைந்துகொள்ளப்படும். தொல்காப்பிய வுரையாசிரியர்கள் செந்தமிழ் நிலம் "வையையாற்றின் வடக்கு மருதயாற்றின் றெற்குங் கருவூரின் கிழக்கு மருவூரின் மேற்குமாம்" என்பர். இந்நாற் செந்தமிழ்நிலஞ் சோணாடாயிற்று. திராவிடமாபாடியமுனிவர் "காசியி னினும் போக்கு கம்பர்தா மருளப் பெற்று - மாசிலாக் கச்சி மூதூர் மன்னி வீற்றிருந்து பூமே-லாசிலாத் தமிழ்ப் பரப்பி யருந்தமிழ்க் குரவு பூண்ட-தேசினான் மலைய வெற்பிற் குறுமுனி திருந்தாள் போற்றி" எனக் காஞ்சிப்புராணமுகத்து அகத்தியனுரை வாழ்த்து முகத்தானே செந்தமிழ்நிலந் தொண்டைநாட்டுக் காஞ்சிநகர் வரையப்பென் றுணர்த்துவர்.

னன்னூல் விருத்தியுரைகாரர் செந்தமிழ்நிலம் "சகத்தனைப் பொதியச் செந்தமிழ் முனியுஞ் சௌந்தர பாண்டிய னெனுந்தமிழ் நாடனுஞ் - சங்கப் புலவருந் தழைத்தினி திருக்கு- மங்கலப் பாண்டி வளநா டென்ப" வென்றுரைப்பர். சேர சோழ பாண்டிய மன்னர் களைத் "தமிழ்நாட்டு மூவேந்தர்" என யாண்டும் வழங்குதலானும், கடைச்சங்கப்புலவர் சீத்தலைச்சாத்தனார் திருக்குறளுக்குச் சாற்றியதுள், "மும்மலையு முந்நாடு முந்நதியு முப் பதியு - முந்முரசு முத்தமிழு முக்கொடியு - மும்மாவுந், தாமுடைய மன்னர் தடமுடி மேற் றாரன்றோ - பாமறையின் வள்ளுவர்முப் பால்" என முத்தமிழையும் அம்மூவர்க் கும் உடைமையாக்கிச் செந்தமிழ் உக்கிரப்பெருவழுதி அவரைத் "முடிமேற்றார்" எனப் பொதுவாகக் கூறுதலானும், பத்துப்பாட்டு எட்டுத்தொகை முதலிய சங்கவிலக்கியங்க ளுட் சில அம்மூவர் பெயரையும் சில ஒவ்வொருவர் பேரையும் வருதலானும், ஆறுபடையினுள் சைவசமயாசாரியர் நால்வரும், சேரமான்பெருமாள் முதலிய மற்றையுண் நாயனார்களும், அந்தச் சைவத் தருநெறிச் செந்தமிழ்வேதமுதலிய திரு வருட் பாடல்களைத் திருத்தலப் பிரபாவங்களை ஒன்றேனும் தாழ்தலின்றி, மூந்நாட் டகத்து முன்னமையாவும், பிறவாற்றானும், செந்தமிழ்நிலம் தமிழ் மூந்நாட்டகத்தும் ஒப்பக் கொள்ளப்படுமென்ச அன்றே, தருநெறிச் செந்தமிழ் வேதத் திருப்பாடல் பெற்ற திருத்தலங்கள் உட்பட்ட திருத்தலங்கள் சோணாடு முதற்றலிலவும், தென்கீழ்த் திசைக்கட்டிருப் பெண்ணையாமலை தருமச்சேர மனை நிலையுள்ளனவன்றே, அவ வாற்றால் அவையெல்லாஞ் செந்தமிழ் நிலமாயின செவ்வுமாகிறவெனின்,— வடவேங் கடந் தென்குமரி யாயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்தின்கண்ணது இயலாராய்ச்சி யாக லின், அது கடாவன்றென்றொழிக. மற்றெவ்விடத்தெனின் மாருக, ஒருநிலத்தினகண் முந்துநூற்பயிற்சி யுடைத்து மெய்யுமாகிய செந்தமிழராயவுறு சனமக்க ளுளராங் கால், அதுதனைச் செந்தமிழ் நிலமென வில்லைக்கல் கூடாது. என்னை? இலக்கண முறைவழி இலக்கியமால் மருவியல் யாப்பினையுடைத்து மறுத்த தமிழ் செவ்வுறாய நன்மக்க ளெல்லாரல் பயிற்சிச் செந்தமிழ் நிலமென வழங்கப்பட்டது. பிறசாலத்து அய வாராட்சிப் பிழை பிறித்து, ஒருபயிற்சி கிடைக்குங்கால், அதுதான், முற்பொழுதா னன்றி அப்பிற்பொழுதானுஞ் செந்தமிழ் நிலமென்னவு செல்லாது. என்னை? இலக்க ணஞ் சிதைதலுறா இலக்கிய நிலைபெறுதல் கூடாமையி னென்பது.

இனி, "டண்ணென்பு பதியுப பாண்டிப் பறைகவே" எனச் செந்தமிழ் வேதத் துட, "உடாயதற கூடலி லுயர்ந்தவொண் செந்தமிழின் - துறைவாய நுழைந்தனை யோ" என வெட்டாந்திருமுறையான திருக்கோவையுள்ளுங், "சென்றணைந்து மது ரையினிற் றிருவிடைமா சங்கத்து - ஊன்றிருந்து தமிழாராய்ந் தருளியவங் கணர் கோயில்" "தேம்பொழியுஞ் செந்தமிழ்நாட் டினியெங்களுஞ் சென்றிறைஞ்சி" "செய வாச் சமுனிந் தமிழ்நாட்டுத் திருமா மதுரை முதலான" "பானல்வயற் றமிழ் நாடு" "நனறியி னெறியி லொழுந்திப நாடு நற்றமிழ் வேந்தனு முய்ந்து" என்றற் றொடக்கத் தாற் பன்னிரண்டாந் திருமுறையான திருத்தொண்டர் புராணத்துள்ளும், "தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின் - மகிழ்நனை மறுகின் மதுரையும்" "தேனுறை தமிழுந் திரு வுறை கூடலு - மன்னர்பின் மதிக்குல மன்னன் கூடியும்" "வண்டுறை வார்பொழில் சூழுந்தறை யாறுமனா ஞேடுமைவேல் - கொண்டுறை தேகிய தென்னவன் கூடற் கொழுந்தமிழின் - ஒண்டுறை மேலுள்ள மோடியரோ" "ஆமா றறிபவர் யாரே விதிவைய யந் தீந்தமிழ்ர் - கோமான்" என்றற்றொடக்கத்தாற் சிறப்புறுப் பெற்ற கல்லாட

முதலிய சங்கச்செய்யுளுள்ளும், இறையனார் களவியலுரையுள்ளும், பெரும்பான்மை யான் வருதலின், பாண்டிவளநாடு ஏனைச் சேர சோழ வளநாடுகளினும், செந்தமிழ் ஆராய்ச்சிக்குச் சிறப்புடைத்தாயிற்றென்பது கடைப்பிடித் துணரப்படு மெனக.

செந்தமிழ்ச்சொல்.

இனிச் செந்தமிழ்ச்சொல் 'இயற்சொல்' லென்றுந் 'திரிசொல்' லென்றும் இருவகைப்படும். இயற்சொல்லாவன: "அவற்றுள், இயற்சொற்றாமே - செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித் - தம்பொருள் வழாமை யிசைக்குஞ் சொல்லே" என்னு மெச்சவியற் சூத்திரத்தானுணர்க. அவை நிலம், நீர், தீ, வளி, வெளி, உயிர், உடம்பு என்னுந் தொடக்கத்தன. திரிசொல்லாவன "ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும் - வேறுபொருள் குறித்த வொருசொல் லாகியு - மிருபாற் றென்ப திரிசொற் கிளவி" என்னு மெச்சவியற் சூத்திரத்தா னறிக. வடநூலார் ஒருபொருள் குறித்துவரும் வேறு சொல்லைச் 'சமானார்த்தகபதம்' என்றும், வேறு பொருள் குறித்துவரு மொருசொல்லை 'நானார்த்தகபதம்' என்றுங் கூறுவர். 'வெற்பு' 'விண்டு' 'விலங்கல்' என்பன ஒரு பொருள் குறித்த வேறு பெயர்க்கிளவி. 'எகின' மென்பது அன்னமுங் கவரிமாவும் புளிமாவு நாயு முணர்த்தலானும், 'ஆ' வென்பது பெற்றமும் ஓர் மரவிசேடமும் இரக்கக்குறிப்பும், ஆதற்புடைபெயர்ச்சியு முணர்த்தலானும், 'உந்தி' யென்பது யாழ்ப்பத்த லுறுப்புங் கொப்பூழுந் தேர்த்தட்டுங் கான்யாறு முணர்த்தலானும், இவை வேறுபொருள் குறித்த வொருசொல். இவை பெயர்த்திரிசொல். 'பாடித்தை' 'செப்பினன்' 'ஈங்கு வந்தீத்தாய்' 'புகழ்ந்திகுமல்லரோ' 'பெறலருங்குரைத்து' இவை வினைத்திரிசொல். இடையு முரியுந் திரிசொல்லாய் வருமெனு முணர்க.

இனித் திசைச்சொற்களும் வடசொற்களுஞ் செந்தமிழ்ச் சொற்களோடு தலைப்பெய்து வழங்கப்படும். திசைச்சொற்களாவன "செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்துந் - தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி" என்னு மெச்சவியற் சூத்திரத்தா னறிக. பன்னிருநிலமாவன பொங்கர்நாடு, ஒளிநாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவாவடதலை எனத் தென்கீழ்பால் முதலாக வடகீழ்பாலிறுக எண்ணிக்கொள்க.

இனி இப்பன்னிரண்டையும் புறஞ்சூழ்ந்து வேறு பன்னிருநிலமு முள. அவை சிங்களமும், பழந்தீவும், கொல்லமும், கூபமும், கொங்கணமும், துளுவும், குடகமும், கருநடமும், குட்டமும், வடுகும், தெலுங்கும், கலிங்கமுமாமென்பர் நச்சினார்க்கினியர். இனி வடசொல்லாவன "வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ - யெழுத்தொடு புணர்ந்த சொல்லா குமமே" என்னு மெச்சவியற் சூத்திரத்தா னறிக. வடவெழுத் தொரீஇ யெழுத்தொடு புணர்ந்தவெனவே, பொதுவெழுத்தானியன்ற வடசொற்கள் செந்தமிழிற் பயின்று வருமென்பது தானே பெறப்படும். அவை 'வாரி, மேரு, குங்குமம், மணி' என்னுந் தொடக்கத்தன. வடசொற்கேயுரிய சிறப்பெழுத்தினீங்கி இருசார்மொழிக்கும் பொதுவாகிய வெழுத்தானியன்ற சொற்கள் 'விதி, உற்பலம், தற்பவம், அற்புதம்' என்னுந் தொடக்கத்தன. இன்னும், தொல்காப்பியனார் "சிதைந்தன வரினு மியைந்தன வரையார்" என்றோதுதலின், பொதுவெழுத்தா னியன்றனவே யன்றி வடவெழுத்தானியன்ற வடசொற் சிதைந்து வரினும் பொருத்தமுடையன கொள்ளப்படும். அவை

"அரமிய வியலகத் தியம்பும்" "தசநான் கெய்திய பணைமருப் பெருங்களிறு" "கடுந்தேர் இராமனுடன் புணர் சீதையை" "பேதை யல்லை மேதையங் குறுமகள" என்றும் தொடக்கத்தன.

இனிப் பிரயோகவிவேகநூலார் "உரிச்சொல்லென்பது பதினெண்டேசிகச்சொல்லொடு சொல்லென் றொன்கையாற் பதநொன்பதாம்" என்றும், "தமிழுந் திசைச்சொல்லேயாம்" என்றுங் கூறினாராலோவெனின்,— தமிழ்ச்சொற்கள் பெயர் வினை யெனச் சிறப்புப்பற்றி இரண்டாமாறும், இடை யுரி யென்னு மிரண்டும் அவற்றுவழி மருங்கிற் றோன்றி யவற்றொடு தலைப்பெய்யப்பட்டு ஈனங்காயாறும், தொல்லாசிரியர் துணிபாம் அவ் அவ்வாறன்றி எல்லாச்சொல்லும் உரிச்சொல்லென்றது தொல்லாசிரியர் வழக்கு மாறுகோளாம். அதுகிடக்க. ஆரியமொழிக்குந் தமிழ்மொழிக்கு முதற்குரவர் சிவபிரானென்பது மேற்கூறியவாற் றான் றன்று பெறப்படுதலானும், அவை யிரண்டற்கு மிலக்கணம் அவ்விறைவர் செவியறிவுறுத்தக் கொண்டு முறையே பாணினியார் அகத்தியனாரென்னு முனிவேந்த ரிருவரானும் வழிப்படுத்துச் செய்யப்பட்டமையானும், இரண்டு மாணாக்கரால் தழுவப்படுதலானும், ஆரியம் பிராகிருதமுதலிய பாடைகளுக்கு மூலமாய வடதிசைக்கண்ணே நிறைந்த தமிழ் ஆந்திரமுதலிய பாடைகளுக்கு மூலமாய தென்றிசைக்கண் நிறைதலானும், இரண்டும் வடமொழி தென்மொழியென ஒன்றற்கொன்று எதிர்ந்து வழங்கப்படும் பெருமை யுடைமையானும், பிறவாற்றானும், தம்முட் சமத்துவமுடைய தெய்வ முதன்மொழிகளென்பது இனிதறியப்படுவதாம். இச்சாமியமுடைய இவ்விரண்டனுள், ஒன்றனைத் தெய்வ முதன்மொழியென்று கொண்டு, மற்றொன்றனைப் பதினெழுநிலத்து மொழிகளோ டொப்பதொரு திசைமொழியென்றல், நடுவுநிலை யுரையாகாமையின், அவருரை உரையளவையொடும் ஆன்றோர் வழக்கொடு மாறுபாடுறு மயக்கவுரைப் பயாமென்று மறுக்க. இனி இனையோரன்ன மயக்குரைகளைப்பற்றித் தமிழுலக மயக்கமுறாது செந்தமிழின் றனிமுதற் றெய்வமெய்மைத் தன்மை தேறி யுறுதி கூடுதற்பொருட்டன்றே, திராவிடமாபாடியமுனிவர், "வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத் - தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங் - குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனிற் - கடல்வரைப்பி னிதன்பெருமை யாவரே கட்டுரைப்பார்" என்றும், "இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவ ரியல்வாய்ப்ப - விருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்த ரிசைபரப்பு - மிருமொழியு மான்றவரே தழீஇயினா ரென்றாலிவ் - விருமொழியு நிகரென்னு மிதற்கைய முளதேயோ" என்றும், அந்நன்மைபெல்லாங் காஞ்சிப்புராணத்துக் கிளந்தெடுத்தோதித் தமிழின் றெய்வத்தனிமுதன்மை நிறுத்துவாராயினதூஉ மென்றுணர்க. இன்னும், இக்கருத்துப்பற்றியன்றே, கடைச்சங்கப்புலவர் வண்ணக்கஞ்சாத்தனார், "ஆரியமுந் தமிழு மாராயந் திதனினிது - சீரியதென் றொன்றைச் செப்பரிதால் - ஆரியம், வேதமுடைத்துத் தமிழ்திரு வள்ளுவனா - ரோது குறட்பா வுடைத்து" எனத் திருக்குறளுக்குப் போற்காத்துத் தவ்வாறு சமஞ்செய்து எடுத்தோதியதூஉ மெனக.

இனி நன்னூலாரும் இலக்கணவிளக்கநூலாருஞ் 'செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினு - மொன்பதிற் றிரண்டினிற் றமிழொழி நிலத்தினுந் - தங்குறிப் பினவே திசைச்சொல் லென்ப" என்றுரைத்தாராலெனின்,— சிவஞானயோகிகள், "ஆசிரியர் தொல்காப்பியனார் அவ்வாறு கொள்ளாமையானும், உரையாசிரியர் சேனாவரையர் கூறாமையானும், வடசொற்போல வேனை நிலத்துச் சொற்கள் சான்றோர் வழக்கினுள்ளுஞ்

செய்யுளுள்ளும் வாராமையானும், சிலசொற்கள் இக்காலத்து வரினும் இலக்கணமுறை யன்மையானும். அவை தமிழ்க்குரிய இசைச்சொற்க ளாகாவென மறுக்க" என்று ஆணை தருதலின், அவ்வுரை கொள்ளாமென்பது.

செந்தமிழ்வழக்கு.

செந்தமிழ்வழக்கு உலகியல்வழக்குப் புலனெறிவழக்குமென இரண்டுவகைப் படும். உலகியல்வழக்கெனினும், லௌகிகமெனினும், உரையெனினும், நடையெனினும் ஒக்கும். புலனெறிவழக்கெனினும், செய்யுளெனினும், பாவெனினும், பாட்டெனினும், யாப் பெனினும் தூக்கெனினும் ஒக்கும். ஆசிரியர் தொல்காப்பியனார் "வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே நிகழ்ச்சி யவர்கட் டாகலான்" என்று மரபியலுட் கூறுதலின் வழக்கென்பது இரண்டற்குமாம். அவற்றுள், சில வழக்கினைச் செய்யுளென வேறு பிரித்து அவ்வாறு வழங்குவர் ஆசிரியரென் றுணர்க.

இனி உலகியல்வழக்கு நுண்மாண்நுழைபுல மில்லாராற் பொருள் கோடற்குரிய அன்றே நுண்ணுணர்வுடையரும் ஒருவர் பொருள் கோடற்குரிய எளிமையுடையதுமென விரண்டாம். இவற்றை, அன்றே நுண்ணுணர்ச்சியிலார் செய்யுளோடொப்பக், உரைச்செய்யு ளெனவும் படும். சிவஞானமாபாடியகாரரும், 'உரைச்செய்யுள்' 'பாச்செய்யுள்' எனப் பகுத்தனர். சிவஞானமாபாடியத்து உரைநடை நூலார் இன்னோரன்ன வுலகியல் வழக்கினை லௌகிகப்பிரகிருதி யென்பர். இனி வடமொழியாளருமுரையும் பாட்டு மென்னு மிரண்டும் லௌகிகப்பிரகிருதியென்பர் தமிழ்மொழியார் உரைமாத்திரையே உலகியல்வழக்கென்பர். இது சம்பிரதாயமன்றெனினு மாம். இனிப் புலனெறி வழக்கு உண்மைஞானமான திருமுறைச்செய்யுள் நாற்சங்கத்தார் சான்றோர் செய்யும் மறையானோர் செய்யுளுமென மூவகைத்தாம். இவற்றுட் திருமுறைச்செய்யுள், முற்ற முதன்மையான ஐந்தவித்த மனாதீதராய முக்கண்ணர்களது முற்றறிவுடைத்து, தூய முழு முதல்வனை பரமசிவன் திருவருண் ஞானமொழியான மந்திர மறை மொழியாய சிறப்பின், தமிழ்வேதமெனவும், திருமுறையெனவும், அங்ஙனம் வேருகக் கொண்டு அத்தியயன மோதற்கு பெரியோரால் வேறாக்கப்பட்டனவென்பது இம் முறை உத்தரவேதமான திருக்குறள் தமிழ்மொழி மறை நீதிநூலாதலிற் திருமுறை களின் வேறுவைத்துப் போற்றப்பட்டதின்றென்றடைத்து.

இனி இக்காலத் தமிழ்க் காவியப்புலவர் திருமுறைச்செய்யுள் பத்தராகளாய அத்தியயனவோதத்துக்களாயினும், சங்கத்தமிழ் மறைகை காவியத்தமிழ்போலச் சுவை யுடையவாகாவென்று தடங்கூறுபவாலென்னை,— அவர் பருப்பொருட் காவியப்பயிற்சியி னுடைமை, மறைமொழியான திருமுறைச்செய்யுட்களின் சொற்பொருணுட்பம் அறிதற் கேற்ற மெய்யன்பின்மை நிறைந்த பயமில்லாப் பெருமையானும், இக்காலத்து அவ்வாறு பிறந் தினும், நல்லாசிரியர் வழிபெற்ற கல்வியறிவுடையார், நம்மாசிரியருள விளக்கியருளும், ஆசிரியர் அகத்தியனார் உபமன்னியனார் முதலிய கட்டுப்பெற்றியாளரும், நம்பியாண் டார்நம்பி முதலிய உயர்ந்தோரும், சங்கராசாரியர் முதலிய பெரியோரும், முறையே சிவரகசியத்தானும், பத்துவிலாசங்களானும், பதினோராந்திருமுறையானும், சௌந்தரி யலகரி முதலிய பிரபந்தங்களானும், புகழ்ந்துபோற்றும் பெருமையுடைய சுருதிமொழி யான திருமுறைச்செய்யுட்களின் மகிமை தேறவல்லராகல்லின், அவர் பழிச்சுதரை அவர

வெளிற்றின் றிறமாமென் றெங்ஙனமடையாடி விடப்படுமென் றெருழிக "என்றுமடி யவ ருரைத்த திருப்பனுவல்களெல்லாம் [illegible] தாவித துதிப்பன வல்லசங் கத் தொன்றும் புலவர்களியாப்புக்குரியன வொன்றுகல்லைப்ப - பொன்றுங் கவுணியன் சைவசிகாமணி [illegible] டியே" என்ற [illegible] பதிகத்தால் திருமுறை யின் [illegible], திருமுறையின் [illegible] சங்கப்புலவர் செந்தமிழ் யாப்பிற் [illegible] பொருளா [illegible] திணைக்கு [illegible]. ஆண்டு "நலஞ்சங் கத் [illegible] புலவர் [illegible]" [illegible] — [illegible] கல்வியின் முதலியனவும் பிறவுமாம். [illegible] திருமுறைக்கூறுங் கொள் ளப்படும்

[illegible] ஆசிரியர் [illegible] முதலிய சூத்திர நூல்கள் [illegible] செய்யுளென் [illegible] படுமெனின்,— அவ் வழங்கியவாறு செய்யுள் [illegible] பெருந்திணை, இரண்டனுள்ளொன்றன்பால தாமென்னை [illegible] அவற்றின் [illegible] பொருண்டு போற்றப் படுமென்பது [illegible] கினி [illegible] "பாட்டுரை [illegible]" என்னுஞ் செய்யுளியற் சூத்திரத்து, "சூத்திரம் பாட்டெனப் படாவோவெனின்,— படா, பாட் டும் உரையும் நூலும் [illegible] சூத்திரம் பாட்டாகா வேனும், 'உரைசெய்யுள்' என்றாற்போலச் 'சூத்திரச்செய்யுள்' என்றவாறு வழங்கப் படுமென [illegible] 'சூத்திரச்செய்யுள்' என்று ஆங் ஙனம் வழங்கினார். இனி ஆசிரியர் அகத்தியனார் [illegible] முதலாயினார் தவத்தான் மனந்தூயராய் [illegible] இறைவனருள் பெற்றுடையராகலின், அவரருளிச்செய்த [illegible] முதலாயின இறைவனார் களவியலோ டொக்கும் [illegible] "அறைந்தைப்பட்ட பாய வனப் பசசமும்" என் [illegible], "இனி [illegible] இறைவனரும் அகத்தியனரும் மார்க்கண்டேயனரும் வான்மீகனரும் [illegible] போல்வார் செய் தனக் [illegible], இருடிசங்கார [illegible] வோத்தும், சை [illegible] மொனக் கொள் [illegible]' என்றார் பேராசிரியர்.

இனி [illegible] முதனூலும் வழிநூலுமென விரண்டாம் அது "மரபுநிலை திரியா மாட்சிய [illegible] முதலும் வழியுமென நுதலிய நெறி யின" என்ற [illegible] "வினையின் னீங்கி விளங் கிய வறிவின் முனைவன் கண்டது முதனூலாகும்" "வழியெனப் படுவ ததன்வழித் தாகும்" என்னும் மரபியற் சூத்திரங்கள் [illegible] விரண்டுமன்றிச் சார்புநூலென வேறொன்று கூறவேண்டிற்றென்னை [illegible] வழியாகச் செய்வனவெல்லாம் வழி யேயாயினும் அவை முதனூலின் முடிபொருங் கொத்தும் திரிபு வேறுடைத்தா தலுமென இருவேறு வகைப்பட நிகழ்கின்றமையின், அதுபற்றிச் சார்புநூலென வேறு கோடலுமமையுமென் [illegible] திரிபு வேறுடையதூஉம் பொருளானொருங் கொத்தலின், மரபுநிலை திரியாமையின், வழிநூலென்றற் கேற்புடைத்தாதலு மறிக.

இனி வடமொழியான் சூத்திரஞ் செய்யுளென்னு மிரண்டானு மன்றி உரையானு நூலியற்றுப. அவை காதம்பரியக் குமாரசரித்திரம் போல்வன. தமிழ்மொழியான் சூத்திரஞ் செய்யுளென்னு மிரண்டானன்றே நூலியற்றுப, உரையானியன்ற தொல்

லாசிரியர் தமிழ்நூல் அரிதென றுணர்க. சூத்திர மோத்துப் படலமென றிவற்றுட் சூத்திர முதலியவற்றுளே உண்ணின்றகன்ற வுரையொடு பொருந்தி நடப்பது நூலெனப் படுமாயினும், மற்றைப் பாக்களானு முரையானு நடப்பனவற்றையு மொப்புமையான் நூலென றவ்வா றுனரோரா வழங்குவ ரென்பது. இனனும், வடநூலார் பத்தியநூதானிய ன்ற விலக்கிய நூலைக் 'காவிய' மென்றும், பத்தியங் கத்தியமென்னு மிரண்டானு மியன்ற விலக்கிய நூலைச் 'சம்பு' வென்றும், பத்தியங்கத்தியம் பிராகிருதமென்னு மூன்றானு மியன்ற விலக்கிய நூலை 'நாடக' மென்றுங் கொள்வர். தமிழ்நூலாரும் உரைவிராய செய்யுளானும் பழைமையவாகிய கதைபொருளாக நூல் செய்யப்படுமென்பர். அது "தொன்மைதானே— உரையொடு புணர்ந்த பழமை மேற்றே" யென்னுஞ் செய்யுளியற்சூத்திரத்தி னுணர்க. அவைதாம் யாவையெனின்,— பெருந்தேவனாரா செய்யப்பட்ட பாரதமுந் தகடூர் யாத்திரையும் போல்வன வென்றுணர்க.

இனி நூலுரை காண்டிகையுரையும் அகலவுரையுமென விரண்டாம். இனிக் காண்டிகையுரைதான்— "பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பிற் கரப்பின்றி முடிவ" தூஉம், "விட்டகல் வின்றி விரிவொடு பொருந்திச் - சுட்டிய சூத்திர முடித்தற் பொருட்டா - வேது நடையினு மெடுத்துக் காட்டினு மேவாங் கமைந்த மெய்ந்நெறித்" தாவ தூஉமென விரண்டாம். இவற்றுள், முன்னது பிண்டப்பொழிப்பெனவும், பின்னது வார்த்திகப்பொழிப்பெனவும் வழங்கப்படுமென்றுணர்க. இனி அகலவுரைதான்— சூத்திரத் துட்பொரு ளன்றியு மாண்டைக் கின்றி யமையா தியைபவை யெல்லா - மொன்ற வுரைத்த" லும், "மறுதலைக் கடாஅ மாற்றமு முடைத்தாய்த் - தன்னூ லானு முடிந்தநூ லானு - மையமு மருட்கையுஞ் செவ்விதி னீக்கித் - தெற்றென வொருபொரு ளொற்றுமை கொளீஇத் - துணிவொடு நிற்ற" லுமென்னு மிலக்கணத்ததாம் அகலவுரை யெனினும், விருத்தியுரையெனினு மொக்குமென றுணர்க. ஆசிரியர் தொல்காப்பியனார் அகலவுரை யிலக்கணம் இங்ஙனம் இருசூத்திரமாக வோதியது, சூத்திரத்துப் பொருளன்றியும் ஒருதலையாக அதற்கு இன்றியமையாது பொருந்துவனவெல்லாம் அதனோடு கூட்டிச் சொல்வதூஉம், அவ்வளவின்றொழியாது பூர்வபக்கமடற்றி நிற்கு மாசங்கையும் அதன் பரிகாரவிடையு முடைத்தாயத் தன்னூற்சூத்திரத்தானு முடிந்தநூற் சூத்திரத்தானும் போலியும் பொய்யுஞ் செய்பொருளினீக்கிக் கேட்போன் மெய்யுணர்ந்து தெளிய ஒற்றுமை கொளுத்தித் துணி வொருப் படுப்பதூஉமாகிய விருத்தியுரை வேறுபாடறி வுறுத்தற்கென றுணர்க. எனவே, காண்டிகையுரைபோல் விருத்தியுரையும் அங்ஙனம் இருவகைத்தா மென்றவா றாயிற்று. இனி இதனுட் பின்னது பாடியமென்னும் விருத்தியுரையாமென றுணர்க. இவ்விலக்கணம் பெற்ற அகலவுரை வடமொழியிற் பதஞ்சலியார் மாபாடியமும், தென்மொழியிற் சிவஞானயோகிகள் மாபாடியமும் போல்வன. கடா - ஆசங்கை. மறுதலையெனினும் பூர்வபக்கமெனினு மொக்கும். மாற்றமெனினும் விடையெனினு மொக்கும். தன்னூலென்றது— தான் உரையியற்று நூலினை. முடிந்த நூலென்றது— அதன் முதனூலினை. இனி வினையி னீங்கி விளங்கிய வறிவின் முனைவனால் அருளிச்செய்யப்பட்ட முதனூற் கிவ்விலக்கணம் வேண்டாதென்பது கூறாமே விளங்கும்.

தமிழின்றெய்வப்பழைமைமரபியன்

முற்றிற்று.

இலக்கணமரபியல்.

அகத்தியம்.

தமிழ்மொழி இலக்கியம் இலக்கணமென இருதிறப்பட்டு நடக்கும். இவ்விரண்டனுள் இலக்கிய முந்துற்றோ? மற்று இலக்கண முந்துற்றோ? வென்று ஆராய்ச்சி செய்யலுறுவார்க்கு, இலக்கண இலக்கியங்களை அன்றாலமையாகக் கூறப்படுவ தொன்றுண்டாதலால் இலக்கியமே முற்பட்டதென்பா ரொருசாரார், இலக்கண அமைதியாய் நிலைபெறுவது இலக்கியமாதலால் இலக்கணமே முற்பட்டதென்பர் மற்றொருசாரார். இவ்விருசாரார் உரைகளும் பொருட்பொருத்தமுடையனவாம். ஆயினும், இலக்கணமாவது இலக்கியத்தன்மையை வரைந்துகொள்வதொன்றேனும் நிட்டமாய ஒப்ப நிற்பதொரு பண்பாதலால், அவை தம்முள் வேறுபடுத்து இது முற்பட்டது இது பிற்பட்டது என்று பெரிதும் பேசப்பட அங்ஙன முறைபிறழாது கொள்ளுதல் பயமாய். இனி குணங்க ளிரண்டையுமே பொருளாமாயினுங் குணத்திற்குக் குணமுற்பட்டபொருளே பற்றுக்கோடாம். குணமுடைப்பொருளுக்குக் குணம் பற்றுக்கோடாகாது. ஆகலின், இலக்கியமடற்றி நியமமாய ஒப்பநிற்பது இலக்கணமென்று முடிபு கூறுதலே நியாயமெனப்படும். இனிப் பொருட்குப் பொருட்குணம் வியாப்பிடமாமென்பது முணர்பற்றி இலக்கியத்தின் பண்பாயுள்ள இலக்கணம் அதற்கு வியாப்பியமாய அதுபற்றுக்கோடாக நிலைபெறுமென்பது தானே சித்திக்கும். "வடவேங்கடந் தென்குமரி யாயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலி னெழுத்துஞ் சொல்லும் பொருளு நாடி" என்னும் பனம்பாரனார் கூற்றும் இதனை வலியுறுத்து மென்க. வேதாந்தசித்தாந்திகளாருஞ் சைவசித்தாந்த நூலாருஞ் சிவத்தினை குணமான சிற்சத்தி சிவத்திற்கு வியாப்பியமாமென்றும், அது சிவபரம்பொருளைப் பற்றித் தாதான்மியமாய் விரகமுதலியவற்றொரு பண்பாமென்றும், கூறுமாறு காண்க.

அகத்தியனார் செந்தமிழிலக்கண முதனூலைப் பரமசிவனைக் குறித்துத் தருந்தவமிருந்து அவரருள் வழியாக வெடுத்துப்படித்துத் தந்தருளினார். இது வடநூற் றென்னூல்கள் ஆண்டாண்டோது முறையிடும் பிரமவுரையாம். அகத்தியனார் வடகாசி நீத்தகன்று காஞ்சிமாநகரமெய்தித் திருவேகம்பமுடைய சிவபிரானை வழிபட்டு அக்கடவுளருளின்ற தமிழிலக்கணஞ் செப்புந்தன்மை சாலப்பெற்றுத் தென்றிசைக்கண்டதுக் காஞ்சிப்புராணத்து விளங்க வுரைக்கப்பட்டது. அது "அடியனேன் வடகாசி நீத்தகன்று நினைக்கினிய - கடிமதில்சூழ் கொடிமாடக் காஞ்சியினைத் தலைப்பட்டுப் - பொடியணிந்த திருமேனிப் புண்ணியமே யிமயவரைப் - பிடிமணந்த மதகளிறே பெரும்பேறு பெற்றுயர்ந்தேன்" "இத்தகுபேறுடையேற்கு மற்றினு மொருகருத்து - மெய்த்தபெரு வேட்கையினு லொழியாது மேன்மேலுஞ் - சித்தமிசை மூண்டெழுமா லதுநிரம்பச் சிறியேன்பால் - வைத்தபெருங் கருணையினால் வழங்குவா யெனப்போற்றி" "எவ்வினையு மோப்புதலிற் றிராவிடமென் றியல்பாடை - யெவ்வமறப் புதிதாக யான்வகுப்ப நலகியது - வெவ்வருணத் தோர்க்குள்ளார்க்கு மெளிதாகப் புத்தேளி - ரெவ்வெவர்க்குஞ் சுவையமிழ்தி னினிதாகச் செய்தருளாய்" "மூன்றுறழ்ந்த பதிற்றெழுத்தான் முழுவதுமா யுனக்கினிதாய - தோன்றிடுமத் தமிழ்ப்பாடைத் துதிகொண்டு மகிழ்ந்தருளி - யான்றவர மெல்லார்க்கு மிவ்வரைப்பி னளித்தருளா - யென்றெடுத்த மொழிக்கல்வி யெவற்றினுக்கு மிறையோனே" "மன்னியவித் தமிழ்க்கிளவி மந்திரங்கள் கணித்தடியேன் - செந்நெறியின் வழுவாதித் திருக்காஞ்சி நகர்வரை

ப்பி - னுன்னுறுக்கர்க ளுகியினி துறைந்திடவும் பெறவேண்டு - மின்னவர் மெனக்கருளா யெம்பெருமா னென்றிரந்தான்" "கூடியவகத் தன்னுடைய குறுமுனிக்குப் பின்னுக்கு ரா - தாம்பரிந்து தமிழ்விளக்கு மாசிரியத் தலைமையொடு மேம்பாடுற் றிசைக்கின்றவை நலகிவேட டனபிறவு மாமடரிசி ளெசி ருபெயவாலிலிங்சத் சிடைசரந்தார்" "இவ்வண்ண மருள்பெற்ற விருந்தவனு மவ்வட்கின் மெய்ப்பவண் வோதமுறைகத் தீந்தமிழை விளக்குவித்தச் செவ்வணத்தி திருமலிய பெருமானார் திருவடிக ளவ்வண்ண தொழுதேத்தி நெடுங்கால மங்கிருந்தான்" என்னுஞ் செய்யுட்களானறிக.

இனிப் பரமசிவனென்றி "ஆறுமுகக்கடவுளாரு மகத்தியனார்க்குச் செந்தமிழிலக்கணஞ் செவியறிவுறுத்தருளப்பட்டது" என்று சிலவுரையாசிரியர்கள் கூறும் இவ்வுபாக்கியானங்கள் காலம்வேறுபட்டமையாற் சமாதானம் பெறுமாறு முன்னர்க் கூறுதும்.

மற்றுத் தொல்காப்பியனார் "வினையினீங்கி விளங்கிய வறிவின் முனைவன் கண்டது முதனூலாகும்" என்றாராகலின் அகத்தியனாராற் செய்யப்பட்ட அஃது முதனூலாமா றியாங்ஙனமெனின், தானே தலைவனாயினும், ஏனையோனாற் படுத்தப்பட்டுத் தலைவராயினு மென்ற தலைவரிருவகையார் தானே தலைவனான பரமசிவன் றோற்றுவித்த தமிழ்நூல் செய்திலனாகலின், அத்தலைவன் வழிநின்று அவனருள்பெற்ற தலைவரான அகத்தியனாராற் செய்யப்பட்ட அந்நூல் முதனூலாயிற்றெனப் படுதற்குப் பொருந்துமாயினும், அகத்தியந் தமிழிலக்கணநூலாதலின், இலக்கியங்கண்டதற் கிலக்கணங் கூறலாகாமையின், அகத்தியத்தின் முற்பட்டுத் தோன்றி அதற்கு மூலமாய ஈடுபெற்ற கடவுட்டமிழிலக்கிய நூலுண்டெனவே கோடுமெனின், தமிழ்ப்பாடையிலக்கிய முன்னுள்ளனவெனக் கோடலன்றி அன்னதோர் கடவுட்டமிழிலக்கியநூல் அதற்கு மூலமாயதெனற்குப் பிரமாணமில்லாமையின், அவ்வாறு கொள்ளாமெனக.

அகத்தியனார் அங்ஙனந் தனிமுதற்கடவுளான பரமசிவனை வழிபட்டு முக்கண்ணனுங் கடந்த விறைவனருள் பெற்றுத் தலைமைபெற்றியது பற்றியன்றோ மாங்குடிமருதனார், "தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற் றொன்முது கடவுட் பின்னர் மேய - வரைத்தாழருவிப் பொருப்பிற் பொருந" என்று அவ்வாறு மதுரைக்காஞ்சியுள் ஓதுவராயிற்றென்றுணர்க. இதற்றொடரினை— "வரைத்தாழருவிப் பொருப்பிற் றென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற் றொன்முது கடவுட் பின்னர் மேய பொருந" என்று கொண்டு கூட்டுக. "தென்றிசை யுயர்த்த தொய்யாமை போக இறைவனுக்கேச சீரொட்ட விருந்தான்" என்பது பற்றி அகத்தியனாரைத் "தொன்முது கடவுளென்றார்" என உரைத்தார் நச்சினார்க்கினியர். கலித்தொகையுள், "முதலோர் முறுவலாய நாமணம் புக்ககால் பொழுதென றுவாய்ப்பக் கூறிய வெக்கடவுண் மற்றைக் கடவுள்" என இருடிகளைக் 'கடவுள்' என நல்லந்துவனாருங் கூறினாரெனக.

அகத்தியத்துள் இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழென்னு முத்தமிழிலக்கணங்களும் விரவிக் கூறப்பட்டன. இயற்றமிழெனினுஞ் சத்தநூலெனினு மொக்கும். இசைத்தமிழெனினுங் கீதநூலெனினு மொக்கும். நாடகத்தமிழெனினுங் கூத்துநூலெனினு மொக்கும். இயற்றமிழுள், எழுத்தாமாறும், அவற்றாற் சொல்லாய பொருளுணர்த்துமாறும், அப்பொருள் அகம் புறமெனும் பதினேழ்திணைப் பகுதியவாமாறும், அச்சொற்பொருள்களாற் செய்யு ளாகுமாறும், அவை அணியுறுமாறுங் கூறப்படும்.

இசைத்தமிழ்நூல், மாபூத முதலியவற்றாற் புறகலமாய் இசைக் காதாரமாமாறும், அவ்வா காரந் தொடங்கி யெழுஞ் சூக்குமநாதஞ் சரிகமபதநி யென்னும் எழுத்திசை யேழாயப் பிறக்குமாறும், அவ்வெழுத்திசைகளை மாத்திரைப்படுத்துந் தொழில் செய்தலாற் சட்சம், இடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதமென்னு மேழிசைகள் பிறக்குமாறும், இவற்றுள்ளே பண் பிறக்குமாறும், அப்பண்கள் நூற்று மூன்று பேதமாமாறும், அவற்றினை யினம்பட விட்டிசைக்குங் கருவியானே நரப்புக்கருவி முதலியபற்றிப் பாடுமாறும், நரப்புக்கருவி முதலியன செய்யுமாறும், பிறவுங் கூறப்படும். நாடகத்தமிழ்நூல், கூத்து விகற்பமும், அபிநய விகற்பமும், தோரியமகளிர் முதலிய கூத்தியரிலக்கணமும், நாடகக்கோலியலும், ஆடலாசிரிய ரிலக்கணமும், குழலோனை யாழோன இசையோன கவிஞனென்பா ரிலக்கணமும், ஆடரங்கிலக்கணமும், ஆட்டிலக்கணமும், பிறவுங் கூறப்படும். இன்னும் மிகக்கூத்துநூற் பொருட்டான், சாந்திக் கூத்து விநோதக்கூத்து என இருதிறத்தாற் பலவகைப்பட்டு, அறுவகை நிலையும், ஐவகைப் பாதமும், பதினொருவகைக் கிரியையும், நான்கு வருத்தனையும், முப்பான் இருத்தக்கையு முடைத்தாய பொருள், யோனி, விருத்தி, சந்தி, சுவை, சாதி, குறிப்பு, சத்துவம், அவிநயம், சொல், சொல்வகை, வண்ணம், வரி, சேதமெனும் பதினான்கு விலக்குறுப்போடும் புணர்வுற்று நடப்பதாம்.

இனி ஈண்டுக் கூறிய இலக்கண மரபிறந்து மாறுகச் சிற்சிலர் ஆணையிட்டுரைத்தார். அவை தமிழ் வரன்முறை யறியாப் போலியாத லறிகுது முகத்தானே மேலது வலியுறுத்தும். சிவஞானயோகியாரவர்கள், "சிவஞானமுனிவரர் அகத்தியனார் தமிழ்ப் பூமியில் உற்பத்தியாயினரெனக் கொண்டு, அகத்தியம் "முச்செந்தமிழிலக்கண மொழியோடு முற்பட்டுத் தோன்றும் நூல்" எனவும், "செந்தமிழிலக்கண மொழிதோன்றுங் காலத் துடனிகழ்ந்த நூல்" எனவும் மயங்குவாராயினார்." "முந்துநூல்" "முந்தைநூல்" என்பன முன்னுற்றகுப் பெயராகவும், இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் அவ்வாறே பொருள் கூறி யிலைமொழி யென்புழிச் செந்தமிழ் நிலத்து வழக்கொடு எனப் பொருளுரைத்திருப்பவும் அவ்வாறே கொள்ளாராகவும், முந்துநூல் கண்டு என்பதற்கு எனையபொருள் இல்லை யாக அவை நிலைத்திருக்குமன்றே இயற்றமிழ் வழக்கையும் முதனூலையுங் கண்டு என்று செப்பாசிரியர் பொருள் கொண்டெனவே பாலிக் கிடப்பதாகவும், இவர் உண்மைப் பொருள்கொள்ளாது முந்து என்பதை வினைத்தொகையாக்கி, அறுகம்புலலின் றூக்கிய யானை போலுந் தியவாறு இடப்பட்டது காலத்தியோ? அன்றேல், பிற ஆசிரியர் மயக்கங்களை மறுப்பதும், ஆங்காங்கு தந்த தமது நூன் மதத்தைத் நாட்டுதலுந் தமக்கு என்றும் இயல்பாயினமை யறிந்தி யார் அறிவர்" என்று சிறிதும் உணர்வின்றிப் போலியுரை பலவாறு பிதற்றினார். அவர் அங்ஙனம் பிதற்றுதற்குக் காரணந் தெய்வப்புலவராகிய சிவஞானயோகிகள் போயயாவுரை நுட்பம் அறிதற்கேற்கு மதிநுட்பம் வாய்ப்பப் பொருந்தாமையே யன்றோ. சிவஞானயோகிகள் கருத்து அதுவன்றென்பதூஉம், அவர் அம்முனிவர் உரைநுட்பம் அறிதற்கேற்கு மதிநுட்பம் வாய்ப்பப் பொருந்தாக் குறையினால் அங்ஙன மெல்லாம் பிதற்றினாரென்பதூஉம், தெரிப்பாம்.

" இருமொழிக்கு முரிய தரவர் கண்ணுதலா ரியல்வாய்ப்ப - விருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்தர் " எனக் காஞ்சிப்புராணத்துட் கூறு முறையினால் வடமொழி தென்மொழி யிரண்டும் ஆதிக்கண்ணே பரமாசாரியனாகிய கண்ணுதற்பிரானாற் றோற்ற

முற்று நிலைபெறுந் தொன்மொழிகளென்பதூஉம், பாணினிமுனிவரும் அகத்தியமுனிவரும் பிற்காலத்து அருந்தவமிருந்து அவ்விறைவன் உபதேச வருள்பெற்று அவ்விருமொழிக்கு முறையே பாணினீயம் அகத்தியமென்னும் இலக்கண நூல்கள் செய்தருளிய வாசிரியர்களென்பதூஉம், மாதவச் சிவஞானயோகிகளுக்குக் கருத்தாதல் தெளிவிற் புலப்படும். இனிச் சிவபிரான் 'தென்மலைக்கட் போய் உறைக' வென்று தந்தருளிய ஆணை தலைக்கொண்டு அகத்தியமுனிவர் ஆண்டுப் போதரற் கொருப்பட்டனராயபின் "எம்பெருமானே அடியனேன் சென்றுறைய நிற்குந் தேயந் தமிழ்நாடாம், ஆண்டுள்ளார் தமிழ் நன்காராய்ந்து வல்லராய் வாழ்வர், அவரெல்லாந் தமிழ் இயல்புபற்றி நிகழ்த்தும் ஆசங்கைகள் போக்கி அவர்க்குத் துணிபொருப்படுத்தல் வேண்டியேனை, தமிழ் இலக்கணஞ் செவியறிவுறுத்தி யருளுவாய்" என்று வரமிரந்திட, இறைவன் அவர்க்குத் தமிழிலக்கணஞ் செவியறிவுறுத்தியருளினமை கூறும் ஆலவாயமணமிய உரையும், அகத்தியனார் தமிழிற்கு இயல்வரம்பு கண்டு நிறுத்திய ஆசிரியரென்னும் ... சிமானமிய உரையோ டொன்றுபட்டுச் சிவஞானயோகிகளார் கருத்து ... பொருந்த ... நிறுத்தனர். அஃதேல், "வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி ... கணையாதத் தொடர்புடைய தென்மொழியை யுலகமெல்லாம் ... குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரென்ற ... பெருமையாவ ... ரைப்பார்" என்று அவர் முற்படக் கூறிய செய்யுளொடு ... மாறுபட்டு ... பொன்னின்,— அறியாது கடாயினாய், அதனோடு இது மாறுபடுமாறு ... அச்செய்யுள் தென்மொழி யென்றது இலக்கணத்தினையே, அன்றி, இலக்கண ... இலக்கியமென்னும் பாடையை யன்று. அது "வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத் தொடர்புடைய தென்மொழியை யுலகமெல்லாந் ... குடமுனிக்கு வலியுறுத்தார்" என்று சிவபிரான் பாணினிமுனிவர்க்கு வடமொழி யிலக்கணம் வகுத்தருளிய தொடர்புபற்றிக் கூறியதனானே இனிது புலப்படுதலின் சிவபிரான் பாணினிமுனிவர்க்கு ஆரிய இலக்கியமென்னும் பாடையை வகுத்தருளினானென்று அதற்குப் பொருள் கூறலாகாதோவெனின்,— வேதாகமமுதலிய ... பாடைவடிவாயச் "சிறுடியாரம்பந் தொட்டு நிலைபெறு" மென்று யாண்டும், "இருமொழிக்கு முதற்குரவர் சண்ணுதலா ரியல்வாய்ப்ப விருமொழியும் வழிப்படுத்தார் முனிவரர்" ரென்று யாண்டும், "சிவபிரான் சிருட்டியாரம்பத்தில் அமபிகைக்கு ஆரியமுந் தமிழு மொருங்கு நல்கி அறிவுறுத்தருளினான்" என்ப பிறாண்டும், ஆந்தவுரைபாய ... பெற்று வருமதே ... தொடு முழு மாறுகோளுறுதலின், அங்ஙனம் அதற்குப் பொருள் ... ஆகாமையுணர்க.

இன்னும், "எவ்வினையு மோப்புறலின் திராவிடமென்றியம் பாடை எவ்வமறப் புதிதாக யானவர்க்குப் பலகியது ... வருணைத் தொள்ளாயர்க்கு மெளிதாகப் புநசேனி ரவவெவர்க்குஞ் சுவையமிழ்தி னினிதாகச் செய்தருளாய' என்றும், "மூன்றுறழ்ந்த புள்ளிபெறுமெழுத்தான் முழுவதுமா யுணக்கினிதாயத் தோன்றிடுமித் தமிழ்ப்பாடைத் துதி கொண்டு மகிழ்ந்தருளி - யான்றவர மெல்லார்க்கு மிவ்வரையபி னளித்தருளாய் யேனை றெடுத்த மொழிகலவி யெவற்றினுக்கு மிறையோமன" என்றும், "கூம்பியகைத் தலமுடைய குறுமுனிக்குப் பிறைஞ்சுஞா- தாமடர்ந்து தமிழ்விளக்கத் தமாசிரியத் தலைமையொடு மேம்படுதென் றிசைக்கிறைமை நல்கிவேட் டனபிறவு - மாமபரிசி னளித்தருளி யவ்வி லிங்கத் திடைக்கரந்தார்" என்றும், அதன் முற்படக் கூறிய செய்யுட்களும் இதனை வலியுறுத்தும். யாங்ஙனமெனின்,— பூர்வானுபவம் உள்ளிட்டு எவ்வினைய மோப்புதலிற

திராவிடமென் றியல்பாடை" "மூன்றுறழ்ந்த பதிற்றெழுத்தான் முழுவதுமாய" என்றும், தொன்று கலந்த எவ்வமற இன்று இலக்கண வரம்பின்றிப் புதுப்படுமாறு யான் உரைக்கவருமென்னும் பொருள் உள்ளிட்டு, "எவ்வமறப் புதித்தாக யான் வகுப்ப நல்கி" யென்றும், ஓதுதலானும், பின் இதன்கண் ஐயநீங்கித் துணிபெய்த எல்லா மொழிகட்கும் இல்லாச் சமயவித்தைகளுக்குஞ் சிவபிரானே முதல்வனென்னும் பொருள் உள்ளிட்டு ஏனறெடுத்த மொழிகளின் யெவற்றினுக்கு மிறையோனே" என்றும், தமிழ்மொழி தன்கட் கலந்த வழுவினீங்கிச் செம்மையுறுமாறு இலக்கணவிளக்கஞ் செய்யும் ஆசிரிய முதன்மையே சிவபிரான் அகத்தியனார்க்கு அனுமதி வழங்கினானென்னும் பொருள் உள்ளிட்டுக் "கூடமியக்கைத் தலமுடைய குறுமுனிக்குப் பிஞ்ஞகனார் தாம்பரிந்து தமிழ்விளக்கு மாசிரியத் தலைமையொடு - மேம்படுமென் றிசைக்கிறைமை நல்கி" என்றும், ஓதுதலானு மெனக.

அற்றேல், அருகந்தருட்பட்ட புத்தமித்திரனென்பான், வீரசோழியப் பாயிரத்தில், "ஆயுங் குணத் தவலோகிதன் பக்கல் அகத்தியன் கேட் - டேயும் புவனிக் கியம்பிய தண்டமி ழீங்குரைப்பன்" என்று கூறி அகத்தியனார் அவலோகிதனிடத்துத் தமிழ் கேட்டுணர்ந்த தென்னெனின்,— அவ்வசுவழுக்கொண்டு மாறுபட்ட வுரை தக்கதே றுபொருளாகக் கொள்வர் புறப்புறச்சமணர். அவர் பொய்யுரைப் பற்றிக் கொண்டு வாக்கடவீதோ இழுக்கன்று. ஆதலின், அதுவோர் தடையென்று கொண்டு பரிகரித்தல் வேண்டாமெனக.

முன்கூறியவாற்றால், தென்மொழி ஆதிக்கட் சிவபிரான் அருளிச்செய்யப்பட்டு நடைபெற்ற தொன்மொழியென்பதூஉம், அகத்தியனார் அருந்தவமிருந்து சிவபிரான் உபதேசித்தருளியவாறு கடைப்பிடித்து அதற்கு இலக்கணந் தெளிவுற வகுத்த வாசிரிய ரென்பதூஉம், சிவஞானயோகிகளுக்குக் கருத்தாமாறு வச்சிரலேபமாக நாட்டப்பட்டது. இதனானே, "சிவஞானமுனிவர் அகத்தியரால் தமிழ் பூமியிலே உற்பத்தியாயினதெனக் கொண்டார்" என்று வீரசோழியப் பதிப்புரைகாரர் கூறியது அறிவு புறம்போய பிதற்றுரையேயாதல் சிறுமகார்க்கும் இனிது விளங்குமெனக.

இனிச் சிவஞானயோகிகள், அகத்தியனார் "செந்தமிழ் நிலத்து மொழியோடு முற்படுத் தோன்றுநூ" லென்பதற்கு "செந்தமிழ் நிலத்து மொழி தோன்றுங்காலத் துடன்றோன்றிய நூல் எனவு மயங்குவாராயினர்" என்று, அம்மயக்கவறிவுடையார் அதுசாதுரியத்தை வெறும் பிதற்றுத் தெரிந்தும்.

மேற்கூறியவாற்றானே தமிழ்மொழி அகத்தியனார்க்கு முற்பட்டுத் தோன்றி நடைபெறுந் தொன்மொழியென்பது சிவஞானயோகிகளுக்கு உடம்பாடாதல் இனிது துணியப்படலின், தோலா நாவினையுடைய மேலோராகிய அம்முனிவர் தொல்காப்பியப் பாயிரவிருத்தியில், "செந்தமிழ் நிலத்து மொழியோடு முற்படுந் தோன்று நூலினை நோக்கி" "செந்தமிழ் நிலத்து மொழி தோன்றுங்காலத் துடன்றோன்றிய நூல் அகத்திய மொன்றே" எனனும் வாக்கியத்தொடர்களை அகத்தியனாரால் தமிழ் முதற்கட் பூமியில் உற்பத்தியாயின தெனனுங் கருத்துடன் கொண்டு நிறுத்தினாரென்பது சிறிது மேலாது. ஆகலின், அவ்வாக்கியத்தொடர்களுக்கு அது பொருளன்று, மெய்ப்பொருள் வேறுண்டென்றே தேறுக. இனி அவர் சிறிதும் விசாரமின்றி, அவ்வாக்கியத்தொடர்களுக்கு, அகத்தியனாரால் தமிழ் பூமியில் உற்பத்தியாயினதென்பதே, முனிவர் குறித்த

பேருரையென்று விபரீதப்பட விரையக்கொண்டு, அப்பெரியார்க்கு மயக்க மேற்றிய பழிப் பட்டது அறிவன் றென்க.

அவர் அப்பெரியார்க்கு அறியாமை யேற்றிய பழிப்படுதலைப் படாருக்க வேண்டினு ரல்லர்; செந்தமிழ் இலக்கண முதனூலாகிய அகத்தியம், சிவஞானமுனிவர் கூறியவாறு செந்தமிழ்நிலத்து மொழியோடு முற்பட்டுத் தோன்றியதாயின் அதனோடு சார்த்தப்பட்ட தமிழ்மொழி தொன்று தொட்டு நிலவரையறையில் நிலைபெறுமை தொன்றன்று, அவ்வகத்தியம் தோன்றும்பொழுதே தோன்றிப் பயில்வுபெற்று வருவ தொன்றாம் என்பது பொருள்படும். இனி அது பொருளாயின், தென்மொழி அகத்தியனார்க்கு முற்பட்டுத் தொன்று தொட்டு நிலவரையறையில் நின்று நடைபெறு மொழியென்று பேதாவியர் போற்றும் வேதவழக்கு யாதாகுங்கொல்! இனி வேதவழக்கு எக்காலத்தும் ஏமுறாது மெய்யாகி நிலைபெற்று வருவ தொன்றாகலின், அப்பெற்றித்தாம் வேதவழக்கொடு மாறுபடுதலின், அவராக்கிய அத்தொடர்கள் ஏதமுடையனவாம். ஆதலின், 'ஐ' கொள்ள ஏற்றார்க்கெல்லாம் தெளிவுரையாகா, நன்னெறியாகிய வழுவுரையே யாம் என்று அவர் புரிந்து கொண்டு அங்ஙன முரைத்தாரெனின், — அவர் அச்செய்தி விழுமிய கல்வி நுழைபுல முடையார் ஏனை யஃதோ இவர் அறிவின் பெற்றியென் றெள்ளிக் கழிபெரு நகையாடற்கே யேதுவாம்! யாதினாலெனின், — ஒரு நீர்மையவே யுலகினகண்ணே வேதவழக்கொடு மாறுகொள்வோர் மதங்களை மறுத்து இருவகைத் தமிழ்வழக்கையும் நிறுத்திப் போய சிவஞானயோகிகள் ஒழுகுவாரும், அப்பெற்றியுடைய முனிவர் வேதவழக்கொடு மாறுபடக் கூறமாட்டார், அதனால் அவராக்கிய அத்தொடர்களுக்கு அது பொருளன்று மெய்ப்பொருள் வேறுளதாதல் வேண்டும், அது தன்னை அறிவுடையாரால் உசாவித் தெளிகுவன் என்றுட்கொண்டு மதிநுட்ப நூலோடுடையராகப் பெற்றுச் சிறக்கு நல்லாசிரியரை யடுத்து உசாவி, அவற்றினுண்மை காணட்டல் அவர் விரும்பாது, சந்தியில் வேதவழக்கொடு மாறுபட முனிவர் அங்ஙனம் கூறினரென்று திரியக்கொண்டு, அருசாது அவர்க்கறியாமை யேற்றி வழி வழி நிறகும் பழிபெரிதுமாக்கிய "பொய்படு மொன்றோ புனைபூணுங் கையறியாப் பேதை வினைமேற் கொளின்" எனவும் பொய்யாமொழிப் பொருட்குத் தாம் பெரிதும் இலக்கியமாகலி னெனக். அவர் பெற்றி அங்ஙனமிருக்க. அவராக்கிய அத்தொடர்களின் மெய்ப்பொருள் யாதோ? அறியல் வேண்டுமேனெனின், — கூறுதும் "வடவேங்கடந் தென்குமரி - யாயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து-வழக்குஞ் செய்யுளு மாயிருமுதலி னெழுத்துஞ் சொல்லும் பொருளு நாடிச் செந்தமிழியற்கை சிவணிய நிலத்தொடு முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணிப் புலந்தொகுத் தோன்" என்றெழுந்த தொல்காப்பியப் பாயிரச் சூத்திரப்பிறகு ஆசிரியர் சிவஞானயோகிகள் கண்ட மெய்ப்பொருள். வடக்கண் வேங்கடமுந் தெற்கட் குமரியும் எல்லையாகவுடைய அவ்விடமாகிய தமிழ்மொழியைக் கூறு நல்லுலகத்தினகண் வழங்கும் வழக்கினையுஞ் செய்யுளினையும் ஆராய்ந்த பெரிய காரணத்தானே, அவற்றின்கண்ணவாகிய எழுத்திலக்கணமுஞ் சொல்லிலக்கணமும் பொருளிலக்கணமும் ஆராய்ந்து செந்தமிழி னுண்மையைப் பொருந்தி யுணரும் பொருட்டு, அச்செந்தமிழ்நிலத்து மொழியோடு முற்பட்டுத் தோன்று நூலினை நோக்கி, அந்நூலின் கிடந்த இலக்கணம் பிற்காலத்தார் உணரு முறைமைப்படக்கருதி யவற்றைத்தொகுத்துச் செய்தான்" என்பதன்றே! அப்பாயிரச் சூத்திரப்பிறகு மாபாடிய

காரர் இங்ஙனம் விரித்தபொருள் இளம்பூரணர் நச்சினார்க்கினியர் உரைத்தபொருள்களைப் போல் இடர்ப்பாடு மலைவு மின்றி நெறிப்படுத்த தெளிவு பெரிதுடைத்தாம்.

இனி ஆசிரியர் பனம்பாரனார் "வடவேங்கடந் தென்குமரி - யாயிடைத் - தமிழ்கூறு நல்லுலகத்து" என்று முன்னர்ப் பொதுவெல்லை கூறித் தமிழ்நாட்டினை வரைசெய்துணர்த்திச் "செந்தமிழியற்கை சிவணிய நிலத்தொடு" என்று பின்னர் விதந்தோதுதலின், ஆண்டுரைத்த நிலனுஞ் செந்தமிழ் நிலமேயாதல் இனிது பெறப்படும். இனி வடக்கண் வேங்கடமுந் தெற்கட் குமரியும் மேல் கீழ்ப்பாலெல்லைக் கடலும் பேரெல்லையாகவுடைய தமிழ்நாட்டுள் வைத்து ஒரு நிலத்தினை இது செந்தமிழ்நிலமென ஆசிரியர் வழங்குதற்கு ஏது அந்நிலத் தன்கட் டமிழ் செம்மையுற்று நடைபெறப்படுதலல்லது பிறிதன்றாம். இனித் தமிழ் செந்தமிழென ஆசிரியரால் அங்ஙனம் பிறிதினியைபு நீக்கி விசேடிக்கப்படுதற்குக் காரணந்தான் யாது என்று ஒருங்கு ஆராயலுறின், அக்காரணம் அது வழுவினீங்கி இயலவரம்புற்று ஒழுகு சீர்மையுடைத்தாதலே என்று தெளிவாம். இனித் தமிழ்தான் வழுவினீங்கி இயலவரம்புற்றுச் செந்தமிழ் என இவ்வாறு சிறப்பிக்கப்பட்டு நடைபெறுதலுடைத்தாயதுதான் யாதுபற்றி யென்று ஆராயலுறின், அருந்தவக்கொள்கை அகத்தியமுனிவர் பெருந்தவமிருந்து சிவபிரான் உபதேசித்தருளியவாறுபற்றி இயற்றிய முத்தமிழிலக்கண மாய அகத்திய முதனூல் பற்றியே யென்று புலனாம். ஆதலின், அச்செந்தமிழும், அதுதனக்கு வரம்பாகிய அகத்தியமெனும் இலக்கண முதனூலும் வடவேங்கடந் தென்குமரி எல்லையாகவுடைய அத்தமிழ் நாட்டகத்துட்படும் ஒருநிலத்து ஒருங்கே நிலவியனவேயாம். மாபாடியகாரர் இக்கருத்துப்பற்றியே "அகத்தியனாற் செந்தமிழ் நிலத்து மொழியோடு முற்பட்டுத் தோன்று நூல்" என்றும், "செந்தமிழ் நிலத்து மொழி தோன்றுங்காலத் துடன் றோன்றிய நூல்" என்றும், பாயிர விருத்தியில் அங்ஙனம் உரைத்தனர்; ஆகலின், அவ்வாக்கியத்தொடர்களின் மெய்ப்பொருள் அதுவேயாமென்று கடைப்பிடிக்க. இதனானே, அகத்தியனார் முதற்கட் டென்மொழி யிலக்கண முதனூல் வகுத்துச் செந்தமிழ் வழிப்படுத்திய பேராசிரியரென்னும் பொருளே பெறுதருமன்றி 'அகத்தியரால் தமிழ் பூமியிலுற்பத்தியாயினது' "அகத்தியர்க்கு முன் தமிழ் நிலவரம்பின்றிருந்தது" என்னும் பொருள்கள் போதருமாறில்லை. இல்லையாகவே, "தமிழ்மொழி அகத்தியமுனிவர்க்கு முன் சிருட்டி முதல்வற் சிவபிரானாற் றோற்றமுற்று நிலைபெற்று நடக்குந் தொன்மொழி" யென்று கூறும் வேதவழக்கோடு அவ்வாக்கியத் தொடர்கள் ஒத்தொழுகக் காணகின்று மன்றி மாறுபட்டு ஏசமுறக் காணகின்றிலம். அவர் இங்ஙனம் நுணுகிப் புடைபட வொற்றி ஆராய்ந்து இம்மெய்ப்பொருள் காணமாட்டாது அப்பொறிவாளர்ப் பழித்து உய்தியில் குற்றமுற்றன ரெனக. இவ்வாற்றான் "புன்மொழிற் சயவர் தமதறியாமை புலமையாயப் பரிணமித்ததுவே" என்னும் மூதுரையை அவர் புதுக்குமா றுணர்க.

அற்றேல் அங்ஙனமாக. எழுத்துஞ் செய்யுளுமாகிய செந்தமிழிலக்கிய முன்னுள்ளதாம். அகத்தியம் அவ்விலக்கியப் பண்பாய இலக்கண நூலாய்ப் பிற்றோன்றிற்றும். ஆகலின், அகத்தியம் ஒருநிலத்திடைச் செந்தமிழ் மொழியோடு முற்பட் டொருங்கு தோன்று மென்றல் அமையாதாலோவெனின்,— அறியாது வினாயினாய். செந்தமிழ் முன்னுள்ளதே யென்பது எமக்கும் உடம்பாடாயதே, அதுபற்றி ஈண்டு ஆசங்கை யெழு மாறில்லை. அத்தமிழின் செம்மை அமமுறுபொழுதில் வழுவிரவி இழுக்கமுற்றது. அகத்தியமெனும் இலக்கண நூல் அதனை வழுவினீக்கிச் செம்மையுறவிதந்து நெறிப்படுத்தி

உடம்பாடென்றறிது. அதனால் அது "செந்தமிழ்நிலத்து மொழியோடு முரண்பட்டுத் தோன்றா நூல்" என்று அங்ஙனம் ஓதப்பட்டது. இங்ஙன நெறியுறுதலின், அஃதமைவுடைத்தே யாம், மற்று அமையாமை யாண்டையதெனக். இனி யாமெடுத்தோதிய இப்பொருளே அவராக்கியத் தொடர்களுக்குரிய மெய்ப்பொருளாமென்பது, "காசியினின்றும் போந்து கம்பர் மருளப்பெற்று - மாசிலாக் கச்சிமூதூர் மணிவீற் றிருந்த பூமே - லாசிலாத் தமிழ்ப் பரப்பி யருந்தமிழ்க் குரவு பூண்ட - தேசினுள் மலைய வெற்பிற் குறுமுனி திருத்தாள் போற்றி" என அம்முனிவர் திருவாக்காக விளங்குங் காஞ்சிப்புராணச்செய்யுள் சரிபோசக்கு மாற்றானும் இனிது செல்க. ஆசிலாத்தமிழ் - செந்தமிழெனக. எனவே, கம்பர் மருளப் பெற்று அகத்தியனாற் பரப்பப்படுதற்குமுன் அது ஆசிரவியுள்ளதாயதென்பதூஉம், அஃது குற்றநீங்கிச் செம்மையுற்றது அகத்தியம் பற்றியே யென்பதூஉம், இதனைக் கருத்தாகக் காண்க. இனி "அகத்தியன் பயந்த செஞ்சொல்" "அகத்தியன் றமிழ்" என்றற்றொடக்கத்து ஆன்றோர் வழக்குகளும் இக்கருத்துப்பற்றி யெழுந்தனவேயாம். அவர் அக்கருத்தறியாது "அவ்வழக்குக்கள் உபசாரமா"மென்று பிரயோகவிவேகவுரையி லுரைத்துப் புரையுற்றார். அதுமட்டோ, "முந்துநூல்" என்பது "முன்னூற்பெற்" றென்றும், "உடனிகழ்ச்சிப் பொருள்கொண்டு அச்சொல் வினைத்தொகையாக்கியது இடர்ப்பாடா"மென்றுஞ் சொற்றார். உடனிகழ்ச்சிப்பொருள் ஆண்டுச் சிறப்புடைத்தாதல் மேற்சொல்லியவாற்றற்றி இனிது துணியப்படும். இனித் தமக்குடம்பாடாகிய முதனூலெனும் பொருட்டான அத்தொகை வினைத்தொகையாய் நின்று பயக்கும் பொருளே யென்பது தெரியமாட்டாமையின், "முந்துநூல்" என்பதை "வினைத்தொகையாக்குதல் இடர்ப்பாடா"மென்று அவர் பிசற்றினார். இனி முந்து என்பது முற்றுணிலை மாத்திரையாய் நின்ற தொழிற்பெயரென்றும், அது ஆகுபெயரால் இறந்த காலச்சினை யுணர்த்து மென்றுங் கொண்டு, முற்காலத்திற்றாகிய நூலென்று ஏழாம்வேற்றுமைத் தொகைப்பொருள் அதற்கு அவர் கொள்வரேனின், அவர் இடர்ப்பட்டு அங்ஙனங்கொள்ளும் அவ்வேற்றுமைத் தொகைப்பொருளும், இடர்ப்பாடின்றி முனிவர் கூறும் வினைத்தொகைப் பொருளும், முதனூலென்றே முடிதலின், அவர் அச்சுற்றுச் சுற்றிப்போயுஞ் சுங்கத்துறைச்சேர்ந்த நியாயத்துக்கு இலக்கியமாயப் பழிக்கப்படுமென்றொழிக.

இன்னும், சிவஞானயோகிகளைப் "பிற ஆசிரியர் மதங்களை மறுத்துத் தன்மதம் நாட்டுங் குணமுடையார்" என்று அவர் அஞ்சாது பழித்தனர். அச்சூத்திர வசத்தாற் றம்மதம் மறுத்துப் பரமதந் தழுவிப் பழிபூண்ட தம் வரலாறு வாய்சோர்ந்து புலம்பி, "யானு மறியே னவளும் பொய் சொல்லாள்" என்பதை விளக்கி யிட்டனரென் றுணர்க.

இனிப் பிரயோக விவேகநூலார் அகத்தியத்திற்கு வடமொழிப் பாணினீய வியாகரண முதனூலாமென்றது பொருந்தாமை தெரிப்பாம். "ஏழியன் முறைய தெதிர்முக வேற்றுமை - வேறென விளம்பான் பெயரது விகாரமென - றோதிய புலவனு முளனொரு வகையா - னிந்திர னெட்டாம் வேற்றுமை யென்றனன்" என அகத்தியத்தின்கண் வருதலின், "அகத்தியனார் தந்நூற்கு முதலாகக்கொண்ட நூல் பாணினீயமென்று பிரயோகவிவேக நூலார் சொற்றார். அச்சூத்திரத்திற்கு மெய்ப்பொருளுரைக்குமுகத்தான் அஃதிசையாமை தேற்றுவாம். (இ-ள்.) பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண் ணென்னும் ஏழுவேற்றுமையும் இயல்நெறிப்பட்டனவா மென்றுகொண்டு, எதிர்முகமென

னும் விளிவேற்றுமை எட்டாவதென நின்று வேறொரு வேற்றுமையாமென் றுடம்பட்டாராய் அஃது பெயர்வேற்றுமை யென்னு முதலாவதன் விகாரமென்று உரைத்த பாணினி யென்னும் அறிஞனும் உளனும். அதுநிற்க, இந்திரனென்பான் ஐந்திரத்துள் விளியும் ஓர் வேற்றுமையாதலான் அதனைப் பெயருள் அடக்காது எட்டாம் வேற்றுமை யென்று கோடந்தான்; மற்றிது தன்னையே நாம் இந்நூலு ணந்துணிபாகக்கொண்டு கூறுகின்றாம் என்றவாறு. பிரிநிலைக்கண் ஏற்றதற்கும் பொதுவாகும் ஏழே என்னும் ஏகாரமும், முற்றும்மையும், விகாரத்தாற் றொக்கன. ஏழியன் முறையதென்பது ஒருமைப்பன்மை மயக்கம். விளம்பான் எச்சமுற்று. விளியும் என்பதும் அதனை யென்பதும் அவாய்நிலையான் வந்தன. ஆதல் சொல்லெச்சம். என்றுகொண்டென்பதூஉம், அதுநிற்க வென்பதூஉம், பெயருள் அடக்காது என்பதூஉம், இசையெச்சம். மற்றிது தன்னையே நாம் இந்நூலுள் நந்துணிபாகக்கொண்டு கூறுகின்றாமென்பது குறிப்பெச்சம். எதிர்முகவேற்றுமை யெனினும் விளிவேற்றுமையெனினும் ஒக்கும். ஓர்வகையாதல் அது பெயர் வேற்றுமையுளடங்காது விளிப்பொருட்டாய் வேறுபட்டு நிற்றல். வகை ரண்டு வேற்றுமை யென்னுந் துணையாய் நின்றது. "பாணினீயமுதலிய வியாகரணங்களுமுளவாக ஐந்திரநிறைந்த தொல்காப்பியனென்றார், "பெயரது விகாரமென றோதிய புலவனு முளன்" என்ப பிறமதங்கூறி, "இந்திர னெட்டாம் வேற்றுமை யென்றனன்" என இந்திர னோதியதனைத் தந்துணிபாகக் கொண்ட அகத்தியனார்க்கு, ஐந்திரமே உடம்பாடென்பது பெறப்படுதலின், அதுவே தொல்காப்பியனார்க்கு முடம்பாடென்பது பற்றிப் போலுமெனக்" என்று பாயிரவிருத்தியுள் ஓதுதலின், ஆசிரியர் சிவஞானயோகிகள் அச்சூத்திரத்திற்குக் கொண்ட பொருளும் இதுவே யாதலறிக. இனிச் சேனாவரையர் வேற்றுமையோத்துள் "அதனினியறல்" என்னுஞ் சூத்திரவுரையில் இச்சூத்திரத்தை யெடுத் துரைத்து "ஐந்திர நூலார் விளிவேற்றுமையை எட்டாம்வேற்றுமையாக நேர்ந்தார்" என்றும், "ஆசிரியர் அவர் மதம்பற்றிக் கூறினார்" என்றும், "இக்கருத்து விளக்கியவன்றே பாயிரத்துள் ஐந்திர நிறைந்த தொல்காப்பியன் எனக் கூறிற்று" என்றும், கூறிப்போக்கினாராகலின், அவர் தமக்கும் இதுவே உடம்பாடாயிற் றெனக. இவ்வாற்றான் அச்சூத்திரத்திற்கு இதுவே மெய்ப்பொருளாதல் இனிது பெறப்படுதலின், அகத்தியனார்க்கு அப்பாணினியார் மதம் உடன்பாடன்றென்பது தெளிவிற் பெறப்பட்டது. படவே, பிரயோகவிவேகநூலார் அகத்தியனார் பிறர் மதமாகக்கொண்ட அது தன்னை உடன்பட்டனரென்று திரியக்கொண்டு அவர்க்கு முதனூல் பாணினீயமென்று சாதித்தது, வெறும் போலி யுரையாய்ப் பொருந்தாமை காண்க. அற்றாக, அகத்தியனார் ஐந்திர நூன்முடிபைத் தந்துணிபாகக் கோடலின், அகத்தியத்திற்கு ஐந்திர முதனூலென்ற றழுவப்படும் போலுமெனின்,— அற்றன்று, அவ்வைந்திர முடிபு தந்துணிபென்றன் மாத்திரையானே அகத்தியத்திற்கு ஐந்திர முதனூலாதல் செல்லுமாறில்லை. இது 'மறுதலை சிதைத்துத் தன்றுணிபுரைத்தல்' என்னும் உத்திநெறி யாகலினெனக. அன்றியும், அதுவேபற்றி அதற்கு ஐந்திர முதனூலாமெனின், அகத்தியனார் 'வேற்றுமைப் பொருள்கோள் முறையில் அப்பாணினியார் மதம் உடம்பாடன்று, அவ்வைந்திர மதமே நந்துணிபாம்' என்று கூறியாங்கு, மற்றை இயன்முறைக்கண்ணும் ஏனை இசை நாடக முறைகளின்கண்ணும் அகத்தியத்துள் அங்ஙன மறுதலை சிதைத்துத் தந்துணிபு கூறற்பாலராவரன்றே; இனி அவைபற்றி அவ்வநூல்களுட் அகத்தியத்தியத்திற்கு முதனூலாவான் செல்லும். செல்லவே, முதனூல்பல்கி வரையறை பெறாதாமெனக. அல்லதூஉம், தமிழ்மொழி ஆரியமொழி

போலத் தெய்வமொழியாய் நிலவரைப்பில் ஆதிக்கட் டோன்றி நடைபெறுந் தொன்மொழி யென்பது மேலே நிறுத்திப்போந்தா மாதலின், அதற்குரிய விலக்கணம் ஒவ்வோர் துறையில் வடமொழியோடொத்து ஒழுகினுந் தன்மொழிக்கட் பகுதி செய்கைகளும், குறியீடுகளும், வினைக்குறிப்பு வினைத்தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், குறினெடில் முதலிய இனப்பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய செய்யுளிலக்கணமும் இன்னோரன்ன பிறவும், வேறு தனியிலக்கணமாகக் கொண்டே ஒழுகு சீர்மைத்தாகலானும், இவையெல்லாம் பாணினீயத்துள்ளும் ஐந்திரத்துள்ளும் பிற வடநூலுள்ளும் பெறப்படா வாகலானும், அது பொருந்தாமை ஒருதலையாக வுணர்க. இங்ஙனமாதலின், தவருஞ் சித்தியினும் மேவருஞ் ஞானத்தினுந் தேவரினு முனிவர் யாவரினு மேம்பட்டு உலகமெலாந் தொழுதேத்த நிற்குந் தெய்வப் பெற்றியாளராகிய அகத்தியனார் இறைவனார் கருணை கூர்ந்தருளியவாறு பற்றியே தமிழிலக்கண முதனூ றனி யியற்றி நடாத்தினரென்பது தெற்றென வுணர்க. வேதவழக்கும் இதுவேயா மெனக. திராவிட மாபாடியகாரர் கருத்தும் இதுவேயாதல் பாயிரவிருத்தியுட் காண்க. அகத்தியனார் ஞானசித்திகளிற் றேவரினு முனிவர் யாவரினு மேம்பட்டவாறு, நிலைபிறழ மாநிலஞ் சமமுறக் கண்டல் குடங்கையி னெடுங்கடனீர் முழுது மடக்கிக்கோடல் முதலிய பிறர் செயற்கரிய அவர் தெய்வச் செயல்கள்பற்றி இனிதறிக. இஃதுணர்த்துதற்கன்றே பாயிரவிருத்தியுள் “முனிவர் வந்தார் அகத்தியனும் வந்தான் எனபுழிப்போல” வென்றும், காஞ்சிப்புராணத்துள் “உலகமெலாந் தொழுதேத்துங் குடமுனி” யென்றும், சிவஞானயோகிகள் அவர் தலைமை விதந்தெடுத்து அவ்வாறு ஓதுவாராயினாரு மெனக. இனிப் பிரயோகவிவேக நூலார் அக்கூற்று மேற்கூறியவாறு உத்தியோடு மாறுபடுதன்மேலும் வேதவழக்கொடு மான்றோர் வழக்கொடு மாறுபடுதலு முடைத்தென்றறிக.

இன்னும், அகத்தியந் தமிழ் வழக்கிற்கு முதனூலாய் எழுந்த தொன்றாகலின், அது முத்தமிழ் வழக்கிலக்கணம் அம்முறைப்பற்றியே எடுத்தோதுவதாம். அன்றி வடமொழிக்கணுள்ள அச்சத்தநூல் இசைநூல் நாடகநூற் பொருள்களை மொழிபெயர்த் தெடுத்துக் கூறுவ தன்றென்றுணர்க. இனி அகத்தியத்துட் கூறும் முத்தமிழ் மரபுகள் சில வடமொழிக்கும் பிற பாடைகட்கும் பொதுவாய நோவன உளவாயினும், அவையுந் தமிழ் வழக்கு நோக்கியே அதன்கண் இலக்கணஞ் செய்யப்பட்டனவாகு மென்றறிக. இதனானே முத்தமிழ் வழக்கு முதனூலாகிய அகத்தியத்தை மொழிபெயர்த்ததாகக் கூறிய இலக்கணம் யாது மின்றென் றுணர்க. இனி “எதிர்முக வேற்றுமை வேறென விளம்பான பெயரது விகாரமென் றோதிய புலவனு முளனே, இந்திரனெட்டாம் வேற்றுமை யென்றனன்” என்பனவாக அகத்தியனார் அகத்தியத்துள் ஓதியனவும் பிறவும், ‘மறுதலை சிதைத்துத் தன்றுணி புரைத்தல்’ ‘பிறனுடம்பட்டது தானுடம்படுதல்’ ‘பிறன்கோட்கூறல்’ முதலிய உத்திவகையாகத் தூக்கி யுணரப்படு மெனக. இனி அப்பாணினியார் மதம் மறுதலையாய்ச் சிதைக்கப்படுவதாயின், அது வடமொழி மெய்ந்நிலை வழக்குநூலன்றாம் பிறவெனின்,— அற்றன்று, ஆண்டு அது மறுதலையாய்ச் சிதைக்கப்படுமென்ற கருத்து, அகத்தியனார் தந்துணிபாகக்கொண்ட வேற்றுமை யெட்டெனும் அக்கொள்கைக்கு மாறாய் அவர்தம்மான் வேண்டப்படுவ தன்றாயது என்பதே யாகலின், அதுகொண்டு அஃது மெய்ந்நிலை வழக்குநூ லன்றென்பது பெறப்படுமாறு இல்லை யெனக.

இனி வீரசோழியப் பதிப்புரைகாரர் "அகத்தியனார் தமிழ்த் தனி யிலக்கணமுதனூன் முறை பொருந்த இயற்றமாட்டா ராயினர்" என்று ஓதியினறிப் பேசியது பிதற்றுரையாதல் அறிவுறுப்பாம்.

அவர் அகத்தியனார்க்கு அறியாமை யேற்றிய பிதற்றுரை வருமாறு:— "அகத்தியர் மகாரிஷீசுரர். அன்னோர் அவற்றைக் கற்பித்தல் எளிதன்றேயெனின்,— ஐந்திர பாணினீய வியாகரணங்களை நன்குணர்ந்தும் அவற்றுள்ள அதிகாரமுறை ஒத்துமுறை சூத்திரமுறைகளின் சிறப்பினைச் சீர்திறங்கண்டும் யாதொரு கிரமமு மின்றிச் சம்பந்த சார்பு மின்றித் தமிழு மியல் இசை நாடகவிதிகளும் இயற்றமிழுள்ளும் எழுத்துச் சொற் பொருள் யாப்பு அணி விதிகளு நெறி முறை பிறழக் கண்டபடி விரவத் தமது இலக்கண நூலியற்றியமையானே அந்நூ லெந்நூலினும் வல்லராயினும் ஒருவாக் கரியதென் றுணர்க" எனப்படும். பண்டு அகத்தியத்துள் முத்தமிழிலக்கணங்களும் அவற்றின் பகுதிகளும் முறைபிறழ வியற்றப்பட்டன வென்று அவர் அகத்தியம் பெரிதாராய்ந்து உண்மை கண்டு கூறுவார்போல அபினயித்து உரையாடினர். என்னை? முத்தமிழிலக்கண முதனூலாகிய அகத்தியந் கடைச்சங்கம் ஒடுங்கிய பின்றைஞான்றே நிலவுரைப்பில் வழங்கற்பாடின்றி இறந்துபட்டதென்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்த பட்டாங்காதலி னென்க. பட்டாங்கு - உண்மை, இனி அகத்தியம் அக்காலத்து இறந்துபட்டதென்ப துண்மையே, அவர் அதுகண்டு கூறினாரல்லர், தொல்காப்பிய உபோற்காதத்துள் "முந்து நூல் கண்டு முறைப்பட வெண்ணி" என்றும், "மயங்கா மரபின் எழுத்து முறைகாட்டி" என்றும் போந்த வாக்கியக் கூறுகட்கு, இளம்பூரணர் நச்சினார்க்கினியர் சிவஞானமுனிவர் அகத்தியம் அப்பெற்றித்தாக இயற்றப்பட்டதென்று உரைத்த உரைகள் கொண்டே அங்ஙனங் கூறப்பெற்றாரெனின், அவ்வாக்கியக் கூறுகட்கு அகத்தியம் அப்பெற்றித்தாய தென்பதுபட அவ்வுரையாசிரியர்கள் யாண்டுரைத்தனர்? இளம்பூரணர் "முந்து நூல் கண்டு முறைப்பட வெண்ணி" என்பதற்கு "முதனூல்களிற் சொன்னவற்றினைக் கண்டு அவ்விலக்கணங்களை முறைப்பட ஆராய்ந்து" என்று உரைத்தனர். நச்சினார்க்கினியர் "முன்னை யிலக்கணங்க ளியைந்தபடியை முற்றக்கண்டு அவ்விலக்கணங்களெல்லாஞ் சில வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினோர்க்கு அறியலாகாமையின் யான் இதற்கு வரையறுத்துணர்த்துவலென்று அந்நூலிற் கிடந்தவாறன்றி அதிகார வகையான் முறைப்படச் செய்தலை யெண்ணி" என்று உரைத்தனர். சிவஞானமுனிவர் "முற்பட்டுத் தோன்று நூலினை நோக்கி அந்நூலிற்கிடந்த இலக்கணம் பிற்காலத்தார் உணரு முறைமைப்படக் கருதி" என்று உரைத்தனர். இனி "மயங்கா மரபின் எழுத்து முறை காட்டி" என்பதற்கு இளம்பூரணர் "முன்னை நூல்போல எழுத்திலக்கணஞ் சொல்லுட் சென்று மயங்காத முறையானே எழுத்திலக்கணத்தினை வேறு தெரிவித்து" என்று உரைத்தனர். நச்சினார்க்கினியர் "அம்மூவகை யிலக்கணமு மயங்கா முறைமையாற் செய்கின்றமையின் எழுத்திலக்கணத்தினை முன்னாகக் காட்டி" என்று உரைத்தனர். சிவஞானமுனிவர் 'இயற்றமிழும் இசைத்தமிழு நாடகத்தமிழு முன்னூலுட் போல விரவாதன்மையானே இயற்றமிழை வேறு பிரித்து உலகிற் கறிவித்து" என்று உரைத்தனர். இன்னுஞ் சிவஞானமுனிவர் "முறைப்பட வெண்ணிய புலந்தொகுத்தலாவது, முதனூல் பரந்து கிடத்தலின் இக்காலத்துச் சில் வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினோர்க் கறியலாகாமையின் அவர் அறியு முறைமைப்பட வெண்ணி அதற்கேற்பத் தொகுத்துச் செய்தல்" என்றும், "அகத்தியத்துள் முத்தமிழும் விரவிக் கூறப்பட்டன"

என்றும், "இயற்றமிழுள்ளும் எழுத்துச் சொற் பொருண் மூன்றனையு முன்னூலிற் போல விரவிக் கூறாது முன்னர் எழுத்துணர்த்திப் பின்னர்ச் சொல்லுணர்த்தி அதன் பின்னர்ப் பொருளுணர்த்தினா னென்பார் 'காட்டி' யென்றொழியாது 'முறைகாட்டி' என்றார்" என்றும், அவற்றின் பொருணுட்பம் ஆண்டு இனிது விரித்தனர். அகத்தியனார் பிணிதபு நோன்பும் பெருகுறு வாழ்நாளு முழுதுணர் வலியுமுடைய முற்காலத்தார் அறியு முறைமைப்பட முத்தமிழ் இலக்கண முழுதும் விரவிய நெறியினால் அகத்தியத்துட் கூறினாரெனப்தூஉம், தொல்காப்பியனார் தம் ஆசிரியர் அங்ஙனம் அகத்தியத்துட் கூறிய முத்தமிழ் இலக்கணப்பரப்புள் இயற்றமிழ் ஒன்றனையும் வேறு பிரித்துச் சில்வாழ்நாளும் பல்பிணியுஞ் சிற்றறிவுமுடைய பிற்காலத்தார் உணருமுறைமைப்படத் தொகுத்தல் யாப்பான முறைகாட்டித் தொல்காப்பியத்துள் ஓதினாரெனப்தூஉம், இவ்வுரைகளாற் போதரும் பொருள்களாம். மற்று அகத்தியம் "முத்தமிழ் இலக்கண நெறிமுறைபிறழக் கண்டபடிவிரவ உரைகூறுங் குற்றமுடைய நூலாம், தொல்காப்பியம் அவ்வாறன்றி இயற்றமிழ் இலக்கண முறைமைப்பட உரைகூறுங் குற்றமி னூலாம்" என்று அவர் குறித்த பொருள் அவற்றாற் போதருமாறில்லையாம். ஆகவே, அவர் அவ்வுபோற்காத வாக்கியக் கூறுகளின் உரைகள் நோக்கி அங்ஙனங் கூறப்பெற்றாரென்றல் சழக்கேயாதலன்றி வழக்காதல் இல்லையெனக். உபோற்காதம் - சிறப்புப்பாயிரம்.

இனி "அகத்தியத்துண் முத்தமிழிலக்கணங்கள் விரவிக்கூறப்பட்டன" என்றது கொண்டே அதனுள் அவ்விலக்கணங்கள் முறையின்றி ஓதப்பட்டமை தானே பெறப்படும் என்று அவர் அங்ஙனங் கொண்டு கூறினாரேனின்,— அறியாது கூறினாய். என்னை? ஆண்டு இலக்கணம் விரவுதலென்றது ஒருபொருட் கிலக்கணங் கூறுமவழி அதனாற்றன் புலப்படுத்தற்குபகார முடையனபிற ஆண்டு இடைப்படப் பொய்யாது சொல்லுதல். அது திராவிடமாபாடியகாரர் சூத்திரவிருத்தியுள் இடைச்சொற்கு இலக்கணம் விளங்கத் தெரிக்கலுற்றுழி அதன் இயல்பு உளங்கொளற் பொருட்டுப் பகுதிப் பதஞ்சலிய ரொடுவுநிலைத் திணை யிலக்கணமும் அதனோ டியைபுடைய ஏனைப் பொருளிலக்கணங்களும் ஆண்டு இயைபுபற்றி இடையிட்டு எடுத்து விரித்துக் கூறியது போல்வனவும் பிறவுமாம். ஆசிரியர் தொல்காப்பியனார் இந்நூற்புணர்ப்பினைப் 'பொருள் இடையிடுத' லென்னுமோர் தந்திரவுத்தி யென்பர். இனி அகத்தியத்துள்ள இயற்றமிழை வேறு பிரித்துத் தொகுத்துணர்த்த வெழுந்த தொல்காப்பியத்துள்ளும் இவ் விரவியற்பிரயோகம் அருகிவந்தன ஆண்டாண்டுச் சிலவுள்ளன. சேனாவரையர் முதலியோர் "இஃது இவ்வோத்துட் கூறுதற் கியைபில்லது" என்று தடையாக்கியும், "மற்றிவ்வுபகார இயைபுநோக்கி இவ்வோத்துள் மற்றிது கூறுதற்கு இயைபுடைத்தாயிற்று" என்று விடைபோக்கியும், ஆண்டாண்டுக் கூறுமாறுபற்றி, அது கடைப்பிடிக்க. இன்னும், இவ்விரவியற்பிரயோகம் நூல்கடோறும் அருகியும் பெருகியும் பலவாறு வருவனவேயாம். அவையெல்லாம் ஈண்டுக் காட்டப்புகின் மிக விரியுமெனக.

இனி வடமொழி இலக்கணநூலாகிய பாணினீயமும் பிணிதபுநோன்பும் பெருகுறும்மாயுளுமுடைய அக்காலத்துப் பேரறிவுடையார் அறியு முறைமைப்பட இவ்விரவிய னெறியால் இயற்றப்பட்ட தொன்றென்றும், சத்தகௌத்துப நூலார் முதலியோர் பிற்காலத்தார் உணருமுறைப்பட அதன் சூத்திரங்களைப்பிரித்து முறைகாட்டிச் சித்தாந்த கௌமுதி முதலியன விளங்கச் செய்தனரென்று முணர்க. இனி இறைவனூல்களா

கிய வேதாகம வோத்துக்களும் இவ் விரவியனெறி மருவியனவேயாதல் அவை வல்லார்வாய்க் கேட்டுணர்க.

அல்லதூஉம், பாயிரஞ்செய்த பனம்பாரனார்க்குத் தொல்காப்பிய மூர்த்து நூலெனறெடுத்தோதிய அகத்தியம் விழுமிய முதனூலென்பதே கருத்தாதலன்றி முறைபிறழ்ந்து கிடக்கும் ஓர் விழுப்பமினூலாமென்றல் கருத்தாதலில்லை. அது பிறழ்ச்சியுடைய விழுப்பமினூலென்றல் அவர்க்குக் கருத்தாயின், "வழியெனப்படுவ ததன்வழித்தாகும்" என்பதுபற்றித் தொல்காப்பியத்திற்கு வழியாகக் காட்டற் கெடுத்தோதிய முதனூலாகிய அகத்தியம் வழுவுடையதென்றாய அதன்வழிவந்த தொல்காப்பியமும் இயல்வழக்கு நூலாதற் சிறப்புடைத்தன்றெனப்பட்டுப் பாயிரப்பொருள் புரையுற்றொழியுமெனக. இதனால், உரைகாரர்களும் அகத்தியத்தின் மகிமை புலப்படுத்தல் கருதியே பாயிரவுரையுள் அது முதனூல்பிழைவிரவிக் கூறப்பட்டதென்று அங்ஙனம் ஓதுவாராயினரென்று துணிக. இனி இவ்வாறு செம்பொருள் பயக்கும் விரவியற்பிரயோகத்தினை அவர் முறைபிறழ்வாகத் திரியக்கொண்டுற்றவ வேந்தர்க்குக் குற்றம் பெரிசேற்றிய தருக்கமுதிராச்சி, "ஆனை பெருந்தம பொலிய" வென்புழிப் 'பொலிய' வென்பதற்குப் பொருளறியாது தமக்குத் தெரிந்த பொருளைப் பற்றிப் 'பாடம் பிழை' யென்று தள்ளி வேறு வேறு பாடங்கொண்டார் முறைமையோ டொப்பதென றங்ஙன நகையாடி விடுக்கற்பாலதென்பது சற்றுணர்வுடையார்க்கு இனிது புலப்படுமெனக. இப்பெரியாரைப் பிழைப்புக் கழுவாயில்லெருங் குற்றமாம். கழுவாய் - பிராயச்சித்தம். அஃது அப்பெற்றித்தாதல் ஞோக்கியன்றே, "எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார் - பெரியார்ப் பிழைத்தொழுகு வார்" என்று அருளிச்செய்தார் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாருமென் றுணர்க. இனி இன்னோரன்ன பெரியாரைப் பிழைப்பினை வைதிக நெறிவருஞ் சீரியார் செய்யார், அவர் அன்னாரல்லராதலின், அவ்வாறு குற்றங் கூறிச் சிறுமைக் கிலக்காயினரென் றொழிக.

தலைச்சங்கம்.

தமிழ்மொழி தலைச்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கமென்னு மூன்று சங்கங்களினு நன்று ஆராயப்பட்டது. இச்சங்க மூன்றினையும் இரீஇயினார் பாண்டியர்கள்.

இனித் தலைச்சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தார் அகத்தியனாரும் திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளும் குன்றமெறிந்த முருகவேளும் முரிஞ்சியூர் முடிநாகராயரும் நிதியின் கிழவனுமென இத்தொடக்கத்தார் ஐந்நூற்று நாற்பத்தொன்பதின்மர். அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினார். அவர்களாற் பாடப்பட்டன வேதுணையோர் பரிபாடலு முதுநாரையு முதுகுருகுங் களரியாவிரையுமென இத்தொடக்கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்கமிருந்தார். அவர்களைச் சங்கமிரீஇயினார் காய்சினவழுதி முதலாகக் கடுங்கோனீறாக எண்பத்தொன்பதின்மர். அவருட் கவியரங்கேறினார் எழுவர் பாண்டியர். அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல்கொள்ளப்பட்ட மதுரை. அவர்க்கு நூல் அகத்தியம்.

ஆசிரியர் அகத்தியனார் தாம் இயற்றிய முத்தமிழ் முதனூலாகிய அகத்தியத்தினைத் தொல்காப்பியனார் முதலிய பன்னிருமாணாக்கர்களுக்குங் கற்பித்தருளினர். இன்னும், அகத்தியனார் தொல்காப்பியனார் முதலாயினார்க்கு ஐந்திரமுதலிய வடநூல் பலவுஞ்

செய்திவுற்திருளினார். தொல்காப்பியனார் திரணதூமாக்கினியென்றும் வழங்கப்படு வர். தொல்காப்பியர் முதலிய பன்னிருவராவார் தொல்காப்பியனார், அதங்கோட்டா சிரியர், துராலிங்கர், செம்பூட்சேயார், வையாபிகர், வாய்ப்பியர், பனம்பாரனார், கழா ரம்பர், அவிநயர், காக்கைபாடினியார், நற்றத்தர், வாமனர் எனபவரெனக.

இப்பன்னிருவரும் அகத்தியனார்பால் அவரியற்றிய முத்தமிழ் முழுமுதனூலா கிய அகத்தியமு மற்றை ஐந்திரமுதலிய வடநூல்கள் பலவு நன்கு கற்று வல்லராயின ரேனும், அவர் தம்முட் டொல்காப்பியனார் தென்கலை வடகலை நன்கு முழுதுணர் அறிவின் மதுகையினும் அருந்தவ ஒழுக்கத்தினுங் கறைவளர் மிடற்றவ னிறைவன ருட் பேற்றினு மிக்காராய அவர்க்குத் தலைவராயினா ரெனக. இவ்வரலாறு பன்னிரு படலப் பாயிரச் சூத்திர முதலிய பற்றித் தெளிக.

இனித் தொல்காப்பியனார் முதலாயினார் அகத்தியத்தினானுள்ள இயற்றமிழை வேறுபிரித்து வழிப்படுத்தார், பெருநாரை பெருங்குருகு முதலிய நூலுடையார் இசை த்தமிழை வேறுபிரித்து வழிப்படுத்தார், முறுவல் சயந்தங் குணநூல் செயிற்றிய முத லிய நூலுடையார் நாடகத்தமிழை வேறுபிரித்து வழிப்படுத்தாரென வுணர்க. தொல் காப்பியர் முதலிய பன்னிருவரும் அகத்தியத்தினவழித் தனித்தனி இலக்கண நூல்கள் பல செய்ததூஉமன்றிப் புறப்பொருட் பன்னிருபடல மென ஒருநூல் ஒருங்குகூடி இயற்றினர்.

இனி அப்பன்னிருவரும் அகத்தியத்தினவழி இயற்றமிழ்நூல்கள் பலசெய்த னரேனும், தொல்காப்பியனார் இயற்றிய இயற்றமிழ் நூலாகிய தொல்காப்பியம் ஏனை யோர் இயற்றிய நூல்களினு மாட்சி மிகவுடைத்தாய் அவ்வகத்தியத்திற்குச் சிறந்த தோர் இயற்றமிழ் வழிநூலாயிற்று.

இடைச்சங்கம்.

இனி இடைச்சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தார் அகத்தியனாரும், தொல்காப் பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழியும், மோசியும், வெள்ளூர்க் காப்பியனும், சிறு பாண்டரங்கனும், திரையன்மாறனும், துவரைக்கோமானும், கீரந்தையுமென இத் தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர். அவருள்ளிட்டு மூவாயிரத்து எழுநூற்றுவர் பாடினர். அவர்களாற் பாடப்பட்டன கலியும், குருகும், வெண்டாளியும், வியாழ மாலையகவலுமென இத்தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமும், தொல்காப்பிய மும், மாபுராணமும், இசைநுணுக்கமும், பூதபுராணமுமென இவை. அவர் மூவா யிரத்தெழுநூற்றியாண்டு சங்கமிருந்தார். அவரைச் சங்கம் இரீஇயினார் வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறனீறாக ஐம்பத்தொன்பதின்மர். அவருட் கவி யரங்கேறினார் ஐவர் பாண்டியர். அவர் சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தது கபாடபுரத் து. அக்காலத்துப்போலும் பாண்டியனாட்டைக் கடல் கொண்டது.

தொல்காப்பியம்.

இது தொல்காப்பியமுனிவரா லியற்றப்பட்டமையின், அப்பெயர்த்தாயிற்று. "தொல்காப்பியம் இடைச்சங்கத்துச் சான்றோர்க்குங் கடைச்சங்கத்துச் சான்றோர்க்கும் இயற்றமிழாராய்ச்சிக்கு நூலாய" தென்று கணக்காயனார் மகனார் நக்கீரர் களவிய லுரைமுகத்துக் கிளந்தெடுத் தோதினார். இன்னும், இத்தொல்காப்பியம் இடைச்சங்க மிறுதியின் அன்றும் இற்றமிழாராய்ச்சிக்குச் சிறந்த வாரிட இலக்கண நூலாய நில

வுவ தாயிற்று. மற்றிந்நூல், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரமென மூன்றதிகாரங்களுடைத்து. இனி நூற்பா ஒருபொருணுதலிய சூத்திரமும், இனமொழிகிளந்த வோத்தும், பொதுமொழிகிளந்த படலமு மென்னு மூன்றுறுப்படக்கிய பிண்டமாம். அவற்றுட் டொல்காப்பியம் ஒருபொருணுதலிய சூத்திரங்களும், இனமொழிகிளந்த வோத்துக்களும், பொதுமொழிகிளந்த படலங்களு மென்னு மூன்றுறுப்புந் தன்கணடங்கக்கொண்டு நிற்கு மோர் பிண்டநூலாம். இனி அகத்தியம் இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழென்னு மூன்றுறுப்பினையு மடக்கி நிற்றலின், அஃது பிண்டத்தினை யடக்கிய வேறோர் பிண்டமென்றார் நச்சினார்க்கினியர். பொதுமொழிகிளந்த படலமாதல்— ஒருநெறிப்பொருட்டாய மொழியப்படுதலன்றித் தன்னுள் விரவிய பொருட்கெல்லாம் பொதுவாய மொழியப்படுதல். இவ்வுறுப்புக்கள் இன்னோரன்ன நூற்கேயுரிய வுறுப்புக்களென்று தேறமாட்டாத நன்னூல் விருத்திகாரர் "பாட்டுடைத் தலைவன் சரிதையே யன்றி மலை கட லாறு முதலிய பல்பொருட் டிறங்களும் விரவி வருதலும் பல்பொருளுணர்த்தும் பொருட்சொற்க ளோரோவழி யன்றித் தொடர்ந்துவருதலும் படலம்" மெனத் தமக்கு வேண்டியவாறு ஓதினார். பாட்டுடைத்தலைவன் சரிதை யொடு மலை கடலாறு முதலிய பல்பொருட்டிறங்கள் விரவிவரும் படலங் காவிய வுறுப்பாகலின், ஈண்டாராய்ச்சி யிலையென்பதுணர்க.

இத்தொல்காப்பியவிலக்கணநூல் முத்தமிழ் முதனூலான அகத்தியத்தின் வழிப் பிறந்தநூல்களுள் இயற்றமிழ்ப்பெற்றியெல்லாம் இனிது விளங்க வெடுத்துணர்த்து மாட்சியிற் றானே தனக்கு நிகராய ஏனோ ரியற்றமிழ் நூல்கட்கெல்லாம் பெரிய வாணை வரம்பாய நிலைபெறுவதாகலின், முற்காலத்தாரும் பிற்காலத்தாரும் இதனிலக்கண நெறி கடைப்பிடித்தே எழுத்துச் சொல்லிலக்கணநூல்களும் யாப்பிலக்கணநூல்களும் பொருளிலக்கணநூல்களுந் தனித்தனித் தொகுத்தும் விரித்தும் பல வியற்றினார். இஃதகத்தியத்திற்கு வழிநூலாயினுந் தன்வழித் தோன்றிய பல்காப்பியமுதலிய வியற்றமிழ் நூல்களுக்கு முதனூலுமாமென்க.

இதன் எழுத்ததிகார நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல், புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர்மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப்புணரியல் என வொன்பஃதோத்துக்களுடைத்து. ஓத்தெனினும் இயலெனினும் ஒக்கும். சொல்லதிகாரங் கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமைமயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியலென வொன்பஃதோத்துக்களுடைத்து. பொருளதிகாரம் அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியலென வொன்பஃதோத்துக்களுடைத்து. இனி எழுத்ததிகார நானூற்றெண்பத்துமூன்று சூத்திரங்களும், சொல்லதிகார நானூற்றறுபத்துமூன்று சூத்திரங்களும், பொருளதிகாரம் அறுநூற்றறுபத்தாறு சூத்திரங்களு முடையனவாம்.

எழுத்ததிகாரம்.

எழுத்ததிகாரமென்பது எழுத்தினததிகாரத்தையுடையதென அன்மொழித்தொகையாய்ப் படலத்திற்குக் காரணக் குறியாயிற்று. எழுத்தென்றது— அகரமுத னகரவிறுவாய்க் கிடந்த முதலெழுத்து முப்பதுங் குற்றியலிகரங் குற்றியலுகர மாய்த மென்னுஞ் சார்பெழுத்து மூன்றுமாம். அவற்றிற் கெழுத்தென்னுங்குறி முன்னர் "எழுத்தெனப்படுப" என்னுஞ் சூத்திரத்தா லோதுபவாகலின் ஈண்டெடுத்தது [illegible]

புட்டது. அதிகாரம்—அதிகரித்தல். அதிகாரமெனினும் படலமெனினு மொக்கும். அஃது யதோத்தேசபக்கங் காரியகாலபக்கமென விருவகைப்படும். அவற்றுள், ஈண்டதிகாரமென்றது முன்னையது. அதனை யுடையதெனவே எழுத்தை நுதலி வரும் பன்னோத்தினது தொகுதி எழுத்ததிகார மென்றவாறாயிற்று. எழுத்தினது அதிகாரத்தை யுடையதென்புழி ஆறாவது வினைமுதற் பொருண்மையின்கண் வந்த காரகம். வடநூலார் வினைமுதற்பொருளின்கண் வரு மாறாவதனைக் கர்த்திருசட்டி யெனவுங் கிரியாசட்டியெனவுங் கூறுவர். இப்படலத்துள் விதிக்கப்படுவனவெல்லாங் கருவியுஞ் செய்கையுமென விருவகைப்படும். அவற்றுட் கருவி நூன்மரபு முதலிய நான்கோத்தானும், செய்கை தொகைமரபு முதலிய வைந்தோத்தானுங் கூறப்படும். கருவி பொதுவுஞ் சிறப்புமென விருவகைத்து. புணரியலுட் கூறப்படுவன செய்கை யொன்றற்கே யுரிய கருவியாகலிற் சிறப்புக்கருவி. ஏனை மூன்றோத்தினுங் கூறப்படுவன பொதுக்கருவி.

நூன்மரபாவது— நூலினது மரபுபற்றிய பெயர் கூறுதல். எனவே, இந்நூலிலோத்துட் கூறுஞ் சூத்திரங்களுக்கெல்லா மதிகாரமென்பது பெறப்பட்டது. மலைபடுகடாம் யாறு குளம் என்றற்றொடக்கத்து உலகமரபுபற்றிய பெயர் போலாது, ஈண்டுக் கூறப்படும் எழுத்து, குறில், நெடில், உயிர், மெய் யென்றற்றொடக்கத்துப் பெயராக நூலாசிரியன் ஒருங்கு வழங்குதற்பொருட்டு முதனூலாசிரியனாற் செய்துகொள்ளப் பட்டமையின், இவை நூன்மரபு பற்றிய பெயராயினவென வறிக. ஏனையோத்துக்களின் விதிக்கப்படும் பெயர்களும் நூன்மரபு பற்றி வரும் பெயராதலுடைத்தாயினுஞ் சொற்குறித்து இது முற்படக் கைவைக்கப்பட்டது. "எழுத்தெனப் படுப-வகரமுத-னகர விறுவாய் முப்பஃ தென்ப-சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே." இதன்பொருள்: மெய்ம்மைகண்டவருள் அகரமுத னகரவீறாகக் கிடந்த முப்பதும் எழுத்தென்று சொல்லப்படுவனவென்று கூறுவர் நூலோர்; தனித்தானுங் ககரமுதலியனபோல அகரமொடு சிவணியானு மியங்கு மியல்பின்றி ஒருமொழியைச் சார்ந்துவருதலே தமக்கிலக்கணமாக வுடைய மூன்றல்லாத விடத்தென்றவாறு. அகரமுத னகரவிறுவாய முப்பஃதாவன அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔவெனனும் பன்னிரண்டும், க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர், ல், வ், ழ், ள், ற, ன எனனும் பதினெட்டுமாம். மொழியைச் சார்ந்து வருதலே தமக்கிலக்கணமாகவுடைய மூன்றாவன: குற்றியலிகரங் குற்றியலுகர மாய்தமெனபன. நாகியாது— குற்றியலிகரம், வீடு—குற்றியலுகரம், எஃகு—ஆய்தம் இவை மொழியைச்சார்ந்து தோன்றினமை காண்க. இம்மூன்றுமேயன்றி உயிர்மெய் முதலியன பிறவுஞ் சார்பெழுத்தெனபாரு முளராலோவெனின,— ஆசிரியர் "சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே" யென்றுணைதருதலின், அது மரபுநிலை திரியாமெனக. அஃதவவாறுதல் சூத்திரவிருத்தியுட் காண்க. இவ்வியலுள் எழுத்துக்களது மரபுபற்றிய பெயரும் அவற்றின்றொகையளவும், உயிர்மெய்ப் புணர்ச்சியும், தனிமெய் தன்மெய்யோடும் பிறமெய்யோடு மயங்கு மயக்கமும், உயிர்மெய் உயிர்மெய்யோடுந் தனிமெய்யோடு மயங்கு மயக்கமும், உயிர்முன் உயிர்மெய் மயங்கு மயக்கமும், உயிர்முன் றனிமெய் மயங்கு மயக்கமும், பிறவுங் கூறப்படும். மயக்கமெனினுஞ் சையுத்தமெனினுஞ் சையோகமெனினு மொக்கும். இச்சையோகம் ஒருமொழியினும் புணர்மொழியினுங் கொள்ளச் சூத்திரஞ் செய்தாராசிரியர். வடநூலாரும் அவ்வாறு கொள்ப. அக்கருத்தறியாத நச்சினார்க்கினியர் சையோகம் ஒருமொழியிற்கொண்டு, இருமொழியிற் கொள்ளாது, உதாரணம் இறந்தவென்றார்.

மொழிமரபாவது— எழுத்தானு மூவகை மொழியது மரபு கூறுதல். மூவகை
மொழியாவன— ஓரெழுத்தொருமொழி ஈரெழுத்தொருமொழி தொடர்மொழி யென்
பன.

பிறப்பியலாவது— எழுத்துக்களினது பிறப்பிலக்கண முணர்த்துதல். சாரியீற்
றெற்றாதது எழுத்துந் தனிமெய்யு மொழிக்கண்ணன்றி யுணர்த்தலாகாமையின், அவை புல
ப்படு மொழியை மரபியலி னுணர்த்திப் பிறப்புணர்த்தவேண்டுதலின், இதனை நூன்மர
பின் பின்வையாது மொழிமரபின் பின்னர் வைத்தார்.

புணரியலாவது— மூவகைமொழிகளுஞ் செய்கை யோத்துக்களுட் புணர்தற்
குரிய கருவியியல்பு கூறுதல். அக்கருவியாவன— மூன்று திரிபும், ஓரியல்பும், வேற்
றுமை அல்வழியும், எழுத்துஞ், சாரியையுமென நிறந்திறத்தன. மூன்று திரிபாவன—
நிறுத்தசொல்லுங் குறித்துவரு கிளவியுந் தம்மிற் புணர்வுழி, ஆண்டு இல்லாதவெழுத்
துத் தோன்றுதலும் உள்ளவெழுத்து மற்றொன்றாக மாறுதலுங் கெடுதலுமாம். வட
நூலார் இம்மூன்றனையு முறையே ஆகமம், ஆதேசம், லோபமென வழங்குப. வடநூலார்
நின்றவெழுத்து நீங்க அதனிலைக்கண்ணது மற்றொன்று வந்தியைத லாதேசமென்று
கொள்வர்.

தொகைமரபாவது— மேல் அகத்தோத்தினுள் இருபத்துநான் கிறுதியும் விரித்
துப் புணர்த்து முடிப்பனவற்றை யெல்லாந் தொகுத்துப் புணர்க்குமுடிபு கூறுதல்.

உருபியலாவது— உருபுகளோடு பெயர்புணரும் இயல்பு கூறுதல்.

உயிர்மயங்கியலாவது— உயிரீறுநின்று பெரும்பான்மை வன்கணத்தோடுஞ்
சிறுபான்மை மென்கணம் இடைக்கணம் உயிர்க்கணங்களோடு மயங்கிப் புணருமாறு
கூறுதல். வடநூலார் இப்புணர்ச்சியை அச்சு சந்தியென்பர். மயங்கிப்புணர்தல்—
ஒன்றுபட்டுக் கூடுதல்.

புள்ளிமயங்கியலாவது— புள்ளியீறு பெரும்பான்மையும் வன்கணத்தோடுஞ்
சிறுபான்மை பிறகணத்தோடும் புணருமாறு கூறுதல். வடநூலார் இப்புணர்ச்சியை
அல் சந்தி யென்பர். அச்சு அல்லென்பன பிரத்தியாகாரஞ் செய்தபெயர். வடநூலார்
உள்ளது தொகுத்து முதலுமீறுங் கூட்டிக்கூறுதலைப் பிரத்தியாகாரமென்றும், இல்லது
வருவித்துரைத்தலை அத்தியாகாரமென்றுங் கூறுவர்.

குற்றியலுகரப்புணரியலாவது— குற்றியலுகரவீறு வருமொழியோடு புணரு
மியல்பு கூறுதல்.

சொல்லதிகாரம்.

சொல்லதிகார மென்பது சொல்லினதிகாரத்தை யுடையதென அன்மொழித்
தொகையாய்ப் படலத்திற்குக் காரணப்பெயராயிற்று. ஈண்டதிகாரமென்றது—சொல்லை
நுதலிவரும் பலவோத்தினது தொகுதியை. சொற்றான் றனிமொழியுந் தொடர்மொழியு
மென இரண்டுவகைப்படும். தனிமொழியாவது— சமயவாற்றலாற் பொருள்விள
க்குவது. அது பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லு மிடைச்சொல்லு முரிச்சொல்லுமென
நான்கு வகைப்படும். அவற்றிற் குதாரணம்— மரம், உண்டான், மற்று, நனியென
முறையே காண்க. தொடர்மொழியாவது— பயனிலை வகையானுந் தொகைநிலை வகை
யானு மெண்ணுநிலை வகையானு மியைந்து பொருள் விளக்குந் தனிமொழி யீட்டம்.

தொடர்மொழி இருமொழித்தொடரும், பன்மொழித்தொடருமென, இருவகைப்படும். சாத்தன் வந்தான்—இது பயனிலைத்தொடர். யானைக்கோடு—இது தொகைநிலைத்தொடர். நில் நீர்—இஃது எண்ணுநிலைத்தொடர். இவை யிருமொழித்தொடர். அறம் வேண்டி யரச னுலகம் புரந்தான்—இது பன்மொழித்தொடர். இனி வடநூலார் கூறிய வாறே அவாயநிலையானும், தகுதியானும், அண்மையானுந் தொடரு மென்றலுமாம். அவாயநிலை—ஒருபதந் தன்னை முடிப்ப தொருபதம் இல்லாதவழி முடிவு பெறாது நிற்றல். 'வந்தான்' என்பது, 'சாத்தன்' என்னு முடிக்குஞ்சொல்லை அவாய் நின்றல்லது முடியாமையின், அவாயநிலைத்தொடராம். 'ஆ குதிரை ஆண் மகன் யானை' என்பது அவாயநிலை யின்மையான் மொழித்தொடராகாது. தகுதி—பொருட்கு வாய்மையின்மை. அது 'நீரா னனை' 'தீயாற் சுடு' வென்பன போல்வன. 'நீராற் சுடு' 'தீயா னனை' யென்பன தகுதியின்மையான் மொழித்தொடராகா. அண்மை—பதங்களை ஒரு தொடராக விரையக் கூறுதல். அது "அறம் வேண்டி யரச னுலகம் புரந்தான்" என்ப பதங்களை விரையக்கூறிக் குறித்த பொருள் புலப்படச்செய்தல். இவ்வாறன்றி, 'அறம்'—'வேண்டி'—'அரசன்'—'உலகம்'—'புரந்தான்' என யாமத்துக்கு ஒவ்வொன்றாகக் கூறின், அண்மை யின்றாய்க் குறித்த பொருள் புலப்படாமையான், மொழி தொடராகாது. மொழித்தொடரெனினும் வாக்கியமெனினும் பொருந்தும்.

கிளவியாக்கம்— வழுக்களைந்து சொற்களை யாக்கிக்கொண்டமையால் இவ் வோத்துக் கிளவியாக்கமென்னும் பெயர்த்தாயிற்று. ஆக்கம்—அமைத்துக்கோடல். அது நொய்யுநொறுங்குங் களைந்து அரிசியமைத்தாரை அரிசி யாக்கினாரென்னும் வழக்கானு மறிக. பொதுவகையாற் 'கிளவி' யென்றமையாற் றனிமொழியுந் தொடர்மொழியுங் கொள்ளப்படும். கிளவி, சொல், மொழி என்னுந் தொடக்கத்தன ஒருபொருட்கிளவி. இனிச் சொற்கள் பொருள்கண் மேலாமா றுணர்த்தினமையாற் 'கிளவியாக்க' மாயிற் றெனினு மமையும், ஒருவன்மேலாமாறும், ஒருத்திமேலாமாறும், பலர்மேலாமாறும், ஒன்றன்மேலாமாறும், பலவற்றின்மேலாமாறும், வழுவாமாறும், வழுவமையுமாறும் என்ப பொருள்கண்மேலாமா றுணர்த்தினமையின். "உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே - யஃறிணை யென்மனா ரவரல பிறவே - யாயிரு திணையி னிசைக்குமன சொல்லே." மக்களாகிய நன்குமதிக்கப்படும் பொருளை உயர்திணையென்றும், அம்மக்களல்லாத பிறபொருளை அஃறிணையென்று மாசிரியர் கூறுவர். அவ்விருதிணைப் பொருளையுஞ் சொற்க ளுணர்த்தும். எனவே, இருதிணையும் பற்றிவரு மைந்துபாலும், எழுவகை வழுவும், எட்டுவேற்றுமையும், ஆறொட்டு மூன்றிடமு மூன்றுகாலமும் வழக்குஞ் செய்யுளுமாகிய இரண்டிடமுமென்னும் பொருட்பகுதிகளையு மின்னோரன்னவற்றினையுஞ் சொல்லுணர்த்து மென்றவாறாயிற்று.

வேற்றுமையியல்— இவ்வோத்துச் செயப்படுபொருண் முதலாயினவாகப் பெயர்ப்பொருளை வேறுபடுத் துணர்த்தலின், வேற்றுமையியலெனக் காரணக்குறி பெற்றது. கிளவியாக்கத்து நான்கு சொற்கும் பொதுவிலக்கண முணர்த்திய வதிகாரத்தானே பொதுவிலக்கணமாத லொப்புமையானும், உருபேற்றல் பெயர்க்கிலக்கணமாகலின் வேற்றுமை யுணர்த்திய பெயருணர்த்தன் முறையாகலானும், கிளவியாக்கத்திற்கும் பெயரியற்குமிடை வேற்றுமை யிலக்கண முணர்த்திய வெடுத்துக் கொண்டார். வேற்றுமை யாவன பெயருமோரிடைச்சொல்லு மாகலின், அவற்றிலக்கணமும் பொதுவிலக்கண

மேயாம். வேற்றுமை யிலக்கண மொன்றாயினும், சிறப்புடைய எழுவகை வேற்றுமையும் அவற்றது மயக்கமும் விளிவேற்றுமையுந் தனித்தனி யுணர்த்தத்தகும் வேறுபாடு யாப்புடைமையான், மூன்றோத்தா னுணர்த்தப்பட்டது. "வேற்றுமை தாமே யேழென மொழிப." "விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே." வேற்றுமைதாம் பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண்ணென வேழாமென்பர்; விளிகொள்வதன் கண்ணதாகிய விளியோடு தலைப்பெய்ய வேற்றுமை யெட்டாம். செயப்படுபொருண் முதலாயினவற்றின் வேறுபடுத்தப் பொருண்மாத்திர முணர்த்தலின் எழுவாயும், செயப்படுபொருண் முதலியவாகப் பெயர்ப்பொருளை வேறுபடுத் துணர்த்தலின் ஐ, ஒடு, கு, இன், அது, கண்ணென்பனவும், விளிப்பொருட்டாயத் திரிந்து மியல்பாயு நிற்றலின் விளியும், வேற்றுமையாயின.

"அவற்றுள்— எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே." எனவே, உருபும் விளியு மேலாது பிறிதொன்றோடுந் தொகாது வினைமுதலாய் நின்று பயனிலைகோடல் எழுவாயக்கிலக்கண மென்றவாறாயிற்று. ஆவுண்டு எனப் பொருண்மை சுட்டியும், ஆ செல்க என வியங்கொண்டும், ஆ கிடந்தது என வினைநிலையுரைத்தும், ஆ யாது? என வினாவேற்றும், ஆ கரிது எனப் பண்புகுறித்தும், ஆ பல எனப் பெயர் கொண்டும், எழுவாய் வினைமுதலாய் நின்று பயனிலை கொளுமாறு காண்க. இனி வடநூலார் எழுவாய்க்கு ரூபபேதங் காட்டும் வேற்றுமையுருபு கொள்வர். வடநூலார் எழுவாய்வேற்றுமையினைக் கர்த்திருகாரகமென்பர்.

"இரண்டாகுவதே— ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி - யெவ்வழி வரினும் வினையே வினைக்குறிப் - பவ்விரு முதலிற் றோன்று மதுவே." குடத்தை வனைந்தான், குழையையுடையன் என, இரண்டாவது தெரிநிலைவினைகுறிப்புவினை யென்னு மவ்விரண்டு முதற்கண்ணுந் தோன்றுமாறு காண்க. அவ்விருமுதலென்றது— அவ்விரண்டன் செயப்படுபொருளை. கருத்தாவேயன்றிச் செயப்படுபொருண் முதலாயினவுந் தொழிற்காரக மாமென்பது, "வினையே செய்வது செயப்படு பொருளே - நிலனே காலங் கருவி யென்றா - வின்னதற் கிதுபய னாக வென்னு - மன்ன மரபி னிரண்டொடுந் தொகைஇ - யாயெட் டென்ப தொழின்முத னிலையே" யென வேற்றுமை மயங்கியலுட் கூறுமாற்றா னுணர்க. இது அரிசி தானே யட்டது எனக் கருமகருத்தனும் வரும். எனவே, தன்னையேற்ற பெயர்ப்பொருளைச் செயப்பொருளாக வேற்றுமை செய்தல் ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவிக் கிலக்கண மென்றவா றாயிற்று. வடநூலார் ஐயெனப்பெயரிய வேற்றுமைக்கிளவியைக் கருமகாரகமென்பர்.

"மூன்றாகுவதே— ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி - வினைமுதல் கருவி யனைமுதற் றதுவே." 'சிறப்புடைப் பொருளைத் தானினிது கிளத்தல்' என்பதனால் ஒடு வென்றாரேனும், ஆனுருபுந் தழுவப்படும். வினைமுதல் கருவிக்கண் ஆனுருபு பெருவரவிற்றாம். ஒடுவுருபு இக்காலத்து அருகியல்லது வாராது. கொடியொடு துவக்குண்டான்; அகத்தியனாற் றமிழுரைக்கப்பட்டது; ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்; வேலானெறிந்தான் என, மூன்றாவது முறையே வினைமுதலுங் கருவியுமாகிய அவ்விருமுதலிற் றோன்றியவாறு காண்க. வினைமுதல் கருவியென்றாரேனும், உடனிகழ்வுங் கொள்ளப்படும். உடனிகழ்வினவரு மூன்றாவதனை வடநூலார் சகார்த்தத் திருதியை யென்பர். மாணவகனொ டாசிரியன் வந்தான்; ஈண்டு ஒடு உடனிகழ்ச்சிப் பொருட்டாயிற்று. வினைமுதலாவது— கருவி முதலாய காரணங்களைத் தொழிற்படுத்துவது. கருவியாவது—

வினைமுதற்றொழிற் பயனைச் செயப்படுபொருட்க ணுய்ப்பது. வடநூலார் ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவியைக் கரணகாரகமென்பர்.

"நான்காகுவதே— குவ்வெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி - யெப்பொருளாயினுங் கொள்ளு மதுவே." அந்தணர்க்குக் காவைக் கொடுத்தான் எனக் குவ்வெனப் பெயரிய வேற்றுமைக்கிளவி கொள்பொருட்டாயவாறு காண்க. வடநூலார் குவ்வெனப்பெயரிய வேற்றுமைக் கிளவியைச் சம்பிரதான காரகமென்பர்.

"ஐந்தாகுவதே— இன்னெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி - யிதனி னிற்றிது வென்னு மதுவே." ஐந்தாவது பொருவும் ஏதுவும் எல்லையு நீக்கமுமென நான்கு பொருளுடைத்து. இனிப் பொருவு உறழ்பொருவு மொப்புப்பொருவு மென விருவகைப்படும். காக்கையிற் கரிது களம்பழம், உறழ்பொரு; வேயின் மென்றோள், உவமப்பொரு. ஞாபகவேது காரகவேதுவென ஏதுவு மிருவகைப்படும். முயற்சியிற்பிறத்தலின் ஒலி நிலையாது, ஞாபகவேது. வாணிகத்தி னாயினான், காரகவேது. கருவூரின் கிழக்கு, எல்லைப்பொருள். ஊரிற் றீர்ந்தான், காமத்திற் பற்றுவிட்டான், நீக்கப்பொருள். வடநூலார் இன்னெனப் பெயரிய வேற்றுமைக் கிளவியை அபாதான காரகமென்பர். இனி ஐந்தாவது எல்லைப்பொருட்டாகுங்கால் காரகவேற்றுமை யாகாதென் றுணர்க.

"ஆறாகுவதே— அதுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி - தன்னினும் பிறிதினு மிதன திதுவெனு மன்ன கிளவிக் கிழமைத் ததுவே" சிறப்புப்பற்றி அதுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவியென்றாரேனும், அகரவுருபுங் கொள்ளப்படும். தன்னென்றது— தன்னோ டொற்றுமையுடைய பொருளை, பிறிதென்றது— தன்னின் வேறாகிய பொருளை. எனவே, ஆறாவது கிழமைப்பொருட்டெனவும், அக்கிழமை தன்னொடு வந்த தற்கிழமையும் பிறிதொடு வந்த பிறிதின்கிழமையுமென விருவகைப்படு மெனவும், கூறிய வாறாயிற்று. இத்தற்கிழமை எள்ளது குப்பை என வொன்று பலகுழீஇய தற்கிழமையும், படையது குழாம் என வேறு பலகுழீஇய தற்கிழமையும், சாத்தன தியற்கையென வொன்றியற்கிழமையும், புலியதுகிர் என வுறுப்பின்கிழமையும், அரசனது முதுமை சாத்தனது தொழில் என மெய்திரிந்தாய தற்கிழமையுமென, ஐவகைப்படும். பொருளின்கிழமையு நிலத்தின்கிழமையுங் காலத்தின்கிழமையுமெனப் பிறிதின்கிழமை மூவகைப்படும். சாத்தனது உடைமை, சம்பந்தனது தமிழ், கபிலரது பாட்டு, பரணரது பாட்டு, இவை பொருட்பிறிதின்கிழமை. இவற்றுட் பின்னைய மூன்றுஞ் செய்யுட் பொருட்கிழமையாம், தெரிந்து மொழியாற் செய்யப்படுதலின். முருகனது குறிஞ்சி, யானையது காடு, நிலப்பிறிதின்கிழமை. வெள்ளியதாட்சி, காலப்பிறிதின்கிழமை. வடநூலார் அதுவெனப்பெயரிய வேற்றுமைக்கிளவியைச் சம்பந்தசட்டியென்பர். இவ்வாறாவது காரக வேற்றுமையாகாது; வினைகொண்டு முடிவதன்றாகலின். மற்று ஆறாவது கடவுளதுண்டி அமிர்தவுண்டியென முறையே வினைமுதற்பொருளினுஞ் செயப்படுபொருளினும் வருங்கால், காரகவேற்றுமையுமாம். வடநூலார் வினைமுதற்பொருளில்வரு மாறாவதைக் கர்த்திருசட்டியெனவுஞ் செயப்படுபொருளில்வரு மாறாவதைக் கர்மணிசட்டி யெனவுங் கூறுப.

"ஏழாகுவதே— கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி - வினைசெய் யிடத்தி னிலத்திற் காலத்தி - னனைவகைக் குறிப்பிற் றோன்று மதுவே." தட்டுப்புடைக்கண்

வந்தான் என வினைசெய்யிடத்தும், மாடத்தின்க ணிருந்தான என நிலத்தின்கண்ணும் கூதிர்க்கண் வந்தான் எனக் காலத்தின்கண்ணும் ஏழாவது வந்தவாறு காண்க. எனவே ஏழாவது இடப்பொருண்மைத் தென்றவாறாயிற்று. வடநூலார் கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவியை அதிகரண காரகமெனபர்.

வேற்றுமைமயங்கியல்— இது தனபொருளிற்றீராது பிறிதொன்றன் பொருட்கட்செலலும பொருணமயககமும, தனபொருளிற நீர்நதுசெல்லு முருபுமயக்கமு மெனனு மிருவகை மயககமுமாகிய வேறறுமைமயக்க முணாத்துதலின், அப்பெயர்த்தாயிறறு. "யாதனுருபிற கூறிற் றாயினும - பொருள்செல மருங்கின வேற்றுமை சாரும்" எனபதனானே உருபுமயககமும அல்லனவறறானெல்லாம பொருண்மயக்கமு முணாத்தபபட்டன.

விளிமரபு— இது விளிவேறறுமையினதிலககண முணர்த்துதலின், விளிமர பென்னும பெயாததாயிறறு. "விளியெனப படுப கொள்ளும பெயரொடு - தெளியத் தோனறு மியறகைய வெனப." விளிவேறறுமை எதிாமுகமாககுதற பொருட்டாம். ஈறு திரிதலும, ஈறறயனீடலும, பிறிதுவநதடைதலும, இயல்பாதலுமென விளி வேறுபாடு பலவாம.

பெயரியல்— இனிப் பெயா, வினை, இடை, யுரியெனனு நான்குசொற்குஞ் சிற பயிலக்கண முணாததுவா னெடுததுககொணடு முதறகண்ணதாகிய பெயரிலக்கண முணாத்துதலின, இது பெயரியலெனனும பெயாததாயிறறு. "எல்லாச சொல்லும பொருள் குறித் தனவே." பெயா, வினை, யிடை, யுரியெனனு நாலவகைச்சொலலும பொருள்குறித்தனவே, பொருள குறியாது நிலலா. முயறகோடு யாமை மயிாக கமபலமென்பன பொருளுணாததாவாலெனின,— அவை, முயல, கோடு, யாமை, மயிர், கம்பலம், எனத தனிமொழியாயநினறவழிப பொரு ளுணமையும, அஙஙனந் தொடர்மொழி யாயநினறவழிப் பொருளினமையுங குறிததலின, அவையும பொருளுணர்த்துவன வேயாமெனபது. பெயா பொருளெனபன வொருபொருட் கிளவியாகலின், பொருளை யுணாததுஞ்சொற பெயாசசொலலெனபபடும. பொருட்குப் பண்பு உரிமை பூண்டு நிறறலின, அதனை யுணாததுஞ்சொல லுரிசசொல்லெனப்படும. வினையெனபது பல பொருளொருசொலலாயத தொழிறபணபினையும அதன காரியமாகிய வினைநிகழ்ச்சியை யும உணாததும. அவறறுட் டொழிறபணபை யுணாததுஞ்சொல் லுரிச்சொல்லென வடநூலார் வழங்கினமையின், ஏனைககாரியமாகிய புடைபெயாச்சி வினையை யுணாத்துஞ்சொல் வினைச் சொலலெனபபடும. பொருளையும பொருளது புடைபெயாச்சியையும் தம்மானன்றித் தத்தங் குறிபபானுணாததுஞ் சொறகள பெயாச்சொல் வினைச்சொற்களுமாகாது அவற் றின் வேறுமாகாது இடைநிகரனவாய நிறறலின், இடைச்சொல்லெனபபடும். பொருட் புடைபெயாசசியாவது பொருட்பண்பின புடைபெயாசசியெனவே கொள்க. புடை பெயர்ச்சியெனினும வினைநிகழ்ச்சியெனினு மொககும. "பொருண்மை தெரிதலுஞ் சொன்மை தெரிதலுஞ்-சொல்லி னாகு மெனமனாா புலவா." தன்னினவேறாகிய பொருண்மை தெரிதலுந் தன்றனமை தானேதெரிதலுமென விரண்டினுஞ் சொல்லாறும். சாத்தன் வந்தான், பண்டுகாடுமன், உறுகால், என்பனவற்றானே பொருளுணரப்பட்டவாறும், 'நீயென்கிளவி' 'செயதெனெச்சம்' 'தஞ்சக்கிளவி' 'கடியென்கிளவி' என்பனவற்றாற் பொருளுணரப்படாது அச்சொற் றாமே யுணரப்பட்டவாறுங் கண்டுகொள்க. இனி

"தெரிபுவேறு நிலையலுங் குறிப்பிற் றோன்றலு-மிருபாற் றென்ப பொருண்மை நிலையே." பொருண்மைதெரிதல்—சொன்மாத்திரத்தான் விளங்கி வேறுநிற்றலும், சொன்மாத்திரத்தாற் றோன்றாது சொல்லொடுகூடிய குறிப்பாற் றோன்றலுமென இரண்டுபகுதித்தாம். அவன், இவன், உவன், வந்தான், சென்றான், இவை பொருடெரிபு வேறுநின்றன. ஒருவர் வந்தார் என்றாற்போல்வனவும், ஆகுபெயராய் வருவனவும், இன்னோரன்னபிறவும், குறிப்பிற்றோன்றலாம்.

வினையியல்— வினைச்சொல்லிலக்கண முணர்த்துதலின், இவ்வோத்து வினையியலென்னும் பெயர்த்தாயிற்று. "வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது - நினையுங் காலைக் காலமொடு தோன்றும்." வினையென்று சொல்லப்படுவது உருபேலாது காலத்தொடு புலப்படும். வேற்றுமைகொள்ளாது என்றது, காலமொடு தோன்றுமெனின், தொழினிலையொட்டின்கண்ணுந் தொழிற்பெயர்க்கண்ணு மதிவியாத்தியாய் இலக்கணவழுவாம். காலமொடு தோன்றும் என்றது, வேற்றுமை கொள்ளாதெனின்— இடைச்சொற்கண்ணு முரிச்சொற்கண்ணு மதிவியாத்தியாய் இலக்கணவழுவாம். தொழினிலையொட்டெனினுந் தொழிற்பெயரெனினு மொக்கும். வினைப்பெயரெனினும் வினையாலணையும் பெயரெனினு மொக்கும். "காலந் தாமே மூன்றென மொழிப." இனித் தொழிலது கழிவுணர்த்து மிறப்புந் தொழிறொடங்கப்பட்டு முற்றுப்பெறாத நிலைமை யுணர்த்து நிகழ்வுந் தொழில் பிறவாமை யுணர்த்து மெதிர்வுமெனக் காலமூன்றாம். "குறிப்பினும் வினையினு நெறிப்படத் தோன்றிக் - காலமொடு வரூஉம் வினைச்சொல் லெல்லா - முயர்திணைக் குரிமையு மஃறிணைக் குரிமையு - மாயிரு திணைக்குமோ ரன்ன வுரிமையு - மம்மூ வுருபின தோன்ற லாறே." வினைச்சொற்கள் வெளிப்படையாற் காலங்காட்டுவனவுங் குறிப்பாற் காலங்காட்டுவனவுமென இரண்டாய், உயர்திணைக் குரியனவும் அஃறிணைக்குரியனவும் இரண்டுதிணைக்கு மொப்ப வுரியனவுமென மூன்று கூற்றனவாம். உண்டான், உண்ணாநின்றான், உண்பான் என்பன முறையே இறந்தகால முதலிய மூன்றும் வெளிப்படநின்ற வினைச்சொற்கள். கரியன் செய்யன் என்பன காலங் குறிப்பிற்கொள்ளநின்ற வினைச்சொற்கள். வினையும், வினைமுதலும், செயப்படுபொருளும், நிலமும், காலமும், கருவியும், நிமித்தமும், பயனும் எனத் தொழிற் காரகங்களெட்டாம். காரகமெனினுங் காரணமெனினு மொக்கும். 'வனைந்தான்' என்றவழி வனைதற்றொழிலும், வனைந்தகருத்தாவும், வனையப்பட்ட குடமும், வனைதற்கிடமாகிய நிலமும், அத்தொழினிகழுங்காலமும், அதற்குக் கருவியாகிய திகிரி முதலாயினவும், வனையப்பட்ட குடத்தைக் கொள்வானும், வனைந்தானுறு பயனுமாகிய வெட்டும்பற்றி அத்தொழி னிகழ்ந்தவாறு கண்டுகொள்க. அஃதேல், தொழிலின் வேறாயது காரகமாகலின், வனைதற்றொழிலுக்கு அத்தொழிற்றான் காரகமாமா றென்னையெனின்,— வனைந்தான் என்பது வனைதலைச் செய்தானென்னும் பொருட்டாகலின், செய்தற்கு வனைதல் செயப்படுபொருணீர்மைத்தாய்க் காரகமாமென்பது.

இடையியல்—இடைச்சொல்லிலக்கண முணர்த்துதலின், இவ்வோத்து இடையியலென்னும் பெயர்த்தாயிற்று. "இடையெனப் படுப பெயரொடும் வினையொடு-நடைபெற் றியலுந் தமக்கியல் பிலவே." இடைச்சொற்க டமக்கென வேறோர் பொருளுணர்த்து மிலக்கணமுடையனவல்ல; பெயரொடும் வினையொடும் வழக்குப்பெற் றியல்வனவாம். "அதுகொறோழி காமநோயே" என்புழிக், கொல்லென்னும் இடைச்சொற் பெய

'ரொடு வழக்குப் பெற்றியன்றது. "வருகதில் லம்மவெஞ் சேரி சேர" என்புழித், தில் அம்மவென்னு மிடைச்சொற்கள் வினையொடு வழக்குப்பெற்றியன்றன.

உரியியல்— உரிச்சொல்லிலக்கண முணர்த்துதலின், இவ்வோத் துரியியலென்னும் பெயாத்தாயிற்று. "உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை - யிசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றிப - பெயரினும் வினையினு மெய்தடு மாறி - யொருசொற் பலபொருட் குரிமை தோன்றினும் - பலசொல் லொருபொருட் குரிமை தோன்றினும் - பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித் - தத்த மரபிற் சென்றுநிலை மருங்கி - னெச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்." தமக்கியல்பில்லாத விடைச்சொற்போலாது இசை குறிப்புப் பண்பென்னும்பொருட்குத் தாமே யுரியவாதலின், உரிச்சொல்லாயிற்று. பெரும்பான்மையுஞ் செய்யுட்குரியவாய்வருதலின், உரிச்சொல்லாயிற்றென்பாருமுளர். இசைகுறிப்புப் பண்பென்னும் பொருளவாய்ப் பெயர்வினைபோன்றும் அவற்றிற்கு முதனிலையாயுந் தடுமாறி, ஒருசொற் பலபொருட்கும் பலசொல் லொருபொருட்கும் உரியவாய்வருவன உரிச்சொல்லென்றும், அவை பெயரும் வினையும்போல ஈறுபற்றிப் பொருளுணர்த்த லாகாமையின், வெளிப்படாதவற்றை வெளிப்பட்டவற்றொடுசார்த்தித் தம்மையெடுத்தோதியே அப்பொருளுணர்த்துமென்றும், உணர்ந்துகொள்க. குறிப்பு - மனத்தாற் குறித்துணரப்படுவது. பண்பு - பொறியானறியப்படுங்குணம். கறுப்பு - பெயர்ப்போலி. தவ - வினைப்போலி. துவைத்தல் - பெயர்க்கு முதனிலை. தாவாத - வினைக்குறிப்பு முதனிலை. பலவுமோதினும், இசைகுறிப்புப் பண்பென்னு மூவகைப்பொருளும் பற்றிவருதலே உரிச்சொற்கிலக்கணமாம்.

எச்சவியல்— கிளவியாக்கமுதல் உரியியலீறாகக்கிடந்த ஓத்துக்களுள் உணர்த்துதற்கிடமின்மையான் உணர்த்தப்படாது எஞ்சிநின்ற சொல்லிலக்கணமெல்லாந் தொகுத்துணர்த்துதலின், இவ்வோத்து எச்சவியலென்னும் பெயர்த்தாயிற்று. செய்யுட்குரிய சொல்லும், அவற்றிலக்கணமும், அவற்றுற் செய்யுள் செய்வுழிப்படும் விகாரமும், செய்யுட்பொருள்கோளும், அறுவகைத்தொகைச் சொல்லுமுதலாயின இவ்வியலாற் கூறப்படுவனவாம். வடநூலார் தொகைச்சொல்லைச் சமாசமென்பர்.

பொருளதிகாரம்.

பொருளதிகாரமென்பது பொருளினததிகாரத்தை யுடையதென வன்மொழித்தொகையாய்ப் படலத்திற்குக் காரணக்குறியாயிற்று. ஈண்டதிகார மென்றது பொருளை நுதலிவரும் பலவோத்தினது தொகுதியை. இஃது நாண்மீனின்பெயர் நாளிற்குப் பெயராயினாற்போலவதோ ராகுபெயர். இவ்வதிகாரத்து எழுத்துஞ்சொற் கருவியாகவுணரப்படும் பொருளிலக்கண முணர்த்தப்படும். பொருளாவன அறம் பொருளின்பம் வீடென நான்காம். அறம் பொரு ளின்பம் வீடென்பனவற்றை வடநூலார் முறையே தரும மருத்தங் காம மோக்கமென்பர். பொருளெனப் பொதுப்படக் கூறுதலின், காட்சியனுமான முறையென்னுமளவை மூன்றானு மளந்தறியப்படும் பொருளெல்லாம் இந்நான்குபொருளி னடக்கிக்கொள்ளப்படும். எழுத்துஞ்சொல்லு மாராய்வதெல்லாம் பொருட்பெற்றிதேறி யுறுதிப்பயன்றலைக்கூடுதற்காகலின், எழுத்துஞ்சொல்லுமாராய்ந்தார் அவ்வுணர்ச்சி கருவியாகக்கொண்டு பொருளிலக்கண மொருதலையான் ஆராய்ந்துறுதி தலைக்கூடக் கடவராவரென்க. "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்

இரு கண்ணென்ப வாழு முயிர்க்கு" எனத் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரருளியதூஉம் இது நோக்கியென்று தெளிக. எண்—தருக்கம்; எழுத்து—இயற்றமிழ். எனவே, முகத்துக்கண்ணுடையராயினார் அது கருவியாக உருவப்பொருளுங் காண்டலைப் பயனாகக் கொள்ளுதல்போல எண்ணு மெழுத்துமென்னு மறிவுக்கண்ணுடையராயினார் அவ்வுணர்ச்சி கருவியாகப் பொருளிலக்கணமாராய்ந்து கண்டு உறுதி தலைக்கூடுதலைப் பயனாகக் கொள்ளவேண்டு மென்பதாயிற்று. இனி அவ்வாறு முயலாது அக்கருவினூலுணர்ச்சி மாத்திரையேயமையுமென்றிருப்பரேல், அக்கல்வி அவர்க்கு வீணுழப்பாவதல்லது பயப்பாடுடைத்தா மாறின்றென்பார், "சத்தமுஞ் சோதிடமு மென்றாங் கவைபிதற்றும் - பித்தரிற் பேதையா ரில்" என்றார் நீதிநூலோரென்க. எழுத்துஞ் சொல்லும் பொருளுமென்னு மியற்றமிழாராய்ந்தார் முதனூற்பொருளுணர்ந்து வீடுபேறு ஒருதலையாற் றலைக்கூடுவரென்பது, "எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான் - மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகு - மொழித்திறத்தின் - முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து கட்டறுத்து வீடுபெறும்" என்பதனானுணர்க.

இனி எழுத்துஞ் சொல்லு மாராய்ந்து வல்லராக முயல்வார் இக்காலத்துப் பலருளர். அவ்வாராய்ச்சி கருவியாகப் பொருளாராய்ந் துறுதி தலைக்கூட முயல்வார் அரியர். இங்ஙனம் பொருளதிகார மாராய்ந்து வல்லராக முயல்வா ரரியராயிற்று இந் நிகழ்காலத்து மாத்திரமன்று, அச்செல்காலத்து முண்டென்பது. அது "அரசன் இனி நாடு நாடாயிற்று; நூல்வல்லாரைக் கொணர்கவென்று எல்லாப்பக்கமும் போக்க, எழுத்ததிகாரமுஞ் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, பொருளதிகாரம் வல்லாரைத் தலைப்பட்டிலேமென்று வந்தார்; வர, அரசனும் புடைபடக் கவன்று, என்னை? எழுத்துஞ் சொல்லும் யாப்பு மாராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமேயெனின்,— இவை பெற்றும் பெற்றிலேம் என்று சொல்லிக் கவன்றிட்டான" என நக்கீரனார் இறையனார் களவியலுரை முகத்துரைக்குமாற்றானறிக.

எழுத்துஞ் சொல்லு மாராய்ந்தார் அவ்வுணர்ச்சி கருவியாகப் பொருளாராய்ந்து வீடுபேற் றுறுதிப்பயன் றலைக்கூடற்பாலரென்பது தொகுத்துமன்! அவ்விழுப்பமுடைய பொருணூலும், இறைவனருளிச்செய்த முதனூல்களும் அவைபோல்வனவா மெய்ந்நூல்களுமேயாம், அவற்றின்கணன்றே தத்துவ மாராயுமாறும், பொய்ப்பொருள்களின் வேறாக மெய்ப்பொருள் காணுமாறும், வீடு தலைக்கூடுமாறும், வீடுபேற்றிலக்கணமும், கூறப்பட்டன; தொல்காப்பியப் பொருளதிகாரம் உலகியல் வழக்குரைப்ப தொன்றாகலின், அதனாராய்ச்சியானே வீடுபேற் றுறுதிப்பயன் றலைக்கூடுமா றியாங்ஙனமெனின்.— நன்று வினாயினாய்! வீடுபேறளிக்கும் விழுப்பொருணூல் இறைமுதற்கடவு ளருளிச்செய்த முதனூல்களும் அவ்வியல்புடைய மெய்ந்நூல்களுமென்பது நன்மக்க ளெல்லார்க்கு மொப்ப முடிந்ததேயாம். அற்றாயினும், அவ்விறைவன் அன்னதோர் முதனூ றமிழின்கட் செய்திலனாகலின், அவ்விறைவ னியல்புள்ளவா றுணர்ந்த வருந்தவக்கொள்கை யகத்தியனாரும் அவர் மாணாக்கரான தொல்காப்பியனார் முதலியோரும் அவ்விறைவ னருளாற் றமிழுலக முணர்ந் துறுதி தலைக்கூடற்பொருட்டுத் தாமியற்றியருளிய தமிழியல் வழக்கு நூல்களின்கண் அம்முதனூல்கள் கூறு நுண்பொரு ளியல்களைத் தூலவுருந்தந்தி யைய முறைப்படுத்தி அகப்பொருள் புறப்பொருளென் றிருதிறத்தாற் பதினாற்றிணைப்

பகுதியவாய்ச் செய்யுளாற் புனைந்து பாடுதற்குரிய இன்பமுதலிய வுலகியல் வழக்கின் மேலவைத்து இயற்றமிழ் மொழிபாகக்கொண்டு அங்ஙன மோதியருளினு ராகலின், அவ ரியற்றிய வகத்தியந் தொல்காப்பிய முதலியன தமிழியல் வழக்கு நூலாதலே யன்றி, அவ்விறைவ னருளிய முதனூ லுண்பொரு ளுணர்தற்கா மறிவின் மதுகையை யொரு நிலையாகப் பயக்கும் விழுப்பொரு ணூலுமாமென றுணர்ந்துகொள்க. இம்முறை யிறை யனார் களவியலுக்கு மொக்கும். இறைமுதற்கடவுள், உயிர்கள் சோபான முறையானே அங்ஙனம் பொருள்களின் மெய்ம்மை தேறி வீடுபேற றுறுதிப்பயன் றலைக்கூடுதற்கன்றே வேதாகமமென முதனூலகண் முறையே சூத்திரமும் பாடியமும்போலப் பொதுவுஞ் சிறப்புமாக அவ்வா றிருவேறு வகைப்பட அருளிச்செய்ததூஉமென வறிக. வாதவூரடிகள், திருக்கோவை திருவாசகமென உண்மைச் செந்தமிழ்த் திருமுறைகண் முறையே உலகி யலும் வீட்டியலு நுதலி அவ்வாறிருவகையாற் றிருவாய்மலர்ந்தருளியதூஉம், இக்கருத்து நோக்கியேயென்று துணிக. அற்றேல் அஃதங்ஙனமாக, தொல்காப்பியப் பொருளதி காரம் அகத்திணை, புறத்திணை, களவு, கற்பென றினனோரன்ன வியல்களானே இல்லற மும் பொருளு மின்பமு முணர்த்துதலின், அம்முத்திறத் துறுதிப்பொரு ணூலிவதல் லது, நிலையாமை, துறவு, மெய்யுணர்வு, அவ்வாறுதத லென்றற்றொடக்கத்து வீட்டிய றெரிக்கு மோத்துக்களுடைத்தாகாமையின், வீடுபேற றுறுதிப்பொருணூலுமா மென்றல் சாலாதெனின்,— அஃதுலகியல் வழக்குநூலாதலின், பெரும்பான்மையா னுலவகை வரு ணத்தார்க்கு முரிய இல்லறம் பொருளினப முணர்த்துவதாயிற்று. ஆயினும், அகத்திணை யியலுட் பிரிதனிமித்தங் கூறுதலானும், புறத்திணையியலுள் வெட்சி முதலாக வாகை யீறாக அறனும் பொருளும் பயக்கும் அரசியல்கூறி, அவற்றது நிலையாமை காஞ்சியுட் கூறுதலானும் "அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்" எனனும் புறத்திணையியற் சூத் திரத்துங் "காமஞ் சான்ற" என்னுங் கற்பியற் சூத்திரத்துந் துறவு மெய்யுணர்வு மவ் வாறுதலுங் கூறுதலானும், வீட்டியலுறுதிப் பெரும்பயனுங் கூறிற்றேயாம். ஆகலின், சாலாமை யாண்டையதெனக.

அகத்திணையியல்— ஒத்தவன்பான ஒருவனு மொருத்தியுங் கூடுகின்ற காலத் திற் பிறந்த வின்பம் அக்கூட்டத்தின் பின்னர் ஒருவர்க்கொருவர் இவ்வாறிருந்ததெனப் புலப்படக் கூறப்படாததாய் யாண்டு முள்ளத்துணர்ச்சி நுகர்வதாவதோர் பொருளாக லின், அது அகமெனப்படும். எனவே, அகத்தே நிகழ்கின்ற வின்பத்திற் ககமென்றது ஆகுபெயராம். இஃதொழிந்தன ஒத்தவன்புடையார் தாமேயன்றி எல்லாரானுந் துய்த்துணரப்படுதலானும், இவை யிவ்வாறிருந்தவெனப் பிறர்க்குக் கூறப்படுதலா னும், புறமெனப்படும். இன்பமேயன்றித் துன்பமு மகத்து நிகழுமாலெனின்,— அது புறத்தார்க்குப் புலனாதன் மறைக்கப்படாமையிற் புறத்திணைப்பாலதாம். மற்றுக் காம நிலையின்மையான வருந் துன்பம் யாண்டடங்குமெனின்,— அதுவுந் தாபதநிலை தபு தாரநிலையென வேறுயப் புறத்திணைக்கட்டானே யடங்குமென்பது. திணை—ஒழுக்கம். இயல்—இலக்கணம். எனவே, அகத்திணையியலென்றது—இன்பமாகிய வொழுக்கத்தி னது இலக்கண மென்றவாறாயிற்று. இனி ஒழுக்கநிகழ்தற் கிடனாகலின், குறிஞ்சி முத லியவுந் திணையெனப்படும்.

"கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய் - முற்படக் கிளந்த வெழுதிணை யென்ப." எனவகை மணனு மெழிசென்று கூறப்படுதலானும், காமஞ்சாலா விளமைப்

பருவ மதன்கண்ணதாகலானும், கைக்கிளையை முன்வைத்தார். காமஞ் சாலவுழி நிகழு மன்புடைக் காமவொழுக்கமாகலின், ஐந்திணையை அதன்பின் வைத்தார். பொருந்தாக் காமவொழுக்கமாகலின், பெருந்திணையை இறுதிக்கண் வைத்தார். இவ்வெழுவகையொழுக்கம், கைக்கிளைத்திணை, முல்லைத்திணை, குறிஞ்சித்திணை, மருதத்திணை, நெய்தற்றிணை, நடுவுநிலைத்திணை, பெருந்திணையென எழுபெயர்பெற்றனவாம். கற்பொடு பொருந்திக் கணவன் சொற்பிழையாது இல்லிருந்து நல்லறஞ்செய்தல் மகளிர்க்கு மரபாதலானும், அவ்வில்லறம் புணர்ச்சிபற்றியல்லது நிகழாமையானும், புணர்ச்சிப்பின் அதனைப்பற்றி ஊடனிகழ்தலானும், ஊடற்கட் பிரிந்திரங்குதல் உண்மையானும், அப்பிரிவு ஓதல் பகை தூதெனவிவை காரணமாகப் பலவாய் நீட்டிக்க நிகழுத லுண்மையானும், முல்லை குறிஞ்சி மருத நெய்தல் பாலையென்று அவ்வாறு கோத்திட்டாரென்றுணர்க.

கைக்கிளை - ஒருமருங்கு பற்றிய கேண்மை, முல்லை கற்பு, குறிஞ்சி புணர்ச்சி, மருதம் - ஊடியுங் கூடியும் போகநுகர்தல், நெய்தல் இரங்குதல் என்றார் நச்சினார்க்கினியர். பிறர் முல்லை முதலிய பூக்களானே அவற்றிற்கிட்டனர் என்ப. காடுறை புகை முதலிய நான்கும் அவ்வாறு வழங்கப்பட்டன வென்றார். எவ்வாற்றினும் பெரிதாகிய திணையாதலின், பெருந்திணையாயிற்று. என்னை? கைக்கிளைமுதலாறுதிணையும் நான்கு மணம்பெறத், தானொன்று நான்கு மணம்பெற்று நடத்தலினென்க.

நடுவுநிலைத்திணை, "நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே" என்றாராகலின், அது நடுவுநிற்றல் காரணத்தாற் பெற்ற பெயர். ஏனையாறற்றிணையு முறையானே நிற்றலின், இத்திணைக்கண் ஓதினான். இஃதவற்றின் வேறென்பது விளங்குதலானும், எழுசீரின்றது பாலையாதலானும், பாப்பொருள் கூறுங்கால், "வாகை தானே பாலையது புறனே" என நடுவுநிலைத்திணை கூறுந்தானே அதனைப் பாலையெனக் குறியிட்டாராதலானும், பாலைத்திணை நடுவுநிலைத்திணை யென்பன ஒரு பொருட் கிளவி. அஃதெவ்வாறெனின், "நடுவணைந்திணை நடுவண தொழியப் - படுதிரை வையம் பாத்திய பண்பே" என நிலம் பகுத்தோதுங்கால், நடுவணதெனக் குறியிட்டாராகலின், அங்ஙனம் பகுக்கப்படு மிடமாகாது அவற்றின் வேறுமாகாது தனக்குரிய நில நடுநிகழ்தலாய் நிற்றல்பற்றி அவ்வாறு குறியிடப்பட்டது" என்றார் சூத்திரவிருத்திகாரர். அங்ஙனமாதல், "முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து - நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப் பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்" என்னுஞ் சிலப்பதிகாரத்தானு முணர்க. இவ்வுண்மை யுணரமாட்டார் பாலைசான்ற சுரம் நானிலத்து ளடங்காதென்று வேறுவைத்தெண்ணி ஆசிரியர் தொல்காப்பியனாரோடு மாறுகொண்டு நிலமைந்தெனத் தமக்கு வேண்டியவாறு கூறுப.

இனி நடுவணைந்திணை முதல் கருவுரியென மூன்றும் இவை அகத்திணைக்கன்றிப் புறத்திணைக்கு முரியவாம். இனி முதலிற் கருவுங் கருவி லுரியுஞ் சிறந்து வரும். இம்மூன்றும் பாட்டுட் பயின்று வரும். வழக்கினுள் வேறு வேறு வருவதன்றி ஒருங்கு நிகழா. இன்னும், இவை புலனெறிவழக்கிற் பயின்றவாற்றான் வரையறுத்துக் கூறப்படுவதன்றி வழக்கு நோக்கி இலக்கணங் கூறப்படா.

முதற்பொருள் — நிலமுங் காலமுமென முதல் இருவகைப்படும். மேற்பகுத்த முல்லை முதலாய நான்கு நிலமுதற் பொருளாம். அந்நான்கு முறையானே காடே மலை

கம், மைவரையுலகம், தீம்புனலுலகம், பெருமணலுலகமென நால்வாறு வழங்கப்படும். கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனிலென்னும் பெரும்பொழுதாறும், காலை, நண்பகல், மாலை, வைகறையாமம், விடியலென்னுஞ் சிறுபொழுதைந்தும், காலமுதற்பொருளாம். விடியலென்னினு மெற்பாடென்னினு ஞாயிற்றினுதயமென்னினு மொக்கும். படுதல்—உண்டாதலென்னும் பொருட்டு. இப்பொருள் காணாதார் எற்பாடு பின்பகலென்றும், வைகுறுவிடியலென்னும் வினைத்தொகையை வைகுறுவும் விடியலுமென வும்மைத்தொகையாக்கி, வைகறையை வைகுறுவெனவு நாள்வெயிற்காலையை விடியலெனவுங் கொண்டு, பெரும்பொழுதுபோலச் சிறுபொழுது மறுவகைப்படுமென்பர். அது பொருந்தாமை சூத்திரவிருத்தியுட் காண்க.

முல்லைக்குக் காடுஞ் சார்ந்தவிடமு நிலம், பொழுது காரு மாலையும். குறிஞ்சிக்கு மலையு மலைசார்ந்தவிடமு நிலம், பொழுது கூதிரும் யாமமு முன்பனியும். மருதத்திற்குப் பழனமும் பழனஞ்சார்ந்தவிடமு நிலம், பொழுது வைகறையாமம். நெய்தற்குக் கடலுங் கடல்சார்ந்தவிடமு நிலம், பொழுது எற்பாடு. பாலைக்கு நிலனின்று, பொழுது நண்பகலும் வேனிலும் பின்பனியும்.

உரிப்பொருள்— புணர்தலும் புணர்தனிமித்தமும், பிரிதலும் பிரிதனிமித்தமும், இருத்தலு மிருத்தனிமித்தமும், இரங்கலு மிரங்கனிமித்தமும், ஊடலு மூடனிமித்தமு மென்பன வுரிப்பொருளாம் இவை முறையானே குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருத மென்பனவற்றிற் குரியபொருளாம். அப்பொருளாவது புணர்ச்சியாகலானும் அஃதிரு வர்க்கு மொப்ப நிகழ்தலானு முன்னர்ப் புணர்ச்சியும், புணர்ந்துழியல்லது பிரிவின்மை யானும் அது தலைமக்கண்ணதாகிய சிறப்பானு மதன்பின்னர்ப் பிரிவும், பிரிந்துழிக் கற்பாற் றலைவி யாற்றியிருத்தன் முறைமையாதலின் அதன்பின்னர் இருத்தலும், அங்ஙன மாற்றியிராது பிரிவு நீட்டித்துழிச் சாமம் மைமிக்கு வருந்தல் இயல்பாதலின் அதன்பின்னர் இரங்கலும், பிரிவின் றிறமுக்கிய பரத்தையிற் பிரிந்துழித் தலைவன் றவறு நோக்கித் தலைவி கலாய்த்த லியல்பாதலானுஞ் சாமர்த்திறத்துச் சிறப்பாதலானு மதன்பின்னர் ஊடலும், வைக்கப்பட்டனவென வுணர்க.

கருப்பொருள்— தெய்வம், உணா, விலங்கு, மரம், புள், பறை, செய்தி, யாழென்பனவும் பிறவும் ஐந்திணைக் கருப்பொருள்களாம்.

முல்லைக்குத் தெய்வம் மாயோன். உணா-வரகுஞ் சாமையும். மா-முயலுஞ் சிறுமானும். மரம்-கொன்றையுங் குருந்தும். புள்-கானங்கோழியு மயிலுஞ் சிவலும். பறை-ஏறுகோட்பறையு முரசும். செய்தி-வரகு களைகட்டலும் வையறுத்தலுங் கடா விடுதலு நிரைமேய்த்தலும். பண்-முல்லை. தலைமகன்-குறும்பொறைநாடன். தலைமகள்-கிழத்தி, மனைவி. பூ-முல்லையுந் தோன்றியும் பிடவுந் தளவும். நீர்-கானயாறு. ஊர்-பாடியுஞ் சேரியும். மக்கள்-இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர்.

குறிஞ்சிக்குத் தெய்வம்-முருகவேள். உணா-ஐவனநெல்லுந் தினையு மூங்கி லரிசியும். மா-புலியும் பன்றியும் யானையும். மரம்-அகிலு மாரமுந் திமிசுந் தேக்கும் வேங்கையும். புள்-கிளியு மயிலும். பறை-வெறியாட்டுப் பறையுந் தொண்டகப்பறை யுங் குறவைப்பறையும். செய்தி-தேனழித்தலுங் கிழங்ககழ்தலுந் தினைவிளைத்தலுந்

திணைக்கிளிகடிதலும். யாழ் - குறிஞ்சியாழ். தலைமகன் - சிலம்பன், வெற்பன், பொருப்பன். தலைமகள் - கொடிச்சி, குறத்தி. நீர் - அருவிநீருஞ் சுனைநீரும். ஊர் - சிறுகுடியுங் குறிச்சியும். பூ - குறிஞ்சியும் வேங்கையுஞ் சுனைக்குவளையுங் காந்தளும். மக்கள் - குறவர், இறவுளர், குன்றவர்.

மருதத்திற்குத் தெய்வம் - இந்திரன். உணா - செந்நெல்லும் வெண்ணெல்லும். மா - எருமையு நீர்நாயும். மரம் - வஞ்சியுங் காஞ்சியு மருதமும். புள் - நீர்க்கோழியுந் தாராவும். பறை - மணமுழவு நெல்லரிகிணையும். செய்தி - நென்னடுதலுங் களைகட்டலும் அரிதலுங் கடாவிடுதலும். யாழ் - மருதயாழ். தலைமகன் - ஊரன், மகிணன். தலைமகள் - கிழத்தி, மனைவி. பூ - தாமரைப்பூவுஞ் செங்கழுநீர்ப்பூவும். நீர் - மனைக்கிணறும் பொய்கையும். மக்கள் - கடையர், கடைசியர், உழவர், உழத்தியர். ஊர் - பேரூர்.

நெய்தற்குத் தெய்வம் வருணன். உணா - மீன்விலையு முப்புவிலையும். மா - சுறவு முதலையும். முதலையுஞ் சுறவு மீனாதலின் மாவென்றன் மரபன்றென்றும், உமண்பகடுபோல்வன ஆண்டு மாவெனப்படுமென்றுங் கூறினார் நச்சினார்க்கினியர். ஆசிரியர் தொல்காப்பியனார் விதந்து சுட்டாது, "மரவு மாக்களு மையறி வினவே" என் பொதுப்பட வோதுதலானும், 'இடங்கர்மா' வென்னுமிலக்கிய வழக்குண்மையானும், நக்கீரனார் நெய்தற் கருப்பொருட்டெரிப்புழி, 'மா சுறவு முதலையு' மென்றுரைத்தலானும், பகடு ஏனைநிலக் கருப்பொருளாகலின், "எந்நில மருங்கிற் பூவும் புள்ளு - மந்நிலம் பொழுதொடு வாரா வாயினும் - வந்த நிலத்தின் பயத்த வாகும்" என்று மகத் திணையியற் சூத்திரத்தொன்றென முடித்தலானே நெய்தற்கண்வந்த தந்நிலக் கருப்பொருளெனப்பட் டவ்வாறு வழங்கப்பட்டதல்லது நெய்தற்குரிய கருப்பொருளாகாமையானும், அவ்வுரை கொள்ளற்க. மரம் - புன்னையு ஞாழலுங் கண்டலும். புள் - அன்னமு மன்றிலு மகன்றிலும். பறை - மீன்கோட்பறையு நாவாய்ப்பறையும். செய்தி - மீன்படுத்தலு முப்புவிளைத்தலு மவை விற்றலும். யாழ் - விளரியாழ். தலைமகன் - கொண்கன், சேர்ப்பன், துறைவன். தலைமகள் - நுளைச்சி, பரத்தி. நீர் - மணற்கிணறு முவர்க்குழியும். பூ - வெள்ளிதழ்க்கைதையு நெய்தலும். ஊர் - பட்டினமும் பாக்கமும். மக்கள் - பரதர், பரத்தியர், நுளையர், நுளைச்சியர்.

தொல்காப்பியனார் பாலைக்கு நிலம் வேண்டிற்றிலர், வேண்டாமையிற் றெய்வமும் வேண்டிற்றிலர், பிறர் பகவதியையு மாதித்தனையுந் தெய்வமென்று வேண்டுவர். உணா - ஆறலைத்தனவு மூரெறிந்தனவும். மா - வலியழிந்த யானையும் புலியுஞ் செந்நாயும். மரம் - இருப்பையு மோமையும். புள் - கழுகும் பருந்தும் புறவும். பறை - பூசற்பறையு மூரெறிபறையு நிரைகோட்பறையும். செய்தி - சூறையாடலுஞ் சுரத்தெறிதலும். யாழ் - பாலையாழ். தலைமகன் - மீளி, காளை, விடலை. தலைமகள் - எயிற்றி, பேதை. பூ - மராவுங் குராவும் பாதிரியும். நீர் - அறுநீர்க்கூவலு மறுநீர்ச்சுனையும். மக்கள் - எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர். ஊர் - பறந்தலை, கொல்குறும்பு.

இக்கூறப்பட்டகரு மயங்கியும் வரப்பெறும், என்னை? "எந்நில மருங்கிற் பூவும் புள்ளு - மந்நிலம் பொழுதொடு வாரா வாயினும் - வந்த நிலத்தின் பயத்த வாகும்" என்றாசிரிய ரோதுதலின்.

புறத்திணையியல்— அகத்திணைக்கண் மாலை, யாமம், வைகறை, காலை, நண்பக லென்னுங் கால முதற்பொரு ளொந்துமபற்றி, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை யென் றிங்ஙன முறைதெரித் தோதிய வாசிரியர், தமக்கென நிலமுடைய குறிஞ்சி முல்லை மருத நெய்த லென்னு நான்கும்பெற்ற விலக்கணங்களோடு ஒருபுடை யொப்புமையாற் சார்புடைய வாதலும், நிலமில்லாத பாலை பெருந்திணை கைக்கிளை யென்பன பெற்ற விலக் கணங்களோடு ஒருபுடை யொப்புமையாற் சார்புடைய வாதலும்பற்றி, முறையே வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்டிணை யென்பனவற்றை அவற் றிற்குப் புறனாக்கிநிறுத்தி அவற்றிலக்கணங் கூறுதலின், இது புறத்திணை யியலென்னும் பெயர்த்தாயிற்று. அகத்திணைப் பொருளான இல்லறத்திற்கு முல்லை சிறத்தலின் ஆண்டு அதனை முதலாகவைத் தெண்ணினார், புறத்திணையான அரசியற்குப் பொருள் இன்றி யமையாமையின் அப்பொருண் முடித்தற்குக் களவொழுக்கமுங் கங்குற்காலமுங் காவலர் கடிகினுந் தான் கருதிய பொருளை இரவின்கண் முடித்து மீட்டும்போது மிலக் கணங்களுடைய குறிஞ்சி சிறத்தலின், ஈண்டு அதனை முதலாகவைத்து எண்ணின ராசிரியரென்றுணர்க.

வெட்சித்திணை— "அகத்திணை மருங்கி னரிற்பட வுணர்ந்தோர் - புறத்திணை யிலக் கணந் திறப்படக் கிளப்பின் - வெட்சி தானே குறிஞ்சியது புறனே - யுட்குவரத் தோன் று மீரேழ் துறைத்தே." களவொழுக்கமுங் கங்குற்காலமுங் காவலர் கடிகினுந் தான் கருதியபொருளை இரவின்கண் முடித்து மீட்டும் போதலவன ஒத்தலின், வெட்சித் திணை குறிஞ்சிக்குப் புறனாயிற்று. வெட்சித்திணையாவது— களவின்கண் நிரைகொள்ளு மொழுக்கம். இதற்கு அப்பூச்சூடுதலு முரித்து. இஃதேனைத் திணைக்கண்ணும் பொருந் துவன கொள்க. "வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவி - னாதந் தோம்பன் மேவற் றாகும்." களவு நிகழ்கின்ற குறிஞ்சிப் பொருளாகிய கந்தருவமணம் வேதவிதி யானே இல்லறமாயினாற்போல இருபெருவேந்தர் பொருவார் கருதியக்கால் ஒருவர் ஒரு வர் நாட்டுவாழும் அந்தணரும் ஆவுமுதலியன தீங்குசெய்யத் தகாத சாதிகளை ஆண்டு நின்று மகற்றல் வேண்டிப் 'போதருக' வெனப் புகறலும், அங்ஙனம் போதருதற்கு அறி வில்லாத ஆவினைக் களவினாற் றாமே கொண்டு வந்து பாதுகாத்தலும், தீதெனப்படாது அறமேயாயிற்று. ஆ கோடல் - அடித்துக் கோடலு மீட்டுக் கோடலுமென விரண்டாம். இவ்விரண்டும் வெட்சித்திணையெனவே கொண்டாராசிரியர். இவ் வெட்சித்திணை படை யியங்கரவமுதலிய பதினான்கு துறைகளையுடைத்து. இத்துறைகள் கொள்வோர்க்கு மீட்போர்க்கு முரியவாகலின், அவ்வாற்றா னிருபத்தெட்டுத் துறைகளாம். வேத்தியலின் வழீஇத் தன்னுறுதொழிலாயவரு மித்திணைவழு வெறியறிசிறப்பின் வெவ்வாய் வேலன், வெறியாட்டயர்ந்த காந்தண்முத லிருபத்தொன்றும்.

வஞ்சித்திணை— "வஞ்சி தானே முல்லையது புறனே." முதலெனப்பட்ட காடுறை யுலகமு மந்நிலத்திற்கேற்ற கருப்பொருளும் பாசறைக்கட் டலைவியைப் பிரிந்திருத்தலுந் தலைவி தலைவற் பிரிந்து மனைவயினிருத்தலுமாகிய வுரிப்பொருளு மொப்பச் சேறலின், வஞ்சி முல்லைக்குப் புறனாயிற்று. "எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்த - னஞ்சுதக் கத் தலைச்சென் றடல்குறித் தன்றே." வஞ்சித்திணையாவது— ஒருவேந்தன் மண்ணசை யானே மற்றொரு வேந்தனைக் கொற்றங்கோடல் குறித்து மேற்சேறலாம். ஒருவன் மண் ணசையான் மேற்சென்றால் அங்ஙன் மேற்செல்லப்படுவோனும் அம்மண்ணழியாமற் காத்

தற்கு எதிரே வருதலின், மேற்சேறல் இருவர்க்கும் பொதுவாம். இனி ஒருவன் அங்ஙன மேற்சென்றுழி, ஏனோன் எதிர்செல்லாது தன்மதிற்புறத்து வருந்துணையு மிருப்பின், அஃது உழிஞையி னடங்குமெனக. இவ்வாற்றானே இருவரும் வஞ்சிவேந்தராதலும், ஈண்டுக் கூறுந் துறையெல்லாம் இருவர்க்கும் பொதுவாதலுங் கொள்க. இவ்வஞ்சித்திணைத் துறை இயங்குபடையரவமுதற் பதின்மூன்றாம்.

உழிஞைத்திணை— "உழிஞை தானே மருதத்துப் புறனே." இருபெருவேந்தர் தம்முண் மாறுகொண்டவழி எதிர்செலற் காற்றாது போய் மதிலகத்திருந்த வேந்தனது மதில் பெரும்பான்மையு மருதத்திடத்ததாகலானும், அம்மதிலை முற்றுவோனும், அந்நிலத்திருத்தலானும், ஒருவன் வாயில்வேண்டத் திறவாது அடைத்திருந்த வொப்புமையானும், உள்ளிருந்தோனும் புறப்பட விரும்புதலானும், மருதம்போல் விதற்கும் பெரும்பொழுது வரைவின்மையானும், புலரிக்காலமே போர்செய்யத் தொடங்குங் காலமாகலானும், உழிஞைத்திணை மருதத்திற்குப் புறனாயிற்று. "முழுமுத லரண முற்றலுங் கோடலு- மனைநெறி மரபிற் றாகு மென்ப" உழிஞையாவது— போர்மேற்சென்ற வேந்தன் வேற்று வேந்தன் அரணினை முற்றுதலும், இருந்தவேந்தன் கைக்கொண்டு காத்தலுமாகிய மரபிற்றாம். இது மதின்முற்றிய புறத்தோன்கூறு நான்கு மதிலகத்திருந்த வகத்தோன் கூறு நான்குமென எட்டுவகையினை யுடைத்து. அவைதாம் கொள்ளார் தேஎங் குறித்த கொற்றங்கூறன் முதலியவும், அகத்தோன் செல்வங் கூறுதன் முதலியவுமாம். இனி இவ்விருவர்க்கும் ஒன்றியச் சேற்குரியவாகுந் துறை நாட்கோடன் முதற் பன்னிரண்டாம்.

தும்பைத்திணை— "தும்பை தானே நெய்தலது புறனே." தும்பையென்பது சூடும்பூவினாற்பெற்ற பெயர். நெய்தற்குரிய பெருமணலுலகம் போர்க்களமாகவேண்டுதலானும், பெரும்பொழுது வரைவின்மையானும், தலைவர்ப்பிரிந்தார் இராக்காலமுழுதுந் துயிலவத்தையராய் சுழிய உணர்வுகூடி எழுந்திருக்குங்காலை முதயமாதலானும், பிற காரணங்களானும், தும்பைத்திணை நெய்தற்குப் புறனாயிற்று. "மைந்து பொருளாக வந்த வேந்தனைச் - சென்றுதலை யழிக்குஞ் சிறப்பிற் றென்ப." தும்பைத்திணையாவது— ஒருவேந்தன் றன்வலியினை யுலகமிக்கூறல் வேண்டி மேற்சென்றானை, அங்ஙனம் மேற்செல்லப்பட்ட வேந்தனும் அவன் கருதியமைந்தே தான்பெறும் பொருளாகவேண்டி எதிர்சென்று அவன் றலைமை தீர்க்குஞ் சிறப்பிற்று. நெய்தற்புறனான இத்தும்பைத் திணை வெட்சிப்புறத்துத் தும்பை, வஞ்சிப்புறத்துத் தும்பை, உழிஞைப்புறத்துத் தும்பைகளுமாம். இத்தும்பைத்திணைத் துறை, தானை, யானை, குதிரையென்ற, நோனாருட்கு மூவகை நிலைமுதற் பன்னிரண்டாம்.

வாகைத்திணை— "வாகை தானே பாலையது புறனே." பாலைக்குப் புணர்ச்சியினீங்கி இல்லற நிகழ்ச்சிப் புகழெய்துதற்குப் பிரியுமாறுபோலச் சுற்றத்தொடர்ச்சியினீங்கி அறப்போர்செய்து துறக்கம் பெறுங் கருத்தினோர் சேறலானும், பாலை தனக்கென ஓர் நிலனின்றி நால்வகை நிலனும்பற்றி நிகழுமாறுபோல முற்கூறிய புறத்திணை நான்கும்பற்றி நிகழ்தலானும், வாகைத்திணை பாலைக்குப் புறனாயிற்று. "தாவில் கொள்கைத் தத்தங் கூற்றைப்-பாற்பட மிகுதிப் படுத்தலென்ப." வாகைத்திணையாவது—இயல்பாகிய ஒழுக்கத்தானே நான்கு வருணத்தோரும் அறிவரும் தாபதர் முதலியோரும் தம்முடைய கூறுபாடுகளை இருவகைப்பட்ட மிகுதிப்படுத்துரைத்தலாம். இருவகையாவன

தானே தன்னை மிகுதிப்படுத்தலும், பிறர் மீக்கூறுபடுத்தலுமாம். இனி உலகமுழுது மறியு முயற்சியுடைமையும் வாகைத்திணையாம். எனவே, வலியானும் வருத்தத்தானுங் கூறுவித்துக்கோடல் வாகையன்றாம். இவ்வாகைத்திணை அறுவகைப் பார்ப்பியன் முதலாக எழுவகைப்பட்ட தொகைநிலைபெற்ற துறைகளையுடைத்து. இன்னும், இதன் றுறைகண் மறத்திற்கு ஒன்பதும், அறத்திற்கு ஒன்பதுமெனப், பதினெட்டாம்.

காஞ்சித்திணை— "காஞ்சி தானே பெருந்திணைப் புறனே." என்வகை மணத்தினு நான்குமணம் பெற்ற பெருந்திணைபோல அறமுதலாகிய மும்முதற்பொருளும் அவற்றது நிலையின்மையுமாகிய வாற்றுளொரு நிலையின்மை மூன்றற்கு முரித்தாய எல்லாத்திணைகளுக்கு மொத்த மரபிற்றாகலானும், "பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே" என்ற நான்குஞ் சான்றோர் இகழ்ந்தாற்போல அறமுதலியவற்றது நிலையின்மை யுணர்ந்து அவற்றை யிகழ்தலானும், "ஏறிய மடற்றிற" முதலிய நான்கும், தீய காம மாயினவாறு போல நிலையாமையு முலகியற்றோர்க்கின் றற்பொருளன்றாகலானும், உரிப்பொருளிடை மயங்கி வருதலன்றித் தனக்கு நிலமில்லாத பெருந்திணைபோல அறம் பொரு ளின்பம் பற்றியன்றி வேறு வேறு நிலையாமை யென்பதோர் பொருளின்றாகலானும், காஞ்சி பெருந்திணைக்குப் புறனாயிற்று. பின்னர் நான்கென்றன பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வ மென்பன. இஃதிடம்பற்றியபின் ஏறிய மடற்றிற முதலிய நான்காவன— "ஏறிய மடற்றிற மிளமை தீர்திறந் - தேறுத லொழிந்த காமத்து மிகுதிற - மிக்க காமத்து மிட" லென்பன. "பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானு - நில்லா வுலகம் புல்லிய நெறித்தே." காஞ்சித்திணையாவது— வீடுபேற்றினைப் பொருளாக யாக்கை இளமை செல்வமுதலிய உலகநிலையாமை கூறுவதாம். இது கூற்றம் வருமென்றன முதலாகப் பலதுறைகளையுடைத்தாம். இத்துறைகள் ஆண்பாற்றுறையும் பெண்பாற்றுறையுமாய இருவகைப் பட்டு நடக்கும்.

பாடாண்டிணை— "பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே - நாடுங் காலை நாலிரண் டுடைத்தே" ஒருதலைவன் பரவலும் புகழ்ச்சியும் வேண்ட ஒருபுலவன் வீடுபேறு முதலிய பரிசில் வேண்டலின், அவை தம்மின் வேறுபட்ட வொருதலைக் காமமாகிய கைக்கிளையோ டொத்தலின், பாடாண்டிணை கைக்கிளைப் புறனாயிற்று. பாடாண் என்பது— பாடுதல் வினையையும் பாடுமாண்மகனையு நோக்காது, அவன தொழுகலாறாகிய திணையுணர்த்தினமையின் வினைத்தொகை நிலைக்களத்துப் பிறந்த வன்மொழித்தொகை. இதன்றுறை நாலிரண்டாம். நாலிரண்டாவன— இப்பாடாண்டிணைக்குக் கூறுகின்ற பொருட்பகுதி பலவுங் கூட்டி ஒன்றும், இருவகை வெட்சியும், பொதுவியலும், வஞ்சியும், உழிஞையும், தும்பையும், வாகையும், காஞ்சியுமாகிய பொருள்களேழுமாம். இவ்வேழும் பாடாண்டிணைப் பொருளாங்கால், எல்லாமொத்தேனும், அவை பெரும்பான்மை சிறுபான்மையாய வருதலும், இரண்டும் பலவுமாய ஒருங்கு வருதலும், பாடாண்டிணைக்குக் கூறும் பொருள்கள் விராய்வருதலு முளவென் றுணர்க. இப்பாடாண்டிணைக்கே யுரிய பகுதிகள், தேவர்பகுதியு மக்கட்பகுதியுமென விரண்டாம். தேவர்பகுதி— அறுமுறை வாழ்த்தாகியும் அவர்பால் உயர்விலாத பொருள் வேண்டுங் குறிப்பாகியும் வரும். மற்றை மக்கட்பகுதி— ஒரு தலைவன் றன்னைப் பிறர் பரவலும் புகழ்தலுங் கருதிய பகுதி முதலியவாம். இவற்றுள், மக்கட்பகுதி கொடுப்போரேத்திக் கொடாஅர்ப்பழித்தன முதலாகப் பத்தாயும், கூத்தரேத்திய துயிலெடை நிலைமுதற் பலவாயும் வரும்.

களவியல்— இனையத்தின் பொதுவிலக்கணம் அகத்திணையியலிலும், அதற்குத் துணையான பொருளும் அரசநீதியும் புறத்திணையியலிலுங் கூறிய வாசிரியர் அவ்வின்பத்தினது சிறப்பிலக்கணம் ஈண்டுக் கூறுகின்றார். களவு கற்பென்னுங் கைகோளிரண்டனுட் களவுணர்த்துதலின், இவ்வோத்துக் களவியலென்னும் பெயர்த்தாயிற்று "இன்பமும் பொருளு மறனு மென்றாங்-கன்பொடு புணர்ந்த வைந்திணை மருங்கிற்-காமக் கூட்டங் காணுங் காலை-மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுட்-டுறையமை நல்லியாழ்த் துணைமையோ ரியல்பே." மன்றலெட்டாவன— பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசமென்பன. பிரமமாவது— ஒத்த கோத்திரத்தானை நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியங் காத்தவனுக்குப் பன்னீராட்டைப் பருவத்தாளாய பூப்பெய்தியவளை அணிகலனணிந்து தானமாகக் கொடுப்பது. பிராசாபத்தியமாவது— மகட்கோடற்குரிய கோத்திரத்தான் கொடுத்த பரிசத்திரட்டி தம்மகட்கு ஈந்து கொடுப்பது. ஆரிடமாவது— தக்கானொருவனுக்கு ஆவும் ஆனேறும் பொற்கோட்டுப் பொற்குளம்பினவாகச் செய்து அவற்றிடை நிறீஇப் பொன்னணிந்து நீரும் இவைபோற் பொலிந்து வாழ்வீரென நீரிற்கொடுப்பது. தெய்வமாவது— பெருவேள்வி வேட்பிக்கின்றார் பலருள் ஒருவற்கு அவ்வேள்வித் தீமுன்னர் ஓர் மகளைப் பூணணிந்து கொடுப்பது. ஆசுரமாவது— கொல்லேறு கோடல், திரிபன்றியெய்தல், வில்லேற்றுதல் முதலியன செய்து மகட்கோடல். இராக்கதமாவது— தலைமகடன்னினுந் தமரினும் பெறாது வலிதிற்கொள்வது. பைசாசமாவது— மூத்தோர் களித்தோர் துயின்றோர் புணர்ச்சியும், இழிந்தோரை மணஞ்செய்தலும் பிறவுமாம்.

இவ்வியலிற் கூறப்படுங் காந்தருவமாவது— கந்தருவகுமாரருங் கன்னியருந் தம்முளெதிர்ப்பட்டுக் கண்டு இயைதல்போலத் தலைவனுந் தலைவியு மெதிர்ப்பட்டுப் புணர்வது. "முன்னைய மூன்றுங் கைக்கிளைக் குறிப்பே - பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே" என்றலின், இடைநின்ற காந்தருவந் தினைப்பாற்படு மிக்கவொழுக்கம், முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தலென்னு மைந்திணைப் பாலதா மன்புடைக் காமமென்பது தெளியப்படும். அது "முதலொடு புணர்ந்த யாழோர் மேன - தவலருஞ் சிறப்பி னைந்நிலம் பெறுமே" என்னு மிவ்வியற் சூத்திரத்தா னறிக. இப்பெற்றித்தாமென்பது விளக்கியவன்றே, "திருவளர் தாமரை சீர்வளர் காவிகள் ஈசர்தில்லைக் குருவளர் பூங்குமிழ் கோங்கு பைங்காந்தள்கொண் டோங்குதெய்வ மருவளர் மாலையோர் வல்லியி னொல்கி யனநடைவாய்ந் துருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன் றொளிர்கின்றதே" என்றகத்தமிழ்த் திருக்கோவை அவ்வாறு ஐந்திணையும்பற்றி வாதவூரடிகள் முதற்கண் எடுத்துக்கொண்டு அருளிச்செய்ததென் றுணர்க.

இக்களவு பொதுவாகலின் நான்குவருணத்தார்க்கு முரித்து. 'ஒன்றே வேறே யென்றிரு பால்வயி - னொன்றி யுயர்ந்த பாலதாணையி - னொத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப - மிக்கோ னாயினுங் கடிவரை யின்றே" ஒத்தகிழவனுங் கிழத்தியும் உம்மைக்காலத்துப் பிறப்புணர்ச்சியினு மொருவரை யொருவ ரின்றியமையாராய்ச் செய்த நல்வினைக் காரணமாக அன்பான ஒருபொழிலவயிற் றமியராய்க் கூடுங் கூட்டம், ஈண்டுக் களவெனப்படும். ஆகலின், இது பிறர்க்குரிய பொருளை மறையிற் கொள்ளுங் களவன்றாய்ச் சிறப்புடைத்தாயிற்று. கிழவோற்கு மிகுதி குலங் கலவி பிராயமுதலியவற்றாற் கொள்ளக் கொள்ளவே, அந்தணர் அரசர் முதலிய வருணத்துப் பெண்கோடற்க ணுயர்த

லும், அரசர் முதலியோரு மம்முறையே யுயர்தலுந் தழுவப்படும். படவே, அனுலோம ராறுவர்க்கும் இவ்வொழுக்கம் உரித்தென்றாராயிற்று. கிழவனுங் கிழத்தியுமென்றார், பலபிறப்பினும் ஒருவர்க்கொருவ ருரிமையெய்திச் செல்கின்றாரென்ப தறிவித்தற்கு. ஒத்தல்—பிறப்பு முதலிய பத்தானு மொப்புடையராதல். பிறப்பு முதலிய பத்தாவன: “பிறப்பே குடிமை யாண்மை யாண்டோ - டுருவு நிறுத்த காமவாயி - னிறையே யருளே யுணர்வொடு திருவென - முறையுறக் கிளந்த வொப்பினது வகையே” என்னு மெய்ப்பாட்டியற் சூத்திரத்தா னுணர்க. ஈண்டுப் பிறப்பு—உயர்குடித் தோற்றம். குடிமை—குடிப்பிறப்பிற்கேற்ற வொழுக்கம். குடிமையொடு பிறப்பிடைவேற்றுமை யென்னை யெனின்,— பிறப்பென்பது—குடிப்பிறத்தல், அதற்குத் தக்கவொழுக்கங் குடிமை. குடிப்பிறந்தாரது தன்மை குடிமையெனப்படும். இதனை யூராண்மையெனவுஞ் சொல்லுப. இவை தம்முள் வேற்றுமையெனக். ஆண்மை—ஆளுந்தன்மை. அஃதிருபாற்குமாம், “ஆயிடை யிருபெய ராண்மை செய்த பூசல்” எ-ம், “ஊராண்மைக் கொத்தபடிறுடைத்து” எ-ம், “வேளாண்மை செய்து விருந்தோம்பி” எ-ம், இருபாற்கு மொப்பக் கூறுதலின். இனி ஆள்வினையெனப்படு மாண்மை புருடர்க்காம், அஃதன்றித், இனி-யாண்மை - சட்புலனுக்கு மாள்வினைத்தன்மை, பெண்மை - கட்புலனுக்கு மமைந்ததன்மை யென்பார் நச்சினார்க்கினியர். ஆண்டொப்பு - தலைவிக்குப் பன்னீராண்டுந் தலைவற்குப் பதினாறாண்டுமாம், அப்பருவத்திற்றான் பெண்மையு மாண்மையும் பிறக்குமென்பது வேதமுடிபாகலின், அதுவு மொப்பெனவேபடும். உருவு - ஆண்மைக்கும் பெண்மைக்கும் வேறு வேறாக வோதிய விலக்கணமெல்லா நிரம்பிய வனப்பு மாட்சியான மனத்தினகட் பிறப்பதோர் தருக்கு “பெருமையு முரனு மாடூஉ மேன” “அச்சமு நாணு மடனு முந்துறுத்த - நிச்சமும் பெண்பாற் குரிய வென்ப” என வாசிரியர் கூறுதலான் அவைதாம் இருபாற்கு மிக்கனவென் றுணர்க. பெருமையாவது - அறிவு மாற்றலும் புகழுங் கொடையு மாராய்ச்சியு ம் பண்பு நண்பும் பழிபாவ மஞ்சுதலு முதலியவாய மேம்பட்டு நிற்குந் தலைமைக்குணம். உரன் - இப்பெருமை காரணமாகப் பிறக்கு மறிவுத் திட்பம். அது “உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்” என்பதனா லறிக. அச்சம் - அன்புகாரணமாகத் தோன்று முட்கு. நாண் - காமக்குறிப்பு நிகழ்வுழிப் படுவதோ ருள்ளவொடுக்கம். மடம் - செவ்வியர் கொளுத்தக் கொண்டது விடாமை. “முந்துறுத்த” வென்றதனான் கண்டறியாத கண்டுழி மனங்கொள்ளாத பயிர்ப்புஞ் செயத்தகுவதறியாத பேதைமையுங் கொள்ளப்படும். காமவாயில் - புணர்ச்சிக்கு வாயிலாகிய இயற்கையன்பு. நிறை - மறை பிறரறியாம னெஞ்சினை நிறுத்தல். அருள் - தொடர்பு பற்றாது இயல்பாக எல்லா வுயிர்களின்மேலுஞ் செல்வதாகிய கருணை. அதுவுங் காமத்திற் கின்றியமையாததோர் குறிப்பாம். உணர்வு - அறிவுடைமை: அஃதாவது - உலகியலாற் செய்தக்க தறிதல். திருவென்பது - பொருளுந் துய்ப்புமன்றி எஞ்ஞான்றுஞ் செல்வத் தகவிற்றாயதோ ருள்ளநிறைவு.

இக்களவெனலுங் கைகோட் பாகுபாடு. “காமப் புணர்ச்சியு மிடந்தலைப் படலும் - பாங்கொடு தழாஅலுந் தோழியிற் புணர்வுமென் - றாங்கநால் வகையினு மடைந்த சாரொடு-மறையென மொழிதன் மறையோ ராறே” என்னுஞ் செய்யுளியற் சூத்திரத்தா னுணர்க.

இங்ஙனங் கந்தருவப்பாற்பட்டு நால்வகைத்தாய களவொழுக்கினுடைய தலைமகன், களவு வெளிப்படுவதன் முன்னுதல் களவு வெளிப்பட்ட பின்னுதல் வரைந்து

கற்புமேற்கொண்டு இல்லறஞ்செய் தின்புறு தூய்ப்பாரும். வரைவு இவ்வா றிருவகைத்தாமாறு— "வெளிப்பட வரைதல் படாமை வரைதலென் - றாயிரண் டென்ப வரைத லாறே" என்னு மிவ்வியற்சூத்திரத்தானும், "களவு வெளிப்படா முன்னுற வரைதல் - களவு வெளிப்பட்ட பின்றை வரைதலென் - றாயிரண் டென்ப வரைதலாறே" என்னு மிறையனார் களவியற் சூத்திரத்தானு மறிக. இங்ஙனங் களவாற் காமந்துய்த்தாரே கற்பொழுக்கத்தினுக் குரியவராவரென்பது— "முற்படப் புணராதசொல் லின்மையிற் - கற்பெனப் படுவது களவின் வழித்தே" என்னு மிறையனார் களவியற் சூத்திரத்தி னுணர்க.

கற்பியல்— இவ்வோத்துக் கற்பென்னுங் கைகோ ளுணர்த்துதலின் அப்பெயர்த் தாயிற்று. "கற்பெனப் படுவது கரணமொடு புணரக் - கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக் - கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே." கற்பொழுக்கமாவது கொண்டானிற் சிறந்த தெய்வ மின்றெனவும் அவனை இன்னவாறே வழிபடுகவெனவும் இருமுதுகுரவரும், அந்தணர் திறத்துஞ் சான்றோர் தேயத்து மையர் பாங்கினு மமரர் சுட்டியு மின்னவாறு ஒழுகுகவெனத் தலைமகனுங் கற்பித்தபடி, தலைமகள் இல்லறம் போற்று முறையாம். வதுவைச் சடங்கு நிகழ்வுழி இவளை இன்னவாறு பாதுகாக்கவெனத் தலைமகற்கும், இவற்கின்னவாறு குற்றேவல் செய்தொழுகுகவெனத் தலைமகட்கும், அங்கியங் கடவு ளறிகுறியாக மந்திரவகையாற் பெரியார் கற்பிக்கப்படுதலின், அது கற்பெனப்பட்டது. கற்புக் கல்வியென்பன வொருபொருட் கிளவி.

கற்பென்னுங் கைகோட்பாகுபாடு "மறைவெளிப் படுதலுந் தமரிற் பெறுதலு - மிவைமுத லாகிய வியனெறி திரியாது - மலிவும் புலவியு மூடலு முணர்வும் - பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே" என்னுஞ் செய்யுளியற் சூத்திரத்தா னுணர்க. மலிதல் - இல்லொழுக்கமும் புணர்ச்சியு முதலாயவற்றான் மகிழ்தல். புலவியென்பது - புணர்ச்சியாற் பிறந்த மகிழ்ச்சி குறைபடாமற் காலங் கருதிக்கொண்ட [illegible] நிகழ்ச்சி. ஊடலென்பது - உள்ளத்து நிகழ்ந்ததனைக் குறிப்பா னன்றிக் கூற்றானுரைப்பது. உணர்வென்பது - அங்ஙன நிகழ்ந்த வூடறீர் திறனறிந்து தெருட்டற்பால புலவிக் காயின் உணர்த்துதல் வேண்டா, அது குளிர்ப்பக் கூடலுந் தளிர்ப்ப முயங்கலு முதலாய வற்றா னீங்குதலின்.

இவ்வாற்றாற் கற்பொழுக்க மேற்கொண்டு இல்லறவின்பந் துய்க்கின்ற தலைவனுந் தலைவியும் பின்னர்த் துறவற நிகழ்த்தி வீடுபேறு கூடுபவராவரென்பது, "காமஞ் சான்ற கடைக்கோட் காலை - யேமஞ் சான்ற மக்களொடு துவன்றி - யறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ் - சிறந்தது பயிற்ற லிறந்ததன் பயனே" என்னு மிவ்வியற் சூத்திரத்தா னுணர்க. நுகர்ச்சியெல்லா முடிந்தமை தோன்றக் காமஞ்சான்ற வென்றார். அநாதியாய அவிச்சையானே யகங்காரமுளதாம், அதனானே எனக்கிது வேண்டுமென்னு மவாவுளதாம், அதனானே அப்பொருட்கட் செல்லும் விருப்புளதாம், அவ்விருப்புக் கைகூடாதவழிக் கோபமுளதாம், "காம வெகுளி மயக்க மிவை மூன்றன் - நாமங் கெடக் கெடு நோய்" என்றிவ்வாறு அறிந்தார் கூறக்கேட்டதுணையானே, தலையாயினார் அதன்கணின்று நீங்குவர். இடையாயினார் பெண்ணென்பது எறும்புச்சட்டகம்; அருந்துயர்க் குரம்பை; பைம்மறியா நோக்கப் பருந்தார்க்குந் தகைமைத் தென்றித்திறத்தா னதன்றன்மை தெருட்டக் கேட்டு நீங்குவர். கடையாயினார் எத்திறத்

தாவது நீங்காராகலின், அவர் நிறகுநிலை யிதுவென் றுணர்த்துவார் காமஞ்சான்ற கடைக்கோட் காலையென்றார். ஏமஞ்சான்றவென்றன வானப்பிரத்தமுஞ் சன்னியாசமும். இல்லறத்தின் பின்னர் இவற்றினகணின்று வீடுபேறு கூடுமென்பார் ஏமஞ்சான்ற வென்றிவ்வாறு கூறினார். இல்லறத்திற்கு முக்கியப்பயன் வீடுபேறென்ப துணர்த்துவார் சிறந்தது பயிற்றல் சிறந்ததன் பயனே என்றார். எல்லாப்பொருளினும் வீடுபேறு சிறந்த தென்பார் சிறந்தது பயிற்றலென்றார்.

பொருளியல்— இவ்வோத்துப் பொருளிலக்கண முணர்த்தினமையிற் பொருளியலென்னும் பெயர்த்தாயிற்று. "இசைதிரிந் திசைப்பினு மியையுமன் பொருளே - யசைதிரிந் திசையா வென்மனார் புலவர்." ஏனையோத்துக்களும் பொருளின் இலக்கண மன்றே யுணர்த்தியது, இதற்கிது பெயராயவாறென்னையெனின்,— நன்று வினாயினாய்: சொல்லதிகாரத்திற் கூறிய இலக்கணமுடைய சொற்களை மரபியலில், "நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்துங் - கலந்த மயக்க முலக மாதலி - னிருதிணை யைம்பா லியனெறி வழாஅமைத் - திரிபில் சொல்லொடு தழாஅல் வேண்டும்" என்பராதலின், அவைதாம், ஈண்டுத் தம்பொருளை வேறுபட இசைப்பினும் பொருளாமெனவும், இப்பொருளதிகாரத்து முன்னர்க் கூறிய பொருள்களின் பிறழ்ந்திசைப்பனவும் பொருளாமெனவும், அமைத்து, சொல்லுணர்த்தும் பொருளுந் தொடர்மொழி யுணர்த்தும் பொருளும் ஒருங்கு பொருட்படுத்துக் கூறுதலின், பொருளியலெனப்பட்டதென் றுணர்க. எனவே, சொற்பொருளியல் ஒவ்வோர் காரணமேலிட்டுத் திறம்பி வரினும், பொருளுடையனவேயா மென்ப பொருள் வழுவமைத்தல் இவ்வியற் பயனென்பது. "நோயு மின்பமும்" என்பதனுள், "இருபெயர் மூன்று முரியவாக" என்பதூஉந் திணைமயங்கு மென்றும், "உண்டற் குரிய வல்லாப் பொருளை - யுண்டல் போலக் கூறலு மரபே" என்றும், சொல் வேறுபட்டப் பொருளுணர்த்துதலும், இறைச்சிப் பொருண் முதலியன நாடகவழக்கின் வழீஇயவாறும், 'தருமம் யானையும்' 'அறங்கழி வுடையன' "தாயத்தி னடையா" என்னுஞ் சூத்திரமுதலியன உலகியல் வழக்கின் வழீஇயவாறுங் கூறி, சொற்பொருள் வழுவமைக்கின்றவாறு மேலே காண்க. இறைச்சியாவது - உள்ளப்பொருள் ஒன்றனுள்ளே கொள்ளக் கிடக்குங் கருப்பொருணோச்சி. அது "இறைச்சி தானே பொருட்புறத் ததுவே" என்னு மிவ்வியற் சூத்திரத்தா னுணர்க. ஈண்டுக் கூறும் வழுவமைதியெல்லாம் அகப்பொருட்கே யுரியவென்ப துணர்க.

மெய்ப்பாட்டியல்— இவ்வோத்து மெய்ப்பாடென்பன சில பொருளுணர்த்தினமையின், அப்பெயர்த்தாயிற்று. மெய்ப்பாடென்பது - பொருட்பாடு. அஃதாவது உலகத்தார் உள்ளநிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோராற்றான் வெளிப்படுதல். மேலையோத்துக்களுட் கூறப்படும் பொருள்கட்கும் பொருளோத்துள் "ஒப்பு முருவும் வெறுப்பு மென்றா - கற்பு மேரு மெழிலு மென்றா - சாயலு நாணு மடனு மென்றா - நோயும் வேட்கையு நுகர்வு மென்றாங் - காவயின் வரூஉங் கிளவி யெல்லா - நாட்டிய மரபி னெஞ்சுகொளி னல்லது - காட்ட லாகாப் பொருள வென்ப" எனக் கூறியவற்றிற்கு மெல்லாம் பொதுவாகிய மனக்குறிப்பு இவையாகலான், இவை தம்மை வேறுகொண்டு ஓரினமாக்கி மெய்ப்பாட்டியலென வைத்தமையால், எல்லாவற்றினும் இவ்வியல் வியைபுடைத்தென்ப தறிக.

இம்மெய்ப்பாடு நாடகநூலாசிரியர்க்கு விரியான் முப்பானிரண்டாயும், வகையாற் பதினாறாயும், தொகையா னெட்டாயும், நடக்கும். ஒன்பது சுவையுள் உருத்திர மொழிந்த வீரம், அச்சம், வியப்பு, இழிப்பு, காமம், அவலம், நகை, நடுவுநிலையென்னு மெட்டினையுஞ் சுவைக்கப்படும் பொருளும், அதனை நுகர்தற்குரியவாகிய பொறியுணர்வும், அது மனத்துப்பட்டவழி ஆண்டு நிகழுங் குறிப்பும், குறிப்புப் பிறந்தக்கடை உள்ளத்தின் வேறுபாடாகிய கண்ணீரரும்புதன் மெய்ம்மயிர்சிலிர்த்தன் முதலாக உடம்பின்கட் படுஞ் சத்துவங்களுமென நான்காக்கி, அவ்வெட்டனோடு முறழ மெய்ப்பாடு முப்பத்திரண்டாம். சத்துவமெனினும் விறலெனினு மொக்கும். வேம்பு முதலிய சுவைக்கப்படும் பொருளு நாமுதலாயின பொறியும் வேறுவேறு நின்றவழிச் சுவை பிறவாமையானும், இவ்விரண்டுங் கூடியவழிச் சுவை பிறத்தலானும் அவை பதினாறும் அவ்வொருமைப்பாட்டானே யெட்டெனப்படும். இனிக் குறிப்புஞ் சத்துவமு மொன்றையொன்றி யுள்ளநிகழ்ச்சியு முடம்பின் வேறுபாடுமெனப் படுமாகலானும், உள்ளநிகழ்ச்சி சத்துவத் தானன்றி வெளிப்படாமையானும், அவ்வொருமைப்பாட்டானே அவை பதினாறு மெட்டெனப்படும். ஆகலின், அவை யிரெட்டுப் பதினாறுமெனப்படும். ஆசிரியர், இவை நாடகமகளி ராடலும் பாடலுங் கண்டுங் கேட்டுங் காமநுகரும் இன்பவிளையாட்டினுட் படுவனவாகலான், இவ்வழக்கு நூலில் ஆராயப்பட்டவென்பது பிறன்கோண் முற்கூறி, "நகையே யழுகை யிளிவரன் மருட்கை - யச்சம் பெருமிதம் வெகுளி யுவகையென் - றப்பா லெட்டே மெய்ப்பா டென்ப" வென்றதன்பிற் கூறினார். நகை - சிரிப்பு. அது முறுவலித்து நகுதலும், அளவே சிரித்தலும், பெருகச் சிரித்தலுமென மூன்றாம். அழுகை - அவலம். தானே யவலித்தலும் பிறரவலங்கண் டவலித்தலுமென இரண்டாம். இவற்றுள் ஒன்று கருணையெனவும், ஒன்று அவலமெனவும்பட்டு, சுவை யொன்பதாகலு முடைய. இளிவரல் - இழிப்பு. மருட்கை - வியப்பு அற்புதமெனினு மமையும். அச்சம் - பயம். பெருமிதம் - வீரம். வெகுளி - உருத்திரம். உவகை - மகிழ்ச்சி. இவை சுவையெனவும் வழங்கப்படும். இவ்வெட்டும் எள்ளன் முதலிய முப்பானிரண்டாயும், உடைமை யின்புறன் முதலாக வேறு முப்பத்திரண்டாயும் வரும். இவை யெல்லாம் அகத்திணைக்குப் பொதுவாகு மெய்ப்பாடுகளாம். இவையன்றிப் புதுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல் முதலிய மெய்ப்பாடுகள் பலவுள, அவையெல்லாங் களவியற் குச் சிறப்பாய் நிகழ்வனவாம். இம்மெய்ப்பாட்டுப் பொருள் நுண்ணாராய்ச்சியுணர்வுடையோர்க்கல்லது ஏனோர்க்குக் கூடாதென்பார், "கண்ணினுஞ் செவியினுந் திண்ணிதி னுணரு - முணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியி - னன்னயப் பொருள்கோ ளெண்ணருங் குரைத்தே" என்றோதினார். மற்று மனத்து நிகழ்ந்த மெய்ப்பாட்டினைக் கண்ணுஞ் செவியானு முணரவேண்டுவ தென்றதென்னெனின்,— மனநிகழ்ச்சி பற்றி மெய்ப்பாடு பிறந்தவழி, அதுபற்றி முகம் வேறுபடுதலு முரை வேறுபடுதலு முடைமையின், அவற்றினைக் கண்ணானுஞ் செவியானு முணர்ந்துகோடலே அவ்வத் துறைபோயினார்க் காற்றலாகலின், அங்ஙனங் கூறினா கருத்தென்றுணர்க.

உவமவியல்— உவமமுணர்த்துதலின், இவ்வோத் துவமவியலென்னும் பெயர்த்தாயிற்று. உவமமென்பது— ஒருபொருளோ டொருபொருளை யொப்பித்துரைத்தல். மற்று அகம் புறமென்பனவற்றுள் இஃது யாதாகுங்கொலெனின்,— அவ்விரண்டுமாம்; மெய்ப்பாடுபோல. என்னை? "உவமப் பொருளி னுற்ற துணரும் - தெளிமருங் குளவே திறத்திய லான" என்றாராகலின். இன் ஆனின்பொருளில் வந்தது. என்றது - உவ

மந்திரனை உவமிக்கப்படும் பொருட் குற்றெல்லாம் அறிந்து தெளியும் பகுதியுள; அதனுணிப்பப்படும் பொருட்டிறம் பலவகை யிலக்கணமுடைய வாதலா னென்ற வாறு. அப்பகுதிகடாம் - உவமான வடைக்கு உவமேயவடை குறைந்து வருவன வும், யாது மடையின்றி வருவனவுமாம். அங்ஙனம் வருங்கால், அவற்றிற்கும் உவமைப் பொருளை தெளிமருங்காமெனவும், வாழாதே யுவமஞ்செய் துறறதுணர்த்தாத வழியும் அதுவே தெளிமருங்காமெனவும், இனனோரனை கொள்க. உதாரணம— "களவுடம் படுநரிற் கவிழ்ந்து நிலங் கிளையா" என்றவழிக் கண்டோர்க்கெல்லாம் பெரு நகையாகக் களவுசெய்தாரிற் கவிழ்ந்து நிலங் கிளையாவென உற்றதுணரக் கூறிற்றிலனு யினும், கையொடுபட்ட களவுடையார்போல நின்றுள என்னு முவமைப்பொருளானே எள்ளுநற பொருடோன்றி நகை புலப்படுவதாயிற்று. ஈண்டகப்பொருள உவமம்பற் றித் தெளிமருங் குளதாயிற்றெனபது. "சாறுதலைக் கொண்டென - பெண்ணீற் றுற் றென" வெனனும புறப்பாட்டினுள், உவமைப் பொருளாகிய போழ்தூண் டூசிக்குப் பல வடை கூறி அதனோடுவமிக்கப்படும் போர்த்தொழிலினை யாதுமோ ரடையின்றி வாளா கூறினானாயினும், உவமைப்பொருளானே போர்த்தொழிற் குற்றதும் உணரக் கூறினா னாம். என்னை? உண்டாடுங் கொண்டையு முரணொடு நோக்கி மறுத்தலு முதலிய வுள் ளக் கருத்தினானே ஒருகணத்தினுள்ளே பலவேந்தரை யொருங்கு வேறற்கு விரைகின் றது போர்த்தொழிலெனபது தெளிமருங்குளதா மாதலினெனக. ஈண்டுப் புறப்பொ ருள உவமம்பற்றித் தெளிமருங் குளதாயிற்றெனபது. இதற்கு ஞெகிழ்ந்த நியாய நூலார், அளவை காண்டல் கருதலுரை அபாவம் பொருள் ஒப்பாறென றங்ஙன முவ மையு மளவையு ளடக்கி ஓதுவாராயிற்றென றுணர்க. பொருள - அருத்தாபத்தி. உவ மம் உவமானம் உவமை ஒப்பெனபன வொருபொருட் கிளவி. இவ்வாறு புலனெறி வழக்குப்பற்றியன்றி மற்றிவ் விருதிலைப்பொருளும் உவமம்பற்றி வழக்கினுள் அறியப் படுதலானும் உவமம் பற்றியும் பொருள கூறுகின்ற ராசிரியரெனக் கொள்க. இங்ங னம் உவமத்தானும் புலப்பாடே கூறுதலின், மேற் பொருள் புலப்பாடு கூறிய மெய்ப் பாட்டியலின் பின்னர் இது வைக்கப்பட்டது. உவமத்தாற் பொருள் புலப்பட அறித லாவது "ஆபோலும் ஆமா" என்றக்கால், ஆமா கண்டறியாதான் காட்டுட் போவுழி எதிர்ப்பட்டது கண்டுழி, "ஆபோலும் ஆமா" என்னு முவமைபற்றி இது ஆமாவென றுணர்தலாம்.

"வினைபயன் மெய்யுரு வென்ற நான்கே - வகைபெற வந்த வுவமத் தோற் றம்." இவ்வுவமம் வினையுவமம் பயனுவமம் மெய்யுவமம் உருவுவமமென நால்வகைப் படும். மெய் - பிழம்பு. உரு - நிறம். புலியன்னமறவ னெனபது வினையுவமம், அது பாயுமாறே பாயுமெனனுந் தொழில்பற்றி யொப்பித்தமையின். மாரியன்ன வண்கை யெனபது பயனுவமம், மாரியான் விளைக்கும் பொருளும வண்கையாற் பெறும் பொருளு மொத்தலின. துடியிடை யெனபது மெய்யுவமம், அலகுளு மாக முமகன்றுகாட்ட வஃகிநதோனறு மருங்கு துடியோ டொத்தலின. பொன்மேனி யெனபதுருவுவமம், பொனனினகட் கிடந்த மஞ்சணிறத்தோடு மேனியின்கட் கிட நத நிறமொத்தலின். இவை நானகும இங்ஙன மொரோ வொன்றே யன்றி விரவி யும் வரும. இந்நான்குஞ் சிறப்பு நலன் காதல் வலியென்னு நான்கு நிலைக்களமாக வும், கிழக்கிடு பொருணிலைக் களமாகவும் பிறக்கும். கிழக்கிடு பொருளென்பது - கீழ் படுக்கப்படும் பொருள். இங்ஙன முவமஞ்செய்யுங்கால், முதலொடு முதலுஞ் சினை

யொடு சினையும் முதலொடு சினையுஞ் சினையொடு முதலும் உவமஞ்செய்யப்படும். இவை விரியுவமமுந் தொகையுவமமுமாம். பவளம்போற் செந்துவர்வாய் இதுசுட்டிக்கூறலின் விரியுவமமாம். பவளவாய். இது சுட்டிக்கூறாமையிற் றொகையுவமமாம். இன்னு மித்திறத்தன பலவாம்.

உவமத்தினையும் உவமிக்கப்படும் பொருளினையும் ஒப்பிக்குங்கால் இடைவரு முவமவுருபு பலவாம். "அன்னதாம், அன்ன வேய்ப்ப வுறழ வொப்ப - வென்ன மான வென்றவை யெனாஅ - வொன்ற வொடுங்க வொட்ட வாங்க வென்ற வியப்ப வென்றவை யெனாஅ - வெள்ள விழைய விறப்ப நிகர்ப்பக் - கள்ளக் கடுப்ப வாங்கவை யெனாஅக் - காய்ப்ப மதிப்பத் தகைய மருள - மாற்ற மறுப்ப வாங்கவை யெனாஅப் - புல்லப் பொருவப் பொற்பப் போல - வெல்ல வீழ வாங்கவை யெனாஅ - நாட நளிய நடுங்க நந்த - வோட்டப் புரைய வென்றவை யெனாஅ - வாறா றவையு மன்ன பிறவுங் - கூறுங் காலைப் பல்குறிப் பினவே" என்னு மியல்பிற் சூத்திரத்தா னவையறிக. பிறவு மென்பதனானே, சேர, நோக்க, துணைப்ப, மலைய, அர, அமர, அனைய, ஏர, ஏய்ப்ப, செத்து, அற்று, செழுவ வென்றற்றொடக்கத்தன கொள்க. இன்னும், "கொளுநற்றொதெய்வம்" என்றற்றொடக்கத்தன ஆண்டாண்டு உவமவுருபின் பொருள்பட வருவன வெல்லாங் கொள்க.

இவ்வுவமம் உள்ளுறையுவமமும் ஏனையுவமமுமென இரண்டாம். அது "உள்ளுறை யுவம மேனை யுவம மெனத் [illegible] திணையுணர் வகையே" என்னு மகத்திணையியற் சூத்திரத்தா னுணர்க. [illegible]றையுவமமாவது 'உள்ளுறுத் திதனொ டொத்துப்பொருண் முடிகென வுள்ளுறுத் திறுப்ப துள்ளுறை யுவமம்' என்னு மகத்திணையியற் சூத்திரத்தா னுணர்க. இ[illegible]ன புலவன் றான் கருதியது வெளிப்படக் கூறாதவழியுங் கேட்டோர் இவன் கருதியபொருள் இதுவென் றாராய்ந்து கோடற்குக் கருவியாகிய சில சொற்கிடப்பச் செய்யுள் செய்தல் வேண்டுமென்பது கருத்தாயிற்று. அது "வீங்குநீ ரவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட - ஞாங்கர் மலர்சூழ்தந் தூர்புகுந்த வரிவண்டு - ஓங்குயர் எழில்யானைக் கனைகடாங் கமழ்நாற்ற மாங்கவை விருந்தாற்றப் பகலல்கிக் கங்குலான் - வீங்கிறை வடிக்கொள் வீழுநர்ப் புணர்ந்தவர் - தேங்கமழ் கதுப்பினுள் அரும்பவிழ் நறுமுல்லை பாய்ந்தூதிப் படர்தீர்ந்து பண்டுதா மரீஇய - பூம்பொய்கை மறந்துள்ளாப் புனலணி நல்லூர" என்னும் மருதக்கலியுள், வீங்குநீர் பரத்தையர் சேரியாகவும், அதன்கண் அவிழ்ந்த நீலப்பூக் காமச்செவ்வி நிகழும் பரத்தையாகவும், பகர்பவர் பரத்தையரைத் தேர்ந்தறிந்துகொண்டுவரும் பாணர் முதலிய வாயில்களாகவும், அம்மலரைச் சூழ்ந்த வண்டு தலைவனாகவும், யானைக்கடாத்தினை ஆண்டுறைந்த வண்டுகள் வந்தவண்டிற்கு விருந்தாற்றுதல் பகற்பொழுது புணர்கின்ற சேரிப்பரத்தையர் தந்நலத்தினைத் தலைவனை நுகர்வித்தலாகவும், கங்குலின் வண்டு முல்லையை யூதுதல் பரத்தையருடன் இரவு துயிலுதலாகவும், பண்டு மருவிய பொய்கையை மறந்தது தலைவியை மறத்தலாகவும், பொருடந்து இப்புலப்படக் கூறிய கருப்பொருள்கள் புலப்படக்கூறாத மருதத்திணைப் பொருட்கு உவமமாய்க் கேட்டோருள்ளத்தே விளங்கி நின்றவாறு காண்க. இனிப் பவளவாய் முதலியவாக எண்ணிக் கூறுவனவெல்லாம் ஏனை யுவமமாம். அகத்திணைப் பொருளுணர்ச்சிக் குபகார நோக்கி யகத்திணை யியலுள் இவை யிரண்டும் வாங்கிக் கூறப்பட்டன. ஆயினும், இவ்வியற்பொருளாகவே கொண்டுரைக்கப்படுமென் றுணர்க.

செய்யுளியல்— செய்யுளிலக்கண முணர்த்தினமையால், இது அப்பெயர்த்தாயிற்று. செய்யுள் - செட்டை. உள் - தொழிற்பெயர் விகுதி. கடவுள் விக்குளென் புழிப்போல. மற்றிது அவ்விலக்கணத்திற்குத் தொழிலாகுபெயராயிற்று. எழுத்துஞ் செய்கை பெறுமெனினும் அசையுஞ் சீரும் அடியுமுதலிய செய்கை விகற்பத்தால் அணி பெறப் பொருட்கிடனாக இயற்றப்படுஞ் சிறப்புடைமையாகலின் செய்யுளெனப்பட்டது. எழுத்ததிகாரத்துஞ் சொல்லதிகாரத்தும் வழக்கிற்குஞ் செய்யுட்கும் வேண்டுவன விராயக் கூறிப், பொருளதிகாரத்துள்ளும் இதன்முன்னையும் பெரும்பான்மையும் வழக்கிற்குஞ் சிறுபான்மை செய்யுட்கும் வேண்டுவன கூறிவந்த வாசிரியர், அப்பகுதிச் செய்யுளிலக்கண மெல்லாம் இவ்வோத்தினகட் டொகுத்துக் கூறுகின்றார். ஆகலின், மேற்கூறிப்போந்த வோத்துக்களோடு இதற்கியைபுடைமை யாறு தெளிக

"மாத்திரை யெழுத்திய லசைவகை யெனாஅ - யாத்த சீரே யடியாப் பெனாஅ - மரபே தூக்கே தொடைவகை யெனாஅ - நோக்கே பாவே யளவிய லெனாஅத் - திணையே கைகோள் கூற்றுவகை யெனாஅக் - கேட்போர் களனே காலவகை யெனாஅப் - பயனே மெய்ப்பா டெச்சவகை யெனாஅ - முன்னம் பொருளே துறைவகை யெனாஅ - மாட்டே வண்ணமோ டியாப்பிய லவகையின் - ஆறுதலை யிட்ட வந்நா லைந்தும் - அம்மை யழகு தொன்மை தோலே - விருந்தே யியைபே புலனே யிழைபெனாஅப் - பொருந்தக் கூறிய வெட்டொடுந் தொகைஇ - நல்லிசைப் புலவர் செய்யு ளுறுப்பென - வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே." செய்யுட்கு - மாத்திரையும், எழுத்தியல்வகையும், அசைவகையும், யாத்தசீரும், அடியும், யாப்பும், மரபும், தூக்கும், தொடையும், நோக்கும், பாவும், அளவும், திணையும், கைகோளும், கூற்றுவகையும், கேட்போரும், களனும், காலவகையும், பயனும், மெய்ப்பாடும், எச்சவகையும், முன்னமும், பொருளும், துறைவகையும், மாட்டும், வண்ணமுமென் றிருபத்தாறுறுப்புக்களும், மற்று அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபென்னு மெண்வகை வனப்புப்பும், உடைத்தாய் நடப்பதாம்.

மாத்திரையென்பது— எழுத்துக்கோதிய மாத்திரைகளை விராயச் செய்யுள் செய்யுமளவு. அது "மாத்திரை யளவும்" என மேற்கிளக்கத் தோன்றுமாறுபற்றி யுணரப்படும். எழுத்தியல்வகையென்பது— மேற்கூறிய வெழுத்துக்களைச் செய்யுட்கேற்ப வியற்றிக்கொள்ளுங் கூறுபாடு. அசைவகையென்பது— அவ்வெழுத்தியல்வகையா லியற்றப்படும் அசைக்கூறுபாடு. அவை இயலசையு முரியசையுமென விரண்டாம். இயற்கையா லியறலின் இயலசையெனவும், அவை செய்யுந் தொழில் செய்தற்குரியவாகலான் உரியசையெனவும், காரணப்பெயராயின. யாத்தசீரென்பது— பொருள் பலபடத் தொடர்ந்து நிற்குஞ் சீரென்றவாறு. எனவே, அசை பலதொடர்ந்து சீராங்கால் அவ்வசையுந் தத்தம் வகையாற் பொருள்பெற்று நிற்றலும் அவ்வாறன்றிச் சொன்முழுது மொருசொல்லாங்கா லசை பொருள்பெறாது நிற்றலு மடங்கின. தே மாவென்று அசை வேறுபொருள் பெற்றன. சாத்தனென்று பொருள் வேறுபடாது நின்ற வசையாற் சீர் யாத்தது நின்றது. அடியென்பது— அச்சீரிரண்டும் பலவுந் தொடர்ந்ததாவதோர் உறுப்பு. யாப்பென்பது— அவ்வடிதோறும் பொருள்பெறச் செய்வதோர் செய்கை. மரபென்பது— காலமு மிடனும்பற்றி வழக்குத் திரிந்தக்காலுந் திரிந்தவாற்றிற் சேறப் வழுப்படாமைச் செய்வதோர் முறைமை. மற்றுச் சொல்லோத்தினுட் கூறிய மரபிற்கு மரபியலு

னுரைப்பனவற்றிற்கு மிதற்கும் வேற்றுமை யென்னையெனின்,— இது செய்யுட்கே யுரித்து; அவை வழக்கிற்குஞ் செய்யுட்கும் பொதுவென்பது. தூக்கென்பது— பாக்களைத் துணித்து நிறுத்தல். தொடைவகையென்பது— தொடைப்பகுதி பலவுமென்றவாறு. அவை வரையறையுடையனவும் வரையறையில்லனவுமென விருவகைய. இப்பகுதியெல்லா மடியாற் கோடலின், அடிக்கு மிஃதொக்கும். நோக்கென்பது— மாத்திரை முதலாகிய வுறுப்புக்களைக் கேட்போர்க்கு நோக்குப்படச் செய்தல். பாவென்பது— சேட்புலத்திருந்தக்காலு மொருவ னெழுத்துஞ் சொல்லுந் தெரியாமற் பாடமோதுங்கால் அவன் சொல்கின்ற செய்யுளை விகற்பித்தின்ன செய்யுளென் றுணர்தற் கேதுவாகிப் பரந்துபட்டுச் செல்வதோ ரோசை. அளவியலென்பது— அப்பா வரையறை. திணையென்பது— அகம்புறமென் றறியச்செய்தல். கைகோளென்பது— அவ்வத்திணையொழுக்க விகற்ப மறியச்செய்தல். அது களவுங் கற்புமென் றிரண்டாம். கூற்றுவகையென்பது— அச்செய்யுள் கேட்டாரை இது சொல்கின்றா ரின்னாரென வுணர்வித்தல். கேட்போரென்பது— இன்னார்க்குச் சொல்கின்ற திதுவெனத் தெரித்தல். களனென்பது— முல்லை குறிஞ்சி முதலாயினவும் இரவுக்குறி பகற்குறி முதலாயினவு முணரச்செய்தல். மற்றுத் தன்மை முன்னிலை படர்க்கையுமாம். காலவகையென்பது— பெரும்பொழுது சிறுபொழுதென்னுங் காலப்பகுதி முதலாயின. பயனென்பது— சொல்லிய பொருளாற் பிறிதொன்று பயப்பச்செய்தல். மெய்ப்பாடென்பது— சொற் கேட்டோர்க்குப் பொருள் கண்கூடாதல். எச்சவகையென்பது— சொல்லப்படா மொழிகளைக் குறித்துக்கொள்ளச் செய்தல். அது கூற்றினுங் குறிப்பினும் வருதலின், வகையென்றார். முன்னமென்பது— உயர்ந்தோரு மிழிந்தோரு மொத்தோருந் தத்தம் வகையா னுரைப்பச் சொல்லுதற்குக் கருத்துப்படச் செய்தல். பொருளென்பது— புலவன் றான் றோற்றிக்கொண்டு செய்வதோர் பொருண்மை. துறைவகையென்பது— முதலுங் கருவு முறைபிறழ வந்தாலு மிஃதிதன்பாற்படுமென் றொருதுறைப்படுத்தற் கேதுவாகியதோர் கருவி யச்செய்யுட் குளதாகச் செய்தல். அவையும் பலவாதலின் வகையென்றார். மாட்டென்பது— பலவேறு பரப்பிற்றாயினு மன்றாயினு நின்றதனொடு வந்ததனை யொருதொடர்கொளீஇ முடித்துக்கொள்ளச் செய்தல். வண்ணமென்பது— ஒருபாவின்க ணிகழும் ஓசை விகற்பம். இவை யாப்பிற் கின்றியமையாத விலக்கணப் பகுதிகளாகலான் வேறு விதந்தோதினார்.

அம்மையென்பது - குணப்பெயர். அமைதிப்பட்டு நிற்றலி னம்மையென்றாயிற்று. அழகு - திரிசொற் பயிலாது செய்யுளிற் பயின்றுவரு மொழிகளாற் சீர்த்துப் பொலிவுபட யாக்கும் பொருள் வனப்பு. அவையாவன,— நெடுந்தொகை முதலாகிய தொகை யெட்டுமென்றவாறு. தொன்மை யிலக்கணந் தமிழின் றெய்வப்பழமை மரபியலு ளுரைத்தாம்; கடைப்பிடிக்க. தோல் - இழுமென்மொழியா னறம் பொருளின்பம் வீடென்னும் விழுமிய பொருள் பயப்பச் செய்யுஞ் செய்யுளும் ஆசிரியப்பாட்டா னொருகதைமேற் றொடுக்கப்படுஞ் செய்யுளுமாம். அவை செய்தகாலத்துள்ளன காணப்பட்டில. பிற்காலத் தவ்வாறு வந்தன சிந்தாமணி முதலியன. விருந்து - புதிதாகத் தொடுக்கப்படுந் தொடர்நிலைச் செய்யுள். இயைபு - ஞணநமனயரலவழள வென்னும் பதினொரு புள்ளியீற்றினு ளொன்றனை யிறுதியாகக்கொண்டு பொருட்டொடராகவுஞ் சொற்றொடராகவுஞ் செய்யுஞ் செய்யுள். அவை சீத்தலைச்சாத்தனாராற் செய்யப்பட்ட மணிமேகலையுங் கொங்கவேளாராற் செய்யப்பட்ட சிலப்பதிகாரமும் போல்வன.

அவை னகாரவீற்றுன் இற்றன. புலன் - சேரிமொழியாற் செவ்விதாகக் கூறி யாராய்ந்து காணுமைப் பொருட்டொடராகித் தொடுக்கச் செய்யுஞ் செய்யுள். அவை விளக்கத்தார் கூத்துமுதலாகிய நாடகச்செய்யுளாகிய வெண்டுறைச் செய்யுள் போல்வன. இழைபு - வல்லெழுத்துப் பயிலாது இருசீரடிமுதலாக வெழுசீரடியளவும் வந்த வடியைந்தனையு மொப்பித்து நெட்டெழுத்து மந்நெட்டெழுத்துப்போ லோசையெழு மெல்லெழுத்தும் லகார ளகாரங்களுமுடைய சொல்லானே சேரிமொழியாற் செவ்விதிற் கிளந்து தோற்றல் வேண்டாது பொருள்பட்டுச் செல்லச் செய்யுஞ் செய்யுள். அவையாவன— கலியும் பரிபாடலும் போலும் இசைப்பாட்டாகிய செந்துறை மார்க்கத்தன வென்பது.

மரபியல்— "மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பிற் - பார்ப்பும் பறழுங் குட்டியுங் குருளையுங் - கன்றும் பிள்ளையு மகவு மறியுமென் - றொன்பதுங் குழவியோ டிளமைப் பெயரே." மரபென்ற பொருண்மை யென்னையெனின்,— கிளவியாக்கத்து மரபென்று வரையறுத்தோதப்பட்டனவுஞ் செய்யுளியலுண் மரபென்று வரையறுத்தோதப்பட்டனவு மன்றி, இருதிணைப் பொருட்கு முரிய இளமையு மாண்மையும் பெண்மையும் பற்றிய வரலாற்று முறைமையும், உயர்திணை நான்குசாதியும் பற்றிய மரபும், அஃறிணைப் புல்லு மரனும் பற்றிய மரபும், அவை பற்றிவரும் உலகியன்மரபும், நூன்மரபுமென இவையெல்லா மரபெனப் படுமென்பது. மற்றுப் பொருள்களின் இளமை பற்றிவரு மரபு கூறினார் மூப்புப்பற்றிவரு மரபு கூறாரோவெனின்,— அது வரையறை யின்மையிற் கூறாரென்பது. மற்று மேலையோத்தினோடு இவ்வோத்திடை இயைபென்னையெனின்,— முன்னர் வழக்கிலக்கணங் கூறி அதன்பின் செய்யுளிலக்கணஞ் செய்யுளியலுட் கூறினார். அவ்விரண்டற்கும் பொதுவாகிய மரபு ஈண்டுக் கூறினமையின் இது செய்யுளியலோடு இயைபுடைத்தாயிற்று. மற்று வழக்கிலக்கணஞ் செய்யுட்கும் பொதுவாதலின், இங்ஙன மிரண்டற்கும் பொதுவாகிய மரபினையுஞ் செய்யுளியலின் முன்வைக்கவெனின்,— அவ்வாறு வழக்குஞ் செய்யுளுமென்னும் இரண்டுமல்லாத நூலிற்கும் ஈண்டு மரபு கூறினமையின், இது செய்யுளியலின்பின் வைக்கப்பட்டது. இவற்றை யெல்லா மேல் வரையறுத்து இன்னபொருட்கு இன்னபெயர் உரித்தென்பது சொல்லுவர். மாற்றருஞ் சிறப்பி னென்றதனானே இவை ஒருதலையாகத் தத்தமரபிற் பிறழாமற் செய்யுள் செய்யப்படுமென்பதூஉம், ஈண்டுக் கூறுதனவாயின வழக்கொடுபட்ட மரபு பிறழினுஞ் செய்யு ளின்பம் படின் அவ்வாறு செய்கவென்பதூஉம், கூறியவாறாயிற்று.

பன்னிருபடல முதலியன.

பன்னிருபடலம் அருந்தவக்கொள்கை அகத்தியமுனிவர் மாணாக்கரான தொல்காப்பியமுனிவர் முதலிய பன்னிருவரானு மியற்றப்பட்டதொரு புறப்பொரு ளிலக்கணநூல். இந்நூல் புறப்பொரு ளிலக்கணத்தினை வெட்சிப்படல முதலிய பன்னிருபடலங்களாகப் பகுத்தோதுதலின், அப்பெயர்த்தாயிற்று. இந்நூல் அகத்தியந் தொல்காப்பியங்களில் அகம் புறமெனப் பகுத்த பொருளிலக்கணங்களைத் தம்முள் வேறுபாடு நோக்கி, அகம், அகப்புறம், புறம், புறப்புறமென நான்காகப் பகுத்துப் புறப்பொருளினை மிக விரித்தோதும். இயற்கைநிலமான குறிஞ்சி முல்லை மருத நெய்தலும், செயற்கைநிலமான பாலையுமென்னு மைந்து மகமாம். கைக்கிளை பெருந்திணையென்னு மிரண்டு மவற்றின் புறமாயினைந்து நிகழ்தலி னகப்புறமாம். "மக்க ணுதலிய வகனைந் திணையுஞ்

கட்டி யொருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்" என்றகத்திணையியலு ளோதுதலின், அவ்வாறு பாகுபாடு செய்தல் ஆசிரியர் தொல்காப்பியனார்க்கு முடம்பாடேயாயிற்று. என்னை? ஐந்திணையினையு மகனெனவே யொழிந்த கைக்கிளையும் பெருந்திணையு மவற்றின் புறமா யகப்புறமாமென்பது தானே போதருதலினென்க. இனி அகத்திணைக்கண் முதல் கரு வுரிப்பொருள் கூறிய குறிஞ்சி முல்லை மருத நெய்த லென்பனவற்றிற்கு வெட்சி வஞ்சி யுழிஞை தும்பையென்பன அவ்விலக்கணங்களோ டொருபுடை யொப்புமைபற்றிச் சார்புடையனவாய்ப் புறமாய் நிகழ்தலிற் புறமாம். இனித் தமக்கென நிலனுடையவாகிய குறிஞ்சி முல்லை மருத நெய்தல்களைச் சார்ந்து நிகழு நிலனில்லாப் பாலை பெருந்திணை கைக்கிளை யென்பனவற்றிற்கு வாகையுங் காஞ்சியும் பாடாண்டிணையும் பெற்ற விலக்கணத்தோ டொருபுடை யொப்புமைபற்றிச் சார்புடையவாய் நிகழ்தலின், புறப்புறமாம். ஆசிரியர் சிவஞானயோகிகள், சித்தாந்தசைவாசாரியர் "அகச்சமயம் புறச்சமய" மென விரண்டாகப் பகுத்தனவற்றைத் தம்முள் வேறுபாடு நோக்கி, "அகச்சமயம், அகப்புறச்சமயம், புறச்சமயம், புறப்புறச்சமய" மென நான்காகப் பகுத்து, அவ்வாறு பகுத்தன் மரபாதற்குப் பன்னிருபடலத்திற் பொருளியலபினை, அகம், அகப்புறம், புறம், புறப்புறமென் றிங்ஙன நான்காகப் பகுத்தோதியவாற்றினையே தமக்கு அடிப்பாடாகக் காட்டியருளினர்.

இனி நச்சினார்க்கினியர் "கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்-முற்படக் கிளந்த வெழுதிணை யென்ப" என்னு மகத்திணையியற் சூத்திரத்து 'முற்படக் கிளந்த' வென வெடுத்தலோசையாற் கூறவே பிற்படக் கிளந்த வெழுதிணை யுளவாயின: அவை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்டிணையென வரும். ஒழிந்தோர் பன்னிரண் டென்றாராதலின் புறத்திணை யேழென்றதென்னையெனின்,— அகங்கை யிரண்டுடையார்க்குப் புறங்கை நான்காகா திரண்டாயவாறுபோல அகத்திணை யேழற்குப் புறத்திணை யேழென்றலே பொருந்த முடைத்தாயிற்று. எனவே, அகத்திணைக்குப் புறத்திணை அவ்வந்நிலத்து மக்கள் வகையாற் பிறந்த செய்கை வேற்றுமையாதலின், ஒன்று ஒன்றற்கு இன்றியமையாதவா றாயிற்று. கரந்தை அவ்வேழற்கும் பொதுவாகிய திணைவழுவாதலின் வேறு திணையாகாது" எ-ம், "வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவி-னாதந் தோம்பன் மேவற் றாகும்" என்னும் புறத்திணையியற் சூத்திரத்து "அடித்துக்கோடலு மீட்டுக்கோடலும் வெட்சியாயின; மீட்டல் கரந்தையென்பராலெனின,— அதனையும் இச்சூத்திரத்தானும் வருகின்ற சூத்திரத்தானும் வெட்சியென்றே ஆசிரியன் கொண்டான; மீட்டலை வெட்சிக் கரந்தையெனபாரு முளர், மீட்டலைக் கரந்தையெனபார்க்கு அது திணையாயிற் குறிஞ்சிக்குப் புறனாகாமை யுணர்க" எ-ம், "காஞ்சி தானே பெருந்திணைப் புறனே" என்னும் புறத்திணையியற் சூத்திரத்துக் "கைக்கிளை முதற் பெருந்திணை யிறுவா யேழனையு மகமென்றலின், அவ்வகத்திற்கு இது புறனாவதன்றிப் புறப்புறமென்ற லாகாமை யுணர்க" எ-ம், கூற்றமுகத்தானே, அங்ஙனம் பகுத்தோதுதன் மரபுநிலை திரிபாமென்பர். ஆசிரியர் சிவஞானயோகிகள் "அகம் புறமெனப் பகுத்தனவற்றைத் தம்முள் வேறுபாடு நோக்கி அகம், அகப்புறம், புறம், புறப்புறமென நான்காகப் பகுத்தலும், வெட்சித்திணை உழிஞைத்திணைகளின் மறுதலை வினையை வேற்றுவினையாதலும் வேற்றுப்பூச் சூடுதலுமாகிய வேறுபாடுபற்றி வேறு திணையாக வைத்தெண்ணுதலும், இன்னோரன்ன பிறவும் பொருண்முடிபு வேறுபடாமையின் மரபுநிலை திரியாவாயின"

என்றும், இஃதறியார் "தொல்காப்பியமும் பன்னிருபடலமுந் தம்முண் முரணுவனவா கக் கருதி அவற்று ளொருநூலையேபற்றி மற்றொன்றனை யிகழ்வா" என்றும், பாயிர விருத்தியினுஞ் சிவஞானமாபாடியத்தும் யாப்புறுத்தோதினார்.

இனிப் பல்காப்பியம் பல்காயம் காக்கைபாடினியமென்பன பல்காப்பியனார் முத லியோராற் செய்யப்பட்ட யாப்பிலக்கண நூல்கள். அற்றேல், தொல்காப்பியங் கிடப் பப் பல்காப்பியனார் முதலியோர் நூல் செய்தது எற்றுக்கெனின்,— அவரும் அவர் செய்த வெழுத்துஞ் சொல்லும் பொருளு மெல்லாஞ் செய்திலர், செய்யுளிலக்கண மக த்தியத்துப் பரந்துகிடந்ததனைத் தொல்காப்பியனார் சுருங்கச் செய்தலின், அறிதற் கருமைநோக்கிப் பகுத்துக் கூறினாரெனக.

இனிப் பெருநாரை பெருங்குருகு இசைநுணுக்க முதலிய இசைத்தமிழிலக் கண நூல்களும், முறுவல் சயந்தம் குணநூல் செயிற்றிய முதலிய நாடகத்தமிழிலக்கண நூல்களும், மாபுராணம் பூதபுராண மென்பனவு மேலை இயற்றமிழ் நூல்க டோன்றிய காலத்துத் தோன்றியன. இவற்றுட் பல இக்காலத்து வழங்கக் காணாமையி னிறந்தன போலும். இனிப் பஞ்சபாரதீயம், இந்திரகாளியம், பஞ்சமரபு முதலிய விசைத்தமிழ் நூல்களும், கூத்தநூல், பரதம், தாளவகையோத்து, பரதசேனாபதீயம், மதிவாணர் நாடகத்தமிழ்நூல் முதலிய நாடகத்தமிழ்நூல்களுங் கடைச்சங்கத்தின் பிற்றை ஞான்று தோன்றியன வென்றறிக.

பிரயோகவிவேகநூலார் 'ஐந்திரநிறைந்த தொல்காப்பியன'' எனத் தொல்காப் பியப் பாயிரத்தின்கண் வருதலின், தொல்காப்பியத்திற்கு ஐந்திர வியாகரண முதனூ லாம்" என்றார். இன்னும், அவர் 'அகத்திய நிறைந்த தொல்காப்பியன' என்னாமையா னும், "கடிநிலையின்றே ஆசிரியற்க" எனப் பொதுப்பட வோதியதல்லது பெயரெடுத் தோதாமையானும், அதற்கு அதுவே பொருளெனக" என்றுங் கூறினார். ஆசிரியர் சிவஞானயோகிகள் பாயிரவிருத்தியுள் "நூலெனப் பொதுப்படக் கூறுது நிலத்தொடு முந்துநூலென விசேடித்தலின், செந்தமிழ் தோன்றுங்காலத் துடன்றோன்றிய நூல் அகத்தியமொன்றேயாகலானும், ஏனை நூல்களெல்லாம் அகத்தியத்தின்வழித் தோன்றி னவேயா மாதலானும், ஐந்திர நோக்கித் தொகுத்தாரெனின், தமிழ்மொழிப் புணர்ச்சிக் கட்படுஞ் செய்கைகளும், குறியீடுகளும், வினைக்குறிப்பு, வினைத்தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம் புறமெனனும் பொருட்பாகுபாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப்பாகுபாடுக ளும், அவற்றின் பகுதிகளும், வெண்பாமுதலிய செய்யுளிலக்கணமும், இன்னோரன்ன பிறவும், வடமொழியிற் பெறப்படாமையானும், இவையெல்லாந் தாமே படைத்துக் கொண்டு செய்தாரெனின், முந்துநூல் கண்டென்பதனோடு முரணுதலானும், முற்கா லத்து முதனூல் அகத்தியமென்பதூஉம் அதன்வழித்தாகிய தொல்காப்பியம் அதன் வழிநூலென்பதூஉந் துணியப்படும்" என்று நிறுத்தியும், "தொல்காப்பியனார் அகத்தி யனாரோடு மாறுகோடலின் அகத்தியத்தொடு பிறழவும் பிற்காலத்து வீழ்ந்தன சில முந்துநூல்கண்டு அவற்றின்வழி நூல் செய்தாரெனக் கொள்ளாமோவெனின்" என்று ஆசங்கித்து, "அஃது ஆன்றோர் வழக்கொடு மாறுகொள்வார் இக்காலத்துச் சொல்லி னும் அடிப்பட்ட சான்றோர் சொல்லாராகலிற் கொள்ளாம்" என்றும், "அல்லதூஉஞ்

கடைச்சங்கத்தாருட் களவியற் பொருள்கண்ட கணக்காயனார் மகனார் நக்கீரர் இடைச்சங்கத்தார்க்குங் கடைச்சங்கத்தார்க்கு நூலாயிற்றுத் தொல்காப்பியமென் றுரைசெய்தாராகலின் இடைச்சங்கமுதல் இன்றுகாறும் வழங்கிவருதலானும், அருந்தவக் கொள்கை அகத்தியனாரோடு மாறுகொண்டு நூல்செய்தாராயின் இவ்வாறு நிலைபெற்று வழங்காதாகலானும், "கூறிய குன்றினு முதனூல் கூட்டித் - தோமின் றுணர்தல் தொல்காப்பியன்ற - னாணை யின்றமி ழறிந்தோர்க்குக் கடனே" எனவும், "வீங்குகட லுடுத்த வியலகண் ஞாலத்துத் - தாங்கா நல்லிசைத் தமிழ்க்கு விளக்காகென - வானோ ரேத்தும் வாய்மொழிப் பல்புக - ழாசில் புலமை யகத்திய னென்னு - மருந்தவ முனிவ னாக்கிய முதனூல் - பொருந்தக் கற்றுப் புரைபப வுணர்ந்தோர் - நல்லிசை நிறுத்த தொல்காப்பியன்" எனவும், "மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத் - தென்மலை யிருந்த சீர்சான் முனிவரன் - றன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த - துன்னருஞ் சீர்த்தித் தொல்காப்பியன்முதற் - பன்னிரு புலவரும்" எனவும், எல்லாவாசிரியரும் அகத்தியனார்க்கு முதன் மாணாக்க ராயினாரென்பதுபற்றிய தொல்காப்பியனாரது பெருமைகூறி அகத்தியமே தொல்காப்பியத்திற்கு முதனூலெனக் கூறினாராகலானும், அகத்தியனாரோடு முரணிச் சபித்தாராயின், அதுபற்றிய பெருமை கூறாதும் அவ்வாசிரியருங் கூறுமையானும், அது வேதவழக்கொடு மான்றோர்வழக்கொடு மாறுகொள்வார் கூற்றேயாம்" என்றும், "அற்றேல் அகத்திய நிறைந்த தொல்காப்பியனென்னாது ஐந்திர நிறைந்த தொல்காப்பியனென்ற தென்னையெனின்" என்று ஆசங்கித்து, "அகத்திய நிறைந்தமை எல்லாரானுந் தெளியப்பட்டமையின் வடமொழியிலும் வல்லனாயினா னென்பது விளக்கிய அங்ஙனங் கூறினார்" என்றும், "இவ்வாறன்றி ஐந்திரத்தின்வழித் தோன்றிய நூலென்பது விளக்கிய 'ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்' என்றாரென்பாரை ஐந்திர நிறைந்த தொல்காப்பியனென [illegible] திருப்பவு முதனூல் கண்டெனக் கூறிய [illegible]" என்றும், மறுத்துப் போந்தார். அதனால், பிரயோகவிவேக நூலார் அ[illegible] போலியுரையாமென்பது துணிக. நச்சினார்க்கினியாரும் இதுவே துணிபாகன் மரபியலில் "வினையி னீங்கி விளங்கிய வறிவின் - முனைவன் கண்டது முதனூ லாகும்" என்னுஞ் சூத்திரத்திற்கு இங்ஙனங் கடாவிடைகளான் அவர் விளங்க விரித்துரைக்குமாறுபற்றி யுணர்க.

அற்றேல், நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் பாயிரவுரையில் தொல்காப்பியனார் தம்மாசிரியர் அகத்தியனாரோடு மாறுகொண்டு அவர் தம்மைச் சபித்தாரென்று கூறியதென்னையெனின், அவர், தொல்காப்பியனார், தம்மாசிரியராகிய அகத்தியனார்பால் முதலாய வன்புவழிபாட்டிற் றலைநின்று தலைசிறந்த பன்னிருவருட் டலைவராயினாரென்றும், தம்மாசிரியர் செய்த தமிழ் முதனூலாகிய அகத்தியத்தின்வழித்தாகத் தொல்காப்பியமென்னும் இலக்கணநூல் செய்தாரென்றும், பின்னர் மரபியலகத்து உரைவகுத்தாராகலின், பிறர்மதங்காட்டிக் களைதல் வேண்டி அங்ஙனங் கூறினாரென்று கொள்க.

இனி அது வேதவழக்கொடும் ஆன்றோர்வழக்கொடு மாறுகோளுறச் சிலர் அங்ஙனங் கட்டி நடத்திய போலியுரையென்று சிவஞானயோகிகள் நியாயவலியுரையாற் களைந்து ஒதுக்கினாராகவும், பதிப்புரைகாரர் அப்பொய்யுரை தம்பதிப்புரைக்குப் பொருந்தியவுரையென்று போலும் அதனையெடுத்துப் போற்றி அதுகொண்டு அகத்தியத்

திற்குச் சிறுமையுந் தொல்காப்பியத்திற்குப் பெருமையும் பேசிப் புரையாட்டயர்ந்தார். அவர் அப்பதிப்புரை, அகத்தியம் எல்லாநலமும் ஒருங்கெய்திச் சிறக்கும் இறைநூலொக்கு முத்தமிழ் முதனூலெனவும், தொல்காப்பியம் அதன் வழித்தாகத்தோன்றி நடைபெறும் வழிநூலெனவும், அது வேதவழக்கொடும் ஆனதோ வழக்கொடும் பொருந்தி இயலும் பட்டாங்கு வரலாறெனவும், மேலே நிறுத்திப்போந்த வலியுரைகளின் முன்னர் ஒருசிறுவரையேனு நிற்றலாற்றாது தூர ஓதுங்கி மாயுமென்பது கற்றாரெல்லாந் தெரிந்தென வுணர்வர். அதுகிடக்க. அவர் "தொல்காப்பியர் இட்டசாபத்தின் வலியினால் அகத்தியம் இறந்துபட்டது" என்று புதுவதாகவும் ஒன்று கற்பித்துப் புரையாட்டயர்ந்தார். அது புதுவதாதல் எதனாலெனின், தொல்காப்பியனார் அகத்தியனாரைச் "சுவர்க்கம் புகாப்பிர" என எதிர் சபித்தனரென வேதவழக்கொடு மாறுகோளுறுவார் ஆண்டுக் கூறினாராக, அவர் அதனை ஒழித்துத் தொல்காப்பியர் அகத்தியம் இறந்துபடக் கோபமிகுந்து சாபமொன் றிட்டனரென்று ஒன்று கட்டியுரைத்தார்; அதனாலென்க. அவர் தாம் அங்ஙனம் புதுவதாகக் கட்டிக் கூறிய பதிப்புரைக்கட் குற்றம் வருதல்கண்டு அது பரிகரிக்கவெண்ணி, "ஆசாரியர் வழிபாட்டிற் குறைவில்லாத திரணதூமாக்கினி அவ்வாறு சபிக்கற்பாலரோ" என்று வினாநிகழ்த்தி, "அதுவன்றே அவர் ஆசிரியரைச் சபிக்காது அவர்செய்த நூலைச் சபித்ததெனக்" என்றும், "சிஷ்யரது சாபத்தினை ஆசாரியர் தடுக்கும் வன்மையிலரோ" என்று தடை நிகழ்த்திச், "கடவுளர் இருடிகள் சாபத்தினைத் தடுக்கும் வன்மையிலரெனின்,—இது கடாவன்றென்று மறுக்க" என்றும், சில போலியாக்விடைகளுஞ் சாலவுந் தமபுல்லறிவு நிலையிட்டனர். ஆசிரியர் வழிபாட்டிற் றலைநின்ற தொல்காப்பியனார் குரவர்ப்பேணாமை நன்றிகோறலென்னும் உயர்திணைக் குற்றங்கட் படாரொருபோதுமென்றுணர்ந்து அகத்தியனாரைச் சபித்தல் செய்யாராயினரென்று அறிவுகொளுத்தி அறங்கரைந்தார், பின்னர்த் தமபிமானமீதூர்ந்து அறிவுகொன்று "அதுவன்றே அவர் ஆசிரியரைச் சபிக்காது அவர்செய்த நூலைச் சபித்தனர்" என்று மறுத்துரைத்தது, சிறுமகார்க்கு நகையினை விளைத்துமென்க. இது தானெடுத்துக்கொண்ட மேற்கோளைச் சாதிக்கமாட்டாமல் அதற்குக் கேடுவரப்பேசுதலென்னும் நிக்கிரகத்தானமென்க. இனி அகத்தியத்தினைச் சபித்தலும் அகத்தியனாரைச் சபித்தலொப்பத் தொல்காப்பியனார்க்குக் குரவர்ப்பேணாமையு நன்றிகோறலுமாம். என்னை? "பரமேசுரவாக்கியமாகிய வேதசிவாகம நிந்தை பரமேசுரநிந்தையையொப்பதோர் பதிபாதகமாகும்" என்றும், "அரசனீதி நீதிநூனிந்தை அரசனிந்தையையொப்பதோர் குற்றமாம்" என்றும், உண்மைநூல்க ளோதுதலினென்பது.

அவர் மாணாக்கராகிய தொல்காப்பியனார் இட்ட சாபத்தினை ஆசிரியராகிய அகத்தியனார் தடுக்கும் ஆற்றலாளராகாத தென்கொலோவென்று கடாநிகழ்த்தி, இருடிகள் சாபத்தினைக் கடவுளர் தடுக்கு மாற்றலுடையராகாமை கேட்டலின், அது கடாவன்றென்றார். அது மேற்கொண்டதனைச் சாதிக்கும் வியாத்தியுடைத்தாகாமையின் ஏதுப்போலியாம், இருடிகள் சாபத்தினைக் கடவுளர் தடுக்கும் ஆற்றலுடைய ரல்லராதல் யாண்டும் பிறழாது ஒருதலையாதல் செல்லாமையினென்க. அவர் அறவரு மாணாக்கருமாகிய தொல்காப்பியனார், அறவர்க்கு இறைவரும் ஆசிரியருமாகிய வகத்தியனாரைச் சபிக்கவஞ்சி அவர் நூலைச் சபித்தாரென்று மேற்கொண்டார்; அதனைச் சாதிக்க அவராசிரிய வழிபாடாகும் அறஞ்சிதைத்தற் கஞ்சுதலை ஏதுவாக்கினார்; ஆசிரியர் நூலை

சபித்தலும் ஆசிரியர்ச் சபித்தலொப்ப அவருக்குக் கேடுபயப்பதோர் மரபேயாமென்று அவ்வேதுவுக்குக் குற்றம்வந்துழி, அதனைவிட்டு, ஆசிரியர் மாணாக்கர் சாபத்தினைக் கடக்கமாட்டாராயினமை பொருந்துமென்று முன்னதற்கு மாறுறப் பின்னொரு மேற்கோள் கூறினார். அதனைச் சாதிக்க விருடிகள் சாபத்தினைக் கடவுளர் கடக்கு மாற்றலுடையராகாமையென்னு மியைபில பிறிதோ ரேதுக்கூறினார். அவை மேற்கோளுக்கு மறுதலைப்படப்பேசுதல், மேற்கோளை விட்டுவிடுதல், பிறிதொரு மேற்கோளைக் கூறுதல், தான் கூறிய வேதுவுக்குக் குற்றம்வந்துழி வேறோராற்றான் ஏதுக்கூறுதலென்னுந் தோல்வித்தானங்களாதலறிக. இனி அகத்தியனார் முனிவருந் தேவரும் வணங்கியேத்துந் தெய்வவாற்றல் பெரிதுடையராய் அவர்க்கெல்லாந் தலைவராய் விளங்கும் பெருமையுடையராகலின், அவர் அருளியும் வெகுண்டுங் கூறு மறைமொழிகள் இறைவன் அங்ஙனங் கூறும் அருட்சாப மறைமொழிகளொப்பத் தேவர் அசுரர் முனிவர் முதலாயினோர்க்கெல்லாம் ஆக்கக்கேடுகளைத் தப்பாது பயக்கு மாற்றலுடையனவாம். தேவர் முனிவர் முதலியோர் அவர்தம்மை வெகுண்டு கூறுஞ் சாபவுரைகள் காமனைக் கண்ணுதலிறைவனெதிர் வெந்து பொடியாய் அழிந்தமைபோல அவரெதிர் சத்திகெட்டழியும். அதுவேயுமன்றிக் காமன் அவ்விரிசடைக்கடவுள் அழல்விழிக்கிலக்காய் வெந்து பொடியாயினதுபோல அவரும் அகத்தியனார் சாபமறைமொழிக்கிலக்காய் ஆற்றல் சிதைந்து உபதிபெறாது கெடுவரென்றுந் துணிக. இவையெல்லாம் ஆய்ந்து துணிந்தன்றே சிவஞானயோகிகள் "அது வேதவழக்கோடும் ஆன்றோர்வழக்கோடும் மாறுகொள்வார் கூற்றேயாமென்று மறுக்க" என்று பாயிரவிருத்தியில் அங்ஙனம் ஆணைகூறுவராயினதூஉமென்று கடைப்பிடிக்க. மணமுசறபொருநான கறைமிடற்றிறைவன் நிறுத்திய வைதிகசைவ மெய்ந்நெறிவந்த செய்வப்பெற்றியாளர் தாரதம்மிய வரலாறு நல்லாசிரியரை வழிபட்டு நன்றுணரப்பெறாமையால் அவர் இவ்வாறெல்லாம் படைத்துக்கொண்டு கூறிய பழிமலைந்தாரென்றொழிக.

இனித் தொல்காப்பியனார் இயற்றமிழ் வழக்குநூல்போல அவரோடு ஒருசாலை மாணாக்கர்களாகிய மற்றைப் பதினொருவர் நூல்கள் இடைச்சங்கத்தார் தமிழாராய்ச்சிக்கு நூல்களாகாதவாறென்னையெனின்,—அவை இடைச்சங்கத்தார் தமிழாராய்ச்சிக்கு நூலாகாவாயினவல்ல, நூலாயினவே. அஃதேல், அவ்வரலாறு நக்கீரனார் களவியலுரையுட் சொல்லாததென்னையெனின்,— தொல்காப்பியஞ் சொல்லவே அவையுங் கொள்ளப்படுமென்பதுபற்றி அவர் ஆண்டு அவை கிளந்தோதாராயினாரென்க. மற்றவை தம்முளொன்றான இசைநுணுக்கம் ஆண்டுக் கிளந்தோதியதூஉங் காண்க. தொல்காப்பியம் இடைச்சங்கத்தாருக்கு நூலாயினமை சொல்லப்படுதலால், அதுவும் அதுபோல வழிநூலாயின பிறவும், அக்காலத்ததாக அதற்குச் சிறிது முன்னாகத் தோன்றி நடைபெறுவவாயினவென்றே துணிக. மற்றுப் பதிப்புரைகாரர் தொல்காப்பியமுதலியன தலைச்சங்கத்தார் காலத்துக்கு முற்பட்டுத் தோன்றித் தலைச்சங்கவரங்கேறிப் பின்னர் இடைச்சங்கத்தாருக்கு நூலாயினவென்றும், தலைச்சங்கத்தில் தொல்காப்பியம் விளங்காமைக்குக் காரணம் அகத்தியனார் மாறுகோளென்றும், மொழிந்தார். தொல்காப்பியமுதலியன தலைச்சங்கமேறி நிலவினவேல், நக்கீரர் அவ்வரலாறு கிளந்து கூறுவராவர்; அவர் அவ்வாறு கூறாதொழிந்தமையானும், முக்குணங்கடந்து மிக்க தெய்வப் பெற்றியுடையராகிய அகத்தியனார் மாறுகொண்டாரென்று அவருக்கு விருப்புவெறுப்புச் சிவகுணங் கூறுதல் குற்றமாய் முடிதலானும், அது பொருந்தாமை யுணர்க.

இன்னும், அவர் கூற்றுப் பொருளாயின், அகத்தியனார் மாறுகொண்டு தொல்காப்பியத்தினை தலைச்சங்கத்தில் விளங்கவொட்டாது விலக்குதற் குடம்பட்டிருந்தாரென்று அவிர் சடைக்கடவுண் முருகவேள் எனபார்க்குப் பெரியதோ ரிழுக்குமாமென்க. இன்னும், அவர் கூற்றுப் பொருளாங்கால், தொல்காப்பியம் இடைச்சங்கத்திலும் விளங்குமாறின்றி ஒதுங்கிற்றென்று மாம். என்னை? இடைச்சங்கத்திலும் அகத்தியனார் வீற்றிருந்தாராகலின், ஆண்டும் அது அவர் மாறுகோளுற்று விளக்கம் பெறாதாதல் வேண்டுதலினென்க. இவ்வாற்றால் அவர் கூற்று வேதவழக்கோடும் ஆன்றோர்வழக்கோடு மாறுபடும் பழியுரையேயாமன்றி நியாயவுரையாகாமை தெற்றெனவுணர்க.

அற்றேலஃதாக, செந்தமிழ்மொழி தோன்றுங்காலத் துடன்றோன்றிற்றாய் அதற்குப் பேராதாரமாய முச்சங்கத்து நிலவிய முதனூலாகிய அகத்தியங் கடைச்சங்க மொடுங்கிய பிற்றைஞான்று வழங்கற்பாடின்றி மறைதற்குக் காரணந்தான் யாதெனின்,— கூறுதும். அகத்தியம் பல்வாழ்நாளுஞ் சிலபிணியும் பேரறிவு முடைய அக்காலத்தார் கற்றுப் பிறருடன் பயின்று அறிவு நிரப்புதற்பொருட்டுச் செய்யப்பட்டதொரு பெருநூலாதலின், சின்னாளும், அவற்றுள்ளும் பல்பிணியும், சிற்றறிவும் உடையராகிய இக்காலத்தார், தாம் அதனைக் கற்றலும் பலருடன் பயிறலுஞ்செய்து கல்வி நிரப்புதன் முடியாதென்று கைவிட்டு அதன்வழிச் சுருங்கித் தோன்றிய தொல்காப்பியமுதலிய இலக்கண நூல்களையே கைக்கொண்டு போற்றிப் பயில்வாராயினமையின், அது எடுத்தெழுதிப் படித்துப் பயில்வாரின்றி வைகரிவடிவிற்றீர்ந்து மத்திமைவடிவுநேர்ந்து பைசந்திவடிவிற்றுங்கிப் பரமயோகிகட்கே புலனாதற்குரிய சூக்குமநாதமாயொடுங்கிற்றெனக். அவ்வாறு பாதுகாத்துப் பயில்வார் கைவிட்டமையால், வடமொழியின் மாமறையாகமச் சுருதிகளுண்ணும் அவற்றின் வழிநூல்களுள்ளுங் காலந்தோறு மொடுங்கின பல. இன்னும், அவ்வாறு பாதுகாத்துப் பயில்வார் கைவிடுதலாற் றென்மொழியிற் றேவாரச்சுருதிகளுள்ளுந் தெய்வச் சங்கமேறிய நூல்களுள்ளுங் காலந்தோறு மொடுங்கின பல. இவையெல்லாஞ் சாபத்தாலழிந்து மறைந்தனவல்ல. இச்செந்நெறி தேர்ந்துகொள்ளமாட்டாது அகத்தியந் தொல்காப்பியனார் சாபத்தினால் அழிவுபட்டதென்று படைத்து மொழிந்தாரை அவையெல்லா மழிவுபடுதற் கேதுவாய்நின்ற சாபந்தாம் யாவையென்று கடாயினார்க்கு, விடை யாதோவெனக. இன்னும், அவர் தம்பதிப்புரையில் அகத்தியந் தொல்காப்பியத்தின்முன் விளங்கமாட்டாது தாழ்வுற்றதென்று சழக்கொன்றுரைத்தார். அம்முதனூலும் வழிநூலு முறையே அரனும் அரன் மகனும்போல வரமுறுவனவேயாமன்றி முரணுறுவனவல்ல. இனி முதனூலான வகத்தியம் வழிநூலாகிய தொல்காப்பியத்தின்முன்னர் விளங்கமாட்டாது தாழவுற்றதென்றல் அரன்மகன்முன் அரன் விளங்கமாட்டாது தாழவுற்றானெனபதனோடொத்துச் சிறுமகார்க்கு நகையினை நிகழ்த்துவதோர் சழக்குரையே யாமன்றி வழக்குரையாகாதெனக.

கடைச்சங்கம்.

இனிக் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் சிறுமேதாவியாரும், சேந்தம்பூதனாரும், அறிவுடையானாரும், பெருங்குன்றூர்க்கிழாரும், இளந்திருமாறனும், மதுரையாசிரியர் நல்லந்துவனாரும், மருதனிளநாகனாரும், கணக்காயனார்மகனார் நக்கீரருமென விதத்தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மர். அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினார். அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறும், குறுந்

தொகை நானூறும், நற்றிணை நானூறும், ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பதுகலியும், எழுபது பரிபாடலும், கூத்தும், வரியும், பேரிசையும், சிற்றிசையுமென்று இத்தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமும். அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத் தெண்ணூற் றைம்பதிற்றியாண்டு. அவர்களைச் சங்கம் இரீஇயினார் கடல்கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதி யீறாக நாற்பத்தொன்பதின்மர். அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தரமதுரை. அவருட் கவியரங்கேறினார் மூவர் பாண்டியர்.

அற்றேல் லஃதங்ஙனமாக; இடைச்சங்கத்தார் தமிழாராய்ச்சிக்கு நூல்களாகி நிலவிய தொல்காப்பிய மாபுராணம் பூதபுராணம் இசைநுணுக்க மென்பனவற்றுட் டொல்காப்பியம் இடைச்சங்கமுதலின்றுகாறு முள்ளதாய நிலைபெற, மாபுராணம் பூதபுராணம் இசைநுணுக்க மென்பன மறைதற்குக் காரணமென்னையெனின்,— அவையும் பரந்துபட்ட பொருண்மையவாய்ச் சிலவாழ்நாட் பலபிணிச் சிற்றறிவின் மக்கட் குபகாரப்படாமையின் அவர் தம்மாற் கைவிடப்பட்டு மறைந்தன வெனக.

இனி "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப" எனவும், "சாத்திரமுஞ் சோதிடமும்" எனவும், இயற்றமிழோடு சிறந்தெடுத்தெண்ணப்படுஞ் சோதிடமுதலிய பிறகலைகளு முளவாக முன்மைச் சங்கத் தமிழாசிரியர்களும் பிறரும் இயலிசைநாடகமென்னு மிம்மூன்றனையுமே விதந்து ஆராய்ந்துகொண்ட தென்னையோவெனின்,— சோதிட முதலிய பிறகலைகளெல்லாம் ஆரியத்தினும் தமிழினும் ஏனைமொழிகளினும் வேறுபாடின்றி ஒப்பநிகழ்தலின் அவற்றை வேறு விதிக்கவேண்டாமையானும், இயலிசைநாடக மென்னு மூன்றுந் தமிழ்நிலத்துச் சில வேறுபாடுடைமையின் அவற்றை வேறு விதிக்கவேண்டுத லானும், அது பற்றி அகத்தியனார்முதலிய முத்தமிழ்ச்சங்கவாசிரியர்களும் பிறரும் இம்மூன்றுமே விதந்தெடுத் தாராய்வாராயினர். அதனால் அஃது ஒக்கு முறைமைத் தென்றுணர்க.

அற்றேலஃதாக; தலைச்சங்க மிடைச்சங்கங் கடைச்சங்கமென்னு முச்சங்கத்தாரு முறையே நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டும், மூவாயிரத் தெழுநூற்றியாண்டும், ஆயிரத் தெண்ணூற்றியாண்டுஞ் சங்கமிருந்து தமிழாராய்ந்தார் என்றும், அகத்தியம் அம்முச்சங்கத்தார்க்கு நூலாயிற்றென்றும், தமிழாசிரியர் கூறுமுரைகள் மலைவுடைத்தாம். என்னை? பாணினீய மாபாரதத்துட்போந்த உதிட்டிரன் வீமன் அருச்சுனன் வாசுதேவன் முதலிய பெயர்கட்கு இயன்முடிபு கூறி அம்மாபாரதத்தின் பின்னதாத லறியப்படுதலின், "வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத் - தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங் - குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகர்" ரெனக் காஞ்சிப்புராணத்துட் கூறுமுறையானே அகத்தியம் அப்பாணினீயத்தின்பிற் றோன்றிய தென்பது இனிது பெறப்படுதலின், எனின்,— சிவபிரான் ஆதிகாலத் தம்பாற் றோற்றமுற்று நடைபெறுந் தெய்வத் தொன்மொழியான தமிழிலக்கணம் ஆசிரியர் அகத்தியனார்க்குச் செவியறிவுறுத்தருளிய வரலாறு காந்தபுராணத் துபதேசகாண்டத்தினும், காந்தபுராணத்துக் காளிகாகண்டத்துக் காஞ்சிமான்மியத்தினும், காந்தபுராணத் தகத்தியகாண்டமென்னும் ஆலவாய்மான்மியத்தினும், வேறு வேறு ஓதப்படுதலானும், சிவபிரானேயன்றி அறுமுகக்கடவுளும் அகத்தியனார்க்குத் தமிழிலக்கணஞ் செவியறிவுறுத்தருளினாரென்று ஆண்டாண்டுக் கேட்

கப்படும். அவைகள் ஓர் காலத்தன வாதலன்றிப் பலகாலத்தனவாத றெள்ளிதிற் றுணியப்படும். படவே, அகத்தியத்தோற்றம் பாணினீயத்தின் முற்பட்டதுமாம்; மற்றதன் பிற்பட்டதுமாம். இஃதென்சொல்லியவாறோ வெனின்,— பலவாறாகப் போந்த வகத்தியத் தோற்றவரலாற்றுள், "வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத - தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங் - குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகர்" என்று காஞ்சிமான்மியத் தோதப்பட்ட அகத்திய வரலாறு இறுதிக்கண்ணதாகலின், அதுபற்றி அகத்தியமுதனூல் அக்காலத்திற்றானே யுதித்ததென்று கொண்டு அவ்வகத்திய முத்தமிழ் முதனூலின் றொன்மை வரலாறு பிரமாணமாதல் யாங்ஙனமென்றெடுத்தா சங்கித்தல் பொருந்தாதென்றவாறு மெனக்.

அற்றேலஃதங்ஙனமாக, சிவபிரான் அறுமுகக்கடவுள் முற்றறிவுடைய வொரு தனி முதல்வர். அகத்தியனாரோ தவத்தான் மனந் தூயராய் முக்குணங்களையுங் கடந்தவ் விறைவரருள் பெற்றுடைய மாமுனிவர். அப்பெற்றியுடைய விறைவர் இப்பெற்றியுடைய அகத்தியனார்க்குத் தமிழிலக்கணம் ஓர்காலத் தொருமுறையானன்றிப் பல காலத்துப் பன்முறையாற் செவியறிவுறுத்த தமைந்தவா றென்னையெனின்,— தமிழ் வழக்குக் காலந்தோறும் வேறுபடுதலின், முற்காலத்து வழங்கி வீழ்ந்த தமிழ் வழக்கைக் களைந்து, பிற்காலத்து வேறுபடப் பிறந்த தமிழ்வழக்கைத் தழுவி வழக்கு நெறிப்படுத்தல் வேண்டி, அவ்விறைவர் அகத்தியனார்க்குத் தமிழியல் அங்ஙனங் கால வேறுபாட்டாற் பலமுறை செவியறிவுறுத்தியருள வமைந்தாராகலின், அது குற்றமாகாதெனக். ஆசிரியரெல்லாம் "இறந்தது விலக்க லெதிர்ந்து போற்றல்" லென்னும் உத்தியும், "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையி னானே" என்னும் நூற்புறனடையும், நூன்மரபாகக் கொண்டு ஓதுமாறும் இதற் குறு சான்றாத லறிக. இனி நந்திபெருமான் முதலிய கணர்களும், அயன் முதலிய தேவர்களும், சனற்குமாரன் முதலிய முனிவர்களும், சிவபிரான்பாற் றத்துவபோதம் ஒருமுறையா னன்றிப் பன்முறையானுஞ் செவியறிவுறுத்தப்பட்டு ஐயநீங்கி மெய்யுணர்ந்தாரென்று புராணங்களில் ஆண்டாண்டுக் கேட்கப்படுதலின், கால வேறுபாடுபற்றி வீழ்ந்தும் பிறந்தும் வருந் தமிழ் வழக்குக்களை, ஆய்ந்து களைந்து தழுவி வழக்குவழிப்படுத்தல் வேண்டி, அவ்விறைவர்பால் அகத்தியனார் தமிழிலக்கண மவ்வாறு பன்முறைகொண்டிட்ட றக்கவாறேயாமென்பது.

இதனை மற்றோராற்றானு நெறிப்படுத் துரைத்தும். பல்வாழ்நாளும் பிணித்தப்பு நோன்பும் அறிவுவலியுமுடைய முற்காலத்தார் நீடிருந்து ஆராய்ந்து தமிழ் வழக்குத் தேறி யுறுதிகூடுதற்பொருட்டு, அகத்தியனார் அருந்தவமிருந்து, இறைவனாரருளிய ஆறு கடைப்பிடித்துத் தம்பெயரான முத்தமிழிலக்கண முதனூலான முதற்கண் விரித்தியற்றி யுபகரித்தருளினார். இது முதற்சங்கத்தின் முற்பட்டுப் போந்த வகத்திய வரலாறு. இடைக்காலத்தார் அம் முற்காலத்தாரிற் குறைந்த வாழ்நாளும், குறைந்த நோன்பும், சிற்றறிவு முடையராயினமையின், அவர்பொருட்டு, அகத்தியனார் மறித்தும் அருந்தவமிருந்து, இறைவனாரருளிய ஆறு கடைப்பிடித்துத், தம்பெயரான் இயற்றி வழங்குவித்த அம் முத்தமிழிலக்கண முதனூலைப் பின்னர்ச் சுருங்க யாத்து இயற்றி யுபகரித்தருளினார். இஃதிடைச்சங்க ஞான்று போந்த வகத்திய வரலாறு. பிற்காலத்தினர் அவ்விடைக்காலத்தாரிற் குறைந்த வாழ்நாளு நோன்பும் அறிவு முடையராயினமையின், அவர்பொருட்டு

அகத்தியனார் மறித்து மருந்தவ மிருந்து இறையனா ரருளிய ஆறு கடைப்பிடித்துத், தம் பெயரான் வழங்குவித்த அகமுத்தமிழிலக்கண முதனூலைப் பின்னருஞ் சுருங்க யாத்திய ற்றி யுபகரித்தருளினார். இஃது கடைச்சஞான்று போந்த வகத்தியவரலாறு. இவற்றுள், இறுதிக்கண்ணது பாணினீயத்தின் பிற்பட அங்ஙன நிகழ்ந்த வரலாறும். "ஏழியன் முறைய தெதிர்முக வேற்றுமை - வேறென விளம்பான் பெயரது விகாரமென - றோதிப் புலவரு முளரொரு வகையா-னிந்திர னெட்டாம் வேற்றுமை யென்றனன்" என மொழி தரும் அகத்திய முதனூ லிவ்விறுதியதாம் வடநூலாரும், "முற்காலத்திற் றைவ வியாகரணங்களு மாரிட வியாகரணங்களும் பல வழங்கின. கலிகாலத்தின் மக்கட்கு ஆயுளு மறிவுங் குன்றுதலின், அவற்றினையெல்லாஞ் சற்று அறிவு நிரப்பமாட்டாது வட மொழியை வழூமலைதர வழங்குவாராயினர். அது கண்ட பாணினிமுனிவ ரருந்தவமிரு ந்து சிவபிரான் றிருவருள் பெற்று அத்தைவ வாரிடவியாகரணங்களைச் சுருக்கி 'அட்டா த்தியாயி' என ஓரிலக்கணநூல் செய்தருளினார்" என்றுரைப்பாராதலின், யாங் கால பேதத்தொடு படுத்தோது மிவ்வரலாறு மற்றவரானு மொப்பற்பாலதேயா மென்பது. வடமொழி வியாகரணம் பலரான் காலத்திற் கேற்ப விரிந்துஞ் சுருங்கியு நடந்தது. தென்மொழி யிலக்கணம் உலகமெல்லாந் தொழுதேத்துங் குடமுனிவரா னகத்திய னொருவ ராலேவழியிற்றானே காலங் கட்கேற்ப விரிந்துஞ் சுருங்கியு நடந்தது. இது தம்முள் வேறுபாடு. அகத்திய மிங்ஙனங் காலத்திற்கேற்ப விரிந்துஞ் சுருங்கியு மாறி நடந்தமையாற் போலு மற்றது "பேரகத்தியம்" "சிற்றகத்தியம்" என அங் ஙனம் வழங்கப்படுவதாய தென்பது. அகத்தியங் காலபேதம்பற்றி யிவ்வாறு விரிந் துஞ் சுருங்கியு மாறி நடந்த முறையானே அவ்வாறு வழங்கப்பட்டமை தேறமாட்டா தார், பேரகத்தியஞ் சிற்றகத்தியம் வெவ்வேறொருகாலத் தொருங்கு நிலவினவென்று தமக்கு வேண்டியவா றோதி, வரலாற்றுமுறை திறம்பிப்பர். இன்னும் விரிப்பிற் பெருகு மெனக.

களவியல்

கடைச்சங்கத்தார் காலத்துப் பாண்டியனாடு பன்னிருயாண்டு வற்கடஞ்சென்றது. செல்லவே, பசிகடுகுதலும் பாண்டியன் சங்கப்புலவரெல்லாரையுங் கூவி, "வம்மின் யான் உங்களைப் புறந்தரற்பாலனல்லேன், என்றேயம் பெரிதும் வருந்துகின்றது, நீயிர் நுமக்கறிந்தவாறு புக்கு நாடு நாடாயினஞான்று என்னையுள்ளி வம்மின்" என்றான். என, அரசனை விடுத்து அவரெல்லாரும் போயினர். போயபின்னாகக் கணக்கின்றிப் பன் னீரியாண்டுகழிந்தது. கழிந்தபின்னர் நாடு மலிய மழைபெய்தது. பெய்தபின், பாண் டியன் இனி நாடு நாடாயிற்றாகலின் நூல்வல்லாரைக் கொணர்கவென்று எங்கண்ணு மெல்லாப்பக்கமும் போக்கினான். போயினார் எழுத்ததிகாரமுஞ் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்தனர். பொருளதிகாரம் வல் லாரை எங்குந் தலைப்பட்டிலேமென்று வந்தார். வர, அரசனும் புடைபடக் கவன்று 'என்னை' எழுத்துஞ் சொல்லும் யாப்பு மாராய்வது பொருளதிகாரத்தின் பொருட் டன்றே' பொருளதிகாரம் பெறேமேயெனின், இவைபெற்றும் பெற்றிலேமெனச் சொல் லாநிற்ப, மதுரை யாலவாயில் அழனிறக்கடவுள் சிந்திப்பான் "என்னை பாவம்' அர சற்குக் கவற்சி பெரிதாயிற்று, அதுதானு ஞானத்திடையதாகலான் யாமதனைத் தீர் க்கற்பாலம்" என்று, இவ்வறுபது சூத்திரத்தையுஞ் செய்து மூன்று செப்பிதழகத்தெ ழுதிப் பீடத்தின் கீழிட்டான். இட்ட பிற்றைஞான்று, தேவர்குலம் வழிபடுவான்

தேவர்கோட்டத்தை எங்குந்துடைத்து, நீர் தெளித்துப், பூவிட்டுப், பீடத்தின்கீழ் என்று மலகிடான் அன்று தெய்வக்குறிப்பினான் அலகிடுவனென்று உள்ளங்குளிர அலகிட்டான். இட்டாற்கு அலகினோடும் இதழ்போந்தன. போதரக்கொண்டுபோந்து நோக்கினாற்கு, வாய்ப்புடைத்தாயிற்றோர் பொருளதிகாரமாய்க் காட்டிற்று. காட்டப், பிராமணன் சிந்திப்பான்: "அரசன் பொருளதிகார மின்மையிற் கவல்கின்றா னென்பது கேட்டுச் செல்லாநின்ற துணைாந்து நம்பெருமா னருளிச்செய்தா னாகும்" என்று. அவன் றன்னகம்புகுதாதே கோயிற்றலைக்கடைச்சென்று நின்று கடைகாப்பாற்கு உணர்த்தினன், கடைகாப்பார் பாண்டியற்குணர்த்தினார், பாண்டியன் புகுதுகவென்று பிராமணனைக் கூவினன். கூவப், பிராமணன் சென்று புகுதுக் காட்டினன். பாண்டியன் ஏற்றுக்கொண்டு நோக்கிப் "பொருளதிகாரம் இது, நம்பெருமான் நம திடுக்கண் கண்டு அருளிச்செய்தானாகற்பாலது" என்று, அத்திசை நோக்கித் தொழுது கொண்டு நின்று, சங்கத்தாரைக் கூவுவித்து, "நம்பெருமான் நம திடுக்கண் கண்டு அருளிச்செய்த பொருளதிகார மிதனைக் கொண்டுபோய்ப் பொருள் காண்மின்" என, அவர்கள் அதனைக்கொண்டுபோந்து கன்மாப்பலகை யேறியிருந்து ஆராய்வுழி, எல்லாருந் தாந்தா முரைத்த உரையே நல்லதென்று சிலநாளெல்லாஞ் சென்றன. செல்ல, நாம் இங்ஙனம் எத்துணை யுரைப்பினும் ஒருதலைப் படாது. நாம் அரசனுழைச் சென்று நமக்கோர் காரணிகனைத் தரல்வேண்டுமென்று கொண்டுபோந்து அவனாற் பொருளெனப்பட்டது பொருளாய் அன்றெனப்பட்டது அன்றாய் ஒழியக் காண்டுமென, எல்லாரு மொருப்பட்டுப் பாண்டியனுழைச் சென்றார். பாண்டிய னெதிர்சென்று "என்னை! நூலுக்குப் பொருள் கண்டீரோ?" என்றான். அவர் "அது காணுமாறு எமக்கோர் காரணிகனைத் தரல்வேண்டும்" என்பப், "போமின்! நுமக்கோர் காரணிகனை எங்ஙனம் நாடுவேன்! நீயிர் நாற்பத்தொன்பதின்மராயிற்று. உமக்கு நிகராவார் ஒருவர் இம்மையின்றே" என்று பாண்டியன் சொல்லினான். சங்கப்புலவர் போந்து கன்மாப்பலகையில் ஏறியிருந்து, "அரசன் இது சொல்லினான், காரணிகனைப் பெறுமாறு என்னை கொல்?" என்று சிந்திப்புழிச், "சூத்திரஞ்செய்தான் ஆலவாயில் அவிர்சடைக்கடவுளன்றே, அவனையே காரணிகனைத் தரல்வேண்டுமென்று சென்று வரங்கிடத்தும்" என்று வரங்கிடந்தார். இடையாமத்து "இவ்வூர் உப்பூரிகுடிகிழார் மகனாவான் உருத்திரசன்மனென்பான், பைங்கண்ணன், புன்மயிரன், ஐயாட்டைப் பிராயத்தான், ஒரு மூங்கைப் பிள்ளை யுளன், அவனை அன்னனென்ன றிகழாது கொண்டுபோந்து ஆசனமேலிரீஇக் கீழிருந்து சூத்திரப்பொரு ளுரைத்தாற், கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க்கும், மெய்யாயினவுரை கேட்டவிடத்து. மெய்யல்லாதவுரை கேட்டவிடத்து வாளாவிருக்கும். அவன் குமாரதெய்வம், அங்கோர் சாபத்தினாற் றோன்றினான்" என முக்காலிசைத்த குரல் எல்லார்க்கு முடன்பாடாயிற்றாக, எழுந்திருந்து தேவர்குலத்தை வலங்கொண்டு போந்து, உப்பூரிகுடிகிழாருழைச் சங்கமெல்லாஞ் சென்று, இவ்வார்த்தை யெல்லாஞ் சொல்லி, "ஐயனாவான், உருத்திரசன்மனைத் தரல்வேண்டும்" என்று வேண்டிக், கொடு போந்து, வெளியது உடீஇ, வெண்பூச்சூட்டி, வெண்சாந்தணிந்து, கன்மாப்பலகை யேற்றிக் கீழிருந்து சூத்திரப்பொரு ளுரைத்தார். உருத்திரசன்மனாவான் எல்லாரு முரையே உரைக்கக் கேட்டு வாளாவிருந்து, மதுரை மருதனிளநாகனார் உரைத்தவிடத்துக் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் நிறுத்தினன், பின்னர்க் கணக்காயனார் மகனார் நக்கீரர் உரைத்தவிடத்துப் பதந்தோறுங் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்ப்ப விருந்தான். இருப்

பச், சங்கப்புலவ ரார்ப்பெடுத்து "மெய்யுரை பெறாஅ வின்னூற்கு" என்றார். அதனால், உப்பூரிகுடிகிழார் மகனுவான் உருத்திரசன்மனுவான் செய்தது இந்நூற்கு உரையென் பாருமுளர். அவர் செய்திலர். மெய்யுரை கேட்டாரென்க. மதுரை ஆலவாயிற் பெருமானடிகளாற் செய்யப்பட்ட நூற்கு, நக்கீரனரால் உரை கண்டு, குமாரசுவாமியாற் கேட்கப்பட்டதென்க. களவியல் வந்தவாறும் அதற்கு மெய்யுரை கண்டவாறு மிவை யாம். இனி உரை நடந்தவாறு சொல்லுதும். மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் தம்மகனார் கீரங்கொற்றனார்க்கு அதனை யுரைத்தார், அவர் தேனூர்கிழார்க் குரைத்தார்; அவர் படியங்கொற்றனார்க் குரைத்தார், அவர் செல்வத்தாசிரியர் பெருஞ்சுவனார்க் குரைத்தார்; அவர் மணலூராசிரியர் புளியங்காயப் பெருஞ்சேந்தனார்க் குரைத்தார்; அவர் செல்லூராசிரியர் ஆண்டைப் பெருங்குமாரனார்க் குரைத்தார், அவர் திருக்குன்றத்தாசிரியர்க் குரைத்தார், அவர் மாதளவனார் இளநாகனார்க் குரைத்தார், அவர் முசிறியாசிரியர்க் குரைத்தார். இங்ஙனம் வருகின்றது உரை. இந்நூலுட் கூறிய முச்சங்க வரலாறு களவியன்முதனூன் முகத்து நக்கீரனார் உரைத்து நிறுத்தியதென் றறிக.

அற்றேல் அஃதங்ஙனமாக; ஆசிரியர் அகத்தியனார் முற்றகண் முத்தமிழ்நூல் முதன்மைபெறச் செய்தனர். அதனால் அகத்தியமே தமிழ் முதனூலாயச் சிறந்தது. மற்று அகத்தியத்தின் பின்னர் ஆலவாயில் அவிர்சடைக்கடவுள் செய்தருளிய களவியற் றமிழ் முதனூலாகுமா றெனையோவெனின்,— முற்காலத்ததாகப் பிற்காலத்ததாக வினையினீங்கி விளங்கிய வறிவின் முனைவன் செய்ததனவே முதனூலாம். அங்ஙனமாயினும், அம் முதல்வன் றன்னருளால் வினையினீங்கி விளங்கிய வறிவின் முனைவரை அதிட்டித்துச் செயப்படுவனவு முதனூல்களாம். அதனால், சிவபிரா னுபதேசவழி வினையினீங்கி விளங்கிய வறிவின் முனைவராகிய அகத்தியனாரால் செயயப்பட்டதூஉ முதனூலாயது. இதனால், பிற்காலத்துப் பாண்டியன் பொருட்டுப் பெருமானடிகள் செய்த களவியல் வேதாகமம் போல்வதோர் முதனூலேயாமென றுணர்க. மற்றினனு மிதனானே, முதல்வன் உபதேசவருளால் வினையினீங்கி மெய்யுணரார் முதன்மையாக நூல்கள் செயினும் அவை முதனூலாகாவென்பது தெளிக. மற்றிவையெல்லாம் பெறுவித்தற்பொருட்டன்றே ஆசிரியர் தொல்காப்பியனார் "வினையி னீங்கி விளங்கிய வறிவின-முனைவன் கண்டது முதனூ லாகும்" என நோக்குப பெரிது புணர்த்து அங்ஙனஞ் சூத்திரம் யாக்கலுறுவா ராயினரென்க.

இக்களவியலென்னு முதனூல் "அன்பி னைந்திணைக் களவெனப் படுவ - தந்தண ரருமறை மன்ற லெட்டினுட் - கந்தருவ வழக்க மென்மனார் புலவ" ரெனபது முதலாகக் "களவு கற்பெனக் கண்ணிய வீண்டையோ - ருளங்கி மனபி னுயாச்சி மேன" வெனபது ஈறாக அறுபது சூத்திரமுடையது. இதன் சூத்திரங்கள் அறுபதூந் திட்பமு நுட்பமு மொட்பமுஞ் சிறந்து, அகப்பொருட் டிறனெல்லா மிகத் தெளித்துரைத்தலிற் றமே தமக்கு நிகராய், ஏனோர் கூறிய அகப்பொருள்கட்கெல்லாங் கடவுட் பிரமாண வரம்பாய நிலைபெறுவன. இஃது உள்ளுதோ றுள்ளுதோ றுள்ள முருக்குவதாம்! நவிறொறு நவிறொறு நாச்சுவை பெருக்குவதாம்! பயிறொறும் பயிறொறும் பேரின்பம் பயப்பதாம்! எல்லாமியல்பி னுணரவல்ல விறைவ னருளிச்செய்த இதன்பெருமைகளைச் சொல்லாலுரைத்து அவதி நேர்தல் யார்க்கு மொல்வ தன்று. மற்றிதன் பெருமை நிற்க; கணக்காயனார் மகனார் நக்கீரனார் கண்டு கட்டுற வகுத்த இதனுரையுந் திட்பமு நுட்பமு

மொட்பமுஞ் சிறந்து ஏனை நூல்கட்கெல்லாம் ஓர் வரம்பாய நிலைபெறுவது. இந் நூல் "இறையனார்களவிய" லென்றும் "இறையனாரகப்பொரு" ளென்றும் வழங் கப்படும். இது நன்மக்க ளெய்துதற்குரிய அறம் பொருளின்பம் வீடுபேறெனு நான் கனுள்வைத்து ஐம்பொறிகளானு மொருங்கு நுகர்தற்பாலதாம் அன்புடைக் காமவின்ப நுதலி இயற்றப்பட்டது. இவ்வின்பம் அகத்தேயாம் பொருளாய நிகழ்தலின் அகப்பொ ருளெனப்படும். இவ்வன்புடைக் காமக்கைகோள் களவென்றுங் கற்பென்று மிரண் டாய் நடக்கும். இவற்று ளிந்நூ னுதலுங் கைகோள் களவாம். களவாவது தலைமக னுந் தலைமகளும் உழுவலன்பினானே கொடுப்பாரு மடுப்பாரு மின்றிப் பால்வகையிற் றமியராய் ஓர் பொழிலவயிற் றலைப்பட்டுக் கரந்த வுள்ளத்தினராய் நுகர்ந்து செல் லுங் காமவொழுக்கமாம். இது கற்பொழுக்கமு மோதினு மிகுதிபற்றிக் களவியலெனப் பட்ட தென்றுணர்க.

இக்களவென்னுங் கைகோள் காமப்புணர்ச்சியும், அது நிகழ்ந்தபின்ன ரிடந் தலைப்பாடும், அதன்பின்னர்ப் பாங்கற்குச் சொல்லி அவனாற் கூடுதலும், அதன் பின்ன ர்த் தோழிவழிநின்று குறைமுடித்துக் கோடலுமென நான்கா யடங்கும். அது 'காமப் புணர்ச்சியு மிடந்தலைப் படலும் - பாங்கொடு தழாஅலுந் தோழியிற் புணர்வுமென் - றாங் கநால் வகையினு மடைந்த சார்பொடு - மறையென மொழிதன் மறையோ ராறே" என் னுந் தொல்காப்பியச் சூத்திரத்தா னறிக.

இது தலைமகன் றலைமகளென்னு மிருவோரும் அஃகாவன்பிற் றலைநின்று பால் வகையாற் றமக்குரித்தாய நிறகு மின்பங் கரந்து நுகர்ந்து வருவதோ ரொழுக்கமாய் நிற்றலானும், தலையாயவற்றனும் நிலையாய ஞானமும் பயந்து அவை வாயிலாகச் சுவ ர்க்கம் வீடுபேறுதவுதலானும், பிறர்க்குரியபொருளை மறையிற் கொள்ளுங் களவன்று யிற்று. இதுதனைக் களவென்றல் வேதத்தினை மறையென்றல் போலுமென் றறிக. இது மன்றலெட்டனுட் கந்தருவத்தின் பாற்படும். கந்தருவ மன்றலாவது— இருவரொத் தார் தாமே கூடுங் கூட்டம். இனி இந்நூல் கூறுங் களவொழுக்கம் இல்லது இனியது நல்லது என்று புலவரா னாட்டப்படுவ தொன்றாதலின், உலகவழக்கத்தினோடு இயை யாதென் றறிக.

அற்றே லஃதாக, தெய்வத் தமிழ்மொழியினானே ஓர் நூல் செய்தற்கமர்ந்த தனிமுதற்கடவுளாகிய இறையனார்க்கு நன்மக்கட் குறுதிபெரிது பயத்தற் சிறப்புடைய அறம் வீடுபேறெனனும் உறுதிப்பொருள்கள் பற்றி முதனூல் செய்தலே மாண்பாம். பொருள் அவ்விரண்டுஞ் சாதித்தற்குத் துணையாய நிற்பதொன்றாதலால் அதுபற்றியு நூல் செய்த லப்பரனார்க்கு மாணபாம். இச்சிறப்புடைய அம்மூன்றனையு மொழி த்து இம்மையே உறுதி சிறிது பயக்கு நீரதாகுங் காமப்பொருள் பற்றித் தமிழ் நூல் செய்தருள வமைந்தது அப்பரனார்க்கு மாண்பாமா றென்னையெனின்,— கூறு தும். நிலவுலகத்துத் தலைமகன் றலைமகளென்று சிறப்பித் தோதப்படுவோர் உடமைக் காலத்துப் பிறப்புக்க ளெல்லாவற்றினும் அன்பான உயிரொன்றுபட்டு ஒருவரையொ ருவ ரின்றியமையாராய் அந்நல்வினையா னிம்மைக்கணும் அந்நீரராகி யொழுகுபவ ராவர். இவர் குலங் கல்வி முதலிய பத்துவகை யிலக்கணங்களுந் தம்முள் ஒத்தபாலி னராவர். இத்தலைமகற்கு இழிந்தாரல்லது, ஒத்தாரும், மிக்காரும், உலகத்தில்லை. தலை மகளு மந்நீர்மையினளாம். இடம்பெற்றியார் ஒழுக்கஞ் சேட்டன மாத்திரையானே

விழைவு விடுத்த விழுமியோருள்ளும் விழைவின்கட் டாழ்வுறும். இத்தன்மையி னிவர் துய்க்கு மிவ்வின்பம் அத்துறக்கத்தாரும் விழைவதொன்றாம். இதனை விழுப்பமுடைய அன்புடைக் காமவின்பம் இம்மையிற் றுய்த்துச் செல்லு மிவர் அறப்பாலெல்லாந் திறப்பட வுடையாரென்பது ஒருதலையாம்; இப்பேறுடையார் பொருட்பாலெல்லாந் திறப்பட வுடையரென்பது சொல்லாமே யமையும். இங்ஙனம் அறம் பொரு ளின்ப மிவை சிறப்புறப் பெற்று முனிவருந் தேவரும் விழைதரு மின்ப நுகர்ந்து செல்லு மிவர், எதிர்காலத்து நிலையாமை யுணர்ந்து பற்றறத் துறந்து மெய்யுணர்ந்து வீடுபே றெருதலையாற்றலைக்கூடுபவராவர். இங்ஙனமாதலின், இப்பெற்றியார் அன்புடைக் காம வொழுக்கமாகும் களவியல் காமவியலாதலன்றி அறவியல் பொருளியல் வீடுபேற்றிய லுமா மாதலால், அதுபற்றித் தமிழறு லருளிச்செய்தது இறையனார்க்கு மாண்பே யாமென்று கடைப்பிடிக்க.

அற்றே லஃதங்ஙனமாக, பொருளதிகாரம் வல்லாரைப் பெற்றிலேமென்று புடைபடக் கவன்ற பாண்டியற்கு ஆலவாயி லழனிறக்கடவுளாகிய இறையனார் பொரு ளதிகாரம் வல்லார் தம்மைக் கூட்டிக் கவற்சி நீக்குதலே முறையாமன்றிப் பொருளதி காரத் துள்ளுறையாகக் களவியல் இயற்றி அருளுதன் முறையாங்கொல்லோ வெனின்,-- ஆலவாயி லழனிறக்கடவுளாகிய விறையனார் பொருளதிகாரத் துள்ளுறுதெளிவாகக் கள விய லியற்றியருளி அதன் மெய்யுரை நிறுத்தவல்ல உருத்திரசன்மனாரைச் சங்கத் தார்க்குக் கூட்டு முகத்தானே பாண்டியன் கவற்சி நீக்கியருளினாராதலால், அது கடா வன்றென்று விடுக்க. இனி நக்கீரனார் முதலிய கடைச்சங்கப் புலவரெல்லாம் பொரு ளதிகார மிக வல்லரேயாயினும், அவர் தாந்தாம் வல்லவாறு பலபட வெடுத்துரைக் கும் அப்பொருளதிகாரப் பொருணுட்பங்களுள் இவை வாய்ப்புடையன, இவை வாய்ப் புடையன வல்லவென்று, ஒருதலைப்படுத் துரைக்கவல்ல தெய்வப்பெற்றியுடைய கார ணிகப் பெருமை காரணமாகவே பாண்டியன் கவன்றான், இறையனார் அக்காரணி கராதற்குரிய தெய்வப்பெற்றியுடைய உருத்திரசன்மனாரை அவற்கு உதவியருள, அவன் அக்கவற்சி யகன்று மகிழ்ச்சி யெய்தினானென்பது. அற்றேல், உருத்திரசன்ம னாரை உதவியருளுதலே அது தீர்த்தலா யமையும், களவிய லியற்றி அதன் மெய் யுரை வரையறுப்பிக்கு முகத்தால் உருத்திரசன்மனாரைப் பாண்டியற்கு இறையனார் கூட்டியருள வேண்டிய தென்னுக்கெனின்,— அகத்தியத்தினுந் தொல்காப்பியத் தினு மோதிய வகப்பொரு ளிலக்கணங்கண் மிகப் பரந்து கிடந்தன வாகலால், அவை யெல்லாஞ் சுருங்கி ஒவ்வோர் துறைப்படுத்துத் தெளிவுற்று நிலைபெறச்செய்தல் வேண்டி இறையனார் களவிய லியற்றி அதன் மெய்யுரை வரையறுப்பிக்கு முகத்தானே அவரை உதவி அமர்ந்தருளினா ரென்க. "உலகிய னிறுத்தும் பொருண்மர பொடுங்க, மாற னும் புலவரு மயங்குறு காலை, முந்துறும் பெருமறை மூளைத்தருள் வாக்கா, லன்பினைந் திணையென் றறுபது சூத்திரங், கடலமு தெடுத்துக் கரையில்வைத் ததுபோற், பரப் பின் றமிழ்ச்சுவை திரட்டிமற் றவர்க்குத், தெளிதரக் கொடுத்த தென்றமிழ்க் கடவுள்" என்னுங் கல்லாடத்தானு மிதுவே கருத்தாதற்றெளிக. ஆண்டு உலகியனிறுத்தும் பொருண் மர பொடுங்க வென்று பொதுப்பட வெடுத்தோதியது, உறுதிப்பொருணான்கனையுந் தழுவ வேண்டியென் றுணர்க. அறம் வீடு பயவா அகப்புறப்பொருள்கள் உலகிய னிறு த்தா வாதலால், உலகிய னிறுத்தும் பொருளெனவே அவையு முடன் போதரு மெனக். இவ்வுலகியற் பொருளொழுக்கம் இறைவ னருளிய வேதாகம முதலோதனுப் பற்றி

ஆதிகாலந்தொட்டிங்கு இம்மேதினிக்கண் ஆன்றோர் வழிவழிக் கொண்டுபோதரும் வழக்காறென்பது குறிப்பிப்பார், பொருளென் றொழியாது, பொருண்மரபென்றார். பரப்பின் றமிழ்ச்சுவை திரட்டி மற்றவர்க்குத் தெளிதரக் கொடுத்தவென்றார், அகத்தியத்தின்கண்ணுந் தொல்காப்பியத்தின்கண்ணு மகப்பொரு ளிலக்கணங்களாய்ப் பரந்துகிடப்பனவும் பிறவுங் களவியலினுட் டிரண்டு துறைப்பட வமைந்தவாறு அறிவித்தற்கு. இன்னு மிதனுக்குக்கள் விரிப்பிற் பெருகுமென்பது.

தொல்காப்பியவுரைகள்.

கடைச்சங்கத்தின் பிற்றைஞான்று தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர், கல்லாடர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியரென்பார், தனித்தனி உரையியற்றினார். இவருள் இளம்பூரணர் இதற்கு முதற்கணுரை யியற்றினமையின் உரையாசிரியரென்றவ்வாறு வழங்கப்படுகின்றார். இனி இதற்கிளம்பூரணர் செய்தவுரை எழுத்ததிகாரஞ் சொல்லதிகாரமாத்திரையி னிக்காலத்து நிலைபெறுகின்றது. பேராசிரியருரையும், கல்லாடருரையும், ஒவ்வோர் கூற்றினன்றி, முழுது நிலைபெறக்காணாமையி னிறந்தனபோலும். சேனாவரையர் சொல்லதிகாரமாத்திரைக்கே யுரையியற்றினார். நச்சினார்க்கினியர் மூன்றதிகாரங்கட்கும் உரையியற்றினார். இவை நிலைபெறுகின்றன. இளம்பூரணரியற்றிய எழுத்ததிகாரவுரையும், நச்சினார்க்கினியரியற்றிய எழுத்ததிகாரவுரையும், ஓர் பெற்றியவாயே விளங்கும். ஆயினும், நச்சினார்க்கினியரியற்றிய எழுத்ததிகாரவுரை, இளம்பூரண ரெழுத்ததிகாரவுரை நுட்பங்களை ஆண்டாண்டு விளக்கி அதற்கு விருத்தி போன்று நிற்கும். இனி இம்மூவருஞ் சொல்லதிகாரத்திற்குத் தனித்தனி யுரை யியற்றினும், சேனாவரைய ரியற்றியவுரையே சொல்லதிகாரத்திற்கு மிக வாய்ப்புடைத்தாய் விளங்குகின்றது. சேனாவரையர் இளம்பூரணரியற்றிய சொல்லதிகாரவுரைத்திறங்களை ஆண்டாண்டுத் தழுவியு மறுத்துந் தந்துணிபு நிலையிட்டுரைப்பர். நச்சினார்க்கினியர் சொல்லதிகாரச் சூத்திரங்கட்கு யாண்டுஞ் சேனாவரையர் உரைத்தவாறே யுரைத்தார். ஆயினும், சேனாவரைய ருரைநுட்பங்களை ஓரோரிடங்களில் விளக்கி யுதாரணமேலுஞ் சில சில காட்டினர். இனிச் சேனாவரைய ருரைக்கருத்துக்களைச் சிற்சில சூத்திரவுரைகளில் நச்சினார்க்கினியர் மறுத்துத் தங்கருத்து வேறாக நிறுத்துவர். அவற்றுள் ஒரு சில பொருந்துவனவு முள. நச்சினார்க்கினிய ரியற்றிய பொருளதிகாரவுரை அவ்வதிகாரத்திற்குச் சிறந்ததோ ருரையாம். நச்சினார்க்கினிய ரிதன்கட் பூர்வாசிரியர் சிலர்கருத்துக்களை உடம்பட்டும், மறுத்தும், ஆண்டாண்டுத் தந்துணிபு நிலையிட்டுரைப்பர்.

தொல்காப்பியப் பாயிரவிருத்தி, முதற்சூத்திரவிருத்தி.

வடநூற்கடலுந் தென்றமிழ்க்கடலு நிலைகண்டுணர்ந்த வாசிரியர் சிவஞானயோகிகள், தொல்காப்பியப் பாயிரச் சூத்திரத்திற்கும், அதன் எழுத்ததிகார முதற்சூத்திரத்திற்கு மாபாடியரூபமான விருத்திக டனித்தனி இயற்றினர். இவ்விருத்திகள், திட்ப நுட்பம்வாய்ப்பப்பொருந்தி மற்றவிரண்டன் சொற்பொருண்முடிபெல்லாம் இனிது நனி விளக்கி யியற்றமிழ்க்கோ ரணிவரம்பாய நிலைபெறுகின்றன. சூத்திரவிருத்தி இளம்பூரணர் நச்சினார்க்கினியர் எழுத்ததிகார உரைக்கருத்துக்களைப் பெரும்பான்மையாக ஆண்டாண்டுப் பூர்வபக்கஞ்செய்து தொல்லாசிரியர் இயற்றமிழ் வரம்புநிறுத்தி விளக்காநின்றது. இன்னும், ஆசிரியர் சிவஞானயோகிகள் சூத்திரவிருத்தியில் இளம்

பூர்ணர் சேனாவரையர் நச்சினார்க்கினியரியற்றிய சொல்லதிகார வுரைகளைச் சிற்சில சூத்திரங்களின் முழுது மறுத்து ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்துத் தடைவிடைகளா னினிதுவிளக்கித் தணிவுதோன்ற வேறுரை யுரைத்தார். பொருளதிகாரத்து நச்சினார்க்கினியருரையையுஞ் சூத்திரவிருத்தியில் ஒரோரிடங்களின் மறுத்து அவ்வாறு வேறுரை யுரைத்தார். இங்ஙன மூவருரைகளையு மவ்வாறு மறுத்து வேறுரையுரைத்து உண்மை நிறுத்தினாரேனும், "வடநூற்கடலை நிலைகண்டறிந்த சேனாவரையர் எழுத்ததிகாரத்திற் குரைசெய்தாராயின், இன்னோரன்ன பொருள்களைத்தாந் தோன்ற ஆசிரியர் கருத்துணர்ந் துரைப்பர். அவர் சொல்லதிகாரம்போலப் பெரும்பயன் படாமை கருதி எழுத்திற் குரைசெய்யா தொழிந்தமையின், தமிழ்நூல் ஒன்றே வல்ல உரையாசிரியருள்ளிட்டோ ருரையை ஆசிரியர் கருத்தாகக்கொண்டு பின்னுள்ளோரு மயங்குவாராயினர்" என்றும், "இனிச் சேனாவரையர் ஆகுபெயரு மன்மொழித்தொகையு மொன்றே யெனவும், இயற்பெயர் ஆகுபெயரெனப் பெயரிரண்டாயடங்கும்வழிப் பொற்றொடி யெனப் தொரு பெயர்ப்பட்டது. அதுவே யன்மொழித் தொகையாதலு முடைமையான எச்சவியலுள்ளுங் கூறப்பட்டதெனவும், கூறினார். அது வடநூல் விதியோடு முரணுதலானும், வடநூலோடு மாறுகொள்ளாமற் கூறலே ஆசிரியர் மேற்கோளென "அதனினியறல்" எனனுஞ் சூத்திரத்துத் தாமுங் கூறினாராகலானும், அவர்க்கது கருத்தன்றெனக. இன்னும் அவர், சாத்தனதனை சாத்தனதனோடு எனபுழிச் சாத்தனெனபது துவவிகுதியும் அகரச்சாரியையும் பெற்று உருபேற்றுநின்ற பெயராகலின் ஈண்டு அதுவென வேறாக வைத்து ஆறனுருபென்றல் பொருந்தாதெனபது நோக்காது, உருபேற்றல் பெயர்க்கேயுரிய விலக்கணமென்பது நோக்காது, எச்சவியலுட் கூறுந் தொகைச்சொற்க ணுருபுதொகுதல் ஈண்டுக் கூறுதற்கோரியையின்றென்பது நோக்காது, இன்னமலைவற்றை யுடனெண்ணுதன் மரபன்றென்பது நோக்காது, "பிறிது பிறிதேற்றலும்" எனபதற்கு ஆறனுருபு பிறிதோருருபையேற்றலும் ஆறுருபுந் தொக்குநிற்றலும் வழுவாகாவென உரையாசிரியருரைத்தவாறே யுரைத்தார். இச் சூத்திரப்பொருண் முன்னாகக் கூறுதும் ஆண்டுக்காண்க. இன்னுமொரோவிடங்களி லிவ்வாறே மயங்கிக்கூறுவர். அங்ஙனமொரோவழி மயங்குதல்பற்றி அவரை யிகழற்க, நச்சினார்க்கினியர் முதலியோர்போல யாம் பிடித்ததே சாதிப்பேமென்னுஞ் செருக்கால் யாண்டு மயங்காமையின. முக்குணங்களு மாறி மாறி வருதலின், அது பற்றி யெனைத்துணை நுண்ணறிவாளரு மொரோவழி மயங்குதலியல்பென்க. இக்கருத்துப் பற்றியன்றே, "அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கால் - இன்மை யரிதே வெளிறு" "குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள் - மிகைநாடி மிக்க கொளல்" என்றார் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரு மென்பது. இங்ஙனமாகலின், வடமொழியினும் ஆசிரியர் பாணினியார் தொல்லாசிரியர் சூத்திரங்களுட் சிலவற்றைத் தம்முடைய சூத்திரங்களா லெடுத்தோதி மறுத்து வேறுவிதி கூறுவர். அவர் சூத்திரங்களுட் சிலவற்றை ஆசிரியர் வரருசியா ரெடுத்தோதி மறுத்து வேறு விதி கூறுவர். அவ்விருவரையு மொரோரிடங்களி லாசிரியர் பதஞ்சலியா ரெடுத்தோதி மறுத்து வேறு விதி கூறுவர். அது பற்றி யவ ரிகழப்படா ரெனக. அஃதேல், ஆசிரிய ரகத்தியனார் தொல்காப்பியனார் பதஞ்சலியார் முதலாயினாரு மொரோவழி யவ்வாறு மயங்கிக் கூறுபவாலோ வெனின்,— அவர் தவத்தான மனந்தூயராய் முக்குணங்களையுங் கடந்து இறைவ னருள்பெற்றுடையராதலின், அன்ன ரல்லரென

வுணர்க" என்றும், தொல்காப்பியச் சூத்திரவிருத்தியிற் சேனாவரையர் பெருமை நிலையிட்டார். இனி "அவ்வாறு வந்தன வடமொழி வியாகரண சூத்திர வார்த்திக மாபாடியங்களுள் யாண்டுங் கேட்கப்படாமையின் அது வடமொழி வழக்கறியாருரையாம்" என்று புறங்கூறுவாரு முளார். ஆசிரியர் பாணினியார் பாணினீயத்துள் ஆண்டாண்டு இலக்கியங்கள் நிறுத்தினமையின், த்ருதீயாதிஷு பாஷிதபும்ஸ்கம் பும்வத்காலவஸ்ய। லோபஶ்ஶாகல்யஸ்ய। ருதோ பாரத்வாஜஸ்ய। த்ரிப்ரப்ருதிஷு ஶாகடாயநஸ்ய। த்ருஷிம்ருஷிக்ருஶே: காஶ்யபஸ்ய। என்றற்றொடக்கத்துச் சூத்திரங்களால் தொல்லாசிரியர் சிலர் கொள்கைக்குத் தங்கொள்கை வேறுதல் விளக்கியிட்டார். அஃதென்றே, தத³ஶிஷ்யம் ஸம்ஜ்ஞாப்ரமாணத்வாத்। லுப்யோகாப்ரக்யாநாத்। யோகப்ரமாணே ச தத³பாவேऽத³ர்ஶநம் ஸ்யாத்। ப்ரதாநப்ரத்யயார்த்தவசநமர்த்தஸ்யாந்யப்ரமாணத்வாத்। காலோபஸர்ஜநே ச துல்யம்। எனனுஞ் சூத்திரங்களானே தொல்லாசிரியர் சூத்திரங்களிற் சிலவற்றை மறுத்து வேறுவிதி கூறினார். இனி ஆசிரியர் வரருசியார் விபாஷாப்ரகரணே தீயஸ்ய ஙித்ஸூபஸங்க்யாநம்। ருணே வத்ஸதரார்ணவஸநகம்பலதஶாநாம் வக்தவ்ய:। அக்ஷாதூஹிந்யாமுபஸங்க்யாநம்। யவலபரே யவலா வேதி வக்தவ்யம்। ராயோ ஹலி ஸம்ப்ரஸாரணம்। என்றற்றொடக்கத்துச் சூத்திரங்களானே ஆசிரியர் பாணினியார் குன்றக்கூறினமை எடுத்துக்காட்டினர். அஃதென்றே, அப்பாணினியார் சொல்லிய கார்த்தயாதேரதேஶ்பீடி। ஊந்கர்ண்யநாதேரவிபாஷாப்ரகரணேஷு। என்றற்றொடக்கத்துச் சூத்திரங்களை, காஸ்யநேகாஜ் க்ரஹணம் கர்த்தவ்யம்। நௌகாகாகஶப்தஸ்ய ப்ரதிஷேதோ வக்தவ்ய:। என்றற்றொடக்கத்துச் சூத்திரங்களான் மறுத்து வேறுவிதி கூறினர். இனி ஆசிரியர் பதஞ்சலியார் வரருசியார் மறுத்திட்ட லாதிவத்। என்றற்றொடக்கத்துப் பாணினி சூத்திரங்களை நிறுத்தியும், அவ்வரருசியார் கூட்டப்பட்ட நவஹாவீரஹௌ। என்றற்றொடக்கத்துப் பாணினி சூத்திரங்களை (ஸுத்வித்ர: என்பது ஸுகஸ்வித்ர: என்று படிக்கற்பாற்றென்றிங்ஙன) மறுத்து வேறுவிதி கூறினர். அஃதென்றே, ஷ்ணரோதீர்வொர்ந்ய தந்த்ரம்। என்றற்றொடக்கத்துப் பாணினி சூத்திரங்களில் வரருசியார் மறுத்திடாத பதங்களைத் தாமறுத்து வேறுவிதி கூறினர். இன்னும் ஆசிரியர் பதஞ்சலியார் மாபாடியத்துள் ஓரோரிடங்களில் த்விஸ்த்ர் க்ரஹணம் ப்ரதேயாந்தராயஸ்ய। என்றற்றொடக்கத்துரைகளால் ஆசிரியர் பாணினியார் மிகைபடக் கூறினரென்று வெளிப்படையாக வுரைத்திட்டார். இன்னுமவர், ப்ரியதத்திதாஃ தாக்ஷிணாத்யா:। உஹ தோவம் பூர்வாசார்யா ஏதத்த் க்ருஷ்டே। என்றற்றொடக்கத்துரைகளால் வரருசியாரை இகழ்ந்துரையாடினர். இங்ஙனஞ் சூத்திர வார்த்திக மாபாடியங்களிற் கேட்கப்படுதலின், அது அரபிமானப் பித்துரையாதல் தெற்றென வுணர்ந்துகொள்க. மற்றுப் பட்டோஜிதீக்ஷிதர் இவ்வாறெல்லாம் ஆய்ந்துணர்ந்தன்றே யதோத்தரம் முநீநாம் ப்ராமாண்யம்। என்று அம்மூத்திறத்தாசிரியர்கள் பிராமாணிய தாரதம்மியஞ் சித்தாந்தகௌமுதியுள் அங்ஙன நிலையிட்டுரைத்தாரெனக். இனிச் சூத்திர வார்த்திக மாபாடியங்கண் முறையே தமமுள் ஒன்றினொன்று

விரிந்து பொருளின்று விளக்குதல் பற்றி அங்ஙனங் கூறினாரெனின்,— இலக்கியம் வரையறுக்கின்றுழி அவ்வாறுரைத்தலானும், பிராமாணியச்சொற்கு அது பொருளன்மை யானும், அது போலியுரையென மறுக்க.

அற்றேல், ஆசிரியர் பதஞ்சலியார் "ஆசிரியர் பாணினியார் சூத்திரங்கள் ஓரெழுத்து மாத்திரையும் பயனில ஓதற்பாலாகாது" என்றும், "பாணினியார் சூத்திரங்களால் இலக்கியஞ் சித்திப்பச் செய்யமாட்டாதார் வேறு சூத்திரம் வேண்டியிடாப் பவர், பாணினியார் சூத்திரங்கட்கு விரோதமாக எழுதுவது பிரமாண மாகாது" என்றும், மாபாடியத்துள் எடுத்தோதிய தென்னையோவெனின்,— பாணினியார் மகேசுரனை இறைவன் ஆணைவழி வடமொழி யிலக்கண நூலியற்றினமை யின், அவர் சூத்திரவோத்துக் கடைப்பிடித்து வடமொழி யிலக்கியமாயதலே முறையா மென்று அறிந்தடங்காது, சிற்றுணர்வுடையார், தாந்தா மறிந்தவாறெல்லாம் அவர் சூத்திரங்களுள் ஒருசில மிகைபடக் கூறலாம், ஒருசில குன்றக்கூறலாம், ஒருசில நின்று வற்றலாம் என்று, திருத்தங் காணலுறின், அது பெரியதோ ரிடர்ப்பாடா மென்று அவ்வா றாணைதருவா ராயினா ரென்பது தாம் அருந்தவத்தான் மனமாசறுத்தவராய முக்குணங்களை யுங் கடந்து இறைவனருள் முற்றப் பெற்றுக் கடவுட்டன்மை யுடையராயினமையின், அவ்வாசிரியர் முக்குண வசத்தான் அட்டாத்தியாயியில் ஓரோரிடங்களின் முறை மறந்து உரைத்தனவற்றை முறைமைப்படுத்து வழக்கு வழிப்படுத்துவாராயினர் வரருசி யார் வார்த்திகத்தின் முறை பிறழ்ந்தனவற்றை முறைப்படுத்தியதற்கும் இஃதொக்கும் "ஆசிரியர் பதஞ்சலியார் பாணினியார் சூக்குமமெல்லாம் பயனுடையனவேயாம்" என்று மாபாடியத்துக் கூறி, அவ்வாசிரியர் சூத்திரங்களுள் ஓரோவொன்றை ஆண்டாண்டு மறுத்து வேறு விதி கூறுதன் மலைவாகு" மென்று பின்னுள்ளோர் ஆசங்கித்து, "ஆண்டுப் பயனுடையன வென்றது பொருளின்மொழி யன்றென்றவாறு" என்றும், "அவை இம்மைக்கண் இலக்கியம் பயக்காவிடினும், அத்தியயனவோத்தாய மறுமைபயத்தல் ஒருதலையாகலின், குற்றமாகா" வென்றும், சமாதானங் கூறுதலானும், இதனுண்மை கடைப்பிடித்துணரப்படு மென்க.

அற்றேலஃதங்ஙனமாக, "ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே கேட்போர் பயனொ டாயெண் பொருளும் - வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே" என்னுந் தொல்லாசிரியர் சூத்திரத்துள் யாப்புக் கேட்போர் என்பனவற்றிற்கு உரையாசிரியர் நச்சினார்க்கினியர் உரைத்தவுரை போலியென மறுத் துச் சிவஞானமுனிவர் வேறுரை யுரைத்தனர். ஆண்டு அவ்வாசிரியர்கண் முக்குணமயக் கத்தான் முறைமறந் துரைத்தாரென்றல் பொருந்தாது, அவ்வுரை இறையனார் களவியன் முகத்துக் கணக்காயனார் மகனார் நக்கீரருரைத்த பொருளாகலி னெனின்,— அவ்வுரை இறையனார் களவியன்முகத்து நக்கீரனார் கண்ட பொருளென்பது சிவஞானயோகிகள் அறியாதா ரல்லர். பொருந்துமாற்றிற் கேலாமையானும், வடநூன் மாறுகலானும், அவை முக்குண மயக்கான் முறைமறந் துரைத்த பொருளென்று மறுத்து, ஆசிரியர் கருத்தறிந் துண்மைப்பொருள் கூறினாராகலின், அது பொருத்த முடைத்தாகாமை யாண்டையது என்க. அவ்வுரை மாட்சி தொல்காப்பியப் பாயிரவிருத்தியுட் காண்க; ஈண்டுக் காட்டலுறின் விரியுமென்பது.

அற்றேல், தெய்வச் சங்கப்பலகை மேலிரீஇக் கடைச்சங்கத் தலைமைபூண்ட நக் கீரனார் முக்குண மயக்கான் அங்ஙன் முறைமறந் துரைத்தாரென்றல் வேதவழ

க்கொடு மான்றோர் வழக்கொடு மாறுறுமாலெனின்,— அது வேதவழக்கொடு மான்றோர் வழக்கொடு மாறுறுவாறு காட்டுதும். தெய்வச் சங்கப்பலகை மேலி ருந்து தமிழாராய்ந்தார் கடைச்சங்கப்புலவர் நக்கீரனார்முதல் னாற்பத்தொன்பதி ன்மருளர். அவரெல்லா முக்குணமயக்க முற்றக் கடந்து மெய்யுணர்வானுய ர்ந்தாரென்ற னிரம்பாது. என்னை? அவர் "பாண்டியன் வேண்டுகோளாற் களவி யற்பொரு டனித்தனி கண்டு, தாந்தாங் கண்டதே மெய்யுரையென்று சிலநா ளெல்லா மாறுபடினா'' ரென்றும், பின்னர் ஆலவாயி லழனிறக்கடவுளால் வரங்கிடந்து உப்பூரிகுடிகிழார் மகனாவா னுருத்திரசன்மனைப் பெற்று, அவனானே மெய்யுரை கண்டு தேறினா'' ரென்றும், ஆலவாயமான்மியத்துங் களவியலுரை முகத்துங் கூறுதலி னென்க. அற்றாயினும், 'உருத்திரசன்மனார் நக்கீரனார் களவியற்பொருள் கேட்புழிப் பத ந்தொறுங் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்ப்ப விருந்தார், சங்கப்புலவ ராய்ப்பெற் றது "மெய்புரை பெற்றாம் இந்நூற்கு என்றார்'' என வுண்டாண்டுக் கூறுதலின், நக்கீர னார் முக்குணமயக்க முற்றக் கடந்து களவியற்பொருள் கண்டாரெனக் கொள்ளாமோ வெனின்,— கொள்ளாம். என்னை? உருத்திரசன்மனார் நக்கீரனாருரை அவ்வாறு கேட்டா ரென்றதனான், ஏனைப்புலவரெல்லாங் கண்ட களவியற்பொருளை நோக்க நக்கீரனார் கண்ட களவியற்பொருள் சிறந்ததென்னும் பொருள் போதருதலன்றி, அவர் முழுதுண ர்ந்து அது செய்தாரென்பது அதனாற் பெறப்படாமையி னென்பது.

இன்னும், நக்கீரனார் மெய்யுணர்வின் முற்றுப்பேறுடையராய்க் களவியற்பொ ருள் கண்டாரென்பாரை, அவ்வாறு மெய்யுணர்வுடையராயினார் தெய்வப்புலமைத் திரு வள்ளுவநாயனார் உத்தரவேதம் விதப்பக்கூறச் செய்துகொண்டு சங்கமேவிய ஞான்று, அவரோடு சங்கப்பலகை யொக்க வீற்றிருக்கப்பெறாது, ஏனைப்புலவரோ டிழிந்ததென்னை யோவென்று கடாவி மறுக்க. "திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ - டொருத்தக நற் பலகை யொக்க - விருக்க, வுருத்திர சன்ம ரெனவுரைத்து வானி - லொருக்கவோ வென்ற தோர் சொல்'' "மெய்த்ததிரு வள்ளுவனார் வென்றியார்ந்தார் கல்விநலந் - துய்த்தசங் கத் தார்தாழ்ந்தார் சோமேசா - வித்துறனன, மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப் பிறந்தும் - கற்றா ரனைத்திலர் பாடு'' என்னும் பாக்களானு நக்கீரருள்ளிட்ட சங்கப்புலவர் திருவள்ளுவநாயனாரோடு சங்கப்பலகை வீற்றிருப்பப் பெறாது தாழ்ந்தமை தெளிக.

அற்றேலஃதாக, முக்குணங்களையுங் கடந்து மெய்யுணர்வின் முற்றுப்பேறுடை யரல்லரான நக்கீரனார் முதலியோ ரியற்றிய திருமுருகாற்றுப்படை முதலிய பிரபந்தங் களை முக்குணங்களையுங் கடந்து இறைவனருள் பெற்றுடைய நாயன்மார் திருவாக்குக்க ளோடொப்பப் பதினோராந் திருமுறையில் ஆன்றோர் கோத்துப் போற்றுமா றென்னை கொலெனின்,— அஃதொக்கும். திருமுருகாற்றுப்படை முதலிய பிரபந்தங்கள் நக்கீர னார் முதலியோர் தவத்தான் மனந்தூயராய் முக்குணங்களையுங் கடந் திறைவனருள் பெற்றுடையராயபின், அவர்தம்மா னருளிச்செய்யப்பட்டன; ஆகலின், ஆன்றோர் அவைதம்மையு நாயன்மார் திருவாக்குக்களோ டொப்பப் பதினோராந் திருமுறையிற் கோத்து அவ்வாறு போற்றுவா ராயினாரென்க. அற்றாகலி னன்றே, நம்பியாரூரர் பெரு மானார் "பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்" எனத் திருத்தொண்டத்தொ கைச் சுருதியுள் அவர்தம்மையுந் தொகுத்து அங்ஙனஞ் சேவைசெய்வா ராயினதூஉ மென வறிக. இவற்றானே, யாப்புக் கேட்போர் என்பவற்றிற்கு நக்கீரனாருரைத்த பொ ருள் பொருந்தாவென மறுத்தூஉச் சிவஞானயோகிகள் வேறுரை வகுத்தது பொருத்த

முடைத்தென்பதூஉம், அது வேதவழக்கொடு மாறன்றோ வழக்கொடுமிக வியைவதன்றி மாறுபடுமா றில்லையென்பதூஉம், தெற்றென வுணர்க

வெண்பாமாலை.

இது ஐயனாரிதனாரென்பவ ரியற்றிய ஓர் புறப்பொருணூல். இந்நூல், நச்சினார்க்கினியர் காலத்திற்கு முற்பட்டுத் தோன்றியதென்பது, "மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத் - தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன் - றன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த - துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதற் - பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த" வென்னு மிந்நூற் பாயிரச்செய்யுளை மரபியலுரைக்கண் எடுத்து அவர் காட்டுத லானறிக. இந்நூல், தொல்காப்பியனார் முதலிய பன்னிருவரானுஞ் செய்யப்பட்ட பன்னிருபடலத்தினைத் தனக்கு முதனூலாகக் கொண்டதென்பது, "துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதற் - பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த - பன்னிரு படலம் பழிப பின் றுணர்ந்தோன" என்னு மிந்நூற் சிறப்புப்பாயிரத்தானும் "பன்னிருபடலமுதலாக வழிநூல்செய்த வெண்பாமாலை ஐயனாரிதனாரு மிது கூறினார்" என்று நச்சினார்க்கினியர் மரபியலு ளுரை வகுத்தலானு மறிக. இஃது புறப்பொருளினை வெட்சித்திணை, கரந்தைத்திணை, வஞ்சித்திணை, காஞ்சித்திணை, நொச்சித்திணை, உழிஞைத்திணை, தும்பைத்திணை, வாகைத்திணை, பாடாண்டிணை, பொதுவியல், கைக்கிளைத்திணை, பெருந்திணை யெனப் பன்னிரண்டாக வகுத்துக் கூறும். இவற்றுள், கரந்தைத்திணை—வெட்சித்திணைக்கு மறுதலைத்திணை. நொச்சித்திணை—உழிஞைத்திணைக்கு மறுதலைத்திணை. பொதுவியல்—மேற்கூறிய புறத்திணைகட்கெல்லாம் பொதுவாயுள்ளனவும், பிறவுங் கூறுதலின், அப்பெயர்த்தாயிற்று. கைக்கிளைத்திணை—ஒருதலைக்காம முளளிட்ட பல துறைகளையுடையது. அது ஆண்பாற் கூற்றும் பெண்பாற் கூற்றுமென விரண்டாம். பெருந்திணை—பொருந்தாக் காமமுள்ளிட்ட பலதுறைகளையுடையது. ஏனைத் திணையிலக்கணமெல்லா முற்கூறியவாறுபற்றி யுணர்ந்து கொள்க. இதனுள் நொச்சித்திணையை உழிஞைத்திணையின் பின் வையாதது ஓர் முறைபிறழ்வாமெனபாரு முளராலோவெனின்,— அது முறைபிறழ்வாகாது. என்னை? மதிற்காப்பு அதனை முற்றுதற்கு முன்னரும் ஒருதலையாகச் செயற்பாலதாகலி னென்க. "வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர் - வைத்தூறு போலக் கெடும்" என்பதனானும் அது கடைப்பிடித் துணர்க.

அகப்பொருள்விளக்கம்.

இந்நூலாசிரியன் நாற்கவிராயநம்பி. இஃது அகப்பொருளிலக்கணங்களைச் சுருக்கிக் கூறு நூல். அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், வரைவியல், ஒழிபியலென ஐந்தியல்களுடைத்து.

யாப்பருங்கலம்.

இஃது யாப்பிலக்கணத்தைச் சூத்திரயாப்பின்றற் றெளிவாக வுணர்த்து நூல். இதற்குச் சிறந்தோர் விருத்தியுரையுளது.

யாப்பருங்கலக்காரிகை.

இந்நூல் செய்யுளிலக்கண முரைப்பது, இஃது உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியலென மூன்றியல்களுடைத்து.

வெண்பாப்பாட்டியல்.

இந்நூலாசிரியன் வச்சணந்தி. இது முதன்மொழியியல், செய்யுளியல், பொதுவியலென மூன்றியல்க ளுடைத்து. இதன்கண் மங்கலப்பொருத்தம், சொற்பொருத்தம்,

எழுத்துப்பொருத்தம், தானப்பொருத்தம், பாற்பொருத்தம், உணாப்பொருத்தம், வருணப் பொருத்தம், நாட்பொருத்தம், கதிப்பொருத்தம், கணப்பொருத்தமென்னுந் தசப்பொருத் தங்களி னிலக்கணமும், பிரபந்தங்களி னிலக்கணமும், பிறவுங் கூறப்படும்.

தண்டியலங்காரம்.

இஃது அணியிலக்கணங் கூறு நூல், பொதுவணியியல், பொருளணியியல், சொல்லணியியலென மூன்றியல்க ளுடைத்து.

நேமிநாதம்.

இஃது எழுத்துஞ் சொல்லு முணர்த்துவது.

வீரசோழியம்.

இந்நூலாசிரியன், அருகந்தருட்பட்ட புத்தமித்திரன். இஃது எழுத்துச் சொற் பொருள் யாப்பணி யென்னு மைந்திலக்கணமு முணர்த்து மொரு சிறுநூல். "ஏதமறு சகாப்த மெழுநூற்றிற் கச்சியப்பசிவாசாரியர் தாம் பாடிய கந்தபுராண மரங்கேற்று ழித் "திகடசக்கர" மென்னும் புணர்ச்சி முடிபிற்கு விதி இந்நூல் கொண்டு காட்டினர்" என்று பதிப்புரைகார ருரைத்தார். வீரசோழியம் அகத்தியத்தின்வழித் தோன்றிய தொல்காப்பியத்தினையும் வேறு சில நூல்களையு முதலாகக்கொண்டு செய்ததோ ரியற்ற மிழ்நூல். ஆசிரியர் தொல்காப்பியனார் "யரள வென்னும் புள்ளி முன்னர் - முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும்" என நூன்மரபுள்ளும், "யரள வென்னு மூன்று முன் னொற்றக - கசதப ஙஞநம வீரொற் றாகும்" என மொழிமரபுள்ளும், யரளக்கள் கசதபக்களோடு தனியொற்றாயு மீரொற்றாயு மயங்குமெனக் கூறுதலானும், "யகார விறுதி வேற்றுமைப் பொருள்வயின் - வல்லெழுத் தியையி னவ்வெழுத்து மிகுமே", "அல்வழி யெல்லா முறழென மொழிப" என்று புள்ளிமயங்கியலுட் கூறிவைத்து அவ்விதியை "ரகார விறுதி யகார வியற்றே" "ழகார விறுதி ரகார வியற்றே" என ரகர ழகரங்களும் பெறுமென மாட்டெறிந் தோதுதலானும், ழகரத்தின்முன் வந்து புணருங் கசதபக்கள் இருவழியினு மியல்பாயும் வல்லெழுத்து இரட்டியும் புணர்ச்சி யுறுதலன்றித் திரியாவென்பது தெள்ளிதிற் பெறப்படுதலின், "பதினொடு தொண்டெண்ணி ரண்டாய்த் - தோன்றுடற் பின்னர்த் தகாரம் வரினிரண் டுந்தொடர்பா - லொன்றலைந் தாமுட லாமுனமி லொற்றுக் கழிவுமுண்டே" எனப் புத்தமித்திரன் வீரசோழி யத்து ழகரத்தின் முன்வருந் தகரம் டகரமாய்த் திரியு மென் றுரைத்தது, அங்ங னம் போந்த தொல்காப்பிய விதிக்கு மாறுகோ ளென்று மறுக்கப்படு மெனக. அது தொல்காப்பிய விதிக்கு மாறுகோ ளாயினும் பிற்காலத் திலக்கியங்களி லங்ஙனம் போந்த பிரயோகங் கண்டு அவ்வாறு கூறப்பெற்றே னெனின்,— சங்கத்துச் சான்றோ ரிலக்கியங்களுள்ளும், பிற வான்றோ ரிலக்கியங்க ளுள்ளும் அவ்வாறு போந்த பிர யோகம் யாண்டுங் காணப்படாமையானும், இனி அவ்வாறு போந்த விலக்கியங் காணப்படினும், தொல்காப்பிய மாறுகோளாகலின் வழூஉவென்று களையப்படுவ தல் லது இலக்கணமென்று தழுவப்படா தாகலானும், அது பொருந்தாதென் றொழிக. இனிக் கந்தபுராணத்துத் "திகட சக்கரம்" எனவும், "கீட்டிசை வாயில்" எனவும் போந்த விலக்கியப் பிரயோகங் கண்டு புத்தமித்திர னவ்வாறு இலக்கணங் கூறப் பெற்றா னெனின்,— அது கந்தபுராண விலக்கியப் பிரயோகம்பற்றி வீரசோழியத் தில் அங்ஙனம் இலக்கணங் கூறப்பட்டது, வீரசோழிய விலக்கணவிதிபற்றிக் கந்த புராணத்தில் இங்ஙன மிலக்கியஞ் செய்யப்பட்டதென, ஒன்றனை யொன்று பற்

றுதலென்னுங் குற்றத்திற் கிடனாமென்க. வடநூலார் ஒன்றனையொன்று பற்றுத லென்னுங் குற்றத்தினை இதரேதராச்சிரயதோடமென்றும், தன்னைப்பற்றுதலென்னுங் குற்றத்தினை ஆன்மாச்சிரயதோடமென்றுங் கூறுப. இனி வீரசோழிய முதலிய ஆது னிக விலக்கணநூல்கள், சிற்றறிவுப் புலவர் நூல்களாகலின், அவைதம்முட் கூறப்படு மிலக்கணங்க டவத்தான மனந்துயராய முக்குணங்களையுங் கடந்த திருவருள் பெற்றுடைய தொல்லாசிரிய ரிலக்கணங்களோடு மாறுகொள்ளுழி அவ்வழியே பிரமாணம் மென்று கடைப்பிடித்துணர்ந்து கொள்க. ஆற்றேல், கந்தபுராணத்துத் "திகட சக் கரம்" "கிட்டிசை வாயில்" என்றாங்ஙனம் போந்த பிரயோகந் தொல்காப்பிய முதலிய இலக்கண வழுவாம் போலு மெனின்,— அது இலக்கண வழுவாகாமை இலக்கியவாராயிய லுட் கந்தபுராண வரலாறுரைப்புழிக் கூறுதும்.

நன்னூல்.

இந்நூலாசிரியர் பவணந்திமுனிவர். இஃதெழுத்துஞ் சொல்லு முரைத்துப் பின் னூலென்னும் வைத்து மிகச்சிறந்ததோ ரியற்றமிழ்நூல். ஆசிரியர் தொல்காப்பிய னார் கூறிய எழுத்துச்சொல் லிலக்கணப்பரப்பினைச் சுருக்கி இனிது நன்கு விளங்க உரைத்தலிற் பிற்காலத்தார் எழுத்தாராய்ச்சிக்குஞ் சொல்லாராய்ச்சிக்கும் பற்றினை விரும்பிக் கற்பாராயினர். இஃது பெரும்பான்மையுந் தொல்காப்பிய மரபு நிலை திரி யாமல் எழுத்துஞ் சொல்லு முணர்த்தி, அதற்கோர் வழிநூல் போன்று விளங்கும். ஆயினும், ஓரோரிடங்களிற் றொல்காப்பிய விலக்கணமரபு நிலை திரித்துக்கொண்டு கூறிய இலக்கணங்களுஞ் சில இதனகத்துள்ளன. அவை "சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே" எனவும், "சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்—தேர்ந்து வெளிப் படுத்த வேனை மூன்றும்" எனவும், வரையறுத்தோதியவாறே, சார்பெழுத்து மூன் றெனாது, சில வுயிரெழுத்துக்களையு மெய்யெழுத்துக்களையு முடன் சேர்த்தெண் ணுதலுந் தன்மைச்சொல்லை வுயர்திணையென்னாது விரவுத்திணையெனச் சாதித்தலும் போல்வன. சூத்திரவிருத்திகாரர் அவையெல்லாந் தொல்காப்பிய மரபுநிலை திரியாமை யெடுத்து மறுத்திட்டார். இந்நூற்கு வாய்ப்புடைத்தாயதோர் விருத்தியுரை சங் கரநமச்சிவாயப்புலவரால் செய்யப்பட்டது. ஆசிரியர் சிவஞானயோகிகள் இவ்விரு த்தியை ஆண்டாண்டுத் திருத்திச் சிறப்பித்தனர். சங்கரநமச்சிவாயப்புலவர் கயிலா யபரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்துச் சுவாமிநாததேசிகர் மாணாக்கர். அது "மல ர்தலை யுலகிற் பலநூ லாய்ந்து - செய்வதுந் தவிர்வதும் பெறுவது முறுவதும் - உய் வது மறியே னொருபொரு ளாக - நன்னெறி பிறழா நற்றவத் தோர்பெறுந் - தன்னடித் தாமரை தந்தெனை யாண்ட - திருவா வடுதுறைத் தேசிக னாகிய - கருணையங் கடலெனக் கண்ணினை விட்டகலாச் - சுவாமி நாத குரவனை யனுதின-மனமொழி மெய்களிற் றொழுதவ னருளாற் - பொன்மலை யெனவிப் புவிபுகழ் பெருமை - மன்னிய வூற்று மலைமருதப்பன்— முத்தமிழ்ப் புலமையு முறையர சுரிமையு - மித்தலத் தெய்திய விறைமக னாதலின் - நன் னூற் குறைநீ நவையறச் செய்து-பன்னூற் புலவர்முன் பகர்கென நயப்பலி - னன்னு லுயர்முக நகைநா ணுமே-யென்னு லியன்றவை யியற்றுமிந் நூலுள்" என நன்னூல் உரைமுகத் தவர் கூறுமாற்றானுணர்க.

பிரயோகவிவேகம்.

இந்நூலும் உரையுஞ் செய்த வாசிரியர் சுப்பிரமணியதீக்ஷிதர். இந்நூல் வட மொழிச் சத்தசாத்திரத்தைக் காரகபடலம், சமாசபடலம், தத்திதபடலம், திங்குப

படலம் என நான்கு படலங்களாக வகுத்து அவை தம்மைத் தென்மொழியிலக்கணத்தோ டொப்பித்துக் கூறுமுகத்தானே வடமொழிக்குந் தென்மொழிக்கு மிலக்கண மொன்றென்று நிலையிட்டுரைக்கும். இவ்வாற்றால், வடமொழிவல்லார் தென்மொழியிலக்கண மறிதற்கும், தென்மொழிவல்லார் வடமொழியிலக்கணமறிதற்குங் கருவியாய்ச் சிறப்ப திந்நூலென்றுணர்க.

இலக்கணவிளக்கம்.

இந்நூலும் உரையும் இயற்றிய வாசிரியர் வைத்தியநாததேசிகர். இஃது எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரமென, மூன்றதிகாரங்களுடைத்து. இதில் எழுத்துச் சொற்பொருள் யாப்பணியென்னு மைந்திலக்கணங்களுங் கூறப்படும். வைத்தியநாததேசிகர் இந்நூலின்கட் பெரும்பான்மையாற் றொல்காப்பிய நன்னூற்சூத்திரங்களை கொண்டும், சிறுபான்மையாற் றண்டியலங்காரம் யாப்பருங்கலம் பாட்டியல் முதலிய வற்றின் சூத்திரங்கள் கொண்டும், தாமியற்றிய சூத்திரஞ்சில தலைப்பெய்தும், செய்தனர். இதனானே இஃதோர் புதுநூலாயினும் பழைய விலக்கண நூற்றிரட்டென்றே கோடற்பாற்று. இந்நூற் சூத்திரவுரைகள் ஆண்டாண்டுத் தொல்லாசிரியர் மேற்கோண் மலைவு முதலிய குற்றங்கள் பலவுடையனவாயிருத்தல் கண்டு ஆசிரியர் சிவஞானயோகிகள் இதற்கு இலக்கணவிளக்கச்சூறாவளியென ஓர் மறுப்பியற்றினர்.

இலக்கணக்கொத்து.

இந்நூல் கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறைச் சுவாமிநாததேசிகராலியற்றப்பட்டது. இது தொல்காப்பிய விலக்கண நூலினுந் தொல்காப்பியங்களிலும் அருகிக்கிடக்கும் விதிகளைப் பெருகத்திரட்டி வடமொழியிலக்கணவழக்குஞ் சிலவிராய்க் கூறு நூலாம். இது வேற்றுமையியல், வினையியல், ஒழிபியலென்னு மூன்றியல்களாற், சொல்லிலக்கண நுட்பந் தெளிதிற றுறைப்படுத் துணர்த்துமோர் சிறப்புடைநூலாம்.

இலக்கணவிளக்கச்சூறாவளி.

இஃதியற்றினார் ஆசிரியர் சிவஞானயோகிகளென்பது மேலுரைத்தாம். இஃது இலக்கணவிளக்கநூலுரை வழுக்களை இனிது விளங்கவாசங்கித்து எடுத்துக்காட்டு முகத்தானே தொல்லாசிரியர் எழுத்திலக்கண நுட்பமுஞ் சொல்லிலக்கண நுட்பமுந் துணிவு தோன்ற வுணர்த்தும். "சிவஞானமுனிவர் சூறாவளியுள் இலக்கணவிளக்கநூலார் "மலைமகளொருபான் மணந்தலை களித்த-தலைவனை வணங்கிச் சாற்றுவ னெழுத்தே" என்புழி "மலைமக" ளென்பது மலையு மகளெனவு மமங்கலப்பொருடந்து தொகையார் பொருள் பல வாய்ப்பத் தோன்றலின், வழுவாமென்று மறுத்துரைத்துத், தருக்கசங்கிரக தீபிகை முகத்து "மலைமகண் மணந்த வுலகினுக் கிறைவன" எனத் தாமுமவ்வாறு மங்கலங்கூறியது அவர்க்குப் பெரியதோரிழுக்கா" மென்பர் சிலர். அது நுணுகியாராமையாற் கூறுங் கையறியா வுரையாம். யாதினாலெனின்,—ஓதுதும். நூலாசிரியர் தாம் தமது நூற்குரையியற்றுவராயின், நூலினிது முடிதற்பொருட்டுக் கூறு மங்கலவாழ்த்தே உரை யினிது முடிதற்பொருட்டு மமையுமாகலின், உரைக்கு வேறு மங்கலவாழ்த்துக் கூறல் வேண்டாவென்பது, ஒருசாராசிரியர் கோட்பாடு. நூல் இனிது முடிதற்பொருட்டுக் கூறு மங்கலவாழ்த்து அஃது இனிது முடிதற் பொருட்டாயே யமைக, உரைக்கு வேறாக மங்கலவாழ்த்துக் கூறற்பாற்றென்பது, மற்றொருசாராசிரியர் கோட்பாடு. பிரயோகவிவேக நூலுடையார், இலக்கணக்கொத்து

னூலுடையார், இலக்கணவிளக்க நூலுடையார் முதலாயினார் நூன்மங்கல மொன்றுமே கூறி அஃதுரைக்குமாமென் றொழிந்தாராகலின், அவை முன்னதற்கும், அன்னம்பட்டர் முதலாயினார் நூன் மங்கலமும், அதனுரை மங்கலமும், வேறு வேறு கூறினாராகலின், அது பின்னதற்கும், எடுத்துக்காட்டுக்களாத லறிக.

நூலுரைகளை யொற்றுமை நயத்தானொன்றெனவும் வேற்றுமைநயத்தான் வேறெனவுங்கொண் டவ்வாறு செய்தலின், அவ்விருகொள்கைகளும் வழக்கென வான்றோர் போற்றிக் கோடற் கேற்பனவாத லுணர்க.

இனித் தருக்கசங்கிரகமும் அதனுரையும் தென்மொழியாற் கூறப்புகுந்த வாசிரியர் சிவஞானயோகிகள், இங்ஙன மாசிரியன்மா ரொன்றற்கொன்று மாறுபாடாகக் கொண்ட இரண்டு கொள்கைகளுள், ஒருதலைதுணிதலான் முன்னையதனையே சமமதமாகத் தழீஇ, "மன்றவாணனை மனத்திடை நிறுவிவண் டுறைசை - வென்றசீரமச் சிவாயமெய்க் குரவனை வணங்கி - என்றனைப்பொரூஉ மிளையவர்க் கினிதுணர் வுதிப்பத் - தென்றமிழ்ச்சொலாற் செயப்படுந் தருக்கசங் கிரகம்" என்னுஞ் செய்யுளான் மங்கல வாழ்த்துச் செய்தருளினா ரென்பது.

அற்றேல், அக்கொள்கை தழீஇ யங்ஙனஞ் செய்வாராயினார்க்கு, "மலைமகண் மணந்த" என்னும் பிறசெய்யுள் ஆண்டுச் செயாதொழிதல் வேண்டுமாலெனின்,--- அறியாது கடாயினாய். அவ்வாசிரியர், "மொழிபெயர்த்துத்தாப்பட் யாத்த" லென்னும் யாப்பினானே அன்னம்பட்டர் வடமொழிக் கணியறிந்த தருக்கசங்கிரக நூலினையும், அதனுரையினையுந் தென்மொழியான் மொழிபெயர்த்துத்தாப்பட் யாத்தல் ங்ஙனந் தருக்கநூல் செய்தருளுவாராயினமையின், அவ்வட நூலாசிரியர் கொள்கை யதுவென்று காட்டிய அப்பிறசெய்யுட் செய்தருளினர். ஆகலின், அது குற்றமாகா தெனக.

அற்றேல், அவ்வாறு காட்டல்வேண்டி அப் பிறசெய்யுண் மொழிபெயர்த்துச் செய்தார்க் கதனை மங்கலமொழி முதலாகச்செய்தலே முறையாமன்றி "மலைமகள்" என அமங்கலம்பட முதற்சீர்தலைப்பெய்து அவ்வாறு செய்தன முறைமையாகாதாம் பிறவெனின்,—அற்றன்று; முன்னைக் கொள்கையேதழுவி "மன்றவாணனை" என நூல் உரை இரண்டும் இனிது முடிபுபோக மங்கலச்செய்யுண் முதற்கட்செய்தருளினாராகலின், பின்னைச் செய்யுளுமங்கலமாகச் செய்திடின், தாந்தழீஇய வக்கொள்கைக்கு மாறாமென்று கண்டு, அங்ஙன மங்கலம்படச் செய்யாராய "மலைமகள்" என்ற தொகையார் பொருள் பலவாய் அமங்கலம்பட, அவ்வாறு செய்தருளுவா ராயினமையி னெனக.

அஃதேல், அவ்வாசிரியர்க்கதுவே கருத்தாமாறு எற்றாற் பெற்றீரெனபாரைப், பிரயோகவிவேகநூலார் முதலாயினார்க் கது கருத்தாமா றெற்றாற் பெற்றீரென்று கடாவி மறுக்க. பிரயோகவிவேகநூலார் முதலாயினார் நூன்முக மங்கலச்செய்யுளே யியற்றி யுரைமுக மங்கலச்செய்யுள் வேறு செய்யாமையின், அவ்வருத்தாபத்தியான் அவர்க் கது கருத்தாதல் பெற்றாமெனின், ஆசிரியர் சிவஞானயோகிகள் நூன்மங்கல "மன்றவாணனை" யென மங்கலம்படச்செய்து உரைமங்கல "மலைமக" ளென்றதொகையார் பொருள்பலவாய், அமங்கலம்படச்செய்தலின், அவ்வருத்தாபத்தியானே யாமும் அவ்வாசிரியர்க் கது கருத்தாதல் பெற்றாமெனக.

இன்னும், "மன்றவாணனை மனக்கிடைகிறுவி" எனவும், "வணிறைசை வெணாசீர் நமச்சிவாயவெனக் குரவனை வணங்கி" எனவும், முறையானே தமது சந்தான குரவ[illegible] [illegible] நடராசமூர்த்தியையும், தமது குருமுதல்வரையும், மொழி[illegible] [illegible]டலைப்பெய்து கின்றனிதோதி[illegible]. பிறசெய்யுள் வடமொழியுட் கிடந்தவாறே மொழிபெயர்த்துக் கூறுமாற்றலும், அவராசிரியாகத்துவே கருத்தாதல இனிதறிப்படும் மெனக.

அவ்வாறன்றி, ஒருநூ[illegible], [illegible]லவாழ்க் தொன்றெயனறிய பல கூறிஞரு [illegible]கலமுற[illegible] [illegible], [illegible] செய்யுட்களோரும் யாப்புறுத் [illegible]யாமை வழக்கினக[illegible] [illegible], வடமொழிக் கருத்துக்களங்கிரக நூலுமுறையுந் தென்மொழியாகிருந்து [illegible] செய்யுளுறு [illegible], முன்னைச் செயுளிற்பாலை [illegible] [illegible] முதநூற் [illegible] துரைசதல, [illegible] "[illegible] மேலேலருதோ" வென்றல் கடாய[illegible]சாமை [illegible]

அற்றேலற்றாக, மொழி[illegible] [illegible] யாப்புள் ஆணடிலொச பொருள்க டலைப் பெய்து அங்ஙனங் கூறு[illegible] [illegible]மெனின், மொழிபெயர்த்தல யாப்புள் அப் பொருள்களோ[illegible] [illegible] [illegible] உரை[illegible] [illegible] அமையாதெனப் [illegible], அ[illegible] [illegible] [illegible] பொருள்க டலைப்பெய்து கூறுக[illegible] [illegible] [illegible], [illegible]முறையேயா [illegible]. இ[illegible] [illegible] [illegible] [illegible] றறிவறு[illegible] கன்று, ஆசிரியர் [illegible] [illegible] [illegible] [illegible]மொழிபெயர்" [illegible], "மொழிபெயர்[illegible] [illegible] [illegible]பினவே" என றங்ஙனங் கூ[illegible] [illegible]யாயினவும் [illegible] [illegible] அகத்[illegible]தறியாத [illegible] "[illegible] [illegible] [illegible] [illegible] [illegible]ழிபெயர்ப்பு - [illegible] நூல[illegible] [illegible]" எனக் கூ[illegible]சிதை[illegible] [illegible]ப்படுத்து, மொழிபெயர்ப்பியாப் பிலக்கணங் குன்றக் கூறிய புரைப்பாயிற் [illegible]

இ[illegible] [illegible] [illegible] நுணுகி நோக்காது, "இலக்கணவிளக்கநூலார் "மலைமக" [illegible] [illegible]" மெனச் சொற்ற [illegible] [illegible] "[illegible] [illegible]ருபான மணத்தென்று" அவ்வாறெய்தது இழுக்குற்று [illegible] [illegible] கையறியாமாந்தா என கடாவ[illegible] [illegible]. அது நிற்க.

இனிக் "குடாகாயம வ[illegible]நான முடிபு" என்றும், அதனைக் "குடவாகாயம்- குடாகாயமென மரீஇயிறறுக, [illegible] ஆமபல - குளாமபலென மரீஇயினற்போல" "எனச் சிவஞானபோதச் சிற்றுரையிற் சிவஞானமுனிவர் உரைத்த தேலாது" என்றும், கூறி னரு முளராலோவெனின்,— 'குடம்' என்பது தமிழியற்சொல்லாகலின், அதனோடு புணருமாகாயந் தீர்க்கசந்தி பெறுதல் சாலாதென்பார், சிவஞானயோகிகள் "குடவா காயம - குடாகாயமென மரீஇயிற்று" என்றுரைத்தாராகலின், அஃது சாலாமை யாண் டையதென மறுக்க. குடந் தமிழியற்சொல்லாதல், "குடந்தமபட்டு," "குடக்கூத்து" "குடமுழா" என்றற்றொடக்கத்தாற் பயின்று வருந் தமிழ் வழக்குரைகளா னறிக. இன்னும், குடம், தமிழியற்சொல்லென்பது, "குடந்தமபட்டு" என்வருந் திருமூரு

காற்றுப்படைத்தொடர்க்கு— "வழிபட்டு" என்றார், "ஙைகசாப்பட டென்றும் உரைப்பர்" என்றும், "குடவென்பது சடவென்பதுபோல விளங்காததுவேரா னுரிச்சொல்லாகலின் அதனடியிற் பிறந்த பெயருமாம்" என்றும், நச்சினார்க்கினியருரை கூறுதலாலு மறிக.

வடமொழி அமரநிகண்டின் அந்நூலார் 'குடம்' வடசொல்லாகச்சொன்னா ரோராதலின், அது வடவியற்சொல்லுமாம். ஆயினும், அஃதாண்டுத் தமிழ்ச்சொற்போலப் பெருவரவிற்றாகாது அருகி வழங்குதலானும், வடநூலார் 'கடாகாசம்' 'மடாகாசம்' என வழங்குவதன்றிக், 'குடாகாயம்' என யாண்டும் வழங்காமையானும், அதனை வடசொல்லென வைத்து முடிபு கூறாது, தமிழ்ச்சொல்லென வைத்து அவ்வாறு மரூஉ முடிபு கூறினர் ஆசிரியர் சிவஞானயோகிகளென்றுணர்க. குடம் பொதுவெழுத்தானாய சொல்லாதலின், இருமொழிக்கண்ணும் அங்ஙனம் வெவ்வேறு பொருள் குறிக்கு மொழியாதற் சேறலுமாறு அறிக.

அற்றேல், லஃதங்ஙனமாக. ஆசிரியர் சிவஞானயோகிகள் "குடாகாயம்" வடநூன் முடிபாமெனக் கூறியதென்னையோவெனின்— "குடாகாயம் வடநூன் முடிபெனக் கோடலு மொன்று" எனச் சிவஞானமாபாடியத்துங் கூறினாராகலின், அது கடாவன்றென் றொழிக.

இலக்கணமரபியன் முற்றிற்று

இலக்கியமரபியல்.

தமிழிலக்கியம் - திருமுறையிலக்கியம், சங்கவிலக்கியம், காவியவிலக்கியம், புராணவிலக்கியம், இதிகாசவிலக்கியம், பல்வகைச்சமயசாத்திரவிலக்கியமெனப் பலதிறப்படும்.

மேற்றுணையோர் பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரையென் றித்தொடக்கத்துத் தலைச்சங்க விலக்கியங்களும், கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலையகவலென் றித்தொடக்கத் திடைச்சங்கவிலக்கியங்களும், இறந்தனவாதலான், அவற்றின் வரலாறறிந்து கூறுமாறில்லை. கடைச்சங்கவிலக்கியங்கள் - நெடுந்தொகை நானூறு, குறுந்தொகை நானூறு, நற்றிணை நானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, நூற்றைம்பதுகலி, எழுபதுபரிபாடல், கூத்து, வரி, பேரிசை, சிற்றிசையென் றித்தொடக்கத்தன. இவற்றுட்சில இறந்தன, பல நிலவுகின்றன. இவையும் இன்னோரன்னவுமான கடைச்சங்க விலக்கிய வரலாறு திருமுறையிலக்கியங்களின் பின்னாகக் கூறுதும்.

திருமுறையிலக்கியம்.

திருமுறையோத்தின் முறைவைப்பு.

திருமுறையிலக்கியங்கள் எங்ஙனஞான்று அவதரித்தனபற்றியும், அவையெல்லாந் திருவருளோத்துக்களாதற் சிறப்புப்பற்றியும், அவற்றின் வரலாறு முதற்கட்டுரைத்துச் சொல்லுதும். திருமுறையிலக்கியங்கள் பன்னிரண்டு திருமுறைகளாக வகுக்கப்பட்டன. ஆளுடைய பிள்ளையார் அருளிச்செய்த தேவாரவோத்து முதன்மூன்று திருமுறைகளாம். திருநாவுக்கரசர் அருளிச்செய்த தேவாரவோத்துப் பின்மூன்று திருமுறைகளாம். நம்பியாரூரர் அருளிச்செய்த தேவாரவோத்து அதன்பின்னொரு திருமுறையாம். இவ்வாற்றானே தேவாரவோத்துக்கள் ஏழு திருமுறைகளாயின வென்பது. வாதவூரடிகள் அருளிச்செ

ய்த திருவாசகத்தோத்திரமும் திருக்கோவையும் எட்டாந்திருமுறையாம். திருமாளிகைத் தேவர் முதலிய வொன்பதின்மரும் அருளிச்செய்த திருவிசைப்பாவும், அவருட் சேந்தனார் அருளிச்செய்த திருப்பல்லாண்டும், ஒன்பதாந்திருமுறையாம். திருமூலநாயனார் அருளிச்செய்த திருமந்திரம் பத்தாந்திருமுறையாம். திருவாலவாயுடைய சிவபிரானு முதலாயினோர் அருளிச்செய்த திருமுகப்பாசுரமுதல் திருநாவுக்கரசு தேவர் திருவேகாதசமாலை யீறான நாற்பது பிரபந்தங்களும் பதினோராந்திருமுறையாம். அருண்மொழித்தேவர் அருளிச்செய்த திருத்தொண்டர் பெரியபுராணம் பன்னிரண்டாந் திருமுறையாம்.

தேவாரந் திருவாசகந் திருக்கோவை திருவிசைப்பாத் திருப்பல்லாண்டு திருமந்திரந் திருமுகப்பாசுரமுதலிய நாற்பான் பிரபந்தங்களெனு மிவை தம்மை அபயகுலசேகரசோழமகாராசன் வேண்டிக்கொள்ள நம்பியாண்டார்நம்பி பதினொரு திருமுறைகளாக அடைவுபடுத்தருளினார். இனித் தேவாரத்திருமுறைகளேழற்கும் பண்ணடைவு, திருநீலகண்டயாழ்ப்பாணர் மரபிற் பெண்மகளொருத்தியால் அபயகுலசேகரசோழமகாராசன் காலத்து வகுக்கப்பட்டது. இவ்வாறெல்லாந் திருமுறைகண்டபுராணத்துட் காண்க. அருண்மொழித்தேவர் அருளிச்செய்த திருத்தொண்டர்புராணம் பன்னிரண்டாந் திருமுறையாக அநபாயச்சோழமகாராசன் பெருமானாணையால் ஆன்றோர் அவன்காலத்து வகுத்தருளினர். இவ்வரலாறு திருத்தொண்டர்புராண வரலாற்றுட் காண்க.

ஆளுடைய பிள்ளையார் வாகீசர் தேவாரத்தோத்திரங்களை முடிசூடு திருமாறன் காலத்தும், நம்பியாரூரர் தேவாரத்தோத்திரங்களை அவன்வழித் தோன்றலாகிய மற்றொரு மாறன் காலத்தும், அருளிச்செய்தனர். வாதவூரடிகள் திருவாசகந் திருக்கோவை யென்னு மோத்துக்களை அரிமர்த்தனவழுதி காலத்து அருளிச்செய்தனர். அரிமர்த்தனவழுதி, முடிசூடு திருமாறன் முற்றோன்றலாயுள்ளான். அது ஆலவாய்ப்புராணத்துட் காண்க. "தரிமைக் குற்றஞ்செய்வாணும்" என்னும் வாகீசர் திருவாக்கும் இக்கருத்துணர்த்தி நிற்கும்.

தேவாரத்தோத்திரங்கள் திருவாசகத்தோத்திரங்களுக்குச் சிராமசந்திரன் சரித்திரப் பிரயோகமும் அவற்குப் முன்னோன் சிலர் சரித்திரப் பிரயோகமும் அவற்குப் பின்னோன் பாரதகாலத்து மன்னர் முதலியோர் சரித்திரப்பிரயோகமும், காணப்படுதலானும், அவற்றுள் இக்கலிகால சரித்திரப் பிரயோகம் யாதும் வாராமையானும், அவை நாங் கலியுகத்தின் முற்பொழுதத்து அவதரித்தன வென்பது தெளிந்துணரப்படும். இனி ஆசிரியப்பாடை நூல் வழிப்பட்ட சிலர், தென்றமிழ்க்கால வரலாறறியாது தமிழாசிரியர் நூலுரை பற்று முறையறச்சொல்லாது, பிறழச்சொல்லி, ஆளுடைய பிள்ளையார் முதலிய வுண்மை நாயன்மார், Christ பிறப்பின் பின் அவதரித்தவரென்று தமக்கு வேண்டியவாறு கூறுவர். Christ இக்கலியுகத்தின் மூவாயிரத்தொருநூற்றைம்பதின் பின் தோன்றினென்பது ஆசிரியப்பாடை நூல்களானும் அறியப்படுதலானும், "கடைச்சங்க மிரீஇய பாண்டியர் முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதி யீறாக நாற்பத்தொன்பதின்மர்" என்றும், "கடைச்சங்கம் ஆயிரத்தெண்ணூற்றைம்பதிற்றி யாண்டு நிலவிற்று" என்றும், தொல்லாசிரியர் மேலோரான கடைச்சங்கத் தலைமைப் புலவரான நக்கீரனார் களவியலுரை முகத்துக் கூறுதலானும், கடைச்சங்க மொழிந்து

ஞான்று தொடங்கி இற்றை ஞான்றுவரையுள்ள காலம் இரண்டாயிரத்தின் மிக்க தென்பது தமிழ் நூலுரைகளால் இனிதறியப்படுதலானும், ஆளுடைய பிள்ளையார் கூடற்றிருமாறனைத் திருப்பதிகத்தருளாற் சுரப்பிணி தீர்த்தாண்டருளிய சமயாசாரிய ரென்பது திருத்தொண்டர் பெரியபுராண முதலியவாற்றாற் பெறப்படுதலானும், அவர் கூற்று வேதவழக்கொடு மாணன்றோ வழக்கொடு மாறுபாடுற மயக்கவுரையே யென்றொழிக.

அற்றேலஃதாக; திருவாதவூரடிகள் அரிமர்த்தன வழுதிக்கமைச்சராய அவனைத் தெய்வவாற்றலால் ஆட்கொண்டருளிய சமயாசாரிய ரென்பதூஉம் ஆளுடையபிள்ளையார் முதற்றிருமாறனைக் கூனிமிர்த்துச் சரணமடைவித்து ஆட்கொண்டருளிய சமயாசாரிய ரென்பதூஉம் புராணநூல்களா னறியப்படுதலின், திருவாசகத்தினையுந் திருக்கோவையினையுந் தேவாரத் திருப்பதிகங்களுக்கு முன்வைத்தோதுதலே முறையாமெனின்,— அதுவே காலம்பற்றிய முறையாயினும், திருஞானசம்பந்தர் உண்மைநாயன்மாருட் டலைமூவராய முறையென பிள்ளையார் முதலாக மூவர் முதலிகளாற் சொல்லப்பட்ட முதலிய வுறுப்பிற்றுப் முதலொழிந்த தனியிறைச் சொல்வழக்காட்டி முன்னின்று அவையனைத்தும் உண்மையாகிய உண்மைப் பெருமையடிகளைக் கொண்டு திருமுறையாக முதலிய வைத்து அருளிச்செய்த ஞானசம்பந்தராய ஆளுடைய பிள்ளையார் முதலிய மூவர் திருப்பதிகங்களைத் திருமுறை யெனக் கொண்டு, அவற்றின் பின் இயற்றிய சமயாசாரியராகலான், நம்பியாண்டார் நம்பி அருளிச்செய்த தேவாரத் திருவோத்துக்களை மறைத் திருமுறையாக முதலாக வைத்து அவ்வாறு திருமுறை வகுப்புச் செய்தருளுவாராயினா ரென்றுணர்க.

இனி வாசீசர் வன்றொண்டர் திருவோத்துக்கள், ஆளுடையபிள்ளையார் திருவோத்துப்போலு மியலு மிசையு முடையவாய தேவார மெனப்படுதலானும், அவை தம்மை மூவர் திருமுறைகளுக்குப் பிற்றிருமுறைகளாகக் கொண்டவாறு வகுத்தருளிச், சமயாசாரியர் திருவாசகத்தினைத் தமிழ் வேதமாகக் கொள்ளுமையால் திருவாசகந் திருக்கோவைகளை அவற்றின் பின்முறையாகக் கொண்டு அவ்வாறு வகுத்தருளினர். திருவிசைப்பாத் திருப்பல்லாண்டென்னும் போத்துக்கள் வேதப்பொருண் மலிந்த ஓதற்கரிய விசையமைதியுமுடையவாய அருளோத் தொடர்புடையுறுதல் பற்றி, அவை தம்மை அவற்றின் பின்னொன்பதாந் திருமுறையாகக் கொண்டவாறு வகுத்தருளினர். திருமந்திரம் வேதப்பொருள் விராய வேத வேதாந்தத் தெளிவான சிவாசம சாரப்பொருண் மலிந்து சிறப்புத் தோன்றுதலின், அதனை அவற்றின் பின் பத்தாந் திருமுறையென அவ்வாறு வகுத்தருளினர். திருமுகப்பாசுர முதலிய நாற்பது பிரபந்தங்களும், தெய்வத் திருவருளாற் கைவந்து கிடைத்த உண்மை நாயன்மார் திருவாக்குக்களாய அருட்பா ஓத்துக்கள் முறுதலின், அவை தம்மை அதன் பின்னுகக் கொண்டு பதினொராந் திருமுறையென அவ்வாறு வகுத்தருளினர். மற்றுத் திருமுகப்பாசுரம் ஆலவாயில் அமர்ந்த சொக்கக் கடவுளானவிறையனார் திருவாக்காதலின், அதனைத் திருமுறைகட்கெல்லா முதலாகக் கொண்டு வகுத்தலே முறையாம் பிறவெனின்,— அஃதப்பொருத்தமின்று; பாணபத்திரரென்னு மன்பர் பொருட்டு வெளிவந்து அவர் வேண்டிற்று அருளுதற்பொருட்டுக் கட்டளை செய்தோர் திருமுகப்பாசுரமாய முழு நூற்றன்மையெய்தாமையின், அதனை அவ்வியல்புடைய பிரபந்தங்களோ டொன்றெனக் கொண்டவற்றின் முதற்கட்டாக அவ்வாறு வகுத்தருளினர்

ரென்றறிக. பெரிய புராணந் திருவருட்பாவாயத் திருமுறைகள் அருளியருளிய நாயன்மாருட் பெரும்பான்மையோர் சரித்திரங் கூறி, அந்நாயன்மார் அருளொழுக்கத் திற சோதிலக்கியமாய் நிறைந்த சிறப்புடைமை பற்றி. அதனை இறுதிக்கட் பன்னிரண்டாந் திருமுறையென றவ்வாறு வகுத்தருளினார்.

இனித் திருத்தொண்டத் தொகையுட் போந்த தனியடியாருட் கண்ணப்பநாயனாரும், சண்டேசுரநாயனாரும், கோச்செங்கட்சோழநாயனாரும், சாக்கியநாயனாரும், புகழ்த்துணைநாயனாரும், காரைக்காலம்மையாரும், மாணிக்கவாசகர் போல ஆளுடையபிள்ளையார்க்குந் திருநாவுக்கரசர்க்கு முற்பட்ட நாயன்மாராதல் வெள்ளிடைமலை; அது 'வேயனைய தோளுமையொர் பாகமது வாகவிடை யேறிசடை மேற் - றூய மதி சூடிசுடு காட்டிடை மாடிமலை தன்னில் வினையை - வாயகலச் சார்பவை செயும் வேடன்மலை யாகுமது - காயமனையி லைவிடந் திசை கூடுகாளத்திமலையே" எ-ம் "பீரடைந்த பாலதாட்டப் பேணுந் தவத்தோனை - வேரடைந்து பாய்ந்த தாளை வேர்தடிந்த சான்றானைச் - சீரடைந்த கோயின்மல்கு சேய்ஞலூர் மேயவனே" "எரித்தவன்முப்புரம் எரியில் மூழ்க - தரித்தவன் கங்கையைத் தாழ்சடை மேல் - விரித்தவன் வேதங்கள் வேறுவேறு - தெரித்தவன் சீர்சிலம்பணிந்த கோயிலின் சேர்வரே" எ-ம் ஆளுடையபிள்ளையார் தேவாரமொழிகளாலும், 'புலால் நாறுமான் பூவும்நீரும் கொண்டடி போற்றமாட்டா - வலஞ்செய்து வாயிற்றாலாட்டினை - பந்தாச்செய்த - சிலந்தியை யரசாக்கிச் சிறப்புச் செய்தருளல் - கலந்தபூஞ்சோலை சூழ்ந்த கணிகையினியடிகளோ" எனவும் "புகழ்த்துணை மறவாதோடி - வெறிக்கலம் புகுமலர்க் கைக்கொண்டானை" எனவும் "அத்தடிமைசெய்யுந் தண்ணளிச் செல்வனை கொண்டவன் காட்டிக்கின்றான்" மிக்கதாளிவையிக்க தட்டைக்குத் துயரம் முழுமையே ... தத்துவம் - வடிவுதவ நு கதி ... பழுமை வருமென்றிருநாவினை நினைந்தவறிய - புகழ்த்துணை கட்புச்செய் துகந்தீர் பொழிலார் திருப்புகலூர்ப் புனிதரே' எனவும் திருநாவுக்கரசர் தேவாரமொழிகளாலும், 'இறைவனைக் கூறின் புவியுளோர் யாருங்காண வேமுடைந்து போந்திறைச்சிப் பெருமலை மரு - மன்மதன் தந் தலையானே கடந்து போன்று மலையைப்பட்டா திருவாலங் காடா மென்று - தமைப்படையாமூத்தார் பித்தக்கை ஒன்றிச் சண்டைவரு சிராப்பணியார் சாரச் சென்று - செம்மைநெறி மூவாத பதியினை மார்க்கா செழும்பச்சிலை நிறைவுபவனி சேர்ந்தார்" என்னும் அருண்மொழித்தேவர் பெரியபுராணத் திருவாக்கானும், பிறவாற்றானு மறிக. இனித் தம் முற்பட்ட நாயன்மார் பிறருள் ராதல் உரையளவையாற் பெறப்படுவன வாக, மற்றியார் முடிக் கண்ணப்பநாயனாருஞ் சண்டேசுரநாயனாரும் யாதினும் அடிகளுக்கு முன் விளங்கியருளினாரோ. அது "கண்ணப்பனொப்பதோர் அன்பின்மை கண்டபின் - என்னப்பனென்னொப்பிலென்னையுமாட் கொண்டருளி - வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச் - சுண்ணப் பொன்னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ" எ-ம் "தீதில்லை மாணி சிவகருமஞ் சிதைத்தானைச் - சாதியும் வேதியன் றாதைதனைத் தாளிரண்டுஞ் - சேதிப்ப வீசன் றிருவருளாற் றேவர்தொழப் - பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்" எ-ம் வரும் அவர் திருவாசகச் சுருக்கனானறிக. "கண்ணப்பனொப்ப தோரன்பின்மை" எனபுழி, ஒப்பு மறுதலைப் பண்பினைக் குறித்து வுவமம். மற்றிது 'வினைப்பயன் மெய்யுரு' வென்ற நான்கனுள் யாதன் பாற்படுமெனின்,—அன்பு மறுதலைப்பின்மையும் பொருட்பண்பாதலின், மெய்யின் பாற்பட்டு அடங்கு மெனக.

"ஆளுடையபிள்ளையாரும் வாகீசரும் தம்முளுடபுலமை நட்புடையராய் வைதிக சைவத் திருநெறி வளர்த்தருளினு ரென்று அருண்மொழித்தேவர் முதலியோர் திருத்தொண்டர் புராண முதலியவற்றில் அவர் சரித்திரம் பரவியருளுதலின், அச் சமயாசாரிய ரிருவரும் ஓர் காலத்து விளங்கியருளினு ரென்பது ஒதாமே விளங்கும் இனி நம்பியாரூரர் "பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்" என்று திருத் தொண்டத் தொகையுட் சேவித்தலின், அவர்தாந் "தரணியிற் பொய்மமை யிலாத்தமிழ்ச் சங்க மதிற்கபிலர் - பரணர்நக்கீரர் முதனாற்பத் தொன்பது பலபுலவோர் - அரு ணமந் கியுந் திருவால வாயரன் சேவடிக்கே - பொருளமைத் தின்பக் கவிபல பாடும் புலவர்களே" என்று நம்பியாண்டார் நம்பி திருவந்தாதியினுனே மதுரைக் கடைச்சங்கப்புலவ ரென்பது வெளிப்படுதலின், அந் நம்பியாரூரனர் கடைச்சங்க மொடுங்கிய பிறறைஞான்று அவதரித்து வைதிகசைவம் வளர்த் தருளிய சமயாசாரிய ரென்பதூஉம், "தம்பிரானருளினுலே தவத்தினை மிக்கார்பெற் று - நம்பியாரூரரென்றே நாமமுஞ்சாற்றிமிக்க - வைம்படைச்சதங்கைசாத்தியணிமணி ச்சுட்டிசாத்திச் - செம்பொனுணையிற் மின்னைத் தெருவிற்றேருருட்டுநாளில்" "நரசிங் கமுனையரென்னுநாடுவாழரசர்கண்டு - பரவருங்காதல்கூரப்பயந்தவர்தம்பாற்சென்று - விரவியநண்பினுலேவேண்டினர்பெற்றுத்தங்க - ளரசிளங்குமாரர்சேற்பவன்பினுன்மகன் மைகொண்டார்" என்று திருத்தொண்டர்புராணத்துள் அருண்மொழித்தேவர் கூறியரு ளுதலின், அவர் கால நடுநாட்டரசு புரந்தருளிய நரசிங்கமுனையர் காலமென்ப தூஉம், தெளிதிறப் பெறப்படு மென்பது

மற்றுக் கடைச்சங்கப் புலவர் தமிழ்நாடு மூவேந்தர் முதலியோரையும் பாடி னராக, அவர் தம்மை நம்பியாரூரனர் "பொய்யடிமை யில்லாத புலவர்" என்றும், நம்பியாண்டார்நம்பி "அருணமர் கியுந் திருவால வாயரன் சேவடிக்கே - பொருளமைத் தின்பக் கவிபல பாடும் புலவர்கள்" என்றும், அருண்மொழித்தேவர் "செய்யுணிகழ் சொற்றெளிவுஞ் செவ்வியநூல் பலநோக்கு - மெய்யுணர்வின் பயனிதுவே யென்த் துணிந்து விளங்கியொளிர் - மையணியுங் கண்டத்தார் மலரடிக்கே யாளானார் - பொய் யடிமை யில்லாத புலவரெனப் புகழ்மிக்கார்" "பொற்பமைந்த வரவாரும் புரிசடையார் தமையல்லாற் - சொற்பதங்கள் வாய்திறவாத் தொண்டுநெறி தலைநின்ற - பெற்றியி னின் மெய்யடிமை யுடையராம் பெரும்புலவர்" என்றும், போற்றுதல், பொருந்தா தா லெனின்,—அம்மூவேந்தர் முதலாயினுர் மையணியுங் கண்டத் தீறையனார் மலரடிப் பத்தி வழிபாடு தலைநின்று செங்கோன்மையும் வரையாவீகையும் விண்ணும் மண்ணும் போற்ற நண்ணிய பெரியராதல் பற்றிக் கடைச்சங்கப்புலவர் அவரையும் பாடினர். அப்பாட்டெல்லாம் அறம் பொருளின்பம் வீடென்னு முறுதிப் பொருணன்கின் திறனும் விளக்கித் தமிழுலகிற் குறுதியே பயவா நிற்கும் ஆகலின், அவர் தம்மை நம்பியாரூரர் முதலியோர் அவ்வாறு போற்றியது பொருத்த முடைத்தேயா மென்க.

சமயாசாரியர் சொரூபநிரூபணம்.

ஆளுடைய பிள்ளையார் முதலவ ரனைவர் நிராதாரத்தற சிவஞானமருளப் பெற்றாரென்பது, "அங்கிலையிற் றிருத்தோணி வீற்றிருந்தா ரருளுக்கான - முன்னிலை மைத் திருத்தொண்டு முன்னியவர்க் கருள்புரிவான் - பொன்மலைவல் லியுந்தாமும்

பொருவிடமே லெழுந்தருளிச் - சென்னியிளம் பிறைதிகழச் செழும்பொய்கை மருங்கணைந்தார்" "திருமறைநூல் வேதியர்க்குந் தேவியர்க்குந் தாங்கொடுத்த - பெருகுவா நினைந்தோர்தா னம்பெருமைக் கழல்பேணு - மொருநெறியில் வருஞானங் கொடுப்பதனுக் குடனிருந்த - வருமறையா ளுடையவளை யளித்தருள வருள்செய்வார்" "அழுகின்ற பிள்ளையார் தமைநோக்கி யருட்கருணை - யெழுகின்ற திருவுள்ளத் திறையவர்தா மெய்யுமைதா - டொழுகின்ற மலைக்கொடியைப் பார்த்தருளித் துணைமுலைகள் - பொழிகின்ற பாலடிசில் பொன்வள்ளத் தூட்டென்ன" "ஆரணமு முலகேழு மீன்றருளி யனைத்தினுக்குங் - காரணமாய் வளம்பெருகு கருணைதிரு வடிவான - சீரணங்கு சிவபெருமா னருளுதலுஞ் சென்றணைந்து - வாரணிந்த திருமுலைப்பால் வள்ளத்துக் கறந்தருளி" "எண்ணரிய சிவஞானத் தின்னமுதங் குழைத்தருளி - யுண்ணடிசி லெனவூட்ட வுமையம்மை யெதிர்நோக்குங் - கண்மலர்நீர் துடைத்தருளிக் கையிற்பொற் கிண்ணமளித் - தண்ணலைஅங் கழுகைதீர்த் தங்கணரு ளருள்புரிந்தார்" "யாவர்க்குந் தந்தைதா யெனுமவரிப் படியளிப்பத் - தாவர்தம் மாளுடைய பிள்ளையா ராயகில - தேவர்க்கு முனிவர்க்குந் தெரிவரிய பொருளாகுந் - தாவிறனித் திருஞான சம்பந்த ராயினார்" "சிவனடியே யடைவிக்குந் திருப்பெருகு சிவஞானம் - பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞான - முவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானந் - தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்" என வருந் திருத்தொண்டர் புராணத் திருப்பாட்டுக்களா னறிக.

"முன்னிலைமைத் திருத்தொண்டு முன்னியவாக் கருள்புரிவான்" என்றருளிச் செய்தலின், பிள்ளையார் முன்மையிற் சிவஞானம் பெறுதற்கேதுவாகும் அருந்தவ முயன்று வைத்தமை தெரிக்கப்படும். படவே, "தவமுதல்வர் சம்பந்தர்" என்றடைமொடு புணர்த்தருளிச் செய்ததூஉம் மற்றதற்கு ஞாபகமாயிற்று.

"திருமறைநூல் வேதியர்க்குந் தேவியர்க்குந் தாங்கொடுத்த - பெருகுவர நினைந்தோ" என்றதனால், "மனையறத்தின் வின்புறு மகப்பெறுவான்" விரும்பிப் "பரசமய நிராகரித்து நீறாக்கி" வைதிக சைவம் வளர்த்தற்குரிய "புனைமணிப்பூண் காதலனைப்" பெறுதற்பொருட்டு அவரு முன்னைமையிற் றவமுழந்தா ரென்பதூஉம், வேண்டியார் வேண்டிற்றே யருளும் பரங்கருணைத் தடங்கடலான சிவபிரான் ஆண்டு அவர்க்கவ்வர நோக்கருளினா ரென்பதூஉம் பெறப்பட்டன. இனி அவர் அந்நிலையே தலைக்கீடாக இம்மையி லின்னிலை நின்று "பெருகுதெழுமன் பாற் பெரிய நாச்சியா ருடன்புகலித் - திருத்தோணி வீற்றிருந்தார் சேவடிக்கீழ் வழிபட்டுக் - கருத்துமுடிந் திடப்பரவினார்" என்றும், அங்ஙனம் பரவிச் செல்கின்றுழிக் "காதலியார் மணிவயிற்றி - னுருத்தெரிய வரும்பெரும்பே றுலகுய்ய வுளதாயிற்" றென்றும், "ஆளுடையா ருடன்றோணி யமர்ந்தபிரா னருள்போற்றி - மூளுமகிழ்ச் சியிற்றங்கண் முன்னமறை நூன்முறைச்சடங்கு - நாளுடைய வீரைந்து திங்களினு நலஞ்சிறப்பக் - கேளிருடன் செயல்புரிந்து பேரின்பங் கிளர்வுற்றார்" என்றும், அங்ஙனங் கிளர்வுறு நாளில், "அருக்கன்முதற் கோளனைத்து மழகியவுச் சங்களிலே - பெருக்கவலி யுடனிற்பப் பெருகியநல் வேளைதனில் - திருக்கிளரு மாதிரைநாட் டிசைவிளங்கப் பரசமயத் - தருக்கொழியச் சைவமுதல் வைதிகமுந் தழைத்தோங்க" . . . . "அவம்பெருக்கும் புல்லறிவி னமண்முதலாம் பரசமயப் - பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்பட்டல் லூழிதொறுந் - தவம்பெருக்குஞ் சண்பையிலே தாவில்சரா சரங்களெலாஞ் - சிவம்

பெருக்குதற்குப் பிள்ளையார் திருவவதாரஞ்செய்தா" ரென்றும், உணர்க. இ—தெரிந்திலே, "திருத்தொண்டர்மூன்னிய" "பெருகுவார்நினைந்தோ" யாதுநோக்கி யெனைப் பெரிதற கண் வருதலின்.

" உண்மையாமை யெண்ணெரிய சிவருணா தின்னமுதம சைமூ ரமரி ளர் போக குன் னாரபாரி யடை ருளி லயிடு பொற சிணைணை பளி ரு மயி உமைவேணை ஊட்ட அங்கு ணேணா அங்கு அம்மையை முலை திாத தருளபுரிந்தா ரெனப பொருளினை பிற சேறபக் கொண்டு கூட்டி வினை முடிவு செய்க.

"யாவர்க்குந் தந்தைதா யெனுமவரிப்படி யளித்தார்" ரென்றது—சகல ராகிய சிவபாத விருதயா பசுவத்தியாா மாதவருசாரினை அவா ட்டைண பூணை லாத லராயத திருவவதாரஞ் செய்த பிள்ளையாருக்குச் சகலர்க்குரிய படாசா யானை மிப் பிராயாகொக்குரிய முனைணியாலல அங்ஙனருந் சிவஞான மமைய முனருலு சாவெபாமோ லெனை ரூக்கி தய, பிள்ளையார் தவமுதனைமை நோக்கி வாயமை அளித்தருளலின், அது சால்பபாமென்று விடுத்தவாருயிறறு. அம்மியின் யயிாருந மடங்க யாவைக்கு மெனச்சொ ராயினோர். சகதவ ஞானமெய் பரமாப பரிபக குவமுடையார்க்கினைக் கணோதா தைக்கு மெனச். இப்படி யளித்தா ரெனபா ரு, - அப்ப டியில் அளித்தற்குரிய பேறறினை இப்படியில் அளித்தருளினு ரென்று பொருள் கூறுதலு மொன்று ஆவ னு லாளுடைய பிள்ளையாராய திருஞான சமபந்தராயி ரென்றது - அங்ஙனந் திருமுலைப்பாலுண்டமையின் ஆளுடைய பிள்ளையாராய்த் திருஞான சம்பந் தராயினா ரெனப தறிவித்தவாறு. "செயற்கைப் பொருளை யாக்கமொடு கூறல்" ஆக் கந் தானே காரண முதற்றே" எனபவாலின், ஆதலின் லாளுடைய பிள்ளையாராய திருஞானசமபந்த ராயினா ரென றங்ஙனங் காரண முதற கிளந்து ஆக்கங் கூறி னோதினா ரெனக. பரஞான சுதத பிள்ளையார் அறிவினைக் கணியறகையா னும ஆயினும், அந்நிலையில அபிவியஞ்சக முதலின, ஆக்கப்பொருளாக உபசரித்தோ ரெனப்படுவர். ஆளுடையபிள்ளையா ரெனபது — ஆளப்படுதலுடைய பிள்ளையாரென்று விரிக்கப் படும். ஆளப்படுதல— பணைடைபப்பட்டநிலை விணடொழியமாறு பரஞானத்தான் ஒற றுமை செய்யப்படுதல். இவவாறு துவித ஞான ஒற்றுமையானே பிள்ளையார் பரமசிவனுக் குரிய முறறறிவுத் தொழில் போலச் சிவானந்தத் தமதெனச் கொண்டு அழுபவிக் குஞ் சுதந்திர மகனமை ஆண்டிற்று ரெனபது "ஆண்டவரசு" முதலிய வாக்கப் போதருங் குறிவழக்கிற்கும இயல்வ பொருளாகச் சொல்க. பரமசிவனே கந்தசுவாமி யாய் விளங்குதலின், அக்குமாரசுவாமியோடு இப்பிள்ளையார்க்கு வேறுபாடு தெரிப் பார் "ஆளுடைய பிள்ளையார்" என்று அங்ஙனம பிறிதினியைபு நீக்கும விசேடண மடுத் தோதியருளினா ரெனபது. கந்தசுவாமி பரமசிவனே யெனபது, "ஈசனேயவ னாடலா மைந்தனா யினன்கா - ணாசிலவவ னறுமுகத் துண்மையா லறிநீ - பேசிலாங்கவன் பரனொடும் பேதக னல்லன் - நேசலாவகன் மணியிடைக் கதிர்வரு திறம்போல்" எனவும், 'அருவமா யுருவ மாகி யநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்-பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகிக் - கருணைகூர் முகங்க ளாறுங் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே - யொருதிரு முருகன் வந்தாங் குதித்தன னுலக முய்ய" எனவும், "காலமாய்க் கால மன்றிக் கருமமாய்க் கரும மன்றிக் - கோலமாய்க் கோல மன்றிக் குணங்களாய்க் குணங்க ளன்றி - ஞாலமாய் ஞால மன்றி - யநாதியாய் யாவைக் கெல்லா - மூலகா ரணமாய் நின்றோன் ஆறிரு முகங்கொண் டுற்றான்" எனவும், "மானிடத்தரில விலங்கினிற

படைகளின மரபு—மூன்றுகேளுமல யாகசையிற் பிறந்தோர் ஒராட—சீயனைச்சீல பாரு
கடல் நெற்றியாந் தலத்திற - குருகித்தனன பனைப்பெரு சடைத்தவோர் மேலவன்'' || 'தனது
குரத - மொருமகன'' என்றற்றொடக்கத்தான வருங் கந்தபுராண வசனங்களானறிக.
சோமஸ்கந்தமூர்த்தியிற் குமாரசுவாமி யொன்றுபடிவிலவுமையின், தனறுருவாகு மொரு
மகனென்ப. சோமஸ்கந்தமூர்த்தி அயன் [illegible] குருத்தாக்கடவு ளொன்று மூவரை
யுந் தோற்றுவித்து முந்தொழிலிறு நிறுத்தி [illegible] ஆதிப [illegible] கடவுளான பரமசிவனென
பக, [illegible] முடிக்கத் [illegible], அம்முதல்வரேயொன
[illegible] கந்தசுவாமி அப்பரமசிவனின் வேறுகாகப் பெருமொன்பதூஉம், அவ்விரு
முதல்வரது மெய்ப்பமுடிக்கக் [illegible] பேசருமெனக்.

பெரியபுராணம் இகரமாம் [illegible] முதல்வரா [illegible]
அவதரித்தச் சிவஞான மெய்க் [illegible] திருமணத்தில் சிவபரஞ்சோதி
யிற் போதத்தில் முடிசூடிய [illegible] சொக்கத்தொன்று,
ஆதலையால் [illegible] கூறுதலின்,
இப்பிரவகாச [illegible] திருவெண்ணெய் [illegible], பிறனை
[illegible] பொருள் கோட
லாற முறைப்பமையாச இவ்வ [illegible], "[illegible] சமைமை"
"சதிவாத திருஞானசம்பந்த" "[illegible]
னதனைமையா - மேதகமிக்குருவுருவானவ" என்பனவற்றிறது - [illegible] பெண்பவு
மெய்த்தாமைபுடையார் தமமைமெய்மை, திருப்பெருமணச் சிவஞானசோதியிற் போத
தில் முடிக்கயழிய [illegible] திருவுடையாயின [illegible]
இருதலையிலாத ஞானசம்பந்த [illegible], [illegible]. [illegible] குறு
மபு கூடி [illegible] திருவருளானி [illegible] யாய [illegible]
ணைதலைமை [illegible] திருவுருவா [illegible]
ரெனறும், இவ்வாறு [illegible] பொருள் [illegible] மையா
னொபிலாவருமின், [illegible] டுமெனறு. "மற
றுபப்பதென இனறி" "[illegible]" என்பதிப்பெரில் பிறிதென
றும் பொருட்டா [illegible] சமகரமயானையனபுறி, [illegible] பொருளா
பட [illegible] இது [illegible]. 'இனிய [illegible] செய்தான்"
"தகைகுமார்ச்சலப்பட்டபெருந்தயாபதாருகு டி [illegible] லொமேனமையலசெய
திமமணணினமேற -- பிறகதுமாருகாடி [illegible] முடையமுள் -- டிறகதுமாருகாட
டிறைபகழூ [illegible]" என வரும் ஆறுமுகடையபிள்ளையார் திருவாக்குக்கொ
றுமிவற்றிறைக்குய செமபொருளாத தெனி "பதியானஞான முனிவன" என்றது.
தலைவனென ஞானசம்பந்த முனிவனெனறவாறு [illegible], [illegible] மூறனைமை
யறிக. தலைமை - சிவஞானப்பாலடிசில உணமைமான வளமைத்துடைமெண்டருளிய தலை
மேயமாம். மறறு யாகசா வனமெறண்டு வாத்தவுமடிக்குரு மிக்காரான சமயாசாரிய
ரெனபது, அவா சரித்திரங் கூறும் புராணங்களாலும், "தொண்டர்கள் பிறந்துயாரா
தொலலிலைக்கூழியிலவிழாது - பிண்டிமசமநதுன்றுதம்போயவேதாயதியுபமானென"
"பெறுபழுமபிறப்பேதனிபிறயாதுணைமையாமைதெய்நக்கேனே" "யரணடிபறப்பெசாதிலவ
பிரணடிணமையககுத - [illegible]" என்றற்றொடக்கத்[illegible] வருமவா திருவாக்குக்
களானுமறிக.

"புரமெரித்தார் திருமகனார்" "செய்யமேனியர் திருமகனார்" 'இறைவர் திருமைந்தர்' "சேலிறநிகழ்ந்தவர் மைந்தரான திருஞானசம்பந்தர்" 'ஈசர்மிழலை யிறையவர்பால் இமையப்பாவை திருமுலைப்பால் - தேசமுய்ய வுண்டவர்தாந் திருமாமகனாராதலினால் - காசுவாசியுடன்பெற்றார் கைத்தொண்டாகு மடிமையினால் - வாசியில்லாக் காசுபடி பெற்றுவந்தார் வாகீசர்" என்றருளிச்செய்ததனான் ஆண்டாண்டுப் பெரியபுராணம், அருண்மொழித்தேவர் பிள்ளையாரைச் சிவகுமாரரெனக் கூறியவெல்லாம் திருத்தோணி வீற்றிருந்த சிவபிரான் றிருவருளாற் பெரியநாயகியார் திருமுலைப்பாலை ஞானவடிசிலொடூட்டியருள வுண்டு ஆளுடையபிள்ளையாராயினமை பற்றியேயாமல்ல, அவைபோல தன்னொடு மாறுபடா வென்பது தெற்றென வுணர்ந்துகொள்க. திருச்சேய்ஞலூ ரெச்சதத்த குமாரர் தாதை சிவாபராதங்கண்டு அவனைத் தாளறவீசியகாரணத்தானே சிவபிரான் அவரை அத்திலையில் ஆண்டு பிள்ளையாராக்கியது போலக் கவுணியர் தலைவராய் உதித்தருளிய பிள்ளையார் முன்னிலைமைத் திருத்தொண்டு முதன்மை பற்றி அவருக்குச் சிவஞானப்பாலடிசில் ஊட்டுவித்துத் திருஞானசம்பந்தரென்றாக்கி, ஆளுடைய பிள்ளையா ராக்கியருளினரெனக. அருண்மொழித்தேவர்க்கு இதுவே கருத்தாதல் "பணியாளர் வண்புகலிப்பிள்ளையார் - தாமெழுந்தருளத் தங்கம் பிள்ளையார் காமருமப்பதியினிலே வைக்கண்டு - நாமகிழ்ந்துடன்பணிந்தார் தாதைபாதந்தனை" என்றிங்ஙனஞ் சேய்ஞலூர்ப் பிள்ளையாரோடு புகலிப் பிள்ளையாரை யொப்பித்துக் கூறியவாறுபற்றி யுணர்ந்துகொள்க. ஆசிரியர் சிவஞானயோகிகளுக்கும் இதுவே கருத்தாமாறு "ஆளுடைய பிள்ளையார் முதலிய வுண்மைநாயன்மார் குருத்தவமின்றியே ஞானநிட்டை சேர்ந்தவாறென்னையெனின் அங்ஙனங் கூடாமைவிடுத்தற்கு 'மேற்செய்தது' என எண்ணப்பட்டமையுமுற்றாகார்" என்று சிவஞானபாடியத்துள் அவர் ஓதியவாற்றானுணர்க. இவர்களே ஆளுடைய பிள்ளையார், உக்கிரபாண்டியனார் உருத்திரசன்மனார் போல்வாரோர் அபர சுப்பிரமணிய ரென்பது போதரவா றுணர்க. ஆளுடையபிள்ளையார் இவ்வாறு அபர சுப்பிரமணியர் ஆதலுண்மை பற்றியே ஆன்றோரும் புராண நூலுடையாரும் பாண்டாண்டு அப்பிள்ளையாரைச் சுப்பிரமணியக் கடவுட் குரிய குறி குணங்களால் விசேடித்து வழங்குவாரும் ஆயினார். ஆகலின், அவை குணவாதம் ஆகுமாறில்லை யாமென்க. அருணகிரிநாதர் முதலியோர் திருப்புகழ் முதலியவற்றில் ஆளுடைய பிள்ளையார் அற்புதச் செயல்களை அறுமுகக்கடவுள் செயலாக ஓதியதூஉம் பிள்ளையார் உமை முலைப்பாலுண்டு அறுமுகக் கடவுட்டிருவருண்மிசை முறுதல்பற்றி யாதலின், அஃது வைரவக்கடவுள் வீரபத்திரக்கடவுள் முதலியோர் இயற்றியருளிய அயன்றலை கொய்தல் தக்கன் வேள்வி தகர்த்தல் முதலிய செயல்களை அவர் சிவபிரான் அருண்மிசைமுறுதல் பற்றி அம்முதல்வன் செயலாக ஓதுவது போலவதோர் உபசார வழக்கென்றுணர்க. விசாலாக்கனுருள் சங்கார வுருத்திரனும் மிசவுருத்திர குணருத்திரக் கடவுட்குரிய குறி குணங்களான் அங்ஙனம் விசேடிக்கப்படினும் ஆக்கடவுளாகாதவாறு போலவும், குணருத்திரக்கடவுட்குரிய முதற்கடவுளான பரமசிவனுக்குரிய குறி குணங்களான் அங்ஙனம் விசேடிக்கப்படினும் அம்முதல்வனாகாதவாறு போலவும், ஆளுடைய பிள்ளையார் உருத்திரசன்மனார் உக்கிரபாண்டியனாரென்னுமிவர் சுப்பிரமணியர் பரசுப்பிரமணியக்கடவுட் குரிய குறி குணங்களால் அங்ஙனம் விசேடிக்கப்படினும் அச் சிவசுப்பிரமணியக்கடவுளாகா ரென்பது தெற்றென வுணர்ந்துகொள்க

இன்னும், சிவபாதவிருதயர் மாதவர் தாம் ஆவர் க [illegible] கரப்பிரசித்தமாகிய ஞான பகவதியார் மணிவயிற்றில் ஒருகு தெரியவந்து [illegible] திருவயதில் முறைமை, திருமுலைப்பாலருள் முதல்வன் திருஞான சம்பந்தராக, அச்சஞானப்பேறு பெற்றுத் திருத்தோணியப்பர் [illegible]. சேரமான், சோழர் முடிசாய்த்து வழிபட்ட ஏனைச் சமயாசாரியர் போலச் சிவபிரான் [illegible] போலவன்றி, அவர் கடப்பிரமாணமாகவிருந்த பரமசிவனுடைய பாதகமலப்பிரமாணம் கடவுட் சேவை யென்க. இன்னும் கருதுகாரணத்தினாற் சைவசமய [illegible] திருவருள் [illegible] அகலுட. சரணை [illegible] சுருதியிலே [illegible] திருப்பாதியாமென்று திருவாலவாயடிகளை [illegible] ஆதியருளும், [illegible] அவிரத்தா [illegible] பெருமினத்தோடு [illegible] ஆளுடையபிள்ளையார் வேண்டியதாக, [illegible] புலப்படுத்தலாமெனக. இன்னும், ஆளுடையபிள்ளையார் [illegible] மைந்தன் [illegible] " " [illegible] " " [illegible] " [illegible] ஆறுமுக [illegible] [illegible], அவரமிச [illegible] வெளிப்படுத்துமென்க. இன்னும், [illegible] செய்தல் பாடியருளிப் [illegible] சாலையுள [illegible] கொண்ட [illegible] " [illegible] சைவசித்தாந்த நூலுடையார் [illegible] திருவாதவூர் [illegible] ஏனைச் சமயாசாரியரோ டொக்கச் சிவஞானச் செல்வர் [illegible] [illegible] என்க [illegible], உமையம்மை [illegible] திருமுலைப்பால் ஊண்டு ஆளுடைய பிள்ளையார் [illegible], சமயாசாரியரு [illegible] ஒருவரு [illegible] யாவரும் [illegible] ஆசாரிய முதல்வ [illegible] யுடையராயிருந்தனர் [illegible] இனிக் [illegible] ஆளுடைய பிள்ளையார் [illegible] [illegible] திருவாய்மலர்ந்தருளிய [illegible] அவர் [illegible] பூரண [illegible], அவருக்கே [illegible] [illegible] சமயாசாரியசுவாமிகள் என்று தெரிந்துகொள்க. இனிச் சமயாசாரியர் [illegible] ஆளுடைய பிள்ளையார் [illegible] சந்தானகுரு [illegible] "[illegible]" என்று [illegible] ஆலவாய் [illegible] வசனங்களாலுமறிக. இன்னும், ஆளுடையபிள்ளையார் [illegible] முதலிய சைவசித்தாந்த சங்கராசாரியர் முதலிய வைதிகசித்தாந்த [illegible] பிரபந்தங்களிற் [illegible] ஆசாரியசுவாமிகளாக [illegible], [illegible] ஒருவரே [illegible] என்க.

இனிச் சிவஞானச் செல்வருடைய [illegible] சத்தி குல [illegible] வேறுபாடிலும், [illegible] சிவஞானத்தானே பெற்றுடைமை யுடையரே யாவர். அது "[illegible]" என்னும் [illegible].

மற்று ஆளுடையபிள்ளையார் முதலிய சமயாசாரியர் நால்வரு [illegible] திருவவதார முறிறு, [illegible] முறைமை [illegible] அசாரணமாகத்தினை

யதிட்டிக்காது, முறையே கந்தஸ்ரோணி யமையப்படாயும், திருவதிகை வீரட்டான மூர்த்தியாயும், திருவருட்கொடை யந்தருளியும், தருமபெருந்துறையிற் குருத்தன்மையுட பரமாசாரியனாயும், தானே முன்னின்று, ஞானதீக்கையினை யருளாசாரியர் செய்யக் கொண்டருளினானென்பது. இது நிராதார தீக்கையெனப்படும். நிராதார தீக்கையாவது - விஞ்ஞானகலர் பிரளயாகலர்க்குத் தீவிர தீவிரதர மென்னும் இருவகைச் சத்திநிபாதத்தால் பரமசிவன் ஆசான் மூர்த்தியை அதிட்டியாது நின்று செய்யும் அனுக்கிரகத்தானே முன்னின்று செய்வது. இந் நிராதார தீக்கை தீவிர சத்திநிபாதத்தானே அசேதன முதலியோர் பக்குவமிகவுடைத்துத் தீவிர சத்திநிபாதத்தானே சம்பந்தமுறுவ தாமென விருவகைப்படும். அவற்றுள் சமயாசாரியர் நால்வருக்குஞ் செய்தருளியது பின்னையதென்றுணர்க. தீக்கைபெற்றுச் சொரூபம் பொருள் — பெறுவாரை ஞானதீக்கைசெய்யப் பெறுவார்.

தலைமுதலாய சமயாசாரியர், சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞான முதலியனவிலாத சகலஞானமும், பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங்கிய ஞானமுணரிய மெய்ஞ்ஞானம், உலகியலுணர்ச்சி நிகழ்ந்தன்றியாரும் சொன்னகூடிச தலைமுதலியோர் சமயத்து உவமையிலாக் கலைஞானமாகிய அபரஞானமும் உணரிய மெய்ஞ்ஞானமாகிய பரஞானமுமென்னும் இரண்டினையும், உலகியலுணர்ச்சி தானென விளைமுடிவு செய்யச் சொட்டல் சிந்தத் தென்னு மிரண்டு நாலறிவுயர், தெளிவுனிடை யென்னு மிரண்டு நால் பருந்தா ஈடுமொழிப்மையால், அவை தம்மை அந்நயனே மிரண்டிரண் டோதிஸபாகக் கூறியருளினார்.

இனிக் கேட்டல் வழிவான சலிப்பு, சிந்தனைவழிவான சலிப்பு, அபரஞானமென்னொன்றாயினும், சிந்தனைக்கலை தன் செவிக்கே புலப்படுங் குருமொழி யாய்ணிலவும் திருத்தக்குறைவாகக் கேட்டதலை தன் செவிக்கும் பிறர் செவிக்கும் புலப்படுநூலினைச் சரியாய்ப் புறத்தெழிலவும் விருந்தி மெய்ப்பாடு முடையன வாகலின், அக்குறைவாகக் கு வழிவான சிந்தனைக்கலையை விசேடணமாகக்கியும், சங்கரவழிவான கேட்டறிசலையை விசேடியமாகக்கியும், அவ்வாறோதியருளினார். தெளிவறிவு நிட்டையறிவும் பரஞானமென வொன்றாயினும், தெளிதலிற் றிருவருண்ஞானசத்தி குறைவாய் நிட்டையினிறைவாயும் விளங்குதலின், சகுறைவு நிறைவுபற்றித் தெளிதலறிவை விசேடணமாகக்கியும், நிட்டையறிவை விசேடியமாகக்கியும், அவ்வாறோதியருளினார். ஆசிரியர் சகலாகமபண்டிதர் "கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை கிளத்தலென வீரிரண்டாங் கிளக்கின் ஞானம்" எனக் கேட்டல் சிந்தித்தலிரண்டினை யொன்றாகவும் ஏனைத்தெளிதல் நிட்டைகளை மற்றொன்றாகவுஞ் சொன்னோதியருளுதலின், அந்நான்கும் இங்ஙனமிரண்டிரண்டோரினமாமென்பது அவர் தமக்கு முடம்பாடாதல்பெறும். "கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை கிளத்தலென வீரிரண்டாம்" என்புழி 'உடன்' என்னுஞ் சொல் ஆத்தற் றிருதியை தெளிதலுடனிட்டை யென்பதனுமிரிந்து கூட்டியுரைக்கற்பாலதென்பது, 'ஈரிரண்டாம்' மென்றதனால் வகுத்தோதியவாறுபற்றி யுணரப்படும் இத்திருப்பாட்டிற்கு இங்ஙன நோக்கறுப்பப் பெரிதுபுணர்த்து நிரணியறப் பொருள் சொல்லுக்கிடனாக வாசிரியரோதிய கருத்துணரமாட்டாதார் இடப்பட்டுத் தமக்கு வேண்டியவாறு உரையனவை மாறுசப் போலியுரை பல வாறுரைப்பார். எண்டு யாமுரைத்ததே ஆசிரியர் கருத்தாமாறும், அவருரைத்தனவெல்லாம் போலியுரைகளாமாறும், ஞானகூடம் பணி யென்னுங்கிரந்தத்துள் விரித்துக் கூறினோம். ஆண்டுக் காண்க.

திருமுறைகள் சதுர்வேதமொக்குந்தமிழ்வேதமாதலைத்தேர்த்தல்

இனி, வைணவர் திருவாய்மொழியான இருக்கு முதலிய நான்கு முதற்றொட்டு வேதமென வழங்கப்படும். ஆளுடையபிள்ளையார் முதலிய வுண்மை நாயன்மார் அருளிச்செய்த திராவிட வேதத்துக்குத் திருமுறைகளென்று வழங்கப்படும் மறைமொழிக்கண்மை வேதமென்று வழங்குதன் மரபாமோ வெனின் — 'எழுதாமறை யாமப்பதிகத்தினை - முழுதும் பாடி முதல்வனைப் போற்றி' பிரசித்த தமிழ்நூல் வேதமும் பாடினார்" 'திருப்புடன் பாடலிசைத்தார் வேதந் தமிழாக விரித்தார்' "திருத் தோணிமிசை மேவினாரைத் திருமுன்பு சாழ்செழுந்த தமிழ்வேதம் பாடினார் தாமும் பெற்றார்" என்றித் தொடக்கத்தன பன்னிரண்டாந் திருமுறையுள் அருண்மொழித்தேவர் ஓதியருளினர். ஆதலின் அவை தமிழ்வேதமென வழங்குதல் மரபேயாமென்று விடுக.

இனி, பரமானமாகிய பரமசிவத்தினுடைய பராசத்தி குடிலையை நோக்கிய வழிக் குடிலையினின்று நாதவடிவாயும், அதனின் விந்து வடிவாயும், அதனின் அக்கரவடிவாயும், வேதாகமங்கள் தோன்றியவாறுபோல, பாசமனைத்தினும் நீங்கி விளங்கிய ஆளுடையபிள்ளையார் முதலிய சமயாசாரியர் தூயவறிவின்மேற்பட்டு விளங்கிய சிவசத்தி அத்துவித வியைபான மறைத்தனைப் பிரேரிக்கலுற்றுழி, ஆண்டுநின்று நாதவடிவாயும், விந்துவடிவாயும் அதனின் அக்கர வடிவாயுந் தோன்றின கடவுண்மொழியாகலின், தேவாரந் திருவாசகந் திருக்கோவையென்னும் அருளோத்துக்களைத் 'தமிழ்வேத' மென்றும் 'திருமுறை' யென்றும் 'திருவருட்பாசுர' மென்றும் அவ்வாறு, ஆன்றோர் வேறுகொண்டு போற்றி வழங்குவாராயினரென வுணர்ந்து கொள்க. அவ்வாறு, "என்துறை தன்துறையாக நீறணிந்தேறு சாதேறிய நிமலனார்" என்று மாளுடையபிள்ளையார் திருவாக்கானும், "பண்ணியநூற் றமிழ்மாலை பாடுவித்தென் - சிந்தைமயக் கறுத்த திருவருளினானை" என்னும் வாகீசர் திருவாக்கானும், "எல்லையிலா மறைமுதன்மெய் யுடன்கொண்டு செழுந்தமிழ் [illegible] தமிழாலிம் மாநிலத்தோர்க் குரைசெய்ய" எனவும் "திரைக்கெடில வீரட்டானத் திருந்த செங்கனக - வரைசிலையார் பெருங்கோயில் தொழுதலங் கொண்டிறைஞ்சி - தரைத்தலத்தின் மிசைவீழ்ந்து தம்பிரான் திருவருளால் - உரைத்தமிழ்மாலைகள் சாத்தும் உணர்வுபெற வுணர்ந்துரைப்பார்" எனவும் "தம்பெருமான் கொடுத்தமொழி முதலாகத் தமிழ்மாலைச் - செம்பொருளால் திருத்தொண்டத் தொகையான திருப்பதிக - மம்பரபிரான் திருவருளால் உணர்வுபெற வுலகேத்த - வெம்பெருமான் வன்றொண்டர் பாடியவ ரெதிர்பணிந்தார்" எனவும் வரும் அருண்மொழித்தேவர் திருவாக்குக்களானும், "சிவனவனென் சிந்தையுணின்றவதனால் - அவனருளாலே யவன்றாள் வணங்கிச் - சிந்தை மகிழச் சிவபுராண முரைப்பன் யான் - முந்தைவினை முழுது மோயவுரைப்பனியான்" என்னும் வாதவூரடிகள் திருவாக்கானும், "வண்டுபோற் புண்டரிகமலரினவிலே சிவானந்தமதுவைவாரி - யுண்டுவாசகம்பாடி" என்னு மாலவாயப்புராண வசனத்தானும், "ஐயா றதன்மிசை யெட்டுத்தலையிட்ட - மையிலானைக் கலைமெய்யுடன் பொருந்தித் - தில்லைமூதூர்ப் பொதுவினிற் றோன்றி - யெல்லையிலானந் தாடம்புரிகின்ற - பரமகாரணன் திருவருள் தன்னால் - திருவாதவூர் மகிழ்செழுமறைமுனிவர் - ஐம்பொறிசையகத் தறியாப் பறியாச் - செம்புலச் செல்வராயினர் ஆதலின் - அறிவினுறு பொருளுமுலகநூல் வழக்கு - மென - இருபொருளுந் தலைப்பெய்து கொண்டனர்" எனவும், "மாணிக்கவாசகர் திருவாக் கேவே" யென்பது திண்ணம். அன்றியும், அறுவகை திருச்சிறப்புக்களுடையார் அவர்

வாசகத்திறங்கலந்து (திருவாசகத் திருக்கோவைகளை) இரந்து அருளமைத் திருச்சையார் தெழுதினா' எனவும் வருமாற்றானுணர்க பாலுமா, இனிச், ஆணவ 'மறைமுதலான்மை' யென்றது - பிரணவத்தினை. முதன்மை யுடைத்தனை முதலெழுத்தென்பன நாசசிகரமா புண்டரீகமல ரென்றது - தத்துவகமலத்தினை. தத்துவங்கள் தகின போற்றப்படுத்த மாயை யாகலின், அதனை கண்ணத்தான வருடச்சித் சியானந்த முதலென உரு றுருவகஞ் செய்யப்பட்டதெனபது. இஃதுபலகணாராய்ந்தின, ஏனைத் திருமுறை களும் இவ்வாறு போற்றுதல் கொள்க. இஃதொன்றேனமுடிந்தது வென்னு முதல்.

இனிச், சமயாசாரியர் நால்வர் திருவேதாந்தங்கள் வேதவிடமைசப்பொருளும் புராண இதிகாசமுதலிய வைதிக நூற் பொருளும் பெருகவுருவாகப்பொருளுங்கொண்டு விளங்க வருளிச்செய்யப்பட்ட திருமுறைகளாயின, அப்பெருந்திருப்பெறுதி தமிழ்வேதமென வாயவாறு முற்பட்டவென பாயினவென றிச உத்தரவேதமான திருக்குறளுந் திருமுறைகளைப் போலவே யாருமேரொத்ததாம். அதனை வரலாறு முன்னர்க் கூறுதும்.

வேதாகமப்பிராமாணியம்

வைதிகரி லொருசாரார் "வேதப்பிரமாணநூல்" என்றும், "சிவாகமம் பிரமாணநூலன்" றென்றுங் கூறுவர். சைவரிலொருசாரார் "சிவாகமம் பிரமாணநூ" லென்றும், "வேதமதுபோலவன்றாம் பிரமாணநூலன்" றென்றுங் கூறுவர். நீலகண்ட வாசிரியர் அப்பய்யதீக்ஷிதர் முதலிய சிவாத்துவித சைவாசிரியர்கள், நீலகண்டபாடியம், சிவாதித்யமணிதீபிகை, சிவதத்துவவிவேக முதலியவற்றில், அவ் வைதிகரை மறுத்துச் சிவாகமப்பிராமாணியம் வலியுறுத்துரைத்தார். அகத்தியசிவாசாரியர் உமாபதிசிவாசாரியர் முதலிய வைதிகசித்தாந்த சைவாசாரியர் சதுர்வேததாற்பரியசங்கிரகம், பவுட்கரவிருத்தி முதலியவற்றில், வேதாகமப்பிராமாணியம் வலியுறுத்துரைத்தார். அவ்வாறெல்லாம் ஆசிரியர் சிவஞானயோகிகள் சிவஞானமாபாடியத்துட் போற்றியெடுத்துக்காட்டித் தந் துணிபு நிலையிட்டுரைத்தார். அம் மாபாடியவுரையை யவ்வாறே யெடுத்துக் காட்டு முகத்தால், வேதாகமங்க ளொற்றுமையுடைய முதனூல்களாதல் விளக்கி, திருமுறைகள் அவ்விரண்டின் சாரமான வழிநூல்களாதல் நிறுத்துதும்.

"வேதங்களொருவரால் செய்யப்படாது நிலைபேறுடைமையானும், ஆன்றோரா றழுவப்படுதலானும், குற்றமின்றிப் பிரமாணமாமெனபது துணியப்படும் ஆகமங்களவ்வாறு நித்தமன்றி யொருவரால் செய்யப்பட்டமையானும், பிரமப்பொருள் வேதமொன்றானே யுணரப்படுமெனப தெல்லார்க்கு மொப்பமுடிந்தமையானும், அங்ஙனமாயினு மிருதி நூன்முதலியனபோல வேதமுதனூலாகக்கொண் டாகமங்கள் செய்யப்பட்டன வெனின், அது நமமேற்றாக்குதக் கொள்கையன்மையானும், அங்ஙனங் கொள்ளின், வேதப் பொருளுணர்ந்து நூல் செய்த மனுமுதலியோர்போல வாகமஞ்செய்த விறைவனுக்கு முற்றுணர்வின்மை பெறப்படுதலானும், அவ்வாறன்றி முற்றுணர்வியல்பாகவுடைய விறைவனாற் செய்யப்பட்டமையின் ஆகமங்கள் பிரமாணமெனக்கூறின், முற்றுணர்வுடைய விறைவனுண்மை துணிந்தபின்னர் அவனாற் செய்யப்பட்டமையி னாகமம் பிரமாணமெனத் துணியப்படும், ஆகமம் பிரமாணமெனத் துணிந்தபின்னர் அதனானிறைவனுண்மை துணியப்படுமென. ஒன்றனையொன்று பற்றுத லென்னுங் குற்றமாமாகலானும்

ஆகமம் பிரமாணமென்பது தெளியப்படாமை யல்லதூஉம், வாசிட்டலைங்கத்தில் “பாஞ்சராத்திரம் புகழுந்தெடுத்த சொற்குசலர் பகவார்” என்பது முதலாகத் தந்திரவழி யொழுகுவோரை நிந்தித்துக் கூறி “அவர்மாழுட” ரெனவும், பாத்மபுராணத்தில் வசிட்டனுக்குத் திலீபனுக்குங் கூற்று நிகழ்வுழிச் “திராவிடதேசங்களிற் சித்திரசேநனென்பான்” னொன்றெடுத்துக்கொண்டு, “சித்திரசேனனென்னு மரசன் பாசண்டர் கூற்றே பற்றி வைதிக வொழுக்கத்தைக் கைவிட்டுப் பாசுபதவழியொழுகி நரகத்தில் வீழ்ந்தா” னெனவும், வாசிட்டலைங்கத்தில் “சாண்டில்லியனென்பானொருவன் றன்கண்ணனுடைய பிரமனை நியந்தத்து வாசுதேவனைத் திருத்தெரியாலே யதிட்டிக் கிரையாத்தல வீழ்ந்தா” னெனவுஞ், சூதசங்கிதையின் “மொழிபாஞ்ச ராத்திரங் காபாலங் காளாமுகஞ் சாக்தம் பவுத்தம் மாருகதந் தன்னிற் கழிபாசு பதநூல் சாமயவத்திற் றீக்கை காதலிப்பீர் வேதியரிற் கடையா காணீர்” என்றற்றொடக்கத்தாற் “றந்திரவழியொழுகுதல் பொய்த்தொழிலுணர்ந்து வெகுண்ட கவுதமன் சாபமெய்” னெனவும், கூர்மபுராணத்தில் ‘அனே வருமரனானை யரியை யனைத்தி” யென்றெடுத்துக்கொண்டு “அறமுனிவரிட்ட சாபவயத்தாலே வேதபிரட்டன் முதலியவற்றினதிகாரமின்மையானே விருத்தியின்றி வருந்துவோர்க்கு விருத்தியின்பொருட்டுத் தந்திரஞ் செய்யப்பட்ட” தெனவும், அதனுள் “மோக நூலிருவோமுஞ் செய்வோம் விடைக்கொடிய” யென்பதனுஞ் லாகமங்கண் மோகிப்பிக்கு நூலெனவுங் கூறுதலான், ஆகமம் பிரமாணமல்லவென்பதே தெற்றென விளங்குமாகலின், அவ்வழி பேறு முதலிய மறுமைப்பயன் பயப்பிக்குமாறென்னையெனின்,— கூறுதும். வேத நித்தமென்பதற்குப் பிரமாண மின்மையானுந் தோற்றக்கேடுகள் காணப்படுதலா னநித்தமென் றேதுணியப்படுதலானும், “அந்தக்கைமையிது” வெனுமறித்துணர்வு அந்தச்சுடரேயிதுவென்பதுபோலச் சாதியொருமைபற்றி நிகழ்வதேயாமாகலானும், அவ்வாறன்றி யொழுகத்துக்கணித்தமெனக் கொள்ளினும் அவையொன்றோடொன்று தொடர்பாடுற்றுவருஞ்சொற்க ளநித்தமேயாகலானும், உலகத்திற்குத்தோற்ற வொடுக்கங்களுண்மையிற் பிரவாக நித்தமென்பதும் பொருந்தாமையானும், எல்லாவுயிர்கண்மாட்டும் பேரருளுடைய பரமசிவனாற்செய்யப்பட்டமை பற்றியே வேதங்கட்குப் பிரமாண வுண்மை கொள்ளப்படும். அம்முறையானே சிவாகமங்களும் பிரமாணமாதல் றுணியப்படும். அது “வேதமுதனூலாய தூலிறுதியாகிய வெல்லா நெறியும் பரமசிவனாற் செய்யப்பட்டமையானும், இருதிக்காலத்துப் பரமசிவனிடத்தொடுங்கிய வேதம் படைப்புக்காலத்து முன்போலவே தோன்றுதலானும், ‘நித்த’ மென்றுபசரித்துக் கூறப்படும். ஆகலின், சிவாகமங்களை நித்தமென்பது மிக்கருத்தே பற்றி யென்க. அங்ஙனமல்லாக்கால், “வேதம் பரமசிவனாற்செய்யப்பட்ட” தெனனுஞ் சுருதிகளோடும், “அட்டாதச வித்தைக்கு முதற்கருத்தாவாகிய சூலபாணி” யென்றற்றொடக்கத்துப் புராணவசனங்களோடும், எண்ணிக்கூறும் அனுமானவளவையோடும் முரணுமாறறிக.

ஒருவனின்னானே வந்தேனென்புழி அவனு மவன் வாய்மொழியும்போல, முதல்வனு முதல்வனாற் செய்யப்படும் வேதாகமங்களும் தம்முட் காரகவேதுவு ஞாபகவேதுவுமாகிய வேறுபாடுடைமையின், இன்னோரன்னவை யொன்றனை யொன்று பற்றுதலெனனுங்குற்றமாகா வென்க. இனி யான்றோராற்றழுவப்பட்டமைபற்றி வேதஞ் சிவாகமமிரண்டும் பிரமாணமெனத்துணிகதியின்னா அவற்றுளே யவை பரமசிவனாற் செய்யப்பட்டனவென்பது துணியப்படுமாகலானு மொன்றனையொன்று பற்றுத லாகாமையுணர்க. ஆன்றோராற்றழுவப்படுத லாகமப்ருதிகியின்கணில்லெனின்,- அற்றன்று, “ தற

க்கம் வேண்டியோன் சோதிட்டோமத்தால் வேட்க" வென்றற் றொடக்கத்துச் சுரு
திகட்கு அவை வேட்குமாறு வகுத்துக் கூறுஞ் சுருதிகளு மத்தன்மையவாகிய கற்ப
சூத்திரங்களு மின்றியமையாது வேண்டப்படுமாறுபோல வேதத்துள் விதிக்கப்படுஞ்
சிவபூசை முதலிய விதிகட்கும் அவற்றைவகுத்துக் கூறுங் காமிக முதலிய சிவாகமங்க
ளின்றியமையாது வேண்டப்படு மிற்றலின், அவை யான்றோராற் றழுவப்படுத லொரு
தலையாகலானென்க. இது சதுர்வேததாற்பரியசங்கிரகத்தின் அரதத்தாசாரியர் கூறிய
வாற்றானறிக. அங்ஙனமாயினுந் தீக்கைபெற் றான்றோராற் றழுவப்படாமையின்,
அப்பத்தியிற் பிரமாணமாமோவெனின்,—அற்றன்று, சுவேதன் உபமன்னியன்
அகத்தியன்முதலியோர்க்குந் தீக்கைப்பேறு காண்டலாலென்க. உபமன்னியனக
கியன் முதலியோர்பாற் கண்ணன் இராமன் முதலியோர்க்குந் தீக்கைபெற்றவாறு சி
வஞசம் பாரதம் பாற்மபுராண முதலியவற்றின் விரித்துக்கூறியவாற்றுங் காண்க. அஃ
தெல்லாரும் பெறுமை, எல்லாருக்கு மப்பரிபாக மின்மையால், பரமகுருச சந்நி
யாசம்போல, அதற்குரியவதிகாரிகள் சிலரேயாகலானென்பது. அற்றேல், வாமநூல்
முதலியனவும் பரமசிவனுற் செய்யப்பட்டமையின், காமிகமுதலியவற்றோடொப்பப்
பிரமாணமாதல் வேண்டப்படும்பிறவெனின்,—படாது, அவற்றுட் கூறுஞ் சுரைக
குடந்தாபித்தன் முதலியவாசாரங்கள் வேதத்து ளெடுத்தோதி விலக்கப்பட்டமையின்,
சவுத்திராமணியாகத்திற் சுரையேற்றல் வேதத்துள் விதிக்கப்பட்டதாயினு மேனையோர்
க்கேயாயவாறுபோல, அவையும் ஏனையோர்க்கே யுரியவென்பது பெறுதுமாகலின்,
அவையு மவற்றிற்குரிய வதிகாரிகள் வேறுபாட்டாற் பிரமாணமாமெனக் கொள்ளப்
படு மெனக. அங்ஙனமாயின், அது வேத விதியோடு முரணுமாலோவெனின்,—அவ
ற்றுட் கூறுங் கிரியைகட்கு வேதநெறியிற்றப்பிய மாந்தர்க்காரிகளெனப் பிரித்து
வைத்தலான் முரணாதெனக. இது காந்தத்துட் கூறப்பட்டது. இனிப்பொருள்களை
முரணியவழி வலியவற்றான் மெலியவை கண்டிக்கப்படு மெனக்கொள்க. எல்லாநெறியு
மிறைவனுற் செய்யப்பட்டமையான் விசேடமின்மையின் அவற்று ளொன்றற்கொன்று
வன்மை மென்மை கூறின், இதுவே மாறுகொள்ளக் கூறலாமாலெனின்,—அற்றன்று, அவ
ற்றைப் பின் வழிப்படுத்து நூல்செய்தோர் தாரதம்மியத்தானே யவற்றிற்கு வன்மை
மென்மை கூறுதலமையமாகலின், பின்னூல் செய்தார் அவ்வந்நெறியிற் கூறும் பொருள்
களை யம்மொழியின் றாற்பரிய மறியாது மயங்கி அவற்றோடு மாறுகொள்ளத் தொகு
த்தும் விரித்துஞ் செய்தாராகலின், அவை மென்மை யெனப்பட்டன. மாறுகோளில்ல
கூற்றினெல்லாம் பிரமாணமேயாமெனக. இனி வேதத்தினுஞ் சிவாகமத்தினு மிந்திரன
முதலியோர் அவ்வாறு வழிப்படுத்து வேறு நூல் செய்யாது, வேதத்திற்கு வியாசர்
முதலியோரும் ஆகமத்திற்குப் பிரணவர் முதலியோரும்போலச் சம்பிரதாயமாத்தி
ரமே விளக்கினாராகலின், அவ்விரண்டினுள் வன்மை மென்மைகள் கூறுதல் பொருந்
தாமையின், அவற்றுளொரோவழி மாறுகோள்போலத் தோன்றியவழி, வேதவியாக்கி
யங்கடம்முண் மாறுபட்டவழிக் கருத்து வேறுபாடு பற்றிக் கூறியதெனத் தெரிந்
துரைத்துக்கொள்வதுபோல, அவை முரணாதவாறு தெரிந்துரைத்துக்கொள்வதன்றி,
அவை யொன்றற் கொன்று மறுக்கப்படாவெனச். இவ்வாற்றனறி, இன்னுமொருவாற
ற்ன விடுக்குமாறு· சாருவாக முதலிய வெல்லாச்சமயமும் பரமசிவனுற் செய்யப்
பட்டமையிற் பிரமாணமேயா மாயினும், அவற்றுண் முதற்கண் மிக்குமந்தவுணர்
வினராயுலகவின்பமேபெரும்பய னெனவுந் தமக்குப்புறம்பாகிய மக்கண் முதலியோரே
யான்மாவெனவு மபிமானஞ்செய்து நிற்குமதிகாரிகளுக்குச் சய, பரமசிவனிரங்கி, தனப

முதல் [illegible] வினைப்பயன் பெருந்திப்பயனன்றெனவு மகக்ண் முதலி யோரானோகலையெனவு முணர்ந்து, அவர்களனைவு [illegible] னிலைபெறுதற் பொருட்டு [illegible] பொரு [illegible] கொள்ளமாட்டாமையாற் [illegible] யான மாவெனவும் அவ்வுடம்பு [illegible] பெரும் [illegible] பயனெனவு மறிவுறுத்தருளினர். பின்னர் [illegible] மறிவுறுத் [illegible] பொருள் பராசிவன் திருவருட்குரியராய மல சத்திற் [illegible] பெரும்பய னெனபவற்றி னை [illegible] உடம்பு முதலிய [illegible] லவென்று மறுத ற்பொரு [illegible] சோபானமுறை [illegible] கொள்ளப்படும். இங்ஙனஞ் சாரு வாக முதலிய [illegible] அதிகாரி தாரதம்மியத்தான் மேலுள்ள [illegible] வினைவாக்கலின், மாறுகோ ளில்லையென்ப [illegible] போதகமு [illegible] "[illegible] சோபானம்" மென றும், அதனை [illegible] "[illegible] சோபானம்" மென றும், அதற்கு [illegible] "[illegible]" [illegible] "விஞ்ஞானமய சோபானம்" மென்று [illegible] "[illegible] சோபானம்" மென்றும், [illegible] [illegible] கிடைக்கப்பெறும் [illegible] தொகை. அங்ஙனம் [illegible] சோபானமுறைமை பற்றிக் [illegible] பொருள் [illegible] மென்பார், குத சங்கிரக [illegible] சைவாகமமு மென்பர் [illegible] [illegible] என்றும், "[illegible]" என்றும், "விருத்திப பொருள்" [illegible] "[illegible]" [illegible] வேறுபொரு ள் [illegible] சமயங்களையாம், [illegible] சைவாகமங்களை யன [illegible] சங்கிரக கூடபுராண [illegible] இனி [illegible] யங்ஙன [illegible] என்னின், அவற ைறிய பொருள் [illegible] கொண்டு [illegible] பற்றி யென்க. அது [illegible] கூறப்பட்டது [illegible] விருத்தப் பொருட்செய்யப் [illegible] வென்ப [illegible] பொருட்டென்றனை, விருத்தி யொழுக்கமு [illegible] நெறியி [illegible] பொருட் [illegible] டென்றவாறும். [illegible] நூலென்றனுள், மந்திர மருத்து முதலிய [illegible] நூலென [illegible] யாம் இவ் [illegible] சிவாகமமு மென்றேயாயினு மிருப்புத்திப்பட்டது. வேத மூன்றுவருணத்தார்க்கு [illegible] மானெழுவருணத்தார்க்கு [illegible] பொதுவா [illegible] லாற சிவாகமங்கள் பிரமாணமென்பது [illegible]. இங்ஙனமே சைவாகமங்களு க்குப்பிரமாணியம் [illegible] வுமாபதிசிவாசாரியார் காட்டியவாறே காண்க. [illegible]

கண்டபாடியத்திற் பதியதிகரணத்திற் சாட்டுமாறு "சிவாகமங்களி னொருசாரன பரப்பிரமம் கேவல நிமித்தகாரணமெனக் கூறும், அதனை மறுத்தற்கெழுந்த [illegible] வகுகரண மென்றுரைப்பாருமுளர், அது பொருந்தாது, யாம் வேதத்திற்கும் சிவாகமத்திற்கும் வேறுபாடு கண்டிலம், சிவனுற் செய்யப்பட்டதலின் வேதமும் [illegible] மமென வழங்கப்படும் மாதலாற் சிவாகம மென்றவருணத்துக்கே யுரித்தாக [illegible] வருணத்தர்க்கே [illegible] யதுமென இருவகைப்படும் அவற்றுள் முன்னையது [illegible] சிவாக மமெனவும் வழங்கப்பட்டன இவ்விரண்டும் [illegible] இவ்வாறு சுருதியினும் புராணங்களினும் [illegible], [illegible] மும் பிரணவம் பஞ்சாக்கரம் பிராசாத முதலிய மந்திரங்களும், பசுபதி [illegible] பொருள் வழக்கமு [illegible] [illegible] பூசை முதலிய கருமங்களும் [illegible], வேதத்தே சிவாகமத்திலும் ஒப்பக் காணப்படுதலான், அவ்விரண்டும் பிரமாணமே [illegible] டிறந்தும் பொருளொன்றே [illegible] கேவல நிமித்த மாத்திரமே [illegible] திரத்தை மறுத்தற் [illegible] வாசாரி [illegible] ரால் காட்டப்பட்டது இங்ஙனம் [illegible] வேதமுத லிய நூலுடையார் சிவாகமங்கட்குப் பிராமாணிய [illegible] காண்க. வேதத்தே சிவாகமமென [illegible], [illegible] தலுரைத்தவருணத்திற்கு [illegible] பட்டது. "வேதநூல் சைவநூலென் றிரண்டே நூல்கள் [illegible] நத நூல்களெல்லா [illegible] சிறப்பு நூலா [illegible] பொருள் வேதாந்தத் தெளிவாம் [illegible] சிவாகமங்கள் சித்தாந்தமாகும்" என், [illegible] மெய்ந் நெறிசிவ னெறிய தென்பது' என, [illegible] முறைமைபற்றிக் கூறுதலின் இருபகுதிப்பட்ட [illegible]

இனிச் சைவரிலொருசாரார் சைவாகமங்களை, 'உலகநூல், [illegible] மிகம், ஆதிமார்க்கம், மாந்திர' [illegible] நூலென [illegible] நானகும் புறநூ" லென வைத்துக்கத்தினையும் அவற்றுள் [illegible] "[illegible] திலேகனேயானமா" வென வேதாந்தத்தைப் புறச்சமய [illegible] லாலும், வேதம் பிரமாணமன்றெனப் [illegible] மறுக்க என்னை? "ஆண்டு 'வைதிக' மென்றது மீமாஞ்சை நூலும், வைசேடிக நூலும், நையாயிக நூலுமென்னு மூன்றுமேயா" மெனவும், 'புறச்சமயங்களே [illegible] ணிய 'வேதாந்த' மாவது ஏகான்மவாதங் கூறும் வியாசநூ' லெனவும், சித்தாந்தப்பிரகா சிகையிற் சர்வாத்மசம்புசிவாசாரியர் கூறுதலான், அதுபொருந்தாதென விள ங்குமாகலின், ஆண்டு 'வேத' மென்றது உம மீமாஞ்சை நூலையெனக்கொள்க, வேதத்துள் விதித்த கருமகாண்டத்தை யாராய்ச்சிசெய்தலின் அதற்கு மப்பெயராயிற்று. அங்ஙனங் கொள்ளாக்கால், வேதசாரஞ் சிவாகம மாதலாற் "சைவசாரத்திற்குரியோர் வைதிக" ரெனவும், "வேதாந்தப்பொருளைத் தெளிந்துக் கூறுவது சித்தாந்த" மென வும், "பிறநூல் பிற பொருளைக்கூறு" மெனவும், வேதத்தோ டொற்றுமை யுடைமை

டறியே சிவாகமங்கட்குப் பிரமாணமாதல் கூறும் வசனங்களோடு முரணுமாறறிக. 'பாசுபத' மென்பது யோகப் பெயரால் சைவாகமங்கட்கும் உருடப்பெயராற் பாசுபதாகமங்கட்கு மாமாறுபோல, 'வேதாந்த' மென்பது யோகப்பெயரான் வேதத்தின் முடிபாகிய வுபநிடதங்களைக் கூறும், உருடப்பெயரால் அவற்றை யெடுத்துச்செய்து கொண்டவாதநூலைக் கூறும் ஆகலின், அவ்விருவேறுவகையுந் தெரிந்துணர்ந்து கொள்க.

வேதோக்தஞானத்தானும் வைதிகாசாரத்தினானும் உபாயமாகப் பேறுடையாரன்றி யதிகாரமின்மைபோலச் சைவாகமமோக்தஞானத்தானுஞ் சைவாசாரத்தினானுஞ் சிவதீக்கைப் பேறுடையாரன்றி யதிகார மிலலையெனக்கொள்க."

இவ்வாறு சிவஞானமாபாடியத்துரைக்கப்பட்டது.

தமிழ்வேதமுதலிய திருமுறைகள் வைதிகசைவவேதாந்தமாமாறு விளக்கல்.

இனித் தமிழ்வேதங்கள் வேதாகம முதனூலிரண்டினையு மூலமாகக்கொண்டெழுந்தன வென்பது, "ஆகமத்தொடு மந்திரங்களமைந்த சங்கத பங்கமாய்" எ-ம், "மந்திரமாவது நீறு வானவர்மேலது நீறு - சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு தந்திரமாவது நீறு" எ-ம் "மந்திரமானமறையாகிவானவர் - சிந்தையுணின்றவர் தம்மையாள்வன" எ-ம் "தோகையம்பாகியெனவாகக்கூறைகள் போர்த்துழல்வா - ராகமச்செல்வருரையலா அறநூலாரணமா" எ-ம் வருந் திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருவாக்குக்களாலும், 'சூலப்படையுடையார் தாமேபோலுஞ் சுடர்த்திங்கட்கண்ணியுடையார் போலும் - மாலைமெழுந்தொருபால் வைத்தார் போலும் மந்திரமுந் தந்திரமுமானார் போலும்" எனவரும் வாகீச சுவாமிகளாலும், "கொண்டாடுமாகெளிய சோதியை வேதியனைத் தூய்மறைப்பொருளாந் தொண்டரை - கண்டசனுக்கு நீறவாவிரன் மும்மூர்த்திகளை யூழிய சைத்தவன்றுறை பொருளரியமுமுமுறைக் கொண்டவையறிய மெய்க்கொருண்மொழியுமாக்கியே" எனவரு நம்பியாரூரர் திருவாக்காலும், "ஆகமமாகிநின்றண்ணிப்பானருளவாழ்க" எ-ம் "வேதவேதாந்தமெல்லாந்தமதனது - மாயேடாகிய வாகமமாவாங்கியு - மற்றவைதம்மை மகேந்திரத்திருந்து - உற்றவைமுகங்களாற்பணித்தருளியும்" எ-ம் "மறையுமாய்மறையின் பொருளுமாயவந்தென் மனத்திடைமன்னியமன்னே" எ-ம் வருந் வாதவூரடிகள் திருவாக்குக்களாலும், "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க" எ-ம் "தவம்பெருகச் சூழ்ந்த தனையிலே தாவிலாச் சராசரங்களெல்லாஞ் — சிவம்பெருக்கும் பிள்ளையார் திருவவதாரஞ்செய்தார்" எ-ம் "வேதமொழிசைவநெறி விளக்கவந்து தோன்றினாரே" எ-ம் "மனுவுப் புகழ்த்திருத்தொண்டர் புராணத்துள் மேனையறைவாழ வந்தவர்தாம்" எ-ம் "மறைவாழவந்த வனாதவாயனெயொழுக்கம்பெருகு - துறைவாழச் சூற்றத்தார் தமக்கருளி" எ-ம் "தென்னெறியுயிர்ப்பாய்நீறளித்து நசெய்கமலத்து — தன்னடியையாகுமமைச்சருமனப்பருளித் - தன்னுநெறிநிலைத்தின்று நெறியேயாக்குதலான்" எ-ம் புநத்தியிலருளைத்தபொருள் பொருளென்றுமப்படியன பொருந்தக்கூற - மந்தவுணர்வுடையவரைநோக்கிச் சைவமல்லாதுமற்றொன்றுமில்லையென்ற — யாந்தமிலசீர் மறைகளாகமங்களையங்கிலக்கப்பொருளுணர்ந்தாருளிச்செய்ய" எ-ம் "தூக்கின்றமிழ்விரகர் சொல்லிறந்த ஞானமறை-தேசுக்குத் திருவாயாற்செப்பியருளிச்செய்தார்" எ-ம் "வந்தணைந்தமாதவத்தோர்வணங்கித்தாழுந் தமமறைவாழ்வேசைவசிகாமணியே" எ-ம் "இனைத்தன்மையிலிவாசிவநெறியினையெய்து" எ-ம் "மறைகளாயநான்குமெனமலர்ந்தசெஞ்சொற்றிருப்பதிக - நிறையுங்காதலுட

னெடுத்து" எ-ம் "தாண்டவம்புரியுந் தம்பிரானுரைத் தலைப்படக்கிடைத்த பேரின்பசைவ - வாண்டகையாருக்கடுத்தவாறில்லை" எ-ம் வரும் அருண்மொழித்தேவர் திருவாக்குகளானு மறிக. ஏனைத் திருமுறைகளு நிகமாகம சாரமாத லாயது முணர்க.

மந்திரம் - வேதம். தந்திரம் - ஆகமம். "தாவில்சராசரங்களெலாஞ்-சிவம்பெருக்கும் பிள்ளையார்" ரென்றார், தம்மை வழிபட்ட திருக்கூட்டத்தடியார் முதலியோருக்குந் திருவோத்தூராண்பனைகளுக்குஞ் சிவபேறருளுந் திறமறிவித்தற்கு. ஆளுடையபிள்ளையார் வளர்த்தருளிய வைதிகநெறி, பூர்வமீமாஞ்சை, சாங்கியம், நியாயம், வைசேடிகம், பாதஞ்சலம், உத்தரமீமாஞ்சையென நிறுத்த அறு வைதிகசமயங்கட்குமேலாய அவைதமக் கொத்த நுண்பொருளுடைத்தாய தூயசைவமாகிய "வைதிகசைவ" மென நிற்குமாட்சியுணர்த்துவார், "துன்னுநெறி வைதிகத்தின் றூநெறியேயாகுதலான்" என றவ்வாறெடுத்தோதினரென்பது. அறிவினுண்மிக்க அறுவகைச்சமயத்தோர்க்கும் வைதிகத்தின் றூநெறி கடைப்பிடித்துச் சிவபாதமலர் சேர்ந்தோர்க்கும் வேறு திருவருளினால் வீடுபெறமுயன்றோர்க்குந் திருவைந்தெழுத்தடங்கிய பிரமஞானம் பிரசாதித்தருளி வைதிகசைவ ஆசிரியத்தலைவராய் நின்றாரென்பது விளக்குவார், ஆளுடையபிள்ளையாரை "மறைவாழவே சைவசிகாமணியே" யென்றதனையும் போற்றினைத்தார். பிரமஞானமெனினுஞ் சிவஞானமெனினு மொக்கும். "ஞானமெய்ப்பேறு கருணையாற்கருது நமச்சிவாயச் சொல்லா மென-ஞானசம்பந்தர் நமச்சிவாயத் திருப்பதிகத்தை யுரைசெய் - வானமுதிலனுங்கட்கவருள் செய்தி மனத்தினவந்தோர் - ஈனமாம்பிறவி தீர யாவரும் புகுதவென்ன" "அறுவகைச்சமயத்திலருந்தவருமடியவருங்-கூறுமறைமுனிவர்களுங் கும்பிடவந்தணைந்தாரும் - வேறு திருவருளினால்வீடுபெறவந்தாரு-மீறிலபெருஞ்சோதியினுள்ளெல்லாரும் புகுந்ததன்பின்" "காதலியையுங் கைப்பற்றிக்கொண்டுவலங்கொண்டருளித் - தீதகற்றவந்தருளுந் திருஞானசம்பந்தர் - நாதனெழில்வளர்சோதி நண்ணியதனுட்புகுவார் - போதநிலைமுடிந்தவழிப்புகுவாரெனப்புகுந்தார்" எனனும் அருண்மொழித்தேவர் திருவாக்குகளால் ஆளுடையபிள்ளையாரருளிச் செய்த திருவைந்தெழுத்தின் வாச்சியமான பிரமஞானோபதேச வாசிரியத்தலைமை யறுதியிட்டதனா லனைவரெல்லா மூண்மை கடைப்பிடித்த துணைக்கொள்க. ஆளுடையபிள்ளையார் பரஞானப்பாலமுதுண்டு பரமஞானாசாரியராயினார், "அறுவகைச்சமயத்திலருந்தவரு மடியவருங் - கூறுமறைமுனிவர்" முதலாயினோரு மலையின்பாக வேறுபாடின்றிப் பசுசிவ சரியை கிரியாயோக ஞானநெறிநின்று வீடுபேறு சாதலிக்கவோ ரொண்ணிய வேண்டுவோரா ராதலின், அவரருளிய திருவைந்தெழுத்தருமறையாந் திருப்பதிகஞானவுபதேசங்களைப் பெற்று மறவரொப்பப் பரமுத்தியான சிவசாயுச்சியம் மாதிரல் பெருஞ்சோதியுட் புக்கதனு ரெனப் பெறுங் கண்மையுமெனின், —நன்று வினவினாய் அத்திருக்கூட்டத்தாரெல்லாம் அதில் பெருஞ்சோதியுட்புக்கு வீடுபேறுகூடினரேனும் ஆளுடையபிள்ளையாரொப்பப் போதநிலைமுடிந்தவழிப்புகுவாரெனப் புகுந்திடவிலாம பரசிவசாயுச்சியந் தலைக்கூடின ரல்லரென்பதே சேக்கிழார்முனிவர்க்குக் கருத்தாம். அது திருக்கூட்டத்தடியரெய்திய வீடுபேற்றினைச் "சீர்பெருகுநீலநக்கர் திருமுருகர் முதற்றொண்டர்-ஏர்கெழுவுசிவபாதவிருதயர் நம்பாண்டார்சீர்-ஆர்திருமெய்ப்பெரும்பாணர் மற்றெனையோரணைந்துள்ளோர்-பார்நிலவுங் கிளைசூழப்பணிகளோடுடன்புக்கார்" "அணிமுத்தின்சிவிகைமுதலணிதாங்கிச்சென்றோர்கள் - மணிமுத்தமாலையுனைமடவார்மங்கலம்பெருகும் - பணிமுற்றுமெடுத்தார்கள்பரிசனங்கள்வினைப்பாசந் - துணிவித்தவுணர்வினராயத்தொழுதுடன்புக்கொடுங்கினார்" "அறுவகைச்சமயத்திலருந்தவருமடியவருங் - கூறுமறைமுனிவர்களுங் கும்பிடவந்தணைந்தா

னும் - "வேறு திருவருளினால் விடைப்பாகர் - திருப்பெருஞ்சோதியினுள் எல்லாரும் புக்கதற்பின்" என்றமையானும் பொதுவாகவும், ஆளுடையபிள்ளையார் தலைக்கூடிய வீடுபேற்றினைத் "திக்குநிறைந்த திருஞானசம்பந்தர் - நாதனெழில்வளர்சோதி நண்ணியதனுட்புகுவார் - போதநிலைமுடிந்தவழிப் புக்கொன்றியுடனானார்" என்றிங்ஙனஞ் சிறப்பாகவும் எடுத்துத் திருப்பாட்டருளிச் செய்தவாற்றானுணர்க. சேரபெருமான் முதலியோர் நம்பியாரூரரோடு திருக்கயிலை தலைக்கூடியும் மற்றவர் பதப்பேறுற்றுத் தத்தம் பரிபாகவறிவுச் செய்திக்கேற்ற பதப்பேறு பெற்றாரெனை நிறைந்தபாரிய மறித்து தெளிந்துகொள்க. வாகீசநம்பியாரூரர் வரவூர்திகளும் ஆளுடையபிள்ளையார் சொற்பட்ட போதநிலை முடிந்தவழிப் புக்கொன்றியுடனாரெனவும் பரமுத்தியெனப்படுஞ் சிவசாயுச்சிய வீடுபேறு தலைக்கூடினரென்பது, அவர் பரஞானவொழுக்கங் கூறும் புராணவரலாறுகள் பற்றி யுணர்ந்துகொள்க. இப்பரமசிவசாயுச்சிய வீடுபேறு தலைக்கூடியநாயனமார் பிறருமுளர்.

அற்றேலஃதாக, நம்பியாரூரர் சிவபிரானால் விடுக்கப்பட்ட வெள்ளையானைமீதூர்ந்து ஆரியனை இந்திரன்முதலிய தேவருங் கணங்களும் எதிர்கொண்டு புடைசூழ்ந்து சேரப்பெருமானுடன் திருக்கயிலைசென்றெய்தி அணுக்கத்தொண்டராய பணிபோல அமர்ந்தருளினாரென்று பெரியபுராணமுதலியன வோதுதலின், அவர் ஏனைச்சமயாசாரியர் மூவரோடொப்பப் பரசிவசாயுச்சிய வீடுபேறு தலைக்கூடினரென்றல் பொருந்தாதாம் பிறவெனின்,—அறியாது கூறினாய். நம்பியாரூரர் இறைவர்தம் தலைமேற்கொண்டு திருக்கயிலையின்கண் நிகழ்ந்த தென்னாட்டிற் திருவவதாரஞ் செய்து திருத்தொண்டத்தொகை முதலிய வைதிகசைவம் வளர்க்குநன்புற்று வைகி அவ்விறைவர் அருளுபாயமுடானைக் கேட்டதனையானே திருக்கயிலையைத் தலைக்கூடிய பண்டுபோல அணுக்கத்தொண்டராய ஆணைமேவினார். ஆயினும், ஆண்டிறைவர் திருவருளாற் போதநிலை முடிந்தவழி அவர் சிவபரிபூரணம் புக்கொன்றியுடனாந் தலைதலைக்கூடாதலின், அவரும் பரசிவசாயுச்சிய வீடுபேறு தலைக்கூடினரென்று துணிந்துரைத்தாம். ஆதலின், அது பொருத்தமேயாமென்க. இனி நம்பியாரூரர் திருமேனிவேறுசெய்தே திருக்கயிலைத்தலைக்கூடினார். அது "ஊனுடம்பு முனைப்படைந்தானைத் தறிந்து தன்பொன்னடிக்கே - நானென்னபாடல் தோன்றிமன்னைப் பொருட்படுத்து-வானெனைவந்தெதிர்கொள்ளமத்தயானையருள்புரிந்து - ஊனுயிர்வேறுசெய்தானொடித்தான்மலையுத்தமனே" எனவரும் அவர் தேவாரவோத்தானறிக. நொடித்தான்மலை அது "மந்நாவரத்தோக்கிநொடிந்தது" எனப்புகழுணர்க.

முத்தணவசத்தரானதமிழ்ப்புலவர்பாக்க டிருவருட்பாவுந்திருமுறையுமாசாமைநிரூபித்தல்.

இனிச் சமயாசாரியர் முதலியோர் அருளிச்செய்த திருவருட்பாக்களு மற்றைக் கலைப்புலவர் பாட்டுக்களுஞ் சொல்வடிவு பாவடிவுகளான் தம்முளொருபுடை யொப்பனபோன்று காணப்படினும், அத் திருவாக்குக்கட் டிரோதானநீங்கிய வருளொத்தவொலியும் இவை மாயாநாதவொலியுமாமாகலின், சிறிதும் தம்முளொப்புப்பெறாவென றுணர்க. இது மெய்யுணர்ந்த ஞானிகளுக்கு ஐயறியாமாக்களுக்கு தம்முள் வடிவா னேரொவழியொப்பினு முறைமைய யுணர்வினறிவருளறிவும் பிராகிருதவுணர்வும் பற்றித் தம்முட் சிறிது மொவ்வாமை போலவும், இயற்கைமாணிக்கமுஞ் செயற்கைச் செங்கலுமா வடிவுநிறமொருபுடை யொப்பினும் எரிசுடர்க்குண முடைமையும் அக் குணமின்மையும் பற்றித் தம்முட் சிறிது மொவ்வாமை போலவுங் காண்க.

இனிப் புல்லறிவாளர் சிலர் முக்குண வசத்தரான இக்காலத் தமிழ்ப்புலவரை "அருட்பிரகாச வள்ளலார்" என்றும், "அஞ்ஞானசமயகுரவர்" என்றும், அவர் பாட்டுக்களைத் "திருவருட்பாக்கள்" என்றும், அப்பாட்டுக்க டொகுத்த புத்தகத்தினைத் "திருமுறை" யென்றும், தமக்கு வேண்டியவாறெல்லாம் பிரசுரித்து திருமுறை வரம்பழித்துக் கொள்வாய் திரியக்கிற் காளாவர். "செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர் - செயற்கரிய செய்கலா தார்" "பெருமைக்குந் தேனைச் சிறுமைக்குந் தந்தம் - கருமமே கட்டளைக் கல்" என்று செய்யப்புலமைத் திருவள்ளுவநாயனார் கட்டளை தருதலின், "காழிநகர்ச்சிவபாதவிருதயர் தந்தவுணியார்சோணமுதுமையாளர் ருதியூடு - மேழிசையினமுதுண்டுதாளம்வாங்கியிலங்கியரிநதியவசிவிகையிசையர்வேறி - வாழுமுயலகன்கற்றிப் பந்தரேய்ந்தவளாகிழிபெற்றாரவினைவிடமருத்தாறீர்த்து - வீழிநகர்க்காசெய்தியறைக்கதவமடைவித்துமீனவன்மேனியினவெப்பகளிவித்தாரே" "ஆரெரியிடேடுகத்தவேடவைமுன்னேற்றியாற்றில்டுமேடேறப்போயவினைப்பின்வேறி - யோரமண்ரொழியரிமகழுவிலேற்றியோதுதிருப்பதிகத்தாலோடமேற்றிச் - சாருலவும்பிடிபுகத்தனற்லையிலேற்றிக்காயாட்டுவினைமுதுகளிலேற்றி-யீரமிலாவங்கமுயிரெய்தவேற்றியிலங்குதுபெருமணத்தாரவையேற்றினாரே" 'போற்றுதிருவாமூரில்வேளாண்டோண்மைப்பொருவில்கொறுக்கையர்திப்புகழனாபாள - மாறறருமணிபிறிலகவதியாமாதுவந்துதிக்கப்பின்புருணிக்கியாரும் - சேற்றியமண்சமயமுற்றுதயர்நீங்கத்தண்வாருடரவா தேருலேநாயனார் - பாற்றருநீடிரைப்பதிப்பாடலிபுத்திரத்திறம்பாழியொழித்தரணிதிசைபட்டிவந்தார்" "வந்துசமகசையருளானீறுசாத்திவண்டமிழ்ஞானதேவருநீலமன்றேய - வெந்தபொடியிடம்வேறமவேலைநீந்தி வியன்சூலங்கொடியிடபமவிளங்கச்சாத்தி-யாதமிலைப்பூதிமசணர்வமாற்றியருட்காசுபெறுமறையடைப்புநீக்கி - புநிமகிழுநளையாறறிறயிலைநண்ணிப்புமபுகலூரனைபாதமபொருந்தினாரே" "தணசயிலை பதங்கநாவலூராவாழ்சைவருநசடையருதனயனாய-மணபுகழ்வருட்டுறையாளேலைகாட்டிமணமவிலக்கவன்றொண்டாய்த்தீகைசோந்து - நணைபினுடனருள்புரியவாருரமேவிநலங்கிளாருமபரவைசேரணயந்தவைக்கி - நணதுலையுமவிறுனமினைடர்திறல்கணடே சுந்தரதிருத்தொண்டத்தொகையருளாறசெப்பினாரே" 'செப்பலருங்குண்டையூர்நெல்லளைத்துத்திருப்புகலூர்ச்செங்கலசெம்பொன்றாசெய்து - பயினமுதுகுன்றாதரும்பொருளாறறிட்டுத்தெடுத்துசசங்கிலித்தோள்சாந்துநாக - முறைபிறிசித்து தவந்தாறு மீசிறியுறுமுதலைசிறுமதலைபுமிழுநல்கி - மெப்படபெரியகளிற்றியருளாறசேரவேந்தருடன்வட்கயிலைமேவினாரே" "வையகமார்தடக்கமாவெறிச்சோர்ந்துவாத - தையலொருமூங்கைதானபேசக - கையாதாம - ஏதவுரைத்துறைக்கீசா நறுலெழுத-வாதபுரீசா செய்தாராமாணபு" என்றினைய செயற்கருந் தெய்வச் செயல்களாற் சிவபாத்துவ நிலையிட்ட உண்மைநாயன்மார் திருவாக்குக்களே திருவருட்பாக்களாமெனக. இவ்வருளறிவாற்றல சிறிது மெய்தப்பெறுது அவை யெய்தப் பெற்றுடையவர்போல வபிநயித்துக் கைதவப்பழிபாவச் செய்திக ளஞ்சாது புரிந்து சிறுமைக்கிலக்கான சமயப் புலவர் பாட்டுக்கள் அருட்பாப் போலியாயாமெனக. இவர் கைதவப்பழிபாவ வரலாறு போலியருட்பாமறுப்பானும், "வெள்ளைமாந்தியிலடமாடேவிளங்கவோருகண்டுழா-னுளையிர்துறந்தோரயாகளையூங்குறப்புதைப்பித்திட்டுக - கொள்ளையாமாநதாககூட்டியுயிரப்பிப்பலெனப்பொய்கூறி - வெளிடியொடுபோயுண்டு வீந்" தொழிந்த பரிபவக்காட்சியானும், நன் றுணரப்படுமெனக. இவர் அருட்பெற்றியேயன்றிக் கலைப்புலமை தானுநிரம்பினு ரல்லரென்பதற்கு, இவரியற்றிய பாட்டுரைகளி லுள்ள சொல்வழுவும் பொருள்வழுவுமே யுறுகரியா மெனக. அவ் வழுக்கள் பலவாம். அவற்றுண் முன

முறை வழூஉச்சொற் சில நூற்புலாக நியாயத்தாற் போலியருட்டா மறுப்பிற் காட்டப்பட்டன. பிறமுறை வழூஉக்களுள் ஒரு சிலவற்றை அந் நியாயமே பற்றிய "போலியருட்டா வழூஉத்திரட்" டென்பதன் பெயர்ந்து, வேறெடுத்துக் காட்டுதும். இன்னும், தமிழ்வேதங்கள் வேதாகம புராண இதிகாச முதலிய வடகலைகள் பற்றியும், அகத்தியந் தொல்காப்பியங் களவியன் முதலிய தென்கலைகள் பற்றியும், திருவருட்கண்ணு லாய்ந்தறியற்பாலன. தமிழ்ச்சங்கச் செய்யுட்க ளெல்லாம் அகத்தியந் தொல்காப்பிய முதலியன பற்றிய பெரும்பான்மையா னாய்ந் தறியற்பாலன. ஆகலின், சங்கச்செய்யுட்கள் சொன்மாட்சியிற் றமிழ்வேதங்கட் கொப்பாவெனிற் பொருட்பகுதியினும், பொருண்மாட்சியி னொப்பப்பெறு வெனப்படா தென்னாத்துக்கொள்க. முனிச் செய்வச் சங்கப் புலவர் செய்யுட்களிற் றமிழ்வேதச் சொற்பொருண்மை மருவியவெனின், முற்கணவைச்சப்பட்ட பிழைற்றன்றிகொல்; சிற்றறிவுடைத் தமிழ்ப்புலவர் பாட்டுக்களை மற்றைத் தமிழ்வேத முதலியவற்றோ டொப்பத் திருவருட்பயனொன்று கொள்ளு மதமான மேற்கொண்டு கவ்வை தகல, புன்னெறியுடைப் பெற்றியாரென வெருவுமியார் நெறி நூல்களாக நண்டுச் சுவைச் செய்யுட்களொன்றையாறுட் டிருமுறைப்பிரமாணமென் றெழிந்த நொ(ழி)ந்துவை கொள்க. அதற்குக் காரணம் பின்னர் மரபியலுட் கூறிறுதும், கண்டுபிடிக்க.

ஆரியவேதமுந் தமிழ்வேதமுந் தம்முளொத்த கருத்துடையனவென்பதுணர்த்துதல்.

ஆரிய ஞானமறை யுபநிடதமும், தமிழ்வேத முதலிய திருமுறைகளு மொழியான் வேறுபாடுற்றினும், பொருளான் ஒற்றுமையுடைய சுருதிகளாம். அது "தேவாரந் திருஞானமறைமுடிவு - மூவர்தமிழ் முனிமொழியுங் கோவை - திருவாசகமுந் திருமூலர்சொல்லு - மொருவாசகமெனவுணர்" எனவும் ஔவை திருவாக்கா னுணர்க. தேவாரமென் - திருவம் மூவர்நாயனா ரருளிச்செய்த உபநிடத்து வேதம். திருஞானமறைமுடிவு - உபநிடசம் திருஞானமறையின் முடிவுபொருளையுடைமை பொருளையாகக் கொண் டுரைத்ததுவு மொன்று. மூவர்தமிழ் - ஆளுடையபிள்ளையார் முதலிய சமயாசாரியர் மூவருமருளிச் செய்த தேவாரவேதத்து - கள் முனிமொழியுங் கோவை திருவாசகம் - வாதவூர்முனிவராகிய சமயாசாரிய ரருளிச்செய்த திருக்கோவை திருவாசகவேதங்கள். திருமூலர்சொல் - திருமூலநாயனா ரருளிச்செய்த திருமந்திரவேதம். வாதவூரடிகண் முற்றத்துறந்த முழுத்துணையாந் தவர்களுள் ஏமாயணியாதலின், முனியென றெடுத்தோதப்பட்டார். பேராசிரியரும் "திருவாதவூராமகிழ் செழுமறைமுனிவர்" என றங்ஙனம் வழங்கியது காண்க. ஆளுடையபிள்ளையார் வாகீசர் முதலியோரும் "பிரமபுரத்துமறைஞானஞான முனிவன்" "திருநாவுக்கரசுமாதிருத்தொண்டினெறிவாழ - வருஞானத்தவமுனிவர்" என றங்ஙனம் வழங்கப்படுமா றுணர்க. மொழியுமென்பது முனைனும் பின்னுங் கூட்டி யுரைக்க நின்றமையின் நடுநிலை விளக்கு. இச் செம்பொருள்காண மாட்டாதார், முனி மொழி - வியாசசூத்திர மென்று, ஓர்முறையுமின்றி யுரைத்தார். முனிமொழி வியாச சூத்திரமென றங்ஙன முரைத்தாரை, அப்பொருள் செம்பொருள் இலக்கணைப்பொருள் குறிப்புப்பொருளென்று மூன்றனுள் யாதெனக் கடாயினாக்கு, அது செம்பொரு ளன்றல பொருந்தாது. என்னை? வழக்கின்கண்ணும் நல்ல செய்யுட்கண்ணும் தனிக் கண்டு நூல்களிலுந்தன் முனி - வியாசமுனிவரை யுணர்த்துதற்கும், மொழி - அவர் சூத்திரத்தை யுணர்த்துதற்கும், பிரயோக மின்மையா னென்க. இனி இலக்கணைப் பொருளென்றலும் பொருந்தாது. என்னை? கங்கையின்கண் வேடச்சேரி யென்புழிக்

கங்கையென்னுஞ் சொற்குப் பொருளாகிய வெள்ளநீர் வேடச்சேரிக் கிடனாதல் செல்லாமையின், ஆண்டுக் கரையென விலக்கணைப்பொருள் கோடல் வேண்டிற்று. முனிமொழியென்பன, பகையின்றி யொன்றனையொன் றவாவிய தகுதியுற்று மண்மைகொண்டு நிற்றலின், அவற்றுள் ஒன்றனை யியற்பெயராக வைத்து மற்றொன்றனை யிலக்கணைப்பொருள் செய்தல் வேண்டற்பாற்றன் றாலெனக. இனிச் சொன்மாத்திரையா னன்றிச் சொல்லுவான் குறிப்பொடு படுத்துணரப்படுவ தாகிய குறிப்புப்பொரு ளென்றலும் பொருந்தாது. என்னை? ஆண்டு ஔவைகருத்து வேறுதல் காட்டினுமாகலானும், வியாசமுனிவரையு மவர் சூத்திரத்தினையுங் குறிப்பான் விளக்குதற்குரிய சொற்றொட ரான்ற தின்மையானு மென்க. "வியாசநூல் ஏகாணமவாத நூலுவ" தென்று சித்தாந்தப்பிரகாசிகையினுஞ் சிவஞானமாபாடியத்து முகவுரையிற் சாவணமசம்புசிவாசாரியரும் ஆசிரியர் சிவஞானயோகிகளுங் கூறுதலின், அதனை அவ்வாறே கொண்டெண்ணி ஒரு வாசக மென்றல் பொருந்தாமையு முணர்க.

தமிழ்வேதமுதலியதிருமுறைகளுதலியபரம்பொருள் பரமசிவன்.

தமிழ்வேதமுதலிய திருமுறைகளுதலிய பரம்பொருள், அயனரியரனென்னு மூவரையுந் தோற்றுவித்து நடத்துந் துரிய முழுமுதற் கடவுளாகிய பரமசிவனேயாம். அது, "தேவராயுமசுரராயுஞ்சித்தர்செழுமறைதேர் - நவராயுநண்ணுபாருமவிண்ணெரிகாலாகி - மேவராயவிரைமலரோன்செங்கண்மாலீசனென்னு - மூவராயமுழுமுதற்பொருள் வன்மேயதுமுதுகுன்றே" "வரிவாயமலரானுமவையந்தனை - யுரியதாயவனமுந்நூன் முள்ளுதற்கு - கரியானுமறியாதகனலின்மேயான - பெரியானென்னறிவாகன்பேசவாரே" "மாவையுரித்ததன்கொண்டங்கமணிந்தவனோவஞ்சாமனைந்தனைப்பெருஞ்சனுகாமவனை - மூவருருத்தனதாமூலமுதற்கருவை" "படைப்புநிலைச்சுழிப்பருப்பூ மூர்த்திகளாயினை" "தேவாகோவறியாததேவதேவனைச்செழும்பொழில்கள்பயந்துகாத்தழிக்குமற்றை - மூவர்கோனாயினின்றமுதல்வனை" "மூவந்நதுவுமுடிவுமாகிய மூவரறியாச் - சிந்துரச்சேவடியானை" "முந்தியமுதனடுவிறுதியுமானாய் மூவருமறிகிலர்யாவர்மற்றறிவார்" என்றற் றொடக்கத்தான வருந் தேவார திருவாசகச் சுருதிகளா னறிக. இவ் வேறுபா டுணராது மகாருத்திரனாகிய பரமசிவனை - குணருத்திரனேக வைத்தெண்ணுவோரை நோக்கி, "நம்மவரவரே - மூவரென்றேயெம்பிரானொடுமெண்ணி விண்ணுண்டுமண்மேற - தேவரென்றேயிறுமாந்தென்னபாவந்திரிதவரே" என வாதவூரடிகள் இரங்கிக் கூறியது முணர்க. "தேவரிலொருவனென்பர்திருவுருச்சிவனைத்தேவர் - மூவராயின்றதோராரா" எனனுஞ் சிவஞானசித்தியு மது. இவ்வே சுருதி மிருதி புராண விதிகாசங்கட் கெல்லாங் கருத்தென்பது, சிவதத்துவவிவேகநூலுடையார் "குணாதீதன்" என்னுஞ் சுலோகத்திற் றடைவிடைகளான் விளங்க விரித்துக் காட்டிய வாற்றா னறிக.

தமிழ்வேதமுதலியதிருமுறைகளோதுதற்குரியவதிகாரிகள்.

உபாயனப்பேறுடைய துவிசர் மூவரும், சிவதீக்கைப்பேறுடைய சதுர்த்தரான வேளாளரும், மற்றைச் சங்கரகுலத்தருட் சிவதீக்கைப்பேறுடைய அநுலோமர் முதலிய நன்மக்களும், தமிழ்வேத முதலிய திருமுறைக ளோதுதற் கதிகாரிகளாவர். மற்றிவர

சுத்தியுடைய தத்த மாளிகைத்தலங்களினும், சிவாலய மடாலய வித்தியாலயங்களினும், ஸ்நானாநுட்டான சீலர்களாய்த் திருமுறைகளைப் பீடத்திலேற்றி ஆராதித்து அவ் வவற்றிற்குரிய இசை முறை பற்றி அன்பர் கேட்கக்கடவர். இவ்வாறன்றி யோதுவார் அவ் வோதற்பய னெய்தப் பெறாமை மேலும் அக்குற்றப் பயனு [illegible] செய்தவர். மதமொழிச் முணர்வோர் திருமுறைகளை ஒதினைரேல் [illegible] வீழ்ந்து பெருந்துயருழப்ப ரென றுண்மைநூ லோதும். இனிச் சமயாசாரியர்முதலிய நாயன்மா ரருளிச்செய்த பன்னிரண்டு திருமுறைகளல்லாத தமிழ்ப்புலவர் பாக்களை முறைவைத்தோதி வினையோதுதல், அவற்றோ டவையொப்பனவென வெண்ணுதல் [illegible] மாம். அது 'ஔபிவணங்கிமுகத்தோ திடமனுவாதிக --- [illegible] திடவுணருவாரும். [illegible] தேவதுவாரே' என்று [illegible].

ஆகச், [illegible] திருவருளைகைவந்து கிடைத்த வுண்மைநாயன்மார் திருவருணூல்களுந் தழுவப்படு மென்க.

தமிழ்வேதமுதலியதிருமுறைகள்பாரிந்தவான்மார்ந்தமந்திரவோத்தாயதறிவுறுத்தல்.

தமிழ்வேதமுதலிய திருமுறைகள் [illegible] சுருதி [illegible], அவை [illegible] தரிசதஞானமே மெய்யுணர்வுடைய [illegible] வானபோதத் சிவாராதனைக்குரிய மந்திரவோத்தாக விதி [illegible], அவைமுகங்கொர ஆணைதருளினா. அவர் அதுவன்றே, [illegible] திருமுறைகளை யருளிச செய்த சமயாசாரியர் திருவுருக்களை [illegible] திருவருக்கேலாந் தருகவேலாயிலான சிதம்பரந் திருவாரூர் திருவேகம்பந் திருவையாறு முதலிய சிவாலயமெங்குந் தாபித்து [illegible] விழாவிற் [illegible] தந்தருளினர். இனி [illegible] திருவாசகந் திருக்கோவை [illegible] பாராயணமும் [illegible], மடாலயம், வித்தியாலயம், மாளிகை திருவருள் விளக்கம் [illegible] தமிழ் வேதம் [illegible] தோறுறும் [illegible] மாமறைநூ [illegible]" என [illegible] ரெந்த [illegible].

தமிழ்வேதந்திருச்சிற்றம்பலமே [illegible] வாயிருவாயாக்வோதுமுறைதெரித்தல்.

தமிழ்வேதமுதலிய திருமுறைகள் திருச்சிற்றம்பல மெழுவாயாகவு மிறுவாயாகவு மோதற்பாலன. இம்முறை தமிழ்வேத [illegible] தமிழ்வேதம் பருளிச்செய்தபொழுதே நிறுத்தப்பட்டது. தமிழ்வேதத் [illegible] சமயாசாரியர் திருச்சிற்றம்பல மெழுவா யிறுவாயாக அங்ஙனந் தமிழ்வேதமோதும் வாணைநிறுத்தருளியதென்னையெனின்,—திருச்சிற்றம்பலம் பிரணவவுருவாதலின், அஃதெழுவா யிறுவாயாகத் தமிழ்வேத மோதிடச் சமயாசாரியர் அங்ஙனமாணை நிறுத்தியருளின ரென்றுணர்க. திருச்சிற்றம்பலம் பிரணவவுருவுடைய தாமா றியாங்ஙன மெனின்,—கூறுதும். இதயசரீரம் பிரமபுரமாம். பிரமம்-பரமான்மா. புரம் சரீரம் புரமல் மெனப்பன வொருபொருட்

இன்வி. மற்றிருதச் சரீரஞ் சிவானம வாசாங்கக மாயினும, அசேதனமாகிற விதனை கண் ணறி விச்சை சொழில வியாபாரம அங்கரியாமியான பரமானமாவை யினறி யமையாமையின், அம்முறை டறறிப பிரமபுரமெபனறு அவனா றுபசரிககபபட்டதென றுணர்க. இசசபபுரமத்துள்ளடகர புண்டரீக முளது. தகரபுண்டரீகமெனினும, இருதய கமலமெனினு மொககும. இததகரபுண்டரீகமே அமபரமெனினும, ஆகாயமெனினும், வெளியெனினு மொககும இவவமபரமே சிதமபரமெனபபடும. இவவாறே விராடபுருடசரீரமான பிரமாணடமும பிரமபுரமாம இ சசணணுந தகர புண்டரீக முளது. இது விராடபுருட இருதயகமலமொன இசசமலமாகயாவுமே, இத தோனறு மூலாதாரககமலம பாலனது பி முதல கீழோ சசிசேசுதிய வோர திப்பியகமலமெனக கொளக இதமுனனே யிருதய கமலத்துககும இவவாறு சார தோககியததிற கூறபபடடது.

இனித் தகரவி சை பரமானமாவான சிவபரமபொருளோ றாறும, அரணியமும, அதனையுபாசிககுஞ சிவானமா னிபபும, உபசிசா முனைபபும, அவவுபாசனையானெய தும வீடுபேறும, சைவசி முதலிய வுபநிடதங ளி றொதவாறறு னெடுசோதபப டும. மறறிபபிணட வகை விருதயபுண்டரீக முதலிய பானெனபடும பா ஈததுவமாகொ மாறு. இததது வகமலதீட கனை வியாபி துவி து சமானமியினங சம பரமசிவ ததினைச சிவானமாக கணடு வழிபடுமாறும, அவவழிபாடடானெயது முனைமஞானததி னுறறுவித பாவனையகளைவிடடுச சிவாகமெனவசசமிதடாவனை செயயுமாறும, அவ வதுவிதஞானபாவனையாற சிவபரம பொருளைததனனுட கணடு முடி மவியா பகமாய வினறிபு முறறுணாவுடையுடைய பொருளனைமையுமாநது மலவாசனை நீஙகிக கேவல மாய நினறு முடிவுகாணகிலலாபபேரினபம பெறுமாறும ஙசவாகமாவிற சிறபபாராறு னெடுதோதபபடும. இநதத தகரபுணடரீ புரமான பிமராஞசேதஞசெசனப பிர வருசாதோனறி நினறெனெங சமிடனு முதாதாளமதிரத சடான நபு னபபெ றுவுபாம. இதுவே திலலைத திருசசிறறமபலமெனபபடும. இ திசசைசசநுருசர றமாவ மிமணம பரமாதாரப பொதுவாகலின, சமயாசாரியா மறறிசசைபெலலா திருததளகளுக்குமே லான "திருககோயி"லென றவவாறு வழஙகிடபபடுவா ராயினு இயயா ராறதிருசசிற றமபலம பிரணவவுறைபுளாமாறு தெறறெனவுணாநது கொளக

தேவாரம்.

தே ஆரம, தேவாரமென ருயிறற தெயவததனமை பொருநதிய பாமாலையெ னறவாறு. தேவாரமெனபது தெயவததனமைபொருநதிய பதகபபாமாலைசசாயுடைய தென வனமொழிசசொலகையாய மூவா திருமுறைகளுசசங சாரணமாறியாயிறறு. ஆளுடையபிளளையாா திருப்பதிகம பதினாயிரமும, வாகீசா திருநாடகநா னபததொரா யிரமும, நமபிஆரூரா திருபபதிகம முபபததெணணாயிரமும ஆம இவை ஈயமுனோ க ளைபோக வெஞசியிசகாலதது நிலைபெறு மூயாயதுஙகளை முனறயே மூனறாதெ னப்தானகும, முநநூறறுபபதினெனறும, நூறுமாம இவவெழுநூறறுதெ தொளளாயிரறைந்தது மடங்கிய திருமுறையடஙகளமுனறயென றவவாறு வழஙகபபடும. இவ வ பன முறையாகவுந தலமுறையாகவு மோதபபடும.

சிவாலயமுனிவா தேவாரவோததுமுழுவதும் நிசசலும பாராடடுஞ்செய மவ டடா திடாபபடடு அத்தகைய ஞானாசசரணாகடறது அசசனாா ரிபைாகட,

தேவாரப்பதிகங்களுள் இருபத்தைந்தினை வாங்கித் திரட்டிக்கொடுத்து, இவ்விருபத்தைந்தினையும் பாராயணஞ்செய்வோர் அடங்கன்முறை முழுதையும் பாராயணஞ்செய்தாரெய்தும் பயனை யொருதலையாக வெய்துவரென்று கட்டளையிட்டருளினர். இங்ஙனமாகலின், இவ்விருபத்தைந்தும், அகத்தியத்திரட்டென்றவ்வாறு வழங்கப்படும். "குருவருளுமவெண்ணீறெழுத்தைந்துங் கோயில்-லானுருவு மென்றவிமேலாக்கும்-திருவடியுஞ்-சிட்டான வாச்சகமுந் சொன்னதுஞ் [illegible]-திட்டா ரகத்தியனு ரெட்டு" எனவும், "தோடுகூறருபஞ்சாக்ஷரமொன்று-[illegible]சிக்கப்பெருளாகு-நீறுபதிகஞ்சிறந்த தங்காலை-மாற்றுப் [illegible] வரலாறுகூறு-தஞ்சலகாதல்சொற்றுணை [illegible]-மறுசெழுந்த துணைமையருளியதாரு-மாருரதி [illegible] சோயிற்றிறனையதாகு - மோருருவரியபாளைவடிகே-மருவாரென்றவிடைமருதூர் - திருவாமேனிச்செய்ச்யதாகும் - பொடியுடையரவணை யந்தணனை-வடியிணை [illegible] மூன்று-காதலிலுருச்சலைநாட்டியதாகு [illegible] மூன்று-நாயனடியையுநாட்டியதாகு-ம்பரிசுத்தியமுனிவர் [illegible] வார-முழுதையுஞ்சிவாலயமுனிகசதியிருப்பமுழுது [illegible] அருப்பத்து - [illegible] யாபதிக்முமறிவுறத்திரட்டி-யெண்ணருமடங்கலயா [illegible] புண்ணிய [illegible] கொடுபொருந்துமென்றவன - றனகசருள்செய் [illegible] - [illegible] டியுலகு - லோதினாடங் னு மோதினாரவரே" [illegible] அதிருப்பத்தமிருபத்தைந்தும், அவ்வற்றினியல்புடையும் [illegible] பொருளுந் தெரிந்துகொள்க.

தேவாரமோ [illegible] அப்பர் [illegible] சோழ [illegible] திரமிழ்நாட்டின் [illegible] பெரியோர் [illegible] சுண்ணலான [illegible] [illegible] மாகளைப் [illegible] தேவாரத் திருமுறை [illegible] யருதவாருயிருள. [illegible] அருளிய [illegible] தருவரு [illegible] அவ்வாற [illegible] அவ்வுதமமை யருளிச் செய் [illegible] உலகில் [illegible] செய்தருளுக' வென்று [illegible] திருக்கடையிலுள்ள [illegible] திருமுறைக [illegible] மூவாரையுடையான [illegible] உள்ளன" [illegible] திருவாய்மலர்ந்து, அவ்வுதமமை யருளிச் செய்த [illegible] முதலிய [illegible] திருத்தினையும் அவர்க்குச் செவியறிவுறுத்தருளினர் [illegible] அவ்வரலாற்றினைச் சோழபெருமானுக்குச் செவி யறிவுறுத்தருளினர். அவ்வரசபெருமான் நம்பியாண்டார்நம்பியோடு திருத்தலை சென்று [illegible] நடராசமூர்த்தியைத் தரிசித்து வணங்கித் தில்லைவாழ்ந் தணர்களை [illegible] அம்முனிவர்கள் கட்டளைப்படி மூவரையுந் திருவுலாவிற்கொடு போந்து, அவர் [illegible] முடைய அவ்வறையினமாட்டே விருத்திக கதவினைத் திறந்து திருமுறைகளை [illegible] முடியிருப்பக் கண்டு, கரையில பெருங்கவலைக்கடற்பட்டான். அவ்வரசபிரானைக் கவலைக்கடலினின்று கரையேற்றி மகிழ்விக்குமாறு நடராசமூர்த்தி திரு

யருளினன். "வேந்தர் பெருந்தகையே! தேவாரப்பதிகங்களுள் வைத்து இக்காலத்துக்கு வேண்டுமளவு மட்டும் விட்டு, ஏனையவற்றைச் செல்லுணச்செய்தாம்" என்று ஓர் திருவாக்கு அசரீரியாக எழுந்தது. அது கேட்ட வேந்தர்பெருமான் மனக்கவலையொழிந்து கழிபேருவகையுற்று, நம்பியாண்டார் நம்பியைத் தொழுது, "எம்பிரானே! தேவாரத் திருப்பதிகங்களைத் திருமுறைகளாக வகுத்தருள்க" வென்றிரப்ப, நம்பியாண்டார்நம்பி அவை தம்மையும் மற்றுள்ள திருவாசக முதலியவற்றினையும் பதினொரு திருமுறைகளாக வகுத்தருளினர். அன்றுதொடங்கித் தேவார பாராயணம் பண்டுபோல யாண்டும் நடைபெறுவதாயிற்று.

திருவாசகம்.

திருவாசகமென்பது திருமயமான வாசகமெனப் பொருள்படும். ஈண்டுத் திரு அருட்டிரு. எனவே, அருண்மயமான வாசகமென்றவாறாயிற்று. திருவாசகமென்பது அழகியவாசகங்களையுடையதென அன்மொழித்தொகையாய் வாதவூரடிகளருளிச்செய்த தமிழ்வேதத்துக்குக் காரணக்குறியாயிற்று. இனித் திருவாசகம் பின்மொழியாகுபெயரென்றுரைப்பாருமுளர். [illegible] ஆகுபெயரெனக் கொள்ளினுமமையும். அவ்வாறு தொல்காப்பியச் சூத்திரத்திற்குச் சேனாவரையர் கூறினர். வாதவூரடிகள் 'நமசிவாய வாஅழ்க" வென்பது முதலாகவுள்ள சிவபுராணம், திருச்சதகம், நீத்தல்விண்ணப்பம், திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தி, திருத்தோணோக்கம், திருப்பொன்னூசல், அன்னைப்பத்து, குயிற்பத்து, திருத்தசாங்கம், திருப்பள்ளியெழுச்சி, கோயின்மூத்த திருப்பதிகம், கோயிற்றிருப்பதிகம், செத்திலாப்பத்து, அடைக்கலப்பத்து, ஆசைப்பத்து, அதிசயப்பத்து, புணர்ச்சிப்பத்து, வாழாப்பத்து, அருட்பத்து, திருக்கழுக்குன்றப்பதிகம், கண்டபத்து, பிரார்த்தனைப்பத்து, குழைத்தபத்து, உயிருண்ணிப்பத்து, அச்சப்பத்து, திருப்பாண்டிப்பதிகம், பிடித்தபத்து, திருவேசறவு, திருப்புலம்பல், குலாப்பத்து, அற்புதப்பத்து, சென்னிப்பத்து, திருவார்த்தை, எண்ணப்பதிகம், யாத்திரைப்பத்து, திருப்படையெழுச்சி, திருவெண்பா, பண்டாயநான்மறை, திருப்படையாட்சி, ஆனந்தமாலை, அச்சோப்பதிகமீறாய பலவகைப்பதிகங்களாகச் செந்தமிழ்ப்பாவாலருளிச்செய்தார். இத்தமிழ்வேதப்பதிகளருளிச்செய்தவிடத்தும் அவற்றிற்கட்டுரைத்தும், அவ்வண்ணமுகத்துக் காண்க. வாதவூரடிகள் மற்றுந் தமிழ்வேதம், 'நமசிவாய' வென்பது முதலாக வெடுத்தருளிச் செய்தார், திருவருட்கிரந்தங்களுள்ளெல்லாம் அந்தத் திருவைந்தெழுத்து வேதாந்தங்கட்கெல்லா மேலாயு முயிராயு மிருக்கும் மகிமை பாலகியென்க. (வேதாகம முதலிய நூல்களெல்லாம் திருவைந்தெழுத்தின் பொருளாம் விரியெழுத்தென வென்பது "அருணூலு மாரணமு மல்லாதுமைந்தின் பொருணூல் தெரியப்புகில்" என உமாபதிசிவாசாரியார் திருவருட்பயனுளோதியவாற்றானறியுமாறு. திருவைந்தெழுத்து, பெருவாக்கியத்தை, மகாவாக்கியமெனப்படுவதொருபொருட்கிளவி. இது சித்தாந்தமகாவாக்கியம். சித்தாந்தமகாவாக்கியமும் வேதாந்தமகாவாக்கியமுந் தம்முளொத்த கருத்துடையன வென்பது சிவஞானபாடியத்துட் காண்க. ஆளுடையபிள்ளையார் 'தோடுடையசெவியன்" என்ப பிரணவ முதலாகக்கொண்டு தமிழ்வேதந் திருவாய் மலர்ந்தருளினார். வாதவூரடிகள் 'நமசிவாய" வென்பஞ்சாக்கர முதலாகக்கொண்டு தமிழ்வேதந் திருவாய் மலர்ந்தருளினார். அற்றேல் அத்தன்மையாக; வாகீசர் "கூற்றாயினவாறு" என்றும், நம்பியாரூரர் "பித்தாபிறைசூடி" யென்றும், தமிழ்வேதந்திருவாய் மலர்ந்தருளியது யாதுபற்றியெனின், குருவருள், சூலை

நோய் மூன்றறுக்கும், ஆரணவேலைவிசாரமூன்றறுக்கும், தமக்கு முன்னீடாகலின், அவை மூன்றுக்கு மொன்றாகிய அச்சமயாசாரியர் நால்வருந் தமிழ்வேத மங்களர் திருவாய்மலர்ந்தருளியவாறாயிற்றென்றுணர்ந்துகொள்க. அன்ன அவர்க்குங் குருவருண் முறையாயவாறு "தோன்றுகூற்றுடைப் பித்தா மூன்றுமுடைப் பிஞ்ஞகனே சொன்ன பேரருளாகு" மென்னும் "குருநெறித்தோத்திய மாறு முதிக இத்தமிழ்வேதந் தன்னைடைப் போதவாரைப் பிற விச்சடையின்னிதத்தை அவரச்சுச சிவானந்தமாகவலை நெனபது "தொகை யிரும்பிற விச்சூழந்தொளி கிடையலலறு தானைத்த மாசிலியர்க்கெ - பெருகு - மருவா நெறியளிக்கும் வாதவூரெங்கோன - திருவா சகமென்னுந் தேன்" என்னு மானேருரைப்பவத திருவாக்கா னறிக.

திருக்கோவை.

வாதவூரடிகள் இத்தமிழ்க் திருக்கோவை நூலை அறிவனூற் பொருளு முலக னூம் வழங்குமென விருபொருளுந் விரிய வறிவுறுத்தருளினார். அறிவனூற் பொருளாகமப்பொருள். "உலகியல் வேதநூலொழுக்க" மென் வாசகமின், அகத்தியத்தினுந் தொல்காப்பியத்தி னுங் களவியலினும் வேறாகப் புறநிறுத்தியெடுத்தோதப்பட்ட களவு கற்பெனனும் பாகுபாடு டைய அகவொழுக்கத்தினைப் பலவாற்றானுங்கிளந்தநூல் வழக்காம். வாதவூரடிகள் இந்நூ னை ஆரணாகமத்துக் கியைபுபட்டு அறிவனூற் பொருளு முலகநூல் வழக்கும் விராய்த் தமிழ் வேதமருளிச்செய்ததற்குக் காரணமென்னை யெனின் கூறுதும். இந்நூ லிவ்விரு திறனுந் தழுவலோடு இயற்றமிழாராய்ச்சிக்கு மிசையாராய்ச்சிக்கும் வாய்ப்புடைய சொல்வழக்கும் பொருள்வழக்கும் இனிது நுதலுவனவுமாம். அது "ஆரணங்கா ணென்பர் அந்தணர் யோகியர் ஆகமத்தின் காரணங்காணென்பர் காமுகரா மநனூலென்பர் ஏரணங்காணென்பர் எண்ணர் எழுத்தென்பர் இன்புலவோர் - சீரணங்காயசிற்றம்பலக்கோவையைச் செப்பிடினே" என்றுரைப்பதனாலும் அனைவாசி யெடுத்துப் போற்றிசைத்தலான் இனிதறியப்படும். ஏரணம் - நியாயம். எழுத்து - இலக்கணம். இத்தமிழ் இந்நூல் இங்ஙனஞ்சொன் மாட்சி பொருண்மாட்சி களானும் பெருந்தகைச் சிறப்புறுதல் தோன்றவன்றே "வருவாசகத்தினி னிறுமுற்றுணர்ந்தோனை வாடிவூறைமனனே - திருவாதவூர்ச்சிவபாத்தியன்செய்திருச்சிற்றம் பலப் - பொருளார்தருதிருக் கோவைகண்டேயுமற்றப்பொருளைத் - தெருளாதவுள்ளத்தவர் கவிபாடிச் சிரிப்பிப்பரே" என முன்னோர் புகழ்ந்துரைத்தவாறும், 'உருவாருந்தமிழ்ச்சங்கத்தகம் பொய்யாகத்தினை திருடாமே நிகழுமெய்ம்மதுரனாவலொண்ணயுண்டத்தாகி-மருவாருங்கிளவி யிழுகாணுறுக்குமதுப்பொருள் வாய்மைக்கப்புலமைபாவையிணை - தருவாருப புலியூரிலரு ய்யக்கணிப்போனற்குருநனெட்டிய சிந்தனைச்தரைஞெரு-திருவாதவூராளிதிருச்சிற்றம் பலவன்றிருவடிக்காமனைச்சார்த்தியதருவளார்தாமரையே" எனவியுத்தனும், "பல்காற் பழகினும் தெரியாவுளவோ - தொல்காப்பியத்திருவள்ளுவர்கோவையார் - மூன்றினுமுழங்கு மாணடிக்கோலங்குலவிடை - வடபெருந் திண்மைச் செந்தமிழ்க்குமெனக" எனச் சுவாமிநாததேசிகரும், இதன்பெருமை அவ்வாறு போற்றிசைத்தாரென்க. இது "திருவளர்தாமரை"யென்பது முதலாகக் "காரணிகற்பக" மென்ப தீறுகக் களவு கற்பென திருவகைக்கோளா லியற்கைப் புணர்ச்சி, பாங்கற்கூட்டம், இடந்தலைப்பாடு, மதியுடன்படுத்தல, இருவருமுள்வழி யவன்வரவுணர்தல, முன்னுறவுணர்தல், குறையுறவுணர்தல், நாணநாட்டம், நடுங்க நாட்டம், மடல், குறைநயப்பித்தல, சேட்படை, பகற்குறி, இரவுக்குறி, ஒருவழித்தணத் தல், உடன்போக்கு, வரைவுமுடுக்கம், வரைபொருட்பிரிதல, மணஞ்சிறப்புரைத்தல், ஓதற்பிரிதல், காவற்பிரிதல், பகைதணிவினைப்பிரிதல, வேந்தற்குற்றுழிப்பிரிதல், பொருள்

...யிற்பிரிவு டங்கையிற்பிரிந் லெனவும் பிடவிட்டுக் கூறுதல் யாயிலக்கணத்துக்க
கோவைக் கோக்கப் படுதலின் கோவையெனப் பட்டது. கோவையென்பதில் ஐ செய
ப்படுபொருள் விகுதி முதனிலைகளுடன் பொருளிலக்கணத்துக்கு ஏற்ற பொருண
...யில்லா தமையாது பேராசிரியர், இதற்கொருரையியற்றினார். இவ்வுரை மற்றிய
...து மக்களைத்திணையின்ப வுறுதிப்பொருளிலா திப்பகுப்பது செவ்விதின் விளக்கி,
...த்தற்குச் சிறந்ததோ ருரையாம். இனி பிற்காலத் தமிழ்ப்புலவருட் சிலர் இவ்வுரை
...சிரியர் நச்சினார்க்கினியரென்ப. திருக்கோவைக்கு நச்சினார்க்கினிய ருரைசெய்தார்.
மற்றும் பிரயோகவிவேகநூலார் "வஞ்சநெஞ்சரைப்பவப்பிணி" என்புழித் தமிழ்நூல் 'பெய
ர்ப்படாது மறைபட்டதி மெய்ம்மை கூறுங்கால்' என்னுந் திருக்கோவையாரினும் பரிமேலழக
ரும் பேராசிரியரும் முனிவுபெயர்த்தெழுவாயாக முடித்து ... "மருங்கா
...செய்யாளெனின்" "கற்றிலகண்டன்ன" என்னும் முன்னும் திருக்கோவை
யாரினும் பரிமேலழகரும் பேராசிரியரும் செய்தலோடு சொற்றொடு முடியுமென்பர்.
இனித் "கொழுந்தண்டுறைவழுந்தூரர்" "நன்றாய்ந்தரிமுகா வினைவழி கீசொற்" என்னுந் திருவ
ள்ளுவரினுந் திருக்கோவையாரினும் பரிமேலழகரும் பேராசிரியரும் தமைவினையாக வுரை
த்தார்" என்றிவ்வனமுரைத்தலானும், "பாட்டுத்தொல் காப்பியப் பாட்டுப்பட்ட கைவியு-
மாக குறுந்தொகையு நெடுந்தொகைக்கு சார்புக்கருத்துக்கு பரிமேலிச்சய சிந்தாமணியும்-
...திருந்திருக்கிற்றோமினியமே" எனப்படுதலும், திருக்கோவை யுரையாசிரியர் பேராசிரிய
ரென்றே துணிக. இனித் திருக்கோவை நூலிய வுயர்ந்தபொருள், வாதவூரடிக
ளொப்ப வுலகிலில்லாமை கண்டு முறைத் திறந்து மெய்யுணர்ந்தாயறுந்தநுச சிவா
னந்தச்செல்வ ராக்குநர்க்கு யனுபவமாயப் புலனுற்ற பாற்றா மென வுணர்க. இனிப்
பேரின்பப்பொருளான ஒத்த கிழவனுங் கிழத்தியும் தமமுட் கூட்டமுவலையாலுங்கா
...போசருஞ் சிறப்பும் போலவும் தொண்டுகளின் மாற்று சிறப்பு மக்களைத்திணை
...கழுதலபோலக் குருதரிசனமுன்னுற நிமலசாக்கிராதி யைந்துமடைந்து ...
...தாம். அவனை நிழலுமிழ் பேரின்ப முந்தி சிற்றம்பலமுங் கிழவியான மு...
...னையுமாம். என்னை? ஆண்டு கிட்டி... "...துணையவரியானதில்லைச்
சிற்றம்பலத்தொருதன் - குணைத்தால் வெவ்வேட்டை யொவனையப் பெட்டாயிக்கொடியிடை"
"பூயுமவிடையர்னதில்லையன்னார்" "அரவிலயார் குறியரி யானதில்லையம்பல
மேல்-வளவியவானகொங்கை" "நவீனத்... சிற்றம்பலவனருள்கழல்பாரிகமலத் துவனே"
"தெய்வந்தந்தாயெனவன்னவெனைப் புணர்ந்து நெஞ்சத்தெசெய்போ - யாய தந்தாய்முதாயவை
யூழனம்பலம்போற் சேய தந்தாய்" என்றிப் பொட்டுக்கற்ற சிற்றம்பலத்தொடுசார்த்
தொன்றாகக் கூறுதலானும், அச்சிற்றம்பலத்தினைக் காணத்தாய பேரின்பம் விளைந்தநந்து
பெறுத்தற்குரியான முத்தானமாவ சிய கிழவனுமென்க. இனி முத்தானமா
வெய்துதற்குரிய பேரின்பவுறுதிப்பொருளாவன் ... துணையான சிற்றம்பலமே
யாதல் "ஆரண்வுருவாதில்லையம்பலமேயப் பெற்றொருத் துணையாவரென்றுமொன
...னொருவரலா-காரணராகாரொத்தசருத்திலாதிருத்துமினப்ப பூரணராகாவாழும்
...முமபொருவாமன்றே" என்பதனு னறிக. முத்தானமாயா லனுபவிக்கப்படுந்
...ணைந்தம அவ்வானமாநதரியாமியாய யிளங்குஞ்சிவஞானசத்தியாகலின், அது சிவனோடு
...ழித்துணைமான பரையாதி சிவசத்திபேதங்களு மொன்றாகவைத் தெண்ணுதற்
...யாயினன்றே. இவ்வினைகளே, இக்கூற்று முறைமிறழ்வு முதலிய குற்றங்கட்கு
...க்கச் செய்ததாமா றுணர்க. "பேரின்பமானபிரமக்கிழத்தியோடாரின்பத்துளோரெ
...ச்செம்பர்" "இருட்டிறைமூலநகாரகுமரிதருட்டுக்கிழவனைத்... தருட்டினை

நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டி மருட்டியடியேன் மனம்புகுந்தானை" "எம்பெருமான் வல்வினைய னைமணம்புணர்ந்தி - யாண்டுகொண்டருளெனும் பொருள் வழங்கி - யிறவா வீட்டினி லிருத்திக் - குறையாச் செல்வனே கூட்டுகின்ற கிழானே" என்றற் றொடக்கத்துத் திருவாக்குக்களு மிவ்வுண்மை தெளிவித்தல் காண்க. பெருந்துறை சிறந்தனவாரணமாய் மறைந்து டக்குவந்து செய்தருளிய சிவசத்தி முதலியவை அப்பியலைப் பிரிகின்ற வெளியினறு பேரின்பகாரணமாய்ப் போகரூபமாயிற் றெனபார் "பேரின்பமானபிரமசத்தி" யென்றார். உயிர்க்கும் பரிபாகவேஞ் செய்கின்ற பொருட்டு மலத்தி னவழிச் சிறுமையுற்று நிற்றலுணைக்கீத் திரோதானசத்தியை "இருட்டாரு மூலமிருந்த தறியாரி" யென்றார். ஆன்மாக்கள் நாயகியாகவுஞ் சிவனை நாயகனாகவு மருளிச்செய்த திருவாக்கெல்லாம், ஆண்டா னடிமைமுறை பற்றி யெழுந்தன. இஃது நாயகநாயகி பாவனைப் பொருண்முறைபற்றி யெழுந்தது. இவ் விருவழக்கினு மானமா அடிமைத்திறத்தின் றிருவருளாலும், சிவ முபகாரச் சிறப் புமைக்குணத்திறத்தின் றிருவருளாலும், நடராசனருட்குணமான சிற்றம்பலம் பெண்பாற் படுத்தோதப்பட்ட தலைவி நடராசனாம்பொருள் டனைபாற்படுத் தோதப் பட்டமையா னும், தமமுன் முறைமையறிக. இனித் திருக்கோவையைப் பேரின்பத் துறைகட் கிழவி கூற்றுக்கள் ஓரோரிடங்களிற் பனிக்கமொழியானும் வருந்துமொழியானு நிகழ்வன ஆன்மாவினைப் பிறசமயவருட்டையறவிறந்து வெளிவரும் கருணையுமிரக்கமுமாகவும், கிழவோன் கூற்றுக்கள் பெருமிதத்தானுந் தலையளியானு நிகழ்வன இனப்பேற்றினு மாப்பும் அவ்விவையைப் பவிதவனுபவ வொப்புரவாகவும், கொள்க. இன்னு மிதன்றிறம் விரிப்பிற்பெருகுமென்பது.

திருவிசைப்பா.

அழகிய விசைப்பொருந்திய பாக்களையுடையதென அன்மொழித்தொகையாயது. திருமுறைக்குக் காரணக்குறியாயிற்று. இது திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்திநம்பிகாடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தமநம்பி, சேதிராய ரென்னும் ஒன்பதின்மருமாரானு மருளிச்செய்யப்பட்டது. இவை யருளிச்செய்யப்பட்ட தலங்களின்பெயர் அவ்வப் பதிகமுகத்துட் காண்க.

திருப்பல்லாண்டு.

இத்திருமுறைகடவுளான பரமசிவனைப் பல்லாண்டுவாழ்கவென வாழ்த்திப் பாட்டருளிச்செய்தமையின், பல்லாண்டென்றாயிற்று. பல்லாண்டுபாடுதலைச் செய்வதியாது அது பல்லாண்டென அன்மொழித்தொகையாய்த் திருமுறைக்குக் காரணக்குறியாயிற்று. இஃது திருக்கோயின்மேல் வைத்துச் சேந்தனாரால் திருவாய்மலர்ந்தருளப்பட்டது. "சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த தூயமனத் தொண்டருள்ளீர் - சில்லாண்டிற்சிதை யுஞ்சிலதேவர் சிறுநெறிசேராமே - வில்லாண்டகனகத் திரள்மேருவிடங்கன் விடைப்பாகன் - பல்லாண்டென்னும் பதங்கடந்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே" எனச் சேந்தனார் இதனுட் டிருவாய்மலர்ந்தருளுதலின், சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்க்குப் பல்லாண்டு கூறுதல் உபசாரமென்றும், அவர்க்கூறும் பல்லாண்டு மக்கட்குமுன்னொருவரை யொருவர் கூறி வாழ்த்தல் போல்வதென்றும் அறிக.

திருமந்திரம்.

இந்நூ லறுபான்மும்மை நாயன்மாரு ளொருவரான திருமூலநாயனாரா லருளிச்செய்யப்பட்டது. இவர் நந்தி திருவருள்பெற்ற நான்மறையோகிகளிலொருவர். அணிமா முதலியவெண்பெருஞ் சித்தியும் பெற்றுடையார். சித்தியெனினு முத்தியெனினுஞ் செல்வமெனினு மொக்கும். அணிமா முதலிய வெண்பெருஞ் சித்திகளாவன: அணுவினு மிகச்சூக்குமவடிவுற்று நிற்ற லணிமாவென்னுஞ் செல்வம். பெருவினுமிகப்பெரிய வடிவுற்று நிற்றல் மகிமாவென்னுஞ் செல்வம். விடயங்களை நுகர்ந்து மகா திறலுடைக் குன்றனைய கரிமையென்னுஞ் செல்வம். சேறுபூழியவற்றி னியங்கினு மழுந்தலின்றிக் காற்றினுங் கடுநடையுடைத்தா மெல்லியவடிவுற்று நிற்ற லகிமாவென்னுஞ் செல்வம். மனத்தான் விழைப்பட்ட வினைப்பயனை யெய்தப்பெறுதல் பிராத்தியென்னுஞ் செல்வம். சங்கற்பமாத்திரையி லுயிர்களிற் பாய்தலும் பலவாயிரம் வடிவாய்நின்று கிரீடித்தல் பிராகாமியமென்னுஞ் செல்வம். பிரமன் முதலியோர்மாட்டுத் தன்னாணைசெலுத்தி மகாராஜனாய் விளங்கல் ஈசத்துவமென்னுஞ் செல்வம். உலகமுழுவதையுந் தன்வசமாக்குதலு முலகனைத்தையு மடக்கியாளுதல் வசித்துவமென்னுஞ் செல்வம். இவ்வெண்வகைச்சித்தியுந், முனிவர் முதலாயினோர் பெறப்பட்டனவும், பின்னை வைகுந்த மனமுதலியவற்றானும் பெறப்படுமென்ப. இவ்வண்ணஞ் சித்திகள் கைவந்தவராகிய திவர் முனிப் பெருங்கடவுளான குறுமுனிவரோடு நட்புரிமை பூண்டவ ராதலிற் பொதியமலையை நண்ணி யகத்தியருடன் சிலநாளிருக்கவெண்ணங் கொண்டவ ராய்த் திருக்கயிலைமலையினின்று நீங்கித் திருக்கேதாரம், பசுபதிநேபாளம், அவிமுத்தம், திருக்காளத்தி, திருவாலங்காடு, திருவேகாம்பரம், திருவதிகை, திருப்புலியூர், இவ்வகை வழியில வணைந்து யாண்டாண்டுமுறைபுரிந் தியாகமுனிவரை யடுத்துக் காவிரியின் கரையணைந்து, திருவாவடுதுறையைத் தலைக்கூடி, ஆண்டுள்ள பசுபதியாம் சிவாலயம் வலம்வந்து பெருங்காதலின் றுணிந்து விருப்புற் றமர்ந்தொருநாளில், கோகுலங்களை யாண்டன்பால் மேய்த்துவருஞ் சாத்தனூர் மூலனென்பா னோரிடத்தி லிறந்துபட்டானாக, ஆனிரைக ளுலந் திறந்தொழிந்தானாக, ஆனிரைக ளவனுடம்பினை யருகணைந்து சுற்றிச் சுற்றிக் கதறிச் சூழ்ந்து மோந்து துயருழத்தலை அந் நற்றவ யோகியார் கண்டு, நம்பொருட்டு இவ் வானிரைகளுற்ற துயரினை யொழிப்பலென்று தம்முடம்பைக் காவல்செய்து பாயுமுறை பவனவழியினற் றமதுயிரை யவனுடலிற் பாய்ச்சி யெழுந்தார். அங்ஙனமெழுந்த கொல்லா மனைந்து நாத்தழும்புற நக்கி மோந்து கனைத்து வயிறுநிறைந்த களிப்பினால் வாலெடுத் துத் துள்ளித் துயர்நீத்து நிரைந்துபோய மெய்க்கண். அவர், அவை தம்மனையை யடைந்து, அவற்றோடுடனபோந்து, அவை மனைகடோறும் புகுந்தபின், திருவாவடுதுறை சேர்ந்து, காப்பினில்வைத்த முதலையுடற் பொறை காணாராய் முழுதுணர்ந்த மெய்ஞ்ஞா னச்சிந்தையினில் வந்த செயலாராய்ந்து தெளிகின்றார், தம்மையான் சடையாரளித்த தவாகமப்பொருளை மண்ணின்மிசைத் தருவாக்கிறைப்பூவுருப்பயக் கண்ணிய வந் திருவருளின் றகரப்பிரதாரென வறிந்து திருவாவடுதுறைத் திருக்கோயில் மனைந்து பரம்பொருளை வணங்கி யத்திருக்கோயிற் புறக்குட்டாலின் மிக்குயர்ந்த வரசினீழிருந்து சிவயோகந்தலைநின்று பூவலருமிதயத்துப் பொருளாகிய பரமசிவத்தோடொன்றுஞ் சமாதியில் வீற்றிருந்தருளினார். அங்ஙனஞ் சமாதியில் வீற்றிருந்தருளா நின்ற நாயனார் வருடம்மொத் பிறவிவிடத்திராதுத் தமிழ்மூலக முய்ய ஞான முதலிய நான்கு மலாகினைப் பற்றித் திருமந்திரமாலை யோராண்டுக் கொன்றாகப் பரம்பொருளாகிய பரமசிவனை "ஒன்றவன

[illegible] யிரம [illegible] வ ளினை [illegible] மூவாயிரத் [illegible] ன்குணர்ந் [illegible]-வென்றனை [illegible] விரிந்தனை [illegible]-சென்றனை [illegible] காணுமாறு [illegible]டே" எனனுந் திருப் பாட்டு [illegible] மூவாயிரந் திருப்பாட்டுச் சாத்தி மூவாயிரத்தியாண்டு புவிமேன [illegible], [illegible] யப்பான திருவருளிற்ற திருக்கைலை [illegible] அவன திருவடிக்கீழ் [illegible]. [illegible] வரலாறும், திருமந்திரநூல் செய்தருளிய [illegible].

[illegible] பொருள் [illegible] அவை [illegible]—மகா வாக்கியத்திற் [illegible] பரமசிவனை ஒரு பொருளேயாம்; [illegible] பொருள் [illegible] ளினனருட் டாதான [illegible], மூன்றி [illegible] றனனை— [illegible] ணமாகச அமலபதி ளியின் [illegible] அவத்தைக யுறறு முறையே [illegible] நானகுணர்ந்தான—அங் [illegible] மாயையைக் [illegible] பொருளுணரி [illegible] முயிர்களுக் [illegible], விரிந்தனன்றான— [illegible] பொருட்டு மந்திர [illegible] யிருந்தனை விரிந் [illegible] அதிருக் [illegible], அவைக்குவாக்களிநட [illegible] உருத்திரா மாலஅயன [illegible] திரு [illegible] திருநாமை—அப்பெறறிய [illegible] யுணரப்படு என்னும் [illegible] ளின்றனை, ஆகலின அவன [illegible] மெளிதினுணர்ந்துயத் [illegible] மெனறவாறு. அவன் திருவருள் [illegible] மெளிதினுணர்ந்துய்த [illegible] குறிப்பெச்சம். [illegible] ஏழாயுமபாச செனறனனை ஆக [illegible]. [illegible]-மனையத்தைச் [illegible]. [illegible] பொருளாப [illegible], "புல [illegible] போக் [illegible]" [illegible]. [illegible] தானுணர்ந்தானிருந்தெட்டேயென [illegible] யாவருமறிய விருந்தானென [illegible]. எழுபானென்பது பாடமாயின், ஏழுவகை ஞானபூமிகளையும் வியா பித்தானென [illegible]. ஏழு ஞானபூமிகளாவன சுபேச்சை, விசாரணை, தனுமானசி,

சத்துவாயத்தி, அசஞ்சத்தி, பதார்த்தபாவனை, துரியமென்பனவாம். இம்முதற்செய்யுள், நூற்பொருளை யிங்ஙனந் தன்கட்டடங்கக்கொண்டு நிற்றலின், உருவெருட்டிக்கு மங்கலமாம். அதனிற் விரிபிற்பெருகும் நுண்ணுணர்வாற் சண்டிகொள்க. இந்நூலின்கண் வேதப்பொருள் அருகிவராமாறும் சிவாகமங்களிற்பொருள் பெருகி வருமாறு முற்றுணர்ந்துகொள்க. இந்நூல் பாயிரம் ... சாத்திரங்களு ... த்து. இந்நூற்பொருள் பெரும்பான்மையான் ஆகமநூ ... ... இனிது புலனாகற்பாலதாம்.

பதினோராந் திருமுறைப் பிரபந்தங்கள்

இந்தத் திருமுறையான் ... பிரபந்தங்களைத் தன்னுட்கொண்டது ... திருவாலவாயுடையார் அருளியது திருமுகப்பாசுரம் ... திருவந்தாதி யென்னும் ... திருவெண்பா ... திருவாரூர்மும்மணிக்கோவை, திருக்கைலாய ... பெருமானடிகள் அருளிச்செய்தன ... யெழுபது, திருவாரூர் ... பாணி, கோபப்பிரசாதம், காரெட்டு, ... படை, திருக்கண்ணப்பதேவர் ... தன. திருக்கண்ணப்பதேவ ... திருவிரட்டைமணிமாலை, சிவபெருமான் ... திருவந்தாதி கபிலதேவநாயனார் ... ச்செய்தது. சிவபெருமான் ... தது. மூத்த பிள்ளையார் ... ணைமணிமாலை, திருக்கழுமல ... வை, திருவேகம்ப ... மைந்தும் பட்டினத்தடிகள் ... கோயில் திருப்பண்ணியர் ... யார் திருவந்தாதி, திருச்சண்பை ... கலம்பகம், திருத்தொகை, ... நம்பியாண்டார் நம்பி ... பட்ட ... றுப்படையின ... பாட்டென்ச ... வாறெனைகெடனின — ...

பெரியபுராணம்.

இது சேக்கிழார் ... அருளிச்செய்தது ... வும், திருத்தொண்டர்புராணமென்வும் ... இக்காப்பியத்திற் ... பியடைவெய்பது "... " ... செங்கற் ... திருத்தொண்டர் புராணமெ ... பிரசித்தமிக. பெரியபுராணம் பெருமையை யறிவுறுக்கும் புராண ... பெருமையென்னும் மகாபுனிதர்கட் திருத்தொண்டர் பெருமையென்பது ... மென்பது. உபாயமென்னும் சொல் ... ... யென்னும் ...

தொடர்நிலைச் செய்யுளைப் பலபடப்பாராட்டிக் கேட்டான. சேக்கிழார் அதனைக் கேட்ட பெருந்தகாய்! இது சமணர் பொய்யாநூல், இதனைச் செவிமடுத்தல் மறுமைக்குமாகாது, மறுமைக்குமாகாது சிவகதை கேட்பின், மறுமைக்குமாம்; மறுமைக்குமா மென்றெடுத்துரைத்தாகக் குருபிச்சிச்சருளினார். அரசனாய்வேந்தன் அடிகேள்! இச்சிந்தாமணி [illegible] சிவகதை யாது? [illegible] அதற்குமுத [illegible] அது தவமுயலுங் கதை [illegible] இயற்றிய [illegible] வந்தராய [illegible] பெருமானடிகள் [illegible] ஆடியெடுத்தத் [illegible] திரு [illegible] பாடியருளினார். அது திரு [illegible] பொருள் [illegible] கருத்துமொழிக [illegible] தலைசெகப்சோழ [illegible] கூறியருளினார். அது [illegible] திறமட [illegible] வேண்டினன். சேக்கி [illegible] திருத்தலைக [illegible] "அம்பலத்தெம் [illegible] யடிபெயர்த்தது சந்தருளு [illegible] அனனுதி யிலது மனதினி [illegible] அடிபெயர்த்தனைசெய்தருளி [illegible] முதலாக வாணையிலத்தலைச்கூடி [illegible] சேக்கிழா [illegible] அபொ [illegible] குமாலையக் குருநீரக திரு [illegible] சேக்கிழாரைய [illegible] திருவடைக்கின வண [illegible] திருத்தமிழ் அடியாக [illegible] தருவருளினாவிணைக்கிச [illegible] வினைஞர் [illegible] முத [illegible] திருத்தெ [illegible] செய்திமுதலொகை [illegible] பாடிமுடிச்சருளினார்.

> உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
> நிலவு லாவிய நீர்மலி வேணியன்
> அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
> மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

உலகு என்பது ஆரியசத்திச்சொல். அஃது எணைப்பொருகளையேனினைத்து. உலக மென்பது இடக்கைத் யுணர்த்துநந் சொல்லாகவின் மக்கட்டொகுதியை புணர்த்துமெழு

[illegible]விகாரமாகலின்,—அற்றன்று; வடநூலுள், "ஸகலா ஸபவிநஜதே" என இருபொருட்கு முரித்தாக வோதப்பட்டமையின், மகடூஉத் தொகுதியை யுணர்த்த வழிவந்த முரியபெயரே யாகலின், ஆகுபெயரன்றெனக. இது "காலமூலக" மென [illegible]த்திரத்துச் சேனாவரையர் காட்டிடைகளான் விளங்க வெடுத்தோதிய வாற்றானு ணர்க. அவ்வுயிர்தாம், மலமொன்றே யுடைய விஞ்ஞானகலரும், மலங் கன்ம மென்னு மிரண்டுடைய பிரளயாகலரும், மலங் கன்ம மாயை யென்னு மூன்று முடைய சகலருமென மூவகையராதலின், எல்லா மென்றார். மலரடி வினைத்தொகை. சிதசிதபிரபஞ்ச மொன்று மலருகின்ற சிலம்படி யெனக. சிலம்பு-ஆரணநூபுரம். அது சிலம்புதலிற் சிலம் பெனப்பட்டது.

இதன் பொருள்—அம்பலத் தாடுந் தாரிய வதிசார சிவகுரு முழுமுதல்வன் உலகெலா முணர்ந் தோதற்கரிய சொரூப சிவமாயும், அலகில் சோதியமான விலய சிவ னாயும், நிலவுலாவிய நீர்மலி வேணியுடைய போகசிவனாயு நின்றருளுதலின், யாம் இவ் வுருக்களாகிய விலக்கிய மின்றி முடிவற்ற பொருட்டு [illegible] மலர் சிலம்படியினை வாழ்த்தி வணங்குவா மென்றவாறு. யாம் என்னு மெழுவாய் தொக்கு நின்றது. நிலவு ஞானசந்திரகலை. நிலவு உலாவிய-நிலவு விளங்குகின்ற. உலாவியவென்பதனைச் செய்திய வென்னும் வாய்பாட்டு வினையெச்சமாகக் கொண்டு நிலவுலாவும்படி நீர்மிகுந்திருந்த வேணி யெனப்பொருளுரைத்தலு மொன்று. வேணி-அதனைச் சடையு மென்பாருமுளர். [illegible] சுருவஞ்சுத்தவமெனப்படு மொரு பெருங் கடாமுடி. அம்பலவெளியும் [illegible] ஆகும். அம்பலஞ் சிதாகாசம். ஆடல்-ஐந்தொழிற்பகுதி. அது "[illegible] தூக்கியதனிற் றேயுக் திதியமைப்பிற-சாற்றியிடு மங்கியி லே [illegible] [illegible] மலாப்பதத்தே யுற்ற திரோதமுத்தி-நான்ற மலாப்பதத்தே நாடு" என்பதனா னறிக. [illegible] நடனந் திருவஞ்செழுத் துருட்டிசட்டுவாம். அது "[illegible] [illegible] [illegible] சிகரம்வா வீசுகர-மாக்கும் யகர மயகரம்-பாதங்கவி [illegible] [illegible] முயலகனா-தங்கு மகரமது தான்" என்பதனானுணர்க. இ[illegible] முப்பமல நீக்கமெனப்படும் பாச விடுதியும், சிவ[illegible] [illegible] பரமானந்த வநுபூதி யுங் கைகூடும். அது "மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டுமலஞ் [illegible] [illegible] சாய வமுக்கி யருள்தானெடுத்து-நேயத்தா-லானந்த வாரிதியி லான்மாவைத் தானழுந்த [illegible] [illegible] யார்பாரதத் தான்" என்பதனா னறிக. இவ்வுருத்தியம்பல [illegible] [illegible] [illegible] வரலாறும், இதனையுபாசிக்கு முறையுஞ் சாந்தோக்கியாதி [illegible] [illegible] [illegible] ங்களிற் கண்டுகொள்க. இன்னு மிவ்விருதய புண்டரீகவியம்பு [illegible] [illegible] [illegible] தெத்தோதுமாறு ஆகமங்களுட் காண்க.

இறைவன் றனியியல்பெனப்படுஞ் சொரூப விலக்கணமும் பொதுவியல்பெனப் [illegible] தடத்த விலக்கணமு முடையனென வேதாகமங்க ளோதுதலின், அவற்றுட் [illegible]னியல்பெனப்படுஞ் சொரூபவிலக்கண மிதுவெனபார உலகெலாமுணர்ந் தோதற்கரி [illegible]னென்றும், பொதுவியல்பெனப்படுந் தடத்த விலக்கண மிதுவெனபார நிலவு லா [illegible] நீர்மலி வேணிய னலகில் சோதிய னம்பலத் தாடுவான் என்று மோதியருளினார். [illegible] நீர்மலி வேணியுடைய சதாசிவத் திருமேனி மேலுள்ள அருவ தத்துவங் [illegible] வுருவ தத்துவங்களையும் வியாபித்து நிற்குஞ் சிறப்பு நோக்கி, அதனை [illegible]னார். அங்ஙனங் கூறினும், அலகில சோதியனாய் நின்றே நிலவுலாவிய

நீர்மலிவேணியனும் அம்பலத்தாடு மென்பது கருத்தாம். இனி இவ்விரண்டு திருமேனி களோடும் அம்பலத்தாடியானென ஒட்டிப் புணர்த்து வினைமுதலாக வோதிய மதே சத்திருமேனியங் கூட்டுக் கட்டாத திருமேனி யொன்றுமாறு காண்க. சேக்கிழார் முனி வர், தாம் "உலகெலா முணர்ந் தோதற் கரியவ"னென்று நடராசப்பெருமான சிதாகாச திருவம்பல வெளியில் அசரீரியாகக் கூட்டுவித் தருளக் கேட்டு மெய்யுணர்ந்து இவ்வரு ட்காவிய விலக்கியஞ் செய்[illegible] பெருமை உலகின[illegible] குணர்ந்தும்பொருட்டு, அதனை முதலடி யாக நிறீஇ இவ்வாறு [illegible] கூறியருளினார். அது "அருளி னீர்மைத் திரு த்தொண் டறிவரு - தெருளி னீரிது செப்புதற் காமெனின் - வெருளின் மெய்ம்மொழி வானிழல் கூறிய - பொருளி னாற்றொ ழுதுசெப்ப லாமன்றே" என ஆசிரியர் தாமே பாயி ரத்துட் கூறியவாற்றானு முணர்க. அறிவருட்-அறியவரும். வெருளின் மெய்ம்மொழி யாகிய வானிழலென்பது வானிழல்-அசரீரி திருவாக்கு. அம்மென்பது-குறிப்புமொழியாய் ஆகாமைவிளக்கிநின்றது, "உ[illegible]" [illegible]புழிப்போல.

இங்ஙனம் ஞானமுதலிய நான்கு நெறியினு மொழுகி வழிபடற் குரிய சொரூப மும், [illegible]மும், [illegible]மும், சா[illegible]மென்று நான்கு [illegible]ங்கட் பொருந்தி விள ங்கக் கொண்ட[illegible] [illegible] வெளிநந்து கொண்ட செந் தமிழ்க்காவிய விலக்கியச் [illegible] லைவரான [illegible] மாறு [illegible]ங்கு திருமேனியும் பறறி [illegible] நெறியினு [illegible] [illegible] கூடிய [illegible]றமை விளக்க ந்றுக்கியெனச். [illegible] திருப்பாட்டு வாழ்ந்து வணக்க மடிப் பாடாக வருபொருட் [illegible].

இத்திருப்பாட்ட[illegible] விரிநூல் [illegible] மூவருக்கும் அருள வழங்[illegible] [illegible] பொருளாகக்கொண் டுரைப்பாரு முளர். அவர் [illegible] [illegible] விசேடணமாகக் கூப அசரு[illegible], [illegible] திருமேனிகள் பெறப்[illegible] [illegible] சொரூபத் திருமேனி பெறப் படாமையா[illegible] [illegible] நடராசப்பெருமானைச் சகலர் வழிபட ற்குரிய மூர்த்தி [illegible] பொருளென்பனார். இனி உலகெலா முணர்ந் தோதற் கரியவனெ[illegible] "[illegible] இவ்வியல்பின னென வறிந்தோது[illegible] [illegible]" என்று ஆறுமுக முனிவருளார்த்தார். "[illegible] வாச்சான மறைநூ-குறை விலா [illegible] பாத" மெனவெடுத்தோ திய வாசிரியர் சகல[illegible], பின்னர் "அருளிரு [illegible] லாகம[illegible] யறியலா மளவி றுலும - தெருளலாரு சிவனை [illegible] செய்துயார் சிந்தை யுளவோ மூருளலா நீங்கக் கண்டு வாழலாம் பிறவி யாயா - விருளெலா [illegible] லாகு மடியரோ டிருக்க லாமே" என்று கூறி யருளினார். இதனுள்ளே, இறையருளிட்டபு சிவஞானத்தா லுணரப்பட டது [illegible]னே யோதவும் படுவதா மென்பது போதருதலின், அவருரை போலியாமென் றொழிக. இனி யுணர்தற்கு மோதற்கு மரிதாய பொருள் குணிடமாமாலென வாசகத்தை நிகழ்ந்துழி, ஆணுணர்ந் தோதற்கரிய னென்ற கருத்துப பசுபாச ஞானங்களான் முறையே சிந்தித்தற்கும் விவகரித்தற்கு மெய்தா நுண்ணிய னென்ப தாகலின், "தன் னருளானே உள்ளத்தின்கண் வைத்தாராய வூழுவார்க்கு முதற்பொருள் அவ்வாற்

னை யுணரவு மோதவும் படுவதாகியுள்ளதொரு சிவசத்தாமென விடுபார், அலகில் சோதிய னம்பலத் தாடுவான் - மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவா மென்றுரைப்பது. இது 'பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத்தாலே - நேசமொடு நாடி" யென்னுஞ் சிவஞானசித்தியினு முணர்க.

ஆறுமுகமுனிவர் இவ்வாறே ஆசிரியர் சொற்பொருட்பெற்றி தேற மாட்டாது, ஆண்டாண்டுப் போலியாக வுரைத்தனவும், வழுப்பட வுரைத்தனவு மிகப்பலவாம். ஆறுமுகமுனிவருரை கூறுதொழிந்த புராணங்களை மெய்யுணர்ந்த இராமலிங்கரென்பா ரொருவர் திருவிருத்தங்கடோறும் ஆசிரியர்கொண்ட சொற்பொருளே விருத்தமுற வுரை கூறி முடித்தார். இவரெல்லாந் தொல்காப்பிய முதலிய நூலியற்புலமை நிரம்பி யுரை கூறினரல்லரென்பது இவர் வாக்கிய வியல்பு முதலியன யுணர்வார்க்குத் தெளிவாமென்க. இனி வடலூர் இராமலிங்கர் 'உலகெலாம்' என்பதற்குப் பலவாறு விரித்த துரைத்தன சொல்வழுவிராய வேதாகம வுரைகளை மாறுகலின், உலகங் கொள்ளா தென்க. "எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு - கொள்ளாத கொள்ளா துலகு." திருவாசகச் செந்தமிழ் அருமறைக்கு இவர்போல ஒருவர் போலியும் பொய்யுமலிய வுரையொன் றெழுதி வெளியிட்டார். இவை மெய்யறிபவர்க்கன்றிப் புலமையினைக் கற்றுச் செந்தமிழிலக்கிய விலக்கண வைதிக சைவநூலுணர்ச்சி முற்றக் கல்லாவுமழுங்கோர் நல்லவையிற் செல்லப்பெறு மென்பது. இவரிவ்வாறுரைத்த "பொய்படு மொன்றோ புனைபூணுங் கையறியாப் - பேதை வினைமேற் கொளின்" என்னும் பொய்யாமொழிக்கு இலக்கியம் புகுக்கின்றனக. இது செந்தமிழ்ச் சந்தச் செய்யுளானே வேதாகம வருண்ணெறி யறிவுறுக்கு முத்தமகாவியமாகலின், தொல்காப்பிய முதலிய பழைய விலக்கணங்களும், தேவாரந்திருவாசகமுதலிய திருமுறை யிலக்கியங்களும், திருக்குறளிலக்கியமும், பத்துப்பாட்டு எட்டுத்தொகை முதலிய சங்கவிலக்கியங்களும், வடமொழி வைதிக சைவநூல்களு மாயாற் கற்றுவல்ல வாசிரியரே இதன் மெய்ப்பொருளுணர்ந்துரைக்க வல்லுநரென்க

பெரியபுராணம் பரமசிவ னருட்டிருத்தொண்டர் சீர்த்திச்செந்தமிழ் ஞான வுண்மை நாயன்மார் சருமஞான வருளொழுக்கு சரித்திரத்தில் வைத்துணர்த்துந் திருவருட் காவியமாம். இதன்கண் அப்பூதியடிகள் திருத்தொண்டு பத்திநெறி யொழுக்கும், மநு முதலிய மன்னோர் வருணாச்சிரம வழக்கும், புறநெறிச்சமயப் பூசைவழக்கும், அகநெறிச்சமய வாசார வழக்கும், வைதிகசைவ மெய்ந்நெறி வழக்கும், உண்மைச் சரியை வழக்கும், உண்மைக்கிரியை வழக்கும், உண்மையோக வழக்கும், உண்மைஞான வழக்கும், குருலிங்க சங்கம வழிபாட்டு வழக்கும், ஒப்பமுந் திட்பமு நுட்பமும் பொருந்தி யுவமனின்று மாறோதப்பட்டன. இங்ஙனம் பெருமையெல்லா மொருங்கு கொண்டதாய்ச் சிறப்புறுதலினன்றே இதனை திருச்சிற்றம்பல மகா சந்நிதியரங்கின்கண்ணே கேட்ட வளவர்பிரானாகிய அநபாயவேந்தன் இஃது அருண்மொழி யென்று கொண்டு இஃது இயற்றியருளிய சேக்கிழாருக்கு அருண்மொழித்தேவ ரென்னுஞ் சிறப்புப்பெயர் வழங்கி இதனைப் பதினொரு திருமுறைகளோடொன்றென வைத்துப் பன்னிரண்டாந் திருமுறை யென்று போற்றினனென்பது.

இனி இக்காலத்தொரு சிலர் "சேக்கிழார் தெய்வப்புலமை நிரம்பி யிதுபாடினரல்லர்" என்றும், "பலநூலாய்ந்த புலமை வலியானே யிது பாடினார்" என்றும், "அவர் பாடிய நாயன்மார் சரித்திரங்கள் ஓரோரிடங்களிற் குறைவுற்றன" என்றும், "அக்குறை

களை நாங் கண்டறிந்தோம்" என்றும், "அவற்றையு மாண்டாண்டுக் கூட்டிப் பொருள் கூறல் வேண்டும்" என்றும், தமக்குவேண்டியவாறு பிதற்றிக் திருமுறை வரம்பழிப்பர். மிகைக்குக் "களிந்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீச—தளிந்தானைத் திக்குரீஇ யற்று" என்த தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் புலைமொழி வாணமையு ளோதியருளுதலின், இந்நீரனைக் காரணங் காட்டித் தெளிவித்தல் கூடாமையலானும், வைதிக சைவ வரன் முறை போற்றுந் தமிழ் நலலாசிரியர் ஈட்டிய நன்மைக ளிவர் சிதறுமையாற் பேதுறுராதலானும், இவர் புலமையினை கண்டு மெய்ப்பொருட்டேற வேண்டிற்றில மென்க.

இது முதற் றொடங்கி பதிநோராந் திருமுறையாகிய பெரியபுராண மீறாக வொருகாண்டமாகவும், ஆளுடையபிள்ளையார் புராண முதலாக வெள்ளானைச்சருக்க மீறாக மற்றொருகாண்டமாகவும், வகுக்கப்பட்டது. இக்காண்டங்களுள் முற்பாதி பதின்மூன்றுச் சருக்கமாகவும் பிற்பாதி முறை தெரிக்கப்பட்டன. இதனை திருத்தொண்டர் புராணத்துட் காலவியல் வகுத்துணர்ந்தறையும் பத்து மூன்றும்.

இதனைன ராமனைசோழ மரபில் வந்தவதரித்த நாயனமார் புராணம் பனி ரண்டு. சிவமறையோர் மரபில் வந்தவதரித்த நாயனமார் புராண மிரண்டு. மாமாத்திரவேதியர் மரபில் வந்தவதரித்த நாயனார் புராண மொன்று. முடிமன்னர் மரபில் வந்தவதரித்த நாயனமார் புராண மாறு. குறுநிலமன்னர் மரபில் வந்தவதரித்த நாயனமார் புராண மைந்து. வணிகர் மரபில் வந்தவதரித்த நாயனமார் புராண மைந்து. வேளாளர் மரபில் வந்தவதரித்த நாயனமார் புராணம் பதின்மூன்று. இடையர் மரபில் வந்தவதரித்த நாயனமார் புராண மிரண்டு. சாலியர், குயவர், தயிலவினைஞர், பரதவர், சான்றார், வண்ணார், சேனைத்தலைவர், பாணர் முதலிய மரபுகளில் வந்தவதரித்த நாயனமார் புராணங்கள் ஒவ்வொன்று. திருநாளைப் போவார் குலத்துடைய நாயனமார் புராணம் பதினொன்று. திருக்கூட்டத்திருப்பதியிலிருந்த நாயனமார் புராண மிரண்டு. திருமரபறியாத நாயனமார் புராண மிரண்டு. தருமபரம்பரை நாயனமார் புராண மொன்று. திருமரபு தெரியாத நாயனமார் புராணம் பழம் பெரியோர் நாயனமார் புராண மேழு. பெரியோர் நாயனமார் புராண மொன்று. தொகையடியார் சரிதை நாயனமார் புராண மொன்று. தனியடியார் நாயனமார் புராண மெட்டு. எனக்கூறிய வகையால் வந்த புராணத்து வரலாறு புராணத்துள் அறிந்துகொள்க. மற்றைய புராண வரலாறுகளை விரித்துரைப்பிற் பெருகும்.

திருத்தொண்டத்தொகையுட் போந்த அடியார்களுட் குருவருளான வீடுபேறு தலைக்கூடினார் ஆளுடையபிள்ளையார் முதலாகிய மூவர் பதினொருவர் திருப்பெயர். சிவலிங்க வழிபாட்டால் வீடுபேறுதலைக்கூடினார் எறிபத்தர் சண்டேசுர முதலிய திருப்பெயர். திருவேடவழிபாட்டான் வீடுபேறுதலைக்கூடினார் தம்பிரான்றோழர் முதலாய பதினெருவர் திருப்பெயர்.

அப்பெயர்களானமாக, சேக்கிழார் திருவருட்புலவர் ஏனையோர், நாயன்மார் சிலர் மரபு வரா பெயர் தெரியலாமல் பெருமையை யெண்ணி,—திருத்தொண்டர் நெறியானே சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் பாடியருளினாராதலின், அது வருமாறு:
"அருளின் நீர்மைத் திருத்தொண் டறிவருந்-தெருளின் நீர செப்புதற் காமெனின்-வெள்ள மெய்ம்மொழி வானிழல் கூறிய-பொருளின் றீது மெனப்புகல் வாமன்றே" "வெற்றியார் பொழிற்சண்பையர் வேந்தர்மெய்ப் பாதங்கை-குறிக்கொடிய வெல்லையிற்றுரும்

[illegible] அறிவுக்கவர் தந்திருப் பாட்டுச் சந்தநெறி யெசிறி தியாளாறி நீர் [illegible]டன்பால்” என வாசியர் தாமே யோதிய திருப்பாட்டுகளானும் இத [illegible]. அஃதேல், திருவருள் நாயனமாருட் பலர் மரபு ஊர் பெயர் சேக்கிழாரு [illegible]டிச் சிலர் மரபு ஊர் பெயர் அவருக்குக்காட்டாதொழிந்த தென்னையெனின்,—நம்பியாரூரர் திருத்தொண்டத்தொகை அருளிச்செய்தது திருவருள் காட்டிய வழியானென [illegible] யாவர்க்கு மொப்ப முடிந்த பொருளாம். அத்திருவருள் சிவபிரான திருவருளா [illegible] வீடுபேறுதலைக்கூடிய நாயனமார் பின்னையத்தில் வாதவூரடிகண் முதற் பிறரு முள ராகவும், அறுபத்துமூன்று திருப்பெயரையே தெரிந்துசொண்டவர்க்குக் காட்டித் திருத் தொண்டத்தொகை பாடுவித்தருளியது, யாதுகாரணம் பற்றியென்று வினவுழிப் படும் விடையே, ஈண்டும் விடையாமெனவுணர்க.

இனித் திருத்தொண்டத்தொகையுட் போந்த அறுபான் மூவர்க்கும் பதினொரு புராண ங்களோடு அத்திருத்தொண்டத்தொகை கூறாதருளிய தொகையடியார் ஒன்பதின்மர்க்கும் அவர் தாயார் இசைஞானியார் தம்மையுங் கூட்டித் தனித்தனிப் புராணம் அறுபத்துமூன்றுமாறட, அவ்வறுபத்துமூன்று புராணத்தோடு திருக்கூட்டப்புராண மொன்பதுங்கூட்டப் புராண முழுத்தொகை எழுபத்திரண்டாமாறுமம, கணடுகொள்க.

இனித் திருவருள் திருத்தொண்டத் தொகையுட் போந்த நாயன்மார் முன்னை வரலாறியாதுஞ் சேக்கிழார் நாயனாருக்குக் காட்டிக் கூறுவித்தருளாதாயிற்று. மற்றது அத்திருத்தொண்டத்தொகைப் பதிக மருளிச்செய்த திருநாயனாராய பெருமாளுர வரலாறு மாத்திரம் அவர்க்குக் காட்டிக் கூறுவித்தருளிற்று. இயைபுணணமருளிப் ரகுறுப்பு யாதெனின்,—நன்று வினாயினாய். திருத்தொண்டத்தொகையுட் போந்த நாயன்மார் முன்னை வரலாறுக் டனித்தனி கூறப்புகின் அஃதளவுபடாமையான், அவை கூறுமையாற பெரியபுராணத்தவர் சரித்திரமொழுக்க வாரா சரிக்கப்பெருக் குறைவிலையான் றின மையானும், அது அந்நாயன்மார் முன்னை வரலாறும் சேக்கிழார் நாயனாருக்குக் காட்டிக் கூறுவித்தருளாதாயிற்று மற்று நம்பியாரூரர் புராணம் அத்திருத்தொண்டர் புராணத்தி ற்கு உபோற்காதப் பிரகரணமாய் அமைப்புடைத்துச் சிறப்புடைமையான், அவர் முன்னை வரலாறினை மாத்திரம் அது சேக்கிழார் நாயனார்க்குக் காட்டிக்கூறுவித்தருளுவ தாயிற்று. இஃதெனசொல்லியவாறோவெனின்,—திருத்தொண்டத்தொகையுட்பட்ட நா யன்மார் பலர் சாதி குலம் பிறப்பாற் சிறந்தாரல்லர், சாதி குலம் பிறப்பாற் சிறந்த நாம் அவர்தஞ் சரித்திரங்கேட்டு வியப்புறக்கடவமாவ தெலாஅ னொதுபமைமை யுடைப்படக்கடவ மாவ பலவேமென்று உலகத்தார் தம புலமறிவான் மயங்கத் திரியாநிற்காநிற்பார்; திருக் கைலாயக்கோயிலிற் சிகண்ட சிவபெருமானுக்குத் தொண்டராயமர்ந்த ஆலாலசுந் தரர் சிவத்துவித வேதியர் குருமரபில் வந்தவதரித்துச் சிவபிரானாற் றடுத்தாட்கொளப் பட்டு அவர் அடியெடுத்துக் கொடுத்தருளத் “தில்லைவா ழந்தணர்த மடியார்க்குமடியேன் திருநீலகண்டத்துக் குயவனார்க் கடியேன்” எனறிவ்வாறு தனித்தனி திருத்தொண்ட ரை யெடுத்தோதி அவரடியார்க்கெல்லார்க்குந் தாமடியாரென்று சேவித்துச்செய்தருளிய முறை [illegible], அவ்வுலகர் பொய்ம்மமாயச் சாதி குலம் பிறப்புத் தருக்கற்று அவ்வடியார் [illegible] அடிமைபேணி யுய்தி கூடுத லொருதலையாமென்று கடைப்பிடித்தற்கு. திருவருள் [illegible]ரூரர் முன்னை வரலாறு மாத்திரையே எடுத்துச் சேக்கிழார்க்குக் காட்டிய [illegible] தென்றவாறுமெனக.

உமாபதிசிவாசாரியர் பெரியபுராண மகிமை வரலாறெல்லாம் இனிது நனி விளங்குமாறு திருத்தொண்டர்புராணவரலாறு எனப் பெயர்தந்து ஒருநூல் இயற்றியருளினார். உமாபதிசிவாசாரியர் அதுவேயுமன்றித் திருத்தொண்டர் சரித்திரம் எளிதினறியும் பொருட்டுத் திருத்தொண்டர் புராணசாரமெனவு மோர்நூலியற்றி யருளினார்.

சிவஞானயோகிகள் இத்திருத்தொண்டர் திருநாமங்களைப் பத்தியோடு என்றும் பாராயணஞ்செய்வாராகக் குறிப்பாகத் திருத்தொண்டர் திருநாமக்கோவை எனக் கலிவெண்பாவால் ஒருநூல் இயற்றியருளினார். திருத்தொண்டத்தொகையினையும் இத்திருத்தொண்டர் திருநாமக்கோவையினையும் மந்திரமாகக்கொண்டு பத்தியோடு நித்தலும் பாராயணஞ்செய்வோர் சைவமுநிலைநின்று கற்பனையுமையலுந் தீர்ந் - தத்துவிதாநந்த வண்டபரிபூரணர் - ஆவர் திண்ணமாக வொருதலையாம். திருத்தொண்டர் திருநாமபாராயண வழிபாட்டுக்குத் திருத்தொண்டத்தொகையே யமைவதாகவும், சிவஞானயோகிகள் அவர் திருநாமக்கோவை வேறுசெய்தருளியது என்னுக்கெனின்,—திருத்தொண்டத்தொகையுள் அத்திருத்தொண்டத்தொகை திருவாய் மலர்ந்தருளிய சமயாசாரியரான திருநாவலூரர்பெருமானாரும் அவர் தந்தை தாயாராகிய சடையனார் இசைஞானியார் என்பாரும் அடங்காமையின், யாவருந் திருநாம பாராயணமுழுதுமுடையவர் தலவேண்டிச் சிவஞானயோகிகள் திருத்தொண்டர் திருநாமக்கோவையென்று அங்ஙனம் வேறுநூல் அருளிச்செய்தாரென்க.

இனித் திருமுறைகண்ட புராணம், அறுபான் மும்மை நாயன்மார் பரிபூரணமெய்திய திருநக்ஷத்திரக்கோவை, திருப்படிமம் பெற்ற திருப்பதிக்கோவை, திருப்பதிகக்கோவையென்பன குறும்பாவாயாறுபடுத்த இன்றியமையாத நூல்களாம். இவை யருளிச்செய்த பெரியார் திருநாமம் புலனாகவில்லை. இவை அருளிச்செய்தார் உமாபதிசிவாசாரியரென்பாரு முளர்.

திருப்புகழ்.

இஃது முருகக்கடவுள் திருவருட் செல்வரான அருணகிரிநாதரருளிச்செய்தது. இது ஆறுமுகக்கடவுள் திருப்புகழையே பொருளாகக்கொண்டமையின், திருப்புகழ் என்று அங்ஙனம் வழங்கப்பட்டதென்க. திருப்புகழ் என்பது - திருப்புகழையுடைய செய்யுட்பிரபந்தத்தினைக் குறித்தமையின், அன்மொழித் தொகை. யாவர் திருப்புகழெனின், மயாபதியிலக்கண் ஆறுமுகக்கடவுள் திருப்புகழ் என்பது தன்னை மொழிகுருமென்க. இஃது சந்தத்தொடைச் செந்தமிழ்த் திருப்பாடல்களமைந்த சிறந்த திவ்விய பிரபந்தம். இது சொற்சுவை பொருட்சுவை மிக நிரம்பியது. இது முருகக்கடவுள் திருவடியைத் தரவல்லதாயும் பொதுவாயும் விளங்கும். இத்திருப்புகழ் பதினாயிரமென்பது, "அருணகிரி நாதர் பதினாயிர மென-வுலாமெய் திருப்புகழ் யோகர்—... கோ-ரெண் மருட்கடலுகக் கீற்றமனத்தளா சரிக-காணி பிறவிக் கரம்" என்னு மாமணிக்கோவையாலுணரப்படும். இஃது அருட்பாவாகலின், முருகக்கடவுள் நித்திய நைமித்திக பாராதனை போழ்தினெல்லாம் அபயரான மந்திரமொழிபோலக்கொண்டு பாராயணஞ் செய்யப்படுகின்றது. முருகக்கடவுள் திருவடியடைத்திருவானவர்பயிர் வளர்த்தற்கு ஒரு சாலச்சிறந்த சாதப பிரபந்தமாம். இத் திருப்புகழ் நாமுயிர்த்தம் விருப்புடன் செலக் கேட்டலரளா லுசாதல செய்து அறுமுக

திருவடிருவருட்செல்வராய் வாழு மிம்பர் மாநிலப்புலவர் அறிவிலக்கட லமிழ்ந்த மூண்டு சுவர்க்கத்தில் வாழும் புலவர்களைப் பொருளாகப் போற்றல் செய்ய மாட்டார். இவ்வருளாசிரியர் இதுவேயன்றித் திருவகுப்புக் கந்தரலங்காரங் கந்தரனுபூதி முதலிய பிரபந்தங்கள் வேறு பலவும் தமிழுலகுய்ய அருளிச்செய்த பெரியார். திருவருட்பாவாதலொப்புமையானே திருப்புகழ் வரலாறு திருமுறை வரலாற்றினிறுதிக்கட்டைந்து கூறினும்.

நாலாயிரப்பிரபந்தம்.

திருமா றிருவருட் செல்வர்களான பெரியோர் தம் பெருமா டிருவடிச் சார்பாகக் கன்பாற் சாற்றிய பாமாலைகள், நாலாயிரப்பிரபந்தமென வழங்கப்படும். சுருதி மிருதி புராண விதிகாசங்களி னாராயணக்கடவுளைப் பற்றிப் போதிய வசனத்தொகுதிகளின் செம்பொருள்களைத் தமிழுலக மறிந்துய்யத் திருமா றிருவடித் தொண்டராகி மெய்யுணர்ந்த ஆழ்வார்கள் இங்ஙனஞ் செந்தமிழ்ப் பிரபந்தமாக அருளிச் செய்தார். வைணவப் பெரியோர் இவை தமக்குச் சிறந்த வேதமென்று வழங்குவர். அவருளொருசாரார் இந்நாலாயிரப்பிரபந்தமே வைணவத் திராவிட வேதமெனக் கொள்ப. மற்றொரு சாரார் வடமொழி மாமறைகளையொப்பப் பாவிப்பரெனக்கொள்ப. இம்முறையானே முன்னையோர் தென்கலை வைணவரெனவும், பின்னையோர் வடகலை வைணவர்களெனவும், இருபாலராயினார். அங்ஙனமாயினும், நாலாயிரப்பிரபந்த திருவருட்பாக்களான தமிழ்வேதமென்பதனை வைணவரெல்லாருமொத்த கருத்துடையரேயென்பது. நாலாயிரப்பிரபந்தம் இங்ஙனந் திருவருட் சுருதியாயிற்று திருமால் ஆராதனையினும் ஏனைக் காமானுட்டானங்களினும் அவை தம்மை வைணவர் திருமந்திரமாக்கொண்டு பாராயணஞ் செய்ப. இப்பிரபந்த வாசிரியரான ஆழ்வார் திருவுருவங்களைத் திருமால் சமயத்தாரன்றோ திருமா றிருவளர் தளிகளினும் வேறு புனித தலங்களினும் பிரதிட்டை செய்து அவர்கட்குப் பூசை திருவிழாப் புரிந்து வழிபடுப. இப்பிரபந்த பாராயணமும் இப்பிரபந்த வாசிரியர் திருவுருச் சேவனமும் எய்தப்பெறாத திருமா றிருக்கோயில்க ளெவ்விதவைபவமுடையவேனும், திருமா றிருவருட்பொலிவதிக முடையவாகாவென்பது திருமால் சமயத்தார் கொள்கை.

தேவார திருவாசகங்கள் சிவபத்திஞான வான்பயிர் வளர்த்தற்குச் சைவர்கட்கு இன்றியமையாத ஞானாமிர்தமென்பது நம்மனோர்க்கெல்லா மொப்ப முடிந்த பொருளாறுபோல, நாலாயிரப்பிரபந்தந் திருமா றிருவடிப் பத்திஞான வான்பயிர் வளர்த்தற்கின்றியமையா ஞானாமிர்த மென்பது நம்மனோர்க்கெல்லா மொப்ப முடிந்த பொருளாமென்க.

நாலாயிரப்பிரபந்தத்துள் முதலாயிரம் பெரியாழ்வார், சூடிக்கொடுத்த நாச்சியார், குலசேகரப்பெருமாள், திருமழிசைப்பிரான், தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்தன. பெரியதிருமொழி திருமங்கையாழ்வா ரருளிச்செய்தது. இயற்பா பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், திருவரங்கத்தமுதனா ரருளிச்செய்தன. திருவாய்மொழி நம்மாழ்வா ரருளிச்செய்தது.

இனி நாலாயிரப்பிரபந்தத்திற்கு வடகலைதென்கலை வல்ல வைணவ வாசாரியார் வியாக்கியானங்கள் வடமொழி தென்மொழி விரவிய நடையாற் சிறிதாகவும் பெரி

தாகவும் பற்பல செய்திட்டார். நாலாயிரப்பிரபந்தஞ் செந்தமிழ்த்தொடை சிவணிய பாவானும் பாவினங்களானுஞ் சந்தவிசை பொருந்தி விளங்குந் தமிழாய வடமொழி வேத வேதாந்தார்த்தங்களும் புராண இதிகாசார்த்தங்களு முட்பொருளாகக்கொண்டு நடத்தலாற் றமிழ்ப் புலமையோடு வடகலை வேதமுதலிய வோர்ந்துணர்ந்தாரே அதனைப்பொருட் டிட்பந் திட்பந் தெரிந்துணர வல்லார். பிற்காலத்து வைணவப் புலவர் சிலர் மதாபிமானத் தானுண்டாணவச் சிவநிந்தை பொதிந்த நூல்களைச் செய்தார். நாலாயிரப்பிரபந்த மோ முன்னோரான வைணவப் பெரியா ரருளிச்செய்யப்பட்ட நற்றமிழ் நூலாகலின், அக் குற்றந்தீர மிகச் சிறந்ததாயிற்று. இனி நாலாயிரப் பிரபந்தங்களி னொரோரிடங் களிற் சிலவுருத்திரர் திருமாலுக்குத் தாழ்ந்தவராக வோதப்பட்டார். அவர் ருணிருத்திரக் கடவுள் கூறுன விசாலாக்ஷனென்று சங்கார வுருத்திரனெனப்பாரோ இனி யகா ருத்திரனா கிய பரமசிவனாருரியமூர்த்தியுடனெனே, அவ்வாறு பகவனைப்பற்றி ரண்டாரரயசக்தியிலே யெனப்படு கூறலிலேனெண்டாம். "[illegible]" என்று பராசர புராணங் கூறுவதனாலும், பிறவாற்றானும், அவ்வுருத்திரர் அபிசம்பேத விடய மாதல் வச் சிரலேபமாய் நாட்டப்படுமென்க.

வைணவர் தமிழ் வேதமாகக் கொண்டுள்ள நாலாயிரப்பிரபந்த வரலாறு திருமுறை வரலாற்றைச் சார வைத்தோதினாம்.

திருக்குறள்.

தமிழ்வேத மென்றுரைக்கப்படுவனவற்றுள், சைவசித்தாந்தங்களுக்குச் சிறந்தான மாகிய திறத்து மேம்பாட்டினுடைய திருமுறை யிலக்கியங்களாகுஞ் சைவ இலக்கியத்திறத்தும் இடைவைத்து நடந்து வரலாறு கூறுமுன்னர் திருக்குறள் திருவள்ளுவ நாயனா ரருளிச்செய்த திருமுறை முப்பாலும் வெண்பாவா லருளிச்செய்யப்பட்டமை யின், திருக்குறளெனப் படுகின்றது. திருக்குறளெனப்படு குறள்வெண்பாவை யுடையதென அன்மொழித்தொகையாய நூற்பெயர் காரணக்குறியாயிற்று.

மாந்தர்க்கு அறம் பொருளின்பமென்னு முப்பாலுடைமையால் முப்பாலெனவும், இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்னும் வடமொழி நான்மறைக்கு மொப்பத் தமிழ்மறையா யெழுந்தமையின் உத்தரவேதமெனவும், தெய்வப்புலவரால் பிறந்தமையிற் றெய்வநூலெனவும், பொய்யாமொழியா னுடைமையிற் பொய்யாமொழியெனவும், வேம்புக் கூவுமாப்போல வெருட்டாறு வருதலின்றி எவ்விடத்தினும் பயக்குமென - றுமுடைச் சிறப்புடைமையின் அறம் பொருளின்பம் வாயுறுத்தருளிச் செய்தலின் வாயுறைவாழ்த் தெனவும், தமிழான் மறைவாய பொருள்களைத் தலின் றமிழ்மறை யெனவும், அந்தணர் அரசர் வைசிய ரென்னுந் துவிசர் மூவரு மோதுதற்குரிய சிறப்பியல்புடைய நான்மறைகளும் போலாது அந்தணர் அரசர் வசியர் வேளாளர் என்னு நாற்பால் வருணத்தாரு மறைச் சங்கர சாதிகளுட்பட்ட சனங்களு மோதுதற்காம் பொதுவியல் புடைத்தாய மறைபொருள் களைத்தலிற் பொதுமறை யெனவும், திருவள்ளுவரால் செய்யப்படுங் காரியமாகலின், திருவள்ளுவரெனவும், வழங்கப்படும். திருவள்ளுவர் என்பது காரியமாகிய நூலிற் காரணத்தின் கருத்தா வாகு பெயர். இத்திருக்குறளாசிரியர், வேதத்துப் பல விடங்களினும் மிகே

...காய்கள் போலப் புலப்படா திருந்த நலம்படு பொருள்க ளெல்லாவற்றையும் ... உலகத்தார்க்குக் கொடுத்தற் காரணத்தானே திருவள்ளுவ னென்றும், ... நூனுதிப் பொருளெல்லாம் பாரினுள்ளா ரறிந்துய்யப் பாற்பட வெடுத்தருளிய அருட் டலைமையுடைமையானே நாயனா ரென்றும், அறம் பொரு ளின்ப வீடெனப் பொருளியல்களைத் தமிழுலகந் தெளிந்துய்ய அருள் விளைத்திடக் கூறினமையானே தேவரென்றும், முழுதுணர்வாற் சொற்பொரு டெரிந்து நூல் செய்து எப்பாவலர்க்கு மேலாய் முதல்வராய் நிற்றலின்றுன நால்வகைப் பாக்களுள் வைத்து வெண்பாக்களும் அவற்றுள் வைத்துக் குறள்வெண்பாவு முதலாய நிற்றலின் அக்குறள் வெண்பாவானே தமிழ்நூலியற்றிய அறிவுவலி யுடைமையானும் முதற்பாவலரென்றும், தெய்வ வருளானெய்திய புலமை யுடைமையிற் றெய்வப்புலவ ரென்றும், மலரயனே வள்ளுவனாய் மறைந்து நான் மறையின் மெய்ப்பொருளை முப்பொருளாகத் தருதலின் நான்முகனென்றும், தலைமக்களுக்கெல்லாந் தாய்போல முப்பாலைத் தண்ணளியாற் சுரந்தருளுதலின் மாதானுபங்கி யென்றும், அறனும் பொருளு மின்பமுமாகத் தெளிந்தவை அறிந்தச் சொரிதருஞ் செந்நாப்போதுடைமையிற் செந்நாப்போதா ரென்றும், அறத்துப்பாலும் பொருட்பாலுங் காமத்துப்பாலுந் தனித்தனிக் கொண்டு நூலஞ் செய்யறிவ ... பாவலர்கள் வியப்புற அம் முப்பாலும் ஒருங்குகொண்டு அறம் பொரு ளின்பம் வீடென்னு நான்கு பொருளு மடங்கத் தமிழ்வேத நூல் செய்தலிற் பெருநாவலரென்றும், ... போற்றப்படுவர். திவ - விளையாட்டு. மாதானுபங்கி-மாதாவைப்போலு மொழுக்கினன்.

இவ்வுத்தர வேதம் கடைச்சங்கத்தார் காலத் தவதரித்து அவ் வரங்கேறிய தென்பதற்கு அச்சங்கப் புலவர்களெல்லாந் தனித்தனி இதன் பெருமை கிளையிட் டியற்றிய சிறப்புப்பாயிரச் செய்யுட்களே யமையுஞ் சான்றாம். அக்காலத்துக் கடைச்சங்கத் திருந்திது கேட்ட பாண்டியன் உக்கிரப் பெருவழுதி. பாண்டியனும் கடைச்சங்கப்புலவரும் வணங்கிக் கீழிருந்து கேட்பத் தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரோ டுருத்திரசன்மனாரோடு சங்கப்பலகை மீதிருந்து திருக்குறளரங்கேற்றினார் என்பது "அருந்தத் தெய்வத் திருவள்ளுவரோ - டொருங்கு நகப்பலகை யொக்க—விருக்க - வுருத்திர சன்ம னெனவுரைத்த வானி - னொருக்கவோ வென்றதோர் சொல்" என்னு மசரீரி யானேயாகக் காண் அறியப்படும். இஃதரங்கேறிய பொழுது "நாடா முதனான் மறைநான் முகனிற பாடா விடைப்பா ரதம்பகர்ந்தேன்—கூடாரை - யெள்ளிய வெங்கோ லிழுதை வெண்ணிய மாநகரின்-வள்ளுவன் வாயதென வாக்கு" என நாமகளும், "என்றும் புலரா தியாணர்நாட் செல்லுகினு-நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதாய்—குன்றாச் செந்தமிழோங்கு கற்பகத்தின் றெய்வத் திருமலர்போல் - மணப்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்" என விறையனாரும் புகழ்ந் துரைத்தருளினர். உக்கிரப்பெருவழுதி அரங்கிலிருந் திதுகேட்டு வந்து "நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்-றான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த - நூன்முறையை - வந்திக்க சென்னியாய் வாழ்த்துக நன்னெஞ்சே - சிந்திக்க கேட்க செவி." என்று உலகங் கைக்கொண்டு வழிபட்டோதி யுய்ய இவ்வண்ணம் வழிபாடு கூறினான். மற்றுங் கபிலர் பரணர் நக்கீரர் முதலிய கடைச் சங்கப்புலவரெல்லாரு மாண்டிதனைப் பலவாறு புகழ்ந்தெடுத்துப் போற்றி யிதனை ... இசைவிட்டார். அத்திருப்பாட்டெல்லாம் ... எடுத்துரைக்கிற் பெருகும். இதனை திருவள்ளுவமாலையிற் காண்க.

திருக்குறள் உருத்திரசன்மரும் நக்கீரனார் முதலிய சங்கப்புலவர்களுங் கேட்ப அரங்கேறியது வாய்மையே. அஃதரங்கேறுதற்கு முன்னர் நக்கீரனா ரியற்றிய களவியலுரையுள் அஃது மேற்கோளாக எடுத்துக்காட்டப்படுதல் பொருந்துமாறென்னையெனின், திருக்குறள், நக்கீரனார் களவியலுரை யியற்றுதற்கு முன்னரே அவதரித்து உலகினிலவிப் பின்னர்ச் சங்கமேறிற்றாகலின், அஃதெடுத்துக்காட்டப் பொருத்தமுடையதேயாம்; காலமாறுபாடுண்டு போதருமா றில்லையென்க. அற்றேலஃதாக, வாகீசர் "கனியிருப்பக் காய்கவர்ந்த கள்வனேனே" என்று திருப்பதிகத்தி லருளிச்செய்தார். நாயனார் "கனியிருப்பக் காய்கவர்ந் தற்று" என் றுத்தரவேதத்தி லருளிச்செய்தார். இவை தம்முள் யாது முன் னவதரித்தது பின் மேற்கோளாயதெனின்,—வாகீசர் கடைச்சங்க மிரீஇய முடத்திருமாறன் காலத்து விளங்கிய சமயாசாரியார்; நாயனார் கடைச்சங்கத்திறுவாயி னதனை நடாத்திய உக்கிரப்பெருவழுதி காலத்து விளங்கிய தெய்வப்புலவர். ஆகலின், "கனியிருப்பக் காய்கவர்ந்த கள்வனேனே" என்றெழுந்த வாகீசர் திருவாக்கே முன் னவதரித்தது திருக்குறளின் மேற்கோளாயதென்று விடுக்க.

திருக்குறள் தெய்வமொழியாகிய உத்தரவேதமாகலின், உத்தம மறைநூலென்க. "நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப் பால்கடுகங் கோவை பழமொழி—மாமூலம் - இன்னிலைசொல் காஞ்சியுடன் ஏலாதி யென்பவே - கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு." என்னும் வெண்பாவில் முப்பாலென் றோதப்பட்ட முப்பால் திருக்குறளென்றுகொண்டு, திருக்குறள் பதினெண்கீழ்க்கணக்குக ளொன்றென்று ஐயுறவுற்றே ரொப்பிப்பரொருசாரார். திருக்குறள் பெரிய தமிழ்மறைநூலாதலின், அதனை நாலடி முதலிய சிறுநூல்களோ டெண்ணணிந்தொருங்கோதற் சாலாமையின் ஈண்டு முப்பாலென்றது திருக்குறளன்றென மறுக்குநராயினா ரொருசாரார். ஈண்டு முப்பாலென்றது திருக்குறளெனக் கொள்ளினும் ஏனையவற்றோ டொப்பவைத் தெண்ணப்படும் பெருமையுடைத்தன்றென்பது, கடைச்சங்கப்புலவர் கோவூர்கிழார் "அறமுப் பொருளுக்கு மகலிடத்தார்க் கெல்லாந் திறமுறத் தேர்ந்து தெளிய—குறள் வெண்பாப் - பன்னிய வள்ளுவனார் பான்முறைக் கொவ்வாவே - முன்னை முதுவோர் மொழி" என்று திருக்குறட் சிறப்புப்பாயிரத் தெடுத்தோதியவாற்றானே நன்கு தெளியப்படும். ஆன்றோர் முதலியோர் மொழிந்தவை வடமொழியில் மனுவும் மறைமுனிவரும் இயற்றிய திருநூல் முதலியனவும் தென்மொழியில் சங்கத்தாரும் பிறரு மியற்றிய நூல்கள் முதலியனவுமாம். மற்றுத் தேவாரந் திருவாசகந் திருக்கோவை திருமந்திர முதலியன இறைவனருள் பெற்ற மெய்ந்நாயன்மாராய முக்குண வசத்தை முற்றக் கடந்து நின்ற தெய்வப் பெற்றி யெய்திய வுண்மை நாயன்மார் திருவாக்குக்களாய் நிற்றலின், அத் திருமுறைகளோடு இத்திருக்குறளுக் கொப்புக் கோதல் செயப்படுமேயா மெனச். அற்றாகலினன்றே, ஔவை "தேவர் குறளுந் திருநான் மறைமுடிவு-மூவர் தமிழு முனிமொழியுங்-கோவை - திருவா சகமுந் திருமூலர் சொல்லு - மொருவா சகமென் றுணர்" என்று அவ்வா றுடன்வைத்துச் செய்யுள் செய்வாரோ வென்றெனக.

தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் போகமும் வீடும் பொருந்து நெறியை யறிந்து மேவுதற்குரிய நன்மக்கட் குறுதியென இறைவனும் அவ்விறைவ னருள்பெற்று டையாருமோதியருளிய அறமுதலிய வுறுதிப்பொருணான்கனுள் அறம் பொருளின்ப மென்னு மூன்றும் பற்றித் தமிழ் மறைநூல் செய்தருளினார். மற்று நாயனார் திருக்குறட் டமிழ் மறைநூலுட் சிறப்புடைய சாத்தியமாகிய வீடு கூறிற்றிலராயின், அது

ஏன் தெய்வமுழுநூலாகாதெனின்,—"தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண் குறளா லானா வறமுதலா வந்நான்கு-மேனோருக்-கூழி னுரைத்தார்க்கு மொண்ணீர் முகி லுக்கும்-வாழியுல கென்னாற்று மற்று" "அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்-திறந்தெரிந்து செப்பிய தேவை - மறந்தேயும் - வள்ளுவ னென்பானோர் பேதை யவன் வாய்ச்சொற் - கொள்ளா ரறிவுடை யார்" "இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கு- முன்பறியச் சொன்ன முதுமொழிநூன் - மன்பதைகட் - குள்ள வரிதென் றவைவள் ளுவருலகங் கொள்ள மொழிந்தார் குறள்." "இம்மை மறுமை யிரண்டு மெழுமைக்குஞ் செம்மை நெறியிற் றெளிவுபெற-மும்மையின்-வீடுவரற்றி ஞனகின விதிவிளங்க வள்ளுவ னார் - பாடினா ரின்குறள்வெண் பா" "ஒருவ ரிருகுறளை முப்பாலி னோதத் - தருமமுத னான்குஞ் சாலு - மருமறைகள்-ஐந்துஞ் சமயநூ லாறுநம் வள்ளுவனார் - புந்தி மொழிந்த பொருள்." "அறந்தெரிந்தே மான்ற பொருள்தெரிந்தே யின்பின் - திறந்தெரிந்தே வீடு தெளி ந்தே-மறநெறிந்த - வாளார் நெடுமாற வள்ளுவனார் தம்வாயால் - கேளா தனவெல்லாங் கேட்டு" என முறையே நக்கீரரும், மாமூலனாரும், நரிவெரூஉத்தலையாரும், இழிகட் பெருங்கண்ணனாரும், களத்தூர்க்கிழாரும், கொடிஞாழன்மாணிப்பூதனாரு முதலாயினார், நாயனார் வீடுளப்பட வெடுத்துறுதிப்பொருணான்குந் திருக்குறளுள் அருளிச்செய்தா ரென்றெடுத்தோதுதலின், திருக்குறள் ளிப்பா லுறுதிப்பொருணான்குங் கூறிற்றோர் நூலேயா ம். நாயனார்தாமருளிச்செய்த தமிழ்மறையுள் வீட்டியல் யாங்ஙனங் கூறினாரெனின், துற வறமாகிய காரண வகையாற் கூறினாரெனக. அறமேல், வீட்டியலை ஏனை முப்பொருள் கள்போல இலக்கண வகையாற் கூறாது காரண வகையாற் கூறியது என்னையெனின்,— வீடு சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத் தாகலின், இலக்கணவகையாற் கூறும் பான் மைத்தன்றென் றுணர்ந்து அங்ஙனங் காரண வகையாற் கூறினாரெனக. ஆசிரியர் தொல் காப்பியனார் "அந்நிலை மருங்கி னறமுத லாகிய - மும்முதற் பொருட்கு முரிய வென்ப" எனச்சூத்திரஞ்செய்ததூஉம் இக்கருத்துப்பற்றியேயாம். இனி யிதுபற்றியன்றே வடமொழி ந்த வேதாந்த சித்தாந்த நூல்களுள் வீட்டியற் பொருட்டிறஞ் சிரவண மனன மென வு மிருதிறத்தாற் றடத்தமாகவுஞ் சிரவண மனன நிதித்தியாசன நிட்டை யென நாற்றிற த்தாற் சொரூபமாகவுஞ் சாதனவகையாற் கூறினரேயாமெனக. திருக்குறளில் வீட்டின் சாதனஞ் சுருக்கமாகக் கூறப்பட்டது. வேதாந்த சித்தாந்த நூல்களில் விரிவாகக் கூறப் பட்டது. இதுவே தம்முள் வேறுபாடு. இங்ஙனமாகலின், திருக்குறள் அறம் பொருள் இன்பம் வீடென்னும் உறுதிப்பொருணான்குந் திறம்படக் கூறு முழுநூலே யாமென் னும், நக்கீரனார் முதலியோர் அப்பெற்றி தோன்றவே அறமுதலிய வுறுதிப்பொருணான் குந் தெளிதருமாக்குந் தமிழ்மறை நூலாமென நங்ஙன மதனைச் சிறப்பித்துப் பாயிரஞ் செய்தாரென்றும், உணர்க. திருக்குறள் வீடுளப்பட அறம் பொருளின்பங் கூறுமாறு முன்னர் விளக்கத் தெரித்தும். "வீடென்பது சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத் தாகலின், துறவறமாகிய காரண வகையாற் கூறப்படுவதல்லது இலக்கண வகையாற் கூறப்படாமையின், நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்" என்ற பரிமேலழக ருரையாலும் மேலது துணிக. நச்சினார்க்கினியர் இப்பெற்றி தேராது அகத்தியனார் தொ ல்காப்பியனார் திருவள்ளுவநாயனார் தமிழான் வீடு கூறாரென்னும் பொருள்பட்ட தொல் காப்பியவுரையிற் றமக்குவேண்டியவாறெல்லாமுரைத்தார்.

நாயனார் நான்காய உறுதிப்பொருட் பெற்றி அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பாலென மூன்று பாலாற் கூறுவான் றொடங்கி, உயிர்கட் காகமும் வீடு

மேவுநெறியறிந் துய்யுமாறு அநுக்கிரகித்தனை முதனூலாசான் அவற்றையோதிய ஆதிபகவனை முதற்கடவுளை வழுத்துவதாகிய மங்கலக் கடவுள் வாழ்த்தும், அம்முதற்கடவுளது தாணையான உலகமும், அதற்குறுதியாகிய அறம் பொருளின்பங்களு நடத்தற் கேதுவாகிய வானசிறப்பும், அம்முதற்கடவுளருளிச்செய்த முதனூனெறியொழுகி அருந்துயரங் குராமையை யென்பயபடு மகட்பொருளாகிய யாக்கையுங் கரணமும் அவற்றுறு துயக்கப்படும் புறப்பொருள்களாகிய புவனமும் போகமு நிலையாமை நாடி முற்றத் துறந்து மெய்யுணர்ந்து அவ்வாறுதந்த முதற்கடவுளருட் பெற்றித்தலைக் கூடினமையானே அவ்வாற்றுமுதற் பொருளைக் முதற்கடவுளருளால் உலகிற்குணர்வாறுணர்த்தவல்ல முனிவராகிய நீத்தார்பெருமையும், அங்ஙனமவரால் உணர்த்தப்பட்ட உறுதிப்பொருள்களுட் பொருளும் இன்பமும் போலாது, அறம் இம்மை மறுமை வீடென்னு மூன்றும் பயத்தற் சிறப்புடைமையின் அஃதேனையவற்றின் மிக்கமை பெரிதுடைத்தென அதன் வலியுறுத்தலும், முறையானே பாயிரமாக முற்றக் கூறியருளினாரென்பது. நாயனார் அறம் பொருளின்பங்களை முறையே இம்மை மறுமை வீடென்னுமூன்றும் பயத்தலும் இம்மை மறுமையிரண்டும் பயத்தலும் இம்மையே பயத்தலுமாகிய சிறப்புச் சிறப்பின்மைக் கேற்றவாறு அறத்துப்பாலை முன்னும், பொருட்பாலை அதன் பின்னும், காமத்துப்பாலை இறுதியினு முறையே வைத்து, அவ்வாறறிய நெறிப்படுத்தமைத்தருளினாரெனக. இனிப் பொருட்பால் அறஞ்செய்தற்குங் காமந்துய்த்தற்கு முபகாரமாத லுடைத்தாகலின், அதன் முறை வைப்புச் சிறக்க நோக்கற்பாலதெனச

இல்லறந் துறவறமென விரண்டறங்களுள் இல்லறம் இல்லாளோடுகூடி வாழு மொழுக்கமாகலானும், பொருளு மின்பமுந் தனக்குக்காரணமாகக்கொண்டே இயலும் பெற்றியதாகலானும், பொருளு மின்பமும் வேறுதலின்றி அறத்தின்வழி நிகழு நீர்மைவாய்த்துவ ளடங்கு மியற்கையவாகும். "சிறப்புடை மரபிற் பொருளு மின்பமு - மறத்தின் வழிப்படூஉந் தோற்றம் போல" [illegible] அறியப்படுவதாம். இங்ஙனம் அறத்தின்கண் அடங்கும் பொருளின்பங்களை நாயனார் வேறு பிரித்துப் பொருட்பாலென்றுங் காமத்துப்பாலென்றுந் தனித்தனி நிறுத்தியது, பொருளீட்டுதலும் அதன் பாதுகாப்பும் [illegible] றஞ்செய்தலும், அரசன் காவலின்றி நடைபெறாமையின் அறத்திற்குக் காரணம் பற்றியல்லது செல்லாமையின், அவை யியற்றற்குரிய பொருளை மேலிட்டு அரசநீதி விரித்து முறைப்படக் கூறல்வேண்டியும், உருவுந் திருவும் பருவமுங் குலனுங் குணனு மன்பு முதலியவற்றுற் றம்முளொத்த [illegible] அறக்கிழவனுங் கிழத்தியும் ஓர் காலத்தொருபொழுது [illegible] சிறப்புடைய காமவின்பத்தை விரித்துச் சுவைபெறக் கூறல்வேண்டியு மென்றுணர்க. இனிப் பொருளு மின்பமும் அவ்வாறு கொண்டமையால் அறத்தி னடங்குதலின், திருக்குறள் முக்கிய விருத்தியால் அறங்கூறிய நூலேயாதல் காண்க.

இல்லறம் இருவகைப்பற்றின் முற்றிய மந்த அதிகாரிகளாகிய மக்களுக்கு அப்பற்றுக்களை யனுசரித்தே நின்று சித்தசுத்தி யெய்துதற் பொருட்டு விதிக்கப்பட்டதோ ரொழுக்கமாதலின், அவ்வொழுக்கத்தாரன முனிவருந் தேவரும் விழைதரும் போகம் நுணுகித் துய்த்துச் செல்லாநின்றார், அதனுள்ளே பொய்ப்பற்றறு மெய்ப்பற்றுநாடித் துறவறம் பூண்டு அந்தக்கரணங்க ளேவாதற் பொருட்டு விரதமனுட்டித்தலே யுறுதியாகக் கைக்கொள்ப. ஆதலின், நாயனார் இல்லறவியன் முன்னும் துறவறவியல்

[illegible]த்தியருளினார். அற மேற்கூறிய நியாயம்பற்றியே இல்லறந் துறவற [illegible]ாயதென்பது "காமஞ் சான்ற கடைக்கோட் காலை - யேமஞ்சான்ற மக்க ளொடு [illegible]-யறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்-சிறந்தது பயிற்ற லிறந்தத [illegible]" என வருந் தொல்காப்பியச் சூத்திரத்தானு மறிந்து கொள்க.

இனித் துறவறந்தான் வினைமாசு தீர்ந்து அந்தக்கரணங்க ளேவாதற்பொருட்டுத் துறந்தாரால் காக்கப்படும் விரதங்களும் அவரான் அவை தூயவாய வழி உதிப்பதாய ஞானமுமென இருவகைப்படும். இனி விரத மங்கமு ஞான மங்கியு மாகலின், விரத மொன்றும், ஞான மதன்பினனும், நிறுத்தியருளினார். இங்ஙனம் விரதத்தான் அந்தக்கர ணசுத்தி யெய்தி வீடு பயக்கு முணர்வெய்தப் பெறாரா, தோற்றமுடையன யாவு நிலை யுதலிலவாந் தன்மை யுணர்ந்து, ஒரோவழிச் செல்வம் பெற்ற சடவட்பூசை கடவுண் ஞான முடையார் கைத்தான முதலிய ஞானக்கிரியையே புரிந்து, புறமாகிய செல்வத்தின் கண்ணும அகமாகிய யாக்கையின்கண்ணு முளதாய பற்றினை அவற்றது நிலையாமையுண ர்ந்து [illegible]ம்பெற்ற துவரத் துறந்து, யானென தென்னுஞ் செருக்கறுத்துப், பரம்பொரு ளான இறைமுதற்கடவுள் ஒதிய வீடு நெறியினை இதுவே நன்னெறியென்று மனத்துட் கொண்டு, அதனக ஞுபாயமாய தியான சமாதிகளை மனத்தாற் செய்து, பிறப்பு வீடுகளை யும் அவற்றின் காரணங்களையும அவிச்சையான விளையும ஐய விபரீதங்களான்றி உண் மையானறிந்து, அனுபவமுடைய தேசிகரால் நூற்றுவ உபதேச மொழிகளைக் கேட்ட லாகிய சிரவணமும அவ்வுபதேச மொழிப்பொருளை அளவையானும பொருந்துமாற் றானுந் தெளிய வாராய்த லாகிய மனனமுஞ் செய்து, பிறப்பிறப் முதற்காரணமாய அவி த்தைகெட வீட்டிற்கு நிமித்தகாரணமாகிய செவ்விய பரம்பொருளை அனுபூதியிற் காண லாகிய நிதித்தியாசன சமாதிகளுற்று, மேற்சாரக்கடவன துணைப்பாரிலராய்க், காமம் வெகுளி மயக்கமென்னுங் குற்றங்கண் மூன்றனுடைய பெயருங் கூடக்கெடப் பெறுத லானே அவற்றின் காரியமாகிய வினைப்பந்தனைப் பற்றாக முறறக்கெடுத்து, எடுத்தவுடம்பும் அதுகொண்ட வினைப்பயனு நின்றமையின் நிலைவு பயிற்சியப்பதற்றாற பழைப புலன்களை மேற்சேறலுறின், இடையறாத மெய்யுணர்வி னுறைத்தொன்று அவ்வவற்றின யாற்றலறு த்து, மலவாதனையு நீங்கிச் சீவன் முத்தராயிருந்து எல்லாப் பவங்களுமே பிறப்புப்பிணி மூப்பிறப்புக்களு மின்றிக் கேவலமாய நின்று முடிவு காணகில்லாப் பரவீடாகிய நிரதி சயவின்பம் பெறுவரென்று, இவ்வாறு நிலைபாமையுந் துறவு மெய்யுணர்வு மவாவறுத்த லுமாகிய ஞானசாதனங் கூறுமுகத்தானே வீடு பேறறுறுதிப்பொருட் பெறறி மனக்குவிள க்கி யருளினார்.

இங்ஙனமாகலின், திருக்குறள் பொருளினப் பரப்புக் கொண்டறங்கூறி வீட் டியல்பு நன்று காட்டிய தத்துவஞான நூலா முதற்றரமேதமென்பது தேற்றென வுணா ந்துகொள்க.

அறமே [illegible] பெறுஞ் [illegible]யங்கள் கூறுங்கடவுளருள் வைத்தும வீடுபேறுகளுள வைத்தும யாவனெனவும யா [illegible]வுஞ் சிறப்பாற்றானறியுங் குதூகலம் பெரிதுடையேன, கூறலுவேண்டு மென்னை [illegible]ாயனுா முழுமுதற்கடவுளிவனெனப்துஉம, மெய்வீடே தீதுவெனப்துஉம, [illegible]லோ டுடைய புலவர் சிறப்பாற்றாற் குறிப்பானறிந்திட வைத்தக கடவுளிய [illegible]லும் ஆத்திக சமயங்கட் கெல்லாம பொதுவாக வெளிப்படையா [illegible] [illegible]றளில் அங்ஙனஞ் சிறப்பியல்பு அறிவுறுத்தன் முறைமையன்றாயினும், இக

காலத்தேகான்மவாதிகளு ளொருசாராரும் பிறரு நாயனார் வாழ்த்திய கடவுளும் அவரோதிய வீடுபேறுந் தத்தஞ்சமயக் கொள்கைகளோ டியைபுற்று நிற்குமெனச் சில போலியுரைகட்டி யெழுதித் தம்முள் வைத்துப் பாராட்டித் தமக்கென வொன்றிலராகிய பேதைகளை அப்போலிக் கட்டுரைகொண்டு மயக்கித் தந்நெறியினீர்க்கக் கேடுபல சூழ்தலானும், பரிபாகியாகிய நீ அவ்விரண்டன் சிறப்பிய லறியலுற்று வினா நிகழ்த்தலானும், "அகரமுதலவெழுத்தெல்லாம்" என்னு முதற்றிருக்குறளின் மெய்ப்பொருள் விரிக்குமுகத்தானே அவ்விரண்டன் மெய்ம்மைத் தன்மை சிறிதீண்டுத் தெரிக்கலுற்றும்.

கடவுள் வாழ்த்து

முதற்றிருக் குறள் விருத்தி.

அகர முதல வெழுத் தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

என்பது திருக்குறளென்னுதலிற்றோ வெனின்,—உலகிற்கு முதற்கடவு ளொருவனுள னென்பதூஉம், அம்முதற் கடவுளான் ஆதிபகவ னென்பதூஉம், உணர்த்துத னுதலிற்று. உரையாசிரியர் பரிமேலழகியார் மற்றிம்முதற் குறளினுக்கு இப்பறிய பிண்டப்பொழிப் புரையும் அதன் விசேடவுரையும் வருமாறு :—எழுத்து எல்லாம் அகரமுதல உலகு ஆதிபகவன் முதற்று—எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலையுடையன; அதுபோல உலகம் ஆதிபகவனாகிய முதலையுடைத்து என்றவாறு. இது தலைமைபற்றிவந்த எடுத்துக் காட்டுவமை அகரத்திற்குத் தலைமை விகாரத்தா னன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை செயற்கையுணர்வானன்றி இயற்கையுணர்வான் முற்றுமுணர்தலானுங்கொள்க. தமிழெழுத்திற்கேயன்றி வடவெழுத்திற்கு முதலாதலானோகி, எழுத்தெல்லா மென்றார். ஆதிபகவன் என்னு மிருபெயரொட்டுப் பண்புத்தொகை வடநூன்முடிபு உலகென்றது ஈண்டுயிர்களை மேனின்றது. காணப்பட்ட உலகத்தாற் காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின், ஆதிபகவன் முதற்றே யென உலகின்மேல் வைத்துக் கூறினார், கூறினாரேனும், உலகிற்கு முதல் ஆதிபகவ னென்பது கருத்தாகக் கொள்க. ஏகாரந் தேற்றத்தின்கண் வந்தது. இப்பாட்டான் முதற்கடவுள துண்மை கூறப்பட்டது.

அதுபோலவென்பதிசை யெச்சம். அது வருவித் துரைசெய்யப்பட்டது. அகர நாத மாத்திரையான வியற்கைத் தோற்ற முடைத்தாய் நிறைந்து முதன்மையுற்று நிற்ப ஏனையெழுத்துக்க ளெல்லாம் அதனியக்கத்தான் விகாரமுயற்சியிற் றோன்றி அதனானே வியாபிக்கப்பட்டுப் பரதந்திர முடையவாய் நிலவுதல்போல, ஆதிபகவன் இயற்கையுணர்வினானே முற்றுமுணர்ந்து யாண்டு நிறைந்து முழுமுதல்வனாய் விளங்கி நிற்ப, உலகனைத்தும் அவனாணையான் வியாபிக்கப்பட்டுப் பரதந்திரமுற்று வினைக்கீடாக வுடல் கரணமெய்தித் தோன்றி இடவிடய வியாபாரமுடையவாய் நிலவாநின்றனவென்பதிதன் கருத்தாம். இடம்-புவனம், விடயம்-போகம். இத் திருக்குறளினுக் கிதுவே பொருளென்பது, உமாபதி சிவாசாரியார் "அகர வுயிர்போ லறிவாகி யெங்கு நிகரிலிறை நிற்கு நிறைந்து" என்றிதன்பொருள் எடுத்தோதிய வுபநிருங்கணத் திருவாக்கானுமறிக. அகரவுயிர் முதலாதல்போல வென்க. முதலாதலென்பது அவாய் நிலையான் வருவித்து முடிக்கப்பட்டது. இவ்வாறு வருவித்து முடிப்பதனை வடநூலார் அத்தியாகார மென்பர். முதலாதல் - முதலாய் நிற்றல். முதலாயென்னுமுவமையடை பொருளினும் நிறைந் தென்னும் பொருளடை உவமையினுங் கூட்டியுரைக்கப்பட்டன. பொருளை

...னுமுவமேய மெனினு மொக்கும். இங்ஙனம் ஆதிபகவனாகிய முதற்கடவுளை எழுத்துக்களினிறைக் கவைதமக்கு முதலாய் நிற்கும் பொதுவியல்பு பற்றி அகரத்தோ டொப்பித்தருளினும், அப் பரம்பொருள் அறிவுருவா யாங்கணு நிறைந்து எப்பொருட்கு மாதாரமாய் நிற்கு முழு முதலான வுடையா னாகலின், உண்மையிற் றன்னுடைப்பொரு ளாகிய பசுபாசங்களு ளொன்றானே முவமிக்கப்படா னென்பதே நாயனார்க்குக் கருத்தென்ப தறிவிப்பார் "அறிவாகி யெங்கு நிகரின்றி நிற்கு நிறைந்து" என்றச்சுருதிய பொருளினை இங்ஙனந் தெளித் தோதியருளினார். இனி உடைப்பொருள் அடிமையு முடைமையுமென விருவகைப்படும். அவற்றுள் உயிர் வருக்கமெல்லா மாதிபகவனாகிய விறைவனுக் கடிமை யெனவு மாயை கன்மங்களு மவற்றின் காரியங்களு முடைமை யெனவு முணர்ந்துகொள்க.

நாயனார் 'அகர முதல வெழுத்தெல்லா மாதி பகவன் முதற்றே யுலகு' என் றிங்ஙன மெடுத்துக் காட்டுவமையாற் கூறியருளிய பொருட் பெற்றி யினிது புலப்படும் பொருட்டு உமாபதி சிவாசாரியர் இங்ஙனம் உவமாலங்காரத்தில் வைத்து உபபிருங்கணமாக வெடுத்தோதியருளினார். உபபிருங்கணமாவது —முதனூல் வசனங்களின் மெய்ப் பொருளினிது புலப்படுமாறு வேண்டுஞ் சொற்றந்து பெய்து அவை தம்மை ஆண்டுக் கிடந்தவாறே யெடுத்துரைக்கும் வாக்கியமாம். இது முற்றுவமையாமாறு முன்னர்க் காட்டுதும்.

எடுத்துக்காட்டென்னு முவமையினை வடநூலார் நிதரிசனாலங்கார மென்றுரைப்பர். நிதரிசனாலங்காரத்திற்கும் உவமாலங்காரத்திற்கும் வேறுபாடி யாதெனின்,— உவமான வுவமேயங்களிரண்டன் சாதிருசிய தருமம் பேதநெறியானே உவமவுருபு பற்றி வெளிப்படையால் விளங்குவ துவமாலங்காரம். அவ்விரண்டன் சாதிருசிய தருமம் அபேத நெறியாற் குறிப்பி னுணர்த்துவது நிதரிசனம் இதுவே தம்முள் வேறுபாடென்க. உவமத் தொகையில் அதிவியாத்தி நீக்குதற்கு அபேத நெறியானென்றும், குறிப்பினென்றும், உரைத்தாம். இன்னும், உவமத் தொகை, சாதிருசியம் பலபடுதற்கு உவமவுருபு விரியா னெய்துவதாகவுங் கவி தொகையிலக்கண மேவ மேடி அதுதொகுத் தோதுவதாம். நிதரிசனங் கவி அவ்வுருபு வேண்டாது அபேதம் பொருள் கருதிப் பிரயோகிப்பதாம். இங்ஙனமாகலின், இரண்டற்கும் வேற்றுமை பெரிதாதலறிக. அற்றேலஃதாக; திருட்டாந்தாலங்காரம் உவமான வுவமேய சாதிருசியம் அபேதமாய் உவமவுருபின்றிக் குறிப்பா னுணர்த்துவ தாகலின், நிதரிசனாலங்காரத்திற்கு அதன்கண் அதிவியாத்திவரும்பிறவெனின்,— திருட்டாந்தாலங்காரம் "வேந்த நீ கீர்த்திமான் வெண்மதியங் காந்திமான்" என்றிங்ஙன முவமான வுவமேய சாதிருசியம் பேத நெறியா னுணர்த்தும். நிதரிசனாலங்காரம் அவ்வாறன்றி அவ்விரண்டன் சாதிருசியம் அபேத நெறியானுணர்த்தும். ஆகலின், நிதரிசனத்திற்கு அதன்கண் அதிவியாத்தி வருமா றின்றென்க. கீர்த்தியுங் காந்தியும் பேதமுடையனவாயினும், வெண்மைப் பண்பு இரண்டற்கண்ணு மொத்தலின், அவ்வொப்பினுள்ளே திருட்டாந்த மாகா நின்றது. மற்று எழுத்தெல்லாவற்றிற்கும் அகரமுதலாதலும் உலகுக்கெல்லாம் ஆதிபகவன் முதலாதலும் அவ்வாறு பேதமுறாது அபேதமாயொத்தலின், நிதரிசன மாகா நின்றது. அற்றேல், முகமதி யென்னு முருவகமும் அபேத சாதிருசிய முணர்த்தலின், நிதரிசனத்திற்கு அதன்கண் அதிவியாத்தி வருமெனின்,—அற்றன்று; உருவகமாவது உவமான வுபமேய வாக்கியங்களிலுள்ள ஒவ்வோர் பதமாத்திரையானே அபேத சாதிருசிய முணர்த

துவதாகலானும், நிதரிசனமாவது அவ்வாறன்றி உவமானவுவமேய வாக்கிய மிரண்டுங் கொண்டு அபேத சாதிருசிய முணர்த்துவதாகலானு மென்க. இனி நிதரிசனாலங்காரம், திருட்டாந்தாலங்காரம், ரூபகாலங்காரம், அதிசயோக்தியலங்காரம், உத்பிரேட்சாலங்கார மென்றித்திறத்தனவற்றிற்கு உவமான வுறுப்பு உவமேய வுறுப்புச் சாதிருசியதருமு மென்பன பொதுவிய லாதலும், உவமாலங்காரம் இவற்றிற்கெல்லா மடியாதலுங் காண்க. இன்னும், இவ்வலங்காரங்களின் இலக்கண நுட்ப மீண்டு விரிக்கப்புகிற் பெருகும். குவலயானந்த முதலிய வடநூல்களிற் கண்டுகொள்க.

ஈண்டுக் கூறியவாற்றாற் சாதிருசியதருமம் போதித்தற்கண் ஏனையவற்றி னோக்க எடுத்துக்காட்டுவமை சிறத்த லினிதுவெளிப்படுதலின், நாயனார் அவ்வுவமை யளவைபற்றி முதற்கடவுளதுண்மை இவ்வாறு சாதித்தருளினா ரென்க.

நாதமாவது நல்லுடலின்கண் மனனும் அருவுடம்பி னுள்ளான பரசரீரத்தினின் றுஞ் சந்ததமாய் விருத்திப்பட்டுத் தோன்றும் விருத்தக வொலி யெனப்படும் அகரம் அதன் விருத்தியா யுற்பத்தியின்க ணெழுந்தரும் உதானனென்னும் வாயு வேகத்தினாற் றூரக்கப் பட்டுக் கண்டமாகுவி முயற்சி விகாரமின்றி இயல்பினானே வைகரியாய்த் தோன்றுதலின், அதனை விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய வியல்பாற் பிறக்குந் தன்மை யுடைத் தென்றார். ஆதிபகவன் றனக்கோ ராதார மின்றி எப்பொருட்குஞ் சர்வாதாரமாய இயல்பாகவே பாசங்களி னீங்கி யாங்கணு நீக்கமின்றி நிறைந்து அனைத்தையுஞ் சுட்டிறந் தொருங்கே யறியு முற்றறி வுடையனாதலின், அவனைச் செயற்கை யுணர்வின்றி இயற்கை யுணர்வான முற்று முணருந் தன்மைப்பாடுடைய னென்றார். இங்ஙனங் கூறவே, அகர முதலிய வெழுத்துக்கள் அகாரத்தின் காரிய விருத்தி யுற்று அவ்வாயுவாற் றூரப்பட்டு உரங் கண்ட முச்சி மூக்கென்னு மிடங்களைப் பற்றியும் இதழ் நா பல் அண்ண மென்பவற்றின் முயற்சி பற்றியும் வேறுபாடுற்று அகர வொலிவிகாரமாய்த் தோன்றித் தலைமையின்றி நிற்கும், அதுபோல வுலகு அநாதியே பாசத்துடனுற்று ஆதிபகவனை யாதாரமாகக்கொண் டவனாணையான் வினைக்கீடாக மெய்துந் தனுகரணங்கள் பற்றித் தொடக்குற்றுத் தோன்றி அறிவிச்சை தொழிற்பட்டு விளங்கிச் சிற்றுணர்வுஞ் சுட்டறிவுமுடையவாய்த் தலைமைப்பாடின்றி நிற்குமென்பது தானே போதருமென்க. செயற்கை யுணர்வெனினுஞ் செனனிய ஞானமெனினு மொக்கும். இயற்கை யுணர்வெனினு நைசர்க்கிக ஞானமெனினு மொக்கும். முற்றுணர்வெனினுஞ் சர்வஞ்ஞத்துவமெனினு மொக்கும். சிற்றறிவெனினுங் கிஞ்சிஞ்ஞத்துவமெனினு மொக்கும்.

ஆரியமுந் தமிழுங் கடவுண் மொழிகளாய் நடத்தலின் எல்லாமென்பது பற்றி யவ்விரண்டனையுந் தழீஇயன்றேனும், ஏனை மொழிகளின்கண்ணவாகிய வெழுத்துக்க டாமும், அகர முதலவாய் நடக்கக் காண்டலின், அவையும் எல்லாமென்பதனாற் றழுவப் படுதற் கேற்றவாமென்க. இனி யெழுத்தெல்லாம் அகர முதல என்பதற்குத் தமிழின் கணுள்ள ஆகாரமுதல் ஔகார மீறாகக் கிடந்த பதினொ ருயிரெழுத்துக்களும், ககரமுதல் னகர மீறாகக் கிடந்த பதினெட்டு மெய்யெழுத்துக்களும், அகரத்தை முதலாகக்கொண் டதனோடுசிவணி இயங்குவனவாமென்று பொருள் கோடலுமாம்.

அற்றேலஃதங்ஙனமாக, ககர முதலிய மெய்யெழுத்துப் பதினெட்டுந் தனித்தி யங்கு மாற்றலுடையன வன்மையின், அவற்றிற்கு அகரத்தை முதலாகக் கொண்டு

[illegible] பொருத்தமாம், ஆகார முதலிய உயிரெழுத்துக்க டனித மாற்ற முடையனவாகலின், அவற்றிற்கு அகரத்தை முதலாகக் கோடலன்றி [illegible] சிவணி இயக்கமுறுமென்றல் பொருந்தாதாம்; "மெய்யி னியக்க மகரமொடு சிவணும்" என வாசிரியர் தொல்காப்பியனாரும் அத்தன்மை யொன்றுமே கூறியொழிந்தாரெனின்,—ஆகார முதலிய வுயிரெழுத்துக்க டனித்தியங்கு மாற்றலுடைய வென்றதற்குக் கருத்து மெய்யெழுத்துக்கள்போலச் சடமாத லின்றித் தம்மியல்பின் உயிர்ப்புடையன வென்பதேயாம். இனி அவ்வுயிர்ப்பும் அவை தமக்கு அகரத்தொடு சிவணுதலாற்றானே செம்மையுறுவதாம். யாங்ஙனமெனின்,—காட்டுதும். இகர ஈகார உகர ஊகாரங்கள் அகரத்துக்குரிய அங்காப்பு முயற்சியோடு சிவணிப் பிறக்கும். எகர ஏகார ஒகர ஓகாரங்கண் முன்னர் அகரக்கூறும் பின்னர் இகர வுகரக்கூறுகளு மியைந்து பிறக்கும். ஐகார முன்னர் அகரக்கூறும் பின்னர் இகரக்கூறும் இடையில் யகரமுந் தலைக்கூடிப் பிறக்கும். ஔகார முன்னர் அகரக்கூறும் பின்னர் உகரக்கூறும் இடையில் வகரமுந்தலைக்கூடிப் பிறக்கும். ஆகலின், உயிர் பதினொன்றுந் தம் மியக்கத்திறத்து அகரமாகிய முதலை யின்றியமையாமை கண்டுகொள்க. ஏகாரமுதலியன வன்னவாதல் மாபாடியங் கையுடங்களிற் காண்க. இகர ஏகார உகர ஊகாரங்க ளன்னவாதல் சிவஞானமாபாடியத்துக் காண்க. ஐகார ஔகாரங்க ளன்னவாதல் "அகர விகர மைகார மாகும்" "அகர வுகர மௌகார மாகும்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரங்களா னறிக. இது தொல்காப்பியச் சூத்திர விருத்தியினுங் கண்டுகொள்க. இனி ஆசிரியர் தொல்காப்பியனார் "மெய்யி னியக்க மகரமொடு சிவணும்" என்று கூறினாற்போலப் 'பதினொருயிரி னியக்கம் அகரமொடு சிவணும்" என்று கூறாராயது, அத்தன்மை பிறர்க்கு உணர்த்துதல் ஆசிரி தாதற்கேசிகேயாம். நச்சினார்க்கினியரும் "மெய்யி னியக்க மகரமொடு சிவணும்" என்னுஞ் சூத்திரத்து இவ்வாறே யுரைத்து, "இறைவன் இயங்குதிணைக்கண்ணும் நிலைத்திணைக்கண்ணும் பிறவற்றின்கண்ணும் அவற்றின் றன்மையாய் நிற்குமாறு எல்லார்க்குமொப்ப முடிந்தாற்போல அகரமும் உயிர்க்கண்ணுந் தனிமெய்க்கண்ணுங் கலந்து அவற்றின் றன்மையாய் நிற்குமென்பது சான்றோர்க்கெல்லாம் ஒப்ப முடிந்தது அகரமுதல வென்னுங் குறளான்—அகர மாகிய முதலையுடைய வெழுத்துக்க ளெல்லாம், அதுபோல இறைவனாகிய முதலை யுடைத்து உலகு என வள்ளுவனார் உவமை கூறிய வாற்றானும், கண்ணன் "எழுத்துக்களில் அகரமாகின்றேன் யானே" யெனக் கூறியவாற்றானும், பிறநூல்களானு முணர்க" வென்றிவ்வாறு விளக்கினார். கண்ணன் எழுத்துக்களில் யானே அகரமாகின்றே னென்றது, சிவாகம பாவனை தலைப்பட்ட வொற்றுமை பற்றியே யென்பது, சிவஞானமாபாடியத்துக் காண்க. "அகரங்க ளின்று மகர வுயிரின்றே - லிக்கிரமத்தென்னு மிருக்கு" "ஒன்றென மறைகளெல்லா முரைத்திட வுயிர்க ளொன்றி, நின்றனனென்றுபன்மை நிகழ்த்துவ தெனையெனின், னன்றவை பதிதானொன்றென்றறையு மக்கரங்க ளோரனு, சென்றிடு மகரம்போல நின்றனன் சிவனுஞ் சேர்ந்தே" "எவ்விடத்து மிறையடியை யின்றியமைந் தொன்றையறிந் தியற்றிடா வுயிர்க ளிறைவன் றானுஞ் செவ்விதினி னுள்புகுந்து செய்திடெலா முணர்ந்து சேட்டிப்பித் தெங்குமாய்ச் செறிந்து நிற்ப, வெவ்வுயிர்க ளோற்றுமைபோ தலையின்றித் தோற்று விவற்றினுக்கம் முதலெழுத்துக் கெல்லாமாய் நிறகு, மவ்வுயிர்போ லின்றிடுவ துதலாலு மரனடியை யகன்று நிற்ப தெங்கே யாமே" என்றத்துவித சித்தாந்த சைவ சுருதிகள் இவ்வியல்பு தெருட்டுதலுங் காண்க.

அவற்றுள், "இகர விறுபெயர் திரிபிட னுடைத்தே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரவிதியால், நம்பிக்கொற்றன் நம்பிச்சாத்தன் நம்பிப்பிள்ளை யென்பன்போல ஆதி பகவனென வல்லொற்றுமிகுப் புணர்தற்பாலது அங்ஙனம் புணராது ஆதிபகவனென இயல்பு புணர்ச்சி யுற்றது வடநூல் விதிபற்றி யென்பது. ஆஃதென்னும் இகாரந்தப் புல்லிங்க சத்தம் பகவத்சத்ததோடு புணருங்கால் ஆகமம் ஆதேசம் லோபம் என்னுந்திரிபுகளுள் யாதும் பெறாது ஆதிபகவனென அங்ஙன மியல்பாய்ப் புணர்தல் வடமொழி வியாகரண வழக்காறும். இனி ஆதிபகவனென்னு மிருபெயரொட்டுப்பண்புத் தொகைக்கணிலைமொழியீற்று ஸு (விசர்க்கம்) 'ஸுபொ தாதுப்ராதிபதிகயோ:' என்னுஞ் சூத்திர விதியால் லுக்காயிற்று. ஈண்டு லுக்கு அனுவிருத்தியான் வந்தியை யும். அனுவிருத்தியாவது மேலே போந்த சூத்திரத்தின்கணுள்ள ஒரேகதேச பதங் கீழே போதருஞ் சூத்திரப் பொருட்கு உபகாரமாக வந்தியைவது. மற்றிது அதிகாரமன் றோவெனின்,—அன்று. என்னை? அதிகார மேலே போந்த சூத்திர முழுதுங் கீழே போதருஞ் சூத்திர விதிக் குபகாரமாக வந்தியைவ தாகலி னென்க. ஆதிபகவ னென்பது கர்மதாரயசமாச மன்றே; சமாசம் பிராதிபதிகமாமோவெனின்,—"க்ருத்தத்திதஸமாஸாஶ்ச" என்னுஞ் சூத்திரவிதியால் சமாசமும் பிராதிபதிகமாத லோர்ந்தா ரென்க. ஈண்டுப் பிராதிபதிகச் சொல் "அர்த்தவததாதுரப்ரத்யய: ப்ராதிபதிகம்" என்னு முற் சூத்திரத்தினின்றும் அனுவிருத்தியான் வந்தியையும். மற்று ஆரியமொழிக டமிழில் வடசொல்லாயப் புணர்ச்சி யுறுங்கால், தமிழியன் முடிபு பெறுதலன்றி வடமொழியியன் முடிபும் ஒரோவழிப் பெறுமென ஆசிரியர் தொல்காப்பியனார் தொல்காப்பிய வெழுத்ததிகாரத்துப் புணரியலி லோதாமை அந்நூற்குக் குன்றக்கூறலென் னுங் குற்றமாகாதோ வெனின்,—"உணரக் கூறிய புணரியன் மருங்கிற் கண்டுசெயற் குரியவை கண்ணினர் கொளலே" எனத் தொகைமரபின் புறனடைச் சூத்திரத்தி லிவ்வாறு வரும் வடநூற் புணர்ச்சி முடிபும் அடங்குதலின், ஆகாதென்க. தொல்காப்பியனார் இனைய வடநூன் முடிபுகளை அமைத்துக் கொள்க வென்றுண்டுகிளந்தோதாரா யினார், "வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ—யெழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" எனச் சொல்லதிகாரத் தெச்சவியலில் வடசொன் முடிபெல்லாமடங்க வங்ஙனமெடுத் தோதுங் கருத்தினரா யென்க. வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ யெனவே, சொற் புணர்ச்சி ஆண்டுக் கிடந்த முடிபானும் வரு மெழுத்தொடு புணர்ந்த சொல்லா மென்பது தானே போதரு மென்க.

லோக மெனனும் ஆரியச் சொல் உலகெனத் தற்பவமாயிற்று. அது புவனத்திற் கும் உயிர்களுக்குந் தனித்தனி உரியபெயராம். உயிர்கள் சேதனப் பிரபஞ்சமும் புவனம் அசேதனப் பிரபஞ்சமு மாகலின், ஆதிபகவன் நமக்கருள வழங்குஞ் சச்சிதானந்த முழுமுதலவனென் றறிந் தவனருளைவழி யொழுகிப் போகமும் வீடுபேறும் பொருந்துங் கிழமை சேதனப் பிரபஞ்சமான வுயிர்களுக்கே யுரித்தா மெனபார், முக்கியவிருத்தியால், "உலகு ஈண்டுயிர்கண் மேனின்றது" தென்றவ்வா றுரைத்தார். அங்ஙன முரைத்தாரே னும், அசேதனப் பிரபஞ்சமுங் கௌணம்பற்றி உலகென்னுஞ் சொல்லால் ஆண்டுக்கொள்ளப்படுவதேயாம். என்னை? அதன் றோற்றமும், நிலையும், ஒடுக்கமும், ஆதிபகவனானை

முதல்வனுணையிறைவனே நிகழ்தலா னென்க. உலகென்னுஞ் சொல் இருவகைப் பிரபஞ்சத்தினையு மிங்ஙன முணர்த்திற் றெனவே, அவ்விரண்டும் ஆதிபகவனாகிய முதலை யுடையன வென்று பொருளாய் அகரமுதல வெழுத்தெல்லா மென்றது முற்றுவமமாயிற் றென்க. இஃதென்சொல்லியவாறோ வெனின்,—எழுத்துக்கள் உயிர்மெய்யென விரண்டாய் அகரமுதலவாதல்போலப் பிரபஞ்சமுஞ் சேதனம் அசேதனமென விரண்டாய் ஆதிபகவனாகிய முதலையுடையதென்றவாறு மென்க. உயிரெழுத்துச் சீவான்மாவிற்கு மெய்யெழுத்துத் தத்துவப் பிரபஞ்சத்திற்கும் அகரம் ஆதிபகவற்கும் உவமையாமென்பது.

உலகந் தோன்றி நின்றொடுங்கி வருதல் காட்சி யளவையா னறியப்படுதலானும், இறைவனியல்பு அங்ஙனங் காட்சியளவை பற்றி யறியப்படாது கருதலளவையின் வைத்து ஊகித் துணரற்பாலதாகலானும், காணப்பட்ட வுடைமையாகிய வுலகத்தாற் காணப்படாத வுடையானாகிய கடவுளி னுண்மை சாதிக்கவேண்டி உலகு ஆதிபகவனை முதற்றே யென்றவாறோதியருளினார். அவ்வாறோதினும், பசுபாசங்களாகிய வுடைப்பொருள்கள் வியாப்பியவாதேயவுடைமையாயும் இறைவன் ஔபச்சிலேடிக வியாபக வாதார முதலுமாகலின், ஆதிபகவன் உலகிற்கு முதல்வனென்பதே நியாயநெறியாம்.

சூனியமே யான்மாவென்பாரும், தேகமே யான்மாவென்பாரும், இந்திரியமே யான்மாவென்பாரும், அந்தக்கரணமே யான்மாவென்பாரும், சூக்குமதேகமே யான்மாவென்பாரும், பிராணவாயுவே யான்மாவென்பாரும், பிரமப்பொருளே யுபாதிவசத்தாற் சீவான்மாவென வியவகரிக்கப்படுகின்றதென்பாரும், பூதமுதலிய தத்துவங்களைத் துங் கூடியசமூகமே யான்மாவென்பாருமென ஆன்மாவினியல்பு கூறுவார் பலதிறத்தார். அவரெல்லாருங் கூறுஞ் சூனியான்மவாத முதலிய வழக்குகளை யான் விளக்கி ஆன்மாச் சூனிய முதலியவற்றின் வேறுபட்டதெனச் சைவசித்தாந்திகளுஞ் சைவாகமங்களுங் கூறியவாறே [illegible] வாராய்ச்சி தோன்றி நின்றொடுங்கு மாராந்தற்கு [illegible] காட்சி பற்றிய யுறுதி யுறுதலின், காணப்பட்ட வுலகத்தானென [illegible]. இறைவன் சேதனாசேதனப் பிரபஞ்சங்களோ டொன்றி யவையேயாய் மன்றாகி இயல்பொறிய னென வுணர்வு முறைக்கவுடவாராத அறிவுருவாய் நிற்றலின், அம் முதலையினைக் காணப்படாத கடவுளென்றவாறுரைத்தார். காட்சியளவையெனினும் பிரத்தியக்ஷப்பிரமாண மெனினு மொக்கும். வழியளவையெனினும் அனுமானப்பிரமாண மெனினு மொக்கும். உரையளவையெனினும் ஆகமப்பிரமாண மெனினு மொக்கும். ஔபசம்லேஷிக வியாபகமாவது—எள்ளினெய்போல யாண்டு நீக்கமற நிறைந்திருத்தல். இறைவற்கு விசுவாந்தரியாமியாமியல்பும் விச்சுவாதிகனாமியல்பும் சொரூபலக்கண மெனப்பேசப்படுங்க ளிரண்டு மொப்ப வெடுத்துக்கூறுதலின், இறைவன் உலகிற்கு முழுமுதலாதல் என்று முள்ள வியல்பேயாம். என்றுமென்றது—பெத்த முத்தி யிரண்டினு மென்றவாறாம். விசுவாந்தரியாமியெனினும், விசுவான்மாவெனினு மொக்கும். "சுவேதாச ணியாநூஹதோழஹீயா நாதூஸ்ய ஐஹோ நிர்ஹிதோ மஹாயாம | தஜ்ஞாதா— தோஸ்ய திவீதமோகோயாத—ந:வைஸ்வாநூஹிராநராதூந: ||" என்னுங் கடவுள் மந்திரமும் இவ்வியல்பு இனிது தெருட்டுதல் கண்டு கொள்க. இனி விசுவாதிக வியல

பும் விசுவான்ம வியல்பு நதரிய மூர்த்திக்கே யுரிய சிறப்பிலக்கணமென்பது "ஸதெ வா த்ருவிஸ்ராயிகஊதிஜ மசுவெஷ்யூதிவ ஷைடம் ஸாஞெ வெஷ்வீவிக்ஷெவத வஊா: । கிஜெஷாஂகூசுஜெ ராஹஷனிஹதஂ ஜீவநிஷஂ யஷ்க்தீ:ஸெரா க்ருணாஂ ஜாணஜூிதஂ நிஷ்க்ருதிரிதி" எனனுஞ் சிவதத்துவ விவேக சுலோக வியாக்கியானத்திற் கண்டு கொள்க.

உலோகாயதரும் புத்தரும் மீமாஞ்சகருஞ் சாங்கியரு மென்றித் திறத்தார் முறையே ஐம்பெரும் பூதங்களே முதலாம், சீவான்மா, பிரகிருதி முதலாம், இவற்றிற்கு வே றாகப் பரமான்மா வென்றொரு பரம்பொருள் முதலாதல் இல்லையென்ப ராகலின், அவர் கொள்கை மறுத்து முதல்வ னுண்மை நிறுத்தவும், ஏகான்மவாதிகளும் ஐக்கியவாத சைவருஞ் சிவாத்துவித சைவரும் பாரமார்த்திகமான முத்திநிலையில் உயிர்கள் பேதமாத லின்றி முதல்வனே டொன்று மொழியு மென்றுஞ் சிவசமவாதசைவர் முதல்வனோடு சமமாய் நிற்கு மென்றுங் கூறுபவாகலின், அவர் கொள்கை மறுத்து முத்தி நிலையினும் உயிர்கட்கு முதலாய் நின்றுபசரிக்கு முறை இறைவற் குண்மை நிறுத்தவும், ஈண்டு, "ஆதிபகவன் முதற்றே யுலகு" என் றவ்வாறு தேற்றேகாரங் கொடுத்து ஓதியருளினா ரென்க. இங்ஙனம் எல்லாத்துக் காட்சியளவையின் வைத்து ஆதிபகவனாகிய இறை முதற்கடவுளும் பசுபாசமாகிய இருவகைச் சேதன அசேதன வுலகு மென்னு முப்பொரு ளும் இம் முதற் றிருக்குறளால், நாயனா ரினிதருளினார். அசேதனம்—மலங் கன் மம் மாயை யென மூன்றும். இம்மூன்றும் உபபொருளாமாறு முன்னர்த் தெரிக்குதும்.

ஆதிபகவனாகிய இறைமுதற்கடவு ளெனப்படும் பரம்பொருள் போதச் சைதன்யமாவதுமாயையு நீத்ததுமாய பொருளாதல் "த்ருதீயமாத்மா ஜ்ஞேயஸ்வாவஜாமிஸாவதீஸா" "ஜா யா த்ருஷ்டா ஜ்ஞாதா" "ஜாயிநஂ துமஹெஸ்வரம்" எனவருஞ் சுவேதாசுவதரோ பநிடதவசனங்களானறிக. இவற்றிற் கூறிய பொருள் - பரமான்மாவுஞ் சீவான்மாவுமாகிய இருவருள், இருள் பரமான்மா முற்றறிவுடையோன், சீவான்மா சிற்றறிவுடை யோன், பரமான்மா ஆண்டவன், சீவான்மா ஆட்படுமீசன, மாயையைப் பிரகிருதி யென்றறிக, மாயையுடையவன் மகேசுவரனென்றறிக வென்பதாம். இப்பொருள் கூறிய முறைபற்றி கொள்க. இன்னும், "ஸமெரு திஷ்டாநாமெஷ நஹொதா ராநா ஜெகொ ஸ்ரு ரொ ரியொ விரமாதிகாரா த்ருஷ ஸ்வெ யநாவெஸ்ஷிரீரா வேஷஜாம் ஸாஷி ஸா ஸ்தீதெ தியா ॥ பகூத்திஜீ ஜாத நாஷொயராத்ராநவெஷயஸ்ஸ்ராத்ராம ரீ யக்ஷுதாநஜஷொரயஜய ஷதகூநாஷூ ரூஜ த: ॥ யமதாநஸெரிதா ஙஷஜவா ஜஷ்ஷதெஸ நத்ரு தகூஜதி ॥ யொஷ்யுக்ஷதொஷஷாநு ஷ்ரூரவ்யூக்தம் ஸ ரயகூஷாநவெதவஷ ஷவஃஹஜதாஂதா ராதா வெஹதவாத்யாஜிவெஷ்ரா ஜெர வகொநாராயண: ॥ ஆஷஷணஃாஷயஜாஷவாயாஷஜாநஷ்ருகூஂஷெரிஷ்ஷு ஜாதெதயொராத்ரு:விஷஷஂஷாஷதி கநஷ்ஷெராஹிவாகஸ்தி ॥ ஷ்ராஜெநாத்ரு நாஸஂவெரிஷ்க:ஸ்ராஜெ நாதநாநாஜஷ: ॥ ஷஷாநாயீஷ்ரூஜதெவிஷ்தெத தஷிஂஷ்ரா

"த்ருஷ்டாயயாஸ்ருஷ்டாஜ: || ஸதாநேவ்ய க்ஷேவபாஷோ திஜ்ஜோ நீஸயாஸோவதி ஐஹ்யூஜாந: ஜுஷ்டம் யதாவஸ்ய த்ருத்ருஷீஸஜவ்யூஐஹிஜா நஜிதிவீதஸோக: || ஸகாரணம் காரணாயிவோயிவ:" என்றற் றொடக்கத்துப் பிரபலசுருதி வசனங்களும், பரமான்மாச் சீவான்மா இருவருந் தம்முள் வேறுதலும் நித்தியராதலும் பரமான்மாச் சீவான்மாவிற் கந்தரியாமியாதலும் நியமிப்பவனுமாகு மாயையால் அசேதனப் பிரபஞ்ச காரியஞ்செய்வோனாதலும் வேதமூர்த்தி யிரண்டினு முபகாரியாதலும் வீடுபேறருள்வோனாதலு மென்று நிறுத்துமெனக. அற்றேல், உபநிடதங்கள் "ஏகமே" யென வெடுத்தோதிய தென்றிறமெனின்,—பதிப்பொரு ளொன்றே யென்னுங் கருத்தால் உபநிடதங்க ளங்ஙன மோதின. ஆகலின், அது மேற்கூறிய வசனங்களோடு முரணுமா றில்லை யென்பது. "விண்ணுமண்ணுந் தோற்றுவிக்குந் தேவ னொருவனே" "ஒருவனே யுருத்திரன் இரண்டாமுதற் கடவுளில்லை" "பரம்பொருளொன்றே" யென்றற் றொடக்கத்துச் சுருதிகள்போல ஏகமே என்பதூஉம் பதிப்பொருளொன்றென்பது நாட்டுதற்கே யெழுந்ததென்பது. அற்றேல், "பிரமப்பொரு ளில்லையாயி னொரு பொருளுமில்லை" என்று சுருதி கூறிய தென்னை யெனின்,—பிரபஞ்சத் தோற்ற நிலை யொடுக்கங்கள் பிரமத்தி னுபகாரத்தை யின்றி யமையாமையின், சுருதி யங்ஙன மோதிற்று. இங்ஙனமாகலின், அதுவு மேல் வசனங்களோடு முரணா தெனக. அற்றேல், உபநிடதங்கள் ஏகமாகிய பிரமத்தை யேகமென்றல் பொருந்தும்; யாண்டு மவ்வாறு ஏகமென்னாது, சில விடங்களில் "பிரமமத்துவிதம்" என வபேதங்கூறுவ தென்னை? அத்துவித மிருபொருட் கண்ணதெனக் கொள்ளின், ஒரு பொருளை யத்துவிதமென்றல் பொருந்தாதாலெனின்,—ஆண்டுப் பிரமமத்துவிதமென்றது, பிரமமுயிர்களின் வேற்றுமையின்றி நிற்பதென்னும் பொருட்டாகலான் அஃது ஏகமென்பதோடு முரணுமா றில்லையெனக. நகரம் அப்பிராமணனென வருமொழிப் பொருளின் னன்மையினையும், அப்பிரகாசமென வருமொழிப்பொருளி னின்மையினையும், அநன்மமென வருமொழிப் பொருளின் மறுதலையினையு முணர்த்தி நிற்கும். அவற்றுள், அத்துவிதமென்னுஞ் சொற்கண்ணதான நகரம் வேற்றுமையுணர்த்தி யன்மைப் பொருட்டாம். அற்றேல், ஆசிரியர் பதஞ்சலியார் மாபாடியத்து ளெடுத்தோதிய நகரப்பொருள்களான தத்சாதிருசிய முதலியவாறனுள் அன்மைப் பொருள் யாதாமெனின், மூன்றாங்கண்ணதான தத்சாதிருசியமாமெனக. அத்துவித சொரூபஞ் சிவஞான மாபாடியத்துத் தடைவிடைகளான் விரித்தோதப்பட்டது. ஆண்டு இன்மை மறுதலைப் பொருள்கள் சுருதி விரோதமாமாறும், அன்மைப் பொருள் சுருதி சம்மதமாமாறு மென்றுகாட்டப்பட்டன. சிலசில பேதப்பொருளிரண்டு தம்மு ளபேதமாதற் குரிய சம்பந்த விசேட முணர்த்துதலே அத்துவிதமென்னுஞ் சொற்குப் பொருளென்ப தாங்கண்ட முடிபுரை யாமென்றுணர்ந்துகொள்க.

இனி ஏகான்மவாதிகளு ளொருசாரராகிய மாயாவாதிகள் மாயையானது மெய்ப் பொருளென்றுஞ் சொல்லப்படாது, பொய்ப் பொருளென்றுஞ் சொல்லப்படாது, அநிர்வசனமாய் நிற்பதொன் றெனவும், அற்றாகலின்றே மாயை யென்னும் பெயர்பெற்றதெனவும், அத்தன்மைத்தாகிய மாயையிற் சித்தாகிய பரப்பிரமங் கண்ணாடியி னிழல்போல அத்தியாசமாய்த் தோன்று மெனவும், அங்ஙனந் தோன்றியவழிப் பேய்த்தேராகவுங் கயிறு பாம்பாகவுந் திரிவுகாட்சியாற் காணப்படுமாறுபோல அத்தோற்ற மண் புனல் கனல் கான் முதலிய பிரபஞ்சமாய்க் காணப்படு மெனவும், இங்ஙனமாகலிற் சித்தினுடைய விவர்த்தமே சகமெனவுங் கூறுவர். மெய்ப்பொருளு மன்றிய பொய்ப்பொ

ருளு மன்றி நிற்ப தொன் றுண்டென றெடுத்துக் காட்டுதற் கொரு பொருளின்மையின், வழியளவைக் செல்லாமையான், வழியளவைக் செல்லாதாகவே யுரையளவைக்கு மெல்லாதா கலானும், பெயர்த்தேற்றன்று நீ மாத்திரையே யசத்திய மாவதன்றி யுளபொருளா யத் தோன்றுவதாகிய பெயர்த்தேரா அநிருவசன மாகாமையின் அஃதளவைக் கெடுத் துக் காட்டாதல் செல்லாமையானும், மாயை யநிருவசன மென்பது ஒரு சமயத்தார்க் குங் கொள்கை யன்மையானும், அஃதொன்றாக வைத்து மறுக்கற்பாற் றன்றென் றொ ழிக. அல்லதூஉம், விவர்த்தனவாதிகள் ஒன்று பிறிதொன்றுபோலத் தோன்றுதல் விவர்த்தன மென்பர். அஃது அசத்தியமேயாம். பிரவஞ்சஞ் சத்திய மென்பது காட்சி முதலிய வெல்லா வளவைகளானுந் துணியப்படுதலின், அத்தன்மைத் தாகிய பிரவஞ் சஞ் சித்தினுடைய விவர்த்தனமாமா றியாங்ஙனமென்க. இதனானு மாயை யநிருவ சன மன்றென்பது தெற்றென வுணர்க. மாயை யநிருவசன மாயின், அதன் காரியமா கிய பிரவஞ்சஞ் சூனியமாதல் வேண்டு மாகலா னென்பது.

அற்றேல், பிரவஞ்சஞ் சத்திய மென்றற்குப் பிரமாண மென்னை? காட்சி யே பிரமாண மெனின்,— அற்றன்று, காட்சியானே நிகழ்காலத்துப் பிரவஞ்சஞ் சத் திய மென் றுணரப்படு மாயினு முக்காலத்தினு மொருதன்மைத்தாகிய சத்தியப்பொருள் பிரவஞ்ச மென்ப தறுணரப்படாமையின். அன்றியுங் காட்சி யளவையான் இது குடம் இஃதாடையென விதிமுகத்தாற் காணப்படுவ தன்றி, இஃதாடையன்று இது குட மன்றென மறுதலைமுகத்தாற் காணப்படாமையின், அன்மையாத லுணர்ந் தன்றிப் பேதந் தோன்றாமையின், பேதப் பிரவஞ்ச முண்மைக்குக் காட்சி யளவை பிரமாண மன்று. அற்றேல், ஆடை குடத்தின் வேறு குடமாடையின் வேறு என்னுங் காட்சியெல் லார்க்கு மொப்ப முடிந்த தாகலிற் பேதப் பிரவஞ்ச வுண்மைக்குக் காட்சி யளவை பிர மாணமன்றென்றல் பொருந்தாதெனின்,— அற்றன்று, அத்தன்மைத்தாகிய காட்சி சவிக ற்பமாகலின், சவிகற்பமெல்லா மைய மாகலானென்க. பேதப்பிரவஞ்சவுண்மைக்குக்காட்சி யளவைபிரமாணமின்றாகவே, அவ்வுபாயமாகிய வேதுவுணர்த்தற் கிடமின்மையின், வழிய ளவைபிரமாணமன்று. அவ்விரண்டிற்கும் பாட்டியபொருளுரைக்குமவ்வளவையும் பிரமா ணமாகா தென்க. இன்னும், இஃதிதனின் வேறென்னுஞ் சவிகற்பக் காட்சி பிரமாணமெ னப்படினும் அபேதவுணர்வு நிகழ்ந்தன்றிப் பேதவுணர்ச்சி நிகழாது; எப்பதியதற்கன்றி விலக்கின்மையின் அங்ஙனமாகவே, முற்படத் தோன்றும் அபேதவுணர்ச்சி பிரமாண மென்ப தொருதலையாகக் கோடல் வேண்டும் வேண்டவே, பிறபடத் தோன்றும் பேத வுணர்ச்சி யதனை யவாய் நிற்றலிற் பிரமாணமாகாமை யறிக. அபேதவுணர்ச்சி காட்சி யளவையானே பெறப்படுதலின் குடமாடையின் வேறன்று, திரவியமாகலால், ஆடை போலுமென்னு மனுமானமும், வேற்றுமையின்றிக் கூறும் வேதவாக்கியங்களும், அதற் குப் பிரமாணமா மென்க. ஆகவே, வான் வளி தீ நீர் முதலியவனவாக வேற்றுமை படக்கூறும் வாக்கியங்களெல்லா மிவ்வளவைகளோடு முரணுதலின், உபசாரமே யன் றிப் பொருள்படா வென்பது கண்டுகொள்க. இங்ஙனம் பேதவுணர்ச்சிக்குப் பிரமாண மின்மையிற் பேதப் பிரவஞ்சமாகிய பிரமேயமின்மையுந் தானே போதரும். அவ்விர ண்டு முளவெனக் கொள்ளினும், பிரமிதிக்குப் பிரமேயத்திற் றுஞ் சம்பந்தமென்னை? தா தான்மியமோ? காரணகாரியத் தன்மையோ? சையோகமோ? சமவாயமோ? வே றொன்றோ? எனக் கடாயினார்க்குத், தாதான்மியமாவது ஒன்றுதானே யொருவாற்றானிரு வகைப்பட்டுப் பிரிப்பின்றி நிற்றற் குரித்தாதலாகலின், அத்தன்மைத்தாகிய தாதான்

மிய சம்பந்தங் குடஞானத்திற்குங் குடத்திற்கு முண்டெனின்,— குடஞானம்போலக் குடமு மகத்தின்கணுளதாதல் வேண்டும். குடம் புறத்தின் கண்ணதாகலுங் குடஞான மகத்தின் கண்ணதாதலு மெல்லார்க்கு மொப்பமுடிந்தமையின், அவற்றிற்குத் தாதான்மியங்கூறல் பொருந்தாமையானும், காரண காரியத் தன்மையே சம்பந்தமெனின்,— காரணகாரியங்களி னொன்றுள்வழி யொன்றின்றுதல் பொருந்தாமையின், கனவின்கட் குடஞான முதலிய வுணர்வுண்மையின், குடமுதலியனவு மாண்டுளவாதல் வேண்டும். அஃதின்மையானும், விடயமும் விடயிப்பதுமாந் தன்மை சம்பந்த மெனின்,— விடயமாவதிதுவென்றறிய வாராமையானும், சம்பந்தமே பெறப்படாமையின், பேதப் பிரவஞ்சம் பிரமிதிக்குப் புலனாகாமையானும், பிரவஞ்சம் அசத்தியப் பொருளே யாகலான், அவற்றிற்குக் காரணமாகிய மாயை யநிருவசன மென்றல் பொருத்தமுடைத் தென்று, இங்ஙன மாயாவாதிகள் கடாவிடைகளாற்சாதிப்பராகலின், ஆண்டிறுக்கென்னை யெனின்,— கூறுதும். பிரவஞ்சஞ் சத்தியப் பொருளென்பதற்குக் காட்சியளவையே பிரமாணமாம். கயிற்றை யரவெனக்காணுந் திரிவு காட்சியிற்போல மாசறு காட்சியின் வேறுபடுதலின்மையின், நிகழ்காலத்திற் கண்டது முக்காலத்தினு மொக்குமாகலானும், நிருவிகற்பக காட்சியின் விதிமுகத்தாற் பேதமறியமாட்டா தாயினுங் குறறியோ மகன்று வென்னுமையத்தின் பின்னர் இது குற்றியே மகனன்றென வெதிர்மறை முகத்தாற் பேதவுணர்வு காட்சிக்குப் புலப்படுதலானும், திரிவுகாட்சியிற் கயிறு பாம்புபோலவு மாலைபோலவு மொவ்வொருவர்க் கொவ்வொரு காலத்திற் றோன்றும். அதுபோலன்றி மாசறுகாட்சியின் எல்லார்க்கு மெக்காலத்துங் குடங் குடமேயாயத் தோன்றுவதல்லது வேறுபடத் தோன்றுமையிற் சவிகற்பக காட்சி பிரமாணமே யாகலானும், அன்றியுங் கயிற்றுக்கு மரவிற்குங் கோணி நீண்டு கிடத்தன் முதலிய விலக்கண வொப்புமையா னொன்றை யொன்றாகத் திரியக் காண்டல் பொருந்தும். அதுபோலச் சித்தாகிய பிரமத்தைக் குடமுதலிய பொருளாகத் திரியக்காண்டற்குத் தம்மு ளொப்புமை யின்மையின் அத்தோயு மவ்வாறு திரிவுகாட்சி யென்றல் பொருந்தாமையானும், சவிகற்பக காட்சிக்கு நிருவிகற்பக காட்சி காரணமாகலிற் காரணத்துள்ளதே காரியத்தினு முண்மையாற் பெயர் சாதி குண முதலிய பேதவுணர்ச்சி நிருவிகற்பக காட்சியி னின்றாயிற் சவிகற்பக காட்சியினு மின்றாய் முடியுமாகலின், நிருவிகற்பக காட்சியினுஞ் சூக்குமமாயப் பேதந் தோன்று மாகலானும், அதுபற்றி எய்தியதற்கே விலக்காகலிற் பேத முணராதன்றிப் பேதமின்மை யுணர்தல் கூடாமையின் அபேத ஞானமும் பேதஞானத்தை யவாவி நிற்றலின், அபேத ஞான முற்படத் தோன்றுதல்பற்றிப் பிரமாணமென்றல் பொருந்தாமையானும், ஆடை குடத்திற்கு வேறென்றற் றொடக்கத்துப் பேதவுணர்ச்சி முக்காலத்தினும் வேறுபடாமையின், ஆடை குடத்தின் வேறன்றென்றற் றொடக்கத்து அபேதவுணர்ச்சி யெதிர்காலத்தின் வேறுபடுதலின், வேறுபடாமையும் வேறுபடுதலும் பற்றியே பிரமாணமென்றும் அப்பிரமாணமென்றுங் கோடல் பொருத்த முடைத்தாகலானும், காட்சியளவையே பேதவுணர்ச்சிக்குப் பிரமாணமாத லறிக. ஆகவே, அபேதஞ் சாதித்தற்கு முற்கூறிய வனுமானமும் போலியாயவாறு காண்க. அங்ஙன மல்லாக்கால், அவ்வனுமானத்தானே ஆடையெடுக்கச் சென்றான் குடத்தை யெடுத்து வருதல் வேண்டுமென் றொழிக. இதனானே யபேதங்கூறு மாகமங்களு முபசாரமென்பது கண்டுகொள்க. இன்னும், பிரவஞ்ச மித்தையெனத் துணிவதற்குக் கொண்ட பிரமாண மெய்யோ? பொய்யோ? எனக் கடாயினார்க்கு, மெய்யெனிற் பிரவஞ்சத்துட்பட்ட பிரமாண மெய்யெனவே யம்முறையாற் பிர

வஞ்சமு மெய்யேயாம். பொய்யென்ற பொய்ப்பிரமாண மாகாமையிற் பிரவஞ்ச மெய்ப் பொருளென்பது தானே போதரும். அற்றேல், பிரமிதிக்கும் பிரமேயத்திற்குஞ் சம்பந்த மென்னை யெனின்,—அறியப்படுவது மறிவதுமாகிய விடய விடயித்தன்மையே சம்பந்தமென் றுணர்க. விடய விடயித் தன்மை சம்பந்த மன்றென்பையாயின், நீ பிரவஞ்ச மித்தை யென்றுணரு முணர்விற் கதுவிடய மாகாமையிற் பிரவஞ்ச மித்தை யன்றென்பட் டுனக்கே வழுவாமென் றொழிக.

அற்றேல், விடயமாவதி யாதெனின்,—எவ்வுணர்வு நிகழ்ந்துழியெப்பொருள் விளங்கும் அஃததற்கு விடயமென்க. விளங்குதல் விளங்குதற் குரிமையாதல். ஆகவே, இங்ஙனங் கூறியவாற்றாற் பிரமாணமுஞ் சம்பந்தமு முண்மையிற் பிரமேயமாகிய பிரவஞ்ச மெய்ப்பொருளே யாகலான் அதற்கு முதற்காரணமாகிய மாயையு மெய்ப்பொருளாவதன்றி யநிருவசனமாதல் பொருந்தாமை யறிக.

இனி வேதத்து ளோரிடத்தும் பிரமப்பொருளை "உபாதான"மென்னுஞ் சொல்லா லெடுத்தோதக் காணாமையால், பிரமம் பிரவஞ்சத்திற்குப் பரமார்த்த வியாபக நிமித்த மென்பதே வேதத்துக்குங் கருத்தாமென்க. இன்னும், அவ்வம்முதற் காரணங்களின் குணமெல்லா மவ்வக்காரியங்கட்கு முளவென்பது நியமமாதலின், சித்தாகிய பிரமத்திற்றோன்றிய பிரவஞ்சமுஞ் சித்தாதல் வேண்டுமன்றிச் சடமாதல் பொருந்தாதென்க. அற்றேல், பாலினுண்டாகிய தயிருக்குப் பாலின்குணமு நெல்லினுண்டாகிய பதர் பலாலங்கட்கு நெல்லின் குணமுங் கொம்பி லுண்டாகிய புல்லுக்குக் கொம்பின் குணமுஞ் சிலம்பியி லுண்டாகிய நூலுக்குச் சிலம்பியின் குணமுங் கோமயத்திலுண்டாகிய தேளுக்குக் கோமயத்தின் குணமுங் காணாமையின், காரணத்தின் குணமே காரியத்திற்கு மென்னு நியமம் பொருந்தாதாலெனின்,—அற்றன்று, ஒன்றன்குண மொன்றற்காதலின்மையின், காரணத்தின் குணமே காரியத்திற்கு மென்பதற்குத் தாற்பரியம், காரணத்தின் குணங்களோ டொத்த குணங்களே காரியத்திற் குளவாதலன்றி யவற்றிற்கு மாறுதலையான குணங்க ளுளவாகாவென்பதேயாமாகலான், எடுத்துக்காட்டிய வற்று ளியமத்துக் கிழுக்கின்மையறிக. சிலம்பியினூல் வருதற்குச் சூக்கும காரணஞ் சிலம்பி வயிற்றினுண்மையாலுங் கோமயத்திற் றோன்றியது தேளினுடம்பேயாகலானும், இன்னோரன்னவையெல்லாம் பிறவிப்பத மாகலானும், ஆண்டையப்பாடின்மை கண்டு கொள்க.

ஈண்டுக் கூறியவாற்றான் மாயையே பிரவஞ்சத்திற்கு முதற்காரண மென்பதூஉம், அதற்குத் தாரகமாய் விரவி நின்றதிட்டித்தலான் முதல்வ னிமித்த காரணமே யாவனென்பதூஉம், தனிப்பொருளாயின்மை காண்க. "மாயையான் விசேடிக்கப்பட்டு விசிட்டனாய் நின்று முதல்வனு முதற்காரணமாம்" என்ற நீலகண்ட வாசிரியரும் பரந்து சென்று முடிவின்கண் இவ்வாறு கோடலே சித்தாந்தமாக வலியுறுத்தினார். அது சென்மாதிகரணத் திறுதியிற் சிவாத்தியமணிதீபிகையினுங் காண்க.

அற்றேல், "பிரமத்தையுணர்ந்தோன் எல்லா முணர்ந்தோன்" என்றற் றொடக்கத்து வேத வசனங்கள் பயப்பா டிலவாமெனின், உடையானியல்புணர்ந்தவழி, உடைப் பொருளான உயிர் மாயை கன்மங்களும் அவ்விலக்கணத்து ளகப்பட்டு வியாப்பியமாய் நிற்றலின், அவையு மினிதுவிளங்குமென்பது அவற்றிற்குப் பொருளாதலின், பயப்பா

னுடையனவேயாமென்க. நான்மணிமாலையில், "நுரையுந் திரையு நொய்யுறு கொட்பும் - வரையில் சீகர வாரியுங் குரைகடற் - பெருத்தலுஞ் சிறுத்தலும் பிறங்குவ தோன்றி - யெண்ணில வாகி யிருங்கட லடங்குந் - தன்மை போலச் சராசர மனைத்து - நின்னிடைத் தோன்றி நின்னிடை யொடுங்கும்" என்றது, முதல்வன் மாயைக் காதாரமாய் நிற்றல் பற்றி யாகலின், ஆண்டுடையப்பாடின்மை யறிக. இது கிழங்கினின்றுந் தோன்றுந் தாமரையைப் பங்கசம் என்பது போலவதோர் ருபசார வழக்கெனக் கொள்க. மாயைக்குத் தாரகமாய் நிற்றல்பற்றியே யவ்வாறுணர்த்தவென்ப துணர்ந்து கோடற்கே, நீரிற்றோன்றி யொடுங்குவனவா முதலியவற்றை நீக்கிக் கடலிற்றோன்றி யொடுங்குதல்போ லென்றுவமை கூறினாரென்க. கடலென்றது—நீக்கிடங் கொண்டு நிற்கு மாகாயம். நின்ற திருத்தாண்டகத்தும் பிறண்டும் "இருநிலனாய்த் தீயாகி - யெம்மடிக ணின்றவாறே" என்பது முதலாக எழுந்த தமிழ்வேதத் திருவாக்குக்களும், "அறிவானுந் தானே யறிவிப்பான் றானே, யறிவா யறிகின்றான் றானே—யறிகின்ற, மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பா ராகாய, மப்பொருளுந் தானே யவன்" என்னும் அம்மை திருவாக்கும் உலகெலாமாகி வேறா யுடனுமாய் முதல்வன் நிற்றல்பற்றியாகலின், ஆண்டாசங்கை யின்மையுங் கண்டுகொள்க. இதனானே, அபேதங்கூறும் வசனங்களு முபசாரமேயன்றி யுண்மையன்றென்பது கண்டுகொள்க. இவ்வாறன்றி முதல்வன் மாயைபோல முதற்காரணமாவனெனின்,—அது மேற்கூறிய குற்றங்கட் கிடனாதலன்றியு "நிருவிகாரி" யென்னுஞ் சுருதிகளோடு முரணுதலு முடைத்தென்க. இங்ஙனங் கூறியவாற்றால், "காரிய காரணங்கண் முதற்றுணை நிமித்தங் கண்டாம் - பாரின்மண் திரிகை பண்ணு மவன்முதற் றுணைநி மித்தந் - தேரின்மண் மாயை யாகத் திரிகைதன் சத்தி யாக - வாரியன் குலாலன் றானு மாக்குவ னாகி லெம்மை" என்னு மத்துவித சைவசித்தாந்த வழக்கே சுருதி யுத்தி யனுபவ மூன்றற்கு மேற்றதாயத் திருக்குறட் பொருளை வலியுறுத்தற் குரிய மெய்ப்பிரசங்கமா மென்றறிந்துகொள்க.

அற்றேலஃதங்ஙனமாக, நிமித்தகாரணனாகிய முதல்வன் முதற் காரணமாகிய மாயைக் காதாரமாவனாயின், உவமப்பொருளாகிய குயவனு மண்ணுக் காதாரமாதல் வேண்டுமாலெனின்,—அறியாது கடாயினாய். உவமமெல்லாமொருபுடை யொத்தலேயன்றி முழுவது மொத்தலின்று. முழுவது மொக்குமென்பாரை முதல்வனுக்குரிய வியாபக முதலிய குணங்களுங் குயவனுக்கு முளவாதல் வேண்டுமெனக் கடாயினாற்கு விடையென்னையெனக் கூறி மறுக்க. ஒருபுடை யொத்தலானன்றே யொருபொருளுக் கோரோரியல்புபற்றி வேறு வேறுவமங் கூறியதூஉ மென்க. அற்றேல், இவ்வியல்பிற்றுவமை யாதோவெனின்,—நன்றே கடாயினாய். குழவியுடம்பின் முதற்காரணமாகிய சுக்கிரசுக்கிலங்களுக் காதார மதற்கு நிமித்தகாரணமாகிய தாய் தந்தை யாதலுஞ் சிலம்பி நூலின் முதற் காரணத்துக் காதார மதற்கு நிமித்தகாரணமாகிய சிலம்பியாதலு மறிந்தாயன்றே? இவ்வாறு பலவுளவெனக் கொள்க. பிரமவிவர்த்தன வபேதவாதநிராகரணம் ஆசிரியர் சிவஞானயோகிகள், சிவஞான மாபாடியத்து விரித்துரைத் தருளினார். சிவஞான போதத்துப் பிரமாணவோத்தி னிரண்டாம்பாத்து திரண்டாமதிகரணத்துட் காண்க.

ஆதிபகவனாகிய முதல்வன் எள்ளினெய்போலப் பசுபாசங்களிற் கலந்து நீக்கமற வொப்பச்சிறந்த வியாபகமாய் நிற்குமியல்பினனாகலின், அவன் பிரபஞ்சகாரிய மியற்றுதற்குக் குலாலனை யங்ஙன முவமையாகக் கூறுதல் கருத்தாவாதன் மாத்திரை

க்கேயன்றி வேறில்லையென்பது தெரிந்துகொள்க. இயற்றுதியற்றுதலாவது - காரணத்தானன்றிச் சங்கற்பமாத்திரையாற் செய்தலாம். மற்றுக்குலாலன் சங்கற்பத்தானன்றிக் கரணத்தாற் காரியஞ் செய்யும் வினைமுதலாகலின் சங்கற்பத்தாற்காரியஞ் செய்யுமாதிபகவனுக்குக் கருத்தா முறையினுஞ் சிறிதொட்புப்பற்றியே யுவமமாகினனென்றுணர்க. ஈண்டுச்சங்கற்பமென்றது,— வியாபக சிற்சத்தி சன்னிதிப் பிரேரகத்தினை. கர்த்திருத்துவமங்ஙன மிருவகையாமாறு : "கர்த்ருத்வம் த்விவிதம் ப்ரோக்தம் ஸங்கல்பாத் கரணாதபி। ரஹிதம் ஸங்கல்பாத்ரேண க்ஷாரம்யேகைஸ்த்ரியதேவத: । ஶிவஸ்ஸங்கல்பமாத்ரேண விச்வக்ருத்தாவகாசத:" எனனும் பவுட்கராகம வசனத்தானறிக.

இறைவனெள்ளினெய் போலப் பசுபாசங்களிற் கலந்து நீக்கமற வெள்பச்சிலேடிக வியாபகமாய் நிறைந்து நிற்குமென்னு மத்துவித சைவ சித்தாந்த திருவசனவுரையை, இக்காலத் தேசான்ம வாதிகளு ளொருசாரார்ருட்பட்டார், எள்ளினெய் கோதிடையுற்றுப் பிரிந்திருக்கக் காண்டலின், உவமேயமா முதல்வனு மொன்றனிடை யிருந்துப் பிரிந்து வியாபகமாகுங் கொலென ஞசங்கை நிகழ்த்துவர். ஒரு பொருட் கொரு பொருளுவம மாதலொருபுடை யொத்தல் பற்றியே யென்பது மேற்கூறினுமாகலின், அங்ஙன மாசங்கித்த லுவமை யிலக்கணமறியார் கூற்றேயா மென்றொழிக. பசு பாசங்களின் முதல்வன் கலந்து நீக்கமற வியாபகமாய் நிற்றற்கு எள்ளினெய்யை யுவமானமாகக் கூறுவது, நெய் எள்ளில் உள்ளும் புறம்புமாய்க் கலந்திருத்தல் பற்றியேயன்றிப் பிரிதலையென்க. இங்ஙன மாசங்கிப்பார் ஆவிர்ப்பூப் பொன்றன்றொக்கு மென்றவழி யஃதருக்கியடித்து நீட்டவும் படுங்கொலெனவும், இவனு மலப் பிறைமதி போலு மென்றவழிக் குறைதலு மேய்தலு மாறுதிபத்தலு மென்றிவையும் இவனுக்குறுங்கொலெனவு மாசங்கிப்பாராகலின், அவை யவர் வெள்ளறிவு வியாபாரமாமென வொழிக்கப் படுவன வல்லது மறுத்தற்கேற்பன வல்லவென்றறிக. ஈண்டுக் குறைதன் மறைதலும் வளர்தல் வெளியாதலுமாம். இன்னும், அவர் பசுபாசங்களை மெய்ப் பொருளென்பார் முதல்வன் வியாபகத்துக்குக் குறைகூறுபவராவர். யாதினாலெனின்,—பசுபாசங்களுள்ள விடங்களின் முதல்வனிருப்பிடையறவுற்று அவன் வியாபகங் குறைவுறுதலா லென்றிங்ஙன மாசங்கை நிகழ்த்துகின்றார். இன்னோரன்ன வாசங்கைகளே அவர் பிராகிருத அவயவ சண்டப் பொருட் பயிற்சியினு னிகழ்த்துகின்றார் என்னை? அவயவமுடைய கண்டப்பொருளன்றி நிரவயவ வகண்ட சச்சிதானந்தப் பொருள் மற்றொன்று னிடையறவுற்றுக் குறைவுறாதலானென்க. ஆதிபகவனாகிய விறைவ னிரவயவ வகண்ட சச்சிதானந்த முற்றப்பொருளாகலின், அவன் அனுகிய தன்போல நித்தியமாய்த் தனக்கு வியாப்பியமான சித்சித்துக்களில் யாண்டுங் கலந்து நீக்கமறத் தன்பூரணத்திற்குக் குறைவையாதுமின்றி யவையே தானாய் நிற்கும் பெற்றியுடையனு மென்க. இனி அப்பெற்றி யுயிர்களா லிற்றெனவறியவு மோதவும் வராத சொரூபமாம். அற்றாகலினன்றே சுருதிகளு மவன் சொரூபவியல்பு "வாங் மனசாதீத மென்றும்" "அநிர்தேசியம்" என்று மங்ஙனமெடுத்து முறையிட்டோயந்தன வென்பது. "வாக்கு மனங்கழிய நின்ற மறையோனே" என்னுந் தமிழ்வேதமு மக்கருத்தே பற்றி யெழுந்தது. வளி தீ நீர் நில மென்வொன்றற்கொன்று தூலமாகி நிலைபெறும் பூதங்களுக்கிடக்குஞ் சூக்கும பூதமான வாகாயமிடங் கொடுத்து வியாபகமாய் நிற்கும் பெற்றியே மக்கட் குற்றறிதற் கரிதாயதன்பொருளாம். ஆனபின், நிரவய வகண்ட சத்தாயுஞ் சித்தாயு மானந்தமாயு நிற்கும் பரப்பிரம

முதற் பொருள் பசுபாசங்களுக்கு அந்தரியாமியாயும் வியாபியாயும் பூரண முற்றுநிற்குஞ் சொரூபவியல்பை, மாயா தனுகரணங்களாற் கட்டுற்றவற்றி னுபகாரத்தானுஞ் சுத்த மாயா நாத விருத்தி காரிய சத்த சமூகமான வேதமுதலிய கலையறிவு மினமினி விளக்கத் தானுஞ் சிறிதறிவு விளங்கி, அங்ஙனம் விளங்கிய சிற்றறிவு மாத்திரையானே, நாம் பிரமமென்று தருக்கி, இறைவன் திருவருட்கயலாயக் கேவலமுற்றுழலும் பசுபோதப் புல்லறிவுயிர்கள், நாமறிந்தாமென் றுருப்படுதலும், பசுபாசங்கண் மெய்ப்பொருளாயின் அவற்றினிருப்பான் முதல்வன் வியாபகத்திற னிடையறவு முட்டுற்று நானதை புகுதருமென்று பாண்டித்தியம்போல அபிநயித்தகக் குதர்க்க நிகழ்த்தலும், புல்லறிவு முதிர்ச்சியாலதல்லது மற்றியாதாமெனக. இதுகாறுங் கூறியவாற்றால் "அகர முதலெழுத்தே ஆகாரமுதலிய வெழுத்துக்களாயத் தோன்றுகின்றதும். அதுபோலப் பிரமப் பொருளொன்றே அவிச்சையினும் சிற்சடங்களாய்க் காணப்படும்" என்னும் பிரமவிவர்த்தன ஏகான்மவாதக் கொள்கை, ஆகாய சித்திரம்போல வெறும் போலியாயது, தெளிந்து கொள்க.

ஏகான்மவாதிகள் இன்னுந் தங்கொள்கை நிறுத்தவேண்டி, "அகரம் அங்காத்தன் மாத்திரையானே பிறக்கும். ஏனைய வெழுத்துக்களும் அவ்வங்காப்பே காரணமாகக்கொண்டு பிறந்து வேறுபட்டு நடக்கும். அங்காப்பு முயற்சியிலவழி யவற்றிற்குத் தோற்றரவு கூடாதாம் இங்ஙனமாதலின், அவையெல்லாம் அகரமுதற்காரணகாரியமே"யென் றிங்ஙனங் கூறுகிறபர். அகர வக்கரம், நாதகாரியமானவோர் திரவியம். அங்காப்பு, அண்ணத்தினை றொழில. என்றது —கீழ்மேலுதடுகளி னீக்கவியாபாரம். திரவியமுந் தொழிலும் வேறாகலின், அங்காப்பே அகரமெனக்கொண்டு அவ்வங்காப்புமுயற்சியிற் பிறத்தலின், ஏனையெழுத்துக்களும் அகர காரியமேயாமென்றல் திரவியத்திற்குந் தொழிலுக்கும் வேற்றுமை யறியார் கூற்றேயாமென்று மறுக்க. இனினும், இதனை யோர்திருட்டாந்தத்தில் வைத்துப் புலப்படக் காட்டுதும். ஒரு வாயில் ஓரரண்மனையில் அரசன் புறம்போதற்கென வமைக்கப்பட்டு அரசவாயிலென வழங்கப்படும். அவ்வாயிலால் அரசன் புறம்போதராநிற்பன். அவன் புறம்போதருங்கால் அவற்குரிய ஊர்திப்படைவீரருங் காலாட்படைவீரரும் அவ்வாயிலாற்றானே படையமைந்துடன்போதராநிற்பர். அங்ஙனம் போதருதல்பற்றி அரசன் படைவீரராகான். படைவீரர் அரசனாகார். அதுபோல, அங்காப்பு முயற்சியால் அகரமும் ஏனையெழுத்துக்களும் பைசந்தியவத்தையினீங்கி வைகரியாய் வெளிப்படுதல்பற்றி அகர மேனையெழுத்துக்களாகாது. ஏனையெழுத்துக்கள் அகர மாகா. அரண்மனைவாயிற் புதவனீக்கமென்னுந் தொழில் அரசன் புறம்போதற்குச் சிறப்புடைத்தாயப் படைவீரர் புறப்போக்கிற்கும் ஏற்புடைத்தாம். அற்றே யுதடுகளி னீக்கமெனப்படுந்தொழில் அகரம் புலனாதற்குச் சிறந்த முயற்சியாய் ஏனையெழுத்துக்களின் புலப்பாட்டிற்கும் ஏற்ற முயற்சியாம். இதில் அரசன் அகரத்திற்கும் இருவகைப்படைவீரர் ஏனை யிருவகை யெழுத்திற்கும், வாயிற்புதவங்க ளிரண்டு மேல் கீழுதடுகளிரண்டற்கும்,அவற்றினீக்கம் உதடுகளினீக்கத்திற்கும், திருஷ்டாந்தமாயினமை காண்க. இனி அரசன் வாயிலாற் புறம்போதற்குமுன் அரண்மனையுள் வீற்றிருந்தான். அவன் மெய்காவற்படை வீரரும் ஆண்டே அவற்காத்துட னிருந்தார். அதுபோல, அகரம் உதடுகளின் அங்காப்பினாற் புலனாதற்குமுன், நாத தத்துவத்தின்கட் சத்திமாத்திரையாய் வீற்றிருந்தது. ஏனையெழுத்துக்களும் அகரச்சத்தியான் வியாபிக்கப்பட்டு ஆண்டே சத்திமாத்திரையாய் அதற்குரிமையுற்று நிலைபெற்றன. இவ்வெழுத்துச்சத்திக ணித்த மாதலால், அக்கரமென் றங்ஙனம் வழங்கப்படும்; இதனானே, அகர

நாதத்தின்கட் சத்திமாத்திரையாய் நிற்குஞ் செவ்வியிற்றானே, அங்ஙனஞ் சத்திமாத்திரையாய் நிற்கு மேனையெழுத்துக்களுக்கு முதலாய, நிறையுயிர் முயற்சியி னுத்தமாத்திரையாய விகாரமின்றி அங்காப்புமுயற்சிபற்றி யியல்பான வெளிப்படு மென்பதூஉம், ஏனையெழுத்துக்களும் அதன்சத்தியான் அங்ஙனம் வியாபிக்கப்பட்டு நின்றவாறே, நிறையுயிர் முயற்சியால் அதன்றோற்றத்திற்குச் சிறந்த அங்காப்பு முயற்சிபற்றி, அச்சுறுப்பானே விகாரமுற்றுத் தோன்றுமென்பதூஉம், அம்முறையானே அகரம் ஏனையெழுத்துக்களின் றோற்றவியக்கங்களுக்கு நிமித்தமாமென்பதூஉம், எழுத்துக்களுக்கு முதற்காரணம் நாதத்தின்கட்கிடக்கு மவ்வச்சத்திக ளென்பதூஉம், அண்ணத்தின் றொழிலாகுமங்காப்புமுதலிய முயற்சிகள் எழுத்துக்களின் றோற்றத்திற்குத் துணைக்காரண மென்பதூஉம், கண்டுகொள்க. நாதத்தின்கண் அகரமுதலிய வெழுத்துச்சத்திகளெல்லாம் வெவ்வேறாயிருத்தலின், அவை வெவ்வேறு பொருளாதலன்றி ஒன்று மற்றொன்றாகித்திரிந்த பொருள்களல்லவென்ப துணர்க. ஈண்டுக்கூறியவாற்றால், அங்காப்பு முயற்சியேகொண்டு "அகர முதற்காரணமாகி நிற்ப, ஏனையெழுத்துக்களெல்லாம் அதன் காரியமாய்த்தோன்றி விளங்காநிற்கும். அதுபோலப் பிரமமுதற்காரணமாகி நிற்பச் சிற்சடங்களெல்லாம் அதன் காரியமாய்த் தோன்றி விளங்காநிற்கு"மென்னும் பிரமவிவர்த்தனவாதம் அளவை கடந்தன்றிப் பொருந்துமாற்றிற்கு மேலாதவாறு கண்டுகொள்க. வடநூலார் பொருந்துமாற்றினை யுத்தியென்பர். உயிர்க்கு அந்தரியாமியாய்நிற்கு முதல்வன் சிற்சத்தி உயிர்க்கிழவன் சிற்சத்தியினைப் பிரேரிக்க, உயிர்க்கிழவன் சிற்சத்தி நாதத்தினை யியக்க, நாதந் தன்விருத்திரூபமான அகரத்தினை யியக்க, அகரம் ஆகாரமுதலிய வெழுத்துக்களை யியக்கித் தோற்றுவித்தலின், அகரம் ஏனையெழுத்துக்களின் றோற்றத்திற் கெல்லா நிமித்தகாரணமாமென் றங்ஙன முணர்த்தாம். உண்மையில் எழுத்துக்களின் றோற்றத்திற்கு அகரம் அவாந்தர நிமித்தமென்றும், பரமநிமித்தகாரணம் முதல்வன் சிற்சத்தியேயாமென்றும், கடைப்பிடித் துணர்ந்துகொள்க.

நாயனார் ஆதிபகவனான முதல்வனு மவனுடைப்பொருள்களான சேதனாசேதன விருவகையுலகு மிவ்வாறு மெய்ப்பொருள்களென நிச்சயவுண்மையளவையான முதற்கணிறுத்திக், "கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ - னற்றா டொழாஅ ரெனின்" "மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார் - நிலமிசை நீடுவாழ் வார்" "வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்—கியாண்டு மிடும்பை யில" இருள்சே ரிருவினையுஞ் சேரா இறைவன் - பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" "பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க - நெறிநின்றார் நீடுவாழ் வார்" என்றிங்ஙன மெய்ப்பொருளான வான்மாக்க டந்தலைவனான வாதிபகவனை யவனருளிய மெய்ந்நூல் சற்றுணர்ந்து மனமுதலிய முக்கரணங்களையு மம்முதல்வன் பணிக்காக்கின், அவன் றிருவருட்பேறெய்திப் பேரின்ப வாழ்வு தலைக்கூடு மென்றும், "தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்— மனக்கவலை மாற்ற லரிது" "அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற் — பிறவாழி நீந்த லரிது" "கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான் — றாளை வணங்காத் தலை" "பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா - ரிறைவ னடிசேரா தார்" என்றவ்வாறு வழிபாடாற்றுதவழிப் பிறவிப்பெருங்கடலிற்பட் டழுந்துவரென்றும், ஒருதலைப்படுத்து, ஆன்மாக்கள் பொருளின்பந் தலைக்கீடாகக்கொண் டறஞ்செய்து வீடுபேறு கூடுநெறி உத்தரவேதத்துச் சத்தியமாக வெடுத்தருளிச் செய்தாராகலின், சீவான்மாக்களும், அவை வினைப்போகம்புசிக்கு மூர்த்தத்தாற் பசுத்துவமெய்தற்குக்கருவியாய்நிற்குஞ் சகமும்,

இயைபுக்குமிறைவழிபாடான சாதகமும், பேறுமென்னு மிவையெல்லாம், வெறுங்கற்பனை யென்றுகொண்ட ஏகான்மவாதிகட்கும், இங்ஙனங்கூறும உத்தரவேதத்திறகும், யாதுஞ் சம்பந்தமின்றும். உத்தரவேதமான திருக்குறளும், தேவாரம், திருவாசகம், திருக் கோவை, திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம, நாற்பானபிரபந்தங்கள், பெரி யபுராணமென்னுந் திருமுறைகளும், தங்கொள்கைக்கு முழுமாறுகின்றது கண்டு, அவற்றை அயலாகக்கருதி யொதுங்குகீரரான் ஏகானமவாதிகளுட்பட்டாசிலர் இக்கா லத்து அவற்றின்கணுள்ள திருவாக்குக்களில் ஓரோவொன்றையெடுத்து இங்ஙனம போலியாகவுரைசெய்து, உரிமைகோடற்குக்காரணம், உயாந்தோரெல்லாரு இத்திராவி டச்சுருதிகடையவமொழியாதறோந்து பாராயணஞ் செய்து திருவரு டலைக்கூட டுமுயலாநின்றார். நாம் அவற்றைத்தழுவாது ஒதுங்குதலால், நம்மைப் பரமசிவன் றி ருவருட் கயலானவரென்றும, நம ஏகானம வாதக்கொள்கை தம உண்மைநாயனமாா வைதிகசைவத் திருவருணெறிக்குப் புறம்பாயதென்றும், தமிழுலக நமபமேஞேனைக் காணும் பொழுதெல்லா மிகழ்ந் தவமதித்தணுகாது செல்கின்றது. உத்தரவேதந் திருமுறையென்பவற்றினகணுள்ளவோரோர் செய்யுட்களை யெடுத்து நமமதமாக்கியுரை செய்துபோறறின, நம்மை இகழாது மதித்து நம்மோ டுணையாடவரும. அன்னுழி ய தனை நம மதத்திலீர்த்துக் கொள்ளலாமெனக் கொண்ட தாபிமானமே பிறிதிலலை யென்றறிக.

நாயனார் "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார்" "சிறப்பென்னுஞ் செம்பொ ருள்" என றிவ்வா றுதிப்பகவனுக்கிய முதற்பொருளை நித்தியசத்தென றெடுத்தோ தியதுபோல, ஆன்மாக்களையு "மன்னுயிரோம்பி" "மன்னுயிர்க்கின்னாசெயல்" "மன் னுயிரெல்லாந் தொழும்" "மன்னல் மன்னுயிர்க் காக்கம்" என றிங்ஙன நித்தியசத் தெனறெடுத்தோதுதலின், உயிர்க ணித்தியப் பொருள்களென்பது உத்தரவேதத்து வெளிப்படைப் பொருளா மெனக. "மன்னுயி ரோம்பி" யென்னுந் திருக்குறளுரையிற பரிமேலழகியார் "உயிர்க ளெல்லா நித்தமாகலின மன்னுயிரென்றார்" என றயவா றுரைத்தார். "பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு - மருளானு மாணாப் பிறப்பு" "எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண் - மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்பன தமக்கிட்டமானவென்று கொண்டு,ஏகானமவாதிகள், அவற்றையெடுத்துப் படித்துப் பிர வஞ்சமித்தை யென்பதே நாயனாருக்குங் கருத்தாமென்பா. ஆண்டுப் "பொருளல்ல" வெ ன்றதும "எப்பொரு ளெத்தன்மைத் தாயினு" மென்றதுங் காரியப் பிரபஞ்சத்தினை. தத்துவப்பிரபஞ்ச மெய்ப்பொருளாயினுங் காரியவவத்தையினின்ற வழி னுலைவடிவம இத்தகைப் பொழுது நிற்குமென நமமினோா லறியவாராது நீர்மேலெழுத்துங் க னவும் பேய்த்தேருமபோ னிலைபெறுவதுபோலத் தோன்றிக் காட்சிப் புலனுய விரை யக்கெட்டு மறைந்தொழிதற் சிறப்புடைத்து. அங்ஙன மறைந்துபோகு நீர்மையுடை யதனை நிலையுதலுடையதென்று திரியக்கொள்ளுமுணர்வு பிறப்பிற்கேதுவாதலால், அ ம்மயக்கவுணர்வை மெய்யுணர்வாற் களைந்து பரம்பொருளோடு ஒற்றுமையுறுதற்கேது வாகிய உண்மைஞானநிட்டை கூடுகவென்பார் "பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு—மருளானு மாணாப் பிறப்பு" "எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொ ருண்—மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்றிங்ஙன மோதியருளினார். ஆகலின், அத் திருக்குறள்களும் அவைபோல்வனவும அவர்க்கிட்டவிகாதஞ்செய்து நமக்கனுகூலம்புரிவ னவாமெனக. "பொருளல்லவற்றை "எப்பொருளெத்தன்மைத் தாயினும" என்பவற்றுற்

காரியப்பிரவஞ்சமே கருதப்பட்டதென்பது" "நிலைா தவற்றை நிலையின வென்றுணரும் புல்லறி வாண்மை கடை" என்னுந் திருக்குறளானறியற்பாற்று. "தோற்ற முடையனவற்றைக் கேடில வென்று கருதும் புல்லறிவால் அவற்றின்மேற் பற்றுச்செய்தல் பிறவித்துன்பத்திற் கேதுவாகலின் அது விடையதுவாக விழுக்கென்ப திதன்றற் கூறப்பட்டது" என்னும் பரிமேலழகருரையும் இதனைக் கரிபோகக் கிளந்ததுமெனக். இன்னும், "இருந்து முயிர்வாழ வேண்டிற் பரந்து கெடுக வுலகியற்றி யான்" என்னுந் திருக்குறளிற் போந்த "உலகியற்றியான்" என்னும் பிரயோகம் ஆதிபகவ னுலகிற்கு நிமித்த காரணனேயாதலை என்று நிறுத்திற்று யாங்ஙனமெனின்,—அது மாயையிற் றிவ்வுலகியற்றியானென்னத் துணைகாரண முதற்காரணங்களின் வேறுபடுத்து விதிமுதலானு நிமித்தகாரணத் தன்மை விளக்கி "ஆதிபகவன் முதற்றே யுலகு" என்னு முப்பக்கிரம திருவாசகத்தை வலியுறுத்தலி னென்க. இன்னும், "மாயையைப் பிரகிருதி யென்றறிக" "மாயையுடையவன் மகேசுர னென்றறிக" என நிமித்த காரணத்தையு முதற்காரணத்தையும் பகுத்து வேறு வேறோது முபநிடத வசனங்களும் ஆதிபகவன் உலகிற்கு நிமித்தகாரணனே யாமென்னு முதற்றாவேத மகாவாக்கியத் திறத்துறுசானறுத லறிக. மாயையைப் பிரகிருதியென் றறிகவென்பது - மாயையை முதற்காரண மென்றறிக வென்றவாறு. பிரகிருதி முதற்காரணம் உபாதானஞ் சமவாயிகாரண மென்பன வொருபொருட் கிளவி. "மா வென்ப தொடுங்குதலையா வென்பது வருதலாகலின், எல்லாக் காரியங்களுந் தன்பால் வந்து ஒடுங்குதற்குந் தன்கணின்று தோன்றுதற்குங் காரணமாய் நின்றது மாயையெனப்படு மாகலான், ஒன்றற்கொன்று நுண்ணிதாய்ச் செல்லுஞ் சூக்குமங்கட்கு முடிவிடமாய் நின்ற சூக்குமப் பொருள் யாது அதனை மாயையென்றலே பொருத்தமுடைமை யறிக" என்றார் சிவஞானமாபாடியகாரர். இனி முதல்வனே மாயைக் காரமாய விரவி நிமித்தகாரணமும் மாயையான விசேடிக்கப்பட்டு விசிட்டரூப முதற்காரணமு மாவனெனச் சிவாத்துவிதசைவர் கூறுவர். அது பொருந்தாது என்னை? தோன்றி நின் றழியு முடம்பொடு கூடியவழி விசாரப்படுதலபற்றி யுடம்பொடு விசிட்டரூபநின்ற சீவான்மாவுந் தோன்றிநின் றழிவனென்பது பொருந்தும், அதுபோல மாயையொடு விசிட்டரூப முதல்வனும் முதற்காரணமாமெனப்பாதற்கு, விசிட்டமாவது விசேடணமும் விசேடியமு மவ்விரண்டிணியையு மென்னு மவற்றின் வேறன்மையான முதல்வனு மவ்வாறு விகாரியாதல் வேண்டப்படும். படவே, 'நிருவிகாரி' என்னுஞ் சுருதியொடு முரணுமாதலானென்க. விசிட்டமாவது அம்மூன்றற்கும் வேறெனக்கொள்வாரக்கு, முதல்வன் முதற்காரணமெனப்பதே பெருந்தாதாய முடியுமென்றறிக. அல்லதூஉம், நிமித்தகாரணமே முதற்காரண மென்றெடுத்துக் காட்டுதற்கொரு பொருளின்மையின் அது வழியளவைக் கேலாமையானும், வழியளவையினும் ஆகமவளவை வலியுடைத்தெனின்,—அற்றாயினும், வழியளவை யாகமவளவையொடு முரணுதாகலானும், ஒரோவழி முரணுமாயின், அதுபற்றி யாண்டுந் துணிவுபெறாமையின், வழியளவை பிரமாணமன்றெனப்பட்டு, அதுபற்றியோதிய நிகமாசமவசனங்கள் பயனிலவாய முடியுமாகலானும், நிகமாகமப் பொருளாக டம்முண் முரணுவனபோலத் தோன்றியவழி யவற்றுள வன்மைமென்மை யுணர்ந்து பொருள்கோடற்கு வைத்ததே வழியளவை யாகலான் அஃததனோடு முரணுதல் பொருத்த மின்மையானும், அது விடையன்மை யறிக. இனி இவ்விரண்டும் பொருந்தாமையானும், வேறுவிடுக்குமா றின்மையானும், மாயையே முதற்காரணம், அத

ற்குத் தாரகமாய் விரவிநின்றதிட்டித்தலான முதல்வனு முதற்காரண மெனக் கோடல்வேண்டும். அங்ஙனங்கொள்ளின் விகாரியாதலின்மையான், முதல்வனு முதற்காரணமா மென்பது வாய்பாடுமாத்திரையே யன்றிப் பொருட்படாமையின், அஃது எமது அத்துவித சித்தாந்தமென் றொழிக. இவ்வாறன்றெனின், ஏகான்மவாதிகள் பிரபஞ்ச மசத்தியமென்பது சாத்திரத்திற்கு அத்திருக்குறளாசிரியரைத் தமக் கனுகூலமாகக் கோடல் வியர்த்த வியாபாரமே யென்பது தேற்றென வுணர்ந்துகொள்க.

இனிப் பகவச் சொற்பொருட்பெற்றி சிறிது பகர்தும். பகமென்பது ஐசுவரியம் வீரியம் புகழ் திரு ஞானம் வைராக்கிய மென்னு மாறற்குமாகலின், பகவன் அவ்வாறு குணங்களையு முடையோ னென்றும். பகம் என்பது அவ்வாறற்குமாமாறு 'ஐஶ்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய வீர்யஸ்ய யஶஸ: ஶ்ரிய: । ஜ்ஞாநவைராக்யயோஶ்சைவ ஷண்ணாம் பக இதீரணா' என்னும் விண்டு புராண வசனத்தா னறிக. இவ்வாறும் பரமசிவனுக் கியற்கைக் குணங்களாகலின், அப்பரப்பிரம முதல்வனே பகவனென் றவ்வாறு நாயனாரால் உத்தரவேதமுகத்தே தோதப்பட்டா னென்க. இவ்வாறு குணங்களும் பரமசிவனுக் குள்ளன வென்பதற்குப் பிரமாண மென்னையெனின்,— அவற்கு ஐசுவரிய முண்மைக்கு ஈசுரபதச் சுருதியும், வீரிய முண்மைக்கு உக்கிரபதச் சுருதியும், புகழுண்மைக்குச் சிவபதச் சுருதியும், திருவுண்மைக்கு இருக்குவேதமும், ஞானமுண்மைக்குச் சருவஞ்ஞ சுருதியும், வைராக்கிய முண்மைக்குக் காமரிபுபதச் சுருதியும், பிரமாணமா மென்க. "திருவிளங்கிரேட்டா, திருவை யெய்தும் பொருட்டுப் பரமசிவனது விசித்திரமான லிங்கம் தேவராற் பூசிக்கப்பட்டது" என்று, இவ்வாறு இருக்குவேதத் தெடுத்தோதப்பட்டது. அதர்வணவேதத்து சிவநாமங்களுட் பகவனென் றலைப்பெய் தெடுத்தோதிற்று. சுவேதாசுவதரோபநிடதத்து சிவபிரானைப் 'பகேச' னென் றெடுத்தோதிற்று. இவற்றானும் பகவனெம் பொருளாயுள்ளோன் பரமசிவனேயென்பது கடைப்பிடிக்க. அரதத்தாசாரியரும் உமாபதிசிவாசாரியருஞ் சதுர்வேதத்தாற்பரிய சங்கிரகத்தினும் பவுட்கராகம விருத்தியினும் இங்ஙனம் பகவப்பெயர் சிவபரமாதலை நன்கு விளக்கியிட்டார்.

இனி மெய்யுணர் வெய்திய தேவர் முனிவராதியோரைப் பகவப்பெயரால் வழங்குதல் அவர்மாட்டு விளங்கும் பரமசிவ விபூதியைப்பற்றி யாதலின், அஃதுபசாரமே யாமென்க. நாராயணக் கடவுட்குப் பகவனும் மியற்கை யாகாதோவெனின்,— நாராயணக்கடவுள் பரமசிவனைக்குறித்து அருந்தவ முழந்து ஐசுவரியம் வீரிய ஞான முதலியன எய்தியவரலாறு, இதிகாச புராணங்களிற் கேட்கப்படுதலின், பகவப்பெயர்வழக்கு அவற்குஞ் செயற்கையானுள்ளதன்றி யியற்கையா னுள்ளதன் றென்க. அற்றேல், நாராயணக்கடவுளடியார் பாகவதரெனவும், அவன்பெருமை யெடுத்தோதும் புராணம் பாகவதமெனவும், அங்ஙனம் வழங்கப்படுமா றென்னையெனின்,— ஈசுரனடியார் சிவபாகவதரெனவும், கௌரிமகிமையெடுத்தோதும் புராணந் தேவிபாகவதமெனவும், வழங்கவுங் காண்டுமாகலின், அவ்வழக்குக் கொண்டுதானே நாராயணக்கடவுட்கு அஃதியற்கைப்பெயரென்ற னிரம்பா தென்க. இனி நிகண்டுநூலார் "பகவனே யீசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்" என்றுகூறியது, அது முக்கியவிருத்தியாற் பரமசிவனுக்குங் கவுணவிருத்தியான் மாயோன் முதலிய கடவுளருக்கும் வழங்கப்படுதல் பற்றி யாகலின், ஆண் டையப்பா டில்லையென்க. அது முக்கிய விருத்தியாற் பரமசிவ

னையே யுணர்த்துமென்ப தறிவித்தற்கே "பகவனேயீசன" என்று அங்ஙனமுதற்கண் ணிறீஇயினரென்க.

இனி அபரிச்சின்னைசுவரிய முணர்த்துமீசானப்பெயர் பரமசிவனுக்குரியதா கலின், அதுவே பகவப்பெயர் அம்முதலையுணர்த்துமென்பதற்கு அமையுஞ் சான்றுமென்க. ஈசுரபதம் ஐசுவரியயோகத்தாற் பொதுப்பெயராம் பிறவெனின்,— அற்றன்று, ஈசுர பதம் யோகம்பற்றிப் பொதுவாயினும், யோகரூடிபற்றிப் பரமசிவனுக்கேயா மென்க. ஈசுரபதம் பரமசிவனுக்கு யோகரூடியாமென்றற்குப் பிரமாணம் யாதெனின்,— "ஈஶ்வரஶ்ஶர்வ ஈஶானஶ்ஶங்கரஶ்சந்த்ரஶேகர:" என்வரும் அபிதான கோசஸ்மிருதி பாடமே பிரமாணமென்க. அவயவசத்தியொன்றேயுடைய தனித்த யோகத்தினும், அவயவ சத்தி சமுதாயசத்தி யென்னு மிரண்டு மொருங்குடைய யோகரூடி பிரபலமுடைத் தென்க. இக்கருத்து மீமாம்சை நூலாகக் கூடன்பாடாதல் அந்நூலிற் காண்க. அற்றாகலினன்றே பிரமமீமாஞ்சையில் "ஶப்தாதேவப்ரமித:" என்னும் அதிகரணத்தில் "அங்குட்டமாத்திரனான புருடன் புகையிலாத அனலையொப்பவனும், இறந்தகாலத்து நிகழ்காலத்து முள்ளபொருள்கட்கு ஈசானனும், அவனே யின்று முள்ளான், நாளையு முளன்" என்றோதுங் கடவல்லி மந்திரத்திற் கூறப்பட்ட அங்குட்டமாத்திரனென்ற பரிமாணவிசேடத்தினைச் சீவான்மா பொருளாகக் கொள்ளாது, ஈசானனென்னும் அபிதானச் சுருதிவடிவான சொல் லுண்மையிற் சீவான்மா அன்றிப் பொருளாகாமை விலக்கிப் பரமான்மாவே அன்றிப்பொருளாதற் பாலதென்று துணிபு போந்ததூஉமென்க. ஈசான பதத்திற்குக் கேவல யோகத்தின் மேம்பா டுளதாயின், பரமான்மாவை யுணர்த்துஞ் சிறப்புச்சொல் லாணையின்றெனப்படும். இப்பெற்றி யுள்ளனவற்றிற்கு ஈசானனென்னு மிலிங்க மாத்திரையாற் பரமான்மப் பொருளாதற் றுணிவாம், "ஶப்தாதேவப்ரமித:" என்னுஞ் சூத்திர நிருவாக முடியுமென்க. இனி 'அபிதானத்திற் கீசானன்' எனப் புருடசூத்தத்திற்கணுள வருதலின், அதனானும் புருடசூத்தம் பரமசிவனையே பொருளாகக் கொண்டதென்பது சாலப் போதருமென்க. அஃதேல், புருடசூத்தத்து 'நாராயண' னென்னு நாமம் வழங்கப்படுமாறென்னையெனின்,— புருடசூத்தத்திற்கு "நாராயணம்" என்னும் பெயர் நாராயணக்கடவுள் பொருளாதல் பற்றிய போந்த வழக்கன்று. மற்றியாதுபற்றிய போந்த வழக்கெனின்,— அவனிருடியாதல்பற்றிய போந்த வழக்கென்க. ஈசானபதம் போலப் புருடசூக்தமும் சிவனுமாதலைச் சிவதத்துவ விவேகநூலுடையார் சிவதத்துவவிவேகத்தானுஞ் சிவகர்ணாமிர்தத்தானும் தடைவிடைகளான் மிக விரித்துரைத்தார். கண்ணபிரான் அருச்சுனற்கு "தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்யே யத: ப்ரவ்ருத்தி: ப்ரஸ்ருதா புராணீ" என்று கீதையில் எடுத்தருளிச்செய்யு முகத்தால், புருடசூத்தத்துக்குப் பொருளாயுள்ளோன் பரமசிவனேயென்பதை நன்று நிறுவுகின்றான். என்னை? தான் பரமபுருடனாயின், "ஆதிபுருடனை நான் சரணடைகின்றேன்" என்று கண்ணபிரான் அங்ஙனம் ஓதாதொழிவனென்க. அல்லதூஉம், பாரதம் இலிங்கம் ஆக்கினேயபுராணமுதலியவற்றுள் ஓதப்பட்ட சிவநாமங்களு ளடங்காத வேறு நாமங்களில்லையாகலானும், "ஸாஸாதித்வவரோவிஷயாதிரொகேஷாம் தத்வ ஜநாநாதிநாமகாயாஸிவாயணோ" என்றெழுந்த ஆரியவசனத்தில் 'உளபெயர்களு முனை யைப்பொருந்திய பிற பெயர்களும் என பெயர்களேயாம், இதன்கணாயச்சி வேண்

டா"ரென்று சிவபிரான் கண்ணனை நோக்கிக் கூறியதனானும், பகவற்பெயர் புருடப் பெயர்கள் பரமசிவ நாமமேயாதல் தெள்ளிதிற் றுணியப்படுமென்க.

இனிப் பிரமன்முதலிய மூவரையு முறையே "படைப்புக்கடவு டிதிக்கடவுள் சங்காரக்கடவுள்" எனவும், "சாக்கிரமூர்த்தி சொப்பனமூர்த்தி சுழுத்திமூர்த்தி" எனவுங் கூறிப், பரமசிவனைத் 'துரியமூர்த்தி' யென வுபநிடதங்களெல்லா மூவரின் வேறாக வைத்தோதுதலின், அப்பரப்பிரம முழுமுதலவனே நாயனாரால் "ஆதிபகவன்" என்று அங்ஙனம் விசேடிக்கப்பட்டானென்பது தேற்றென வுணர்ந்துகொள்க. இன்னும், மாலயனுருத்திரனென்னு மூவரையு முறையே சாத்துவிககுணமூர்த்தி இராசதகுணமூர்த்தி தாமதகுணமூர்த்தியெனவோதிப், பரமசிவனைக் "குணாதீத" னென்றவர் உபநிடத முதலியன வோதுதலானும் அம்முழுமுதலவனே ஆதிசத்தத்தால் விசேடிக்கப் பட்ட பகவனென்பது துணிபா மென்க. இனிச் சங்காரவுருத்திரனுஞ் சங்கரித்தற் றொழிலின்பொருட்டுத் தாமதகுணத்தை மேற்கொண்டதல்லது இயல்பாகத் தாமதகுண முடையானல்லன், தாமதகுணத்தின் காரியமாகிய துயின் மயக்கம் வஞ்சமுதலியன அக்கடவுண்மாட்டின்மையின் துயின் மயக்கம் வஞ்சமுதலியன மாயோனுக்குளவாதல் புராண இதிகாசங்களிற் கேட்கப்படுதலின், அக்கடவுட்குச் சாத்துவிககுணங் கூறியது காத்தற்றொழின் மாத்திரைக்கேயெனக் கொள்க. இன்னோ ரன்னவையெல்லாம் பிரம தருக்கத்தவத்துள் விரித்துக் காட்டியவாற்று ணறிக. மாயோனுக்குக் காத்தற்றொழி லும் பிருதிவி முதற் பிரகிருதி மாயைகாறும் வியாபித்து நிற்றும் பிரதிட்டாகலை பரி யந்தமேயெனக. என்னை? நிவிர்த்தி பிரதிட்டை வித்தை சாந்தி சாந்தியதீதை யென்னு மைங்கலைகளான் வியாபிக்கப்பட்ட தத்துவ புவனங்களுக்கு முறையே பிரமன் மா லுருத்திரன் மகேசுரன் சதாசிவன் எனனு மைவரு மதிகாரிகளென ஆகமங்க ளோதுதலி னென்க. பிரகிருதிக்கு மேலுந் தத்துவ புவனங்களுண்மை சைவ நிட்டங்களினுங் கேட்கப்படுதலின், அது சைவாகமப்பொருளென்று புறங்கூறற்பாலதன்றென்க. புரா ணங்களினும் பாரதத்தினு மாயோனுக்கும் பிரமனுக்குந் தாழுவாக வுருத்திரப்பெயரார் கூறப்படுவோர் காத்தற்றொழிலும் படைத்தற்றொழிலு மின்றிப் போகப்பொருட்டுச் சங்காரவுருத்திரன் கூறிய அவாந்தரத்தேவராகிய நீலலோகிதன் முதலிய வியாபாரமூர்த் திகளேயா மென்க. அது பாரதநாராயணீபசங்க்ரக முதலியவற்றுட் காண்க. ஆதலி னன்றே முதலிய வுபநிடதங்களிற் "பரமசிவன் முப்பமூர்த்திகளையும் படைத்தான்" என்பது போலக் குணமூர்த்திகளை அங்ஙனங் கூறுது தம்மை யொழிந்த தேவர் யாவரையும் படைத்தார் எனவே கூறுதலின், அவர் முழுமுதலவ ராகாமை கண்டு பிடிக்க. "அயனை முன் படைத்திந் தொருகற்பத் தரியை முன் படைத்தி யொருகற்ப - மயனருத்திரனை முன் படைப்ப தொருகற்பமற் றொருகற்பந் தனினே - முயனுாலையானா யொருங்கு டன் படைப்பன் முன்பிறந்தவர் மற்றிருவரையுந் - செயலினுற படைக்கவு மருள்புரி வன் சிவபிரானன்றி வேறறிந் தெவரோ" எனச் சிவதத்துவ விவேகத்திற் கூறியதனை யுங் கண்டு விரித்துரைத்துக்கொள்க. பாரதத்தில் "அளவிலப் பெரொளிய பகவனருஞ்சிவ னுக் கச்சுதனனமாவாம்" என்றது அப்பேதப்பட வுபசரித்துக் கூறியதாம். ஆண்டு ஆன மாவென்றது அந்தரியாமியெனனும் பொருட்டெனக் கொள்ளின், அளவிலப் பேரொளிய பகவனென் றியாத்துக்கூறியதற்கு முரணுமாறறிக. பாரதத்தின் மோக்கதருமத்தில் "ஆதலாலெனக் கானமாவே யாமுருத்திரனை முன்னாசு-காதலாற் பூசிக்கின் றேனியான்" எனக் கண்ணன் கூறியவாக்கியத்திற் சிவபிரானைத் தனக்கானமா வென்றது அந்தரியாமி

யென்னும் பொருட்டேயாம், தன்னை பூசிக்கப்படுங் கடவுளாதற்குரிய தகுதியேயாகலா னென்க.

இனி வேதத்துட் கருமகாண்டத்தில் "விண்டு பரமன், அங்கியவமன். அவ்விருவருக்கு மிடையே யெல்லாத்தேவரும்" என்றது, ஆண்டுச் செய்யவதொரு வேள்வி விசேடத்தில் அவிப்பாக மேற்றன்முறையின் விண்டு முந்தினவன், அங்கி பிந்தினவன்; அவ்விருவருக்கு மிடையே யேனைத்தேவ ரெல்லாரென்னும் பொருட்டாகலின், ஆண்டுப் பரமமவம மென்பன ஆதியந்தமென்றே பொருள்படுமாறு காண்க. அவ்வாறன்றி ஆண்டு விண்டு பரமனென்றதற்கு விண்டு எல்லாக்கடவுளருக்கு மேற்பட்டவனென்றும், அங்கியவமனென்றதற்கு அங்கி யெல்லாக்கடவுளருக்குங் கீழ்ப்பட்டவனென்றும் பொருள் கொள்ளின், "அங்கி கடவுளர்க்கு மேற்பட்டவன்" என்று ஆண்டாண்டுக் கூறுஞ் சுருதி மிருதி புராணங்கள் பலவற்றோடு முரணுமென மறுக்க. இவ்வாறு முன்பின் முரணாமைப் பொருள் கொள்ளவறியாது "விண்டு ஆன்மா" என்றதுபற்றியும், "விண்டு பரமன்" என்றது பற்றியும், விண்டுவுக்கு முதன்மை கோடல் பொருந்தாமை யறிக. இன்னும் வருவன வெல்லா மிவ்வாறே யோர்ந்துணர்க. ஈண்டுக் கூறியவாற்றானுந் துரிய மூர்த்தியான பரமசிவனே ஆதிபகவனென வலியுறுத்தப்பட்டா னென்று தெளிந்துகொள்க.

பாருக்கெல்லாந் திரிசனனுங் கூறுமாறு அரசனுலாப் போதுங்காலைத் தொகுதி பொருந்தப்பாகச் செல்வாருள் அரசனாவா னிவனென்பது ஆடை யணி யானை குதிரை முதலிய வைபவம் பற்றித் துணியப்படாதாம். என்னை? அவை அமைச்சர் படைத்தலைவர் முதலியோர்க்கும் பொது, அல்லதூஉம், அரசனுவக்கையுற்றுழி யமைச்சர் முதலாயினோர்க்குத் தனைத்து மிக்க வரிசையளித்தலு முண்டாகலின். அதுபோல வேதத்துட் கூறப்படுங் கடவுளருட் பரப்பிரமப் பொருளாவா னிவனென்பது தேவப்பெருமைகளாற் றுணியப்படாதாம். மற்றுங் குடைக்கவித்து வெண்கொற்றக் குடைநிழற்கீழ் வருதலொன்றேபற்றி யரசனாவா னிவனென்பது துணியப்படுமாறுபோலக் காரணவாசகியங் சட்டப்பட்டு முதலியவற்றிற்குக் காரணமாகக் கூறப்படுத லொன்றேபற்றி யவனே பரப்பிரமமென்பது துணியப்படும். காரணப்பொருளாவான் நாராயணனே யென்பது சுபால முதலிய வுபநிடதங்களிற் காணப்படும். அற்றேல், சிலவுபநிடதங்களிற் காரணப்பொருள் 'சத்' தென்றும் 'பிரம' மென்றும் 'ஆன்மா' வென்றும் இங்ஙனம் பொதுவகையானும் 'இரணியகருப்ப' னென்றுஞ் 'சிவ' னென்று 'உருத்திர' னென்று மிங்ஙனஞ் சிறப்புவகையானும், வேறுவேறு பெயரா னெடுத்தோதவும் படுமாலோவெனின்,— அற்றன்று, சுபால முதலிய வற்றுட் காரணப்பொரு ணாராயணனென்றதலகண் கொன்றுமுறைமை பெயர்த்துக் கைவளையமைந்து கூறப்பட்டதாகலான் அதுவே யுண்மைப் பொருளென்னவுஞ் சத்துப் பிரம மான்மா வென்றற்றொடக்கத்துப் பொதுப்பெயர்கள் சாமானியவிசேடநியாயம்பற்றி நாராயணனையே யுணர்த்தி நிற்கும், அங்ஙனமன்றி இச்சுருதிப் பெயர் காரணத்தலைவிலக்குமெனக் கொள்ளினும் ஆதுபெயராயத்தான்; மாயோனுடைய வாயிரம் பெயர்களுட் சிவன் முதலிய நாமங்களும் எடுத்தோதுதலின் இச்சுருதியாய்த் தான், நாராயணனையே யுணர்த்தி நிற்குமெனவுஞ் சொல்லப்படும். அற்றேல், நாராயணன் முதலிய மாயோன் பெயர்களுங் காரணச்சுருதியுட் சிவனையே யுணர்த்திநிற்கு மாகலின், காரணப்பொருள் சிவனென்னு முடிபுக்கே வலியுடையவென மாறிக் கொள்ளிற் படும்போலுமெனி னென்னையெனின்,— அற்றன்று; மாயோன்பெயருள் ஏனையவெல்லாங் காரணப்பெயராய வேறொரு கடவுளை யுணர்த்துமெனக் கொள்ளினும், நாராயண

னென்னும்பெயர் இடுகுறிப்பெயராதலேயன்றி ஏனைய பெயர்களைப்போலக் காரணப்பெயராகுமென்றற் கேலாது. அஃதெங்ஙனமெனின்,—நாரமென்பது நீர், அயனமென்பதிடம். நாரம் அயனமாகவுடையவ னாராயணனென்ன அன்மொழித்தொகையாய இருமொழியும் புணர்ந்தவழி, ரகரத்தின் முன்வந்த நகரம் ஒருமொழிக்கண்ணதாயின், ணகரமாயத் திரியும்; உயிரெழுத்துக்களும், யகர வகரங்களும், ககர பகர வருக்கங்களும், இடையே நிற்பினும், அங்ஙனந் திரியும், ரகரநிலைமொழிக்கண்ணதாக நகரம் வருமொழிக்கண்ண தேல், இடுகுறிப்பெயராயின், ணகரமாயத்திரியுமென்பது, பாணினிசூத்திரமாகலின், நாராயண னென்பதனைக் காரணக்குறியாக்குவார்க்கு நகரம் ணகரமாகத் திரியுமென்ற சோத்திக்கிலையென்பது. அற்றாகலினன்றே சிவன்முதலிய பெயர்போல அவயவப்பொருள் பற்றிக் காரணக்குறியாய் மற்றோர் கடவுளை யுணர்த்துதல் பொருந்த நாராயணனென்னுஞ் சிறப்புப் பெயரற் சுபால முதலியவற்றில் எடுத்தோதியதூஉமென் றிங்ஙனம் பிதற்றுவர். இவையனைத்துஞ் சுவேதாசுவதரமுதலியவுபநிடதங்களை யோதியுணராதமடவோர் கூற்றேயாமென்று மறுக்க. படைப்பு முதலியவற்றிற்குக் காரணமாதலென்றே பிரமத்திற்குச் சிறந்தவிலக்கண மென்ப தொகுரும். அதுபற்றியன்றே பரப்பிரமப்பொருள் பரமசிவனேயெனத் துணிந்தாமெனக. சுபாலமுதலியவுபநிடதங்கள் உலகந்தோன்றியொடுங்குமுறைமை யுணர்த்தப்புகுந்தனவன்றிக் காரணப்பொருளை யுணர்த்தப்புகுந்தனவல்ல. இடையே இயைபுபற்றிக் காரணப்பொருளு முடன் கூறப்பட்டது. சுவேதாசுவதரத்தின் அவ்வாறன்றிச் சுபால முதலியவற்றுட் பொதுவகையா னுணர்ந்த காரணப்பொருளைச் சிறப்புவகையா னுணர்த்தற்பொருட்டுக் ‘காரணமாகிய பிரமம் யார்’ என முனிவர் வினவும் வினைமுதற்கணெடுத்துக் கொண்டு, உபநிடதமுழுவதும் பரமசிவனுக்குரிய சிறப்புப்பெயர்களாற் பரமேசுரன் பெருமை விளங்கக் கூறுதலானும், இவ்வாறேனை யுபநிடதங்களுண் முதற்க ணெடுத்துக்கொள்ளாமையானும், ஏனை யுபநிடதங்களினுஞ் சுவேதாசுவதரம் வலியுடைத்தாகலான், ஆண்டுக் கூறப்படுங் காரணப்பொருளாகிய பரமசிவனே பரப்பிரமமெனவும், ஏனைக் காரணவாக்கியங்களுட் கூறும் பெயர்களெல்லாஞ் சாகப்சந்நியாயத்தாற் பரசிவனையே யுணர்த்திநிற்குமெனவும், இரணியகருப்பன் நாராயணன் முதலிய சிறப்புப்பெயர்களும் அவயவப்பொருள்பற்றிக் காரணப்பெயராயத்தான், அங்ஙனமன்றி ஆகுபெயராயதான், பரமசிவனையே யுணர்த்திநிற்குமெனவும், உணர்க. எல்லாப்பெயரும் பரமசிவன்பெயரென்பதே வேதத்துணிபென்ப தற்கேதுக் காண்க. நாராயணனென்னும் பெயர் மாயோனுக் கிடுகுறியாயவிடத்தன்றே இயைபுபற்றிப் பரமசிவனையுணர்த்துமவழி ஆகுபெயரெனக் கொண்டாமென்பது. கங்கையினிடைச்சேரியென்புழிக் கங்கையென்பது இடுகுறியாய வெள்ளத்தினை யுணர்த்திநின்றாலன்றே கரையை யுணர்த்துமவழி இயைபுபற்றி ஆகுபெயரெனக் கொண்டதூஉமெனக. கரையினை யுணர்த்துமவழியு மாற்றலா னுணர்த்துமாயின், ஆகுபெயரென்றற் கேலாமையறிக. இங்ஙன நாராயணனென்பது மாயோனுக் கிடுகுறிப் பெயராயநின்றே கங்கையினிடைச்சேரி யென்புழிப்போல இயைபுபற்றி ஆகுபெயராய பரமசிவனை யுணர்த்துமெனக்கோடலின், ஆண்டு ணகரமாயத்திரிதற் கிழுக்கின்மையின், நாராயணனென்னுஞ் சொல் அவயவப்பொருள்பற்றிக் காரணக்குறியாதற் கேலாதெனக் கொண்டவழியும், அவர்கருத்து நிரம்புமாறிலையெனக. இவை சிவதத்துவவிவேகத்துஞ் சிவஞானமாபாடியத்து மோதியவாறுபற்றி யுரைக்கப்பட்டன. இன்னுஞ் சிவஞானமாபாடியத்துள் ஆசிரியர் சிவஞானயோகிகள், “உண்மையாற்றேசக்குங்கால், நாராயணனென்பது அவயவ

பொருள்பற்றிக் காரணக்குறியாயினன்றே பரமசிவனையுணர்த்துமென்பது காட்டுதும்" என்றெடுத்துக்கொண்டு, "நாருடையதொகுதி நாரமெனத் "தொகுதிப் பொருள்பற்றி அண்விகுதியரும்" என்னும் பாணினிசூத்திரத்தால் அண்விகுதி பெற்றுநின்ற, அதன் மேல் ஆசாரம்பொருளுணர்த்துங் ககரஙகரவித்துக்களையுடைய யகரவிகுதிவந்து திரிந்து நாராயமெனவடங்கின நாராயமென நின்றவழி, அதுவும் பகுதித்தன்மைப்பட்டதலின், அதன்மேல் வினைமுதற்பொருளுணர்த்தும் ஙகரடகரவித்துக்களையுடைய யகரவிகுதி யனவெனத்திரிந்து நாராயனனென நின்றவழி, "வினைபடையா விகுதியினின்ற நகரம் ணகாரமாய்த்திரியும்" என்பதனால் அங்ஙனந்திரிந்து, நாராயணனென்னவொருமொழியாய் உயிர்த்தொகையையொத்து நிற்பனென்னும் பொருட்டாய காரணக்குறியாயவாறு காண்க. இங்ஙன் நாராயணனென்பது லகரடகர வித்துக்களையுடைய அகரவீற்றுச் சொல்லாதலினன்றே பெண்பாலில் நாராயணியென ஙகரபகரவித்துக்களையுடைய ஈகாரவிகுதியேற்றன் யாண்டும் வழங்குவதூஉ மென்க. அகரவிகுதியீற்றுச் சொல்லென்க் கொள்ளாக்கால், நாராயணியென வீகாரவிகுதி பெறுதற்கு விதியின்மையுணர்க. நாராயணனென்னும் வடசொற்கு இங்ஙனம் விகுதிமேல் விகுதிபுணர்த்துச் செய்கை செய்வனவெல்லாம் வடமொழிவியாகரணம் வல்லார்வாய்க் கேட்டுணர்க. இன்னும் விரிக்கிற் பெருகுமென்றொழிக. இத்தாவது-செய்கை செய்தன்முதலியவற்றிறத்துக் கருவியாக முதனூலாசிரியனுற் படைத்திட்டுக் கொள்ளப்பட்ட கருவிச்சாரியை. "இரணியகருப்பன் காரணப்பொருளென்பாரையும் இவ்வாறே கூறி மறுக்க" என்று, இவ்வாறு நாராயணநாமங் காரணக்குறியாயப் பரமசிவனை யுணர்த்துமாறு சாதித்தார்.

"உயாசா யத்திரிக் குரியபொரு ளாகலிற் - றசரதன் மதலை தாபித் தேத்தலிற் - கண்ணன் கயிலையி னண்ணினின் றிரப்பப் - புகழ்ச்சியி னமைந்த மகப்பே றுதவலிற் - ஊன்று விழியுட னொராயிரங் கமலப் - புதுமலர் கொண்டரி பூசனை யாற்றலின் - ஆங்கவற் கிரங்கி யாழியீந் தருடலின் - ஐந்தலைக் கிழவனை யுழல்விருந் தாக்கலின் - அமைப்பருங் கடுவிட மமுதுசெய் திடுதலிற் - றென்றிசைத் தலைவனைச் செகுத்துயிர் பருகலின் - அவுணர் முப்புர மழியவில் வாங்கலிற் - றக்கன் வேள்வி தகர்த்தருள் செய்தலிற் - றனஞ்செயன் றனக்குத் தன்படை வழங்கலின் - மானுட மடங்கலை வலிதபக் கோறலின் - மாயோன் மகடூஉ வாகிய காலைத் - தடமுலை திளைத்துச் சாத்தனைத் தருதலின் - ஆழ்கடல் வரைப்பி னனேறு ரன்னோர் - அன்புமீ தூர வருச்சனை யாற்றலி - னினிரு செல்வமு மாங்கவர்க் கருடலின் - உயிரு பிறப்பினு மரியருச் சித்தலின் - இருவரு மன்னமு மேனமு மாகி - அடிமுடி தேட வழற்பிழம் பாகலிற் - பிறப்பிறப் பாதி யுயிர்க்குண மின்மையிற் - கங்கை சூழ் கிடந்த காசிமால் வரைப்பிற் - பொய்புகல் வியாதன் கைதம் பித்தலின் - முப்புர மெரிப்புழி முகுந்தப் புத்தேளை - மால்விடை யாக்கி ஞாலமொடு தாங்கலின் - அயன்சிர மாலை யணியி லணிதலின் - ஞானமும் வீடு மேனை யோர்க்குத வலிற் - பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவுள் - உம்பர்க் கெவர்க்கு முயர்ந்தோன் - என்பது தெளிக வியல்புணர்ந்தோரே" என அரதத்தாசாரியர் அருளிச்செய்தவற்றையு மீண்டு விரித்துரைத்துப் பரமசிவ பரத்துவ மினிது தெளிந்துகொள்க. இங்ஙனங் காத்தற்கடவுளாகிய நாராயணனும், படைத்தற்கடவுளாகிய இரணியகருப்பனும் பரமகாரணராகாமை தெரிக்கவே, இவரோடொருங்கெண்ணப்படுஞ் சங்காரக்கடவுளாகிய வுருத்திரனும் பரமகாரணனாகானென்பது தானே போதருமென்க.

இதனானுங் கூறியவாறன்றி மூவரையுந் தோற்றுவித்து முத்தொழிலினிறுத்தும் பரமகாரணக்கடவுளும் மகாசங்கார காரணனுமாகிய பரமசிவனே ஆதிபகவனென்று அவ்வனைவுங் குறிக்கப்பட்டானென்ப தொருதலையா னுணர்ந்துகொள்க.

ஆசிரியர் சிவஞானயோகிகள் இப்பெற்றியெல்லாம் பாராயணத்து தெளிந்தன்றே, "சீர்கொளிறை யொன்றுண்டத் தெய்வநீ யென்றெப்பாற் - சோர்விலடை யாற்றெளிந்தோஞ் சோமேசா-வோரில், அகர முதல வெழுத்தெல்லா மாதி-பகவன் முதற்றே யுலகு" என்று முதுமொழிவெண்பாவில் எடுத்தோதியருளினா ரென்க. அகர முதல வெழுத்தெல்லா மாதி - பகவன் முதற்றே யுலகு என்னுந் திருக்குறளினை யோரின், அதன்கட் பிரயோகிக்கப்பட்ட ஒப்பாற் சீர்கொளிறை யொன்றுண்டென்பதூஉம், அடையா னத்தெய்வநீ யென்பதூஉம், தெளிந்தோ மென்க. ஆண்டடையென்ற தாதி சத்தத்தினை. இதனானும் உலகிற்குப் பரமகாரணனாகிய முதற்கடவு ளொருவனுளனென்றும், அவன் உலகமும் பல்லுயிரு மொன்றி நிறைந்தோங்கி யிலகு மாதிபகவனென்றும் எழுந்த முதற்றிருக்குறட் சொற்பொருளுண்ட மொருவாறு விரித்துரைத்தாம். இனி நாயனார் உத்தரவேதத்து இங்ஙனம் போந்த முதற்கடவுள் திருவடி சேர்தலென றெடுத்தருளிச்செய்த வீட்டின் சிறப்பியல்பு சிறிது தெரித்தும்.

நாயனார் முதற்கண்ணெடுத்தோதிய கடவுள்வாழ்த்துக் கேற்ப உத்தரவேதாந்தமாக நிலையிட்ட நிலையாமை துறவு மெய்யுணர்வு அவாவறுத்த லென்னு நான்கதிகாரங்களால் வீடுபேற்றின் சிறப்பியல்பு அறிவுறுத்தவாறு மேற்கொண்டெடுத்து விளக்கிறும். நாயனார் அங்ஙன நான்காகத் தொகுத்த ஞானவதிகாரத்துப் "பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ் - செம்பொருள் காண்ப தறிவு" "சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச் - சார்தரா சார்தரு நோய்" "காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற - னாமங் கெடக்கெடு நோய்" என்னு மகாவாக்கியங்களிற் "பிறப்பென்னும் பேதைமை நீங்க" வென்றதனாற் சகசபந்தமான மூலமலவீடும், "சார்புகெட" வென்றதனாற் கருமமலவீடும், "காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற - னாமங்கெட" வென்றதனான் மாயாமலவீடும், குறித்தருளினார். பேதைமையை விளக்கு மூலமலத்தைப் "பேதைமை" யென நுபசரித்தார். இம்மூவகை வீடுகளையு மும்மலங்களின் மேலவாமாறு பரிமேலழகியார் அவற்றிற்குரைத்த வுரைகளானு மறிக. காமவெகுளி மயக்கங்கள் மாயா தனுகரண புவனபோகங்கள் பற்றியே யான்மாவின்கண் மிக்கு நிகழ்தலின், அவற்றினீக்க மாயாமல வீடா மென்க. அது ஆசிரியர் சிவஞானயோகிகள் "காரிகையா ரைம்பொன்னினைக் காட்டவுங்கா மாதிமுடமைச் - சோர்விழுந்துய்ந் தாராசர் சோமேசா - வோருங்கால், காம வெகுளி மயக்க மிவைமூன்ற - னாமங் கெடக்கெடு நோய்" என்றவவாறு முதுமொழிவெண்பாவில் எடுத்தோதியத னானு முணர்க. இதனானே, ஆன்மாப் பற்றற்ற வாதிபகவன் பற்றினைப்பற்றி, ஆணவங் கன்ம மாயையென்னு மும்மலங்களினீங்கி வேண்டுதல் வேண்டாமையிலாத அவ் வாதிபகவன் திருவடிச்சார்பு தலைக்கூடி யானந்த சொரூபியாய வாழுதலே வீடுபேற்றின் சிறப்பியல்பென்பது நாயனாருக்குக் கருத்தாயவாறு கண்டுகொள்க. மல நித்தியமாகலின் நீங்கலென்றுங் கெடவென்று மவ்வா றருளிச்செய்தார். நீங்குதலாவது-ஆன்மஞானத்தினைத் தடைசெய்யமாட்டாது தன்சத்தி மடங்குதலாம். கெடுதலு மப்பொருட்டு. கருமமலமு மாயாமலமும் ஆகந்துகமாகலின், சகசமலவுபாதி நீக்கத்தின் அவையும் விண்டொ

ழியு மெண்பார், "சார்தரா சார்தரு நோய்" என்றுங் "காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற - னாமங் கெடக்கெடு நோய்" என்று மவ்வாறருளிச்செய்தார். இங்ஙனஞ் சிவத்துவாபிவியத்தியுற்று ஆதிபகவனோ டேகமாயின்ற முத்தான்மாவை மும்மலங்களும் வாதியாவென்பது "அவனே தானே யாகிய வந்நெறி - யேக னாகி யிறைபணி நிற்க - மலமாயை தன்னொடு வல்வினை யின்றே" என்னுஞ் சிவஞானபோதச் சூத்திரத்தானு மறிக. செம்பொருள் - பரமான்மாவான ஆதிபகவன். "சார்புணர்ந்து" என்புழிச் சார்புமது. பரம்பொரு ணிருவிகாரியா யென்று மொரு பெற்றித்தாதலிற் "செம்பொருள்" என்றும், எப்பொருட்கும் பரமாதாரமாய நிற்றலிற் "சார்பு" என்றும், அவ்வா றோதப்பட்டது. 'செம்பொருள் காண்பதறிவு" "சார்புணர்ந்து" எனவே, முத்திநிலையின்கணாதிருவான முத்தான்மா ஞேயப்பொருளான செம்பொருட் சிறப்பியல்பு ஞானத்தோ டொற்றித்து அத்துவிதமாய நிலைபெறு மென்றவா றாயிற்று. இதனானே பாரமார்த்திகமான முத்தியிற் றுவம்பதவாச்சியனை சீவான்மாக கெட்டுத் தற்பதவாச்சியனை பரமான்மாவா யொழியுமென்னு மேகான்மவாதிகள் வீட்டியல்பு நாயனார்க்குக் கருத்தாகாமை தெளியாயிற்று. அற்றேல், வேதாகமங்கள் "பிரமாகம்" "சிவோகம்" என்றிங்ஙனம் பாவிக்க வோதிய தென்னையெனின்,— பசுக்கள் பாசவிமோசன முற்றுத் தமக்கந்தரியாமியும் வியாபியுமான பரசிவசத்துவந் தங்கண் அபிவியத்தியுறும் பொருட் டுபாசிக்க, வேதாகமங்களில் அங்ஙனம் அத்துவிதபாவனை விதிக்கப்பட்டது. ஆகலின், அதுகொண்டு தானே ஏகான்மவாதஞ் சாதித்தல் சாலாதென்க. "பிரமாகம்" 'சிவோகம்" என்னு மத்துவிதபாவனையால் ஆன்மாக்கள் சிவகுணங்க டங்கண் விளங்கப்பெற்றுச் சிவமாயிருப்பனவன்றிக் கெட்டொன்று யொழியா. அரதத்தாசாரியர்க்கு மிதுவே கருத்தாதல் "வேதத்தில் ஆண்டாண்டுப் பிரமப்பொருளாகிய சிவபிரானுக்கும் ஆன்மாவிற்கும் அத்துவிதபாவனை கூறப்படுமா றென்னையென முசங்கித்தெடுத்துக்கொண்டு, கருடனு மாந்திரிகனுந் தம்முள் வேறுதல் வெளிப்படையாயினுங் கருடோகமென்னு மத்துவிதபாவனை விடநிவர்த்திப்பொருட்டு வேண்டப்படும்; அதுபோலப் பிரமப்பொருளாகிய பரமசிவனும் ஆன்மாவுந் தம்முள் வேறுதல் வெளிப்படையாயினு மலநிவர்த்திப்பொருட்டு வேதத்தில் அத்துவித பாவனை கூறப்பட்டது; அதுகொண்டுதானே நிருபசரித வைக்கியங் கூறுதல் சாலாதென்பது" என்றிங்ஙனஞ் சதுர்வேததாற்பரியசங்கிரகத் தோதியவாற்று னறிக.

இனிச் செம்பொருளான ஆதிபகவற்குச் சருவஞ்ஞத்துவமுதலிய வெண்குணமுடைமை சொரூபவியல்பெனப்படுஞ் சிவத்துவமாம். இவ்வெண்குண சொரூபசிவத்துவப்பேறே முத்திநிலையில் ஆன்மாவிற்கு ஆன்மலாபமெனப்படுஞ் சாயுச்சியப் பெரும்பேறும். ஆதிபகவன் எண்குண முடையவனாதல் "கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான் - றாளை வணங்காத் தலை" என்னுங் கடவுள்வாழ்த்துத் திருக்குறளானறிக. அற்றேல், "ஆதிபகவன்" எண்குண சொரூபனாயின், அவன்றன்னை "நிர்க்குணன்" "குணாதீதன்" என்று வேதாகமங்க ளோதுதல் பொருந்தாதெனின்,— வேதாகமங்கள் பரமான்மாவை "நிர்க்குணன்" "குணாதீத" னென்றோதியது, சாத்துவிக இராசத தாமதமென்னு மாயாகுணங்க ளில்லாதவனென்னுங் கருத்துப்பற்றி யல்லது முற்றறிவு முதலிய சிற்குணங்க ளில்லாதவனென்னுங் கருத்துப்பற்றி யன்றாகலின், அது பொருந்துவதாம், மறுப் பொருந்தாமை யாண்டையதென்க. இச்சிற்குணங்களுமில்லா வியல்பே அவனுக்குச் சொரூபமெனின்,— சத்தாகை சித்தாகை ஆனந்தரூபமாகை

யுஞ் சருவஞ்ஞத்துவ முதலியவற்றை யகப்படுத்துநிற்குஞ் சிறப்புக்குணங்களாகலின் 'ஆதிபகவ' னென்ற பரப்பிரமப்பொருள் அவற்றை யிலக்கணமாக வுடைத்தென்றலுஞ் சொரூபவியலாகாதாம். அதுவேயுமன்றி அங்ஙனம் வேண்டுவார் பிரமப்பொருள் ஓரியல்புமில்லா வெறும் பாழென்றாராய் நிரீச்சுரவாதிகட்குச் சகபாடிகளாயு மொழிவரென்க. எண்குணங்களாவன: சருவஞ்ஞத்துவம், திருத்தி, அனாதிபோதம், சுவதந்திரம், அலுத்தசத்தி, அனந்தசத்தி, நிராமயான்மா, விசுத்ததேக மென்பன. திருத்தியெனினும் பூர்த்தியெனினு மொக்கும். அனாதிபோதம் அநாதிமுத்தத்துவ மெனவும் வழங்கப்படும். இவையே இறைவற்குச் சிவத்துவமெனப்படு மெண்குணமாமாறு "ஸர்வஜ்ஞதா த்ருப்திரநாதிபோதஸ் ஸ்வதந்த்ரதா நித்யமலுப்தசக்தி: | அநந்தசக்திர் நிராமயாத்மா விசுத்ததேஹஸ்ச ஸர்வஜ்ஞஸ்ய விபுர்ஜேதி" எனனுஞ் சருவஞ்ஞானோத்தராகம வசனத்தா னறிக. இவ்வெண்குணங்களுள், நிராமயான்மாவை அனாதிபோதத்திலும், விசுத்ததேகத்தை அலுத்தசத்தியினு மடக்கி அறுகுணங்களாகவும் ஓதுப. இவ்வறுகுணங்கள் சத்துச் சித்து ஆனந்தமென மூன்றாயடங்குமாறோர்ந்துணர்க. இனி நிமலமானபரப்பிரமப்பொருள் அவிச்சையாற் கட்டுண்டு சீவனமாமென்கின்ற, பிரமாசம் பாவனை டேணி, மறுத்துய பிரமமா மெனின்,— நிமலமான பிரமப்பொருளை அவிச்சையான மலங் கட்டுறுத்தமாட்டாது. கட்டுறுத்துமெனின், அது நிமல பரப்பிரம பொருளாமாறில்லை. அன்றியும், வேறகு வீடுபேறுளதாயவழியும் அஃதுத்தனைக் கட்டுறுத்துமெனப்படும் விம்பெறனபது போலியாய் முடியுமென்க. அற்றேல், நிராலம்பஞ் சருவசாரமுதலிய வொருசாருபநிடதங்கள் அங்ஙன மோதியவா றென்னையெனின்,— சுவேதாசுவதரமுதலிய சைவோபநிடதங்கள் சீவனமாப பிரமம்போல வனுக நித்தியப்பொருளென்றும், அப்பிரமந் தனக்கநதரியாமியாயும் வியாபியாயு நின்றுபகரிக்க அனாதிமலவிளைக்கிடாகப் பிறப்பிறப்புற்று வினைபோகம் புசிக்குமுறையின் மலபரிபாக மெய்திப் பரமசிவன் திருவருளுற்றுக் கட்டுநீங்கி முற்றறிவெய்தி மெய்யுணர்ந்து பவவாசனையு நீங்கி சிவ பரப்பிரமப்பொருளோ டத்துவிதமாய் நின்று முடிவு காணவில்லாப பேரின்பத்தினை நுகராநிற்குமென்றும், எடுத் தொருதலைப்படுத் தோதுதலின், நிராலம்பஞ் சருவசாரமுதலிய வுபநிடதங்களிற் பிரமசத்தத்தா லெடுத்தோதப்பட்ட சித்துப் பரசித்தான பரப்பிரம மன்று. அபரசித்தான ஆன்மாவே அவிச்சையாற் பந்தமுற்றுச் சாதகமுறையிற் பிரமோபாசனை பேணிப் பிரமமா மென றவ்வுபநிடதங்களா லங்ஙன மோதப்பட்டது. இங்ஙனமாகலின், அவ்வுபநிடதங்களும உத்தரவேதமுமா மளாருமுற்று நடப்பன வன்றி முரணுற்றுக் கிடப்பன வல்ல வென்று அறிந்து கொள்க. அற்றேலஃதாக; அபரசித்தான ஆன்மாவைப் பரசித்திற்குரிய பிரமசத்தத்தால் அவை எடுத்தோதுதல சாலுமோ வெனின்,— பரசித்தான பரப்பிரமம் அபரசித்தான வான்மாவுக்கந்தரியாமியாய் அதுவே தானுமாய் நின் றுபகரித்தலின், அவ்வொற்றுமை பற்றிப் பரப்பிரமநாமத்தாற் சீவான்மாவை அங்ஙனம் அவை யுபசரித்து வழங்கின. ஆகலின், அது சாலப்பொரு மென்க. சிதாசாரியனுங்கிய கண்ணன் பரப்பிரமமான சிவனருட் பெற்றியைச், சிவோகம் பாவனை யொற்றுமைபற்றி, "நானே சடசித்தெல்லா மானேன" என்று தன் பெற்றியாகக் கொண்டு கூறியதூஉம், இத்தன் முறைசாலு மென்க.

அற்றேலஃதங்ஙனமாக; "எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண் மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்னுந் திருக்குறளுரையில, "கோச்சேரமான் யானை

கட்சேய மாந்தரஞ்சேர லிரும்பொறை யென்றவழி, அரச னென்பதோர் சாதியுஞ் சேரமானென்ப தொரு குடியும், வேழ நோக்கினையுடையா னென்ப தொரு வடிவும், சேயென்பதோ ரியற்பெயரும், மாந்தரஞ்சேர லிரும்பொறை யென்பதோர் சிறப்புப் பெயரும், ஒரு பொருளின்கட் சற்பனை யாகலின், அவ்வா றுணராது, நிலமுதல் உயி ரீறாகிய தத்துவங்களின் றொகுதியென வுணர்ந்து அவற்றை நிலமுதலாகத் தத்தங் காரணங்களி னொடுக்கிக்கொண்டு சென்றால், காரண காரியங்க ளிரண்டு மின்றி முடி வாய நிற்பதனை யுணர்தன் மெய்யுணர்வாம்" என் றிவ்வாறு பரிமேலழகியா ருரைத் தது தமக் கனுகூலமென்று இக்காலத்து ஏகான்மவாதிகளு ளொருசாரார் கூறுபவா லெனின்,— சாதி குடி வடிவு பெய ரென்பன மாயாகாரியமான வுடம்பைப் பற்றிய சற்பனை வழக்காதலின், அது பொதுவியல்லென் றுணர்ந்து கைவிட்டுச், சீவான்மா வைத் தத்துவங்களின் வேறாகக்காண்டல் ஒருவற்கு மெய்யுணர்ச்சியாமென்பதே அவ் வுரைக் கருத்தாகலின், அது அவ ரேகான்மவாதக் கொள்கைக்குப் பிரதிகூலமாவதன்றி யாது மனுகூலம் பயக்குமாறில்லை யென்க. ஆண்டு நிலமுத லுயிரீறாகிய தத்துவத் தொகுதியென்றதனால், புருடனு முபாதியாகிக் கழிக்கப்படும் பிறவெனின்,— "சுவை யொளி யூறோசை நாற்றமென் றைந்தின் - வகைதெரிவான் கட்டே யுலகு" என்னுந் திருக்குறளுரையிற் பரிமேலழகியார் மாபூத மைந்து, அவற்றிற்கு முதற்காரணமான தன்மாத்திரை யெனப்படுஞ் சூக்குமபூத மைந்து, அவற்றின் கூறான ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள் பத்து, மான் அகங்கார மன மென்னு மந்தக்கரண மூன்று, இவற் றிற்கெல்லா முதலாகிய பிரகிருதி யொன்று, இவற்றின் கணின்று போக நுகரும் புரு டன் ஒன்றெனத் தத்துவ மிருபத்தைந்து சாங்கியர் கூறுப" வென்றெடுத்துப், "புரு டன் றான் ஒன்றிற் றோன்றாமையானுந் தன்கட் டோன்றுவன வின்மையானுங் கார ணமு மாகான் காரியமு மாகான்" என் றுரைக்கு முகத்தால், அவன் உபாதிமா னன்றி உபாதியாகா னென்பது தோற்றுதலாகலின், புருடனை உபாதியான தத்துவத்தோ டொன் றென வைத்துக் கழித்தல் அவர்க்குக் கருத்தன் றென்க. மற்றுப் புருடனைத் தத்து வங்களோடு சேர்த்துத் தொகை கொண்டது, புருடன் தத்துவ சரீரத்தோடு விரவி நின்று அதன்கூற்றுப் பயனைக்கொள்ளும் பெற்றிநோக்கி யென்க. "எப்பொரு ளெத்தன்மைத் தாயினும்" என்னுந் திருக்குறளிற் 'காரண காரிய மிரண்டுமின்றி முடிவாய நின்றதனை யுணர்தல்' என்றதூஉம், புருடன் றனதுண்மை யுணர்தலையேயாம். புருடன் இங்ஙனந் தனதுண்மை யுணர்வுழிச் செம்பொருட னொக்கசாதாரமா முண்மையினையுந் தெளியுமாக லின், தனதுண்மை யுணர்வே அவற்கு மெய்யுணர்வுமா மென்க. "சிறப்பென்னுஞ் செம்பொருள் காண்பது" "சார்புணர்ந்து சார்புகெட வொழுகின்" எனப் பின்னர்ச் சீவன்முத்தியிற் காண்பானுங் காணப்படுபொருளுமாக வைத்து மெய்யுணர் வொருப் படுத்தியதே, இதற் குறுசான்று மென்க. சாங்கியர் நிரீசுரவாதிகளாகலின், நில முதற் புருடன் காறுந் தத்துவமெடுத்தோதின ரென்றும், அவர் கொண்ட புருடனை சீவான்மாவென்று முணர்க. அற்றேலஃதாக; பரிமேலழகியார் நிரீசுரவாத நிகழ்த்துஞ் சாங்கியநூல் பற்றித் திருக்குறளிற் றத்துவ வாராய்ச்சி செய்யப்புகுந்த தென்னையெ னின்,— சாங்கியம் வைதிகசாத்திரமாய் நின்று பிரகிருதிமாயையைச் சத்தான முத ற்காரணமெனக் கொண்டு பிரபஞ்ச மற்றதன் யதார்த்த காரியமாமென் றெடுத்தோது தலின், பரிமேலழகியார் தத்துவ வாராய்ச்சிக்கு அதனை யோர் கருவியாகக் கொண்டார்; "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண் - மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்று முறுதிக்கட்டுரை மேற்கொண்டென்க. அற்றேல், சாங்கியர் கூறுந் தத்துவ காரண காரியவாத மொப்பிக்கொண்டார், அவர் கூறும் அத்தியாசவாதமு மொப்பிக் கோடற்பாலரெனின்,— சாங்கியர் பிரகிருதிமாயை முதற்காரணத்தில் வித்தின் மரம் போலப் பிரபஞ்சஞ் சத்திமாத்திரையாய்ச் சூக்குமமுற்றிருந்து தூலமாய் வெளிப்படு மெனக்கொண்டது சற்காரியவாதமாகலின், அதனை யொப்பிக்கொண்டார். அவர் கூறும் அத்தியாசவாதஞ் சுருதியொடு முரணுதலானும், யுத்திவிரோதமென்று எல்லாச்சமயத் தாராலு மிகழப்படுதலானும், அதனை யொப்பிக்கொண்டிலர். அத்தியாசவாதஞ் சுருதி யுத்தி விரோதமாமாறு மேலுரைத்தாம்; கடைப்பிடிக்க.

இனிப் "பிறப்பென்னும் பேதைமை" என்ற மூலமலத்தி னியல்பு சிறிது காட்டுதும். மூலமலமாவது பிராகிருத ஞானமே பிறிதில்லை யென்ப ரொருசாரார். ஒருசாரார் ஞானாபாவ மென்பர். ஒருசாரார் தமோகுண மென்பர். ஒருசாரார் மூலப்பகுதியிற் றோன்று மவிச்சையென்பர். ஒருசாரார் மாயை கன்மங்களென்பர். ஒருசாரார் சிவசத்தியென்பர். ஒருசாரார் ஆன்மாவின் குணமென்பர். மலமாவது இவ்வனைத்தினும் வேறாய ஒன்றாய நித்தமாய வியாபகமாய ஞானதிரோதகமாகிய திரவிய மென்பது தொகுத்துக் காட்டுதும். மேற்கூறிய அளவைகளால் ஆன்மாத் தோற்றக்கேடின்றி நித்தமாய வியாபகமாய நிற்பதென்பது துணிடாம். இனி ஆன்மா வுக்குத் தோற்றக்கேடு களுளவாயின், செய்த வினை நசிப்பச் செய்யாதவினை யுண்டா மெனப்பட்டு வினை யிலக்கணத்தோடு முரணும். ஈன்றணிய குழவி தாய் முலைப் பால் பசிப்பிணி தீர்க்கு மருந்தென் றறிந்தத்தன்கண் முயலுதல் காண்டும். அஃதும் மைப்பயிற்சி வயத்தா னுளதாகிய வாசனை யிலவழிக் கூடாது. இனி நித்தப்பொருளை யவயவ முடைத்தெனப்பட் டழிவெய்துவதாகிய ஏகதேச மென்றல் கூடாமையின், ஆன்மா வியாபியென்பதூம் பெறும். பெறவே, அவ்வக் குணங்கள் அவ்வக் குணிக ளின் வேறன்மையின், ஆன்மாவின் குணமாகிய ஞானமும் அவ்வாறே நித்தவியாபக மாதல் பெறப்பட்டது. அறிவாவது ஒன்றனை விடயித்தலே பிறிதன்றாகலின், அங் ஙனம் விடயிப்பதாகிய வறிவு ஒருகா னிகழ்ந்தும ஒருகா னிகழாதும் காலத்தானும் இடத்தானும் ஏகதேசமாய நிகழ்தலுங் காண்டும். அவ்வறிவு செயற்கையா னிங்ஙன நிகழ்தற்குக் காரணமுண்டென்பது பெறப்படுதலின், அது பிராகிருத ஞான முதலியவ ற்று ளொன்றென்றல் கூடாமையின், பாரிசேடிய வளவையான் அவற்றின் வேறாகிய சகசமலம் அத்தன்மைத்தா யுண்டென்பது பெறும்.

அற்றேல், காரணம் பிராகிருத ஞானமுதலியவற்றி னொன்றேயாக; அவற்றின் வேறுண்டென்பதற்குப் பிரமாண மென்னையெனின்,— கூறுதும். கயிற்றை யரவெ னக் காணும் பிராந்தி கண்ணின்கண் யாதானு மோர் குற்றமில்வழி நிகழாமையின் அதுபோலத் தேகமே யான்மா வென் றறிதற்றொடக்கத்துப் பிராந்தி ஞானமும் ஆன்மா வின்க ணொரு குற்ற மில்வழி நிகழாமையின், அக்குற்றமாகிய சகசமலம் பிராகிருத ஞானத்தின் வேறு யுண்டென்பது பெறப்படும். இனி ஞானாபாவமே யது வெனின்,— ஞானத்தின் என்றுமபாவத்திற்கும் அழிவுபாட்டபாவத்திற்கும் ஒன்றினொன்றபாவத் திற்கும் ஒருகாலு மழிவின்மையான் முத்தியென்ப தொன் றிலையாய் முடியும். வீடு பேறுண்மை வேதாகமங்களிற் பெறப்படுதலின், அவற்றொடு முரணாமைப் பொருட்டு ஞானாபாவமாவது ஞானத்தின் முன்னபாவமெனக் கோடல்வேண்டும். வேண்டவே,

ீதமாகிய ஞான முன்னில்லாதொழிதற்கு வேறு காரண முண்டெனப் பெறப்படுதலின், அதுவே சகசமல மெனப்படுமெனக. இனித் தமோகுண முதலிய வொன்றன் காரியமாய இடையே தோன்றி யழிவனவாகலின், அவை யணுதியே ஞான திரோதகமாய ஆன்மாவைப் பந்திக்கமாட்டாமையின், சுத்தமாய் நின்ற வான்மாவை இடையே பந்தித்து நின்றனவெனின், அவை யிடையே பந்திந்தற்குக் காரணம் வேண்டும். காரணமின்றிப் பந்திக்குமெனின், முத்திபெற்றவழியும் பந்திக்குமென்பது முடியுமாகலின், அவற்றின் வேறாய அணுதியே பந்திப்பதாகிய சகசமல முண்டென்பது பெறப்படும். இனி மூலப்பகுதியிற் றோன்று மவிச்சையே யதுவெனின்,— மூலப்பகுதியிற் றோன்று மவிச்சை அணுதியி லான்ம ஞானத்தினைப் பந்தித்ததென்ற லொணமையானும், அது மாயாகாரிய மாகலின், ஞான வியஞ்சகமாவதல்லது ஞான திரோதகமாகாமையா னும், அணுதியே ஆன்ம ஞானத்தினைத் தடைசெய்து நிற்குஞ் சகசமலம் வேறுண் டென்பது பெறப்படும். இனி மாயை கன்மங்கள் ஆன்மாவின் வேறுமாய்ச் சடமு மாயப் பந்தமுஞ் செய்து நிற்றலின், அவையே யமையும்; வேறு மோர் சகசமல முண்டெனக்கோடன் மிகையாமாலோவெனின்,— அவை யங்ஙனமாயினும், ஞான திரோ தக மலல வாகலான், ஞான திரோதகமாகிய மூலமலம் வேறுண்டெனக. இனிச் சிவ சத்தி ஞான திரோதகமாய் நிற்குமெனின்,— சித்தாகிய சிவனது சத்தியுஞ் சித்தாவதன் றிச் சடமாதலின்மையாற் றனக்குப் பகையாகிய சடப்பொருள் சித்தைப் பந்தமுறுத் துவ தன்றிச் சித்துப்பொருள் சித்தைப் பந்தமுறுத்துமா றின்மையானும், உறுத்து மெனின், முதல்வனது பெருங்கருணைக் கிழுக்காகலானும், சடப்பொருளாய்ப் பந்த முறுவிக்குஞ் சகசமலம் வேறுண்டென்பது பெறப்படும். இனி மலஞ் சடமாய் நிற் றலின், ஆன்மாவின் குணமெனக்கோடலே பொருத்த முடைத்தெனின்,— அறியாது கூறினாய்; குணமாயி னிடையே நீங்குதல் கூடாமையானும், ஆன்மா வறிதற்குண முடைத்தாகலின், அறியாமையு மறிவுமாகிய விரண்டு மறுதலைக்குண மொருபொருட் குக் கூடாமையானும், அஃதான்மாவின் வேறாயதோ ரகவிருளாகிய திரவிய மென் பது தெற்றென வுணர்ந்துகொள்க. சிவாதித்தமணிதீபிகையுடையாரு முதலதிகர ணத் திறுதியிற் பயன் கூறுமவழி, ஞானாபாவமே யஞ்ஞான மென்பாரை மறுத்து, மலந் திரவியமென்றும், அணுதிப்பொருளென்றும், மலசத்திகள் பலவென்றும், முத்தி யின் மலசத்திகட்குக் கேடன்றி மலத்துக்குக் கேடின்மையின் அணுதிப்பொருளாதற் கிழுக்கில்லை யென்றும், கடா விடைகளான் விரித்துக் கூறியவா றுண்டுக் காண்க.

அஞ்ஞானமென்னு மகவிருண் ஞானாபாவ மாகாதென்று இவ்வாறு மறுக்கப் படவே, அந்தகாரமென்னும் புறவிருள் ஆலோகத்தின் அபாவமென்பதூஉ மறுக்கப்பட்ட வாறாயிற்று. அதுவுஞ் சிறிது காட்டுதும். ஆலோகத்தி னபாவமே யந்தகாரமென்பார்க்கு, அம்முறை பற்றிச் சுகத்தி னபாவமே துக்கம்; தன்மத்தின் அபாவமே அதன்மம்; சையோகத்தி னபாவமே விபாகமென் றிவ்வாறு கோடல் வேண்டும். அங்ஙனங் கொள்ளாமையால் அவர்க்கு மது கருத்தன்று போலுமென மறுக்க. அன்றியும், ஆண் டொளி யில்லை, இருளுள்ளதென, ஒளியின்மையின் வேறா யிருளொன்னு முணர்வு நிக ழ்தலானும், யாட்டின் கழுத்திற் றூங்கு முலையோ டொக்கும் அபாவத்தாற் செய்யக் கடவதொன்று யாண்டு மின்மையானும், கண்ணொளியைத் தடைசெய்து நிற்பதாகிய விருளை அபாவமென்றல் கூடாமை யறிக. இவ்விருளின் றன்மை வெள்ளிடையி னலரவிழ்த்து நோக்கியவழியு மறைத்தற்றொழி னிகழ்தல்பற்றிப் பரிசேடிய வள

யா னதியப்படும். அற்றேல், நீலவடிவிற்றாய்த் தோன்றுதலின் இருள் காட்சிப் பொருளென்றாற் படு மிழுக்கென்னை யெனின்,— அற்றன்று; துனியிய விருளின்கண் விழித்தவழிப்போலக் கண்ணிமை யிறுக மூடியவழியு மொருதன்மைத்தாய்த் தோன்றுதலின், வேற்றுமை யின்மையான், அது மயக்கவுணர்வேயாமென்பது போதருதலின், விழித்தவழி யவ்வாறு தோன்றுவது மதுபோல மயக்கவுணர்வாவ தன்றி, இருளின் றோற்றமன்றென்பது அனுபவத்தாற் கண்டு கொள்க.

உலகாயதர் செவி முதலிய விடங்களே யிந்திரிய மென்பராகலின், கண்ணென்னு மிடத்தின் வேறாக ஒளிப்பொருளாகு மிந்திரிய முண்டென்பதற்குப் பிரமாண மென்னையெனின்,— செவிடனுக்குச் செவியுளதாகவு மோசை கேளாமையின், அது கேளாமைக்குக் காரணஞ் செவியென்னு முறுப்பின் வேறாயதனை அதிட்டித்து நிற்கு மிந்திரிய மில்லாமையே யன்றிப் பிறிதின்மையாற் செவியென்னு முறுப்பு இந்திரியமாகாமை எல்லார்க்கும் விளங்கக் கிடந்தது. இதுபற்றி யேனை யிந்திரியங்களும் அவ்வவ் விடங்களின் வேறாதல் கண்டுகொள்க. ஞானேந்திரியங்க ளைந்தும் அறிதற் கருவிகளாகலின், சாத்துவிகாகங்காரத்திற் றோன்றியனவாம். கண்ணிந்திரியம் ஒளிக் கருவியாகலின், உருவத்தை யறிவதாம். இது ஆன்மாவின் ஞானசத்தியா லதிட்டிக்கப்பட்டுப் பொருள்களை விசேடண விசேடிய வியல்புபற்றி அறியுமா றின்றி நிருவிகற்பமா யறியுங் கருவியென் றுணர்க. இது ஏனை ஞானேந்திரியங்களுக்கு மொக்கும். காட்டு மொளியின் வேறாய்க் கண்ணுக் கொளிக்குண முண்டென்றற் கேது வென்னை? கண்ணுக் கொளிக்குண முண்டெனின்,— மின்மினித் துணையாயினுந் தானே விளங்குதல் வேண்டுமாலெனின்,— ஆகாயத்தின் குணந்தாகிய சத்தகுண முரசு குணில் சையோக முதலிய வியஞ்சகங்களான் விளக்கப்பட்டுழி விளங்கி அல்லுழி விளங்காதொழிதலே யன்றித் தினைத்துணையாயினுந் தானே விளங்குமா றின்றென்பதுபற்றி வியஞ்சகத்தி னிங்கொலி வடிவாற் றோன்று மவ்வோசையை ஆகாயத்தின் குணமன்றென்பார் யாருமில்லை. அதுபோலக் கண்ணின் குணந்தாகிய வொளியும் வியஞ்சகமாகு ஞாயிற்றி னொளிமுதலிய வுள்வழி விளங்கி அல்லுழி விளங்காமை மாத்திரையே யிறிதில்லை யாகலான், அதனைக் கண்ணின் குண மன்றென்றல் அறிவிலோர் கூற்றேயா மெனவும், அக்கண்ணொளி தன்னை விளக்குதற்குரிய வியஞ்சகப்பொருள் ஏகதேசமாயின் ஏகதேசத்து விளங்கியும் வியாபகப்பொருளாயின் வியாபகமாய் விளங்கியு நிற்கு மியல்பிற்றெனவு முணர்க. இனிக் கண்ணுக் கொளியில்லை, ஞாயிற்றினொளி முதலியனவே கண்ணின்கணின்று காண்டல் வியாபார நிகழ்த்துமெனின்,— அங்ஙனமாயின், ஞாயிற்றினொளி முதலியன கண்ணின்கணின்றே காண்டல் வியாபார நிகழ்த்துமென்னு நியமம் வேண்டா; உடம்பினுள் யாண்டாயினு மோரிடத்தைப்பற்றி நின்றுங் காண்டல் வியாபார நிகழ்த்துமென் றொழிக. அற்றேல், அவ்வாறு ஒளியுடைத்தாகிய கண்ணிந்திரியந் தன் றொழிற்பாடு நிகழ்த்தற்குப் பிறிதோ ரொளியி னுபகாரத்தை யின்றி யமையாதவா றென்னையெனின்,— அங்ஙனமாயினுங் கண்ணிந்திரியந் தூலவொளியாகலின், தமோகுணகாரமான இருளென்னும் பகைப்பொருளின் சத்தியான் மடங்கிக், காண்டல் வியாபார நிகழ்த்துதற்கு அக்கியென்னும் பூதத்தின் கூறான ஞாயிற்றினொளி விளக்கொளி முதலிய சூக்குமவொளி யுபகாரத்தை வேண்டற்பால தாகின்றதென் றுணர்க. ஆசிரியர் சிவஞானயோகிகள் சிவஞானமாபாடியத்துக் கண்ணிந்திரிய வியல்பும் அதன் குற்ற சகசமான விருளியல்பும் அதன் றோற்றமுறையும் வாதி

கள் கூறும் பூர்வபக்கங்களைத் மிக விரித்துரைத்தார். அது சிவஞானபோதத்துப் பிரமாணவோத்தி னிரண்டாம்பாதத் திரண்டா மதிகரணத்துக் காண்க. அத்துவித சைவசித்தாந்த வாசாரியார்கள் இப்புறவிருளை அகவிருளிற்கும் கண்ணை ஆன்மாவிற்கும் ஞாயிற்றினைச் செம்பொருளாகிய சிவத்திற்கும் உவமானமாக எடுத்தோதி அம்முப்பொருண் மெய்ப்பொற்றி தெருட்டுவர். அது சிவஞானபோத முதலியவற்றுட் காண்க.

இனி நாயனார் காமத்துப்பாலில், "தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிது-கொல் தாமரைக் கண்ணா னுலகு" என்று ஓதியருளினார். பரிமேலழகியார் "தாமரைக் கண்ணா னுலகு" என்பதற்குத் "தவயோகங்களாற் செங்கண்மா லுலகு" மென்று பொருளுரைத்தார். இதனானே செங்கண்மா லுலகெய்தி வாழ்தலே வீடுபேற்றென் பது நாயனார் கருத்தாகாதோ வெனின்,— ஆகாது, என்னை? செங்கண்மாலுலகு விரசைநதியடுத்து மேற்பக்கத்து ளொன்றாய் விளங்கு மேகதேச விடமாதலானும், மாயாகாரிய மாதலானும், அஃது காமிய கன்ம தவயோக முழப்பா லுறும் பதமுத்தி யாவதல்லது நிட்காமிய மெய்ஞ்ஞானமுடையா ரெய்தும் நிரதிசய வியாபக பூரண வீடுபேறாகாமையின். செங்கண்மால் குணமூர்த்திகளு ளொருவனாய் நிவிர்த்திகலையி லடங்கிய தத்துவபுவனங்களைக் காக்குங் கடவுளென்பது மேற்காட்டியவாற்றானினிது விளங்குதலின், அக்கடவுள் ஓர் வகைப் பரபோக மருளுங் குணமூர்த்தி யன்றி நிர்க்குண சொரூப வீடுபேறருளும் பரப்பிரம முதற்பொருளாகா மெனக் அல்லதூஉம், பாஞ்சராத்திரிகள் செங்கண்மால் அப்பிராகிருத மங்கல திவ்விய தேகியாய் மேலுலகி லுறைவனென்று கூறுதலின், மாயாகாரியமான பஞ்சகோசமும் நீங்கிய சின்மய நித்த வியாபக சொரூபானந்த வீடுபேற்றினை அவ னருளுவ னென்றல் சிறிது மியையா தெனக் இனி "நிரதிசய வின்பத்திற் சிறிய நீ இச்சிற்றின்பத்திற் கின்னேயாதல் சாலா தென்ற பாங்கற்குத்த தலைவன் சொல்லிய" தென்று அத்திருக்குறளுக்குப் பரிமேலழகியா ருரைத்ததனால், இவ்வுலகவின்பத்தினை நோக்க அச்செங்கண்மா லுலகவின்பம் நிரதிசய மென்றவாறேயாம் பரமுத்திப்பேறு, உருவ வருவ வுலகெலாம் வெறுத்த சிதானந்த வாழ்வென்பது, "குறித்தடியி னின்றடற் குணமெட்டுச் சித்தி கோசனத்தன் முதலவாழ்வு குலவுபத மெல்லாம் - வெறுத்துநெறி யறுவகையு மேலொடுக்கி முடங்க வெறும்பொய்யென் றினைத்திருக்க மேலொடுக்கி மில்லா - னிறுத்துவதோர் குணமிலான் றனையொரு வருக்குக் கினிப்பரியா ரென்றுமிலா னோப்படவந் தருளே - பொறுப்பரிய பேரன்பை யருளியதன் வழியே புரிந்துநுவ னெங்குமிலாப் போகத்தைப் புரிந்தே" என்னு மத்துவித சைவசித்தாந்தத் திருவாக்கினானறிக. இதுவே பரிமேலழகியார்க்கு முடம்பாடாமாறு, "மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார் - நிலமிசை நீடுவாழ் வார்" என்னுந் திருக்குறளில் "நிலமிசை" யென்பதற்கு, "எல்லா வுலகிற்கு மேலாய வீட்டுலகின்க" ணென் றுரைத்தவாற்றா னுணர்க. சின்மய வீடுபேற்றினை வீட்டுலகென்றது, இறைவனருள்சேர்தலை "இறைவனடி சேர்தல்" என்றதுபோல வந்தோ ருபசாரவழக்கு.

இத்துணையுங் கூறியவாற்றால் ஏகான்மவாதிகள் கூறு நிருபசரித வைக்கிய மும், பாஞ்சராத்திரிகள் கூறு நாராயணசாரூபமும், நாயனார் கருதிய வீடுபேறாகா வென்பதூஉம், அத்துவித சித்தாந்திகள் கூறுஞ் சிவனடிசேர்த லென்னும் உபசரித வைக்கிய சிவசாயுச்சியமே அவர் கருதிய வீடுபேறென்பதூஉம், தண்பொருள்ளாயி னமை காண்க. தெய்வத்திருவருள் கைவந்து கிடைத்துப் பரமஞானானுபூதி கைகண்ட

சமயாசாரியர் நால்வரும், "சொற்றுணை வாழ்க்கை துறந்துன் திருவடியே யடைந்தோம்" "கோமாற்கே நாமென்று மீளாவாளாயக் கொய்ம்மலர்ச்சேவடியிணையே குறுகினோமே" "இவன்மற் றென்னடி யானென விலக்குஞ் சிந்தை கண்டுநின் திருவடி யடைந்தேன்" "நின்னருட் டாளிணைக்கீழ் - மறிவறியாச் செல்வம் வந்துபெற்றார்" "தையலிடங் கொண்டபிரான் றன்கழலே சேரும்வண்ண-மையனெனக் கருளியவாறு" "கரணங்க ளெல்லாங் கடந்துநின்ற கறைமிடற்றோன் - சரணங்களே சென்று சார்தலுமே" "காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித் - தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி" எனறிங்ஙன மருளிச்செய்யுமுகத்தால் சுத்தாத்துவித சைவசித்தாந்த உபசரித வைக்கிய சிவசாயுச்சியமே மெய் வீடுபேறென்பது நோக்கியருளினா ரெனக. "செவ்வேற சேஎய் - சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு" என றருளிச்செய்தலின, நக்கீரனார்க்கும் அதுவே கருத்தாயவாறு காணக.

இக்காலத் தேகான்மவாதிகளுட் சிலர் "நவமாய செஞ்சுடர் நல்கலுமே நாம நற்று - சிவமாய வாபாடி" "சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட-வத்தன" "சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந் திருப்பெருந் துறையுறை சிவனே" "அன்றி சிவரூப மாகியவாறே" "ஏகனாகி யிறைபணி நிற்க" "ஏகமாய நின்றே யிணையடிக டாமுணர" என்றற்றொடக்கத் துபசரித சுத்தாத்துவித வைக்கிய சிவசாயுச சியங்கூறுஞ்சுருதிகள், தம்தேகான்மவாத நிருபசரித கேவலாத்துவிதவைக்கியம பேசின வென்று பிதற்றுவர். பரமசிவன பெத்த முத்தி யிரண்டினும ஆன்மாவிற்கு நாயனென்னும் ஆன்மாப் பரமசிவனுக்கு என்று மீளா வடிமை யென்றுங் கூறி, இருளும வெளியும் போலும் பேதமும் பொன்னு மணியும் போலும அபேதமுஞ் சொலலும பொருளும் போலும் பேதாபேதமும் பூர்வபக்கமாக வொதுக்கி, முத்திறமுந் தனக கடங்கக்கொண் டத்துவிதஞ் சாதிக்கும வைதிக சைவசித்தாந்தச் சுருதிகள், தமக்கனுகூலமா மென்று அவர் அலைத்தமைத்த தமமுட கொண்டு போதறல, "மெய்ச்சோதி தயங்கு சிறுகொள்ளி தனனை விரகினமை கொண்ட குருகாா - கச்சோத மென்று கருதிக் குடமபை தனிலுய்த்து மாணட கதை" யாய முடியு மெனக. மேலும விரிக்கிற பெருகும்.

முதற்றிருக்குறள் விருத்தி யொருவகையான முடிந்தது.

உத்தரவேதம் பாயிரமுளப்பட அறத்துப்பால பொருட்பால் காமத்துப்பாலென நான்கு பகுதித்தாம். அவற்றுள், பாயிரங் கடவுள்வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன்வலியுறுத்த லென்னு நான்கதிகாரங்க ளுடைத்து. அறத்துப்பால இல்லறவிய றுறவறவியலென விரண்டியல்க ளுடைத்து. இல்லறவியல இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணைநலம, புதல்வரைப்பெறுதல், அன்புடைமை, விருந்தோம்பல, இனியவை கூறல், செய்ந்நன்றியறிதல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில்விழையாமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனிலசொல்லாமை, தீவினையச்சம், ஒப்புரவறிதல, ஈகை, புகழ எனனு மிருபஃததிகாரங்க ளுடைத்து. புகழ் இல்லறத்தார்க்குளதாம் இம்மைப்பயனாதலின, இல்லறவியலின் இறுதிக்கட் டந்தோதப்பட்டது. துறவறவியல் விரத ஞானமென விரண்டாம. விரதம் அருளுடைமை, புலான்மறுத்தல், தவம், கூடாவொழுக்கம், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னாசெய்யாமை, கொல்லாமை யென்னும ஒன்பததிகாரங்களுடைத்து. ஞானம் - நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்த லென்னு நான்கதிகாரங்க

னுடைத்து. ஊழ் அறத்துப்பாலின் இறுதிக்கண்ணதாகிய வோரதிகாரம் இது பொருள் இன்பங்களிரண்டற்கும் பொதுவாய் ஒன்றனுள் வைக்கப்படாமையானு மேற்கூறிய வறத்திற்கு முதன்மை யுடைமையானு மறத்துப்பாலின் இறுதிக்கண் வைக்கப்பட்டது. பொருட்பால் அரசியல் அங்கவியல் ஒழிபியலென மூன்றியலக ளுடைத்து. அவற்றுள், அரசியல்— இறைமாட்சி, கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை, குற்றங்கடிதல், பெரியாரைத்துணைக்கோடல், சிற்றினஞ்சேராமை, தெரிந்துசெயல்வகை, வலியறிதல், காலமறிதல், இடனறிதல், தெரிந்துதெளிதல், தெரிந்துவினையாடல், சுற்றந்தழால், பொச்சாவாமை, செங்கோன்மை, கொடுங்கோன்மை, வெருவந்தசெய்யாமை, கண்ணோட்டம், ஒற்றாடல், ஊக்கமுடைமை, மடியின்மை, ஆள்வினையுடைமை, இடுக்கணழியாமை யென விருபத்தைந் ததிகாரங்களை யுடைத்து. அங்கவியல்— அமைச்சு, சொல்வன்மை, வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினைசெயல்வகை, தூது, மன்னரைச்சேர்ந்தொழுகல், குறிப்பறிதல், அவையறிதல், அவையஞ்சாமை, நாடு, அரண், பொருள்செயல்வகை, படைமாட்சி, படைச்செருக்கு, நட்பு, நட்பாராய்தல், பழைமை, தீநட்பு, கூடாநட்பு, பேதைமை, புல்லறிவாண்மை, இகல், பகைமாட்சி, பகைத்திறந்தெரிதல், உட்பகை, பெரியாரைப்பிழையாமை, பெண்வழிச்சேறல், வரைவின்மகளிர், கள்ளுண்ணாமை, சூது, மருந்து என முப்பத்திரண்டதிகாரங்களை யுடைத்து. ஒழிபியல்— குடிமை, மானம், பெருமை, சான்றாண்மை, பண்புடைமை, நன்றியில்செல்வம், நாணுடைமை, குடிசெயல்வகை, உழவு, நல்குரவு, இரவு, இரவச்சம், கயமை யென பதின்மூன்றதிகாரங்களை யுடைத்து. காமத்துப்பால் களவியல் கற்பியலென விரண்டியல். களவியல்— தகையணங்குறுத்தல், குறிப்பறிதல், புணர்ச்சிமகிழ்தல், நலம்புனைந்துரைத்தல், காதற்சிறப்புரைத்தல், நாணுத்துறவுரைத்தல், அலரறிவுறுத்தலெனனு மேழதிகாரங்களை யுடைத்து. கற்பியல்— பிரிவாற்றாமை, படர்மெலிந்திரங்கல், கண்விதுப்பழிதல், பசப்புறுபருவரல், தனிப்படர்மிகுதி, நினைந்தவர்புலம்பல், கனவுநிலையுரைத்தல், பொழுதுகண்டிரங்கல், உறுப்புநலனழிதல், நெஞ்சொடுகிளத்தல், நிறையழிதல், அவர்வயின்விதும்பல், குறிப்பறிவுறுத்தல், புணர்ச்சிவிதும்பல், நெஞ்சொடுபுலத்தல், புலவி, புலவிநுணுக்கம், ஊடலுவகை யென்னும் பதினெட்டதிகாரங்க ளுடைத்து. இ[illegible] பரிமேலழகியா ரியற்றிய வுரையே யவற்றினு ளெல்லாரு[illegible] பரிமேலழகியார் திருக்குற[illegible] சொற் சுருங்கிப் பொருள் விளங்கி உள்ளுந்தோறு முள்ளொளிரு[illegible] பரிமேலழகியார் வடமொழிக்கடலுந் தென்மொழிக்கடலு நிலைகண்டுணர்ந்[illegible] பொருந்தி யுலகங் கைக்கொண்டு போற்றத் [illegible] "[illegible] திருவுக்கோ" என்னு [illegible] பரிமேலழகியார் [illegible] திருக்குறளுரை சிறந்த நிதரிசனமாம். தமிழாசிரிய ருள்ளு[illegible] பரிமேலழகியா ருரை [illegible] முன்னே ருரைகளு [illegible] முரையும் பின்னு [illegible] ருரைகளு மாம். ஆசிரியர் [illegible] பரிமேலழக ருரைக்கருத்தைத் தம்முரைக்குள் போற்றி [illegible] மேன்மை யறிவுறுத்திட்டார். ஆயினும், பாயிரவிருத்தியினும், சூத்திரவிருத்தியினும், அவர் சொன்முடிவு பொருண்முடிவுகளுள் ஒரோவொன்றை [illegible] வேறு கிளையிட்டனர். அவை ஈண்டைக் காட்டலுறின் விரியும். பாயிரவிருத்தியினுஞ் சூத்திரவிருத்தியினுங் காண்க.

பரிமேலழகியாருரை இவ்வாறு சிறந்ததாலன்றே, "பாலெல்லா நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள - நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ - நூலின் - பரிந்த வுரையெல்லாம் பரிமேலழகன் - றெரிந்தவுரை யாமோ தெளி" என ஒருவர் அதன்பெருமை அவ்வா றெடுத்துப் போற்றினா ரென்பது.

திருவள்ளுவமாலை.

திருவள்ளுவமாலை திருக்குறளின் சிறப்புப்பாயிரம். இது அசரீரி, நாமகள், இறையனார், உக்கிரப்பெருவழுதி, கபிலர், பரணர், நக்கீரர், மாமூலனார், கல்லாடர், சீத்தலைச்சாத்தனார், மருத்துவன்றாமோதரனார், நாகன்றேவனார், அரிசில்கிழார், பொன்முடியார், கோதமனார், நத்தத்தனார், முகையலூர்ச் சிறுகருந்தும்பியார், ஆசிரியர் நல்லந்துவனார், கீரந்தையார், சிறுமேதாவியார், நல்கூர்வேள்வியார், தொடித்தலைவிழுத்தண்டினார், வெள்ளிவீதியார், மாங்குடிமருதனார், எறிச்சலூர் மலாடனார், போக்கியார், மோசிகீரனார், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், மதுரைத் தமிழ்நாகனார், பாரதம் பாடிய பெருந்தேவனார், உருத்திரசன்மகண்ணர், பெருஞ்சித்திரனார், நரிவெரூஉத்தலையார், மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர்கிழார், மதுரை அறுவைவாணிகர் இளவேட்டனார், கவிசாகரப்பெருந்தேவனார், மதுரைப் பெருமருதனார், கோவூர்கிழார், உறையூர் முதுகூற்றனார், இழிகட்பெருங்கண்ணனார், செயிர்க்காவிரியார் மகனார் சாத்தனார், செயலூர்க் கொடுஞ்செங்கண்ணனார், வண்ணக்கஞ்சாத்தனார், களத்தூர்கிழார், நச்சுமனார், அக்காரக்கனிநச்சுமனார், நப்பாலத்தனார், குலபதி நக்கனார், தேனீக்குடிக்கீரனார், கொடிஞாழன்மாணிபூதனார், கவுணியனார், மதுரைப்பாலாசிரியனார், ஆலங்குடிவங்கனா ரென்னு மைம்பத்துமூவருந் தனித்தனி யியற்றியருளிய ஐம்பத்தைந்து திருவெண்பாக்களுடையது. இவ்வைம்பத்து மூவருள், அசரீரி யாண்டு நீக்கமற நிறைந்து நிற்கு முதற்றெய்வம். நாமகள் - சகல கலாரூபியான வாணி. இறையனார் - ஆலவாயி லவிர்சடைக்கடவுள். உக்கிரப்பெருவழுதி - கடைச்சங்கத்தாரோடிருந்து [illegible] திருக்குறள் கேட்ட பாண்டியன். கபிலரெழுவாயாக ஆலங்குடி வங்கனா ரீறாயுள்ள [illegible] னோர் கடைச்சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மர். நக்கீரர் [illegible] கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் நாற்பத்தொன்பதின்மருள் [illegible] தோதிய சேந்தம்பூதனார், பெருங்குன்றூர்கிழார், இளங்கீரனார் [illegible] ரென்னு மியற்பெயருடையார் திருவள்ளுவமாலையிற் [illegible] மாறு பாடுபோலு மென்று மலையற்க, இவ்வியற்பெயருடையாரே ஆண்டு வேறியற்பெயரா லங்ஙனம் வழங்கப்படுகின்றமையின்.

முதுமொழிவெண்பா.

இது உத்தரவேத வதிகாரங்களிலுள்ள வொவ்வொரு திருக்குறண் முதுமொழிகளுக்கு எடுத்துக்காட்டிலக்கியமாக வியற்றப்பட்டமையால், முதுமொழிவெண்பாவென்னும் பெயர்த்தாயிற்று. இது சோமேசரை முன்னிலையாகக்கொண்டு பாடப்பட்டமையின் சோமேசர் முதுமொழிவெண்பா வென்றும் வழங்கப்படும். இஃதியற்றினார் ஆசிரியர் சிவஞானயோகிகள். இதனுட் டிருக்குறண் முதுமொழிகளு மெடுத்துக்காட்டிலக்கியங்களுந் தம்முளொத் தொழுகு [illegible], திருவள்ளுவநாயனாரே மதித்து [illegible] திருக்குறளுக் கெடுத்துக்காட் டிலக்கிய மருளிச்செய்தா [illegible]. இனி அரங்கேசர்வெண்பா முருகேசர்வெண்பாவென்று பெயரிட்டுச் சிலர்பாடியவை, திருக்கு

றளு மெழிக்குக்காட்டுந் தம்முளியைபுபெறாது, வேறுவேறெனத் தொடுத்தலாயு மற்றொன்றாய விரிந்து கிடப்பன, போலிநூல்களாம்.

இனி ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி என்னுஞ் செந்தமிழ்நூல்கள் திருக்குறள்போல நீதியுரைக்கும் பொய்யாமொழிகளாதலின், அதனோடொப்ப வைத்துப் போற்றற்பாலனவாம். இவை ஔவை திருவாய்மொழிகள்.

கடைச்சங்கவிலக்கியம்.

நற்றமிழ்ப் பாண்டி நன்னாட்டு நான்மாடக்கூடன் மாநகரில் அங்கயற்கண்ணியோடு அமர்ந்து வீற்றிருக்குந் திங்களஞ் சொழுந்தணிந்த சிவபிரானருளிய சங்கப்பலகை வீற்றிருந்து தமிழாராய்ந்த நக்கீரனார் முதலிய நல்லிசைப்புலவரும் அவர்ப் பொருவுறாவும் பிறரு மியற்றிய நற்றமிழ்நூல்கள்: பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கென்னும் பெயரால் வழங்கப்படும். நக்கீரர் முதலிய கடைச்சங்கப் புலவர் அகத்தியமென்னு முதனூலினையுந் தொல்காப்பிய முதலிய அதன் வழிநூல்களையும் வழிகளாகக்கொண்டு முத்தமிழ் நன்குணர்ந்தாராய்ந்து செந்தமிழிலக்கியம் பல செய்திட்டார். அவரியற்றிய அந்தச் செந்தமிழிலக்கியங்கள் சொல்வளம் பொருள்வளந் நிறைமிக்க கற்போர் நெஞ்சங் கவர்ந்து மேன்மேலோதோறும் விழைவு நானிலச் செவியமிர்தாய் இப்பொழுது மிக விளங்குவன. பிற்காலத்து நூலு முரையுந் தமிழுலகம் பெரும்பயன்செய்து தமிழாசிரியர் பெருமை பெறுதற்குச் செந்தமிழ்ப்பிரமாண வரம்பாய நிலவாநின்றன. இந்தச் சங்கச் செந்தமிழிலக்கியங்களெனின்,— அவற்றின் றெய்வச் சொற் பொருட் சிறப்பு இப்பரிசிற்றென்று முற்ற வெடுத்தியம்பல எளிதன்று.

பத்துப்பாட்டு.

திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன பத்துப்பாட்டாம். திருமுருகாற்றுப்படை முதலிய இப்பத்தும், அறம் பொருளின்பம் வீடென்னு முறுதிப்பொருணான்கனு ளொரோவொன்று நுதலியனவாயும், நல்லிசைப்புலவர் நாட்டியனவாயும், அகவற்பாவிலக்கண மொத்தனவாயும், ஒற்றுமை யுறுதலின், அவற்றைச் சங்கத்தார் பத்துப்பாட்டெனக் கோத்து ஒருங்குகூட்டினர். இவற்றுள், திருமுருகாற்றுப்படை உறுதிப்பொருணான்கனு ளிறுதிக்கணதாய சிறந்த வீடுபேறு நுதலுதலின், அதனை ஏனை யொன்பது பாட்டுக்குஞ் சிரத்தானமாக்கி, முதற்கட் கோத்திட்டார். திருமுறை செய்தருளிய நம்பியாண்டார்நம்பி இது வீடுபேற்றுறுதிப் பெரும்பயன் கூறுந் தெய்வப்பாட்டாதலோர்ந்து பதினோராந்திருமுறையி லெடுத்துக் கோத்துப் போற்றினார். இது கோத்தார் சங்கப்புலவரென்பது, நச்சினார்க்கினியர் மலைபடுகடாத்துள் "தீயி னன்ன வொண்செங் காந்தள்" என்னுந் தொடர்க்கு எழுதிய வுரையா னறிக.

திருமுருகாற்றுப்படை—இது மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியருளியது, வீடுபேறு வேண்டினானோரிரவலனை வீடுபெற்றானொருவன் முருகக்கடவுள்பால் ஆற்றுப்படுத்ததைப் பொருளாகக்கொண்டது. முருகாற்றுப்படை யென்பது முருகனிடத்து ஆற்றுப்படுப்பது என்றாம். முருகு என்னும் பண்புமொழி பண்பிமேனின்றது. ஆண்டை-ஐ-வினைமுதல்விகுதி. இது முருகக்கடவு டிருப்பரங்குன்றம், திருச்சீரலை

வாய், திருவாவினன்குடி, குன்றுதோறாடல், திருவேரகம், பழமுதிர்சோலையென்னு மாறு படைவீடுகளிலும் ஊர்கொண்ட சீர்கெழு விழவு முதலியவற்றிலும் வீற்றிருப்பனைக் கூறி அக்கடவுள்பால் ஆற்றுப்படுக்கும். இது புறத்திணையியலுள் "தாவினல்லிசை" யென்னுஞ் சூத்திரத்துள் "ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப் - பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச் - சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்" என்பதனுட் சந் தழுவைப் பொருநரொருவன், [illegible] பெருமையுடையாக, [illegible] மாறு வழிப்படுத்துக் கூறுமென்பது பற்றிச் செய்யுள் செய்தவாறு [illegible] ஒரு பற்றுமற்று அருவாயது [illegible]. இதன் "உற்ற வாக்கையி னுறுபொரு ணறுமலர் எழுதரு நாற்றம் போல - பற்றலாகா பரம்பொருள்" என வுண்மை யுணர்ந்தோர் கூறியருளியவாறு [illegible]. மாநிரு ஞாலத்து மறைமுதற் கடவுள் பூசையின் பயன் [illegible] வரை மலைக்குகையிற் [illegible] அன்ன திறமுடையார் [illegible] தேடித் தனை அனைத்துக்கொண்டு [illegible] சிறைப்படுத்தப் [illegible] துன்னி நீராடுவான் பு-க, பூதகிறைப்படுத் தாழுமை [illegible], நக்கீரனார் இத் திருமுருகாற்றுப்படையினைப் பாட, முருகக்கடவுள் இடையே [illegible] கொண்டருளிச் செவ்வேலைவிடுத்து அப்பூதத்தினைச் செற்று நக்கீரனாரை [illegible] வரையு முய்யச் செய்தருளினர். இவ்வரலாறு [illegible] கத்துக் காண்க. இதனைப் பூரணமாகப் [illegible] முருகக்கடவுளைச் சிந்தனைக்கிலக்கு [illegible] சித்தத்தோடு நித்தலும் பாராயணஞ்செய்வார், [illegible], கொழிதமிழ்ப்புலமை [illegible] செழுமையும், [illegible] மாசறப் பெறுதலும், அம்முருகக்கடவுள் [illegible] கூடுதலும், ஒருதலையாக [illegible] பாடாண்டினையுட் பிறபில [illegible] மூன்றனுள், [illegible] டென றறிக. கொடிநிலை [illegible] சுடர் மண்டிலம். [illegible] இம்மூவகைத் தெய்வமும் [illegible] நிலை கந்தழி வள்ளியென்ற-வந்நீங்கு [illegible] தொடு கணணிய வருமே" என்னும் புறத்திணையியற் சூத்திரத் [illegible]. [illegible] சிறப்பு பிறபிறப்பில் பெறுதி.

பொருநராற்றுப்படை— இது சோழன் கரிகாற்பெருவளத்தானை முடத்தாமக் கண்ணியார் பாடியது; பரிசில்பெறல்வேண்டிய பொருநரொருவனைப் பரிசில்பெற்றதொரு பொருநன் சோழன் கரிகாற்பெருவளத்தானிடத்து ஆற்றுப்படுத்தலைப் பொருளாகவுடையது. பொருநர் ஏர்க்களம் பாடுவோர் போர்க்களம் பாடுவோர் பரணி பாடுவோரெனப் பல திறத்தர். அவருள் ஈண்டுக் [illegible] போர்க்களம் பாடுவோன். இப்பாட்டுக் கரிகால் வளவனை [illegible], பிறப்பு, நாட்டுவளம், கொடைநலம் [illegible] கூறும். இப்பாட்டின் "அறாஅ யாணர் அகன்றலைப் பேரூர்ச் - சாறுகழி வழிநாட் சோறு நசையுறாது - வேறுபுல முன்னிய விரகறி பொருந" என முன்னிலைப் பொருநனையா னெடுத்து, "வெண்ணிற [illegible] வெருவரு [illegible] - [illegible] சரி

காலை வளவன் ருணர்ந்தழன் மருங்கி னுறுப்பு குறைந்த - தொழுதுமுன் னிற்குவி ராயின" என முன்னிலைப்பன்மையான் முடித்தது, "முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி - பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே - யாற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும்" என்னு மெச்சவியற் சூத்திர விதிபற்றி யென்பது. இங்ஙனம் பொருநர் பாணர் விறலியர் என்றிவரை யாற்றுப்படுத்தற்கு விதி, "கூத்தரும் பாணரும் பொரு நரும் விறலியு - மாற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப் - பெற்ற பெருவளம் பெறாஅ ரறிவுறீஇச் - சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்" என்பது. இதன்கண், "ஆசிரிய நடைத்தே வஞ்சி" என்பதுபற்றி வஞ்சியடியும் வந்தன. இது பரிசில் வேண்டிய பொருநனைப் பரிசில் பெற்றுவந்தொருவன் அது வழங்குதற்குரியா னின்னனென் றாற்றுப்படுத்தலின், மக்கட் பகுதியாகிய பாடாண்பாட் டென்றுணர்க.

சிறுபாணாற்றுப்படை—இது ஏறுமாநாட்டு நல்லியக்கோடனை இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது. பரிசில்பெறவேண்டிய பாணனொருவனைப் பரிசில்பெற்று வந்தொருவன் ஏறுமாநாட்டு நல்லியக்கோடன்பால் ஆற்றுப்படுத்தலைப் பொருளாகக் கொண்டது. பாணனெனினும் பாடினோனெனினு மொக்கும். பாணர் இசைப்பாணர் யாழ்ப்பாணர் மண்டைப்பாணர் என்பல்திறத்தர். இப்பாட்டிற் "பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பி - னின்குரற் சீறியா ழிடவயிற் றழீஇ - மைவளம் பழுநிய நயந்தெரி பாலைக் - கைவல் பாணமகன் கடனறிந் தியக்க - வியங்கா வையத்து வள்ளியோர் நசைஇத் - தனிகூ ரவலமொடு துயராறுப் படுப்ப - முனிவிகந் திருந்த முதுவா யிரவல" என வருதலின், இவன் யாழ்ப்பாணனென வறிக. இப்பாட்டு நல்லியக்கோடன் விதரணமும், அவனகர்களின் வளமும், அவனூரின் சிறப்பும், அவன் சொல்லியிருப்பும், எழுவகை வள்ளல்களின் வரலாறும், பிறவும், கூறும். இது பரிசில் வேண்டிய பாணமகனொருவனைப் பரிசில்பெற்றொருவன் அது வழங்குதற்குரியானின்னனென்று ஆற்றுப்படுத்தலின், மக்கட்பகுதியான பாடாண்பாட்டென்றறிக.

பெரும்பாணாற்றுப்படை— இது தொண்டைமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது. பரிசில் வேண்டிய பாணனொருவனைப் பரிசில் பெற்றொருவன் தொண்டைமா னிளந்திரையன்பா லாற்றுப்படுத்தியதைப் பொருளாகவுடையது. இவன் தொண்டைக்கொடியால் யாத்து விடப்பட்டுத் திரையாற் றருதலின், தொண்டைமானிளந்திரைய னெனப்பட்டான். அது "இருநிலங் கடந்த திருமறு மார்பின் - முந்நீர் வண்ணன் பிறங்கடை யன்றோன் - திரைதரு மரபி னுரவோ னும்பல்" என இப்பாட்டின் வருதலானறிந்துகொள்க. புறங்கடையென்ப பாட லொத்தவாறுமுள. இப்பாட்டுத் தொண்டைமானிளந்திரைய னுடைய நானில வளத்தினைப் பெருக்கினியையும் அவன் காஞ்சிநகரிருப்பும் வண்மையு மீக்கூறும். மேலதைச் சிறுபாணாற்றுப்படை யென்றமையின் இதனைப் பெரும்பாணாற்றுப்படை யென்றும் வழங்கின்றார், அடிகளின் சிறுமை பெருமைநோக்கி யென்பர். இது பரிசில் வேண்டிய பாணமகனொருவனைப் பரிசில் பெற்றொருவன் அது வழங்குதற்குரியானின்னனென்று ஆற்றுப்படுத்தலின், மக்கட்பகுதியான பாடாண்பாட்டென்றறிக.

முல்லைப்பாட்டு— இது காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மகனார் நப்பூதனார் பாடியது, தலைமகள் பகைமேற் சென்ற தலைவனை வருங்காறுங் கற்பாற்றியிருந்தாட்குத் தலைமகன் வந்தது கண்ட தோழிமுதலிய வாயில்கள் தாமுட்கூறு தலைப் பொருளாக வுடையது. இது தலைவி தனித்திருக்கும் பொறுதியுங் கார்ப்பெ

தியும் பகைவர் அயர்ப்பெற்றியுந் தலைமகன் விறலு மிக்கூறும். "செலவிடை யழுங்கல் செல்லாமை யன்றே—வன்புறை குறித்த றவிர்ச்சி யாகும்" என்ற தொல்காப்பியர் கருத்திற்கேற்ப நப்பூதனா ரிச்செய்யுள் செய்தாரென் றுணர்க. இது அன்புறு கற்பாட்டியான தலைவியை வன்புறை குறித்துப் பிரிதலொழுக்கங் கூறுதலின், கற்பென்னுங் கைகோண் மேலதாய முல்லைப்பற்றி யெழுந்த பாலைப்பாட்டென் றுணர்க.

மதுரைக்காஞ்சி— இது மாங்குடிமருதனார் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய னெடுஞ்செழியனைப் பாடியது, வீடுபேறு குறித்து நிலையாமை செவியறிவுறுத்தலைப் பொருளாக வுடையது. இது பாண்டியன் முன்னோர் பெருமையும் பாண்டிநாட்டின்கணுள்ள நானில வைந்திணை வளனு மதுரைமாநகர்ச் சிறப்பும் அவன் வீரமும் பிறவு மிக்கூறும். இது நெடுஞ்செழியற்கு வீடுபேறேதுவாகச் சான்றோர் பல்வேறு நிலையாமை அறைந் துணர்த்துதலின், பெருந்திணைப்புறனா யெழுந்த காஞ்சிப் புறப்பாட்டென் றுணர்க.

நெடுநல்வாடை— இது பாண்டியனெடுஞ்செழியனை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது, கொற்றவையைப் பரவுவாள், செருவென்ற பாண்டிய னெடுஞ்செழியனைத் தணந்து வருந்துந் தலைவிக்கு வருத்தந்தீரிய வுன்றலைவன் பகைவென்று விரைந்து வருகவென்று பரவுதலைப் பொருளாக வுடையது. இது கூதிர்க்கால வியல்புந் தமியளான தலைவி வருத்த மிகுதியும் படைவீட்டிற் றலைவனிருக்கு மியல்பு மிக்கூறும். இது நெடுஞ்செழியன் மண்ணசையாற் சென்று பொருதலின், முல்லைப்புறனா யெழுந்த வஞ்சிப் புறப்பாட்டென்றும் வஞ்சிக்குக் கொற்றவை நிலையுண்மையின், இதனைக் கொற்றவையை வெற்றிப்பொருட்டுப் பரவினு ளென்று முணர்க.

குறிஞ்சிப்பாட்டு— இது கபிலர் ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழறிவுறுத்தற்குப் பாடியது. தலைவியினது வேற்றுமை கண்டு வருந்திய செவிலிக்குப் பாங்கி யறத்தொடு நிற்றலைப் பொருளாக வுடையது. இது மலைவளனும் இல்லறநெறியுந் தம்பதி தம்முட் பேணு மன்பினீர்மையுங் கற்பின் சிறப்பு மிக்கூறும். இது களவென்னுங் கைகோள்பற்றி யெழுதலிற் குறிஞ்சிப்பாட்டென் றுணர்க.

பட்டினப்பாலை— இது சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கடியலூ ருருத்திரங்கண்ணனார் பாடியது. வேறுபுலஞ் சேறலுடைய தலைவன் றலைவியைப் பிரிந்து வாரேனென்று தன்னெஞ்சுக்குச் செலவழுங்கிக் கூறுதலைப் பொருளாக வுடையது. இது சோணாட்டினையுங் காவிரியையுங் காவிரிப்பூம்பட்டினத்தையும் ஆண்டு வைகுங் கரிகாற்பெருவளத்தான் பெருவிறலையும் அவன் செங்கோலினையுஞ் சிறப்பித்துரைக்கும். இது அன்புறு கற்பாட்டியான தலைவியை வன்புறை குறித்துப் பிரிதலொழுக்கங் கூறுதலின், கற்பென்னுங் கைகோண் மேலதா யெழுந்த பாலைப்பாட்டென் றுணர்க.

மலைபடுகடாம்— இது இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பல்குன்றக்கோட்டத்துச் செங்கண்மாத்துவேள் நன்னன்சேய் நன்னனைப் பாடியது. இது பரிசில்பெறச் சமைந்த கூத்தனொருவனைப் பரிசில்பெற்றானொருவ னன்னனிடத்து ஆற்றுப்படுத்தியதைப் பொருளாக வுடையது. இவ்வாற்றான் இதனைக் கூத்தராற்றுப்படையெனவும் வழங்குப. இது நன்னன்பாற் செல்லும்வழியி னியல்

பும், அவ்வழியிடத்துள்ள உணவின்றிறனும், அவன் மலையியல்பும், சோலையியல்பும், வளமையும், ஆற்றலும், சுற்றத்தொழுக்கமும், நாளோலக்கமும், மற்றவனவிரமென்னு மலையில வீற்றிருக்குங் காரியுண்டிக்கடவுண் மகிமையும், அவன் முன்னோர் பெருமையு மீக்கூறும். மலையை யானைக்கு மலையோசையை அதன் கடாத்திற்கும் ஒப்பித்து, மலைபடுகடாமென்று இப்பாட்டிற்குப் பெயர் கூறியவாறு, இதனுட் காண்க. இது பரிசில் பெறவேண்டிய பொருநனொருவனைப் பரிசில் பெற்ற பொருநனொருவன் அது வழங்குதற்குரியா னிவனென்று நன்னனிடத்து ஆற்றுப்படுத்தலின், மக்கட்பகுதியாகிய பாடாண் பாட்டென் றுணர்க.

பத்துப்பாட்டிற்கு மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் உரையியற்றினர். இவ்வுரை, பத்துப்பாட்டின் பதப்பொருளை மிகத் தெளித்துப் பாட்டினுட் கோளினிது விளக்கிச் சிறப்பு மிக வுயர்கின்றது. பத்துப்பாட்டாசிரியர், ஆண்டாண்டு மாட்டேற் றுறுப்பா னியாத்த தொடர்களை யுரையாசிரியர் யாற்றொழுக்காக்கிப் பொருள் புலப்படுத்தும் வித்தகங் கல்வித்துறை போய சொல்விற்பனவர்கண் மிக வியக்கத்தக்கபாலது.

எட்டுத்தொகை.

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன, எட்டுத்தொகையாம்.

நற்றிணை—இது கபிலர் முதல் ஆலங்குடி வங்கனீறாகியோரா லியற்றப்பட்டது. இதன் கடவுள் வாழ்த்துச் செய்தார் பாரதம் பாடிய பெருந்தேவனார். கடவுள் வாழ்த்துள்ளப்பட ஒன்று தலையிட்ட நானூறு செய்யுளுடையது. அகப்பொருட் பகுதிகளை மிகத் தெளிந்துரைப்பது. இது தொகுப்பித்தான் பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதி.

குறுந்தொகை—இது திப்புத்தோளார் முதல் அம்மூவனீறாகியோரா லியற்றப்பட்டது. இதன் கடவுள் வாழ்த்துச் செய்தார் பாரதம் பாடிய பெருந்தேவனார். கடவுள் வாழ்த்துள்ளப்பட இரண்டு தலையிட்ட நானூறு செய்யுளுடையது. இது அகப்பொருட் பகுதிகளை மிகத் தெளிந்துரைப்பது. இத்தொகை முடித்தான் பூரிக்கோ. இத்தொகையின் முன்னூற்றெண்பத்திரண்டு செய்யுட்களுக்குப் பேராசிரிய ருரைகண்டாரென்பதும், ஏனை இருபது செய்யுட்களுக்கு நச்சினார்க்கினிய ருரைகண்டாரென்பதும், "நல்லறி வுடைய தொல்பே ராசான் - கல்வியுங் காட்சியுங் காசினி யறியப் - பொருடெரி குறுந்தொகை யிருபது பாட்டிற் - கிதுபொரு ளென்றவ னெழுதா தொழிய - விதுபொரு ளென்றதற் கேற்ப வுரைத்தும்" என்னு நச்சினார்க்கினிய ருரைச் சிறப்புப்பாயிரத்தா னறியப்படும்.

ஐங்குறுநூறு—இதன் கடவுள் வாழ்த்துச் செய்தார் பாரதம் பாடிய பெருந்தேவனார். முதனூறு செய்தார் ஓரம்போகியார். இரண்டா நூறு செய்தார் அம்மூவனார். மூன்றா நூறு செய்தார் கபிலர். நான்கா நூறு செய்தார் ஓதலாந்தையார். ஐந்தா நூறு செய்தார் பேயனார். இது மருத முதன் முல்லையிறுதி யைந்திணைகளையும் பொருளாக வுடையதென்பது, "மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன் - கருதுங் குறிஞ்சி கபிலர் - கருதிய - பாலையோ தலாந்தை பனிமுல்லை பேயனே - நூலையோ தைங்குறு நூறு" என்பதனா னறிக. இது தொகுத்தார் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார். தொகுப்பித்தான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை.

பதிற்றுப்பத்து:—இது பப்பத்தாக ஒவ்வொரு புலவர் சேரர்குலத்தாரைப் பாடியது. இதுபற்றியே இத்தொகை பதிற்றுப்பத்தென வழங்கப்படுகின்றது.

பரிபாடல்— இது ஒருவகைப் பாவிசேடமாய் நூலுக்குப் பெயராயிற்று. இது எழுபது பாக்களை யுடையதாய் முறையே திருமால் செவ்வேள் காடுகாள் வையை மதுரை மேலனவாதல், "திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்-தொருபாட்டுக் காடுகாட் கொன்று-மருவினிய-வையையிரு பத்தாறு மாமதுரை நான்கென்ப-செய்யபரி பாடற் றிறம்" என்பதனு னறிக.

கலித்தொகை— இஃதியற்றினார் ஆசிரியர் நல்லந்துவனார். அது "புரியுண்ட புணர்ச்சியுள்" என்னு நெய்தற் கலியுரையில் "சொல்லொடு குறிப்பொடு முடிவுகொ ளியற்கை-புல்லிய கிளவி யெச்சமாகும்" என்பதனாற் சொல்லெச்சமுங் குறிப்பெச்சமுமாகத் தம் பேரறிவு தோன்ற ஆசிரியர் நல்லந்துவனார் செய்யுட் செய்தமை யுணர்த்து நச்சினார்க்கினியர் எடுத்தோதியவாற்று னறிக. இது நல்லந்துவனாரொருவரானே யியற்றப்படினும், கலியின் பகுதியா னொருவயிற் சேர்தலின், தொகை யெனப்பட்டது. இது நூற்றைம்பது கலிப்பாக்களை யுடையது. முறையே பாலை குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்னும் ஐந்திணைப்பொருளு மறிவுறுப்பது. இதற்கு நல்லுரைகண்டார் நச்சினார்க்கினியர். நச்சினார்க்கினியர், "ஒலிந்திரை கலித்தொகைக் குரைகண்டோருரைகள் நலிந்த தொகைக்க கருத்தினைக் காட்சியிற் கண்டதற் - குள்ளுறை யுவமமும் ஏனை யுவமமுந் - தெள்ளிதிற் றெரிந்து திணைப்பொருட் கேற்ப - வுள்ளுறை யுவமந் தெள்ளிதிற் பொருந் - கொள்பவர் கொள்ளக் குறிப்பறிந் துணர்த்தி - யிறைச்சிப் பொருளாற் செய்யும் வகையைத்-திறப்படத் தெரிந்து சிறப்புறத் தெரித்து - துறைப்படு பொருளொடு சொற் பொருள் விளக்கி - முறைப்பட வினையை முடித்துக் காட்டிப் - பாட்டிடைப் பொருட் பாங்குறத் தெரித்துப் - பாற்பட நூலின் யாப்புற வுரைத்துத் - தாற்பெயர் பெயராற் பகுத்திடத் திப - போற்ற வினனுரை பொருள்பெற விளம்பிய" மதிநுட்பம், புலவர்களுங் கவர்ந்துகொள்ளு மேதகவு மிக வுடைத்து.

அகநானூறு— இதன் கடவுள்வாழ்த்துப் பாடினார் பாரதம் பாடிய பெருந் தேவனார். ஏனைச் செய்யுட்கள் மாமூலனார் முதல் உலோச்சனார் ஈறாகவுள்ள பெரும் புலவர்களாற் பாடப்பட்டன. ஒன்று குறையிட்ட நானூறு அகவற்பாக்களை யுடையது. அகப்பொருட் பகுதிகளை மிகத் தெளித்துரைப்பது. இதன் முதற்கணுள்ள நூற்றிருபது பாக்களைக் களிற்றியானை நிரையெனவும், இடைக்கணுள்ள நூற்றெண்பது பாக்களை மணிமிடைபவள மெனவும், இறுதிக்கணுள்ள நூறுபாக்களை நித்திலக்கோவை யெனவும், வழங்குப. இது தொகுத்தான் மதுரை யுப்பூரிகுடிகிழார் மகனாவான் உருத்திரசன்மன். தொகுப்பித்தான் உக்கிரப்பெருவழுதி. இது அகமெனவும், அகப்பாட்டெனவும், நெடுந்தொகையெனவும், வழங்கப்படும்.

புறநானூறு— இதற்குக் கடவுள்வாழ்த்துப் பாடினார் பாரதம் பாடிய பெருந் தேவனார். ஏனைச் செய்யுட்கள் செய்தார் முரிஞ்சியூர் முடிநாகராயர் முதற் கோவூர் கிழார் ஈறாகியோ ருள்ளார். இது நானூறு அகவற்பாக்களையுடையது. இது புறப்பொருட் பகுதிகளை மிகத் தெளித்துரைப்பது. இது புறமெனவும் புறப்பாட்டெனவும் வழங்கப்படும்.

கல்லாடம்.

இது கல்லாடனாரா லியற்றப்பட்டு அப்பெயர்த்தாயிற்று. விநாயகக்கடவுள் வாழ்த்து முருகக்கடவுள் வாழ்த்துள்ளிட்ட நூற்றிரண் டகவற்பாக்க ளுடையது. அகப்பொருட் டுறைகளை மிகத் தெளிந்துரைப்பது. "கல்லாடர் செய்பனுவல் கல்லாட நூறுநூல் - வல்லார்சங் கத்தில் வதிசருளிச் - சொல்லாயு - மாமதுரை யீசர் மனமுவந்து கேட்டுமுடி - தாமசைத்தார் நூறு தரம்" என்று முன்னோர் செய்யுள் இதன் பெருமைக் குறுசான்றாம். இந்நூற்கு மயிலேறும்பெருமாள்பிள்ளை யெழுதியவுரை முப்பத்தேழு அகவற்பாக்களுரையின் விளக்குமுற்றின்றது. இன்னும், பெருந்தேவனார் பாரதத் தமையாமையினை முற்றுங் கடைச்சங்கவிலக்கியம் பிறவு முள.

பதினெண்கீழ்க்கணக்கு.

பதினெண் கீழ்க்கணக்கினவை: "நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப் பால்கடுகங் கோவை பழமொழி - மாமூலம் - இன்னிலைய காஞ்சியுடனேலாதி யென்பவே கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு" என்பதனா னறிக. இன்னிலை சொல் சாருதியென்ப தூஉம் பாடம்.

காவியவிலக்கியம்.

தமிழ்க் காவியங்கள் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சூளாமணி, நீலகேசி, ... முதலியன. இக்காவியங்கள் தொல்காப்பியவியல் வழிப்பட்டுப் பொதுக்கூறிய சங்கத் தமிழ்ச்செய்ய பிரயோகம் பெரும்பாலும் மருவி நயமாகச் சமைந்து பல்லுருத் தழுவணிகளான் உலகவியல்பு நீதி வைராக்கிய முதலியவைகளை யறிவுறுப்பன.

சிந்தாமணி.

இது சைனகாவியம். இதன் ஆசிரியர் சைனமுனிவரான திருத்தக்கதேவர். இவர் சைவராயிருந்து ஆருகதராயினரென்பர் சிலர். அது பொருந்தாமை வைத்திக்காவியவாராய்ச்சியிற் காண்க. இக்காவியத்தலைவன் சீவகனென்னு மோரரசன். இக்காவியம் மணம் பிறவுமெழுவாயாகக் கதிகூடிய இலம்பகங்க ளுள்ள கதை கூறுவது. இது கடவுள்வாழ்த்து அவையடக்கம் பதிகமென்பவற்றோடு நாமகளிலம்பகம், கோவிந்தையாரிலம்பகம், காந்தருவதத்தையாரிலம்பகம், குணமாலையாரிலம்பகம், பதுமையாரிலம்பகம், கேமசரியாரிலம்பகம், கனகமாலையாரிலம்பகம், விமலையாரிலம்பகம், சுரமஞ்சரியாரிலம்பகம், மண்மகளிலம்பகம், பூமகளிலம்பகம், இலக்கணையாரிலம்பகம், முத்தியிலம்பகமென்னும் பதின்மூன்றிலம்பகங்க ளுடையது.

கடவுள்வாழ்த்து— சித்தசரணம் அருகசரணம் சாதுசரணம் தன்மசரணம் நுதலுவது.

பதிகம்— சீவகன் கதையைத் தொகுத்துக் கூறுவது.

நாமகளிலம்பகம்— சச்சந்தன் ஏமாங்கதநாட்டில் இராசமாபுரத்தி லிருந்து செங்கோல்செலுத்தி விசையையென்னும் பட்டத்தரசி காமத்தழுந்திக் கட்டியங்காரனென்னு மமைச்சனை அரசு கொடுத்துத் திருவில் அவனாற் கொலையுண்டதூஉம், சீவகன் அவனுக்கு அவன் மனைவி விசையைபாற் றோன்றிச் செட்டிமகனாற் றாயநது வளர்ந்து பலகலை கற்று நிலவியதூஉம், கூறுவது. இது சீவகன் நாமகளைக் கூடிய வரலாறு தெரித்தலின், நாமகளிலம்பகமென்றாயிற்று. நாமகளைக் கூடினனென்றது அவன் கலைபயிற்சி தலைக்கூடினனென்றவாறு.

கோவிந்தையிலம்பகம்— சீவகனிரைமீட்டுப் புகழ்மாலைசூடித் தன்றோழன் பதுமுகனுக்குக் கோவிந்தையென்னு நந்தகோபன் மகளை மணஞ்செய்வித்த வரலாறு கூறுவது.

காந்தருவதத்தையிலம்பகம்— சீவகன் வித்தியாதரவேந்தனான சலுழவேகன் மகள் காந்தருவதத்தையை வீணைவென்று அவள் மணமாலைசூடி அது பொறாத அரசரைப் போரிற் புறங்கண்டு அவளை மணந்த வரலாறு கூறுவது.

குணமாலையிலம்பகம்— சீவகன் பொழிலாட்டிற் குணமாலை சுண்ணம் புகழ்ந்து அவள் அசனிவேகமென்னுங் கட்டியங்காரன் பட்டக் களிறு கோட்பட்டுழி யுய்த்தனைத் தேறிச் செருக்கடக்கி விலக்கி அவளை மணஞ்செய்த வரலாறு கூறுவது.

பதுமையிலம்பகம்— சீவகன் சுதஞ்சணனென்னுந் தேவனுதவியாற் கட்டியங்காரன் யாப்புறுத்த காவலிற் றப்பிப் [illegible] போந்து பல்லவதேயத்துச் சந்திராபநகரத்து அரசனான தனபதியின் மகள் பதுமையைப் பாம்பு கடிப்ப [illegible] கோப்புநீக்கி அவளை மணந்த வரலாறு கூறுவது.

கேமசரியிலம்பகம்— சீவகன் நாடுகாட்டுவழியாக் கேமமாபுரம் புகுந்து அங்கோர் வணிகன் சுபத்திரன்மகள் கேமசரி ஆடவரைப்பாராமையைப் போக்கிப் மணஞ்செய்த வரலாறு கூறுவது.

கனகமாலையிலம்பகம்— சீவகன் மத்திமதேயத்து ஏமமாபுரத்தை [illegible] ராதிபனான தடமித்திரன் குமாரர்க்கு விற்கலை [illegible] அவன் மகள் கனகமாலையைக் கலியாணஞ்செய்த வரலாறு கூறுவது.

விமலையிலம்பகம்— சீவகன் தண்டகாரணியத்தில் மெய்த்தாய் விசயைதனைக் கண்டு தரிசித்து அவள் வரம்பெற்றுத் தன்னகர் [illegible] இராசமாபுரத்துக்கு [illegible] செலவழி ஆங்குள்ள சாகரதத்தன் மகள் விமலையைக் கண்டு மையல்பட்டு அவளை மணந்த வரலாறு கூறுவது.

சுரமஞ்சரியிலம்பகம்— சீவகன் [illegible] பற்றிய [illegible] அவர்க் கூடலோம்பேன் என்று விரதஞ் சாதித்தாளை [illegible] வேடம்பூண்டு புக்குக் கீதநாடகங் காட்டி மயக்கி வதுவையாற்றிய வரலாறு கூறுவது.

மண்மகளிலம்பகம்— சீவகன் [illegible] மாமனை வரவழைத்துக் கட்டியங்காரனோடு [illegible] பொருது [illegible] வாய்த்த பொழுதென றெண்ணித் தம்பியர் தோழர் [illegible] படையமைந்து போந்து இராசமாபுரத்தினருகில் [illegible] தன் சூழ்ச்சிவலையின் வசப்பட்ட கட்டியங்காரனைக் கொன்று [illegible] கீர்த்திபோல விளங்கினன்று அவனரசைப் பெற்று அவற்கொண்டு மண்மகளை மணம் எய்தியதூஉம், கூறுவது.

பூமகளிலம்பகம்— சீவகன் இராசமாபுர வாரணமனை புகுந்து வேதத்தவை சார்ந்து சிங்காதனமேறி மணிமுடிசூடி மண்ணரசைப்புரந்த வரலாறு கூறுவது.

இலக்கணையிலம்பகம்— சீவகன் காந்தருவதத்தை குணமாலை முதலிய தேவிமாரோடு பதுமை முதலிய தேவிமாரையும் இராசமாபுரத்தாரணமனையிற் றலைக்கூட்டித் தன்மாமன்மகள் இலக்கணையை மணந்து இமையாதரரோ டொப்பப்புற்றிருந்து

அரசாண்டு தமபுரந்தராகச்செல்வமும் வளமும் வரிசையுமுதவி அங்கண்மாஞாலம் முழுவ தையுஞ் செங்கோல் செலுத்திய வரலாறு கூறுவது.

முத்தியிலம்பகம்— சீவகன் றந்தை முதலிய வுத்தம பத்தினிமார்வயிற் சற்புத்திரரைப்பெற்றுச் சோலைவிளையாட்டினை மேவி அட்டயானத்திருப்புழிக், கடுவன்குரங்கு தன் காதன் மந்திக்குப் பொற்றிரளன்ன [illegible] பலாவின்சுளைகீறி நல்கா [illegible] சோலைகாப்பான் [illegible] மந்தியோடோடிச் [illegible] கனியை, வெறுக்கையில் வெறுக்கையுற்றுக், கைப்பழமிழந்த [illegible] கட்டிடஞ்சாரலை [illegible], இக்காவலனை அவனைக்கொன்று [illegible] வசத்ததாய மாறிமாறிச் செல்லு மாணையிற்றுப அரசு [illegible] துறந்து அருகன் திருவடி யடையும் அறம் [illegible] வரலாறு கூறுவது.

இந்நூல் [illegible] பாரத்துவாசி நச்சினார்க்கினி யர் [illegible] பொழிப்புக்கட்டுச் சொன்முடிபு விளக்கி மேற்கோ ள்காட்டிய பெருமையுடைய [illegible] சிந்தாமணிக்கு நன்று மியைந்தபட.

சிலப்பதிகாரம்.

இது [illegible]. கடைச்சங்கத் தமிழ்ப் புலவர் [illegible] கோவடிகளியற்றி யவனைக் [illegible] லவன் கோவ லன். [illegible] மாதவியெ ன்னு [illegible] தன மனைக [illegible] ஆணைடிருந்து பொருளெசெ [illegible] ஆணைடைத சட்டா [illegible] இலக்காக்கிய [illegible] யானைமுயா, [illegible] மதுரையிற் [illegible] இறக்கணைறு தலைக [illegible] அவட்குக் [illegible] வணனைமும், பிறவும், கூறும். [illegible] மூன்று [illegible] கூறப்படும். [illegible] சாவியமாக [illegible] மதுரைக்காண்டத்திற்கு நல் [illegible] முத்தமிழிலக்கண [illegible] யுலக முவப்ப வெழுதினார்.

மணிமேகலை.

இது மதுரைச் [illegible] சாத்தனார் [illegible] பொற்காவியம். இக் காவியத்தலைவி [illegible] அப்பெயர்த்தாயிற்று. இது மணி மேகலை [illegible] முற்பிறப்பிலே பட்டயன் [illegible] முறை கேட்டு [illegible] சவத்திறம் பூண்டு புத்ததருமங் கேட்டப பயத்திற மறுமெனக் [illegible] பொருளாக வுடையது. இது விழாவறை

காதை, ஊரலருரைத்தகாதை, மலர்வனம்புக்ககாதை, பளிக்கறைபுக்ககாதை, மணிமே கலாதெய்வம் வந்து தோன்றியகாதை, சக்கரவாளக்கோட்டமுரைத்தகாதை. துயிலெழுப்பியகாதை, மணிபல்லவத்துத் துயருற்றகாதை, பீடிகைகண்டு பிறப்புணர்ந்தகாதை, மந்திரங்கொடுத்தகாதை, பாத்திரம்பெற்றகாதை, அறவணர்த்தொழுதகாதை, ஆபுத்திரன்றிறமறிவித்தகாதை, பாத்திரமரபு கூறியகாதை, பாத்திரங்கொண்டு பிச்சைபுக்ககாதை, ஆதிரைபிச்சையிட்டகாதை, உலகவறவி புக்ககாதை, உதயகுமரனம்பலம்புக்ககாதை, சிறைக்கோட்டமறக்கோட்டமாக்கியகாதை. உதயகுமரனைவாளாலெறிந்தகாதை, கந்திற்பாவை வருவதுரைத்தகாதை, சிறைசெய்தகாதை, சிறைவிடுகாதை, ஆபுத்திரநாடடைந்தகாதை, ஆபுத்திரனோடு மணிபல்லவமடைந்தகாதை, வஞ்சிமாநகர் புக்ககாதை, சமயக்கணக்கர் தந்திறங்கேட்டகாதை, கச்சிமாநகர் புக்ககாதை. தவத்திறம் பூண்டு தருமங்கேட்டகாதை, பவத்திறமறுகெனப் பாவைநோற்றகாதை யென முப்பான் பகுத்தனம். அற்றேலஃதாக; பொய்யடிமையில்லாத புலவரான சீத்தலைச்சாத்தனார் இவ்வவைதிக பௌத்த புறச்சமயப் பொருளடங்கிய காவியஞ் செய்ததென்னையெனின்,— மணிமேகலை வண்ணங் கண்ட புலவராகலானும், அப்பெருந்தகை காவலரிந்து பாடியருளுக வென வேண்டுதலானும், மணிமேகலை யாக்கைநிலையாமை மேலிட்டு வைராக்கியந் தவம் பேணிய வரலாறும் பிறவும் உலகுக் குணர்த்தல்வேண்டுமென்னுங் கருத்துடைமைத் தாராதலினாலும், சாத்தனார் இது யாத்தனரென்க. மற்றுச் சாத்தனார் பௌத்தம் மெய்யென்று காட்டல்வேண்டி இது யாத்திலரென்பது. "நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப் - பதிவாழ் சதுக்கத்துத் தெய்வமீறாக - வேறுவேறு சிறப்பின் வேறுவேறு செய்வினை - யாறறிமரபி னறிந்தோர் செய்யுமின்" என்று சிவபரத்துவமு மிதனுட் சாத்தனா ரெடுத்தோதினார்.

குண்டலகேசி.

இது பௌத்தகாவியம். இந்நூற்செய்யுட்களிற் சிலவற்றை யென்று சிவஞானசித்திப்பரபக்கவுரையிலும் பிறவிடம் உரையாசிரியர் எடுத்தோதிடக் காணக்கிடக்கின்றன; நூன்முழுதும் வழங்கக்காணக்கிடைத்திலது.

வளையாபதி.

இதில் ஒவ்வோர் கூறு மேற்கோளாய் முன்னோருரைகளில் வந்திடக் காண்கின்றோமன்றி நூன்முழுதும் வழங்கக் கண்டிலேம்.

சூளாமணி.

இது சைனகாவியம். தோலாமொழித்தேவர் இயற்றியது. இக்காவியத்தலைவன் பயாபதி. இவன் சங்கவண்ணனை மேகவண்ணனென்னும் புத்திரரிருவரைப் பயந்தவரலாறும், இவருள் இளையோனாகிய திவிட்டனென்னும் மேகவண்ணனை மாயச்சிங்கத்தை வதைத்து செய்த பராக்கிரமவரலாறும், இரதநூபுர விஞ்சையர் வேந்தன்மகள் சுயம்பவையென்னும் பொற்கொடியை வேட்டவரலாறும், அவன் அசுவக்கிரீவன் முதலிய பகைமன்னரைப் போரிலடர்த்து வென்றியாலே சூடிய வரலாறும், தன் மகட்குச் சுயம்வரம் நாட்டிய வரலாறும், பயாபதி நிலையாமை நோக்கி யரசுரிமை துறந்து அருகனறநெறி தேர்ந்த வரலாறும், அருக்கசரணத்தியெய்திய வரலாறும், இது மீக்கூறும்.

இரகுவமிசம்.

இது வைதிககாவியம். ஈழநாட்டு யாழ்ப்பாண நல்லூர்க்கரசனான பரராசசேகரன் மருகன் அரசகேசரி யியற்றியது, வடமொழியின் மகாகவியான காளிதாசரிய

றிய இரகுவமிசகாவியத்தை மூலமாகவுடையது. காவியத்தலைவர் இரகுபதியும் அவன்வழித்தோன்றல்களும். இது சூரியகுலத்திற் பிறந்த இட்சுவாகு குலத்தோன்றலான திலீபன் தேனுவழிபாடாற்றி இரகுபதியைப் புத்திரனாகப் பெற்றுப் பரிமேதமியற்றிக் கீர்த்தியடைந்த வரலாறும், இரகு திக்குவிசயங்கொண்ட வரலாறும், அவற்கு மகனாக வந்த அயன் படையொடெழுந்து போய்ப் பஃறேய மன்னர் திறைகொண்டு விதர்ப்பவரசன் மகள் இந்துமதி மாலையிடப்பெற்று அவளைக் கடிமணம் புணர்ந்து அதுபொறாது எதிர்த்த பகைவேந்தரைப் புறங்கண்டு தனைக்கொணர்ந்திய வரலாறும், இரகுபூபதி முத்தியுற்ற வரலாறும், இந்துமதி தன்னாயகனோடு சோலை விளையாட்டயர்ந்துழி யாழ் நாரதமுனிவன் வீணைமீது கிடந்த சுரபுஷ்பதாமம் மெய்ப்பட்டுப் பிறப்பு நீங்கிய வரலாறும், அயனுக்கு இந்துமதி வயிற்றிற்றோன்றிய சுந்தரப்புதல்வனான தசரதன் வேட்டம்போய் முனிசாபமேற்ற வரலாறும், அவன் புத்திரவேள்வி புரிந்து ஸ்ரீராமசந்திரன் முதலிய நால்வரையும் பெற்ற வரலாறும், சீதை வனம்புக்க வரலாறும், இலவணனை சத்துருக்கனன் வதையுண்ட வரலாறும், இராமன் பரிமேதவேள்விசெய்த வரலாறும், குசன் அயோத்திநகரடைந்திய வரலாறும், அவன் நாகராசன் தந்த வாகுவலயங் கொண்டு நாககன்னிகையை மணந்து முடிசூடி யுலகாண்ட வரலாறும், பிறவும், எடுத்தோதும்.

நைடதம்

இது நைஷதகாவியம். இந்நூல்செய்தான் அதிவீரராமபாண்டியன். காவியத்தலைவன் நளச்சக்கிரவர்த்தி. இந்நளோபாக்கியானம் வியாசபாரதத்து ஓதப்பட்டது. இது நளன் குணமாட்சியும், அவன் விதர்ப்பநாட்டரசன் மகள் தமயந்தியைச் சுயம்வரத்திற் கூடிய வரலாறும், அதுகண்டு பொறாது பொரவெதிர்ந்த சுரர்களையு நராதிபரையும் போரிற் புறங்கண்ட வரலாறும், புட்கரனோடு சூதாடி நாடுநகரிழந்து தமயந்தியோடு கானகஞ்சென்ற வரலாறும், ஆண்டுத் தனியனாய்விட்டு அணைந்த வரலாறும், பின்னர் வேறுருப்பூண்டு வீமராசன் நகரியில் வந்து தலைக்கூடிய வரலாறும், மீட்டும் அரசுரிமை யெய்திய வரலாறும், பிறவும், எடுத்துரைக்கும்.

புராணவிலக்கியம்.

கூர்மபுராணம், உபதேசகாண்டம், வாயுசங்கிதை, பிரமோத்தரகாண்டம், காசிகண்டம், சிவபுராணம், சாருடபுராணம், திருத்தணிகைப்புராணம், பிரபுலிங்கலீலை முதலிய புராணவிலக்கியங்கள் பலவுள. இப்புராணவிலக்கியங்கள், தொல்காப்பிய விதிக்கு மாறுபட்டுப் பின்னூலாசிரியர் சங்கச்செய்யுட் பிரயோகம் பழைய காவியப்பிரயோகம் முதலியவற்றொடு பொருந்தி வடசொற்கள் மிக விரவிய வேதாகமப்பொருளுட்கொண்டு அலங்காரங்கள் சிறப்ப நடப்பனவாம்.

கந்தபுராணம்.

இது கச்சியப்பசிவாசாரியரால் இயற்றப்பட்டது. இது வடமொழிக் காந்தபுராணத்துச் சங்கரசங்கிதையிலுள்ள அறுமுகக்கடவுள் சரித்திரமோதுதலின், கந்தபுராணமெனப்பட்டது. இது உற்பத்திகாண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ககாண்டமென வாறு காண்டங்களுடையது. இதன் செய்யுட்கள் பதினாயிரத்தின் மிக்கன. இது அறுமுகக்கடவு ளுருவவாதார வரலாறும், சூரபன்மன் காசிபமுனிவற்கு மாயையாற் றோன்றி யீரவேள்வி செய்து சிவபிரான்பால் ஆயிரத்தெட்டண்ட நூற்றெட்டுகங்காறும் ஆளும் பெருவரம் பெற்றுத் தேவரைச் சிறைசெய்து அரசுபுரிந்த வரலாறும், அவனை அறுமுகக்கடவுள் பொருது

வென்று ஆட்கொண்ட வரலாறும், தேவர் சிறை நீக்கி அவரை விண்குடி யேற்றிய வரலாறும், ஆறுமுகக்கடவுள் தெய்வயானை வள்ளிநாயகி திருமணம் புரிந்தருளிய வரலாறும், இந்திரகுமாரனை சயந்தனுக்கு வியாழப்புத்தேள் அசுரர் சிறைப்பட்டதற்குக் காரணங் கூறிய வரலாறும், பிறவும், கூறும். இது ஆறுமுகக்கடவுண் மகிமையெல்லா மங்கை நெல்லிக்கனிபோல எடுத்து விரித்துரைக்குந் திவ்விய புராணமாய்த் தமிழ்ப் பெருங்காப்பியமாய் நிலவுவது. இதன் செய்யுட்கள் திராட்ச கதலி இட்சு நாளிகேர பாகங்கள் கொண்டன. இது நவின்றொறு நவின்றொறு நயம் பயப்பது. பயின்றொறும் பயின்றொறு மறுமுகக்கடவுடிருவடிப் பத்தி ஞானம் விளைப்பது. கச்சியப்பசிவாசாரியர் சாலிவாகனசகாப்தம் எழுநூற்றில் இதனை யியற்றி யரங்கேற்றினார். அரங்கேற்றுழித் திகடசக்கரமெனுந் தலைச்செய்யுண் முதற்கண்ணதான திகழ்தசக்கர மென்னுஞ் சொல்லிறுதி ழகரந் தகர வல்லெழுத்தின் முன் டகரமாய்த் திரிந்ததற்கு விதி தொல்காப்பியத்தி லில்லையென்று அவ்வவையிலுள்ள புலவரொருவர் தடை நிகழ்த்தினா ரென்றுங் கச்சியப்பசிவாசாரியர் "இத்தடை நியாயமாயினுங் குமரகோட்டத் தடிகள் அவ்வா றெடுத் தருளிச்செய்ய நாமுந் தலைக்கொண்டு பாடினமாதலின் இதனைக் குற்றமாராய்தன் முறையன்று" என்று விடை நிகழ்த்தினா ரென்றுஞ் சிலர் கூறுப. ஈண்டு ழகரந் தகரத்தின்முன் டகரமாகத் திரிந்தது விகடசக்கரமென்னு மொழியை நோக்கி யாகலின், அது தொல்காப்பிய விதியாமன்றி விரோதமாகா தெனக. இனி மற்றன்ன செய்யுட்டிரிபுகள், "இலக்கண மில்லை செய்யுளுட் டிரிபவும்" என்னுஞ் சூத்திரப் புறனடையா லமைத்துக் கோடற்பாலன வெனக. இங்ஙனமாகலின், அக்காலம் புலவர் தடைநிகழ்த்தினா ரென்பதூஉங் கச்சியப்பசிவாசாரியர் இங்ஙனம் விடை கூறினா ரென்பதூஉம், பொருந்தாமை யறிக. இப்பொருந்தாமையை மேலுந் தடைவிடைகளால் விரிக்கிற் பெருகும்.

உபதேசகாண்டம்.

இது சங்கரசங்கிதையின் ஏழாவது காண்டம், சூதன் முதன்மையாற் முனிவர் வரலாறும், விபூதி ருத்திராக்க மகிமைகளும், சிவநாமமகிமையும், பிறவும், எடுத்தோதுவது. இதனை மொழிபெயர்த்துப் பாடினார் கோனேரியப்பர்.

வாயுசங்கிதை.

இது சிவபுராணம் பத்தனுண் முதற்கண்ணதான சைவபுராணத்துள்ளது. சைவபுராணம் வித்தியேசுவரசங்கிதை முதல வாயுசங்கிதை யீறாகப் பன்னிரண்டு சங்கிதைகளுடைத்து. பன்னிரண்டினுள் இறுதிக்கண்ணதாய் நிலவு மிவ்வாயுசங்கிதை முதல் சேகரவரகுணராமபாண்டியனுற் றமிழில் மொழிபெயர்த்துப் பாடப்பட்டது. இது பூர்வகாண்டம் உத்தரகாண்டமென விரண்டு காண்டங்களுடைத்து. இதன்கட் சிவபரத்துவமுஞ் சிவோபாசனையுஞ் சிவாகமமகிமையுஞ் சிவதீக்கைப் பெருமையுஞ் சைவாசாரியாபிடேகமுறை முதலியனவு நன்குரைக்கப்படும்.

பிரமோத்தரகாண்டம்.

இது சிவபுராணம் பத்தனு ளோதப்பட்ட பஞ்சாக்கரமகிமை, சிவராத்திரிமகிமை, பிரதோடமகிமை, சோமவாரவிரதமகிமை, சிவயோகிமகிமை, விபூதிமகிமை, உமாமகேசபூசைமகிமை, உருத்திராக்கமகிமை, சீருத்திரமகிமை முதலியவைகளை யெடுத்துரைப்பது. இதனைத் தமிழின் மொழிபெயர்த்தியற்றினோன் வரதுங்கராமபாண்டியன்.

காசிகண்டம்.

இது காசிநகரத்தைப்பற்றிய காசிகண்டமகிமை கூறுநூலாகும். பூர்வகாண்ட முத்தர காண்டமென விரண்டுகாண்டங்களுடையது. இதில் வாரணாசிச்சிறப்பும், கங்கையின் மகிமையும், மகளிர்இலக்கணமும், அவர் கற்பொழுக்கமும், பிரமசரியநெறியும், இல்லறநெறியும், பொதுவான வைதிகாசாரமும், யோகவொழுக்கமும், முத்திமண்டபவரலாறும், பிறவும், எடுத்தோதப்படும்.

கோயிற்புராணம்.

இது சிதம்பரமான்மியம் கூறுநூலாகும். கோயிலென்னுஞ் சிதம்பரமென்னு மொக்கும் இது வியாக்கிரபாதமுனிவர் பதஞ்சலிமுனிவர் ஆனந்தத்தாண்டவந் தரிசித்தற்பொருட்டு அடைந்த வரலாற்றைப் புரிந்தமையும், அவர்க்குப் பரமசிவன் சிற்சபையில் விளங்கியருண்டவந் தரிசிப்பித்து அருள்கொண்டமையும், சிங்கவன்மன் சிவகங்கை மூழ்கி யிரணியவன்மனாகிய முனிவரிருவ ருபதேசமும் பெற்றுத் தாண்டவங்கண்டு நடராசருக்குத் திருக்கோயிலமைத்து நித்திய நைமித்திக பூசை விழாச் செய்தமையும், நடராசர் திருவடித் தொழும்பாற்றி மூவுலகு மொருகுடைக்கீழாண்டு சிறப்பெற்றமையும், எடுத்தோதும். இதனைத் தமிழின் மொழிபெயர்த்துப் பாடியருளினார் உமாபதிசிவாசாரியர். இதன்கட் சைவசித்தாந்த நுண்பொருள்கள் ஒழுங்குறையாக வோதப்பட்டன ஆண்டாண்டுப் பல.

காஞ்சிப்புராணம்.

இது காந்தத்துச் சனற்குமாரசங்கிதையிற் சாலிவாகனகண்டத்திற் போந்த காஞ்சிமான்மியத்தின் மூலத்தை யிறுதிக்காகத் தமிழின் மொழிபெயர்த்துப் பாடினார் ஆசிரியர் சிவஞானயோகிகள். இது சொற்சுருங்கிப் பொருள்விளங்கி நவின்றோர்க்கினிதாயத் திருமுறைகளிலுள்ள சைவசித்தாந்த முடிபான் தனமொழி புணர்ந்து வேதாகம விழுப்பொருள் பயந்து வைதிகசைவ நெறியாசாரம் விளங்குவது தொல்காப்பிய விலக்கியவிலக்கணப்பிரயோகங்கள் செய்யுட்கோராற்புதமாயது. அகத்திணைமரபும் புறத்திணைமரபு மிகத் துறைப்படுத்துரைப்பது வைதிகசைவ வொழுக்க மெய்ம்மெய்யுடைமை விளம்புவது. சைவசித்தாந்தத் தனிப்பொருள் செவ்விதிற் றெரிப்பது. பிறநூலகத்து நவிலாசைப்புலவர் நாடு நகரச் சிறப்பும், வைதிகசைவமரபும், சிவசரியை கிரியை யோக ஞானவொழுக்கமும், பாடிய பெருமை பெற்றது, இதனாற் றிருநகரச்சிறப்பும் வைதிகசைவமரபு வாயிலாகுஞ் சரியை கிரியை யோக ஞானமுமாகிய நுண்பொருள் மடிப்பாடாகக்கொண்டெனின், இதனபெருமை யளவிட்டுரைத்தல் புலவர்க்குஞ் செல்லாதன்று.

திருத்தணிகைப்புராணம்.

இது காந்தத்துட்பட்ட சங்கரசங்கிதையினின் பிறகூறுதிற் போந்த தணிகைமான்மியம் கூறுநூலாகும். சொல்லானும் பொருளானுந் தோமற்ற நல்லிசைப்புலவர் நாட்டிய காவியங்கட்கு நிதானகமாவது. வைதிகமரபுஞ் சைவமரபும் வல்லவாற்றானெல்லாம் விளக்குவது. புறத்திணையு மகத்திணையும் புலங்கொள்ளப் போதிப்பது. முருகக்கடவுள் அருள்விளையாடன் முற்றவெடுத்து மொழிகுவது. சரியை கிரியா யோக ஞான நாற்பாதப்பொருளும் பாற்படவெடுத்துப் பகருவது. இதன்செய்யுட்களெல்லாம் இட்சுபாக நாளிகேரபாக நவமணி நல்ல சொல்லணியும் பொருளணியு மெல்லாமின்றி விளங்கவிருப்பன. இஃதியற்றினார் ஆசிரியர் சிவஞானயோகிகள் முதன்மாணாக்கரான

கச்சியப்பமுனிவர். இந்நூலாசிரியராகிய கச்சியப்பமுனிவர் விநாயகபுராணம் பேரூரப்புராணந் திருவானைக்காப்புராண மென்னுஞ் செந்தமி ழிலக்கியங்களுஞ் செவ்விதினியற்றியிட்டார்.

பிரபுலிங்கலீலை.

இது உருத்திரன் கூறாய் விளங்கிய அல்லமதேவன் உமையின் கூறாய் விளங்கிய மாயையோடாடி மற்றவள் வலிபுறங்கண்ட வரலாறும், வீரசைவ மாகேசுரராயின சரணர் பலர்க்கு அவன் ஞானோபதேச மருளிய வரலாறும், பிறவும், எடுத்தோதும். இஃது ஓர் ஐக்கியவாத சைவ புராணம். இஃதியற்றினார் துறைமங்கலச் சிவப்பிரகாச முனிவர். இஃது சொல்லணி பொருளணி நிரம்பியதோர் நல்ல காவிய ரத்தினம்.

இன்னுஞ் செந்தமி ழிலக்கியமாயுள்ள புராணங் கூர்மபுராணம், இலிங்கபுராணம், சூதசங்கிதை, சேதுபுராணம், திருவிளையாடற்புராண முதற் பலவுள.

இதிகாசவிலக்கியம்.

இதிகாசங்கள் இராமாயணம் பாரதமென விரண்டாம்.

இராமாயணம்.

இது வடமொழியில் ஆதிகவிராசனென் றுலகம் போற்றும் வான்மீகி யென்னு முனிபுங்கவனாலியற்றப்பட்டது. அது தமிழ்ப்புலவரான கம்பனாராற் றமிழின் மொழிபெயர்த்து அப்பெயரானே பாடப்பட்டது. இது ஸ்ரீராமசந்திரன் தசரதச்சக்கிரவர்த்திக்குப் புத்திரனாயவதரித்துச் சீதாபிராட்டியை மணந்த வரலாறும், அச்சீராமசந்திரன் மந்தரை சூழ்ச்சி வழிப்பட்டுக் கைகேசி செய்த சூழ்வினையான் முடியிழந்து காடு சென்ற வரலாறும், ஆண்டு இலங்கை வேந்தனான இராவணன் மாயம் புணர்த்து எய்திச் சீதாபிராட்டியை வவ்விப் போகத் துயருழந்து கிடந்தகைத் தலைக்கூடிய வரலாறும், ஆண்டு வாலியைக் கொன்று சுக்கிரீவ னட்பெய்தி யனுமானைத் தூதுபோக்கிச் சீதாபிராட்டியைத் தேடுவித்த வரலாறும், அனுமான் சீதாபிராட்டியை யிலங்கையிற் கண்டுருக்காட்டிச் சூளாமணி நல்கி யாற்றுவித்து அரக்கரை யுருக்கி யிராமசந்திரன்பால் மீண்டு சிறையுற்ற நிலை நின்றவாற்றைக் கூறிய வரலாறும், இராமசந்திரன் குரக்கரசினத்தோடு படையெடுத்துச் சேதுபந்தன மியற்றி யதன்வழியா லிலங்கை தலைக்கூடி இராவணன் முதலியோரை வதைத்துச் சீதாபிராட்டியைச் சிறையினீக்கி மீண்டயோத்தி தலைக்கூடித் திருமுடி சூடி யுலகாண்ட வரலாறும், பிறவும், கூறும். வடமொழி இராமாயணம் வான்மீகர் நவரச புஞ்சமாக வியற்றிய வுத்தம காவியமாகலின், கம்பனார் அம்மூலராமாயணச் சுலோகமதற்கு நன்று தமிழி லொன்பான் சுவையு மொன்றினொன் றதிக மென்றிம்பர்மா நிலக் கவிக ளெடுத்தேத்த விஃதியற்றியிட்டார். கம்பனார் தமிழ் நன்குணர்ந்த கவிஞர் சிகாமணியாகலின், தமிழ்இராமாயணத்தி லாண்டாண்டு நாடு நகர வண்ணனை பொழில்வண்ணனை காலவர்ணனைகளு முலக நீதிகளும் பிறவுந் தாமே மேல்வரக் கொண்டு கவிகள் செய்திட்டார். இதன் செய்யுட் பெரும்பான்மையான இக்ஷுபாக நாளிகேரபாக நண்ணி நடப்பன. இது வடமொழி ராமாயணம்போலப் பாலகாண்டம், அயோத்தியாகாண்டம், ஆரணியகாண்டம், கிட்கிந்தாகாண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டமென ஆறு விபாகங்களாகப் பகுக்கப்பட்டுப் பதினாயிரத்தின் மிக்க செய்யுளுடைத்தாய்ப் பெருங்காப்பியமென வழங்கப்படும் பெருமையுடையது. இதன் உத்தரகாண்டம் ஒட்டக்கூத்தராற் றமிழின் மொழிபெயர்த்துப் பாடப்பட்டது. இது இராமசந்திரன் முடிசூடிப் பரிவேள்வியாற்றியதும், பிறவும், கூறும்.

பாரதம்.

இது வடமொழி வியாச பாரதப்பொருளுரைப்பது. வில்லிபுத்தூராராலும் நல்லாப்பிள்ளையாலுந் தமிழின் மொழிபெயர்த்துப் பாவா லியற்றப்பட்டது. இது ஆதிபருவமுதற் சுவர்க்காரோகண பருவமிறுதியாகப் பதினெட்டுப் பருவங்களுடையது. அவற்றுள் ஆதிபருவம், சபாபருவம், ஆரணியபருவம், விராடபருவம், உத்தியோகபருவம், வீட்டுமபருவம், துரோணபருவம், கன்னபருவம், சல்லியபருவம், சௌப்திகபருவமென்னும் பத்தும் வில்லிபுத்தூராராலும், சீபருவம், சாந்திபருவம், அநுசாசனிகபருவம், அசுவமேதபருவம், ஆச்சிரமவாசபருவம், மௌசலபருவம், மகாப்பிரத்தானிகபருவம், சுவர்க்காரோகண பருவமென்னுமெட்டும் நல்லாப்பிள்ளையாலும் மொழிபெயர்க்கப்பட்டன. இது நான்குவேதார்த்தங்களையுஞ் சரித்திரங்களை மேலிட்டு அறிவுறுத்தலின், ஐந்தாம்வேதமென வழங்கப்படும். இதன்கட் பலகலைகளின் சாரங்களும் புருடார்த்தங்களு நன்கு வெளியிடப்படும். இஃதுந் தமிழ்ப் பெருங்காப்பியமாகச் சான்றோராற் போற்றப்படுகின்றது.

பல்வகைப்பிரபந்தவிலக்கியம்.

கலிங்கத்துப்பரணி நளவெண்பாப் போல்வன முன்னோர் பிரபந்தங்களும், குமரகுருபரமுனிவ ரியற்றிய பிரபந்தங்களும், சிவப்பிரகாசமுனிவ ரியற்றிய பிரபந்தங்களும், சிவஞானயோகிக ளியற்றிய பிரபந்தங்களும், அவர் தன்மாணாக்க ரியற்றிய பிரபந்தங்களும், இவைபோல்வன பிறவுஞ் செந்தமிழ்ப் பிரபந்தவிலக்கியங்களாம்.

குமரகுருபரமுனிவரியற்றியபிரபந்தங்கள் திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மைக்குறம், மீனாட்சியம்மை யிரட்டைமணிமாலை, மதுரைக்கலம்பகம், நீதிநெறிவிளக்கம், திருவாரூர் நான்மணிமாலை, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், சிதம்பரமும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை, பண்டாரமும்மணிக்கோவை, காசிக்கலம்பகமென் றிவைமுதலியன

சிவப்பிரகாசமுனிவரியற்றியபிரபந்தங்கள் நால்வர்நான்மணிமாலை, திருச்செந்திலந்தாதி, பழமலையந்தாதி, நன்னெறி, திருவெங்கைக்கோவை, திருவெங்கைக்கலம்பகம், திருவெங்கையுலா வென்றிவைமுதலியன

சிவஞானயோகிகளியற்றிய பிரபந்தங்கள் அமுதத்தாசாரியர் சுலோக பஞ்சக மொழிபெயர்ப்புக்கலை, சிவதத்துவவிவேகம், சோமேசர் முதுமொழிவெண்பா, குளத்தூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி, இளசைப் பதிற்றுப்பத்தந்தாதி, கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி, செங்கழுநீர்விநாயகர்பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், திருவேகம்பரந்தாதி, திருமுல்லைவாயிலந்தாதி, திருத்தொண்டர் திருநாமக்கோவையென் றிவைமுதலியன

சிவஞானயோகிகள் மாணாக்கர் பிரபந்தங்கள் தணிகையாற்றுப்படை, துறைசைக்கோவை முதலியன. இவற்றுள், தணிகையாற்றுப்படை கச்சியப்பமுனிவராலும் துறைசைக்கோவை சுப்பிரமணியமுனிவராலு மியற்றப்பட்டன. இவை தொல்காப்பியனு ராணை யியற்றமிழிலக்கியமாய்ச் சங்கச்செய்யுட் பிரயோகம் யாண்டும் பயின்று சொல்லணி பொருளணி துறுமி விளங்கு நல்ல தமிழ்ப்பிரபந்தங்களாம். இவற்றுள், குமரகுருபரமுனிவர் பிரபந்தங்களுஞ் சிவஞானயோகிகள் பிரபந்தங்களும் வேதாந்தத்தெளிவாகு சைவசித்தாந்த நுண்பொருள் விளக்குங் கொழிதமிழ்க் கவிகளுடையனவுமாம்.

இலக்கியமரபியன் முற்றிற்று.

சாத்திரமரபியல்.

அட்டாதசவித்தை.

வித்தை பதினெட்டாவன: வேதநான்கும், சிக்கை கற்பசூத்திரம் வியாகரணம் நிருத்தஞ் சந்தோபிசித் சோதிடமென்னு மங்கமாறும், புராண நியாயநூல் மீமாஞ்சை மிருதியென்னு முபாங்க நான்கும், ஆயுள்வேதம் வில்வேதங் காந்தருவவேத மருத்த நூலென்னுமிவை. இவற்றுள், வேதநான்கும் பிரமகாண்டமும் பிரமஞானத்திற்கு நிமித்தமான கருமகாண்டமு மென்னாந் துவனவாம். சிவாகமங்களும் பிரமகாண்டமாயடங்குமென்ப. வேதாகமங்கள் பரமசிவன் வாய்மொழியென்று சுருதியும் புராணமுஞ் சிவாகமமோதுதலானும், பஞ்சபிரமம் பிரணவம் பஞ்சாக்கரம் பிராசாதமுதலிய மந்திரங்களும், பதிபசுபாச முதலிய பொருள்வழக்கமும், திருநீறணிந்து உருத்திராக்கந்தரித்தல் சிவலிங்கபூசை முதலிய கருமங்களும், பிறவும், இரண்டனுள்ளும் ஒப்பச் சுருக்கமாகவும் விரிவாகவுஞ் சொல்லப்படுதலானும், வேதசத்தத்தில் சிவாகமமு மடங்கு மெனக்கொண்டு வித்தை பதினெட்டென் றுண்மை நூல்களங்ஙனமோதின. நீலகண்டவாசிரியர் "யஸ்மாத்வேதஃஶிவாஜ்ஜாதோ யோர்த்தஸ்ஸ வேதஸம்மதஃ வேதோபி ஶிவாஜ்ஜாதஃ" வேதசிவாகமங்கட்குப் பேதங்காணுகிறிலம், வேதமுஞ் சிவனாற் செய்யப்படுதலின் ஆகமமெனப்படும் என்றும், சிவஞானயோகிகள் "வேதம் பொருள் படைத்தோன்றுஞ் சூத்திரமுஞ் சிவாகமமதனை யவ்வாறாக வொட்டாது தெளிந்துரைக்கும் பாடியமும்போலப் பரமசிவனாற் செய்யப்பட்டமையின், அவை முறையே பொது நூல் சிறப்புநூலெனப்பட்டுச் சூத்திரமும் பாடியமும்போல வேறுவைத் தெண்ணப்பட்டன" என்றும், தத்தம் பாடியவுரைகளிற் கூறியருளியவாற்றானும், இது கடைப்பிடித்துணர்ந்து கொள்க. "ஸர்வஜ்ஞஶ்ஶிவஃ" என்னுஞ் சுருதியு மிவ்வுண்மைக்குச் சான்றாம். வேதமென்னுஞ்சொல் அறிதற்கருவி யெனப் பொருள்பட்டுச் சதுர்வேதங்களுக்குக் காரணவிடுகுறியாயுஞ் சைவாகமங்களுக்குக் காரணக்குறியாயும், ஆகம மென்னுஞ் சொல் பரமசிவன்பானின்றும் வந்ததென்னும் பொருட்டாய்ச் சைவாகமங்களுக்குக் காரணவிடுகுறியாயுஞ் சதுர்வேதங்களுக்குக் காரணக்குறியாயும், வடமொழி தென்மொழி நூலுரைகளில் வழங்கப்படுமாறுந் தெரிந்துணர்ந்துகொள்க. ஒருசாரார் இவ்வுண்மை பகுத்துணரமாட்டாது, அட்டாதசவித்தையிற் சிவாகமம் படிக்கப்படாமையின், அது பிரமாண நூலாகாதென்று தமக்கு வேண்டியவாறு பிதற்றுப. இனிச் சைவாகமங்கள் வேதச்சொல்லிலடங்கி அட்டாதசவித்தையாதல் அதன் பெருமைக்குக் குறைவாமென்று கூறுவாரைச் சதுர்வேதங்கள் ஆகமச் சொல்லினடங்கிப் பிரமாணமாதன் மற்றவற்றின் பெருமைக்குக் குறைவாகாதோவென்று கடாவி மறுக்க.

இனி வேதம் "சுயம்பு" வென வழங்கப்படுவதூஉம், "அபௌருஷேய" மென வழங்கப்படுவதூஉம், சுயம்புவான பரமசிவனாற் செய்யப்பட்ட காரியமாதல்பற்றியும், பசுக்களாகிய புருடராற் செய்யப்பட்ட தன்றென்னுங் கருத்துப் பற்றியுமே யாம். ஆதலின், அவ்வழக்குக்கொண்டு அது இறைவன் வாய்மொழியன்றென்றல் பொருந்தாதென்க. சங்கத்தார் 'செய்யா மொழிக்குந் திருவள்ளுவருரைத்த-பொய்யா மொழிக்கும் பொருளொன்றே" யென்றதூஉம், பசுக்களான தேவர் முனிவர் முதலியோராற் செய்யப்படாத மொழியென்னுங் கருத்துப்பற்றியேயாம்.

இனி வேதங்களை யெடுத்தல் படுத்தன் முதலிய விசை வேறுபாட்டா னுச்சரிக்குமா றுணர்த்துவது சிக்ஷை. வேதங்களிற் கூறுங் கருமங்களை யனுட்டிக்கு முறைமை யுணர்த்துவது கற்பசூத்திரம். வேதங்களி னெழுத்துச் சொற்களினியல் புணர்த்துவது வியாகரணம். வேதங்களின் சொற் பொரு ளுணர்விப்பது நிருத்தம். வேதமந்திரங்களிற் காயத்திரி முதலிய சந்தங்களின் பெயரும் அவ்வவற்றிற்கு எழுத்தினைத் தென்றலு முணர்த்துவது சந்தோபிசிதி. வேதத்திற் செய்யப்படுங் கருமங்கள் செய்தற்குரிய கால விசேடங்களை யுணர்த்துவது சோதிடம். இங்ஙனமாகலின், இவையாறும் வேதத்திற் கங்கமெனப்பட்டன. பரமசிவ னுலகத்தைப் படைக்குமாறு முதலாயின கூறும் வேதவாக்கியப் பொருள்களை வலியுறுத்து விரித்துணர்த்துவது புராணம். இதிகாசமு மீண் டடங்கும். வேதப்பொருளை நிச்சயித்தற் கனுகூலமான பிரமாண முதலியவற்றை யுணர்த்துவது நியாயநூல். வேதப்பொருளின ளுறற்பரிய முணர்த்துதற் கனுகூலமான நியாயங்களை யாராய்ச்சி செய்துணர்த்துவது மீமாஞ்சை அது பூர்வமீமாஞ்சை யுத்தரமீமாஞ்சையென விருவகைப்படும். அவற்றுள் முன்னையது மீமாஞ்சையெனவும், வேதமெனவும், பின்னையது வேதாந்தமெனவும், வழங்கப்படும். அவ்வவ்வருணங்கட்கு நிலைக்குமுரிய தருமங்களை யுணர்த்துவது மிருதிநூல். புராண முதலிய நான்கும் வேதத்திற் குபாங்க மெனப்படும். எல்லா மனுடிகத்தற் சாதனமான யாக்கையை நோயின்றி நிலைபெறச்செய்வது ஆயுள்வேதம் பகைவரா னலிவின்றி யுலகங்காத்தற்கு வேண்டப்படும் படைக்கலம் பயிற்சி யுணர்த்துவது விற்வேதம். எல்லாக்கடவுளர்க்கு முவகைவரச்செய்யு மிசை முதலியவற்றை யுணர்விப்பது காந்தருவவேதம். இம்மைக்கு மறுமைக்கு மேதுவாகிய பொருள்களையீட்டு முபாய முணர்விப்பது அருத்தநூல். இவை நான்கு முப வேத மெனப்படு மென்றுணர்க.

வைதிகசாத்திரம்.

இனி மீமாஞ்சை, நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், வேதாந்த மென்னு மாறும் வைதிகசாத்திரமெனப்படும். இவை தரிசனமெனவும் பெயர் பெறும். இவற்றுள் இறுதிக்கணின்ற வேதாந்தம் உத்தரமீமாஞ்சை பிரமமீமாஞ்சையெனவும் வழங்கப்படும். மீமாஞ்சைநூல் செய்தார் சைமினிமுனிவர். இது பாட்டம் பிரபாகரமென விரண்டாம். நியாயநூல் செய்தார் கௌதமமுனிவர். இவர் அக்கபாதரெனவும் பெயர் பெறுவர். வைசேடிகநூல் செய்தார் கணாதமுனிவர். இவை யிரண்டும் தருக்கநூல்களாம். சாங்கியநூல் செய்தார் கபிலமுனிவர். யோகநூல் செய்தார் பதஞ்சலிமுனிவர் வேதாந்தநூல் செய்தார் வியாசமுனிவர். இது மாயாவாதம் பாரிணாமவாதம், கிரீடாபிரமவாதம், சத்தபிரமவாதமென நான்காம். இவரெல்லாம் வேதத்தைப் பொதுவகையான மூலமாகக்கொண்டு அதனுட் சிலபொருளைச் சமுத்திரகலச நியாயம்பற்றி ஆண்டாண் டெடுத்துக்கொண்டு அரனருளால் ஒவ்வோரதிகாரிகளின் பொருட்டு அவ் ரறிவளவிற் கேற்பத் தொகுத்தும் விரித்தும் நூல்கள் செய்தாராகலின், இவை முதனூல் வழிநூல் சார்புநூலென்னு மூன்றனு ளொன்றற்சேர்தலின்றாய் வைதிகசாத்திரமென வேறாய நிலைபெற்றன. அற்றேல், முதல் வழி சார்பு நூலென நிலைபெறுவன யாவையெனின்,— வேதாகமங்கள் பரமசிவனாற் செய்யப்பட்டு ஏனைநூல் கூறும் பொருளியல்புகளெல்லாந் தங்க ணடங்கக்கொண்டு வியாபகமாய் நிற்றலின் அவை முதனூலாம். முதலவனாற் றரப்படு முதனூலை யொன்றாகவைத் தென்னாமை லிங்ஙன மிருவகைப்படுத் தெண்ணியதென்னையெனின்,— இதற்குச் சமா

மம்; மூலரும் "மூன்றவருணத்திற் குரிமையாதலு நான்குவருணத்திற் குரிமை யாதலும் பற்றி முறையே வேதாகமமென விருபகுதியாகவைத் தெண்ணப்பட்டது" என்பர் நீலகண்டவாசிரியர். "வேதநூல் சைவநூலென் றிரண்டே நூல்கள் வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்க ளாதிநூ லனாதியம லனருநூ லிரண்டு மாரணநூல் பொதுச்சைவ மருஞ்சிறப்பு நூலா - நீதியினா லுலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கு நிகழ்த்தி யது நீண்மறையி னொழிபொருள் வேதாந்தத் - தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல் சைவம் பிறநூ றிகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்த மாகும்" எனவும், "உலகியல் வேதநூ லொழுக்க மென்பது - நிலவு மெய்ந்நெறி சிவநெறிய தென்பதாம்" எனவுங் கூறுபவாகலின், அங்ஙனர் நூலாருந்தி முறைபற்றிக் கூறுதலின் இருபகுதிப்பட்ட தெனவே யாம் கோடும்" என்பர் சிவஞானமாபாடியகாரர். இவ்விருசமாதானங்களுள் இரண்டாவது கொண்டமைக. இனி மிருதி புராணங் கலைகள் உபாகம முதலாயினவெல் லாம் வேதாகமப்பொருளை யுள்ளவா றுணராதார் அவற்றைப் பிறாகத்தினின்று விளக் குதற்பொருட்டு நால்வகை யாப்பினு ளொன்றான வழிப்படுத்துச் செய்த நூல்களாக லான், அவை வழிநூலெனப்படும். சிக்ஷை கற்பசூத்திர முதலிய வேதாங்கங்களுங் காமிகம் முதலிய வாகமாங்கங்களு முறையே அவ்விரண்டினையு முள்ளவாறுணர் தற்குச் சார்பாயப் புடைபட்டு நிகழ்தலின், அவை சார்புநூலெனப்படுமென் றறிந்து கொள்க.

மீமாஞ்சை முதலிய சாத்திரங்களாறும் அன்னவாயினும், அவற்றுள் மீமா ஞ்சைநூல் வேதத்துள் விதித்த கருமத்தை யாராய்ச்சி செய்தற் குபகாரமாயும் எல்லா நூலார்க்கு முபகாரமாகு நியாயங்களெடுத்தோதுவதாயு நிலவுதலானும், வைசே டிக நையாயிகநூல்கள் எல்லா நூற்கு முபகாரமாகும் அருத்தமுறை யெடுத்தோதுதலா னும், சாங்கிய மூலப்பகுதியையும் புருடனையும் பகுத்துணரும் விவேகமுந் தத்துவ சற்காரியவாதமு மெடுத்தோதுதலானும், யோகம் எண்வகை யுறுப்பிற்றாகிய யோக முறை தெரித்தலானும், உத்தரமீமாஞ்சையெனப்படும் வேதாந்தம் பலதுறைப்பட்டுக் கிடக்கு முபநிடதவாக்கியங்களை யவ்வப் பொருட் பெற்றிக்கேற்ப வொருதுறைப்படுத் தும் பரமேசுரவுபாசனை கடைப்பிடித்துச் செய்ய விதித்தலானும், வேதாகமமுதலிய சாத்திரவாராய்ச்சிக்கு இன்றியமையாத கருவிகளாக வேண்டப்பட்டு நிலவுமென்க. இச்சாத்திரங்களாறுங் கூறும் பொருளு மவற்றுட் பிரயோசனப்படுவனவும் பூர்வபக்க மாவனவும் ஆசிரியர் சிவஞானயோகிகள் சிவஞானமாபாடியத்து ளெடுத்து விளக்கினார்.

இனிப் பூர்வமீமாஞ்சைநூலார் சுருதி இலிங்கம் வாக்கியம் பிரகரணந் தானம் சமாக்கியை யென்னு மாறும் வன்மை மென்மை பற்றிச் சொற்பொருடுணிவிக்குங் கருவிகளென் றெடுத்தோதுவர், உத்தரமீமாஞ்சைநூலார் அங்ஙனம் உபக்கிரமவுப சங்காரம் அப்பியாசம் அபூர்வதை பலம் அருத்தவாதம் உபபத்தி யென்னு மாறும் வன்மை மென்மை பற்றிச் சொற்பொருடுணிவிக்குங் கருவியென் றெடுத்தோதுவர். அவையெல்லாந் தமிழ்வேத வேதாகம சித்தாந்த நூல்களின் சொற்பொருடுணிதற்கு இன்றியமையாத கருவிகளேயாம். அவற்றுள், சுருதியாவது: வேறொன்றனை யவா வாது தானே சுருதிய பொருளைத் தானே தெரிவிப்பது. இலிங்கமாவது: ஆற்றலாற் பொருளை யுணர்த்துவது. வாக்கியமாவது: இங்ஙனஞ் சுருதியும் இலிங்கமு மன்றிச் சொற்றொடர் பற்றி யுணர்த்துவது. பிரகரணமாவது: "சோதிட்டோமம் வேட்க" என்றற்போலும் விதிவாக்கியங்களாற் பொதுப்பட வுணர்ந்த சிறப்பா [illegible]

கன்மங்களானவாவைப்பட்டு இவ்வாறு செய்யற்பாற்றெனக் கருத்துக் கூறுவது. ஞானமாவது: நிர்க்குணமிடமும் அண்மையிடமுமென இருவகைப்படும். சமாக்கியையாவது: காரணத்தான் வரும் பெயர். உபக்கிரமவுபசங்காரங்களாவன: எழுவாயுரை யிறுவாயுரையோடொத்து ஒன்றுதலின், மாறின்றானுக்கும் பொருளிதுவேயாமென்று துணிந்துரைத்தற் கருவியாய் நிற்பன. அப்பியாசமாவது: நூலிற் பயின்றுவருதலின் இதற்கிதுவே பொருளெனக் கொண்டு துணிந்துரைத்தற் கருவியாய் நிற்பது. அபூர்வதையாவது. இது மற்றொரு நூலா னறிவுறுத்தப்படாத விடயமாதலின், இதற்குச் சிறந்த பொருளிதுவெனக் கொண்டு துணிந்துரைத்தற் கருவியாயுள்ளது. பலமாவது இந்நூலிற் கிது சிறந்த பிரயோசனமாகற்பாலதெனக் கொண்டு துணிந்துரைத்தற் கருவியாய் நிற்பது. அருத்தவாதமாவது. நூலுட் புனைந்துரைவகையாற் சிறந்த சொருபொருளை அறிவுறுத்த நிற்பது. உபபத்தியாவது: இப்பொருள் உதற்கு மிக இயைவதாமெனக் கொண்டுரைத்தற் பயத்ததாய் வருவது. தமிழினகணுள்ள வேதாந்த சித்தாந்த சாத்திரமரபு இனிது தெளிதற்குபகாரமாக, இதுகாறும் வடமொழியிட்டாசவிசாரணையின் மரபும், வைதிகசாத்திர மரபும், சிறிது ஈண்டு முதற்கட்டெடுத்தோ கனும்.

வடமொழிச் சாத்திரங்களுக்கு வேதாகமங்கள் முதலாய் நிற்றல்போலத் தென்மொழிச் சாத்திரங்களுக்குத் தமிழ்வேதங்கள் முதலாய் நிற்பனவாம். தமிழ்வேதோற்பத்தியும் அவை வேதாகமங்களின் சாரமான திருமுறைகளாதலும் பிறவுந் திருமுறையிலக்கியவரலாற்றிற் பிரமாணங்காட்டிச் சாதிக்கப்பட்டனவாம். அற்றேலஃதாக; தேவாரந் திருவாசக முதலியன தலையாய சாத்திரத் தமிழ்நூல்களாதலின், அவற்றின் மரபு ஈண்டுத் தெரிக்கற்பாலதன்றோவெனின்,— அஃதொக்குமாயினும், தேவாரந் திருவாசக முதலிய திருமுறைகளும் உத்தரவேதமுஞ் செய்யுளிலக்கியமுமாய் நிற்றலின், தமிழிலக்கியங்கட்கெல்லாஞ் சிரத்தானமாய் வைத்து அவற்றின்மரபு ஆண்டுத் தெரிக்கக் கடவாயினமென்றுணர்ந்து கொள்க. மற்றுச் செந்தமிழ்ப் புராண இதிகாசமரபு ஆண்டுத் தெரிந்திலம். அவை செந்தமிழ்ப் பேரிலக்கியமாதலேயாம். தமிழ்ப் புராணவிதிகாசவிலக்கியங்கள் தமிழ்வேதத்திற்கு வழிநூலாயுந் தமிழ்வேத விலக்கியத் திணையின வைக்கற்பாலன வாயினுந் தமிழ்ச்சங்க விலக்கியங்களுந் தமிழ்க்காவிய விலக்கியங்களும் பலவுந் தோன்றற்றதான் அவைதமக்கு முற்பட்டதேனுங்கி அவற்றின்பின் வைத்து மற்றவற்றின் மரபு தெரித்தாமென்பது.

தமிழ்வேத வேதாந்த சித்தாந்த வாராய்ச்சிக்கு எண்ணுமெழுத்துமென்னு மிரண்டு மிரண்டு கண்களும். எண் - தருக்கம், எழுத்து - இயற்றமிழான விலக்கணம். இவை வேதாந்த சித்தாந்த வுறுதிப்பொருளாராய்ச்சிக்கு இன்றியமையாத கருவியென்பார், நாயனார் "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங் - கண்ணென்ப வாழு முயிர்க்கு" என் றவ்வாறெடுத்தோதியருளினாரென்பது. எண் - கணிதத்திற்குமாம். கணிதங் கருவியுஞ் செய்கையுமென இருவகைப்படும். அவை யோமப்பிரதீப முதலிய நூல்களுட் காண்க. தருக்கமு மியற்றமிழெனு மிலக்கணமு முறுதிப்பொருளுணர்ச்சி முதனூலாராய்ச்சிக்குக் கருவியாதல், "ஆதி முதலொழிய வல்லா தனவெண்ணி - நீதி வழுவா நிலைமையவான - மாதே - யறமாதி பொருளின்பம் வீடென் றிவற்றின் - திறமாமோ வெண்ணிறந்தார் செய்பு" "எழுத்தறியத் தீருமிழிதகைமை தீர்ந்தான் - மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகு - மொழித்திறத்தின் - முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளு

[illegible] கேட்டறிந்து வீடு பெறும்" இவற்றானறிக. இவற்றுள் இயற்றமிழ் என்னும் இலக்கணம் தமிழ்ச் சுதந்திர நூலாம். அது முத்தமிழ் முதனூலான அகத்தியமாம். தொல்காப்பியம் பன்னிருபடலம் முதலியன அதன் வழிநூல்களாம். அவற்றின் வரலாறெல்லாம் இலக்கணமரபியலின் விரிந்தோதினும். மற்றுந் தருக்கம் வடநூலிற் கூறியவாறே தமிழின் மொழிபெயர்த்தியற்றப்பட்டு விளங்கும். அவை தருக்கசங்கிரகமும், அதனுரையான அன்னம்பட்டியமும், தருக்கபரிபாடையும், போல்வன. அவற்றுள், தருக்கசங்கிரகமும் அன்னம்பட்டியமுந் தமிழின் மொழிபெயர்த்தியற்றினோர் ஆசிரியர் சிவஞானயோகிகள். தருக்கபரிபாடை தமிழின் மொழிபெயர்த்தியற்றினோர் துறைமங்கலச் சிவப்பிரகாசமுனிவர். தருக்கபரிபாடை தருக்கசூடாமணியெனவும் வழங்கப்படும். இருவகைப்படுந் தருக்கத்துட் டருக்கசங்கிரகங் கணாதர் செய்த வைசேடிகநூலின் வழித்தாயது. தருக்கபரிபாடை கௌதமர் செய்த நியாயநூலின் வழித்தாயது. தருக்கசங்கிரகமும் அன்னம்பட்டியமும் வடமொழியில் இயற்றினார் அன்னம்பட்டர். தருக்கபரிபாடை வடமொழியில் இயற்றினார் சிவாக்கிரமிசிரர். தருக்கசங்கிரக மேழுபதார்த்தமுந் தருக்கபரிபாடை பதினாறு பதார்த்தமுங் கூறும். பதார்த்த மேழாவன: திரவியம், குணம், கருமம், சாமானியம், விசேடம், சமவாயம், அபாவமெனபன. பதார்த்தம் பதினாறாவன: பிரமாணம், பிரமேயம், சமசயம், பிரயோசனம், திருட்டாந்தம், சித்தாந்தம், அவயவம், தருக்கம், நிர்ணயம், வாதம், சற்பம், விதண்டை, ஏதுவாபாசம், சலம், சாதி, நிக்கிரகத்தான மெனபன

வேதாந்தசாத்திரம்.

[illegible]மிழ் வேதாந்தசாத்திரங்கள் வடமொழி உபநிடதங்களை மூலமாகக்கொண்டு தோன்றி நடப்பன. தமிழ் வேதாந்த சாத்திரங்கள் கைவல்லியம், வேதாந்தசூடாமணி, வாசிட்டம், ஈசுரகீதை, பகவற்கீதை, பிரமகீதை, பிரபோதசந்திரோதய முதலியனவாம். வடமொழி யுபநிடதங்கட்குச் சுத்தாத்துவிதமாகவுஞ் சிவாத்துவிதமாகவுங் கேவலாத்துவிதமாகவும் விசிட்டாத்துவிதமாகவுந் துவைதமாகவு முரைகளு நூல்களுந் தத்தங் கொள்கைக்கேற்ப வடமொழி வல்ல ஆசாரியர்கள் பல செய்திட்டார். அவருட் சுத்தாத்துவிதக் கொள்கைபற்றி வழிநூலுரை செய்தார் அரதத்தாசாரியர் முதலாயினோர். சிவாத்துவிதக் கொள்கைபற்றி நூலுரை செய்தார் நீலகண்டவாசிரியர் அப்பய தீக்கித யோகிகள் முதலாயினோர். கேவலாத்துவிதக் கொள்கைபற்றி வழிநூலுரை செய்தார் சங்கராசாரியர் வித்தியாரணிய முனிவர் முதலாயினோர். விசிட்டாத்துவிதக் கொள்கைபற்றி வழிநூலுரைசெய்தார் இராமானுசாசாரியர் வேதாந்த தேசிகர் தாதாசாரியர் முதலாயினோர். துவைதக்கொள்கைபற்றி வழிநூலுரை செய்தார் ஆனந்ததீர்த்தாசாரியர் முதலியோர்.

இவற்றுள், முற்கூறிய தமிழ் வேதாந்த நூல்கள் சங்கராசாரியர்மதமான கேவலாத்துவித வேதாந்தவாத நூல்களாவன. ஏகான்மவாதத் துட்பட்ட பிரம விவர்த்தன மாயாவாதமாவது-சச்சிதானந்தமாய நித்தமாய வியாபகமாய நிற்பது பிரமம் பரமார்த்த [illegible] அஃதொன்றே மெய்ப்பொருள். ஏனையவெல்லாம் பிரமத்தின் விவர்த்தனமாயிப்பி[illegible] வெள்ளிபோல அவிச்சையினாற் காணப்படுவன வாகலிற் பொய். இங்ஙனந் தோ[illegible] முலகத்திற்கு முதற்காரணமாகிய மாயை பிரமம்போலச் சத்துமன்றி [illegible] [illegible] யனிருவசனமா யிருக்கும். அனிருவசனமென்பது-சொல் [illegible] பொருட்டு. இந்தமாயைக்கு வேறாகிய பிரமரூபமே யானென

வேதாந்தஞானத்தா லறிவதே முத்தியென்பதாம். பாற்கரியமாவது - முற் கூறப்பட்ட பிரமமே சடமுஞ் சித்துமாகிய வுலகங்களாய்ப் பரிணமித்தது. அங்ஙனம் பரிணமித்தது விகாரப்பட்டமையை யறியாமையாற் பந்தமாயிற்று. பரமார்த்தத்தி லொரு பொருளே. வேதாந்த ஞானத்தா லுடம்பிறந்த வேறுங்கிய வானமரூபம் விளங்கும். அதுவே பரப்பிரமமென் றறிந்து அதனகண் ணிலைபெறுதலே முத்தியென்பதாம். கிரீடாப்பிரமவாதமாவது - முற் கூறப்பட்ட பிரமமே நான். யானொருபடித்தன்றிய பல வேறுவகைப்பட்ட விகாரப்பொருள்களோடு கூடிய பலவாற்றால் விளையாடுகின்றேன். இவ்வாறறிவதே முத்தியென்பதாம். சத்தப்பிரமமாவது - காரணமாகிய பிரம மிது நிகழ்காலத்திற் சத்தவடிவாக் ரு யிருக்கும். அஃது விசையின்று சடமுஞ் சித்துமாகிய வுலகங்களாய் விரியும். முடிவிலைசட் சத்தமாத்திரையே யுள்ளதென் றிங்ஙன மறிவதே முத்தியென்பதாம். இங்ஙன நால்வேறு வகைப்பட்ட யேகான்மவாத நூல் செய்தார் வியாசமுனிவர்.

கைவல்லியம்.

இது தாண்டவமூர்த்தியாரால் செய்யப்பட்டது. இது தத்துவவிளக்கப்படலம் சந்தேகந்தெளிதற்படலமென விரண்டு படலங்களுடையது.

வேதாந்தசூடாமணி.

இது சங்கராசாரியார் வடமொழியிற் கூறிய விவேகசிந்தாமணியென்னு நூன் மொழிபெயர்ப்பு. இது மொழிபெயர்த்தார் துறைமங்கலச் சிவப்பிரகாசமுனிவர். இது சிறப்புப்பாயிரம் பொதுப்பாயிர முன்னாகத் தோற்றித் திருக்குவிவேகந் திருசியவிவேகமென்னு மிரண்டு விபாகங்களுடைத்தாய் நிலைபெறுவது. இதனகட் டிருக்கென்பது அறிவுருவான பிரமம். திருசியமென்பது அப்பிரமவிவர்த்தன மாயாகாரியமா யறியப்படு மிசத்தனப் பிரபஞ்சம். இந்நூல் ஏகான்மவாத கேவலாத்துவித வேதாந்த பரிச்சேதப்பொருள் நன்குணர்த்துவது.

வாசிட்டம்

இது வைராக்கியப்பிரகரணம், முமுட்சுப்பிரகரணம், உற்பத்திப்பிரகரணம், நிருவாணப்பிரகரணமென் றிப்பிரகரணங்களாற் சீவகாருண்ணியம், பாசவைராக்கியம், ஈசுரபத்தி, பிரமஞான மென்பவற்றிற் இலக்கணங் கூறி யவ்வவற்றிற் கெடுத்துக்காட்டிலக்கியமாகக் கதைபல கூறி அவற்றினியல்பு விளக்குவது. இஃதியற்றினோர் வீரை யாளவந்தார்.

ஈசுரகீதை.

இது பரமேசுரன் சனற்குமாரன் முதலிய முனிவர்கட் கருளியது. இதனகட் சாங்கியயோகம், பரபத்தி விசுவரூபம், சிவசத்தி, தத்துவநிசம்விபூதி, பிரபஞ்சம், தத்துவதரிசனம், யோகம் என்பன வெடுத்தோதப்படும். இதனைத் தமிழின் மொழி பெயர்த்துப் பாடினோர் தத்துவராய முனிவர்.

பகவற்கீதை.

இது பகவானன கண்ணன் அருச்சுனற்குச் செவி யறிவுறுத்தியது. இது அருச்சுனன் சீவகாருண்ணிய நாடிப் போர் துறந்து சோகமுற்றது கண்டு கண்ணன் அவன் சோகநீங்கி யுய்வண்ண நாடிக் கருமயோக ஞானவரலாறும், பிரவஞ்ச குண விகார முதலியவற்றின் வரலாறு முரைத்ததைப் பொருளாகவுடையது. இதனைத் தமிழின் மொழிபெயர்த்துப் பாடினோர் சேட்டர்.

பிரமகீதை

இது பிரமன் முனிவர் கட்கருளியது. இது ஐதரேயம், தைத்திரியம், கேனம், சாந்தோக்கியம், முண்டகம், கைவல்லியம், பிருகதாரணியம், கடவல்லி, சுவேதாச்சுவதரம் என்னும் உபநிடதங்களின் பொருளை விரித்துரைப்பது. இதனைத் தமிழின் மொழிபெயர்த்துப் பாடினார் தத்துவராயமுனிவர்.

பிரபோதசந்திரோதயம்.

இது வேதாந்தப்பொருளை நாடகமுறையிற் பிரவிருத்தி நிவிருத்தியென விரண்டியாவாக வகுத்து, மோகன் முதலியோரைப் பிரவிருத்தி படைத்தலைவராகவும், விவேகன் முதலியோரை நிவிருத்தி படைத்தலைவராகவும் நிறுவி, அவர் போர்த்தொழிலின்கண் கிளக்கு முகத்தால், நித்தியா நித்திய வஸ்து விவேகம் வெளிப்படுத்துவது.

ஐக்கியவாதசைவசாத்திரம்

வைராக்கியசதகம், வைராக்கியதீபம், அவிரோதவுந்தியார், [illegible], சிவசாரத சிகாமணி, அத்துவிதவெண்பா வென்பன ஐக்கியவாத சைவ சாத்திரங்களாம். ஐக்கியவாதசைவம் அகப்புறச் சமயத்தின் பாலதாய் அகச்சமய மாறனுள் ஒன்றாய் நிற்பதோர் சமயம். அஃதாவது:— "இணையில மாயைகள் மூன்றினொடு இருவினை யுயிர்களும் புரிதலின் விளைவின் [illegible] கட்குப் பலுகளைப் புசிப்பித்து [illegible] நேராக நேராதன மருவக் கட்வுளருளாலேயுந் [illegible], பின்பல மாயையணுகா பெருங்கொளிமுன் புளித் [illegible]" என்பதாம். இதனைச் செய்தார் சாந்தலிங்கமுனிவர், சிவப்பிரகாசமுனிவர், சிவப்பிரகாசசிகா முதலியோர்.

ஒழிவிலொடுக்கம்.

இது செய்தார் கண்ணுடைய வள்ளல். இது பொதுவியல்பு [illegible] தத்துவத்தமொழிவு, யோகக்கழற்றி, கிரியைக்கழற்றி, சரியைக்கழற்றி, [illegible]கம், துறவு, அருளவத்தைத்தன்மை, வாசனைமாண்டார்தன்மை, நிலையியல்பு என்ப பத்தியல்களுடையது. இது ஆன்மபாசோபாதி நீங்கியருள் [illegible] ஞானத்தை யுறுதற்குக் கருவியான ஒரு ஞானநூல். வேதாந்த சித்தாந்த மிரண்டையுந் தம்முண் முரணுதலாறு அவ்விரண்டன்பொருள் பெரும்பான்மையாற் றெருட்டுவது. இது அறுவகை யகச்சமயங்களுள் வைதீகச் சிவாத்துவிதம் போதிப்பது. சித்தாந்த சைவத்துக் கியைபு பூண்டு நிற்பது. மற்றிது சுத்தசைவ நூலென்பாரு முளர். சுத்த சைவத்திற்குஞ் சிவாத்துவித சைவத்திற்குந் தம்முள் வேறுபாடு சிவஞானமாபாடியத்துட் காண்க.

சித்தாந்தசாத்திரம்.

இனிப் "புறச்சமயத் தவர்க்கிருளா யகச்சமயத் தொளியாய்
புகலளவைக் களவாகிப் பொற்பணிபோ லபேதப்
பிறப்பிலதா யிருளொளிபோற் பேதமுஞ்சொற் பொருள்போற்
பேதாபே தமுமின்றிப் பெருநூல் சொன்ன
அறத்திறனால் விளைவதா யுடலுயிர்கண் ணருக்க
னறிவொளிபோற் பிறிவருமத் துவித மாகும்

சிறப்பினதாய வேதாந்தத் தெளிவாஞ் சைவ
சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்க லுற்றாம்."

ஈண்டுப் புறச்சமயத்தவரென்றது மேற்கூறிய புறச்சமயத்தவரெனக் கொள்க. அவரெல்லாஞ் சித்தாந்தசைவத்தோ டொப்ப "ஏகனனேக னிருள்கரும மாயையிரண்" டென்னு மாறுபதார்த்தங்களுங் கொள்ளாமையின், அவ்வாறுவகைப் பதார்த்தங்களி னியல்பைக் கொண்டிறனுங் கொள்ளமாட்டா ரென்பார், "புறச்சமயத் தவர்க்கிருள்" என்றார். சங்கற்பநிராகரணத்திற் கூறப்படும் அகச்சமயத்தவராகிய பாடாணவாத சைவர் முதலியோர் சித்தாந்தசைவத்தோ டொப்ப ஏகன் முதலிய வாறு பதார்த்தங் கொண்டமையின், அவ்வாறு பதார்த்தங்கட்கும் பொதுவியல்பு சிறப்பியல்பு கூறு [illegible] மயங்களின் [illegible] சித்தாந்தசைவப் பொருளுண்மையைக் [illegible] கொள்ள வல்லுவரல்லரென்பார், "அகச்சமயத் தொளியா" யென்றார். [illegible] கொள்ள [illegible] அகச்சமயத்தவருந் தாமே கொள்ளமாட்டாரென்பது கருத்து [illegible] [illegible] ஆக [illegible] என்பதுபோலு முற்றும்மை [illegible] செய்யுதிறமாவது திரிபுகாரணை [illegible] "சவாதத்தில் [illegible] [illegible] [illegible] [illegible]" [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] என்பது பொருட்டு. அதற்கேற்ப [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] என்பது. [illegible] [illegible] "[illegible]" [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] காரணமாகிய [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] எனக். இது [illegible] சைவாகம [illegible] [illegible] [illegible] [illegible] முதலிய [illegible] [illegible] [illegible] [illegible] பிரமாண மென்பார் பிரமாணம் பிரமேயம் பொருளாதல் [illegible] பொறி முதலாயினவு மேனைய போலப் பிரமேயமா [illegible] [illegible] பொருளே [illegible] அவற்றைப் பிரமாண மென்றல் பொருந்தாது, [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] அவர் பிரமாண மென்ப [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] பிரமாணமாம். பொறி முதலியன [illegible] [illegible] [illegible] பிரமாண மென்று பசித்துக் கூறப்படுவனவேயாமென்பது சைவ சித்தாந்த மென்பார், "[illegible]" என்றார். சைவ சித்தாந்தத்தின் [illegible] [illegible] கூறுவார் 'பெருநூல் சொன்ன வறத்துறையோ விளைவதா" மென்றார். எனவே, [illegible] விளைய தென்பதாம். "உடலுயிர் கண்ணருக்க னறி வொளிபோற் பிறிவரு மத்துவிதமா" மாறு மேலுரைத்தாம். அத்துவித மென்னுஞ் சொற்குப் பொருள் கூறுவார், "பிறிவருமத் துவித" மென றுடம்பொடு புணர்த்தோதினார் இஃதினையோர் கூறும் பொருள் போலன்றிச் சிறந்த தென்பார் "சிறப்பினதா" யென்றார். வேதாந்தமுஞ் சித்தாந்த மும் வேறென்பாரை மறுத்துப் பலபொருள்படுஞ் சூத்திரத்தை யங்ஙனம் படாமைத் தெளித்துரைக்கும் பாடியம்போல வேதாந்தத்தைத் தெளித்துரைப்பதே சைவ சித்

தாந்த மென்பார், மகுடாகம முதலியவற்று ளோதியவாறே "வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தத்திற" னென்றார். ஈண்டு வேதாந்த மென்றது வேதத்தின் முடிபுகளாகிய வுபநிடதங்களை. வேதாந்த மெனப் பெயர் பெற்ற வேகான்மவாத நூலை யுன்றென வுணர்த்துதற்கு "வேதந் தலைதரு பொருளாய்" என விறுதியினுங் கூறினா ராகலின், அது கூறியது கூறலன்மை யுணர்க. திறன் - பொது வுண்மை யென்னும் வகை. இங்கு - இந்நூலின். முதனூல் வழிநூல்களிற் "பொதுவுண்மை" யென வகுத்துக் கொண் டோதினும் எடுத்தோதாமையால், அவ்வகை தெரி வரிதாகலான் அது தெரியுமாறு "பொது வுண்மை" யென வெடுத்தோதி யந்நூல்களின் கருத்து ஈண்டுத் தெரியச் செய்தது மென்பார், "சைவ சித்தாந்தத் திற னிங்குத் தெரிக்கலுற்றாம்" மென்றார். சைவ சித்தாந்த மென்றது - சுத்த சைவ முதலியவற்றிற் செல்லாமைப் பொருட்டு.

சித்தாந்தசாத்திரநாற்பாதத்தெளிவு.

வேதத்திற் கூறுங் கருமகாண்டப் பொருட்கு இன்றியமையாது வேண்டப்பட் டெஞ்சி நின்றனவாய பொருள்களையும் வேதமுடிபாய வுபநிடதத்தின் சாரமாயுள்ள பொருள்களையும் வேறெடுத்துக்கொண்டு இனிது விளக்குதலின், சிவாகமஞ் சித்தாந்த சாத்திர மென்று வழங்கப்படும். இச்சித்தாந்த வாகமங்கள் சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாத மென, நான்கு பாதங்களுடையனவாம்.

இவற்றுள், சரியாபாதத்துட் பிராயச்சித்தவிதியும், பவித்திர விதியும், சிவலிங்க விலக்கணமும், நந்தி முதலிய கணநாதரிலக்கணமும், செபமாலை யோகபட்டந் தண்டங் கமண்டலம் முதலியவற்றி னிலக்கணமும், அந்த்யேட்டிவிதியும், சிராத்தவிதியும், கூறப்படும்.

கிரியாபாதத்துண் மந்திரங்களினது உத்தாரணஞ் சந்தியாவந்தனம் பூசை செபம் ஓமங்களும், சமயம் விசேட நிருவாணம் ஆசாரியாபிடேகங்களும், புத்தி முத்திகளுக் குபாயமான தீக்கையும், கூறப்படும்.

யோகபாதத்துண் முப்பத்தாறு தத்துவங்களும், தத்துவேசுரரும், ஆன்மாவும், பரமசிவனும், சத்தியும், சகத்திற்குக் காரணமான மாயை மாமாயைகளைக் காணும் வல்லமையும், அணிமாதி சித்திகளுண்டா முறைமையும், இயம நியமம் ஆசனம் பிராணாயாமம் பிரத்தியாகாரந் தாரணந் தியானஞ் சமாதிகளினுடைய முறைமையும், மூலதார முதலிய ஆதாரங்களின் முறையும், கூறப்படும்.

ஞானபாதத்துட் பரமசிவனுடைய சொரூபமும், விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னு மான்மாக்களின் சொரூபமும், ஆணவங் காமிய மாயேயம் வைந்தவந் திரோதானசத்தி என்னும் பாசங்களின் சொரூபமும், சத்தியின் சொரூபமும், சிவ தத்துவமுதற் பிரகிருதி தத்துவமவரை முப்பத்தாறு தத்துவங்களினது உற்பத்தியும், இவை யான்மாக்கள் போகம் புசிக்கைக்குக் கருவியாமுறையும், புவனங்கள் புவனேசுவரர் சொரூபங்களும், புவனங்களின் யோசனைப் பிரமாணங்களும், அத்தமப் பிரளய மத்திமப்பிரளயம் மகாப்பிரளயங்களின் சொரூபங்களும், அத்தமப் பிரளயங்களின் பின்னாச் சிருட்டியா முறைமையும், பாசுபதம் மாவிரதங் காபாலிக முதலிய மதங்களின் சொரூபங்களும், கூறப்படும்.

இந்நாற்பாதப் பொருள்கள் சிவஞானமாபாடியத்துத் தெளித்தெடுத்துச் சுருக்கியுரைக்கப்பட்டன. இனி வினை பசுநல்வினை சிவநல்வினையென விரண்டாம். பசுநல்வினை யுலகவினையும் வேதவினையுமென வேறிரண்டாம். சிவநல்வினை பொதுவுஞ் சிறப்புமென வேறிரண்டாம். உலகவினை தண்ணீர்ப்பந்தர் அன்னசாலை கூவல் குளம் முதலியன வமைத்தலாம். வேதவினை கட்புலனான பசு பார்ப்பார் தாய் தந்தை முதலாயினாரை வழிபடுதலும், கட்புலனாகாத அரி அயன் இந்திரன் முதலிய தேவர்களை வழிபடுதலுமாம். அற்றாயினும் வேள்வி முதலிய வைதிக வினைகள் தண்ணீர்ப்பந்தர் முதலிய உலகவினை போலன்றிச் சிவனை நோக்கி அவிப்பாகங் கொடுத்தலும் வழிபடுதலு முடைமையின், அவை சிவபுண்ணிய மாமென்றற் கிழுக்கென்னையெனின்,— ஆண்டுச் சிவபிரானுக்கு அவிப்பாகங் கொடுத்தலும் வழிபடுதலும் பசுக்களாகிய ஏனைக் கடவுளரோ டொப்ப வைத்துச் செய்தலே யன்றிப் பொது நீக்கிப் பசுபதி யென்னுங் கருத்தாற் செய்தலின்மையின், அவை யெல்லாஞ் செய்வோர் கருத்துவகையாற் பசுநல்வினையே யாம், சிவநல்வினை யாகா வெனக. இனி வேள்வி முதலிய வைதிக வினைகளைச் சிவபுண்ணியமு மபுத்தி பூர்வமாய் நிகழ்தலின் அது புத்திபூர்வமாய் இனிச் செய்யக்கடவனவாகிய சிவபுண்ணியங்கட் கேதுவாதன் மாத்திரையிற் பயன் படுத லுடைத்தெனக. வேள்வி முதலியவுஞ் சிவபிரானை நோக்கிப் பொது நீக்கிச் செய்யின், அஃது ஏனையபோலப் பசு புண்ணியமாதலின்றிப் பொதுச் சிவபுண்ணியமா மெனக் கொள்க. இஃதுலகவினைக் கணு மொக்கும். இவ்வைதிக வினையான பொதுச் சிவபுண்ணியஞ் சிவாகம நல்வினையான பொதுச் சிவபுண்ணியம் போலச் சிறப்புச் சிவபுண்ணியத்திற் கங்கமாகிப் பயன் படுத லுடைத்தெனக.

பொதுச் சிவநல்வினையாவது சிவதீக்கையென்னு மங்கமின்றி யவ்வாறு செய்வது. சிறப்புச் சிவநல்வினையாவது சிவதீக்கையென்னு மங்க முடையரா யவ்வாறு செய்வது. இவ்விரண்டும் பத்திகாரணமாக வுண்மையாகச் செய்வதும் புகழ் முதலிய உலகப்பயனை நோக்கிச் செய்வதுமென வெவ்வேறிருவகைப்படும். இவற்றுள், சிறப்புச் சிவபுண்ணிய மிரண்டுஞ் சரியையுங் கிரியையும் யோகமும் அவற்று னிகழு ஞானமுமென ஒரோவொன்று நந்நான்காய் அந்நான்கினுள்ளுஞ் சரியையிற் சரியை கிரியை யோகம் ஞானம், கிரியையிற் சரியை கிரியை யோகம் ஞானம், யோகத்திற் சரியை கிரியை யோகம் ஞானம், ஞானத்திற் சரியை கிரியை யோகம் ஞானமென, ஒரோவொன்று நந்நான்காய் முப்பத்திரண்டு வகைப்பட்டு விரியால் இன்னும் பல திறப்படு மென்றுணர்க.

அவற்றுள், திருக்கோயி லலகிடன் மெழுக்கன் முதலியன சரியையிற் சரியை. ஐயைந்து மூர்த்திகள் விநாயகக் கடவுள் முதலிய ஆவரண மூர்த்திகளில் ஒரு மூர்த்தியைப் பூசித்தல் சரியையிற் கிரியை. நெஞ்சினகண் உருத்திரக்கடவுளைத் தியானஞ் செய்தல் சரியையில் யோகம். அத்தியான பாவனையின் உறைப்பினால் ஓரனுபவ வுணர்வு நிகழ்தல் சரியையின் ஞானம். சிவ பூசைக்கு வேண்டப்படும் உபகரணங்க ளெல்லாஞ் செய்து கோடல் கிரியையிற் சரியை. சிவாகமத்தில் விதித்தவாறே யைவகைச் சுத்தி முன்னாகச் சிவலிங்க வடிவிற் செய்யும் பூசனை கிரியையிற் கிரியை. அகத்தே பூசை ஓமம் தியான மூன்றற்கு மூவிடம் வகுத்துக்கொண்டு

செய்யப்படு மூர்த்தியாகக் கிரியையிற் யோகம். அவ்வாறு மூர்த்தியாக வுறைபவனைக் கண்கூடா யோர் அனுபவ வுணர்வு கிரியையின் ஞானம். இயம நியம மாசனம் பிராணாயாம மென்னு நான்கும் யோகத்திற் சரியை. பிரத்தியாகாரமுந் தாரணையும் யோகத்திற் கிரியை. தியானம் யோகத்திற் யோகம். சமாதி யோகத்தின் ஞானம். இந்த யோகஞ் சகள நிட்களங்களைப் பற்றி நின்று செய்யுஞ் சாலம்ப யோகமும் நிட்களத் தைப் பற்றி நின்று செய்யு நிராலம்ப யோகமு மென விருவகைப்படும். இனிக் கேட்டன் முதலிய நான்கனுள், கேட்டல் ஞானத்திற் சரியை. சிந்தித்தல் ஞானத் திற் கிரியை. தெளிதல் ஞானத்திற் யோகம். நிட்டைகூடுதல் ஞானத்தின் ஞானமென வுணர்ந்து கொள்க.

இனிப் புகழ்முதலிய வுலகப்பயனை நோக்கிச் செய்யு முபாயசரியையிற் சரியைமுதல் உபாயஞானத்தின் ஞானமீறாகிய பதினாறுவகையினும் பலவேறுவகைப் பட்ட கிரியுஞ் சிவபுண்ணியங்களுக்கெல்லாம் பயன் — அவ்வவற்றிற் கேற்பக் காலாக் கினியுருத்திரர் முதற் சூக்குமத்துவ மத்தியாத்திற் சீகண்டருத்திர புவனத்தின் முன்னுள்ள புவனத்தராற் ருன அவ்வப்புவனபதிக ளுலகத்திற் சாலோக முதலியவற்றைப் பெறுதலாம். பத்திகாரணமாகச் செய்யப்படு முண்மைச் சரியையிற் சரியைமுதல் ஞானமோபாயத்தின் ஞானமீறாகிய பதினாறுவகையினும் பலவேறுவகைப்பட்ட கிரியுஞ் சிவபுண்ணி யங்களுக்கெல்லாம் பயன் — அவ்வவற்றிற் கேற்பச் சீகண்டபுவன முதற் சதாசிவபுவனத் துக்கு கீழுள்ள அவ்வப்புவனபதிகளுடைய சிவலோகத்துச் சாலோகமுதலிய பதமுத் திகளைப் பெறுதலாம். உண்மைஞானத்திற் சரியைமுதலிய மூவகையினும் பல வேறுவகைப்பட்ட சிவபுண்ணியங்களுக் கெல்லாம் பயன் — அவ்வவற்றிற் கேற்பச் சதா சிவனை முதலிய அதிகாரத்துவ போகதத்துவங்களில்லையாயும் மந்திர மகேசுர சேசா முதலியோர் பதத்துச் சாலோகமுதலிய அபரமுத்தியைப் பெறுதலாம். இனிப் பலவேறுவகைப்பட்ட கிரியுஞானத்தின் ஞானமாகிய முடிவாகிய ஞானத்துக் குப் பரமுத்தியே பயனென வுணர்ந்துகொள்க.

சரியை முதலியவற்றி னியல்பாதென யாதையெனின், கருமாம அகண்டா கார நித்தவியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபிரான் சருவசத்துக்களாயுள்ள உயிர்கள் பேரான்முறையிற் உணர்ந்து உய்யும்பொருட்டுச் சூக்கு மமாகவும் அதிசூக்குமமாகவும் வடிவுகொண்டருளி, அவ்வடிவங்களின் வழிபாட்டு முறை களையும் வேதாகமங்களில் வகுத்தருளிச் செய்தான். இம்முவ்வகை வடிவங்களுள், சக ளமாகிய தூலவடிவத்தை மாத்திரம் பொருளென வுணர்ந்து சாதியொழுக்க மாத்திரை யால் ஆகமத்தின் விதிப்படி வழிபடுவது சரியை. அது அடிப்பட்டு வரவர நிகழும் பக்குவவிசேடத்தால் ஞானமுடையராய்ச் சகள நிட்களமாகிய சூக்குமவடிவமே பொருள், சகளவடிவம் அதனை வழிபடுதற் கிடமாகிய திருமேனியாமென வறிந்து புறத்தொழிலாலும் அகத்தொழிலாலும் விதித்தவாறே வழிபடுவது கிரியை. அது அடிப்பட்டு வரவர நிகழும் பக்குவ விசேடத்தால் அதனினும் மிக்க வுணர்வுடைய ராய், நிட்களமாகிய அதிசூக்கும வடிவமே பொருள், சகளமுஞ் சகளநிட்களமு மதனை வழிபடுதற்கிடமாகிய திருமேனி யென வறிந்து அகத்தொழில் மாத்தி ரையால் ஆணைவழிக்கு விதித்தவாறே வழிபடுவது யோகம். சரியை கிரியை யோக மூன்றும் இவ்வாறு முறையே அடிப்பட்டு வரவர நிகழ்ந்து, பக்குவ முதிர்ச்சியின்மேல் உள்ளபடி யுணர்வு விளங்கி, அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப் பிழம்பே

சொரூபம், மற்றைச் சகளமுதலிய மூன்றுந் தூலாருந்ததி நியாயமாக அதனை யுணர்தற் பொருட்டும் வழிபடுதற் பொருட்டுங் கொண்ட திருமேனிகளா மென றிவ்வாறறிந்து, காயத்தொழின் மனத்தொழி லிரண்டையுங் கைவிட்டுக், கேட்டல் சிந்தித்த றெளித னிட்டை யென்னு மறிவுத் தொழின் மாத்திரையால் வழிபடுவது ஞானம்.

ஞானிகள் ஞானமுதலிய நால்வகைத் தொழிலுஞ் செய்தற் குரியர். யோகிகள் யோகமுதலிய மூவகைத் தொழிலுஞ் செய்தற் குரியர். கிரியையாளர் கிரியை சரியை யென்னு மிருவகைத் தொழிலுஞ் செய்தற் குரியர். சரியையாளர் சரியைத் தொழி லொன்றுமே செய்தற் குரியர்.

ஏகதேசமாகக் குறிக்கப்பட்ட சிவலிங்கமுதலிய தாவரத்திருமேனியில் அன்பினால் வழிபாடு செய்யு ஞானிகட்குப் பரமசிவன் கன்றை நினைந்த புனிற்றாவின் முலைப்பால் போலக் கருணை மிகுதியினால் அவ்வவர் பேறாக எப்போதும் ஆண்டு வெளிப்பட்டு நின்றருள் செய்வன். சிவலிங்க முதலிய திருமேனியிற் சாத்திய மந்திரங்களால் வழிபாடு செய்யும் யோகிகட்குப் பரமசிவன் சந்திரகாந்தத்திற் றோன்றும் பால் போல அவரவர் விரும்பிய வடிவா யத்திருமேனிகளி லப்பொழுது தப்பொருளாகத் தோன்றி நின்றருள் செய்வன். அருவப் பொருளாகிய பரமசிவன் ஈசானாதி பஞ்சப்பிரம முதலிய திருவுருக் கோலங்களைக் கருதி மந்திரநியாசத்தா னன்றிச் சகளீகரித்துப் பூசிக்குங் கிரியையாளர்க்குப் பரமசிவன் மந்திரங்களால் விரும்பியவடிவா யத்திருமேனியி லப்பொழுது தோன்றி நின்றருள் செய்வன். பகுத்துணர்தலின்றிச் சிவலிங்க முதலிய திருமேனிகளைச் சிவமெனக் கண்டு வழிபடுஞ் சரியையாளர்க்குப் பரமசிவன் முன்னிலைப் படுதலின்றி நின்றருள் செய்வன்.

இவ்வாறு சொல்லப்பட்ட சரியைமுதலிய நான்கு ஞானமேயாம். ஆயினும், அருவுருவமாகச் சரியையும் சோபான முறையாகிய தம்முள் வேறுபாடான முறையினால் வேறாகக் கொண்டு அதுபற்றி நான்கா மென்னு முறைக்க ணின்று ஞானமுதலியவற்றை ஞானமாம் ஆகவே யிந்நான்கினு மறிவு நுணுகி வர வர விபாக வேறுபாடும் மேன்மேல் சேயந்து வரும். இனிச் சரியைக்குப் பயன் சாலோகமாம். கிரியைக்குப் பயன் சாமீபமாம். யோகத்துக்குப் பயன் சாரூபமாம். இவை மூன்றும் பதமுத்திகளாம். ஞானத்துக்குப் பயன் மலநீக்க முற்று சிவசாயுச்சியம் பெறுதலாகிய முடிவாகிய பரமுத்தியாம். இம்முத்திநிலையி னான்மா தன்செயலொழிந்து அறிவுமாத்திரையாய்ச் சிவத்தோடு கூடிச் சிவமாய் அகண்டமெங்கும் வியாபித்து முழுதும் வியாபகமாய் நின்றறிவாகிய சைதன்னியப் பிரகாசமாய் சேவலமாய் நின்று முடிவுகாணில லாப் பேரின்பத்தை யனுபவிக்கும். பரமேசனைப் பற்றிப் புகழ்ந்த சுத்தாத்துவித சாயுச்சிய வியல்பிதுவேயாம். அபரமுத்திகளுள் முதலதான சாலோகமாவது அவ்வப் புவனபதி யுலகங்களி லவ்வப் பதியொருவர் மனையிற் பணிசெய்யு மகத்தொண்டர்க்குள தாகிய வுரிமைபோல அவ்வவ்வுலகத்துள் யாண்டுந் தடையின்றி யியங்கி யவ்வப்போகங்களை நுகர்ந்து வாழ்வது. சாமீபமாவது அவ்வவர்வின்றி மைந்தர்க்குள தாகிய வுரிமைபோல அவ்வப்புவனபதிகளுக்குக் கணுக்கராய வைகி யவ்வப் போக விசேடங்களை நுகர்ந்து வாழ்வது. சாரூபமாவது அவ்வவரின்றித் தோழர்க்குரிய வுரிமைபோல அவ்வப்புவனபதிகளோ டொத்த வடிவமு மொத்த வணிகலனு மொத்த போகநுகர்ச்சியும்

பெற்று வாழ்வது. இனி யிம்மூன்று முறிமை விசேடம்பற்றி முறையே தொண்டர் மைந்தர் தோழரென்பா ரியல்பை யொத்தலால், இவற்றை யடைவிக்கு நெறியாகிய சரியை தாதமார்க்கமென்றும், கிரியை யுத்திரமார்க்கமென்றும், யோகஞ் சகமார்க்க மென்றும், பெயர் பெறுதிடும்.

இனிச் சரியை கிரியா யோகமென்னு மூன்று பாதங்களை யுணர்த்துஞ் சைவ நூல்கள். ஞானாமிர்தஞ் சிவதருமோத்தரஞ் சைவசமயநெறி நித்தியகருமநெறிகுறள் பரமததிமிரபானு தத்துவப்பிரகாச முதலாயின.

ஞானாமிர்தம்.

இது நிறைந்தநாயனார் சந்தானத்துப் பரமானந்தமுனிவ ரருள்பெற்ற வாகீச ரருளிச்செய்தது. இது "வெண்டிரைக் கருங்கட லேழும விணைடொட" னென்னுஞ் செய்யுண் முதலாக, "ஆருக்கூறிய வதத்துவாமற" றெனபதீறாக எழுபத்தைந்து அக வற்பாக்களுடையது. இந்நூல் பதிமுதலிய பதார்த்தங்களிலக்கணந் தருக்கமுறையிற் றடைத்தூக விடுத்த தினிது விளக்குவது. பாநெறியிற் சங்கச்செய்யுண் முறையா னடப்பது. இது பெரும்பான்மையுஞ் சோமசம்புசிவாசாரியா ஞானசிவாசாரிய ரியற்றிய பத்ததிகளின் மொழிபெயர்ப்பாய நிலவினும், அப்பத்ததிகளுக்கு முதலான சைவா கமங்களின் கருத்துக்களையுந் தழுவிநடப்பது. ஆசிரியர் சிவஞானயோகிகள் சிவஞான போதப் பொதுவதிகாரத்திற் கியற்றிய சிவஞானமாபாடியவுரையி னிந்நூற் செய்யுட் பகுதிகளை யாண்டாண்டு மேற்கோளாக வெடுத்துக் காட்டியருளினார்.

சிவதருமோத்தரம்.

இஃதியற்றினார் மறைஞானசம்பந்தர். இவர் வடமொழிச் சிவதருமோத்தராகமத்தை அப்பெயரானே மொழிபெயர்த்துத் தென்மொழியா னியற்றியருளினார். சிவ தருமோத்தரம் அறுமுகக்கடவுள் அகத்தியமுனிவற் கருளிச்செய்ததோ ருபாகமம். இது பரமதருமாதியியல், சிவஞானதானவியல், ஐம்பெருங்கையாகவியல், பலவிரதகாரண வியல், சிவதருமவியல், பாவவியல், சுவர்க்கநரகவியல், சனனமரணவியல், சுவர்க்க நரகசேடவியல், சிவஞானயோகவியல், பரிகாரவியல், கோபுரவியலெனப் பன்னிரண் டியல்க ளுடைத்து.

சைவசமயநெறி.

இஃதியற்றினார் மறைஞானசம்பந்தர். இது ஆசாரியரிலக்கண மாணாக்கரிலக்க ணம் பொதுவிலக்கணமென மூன்று விபாகங்களுடைத்து. இம்மூன்றுஞ் சிவாகமச் சரியை கிரியா யோக பாதப்பொருள் தொகுத்தெடுத்து விளக்கு நூல்கள். இவை யிம் மூன்றுமே யன்றி ஞானபாதத் தடத்தப்பொருள் சிலவு மெடுத்தோதும்.

சித்தாந்தசைவ ஞானசாத்திரம்.

இனிச் சைவாகமங்களிலுள்ள ஞானபாதப்பொரு ளுணர்த்துந் திராவிடசித்தா ந்த ஞானசாத்திரங்க டிருவுந்தியார்முதற் சங்கற்பநிராகரண மிறுதியாக வரும் பதினான்கு மாம். "உந்தி களிறு வுயர்போதஞ் சித்தியார் - பிந்திருபா வுண்மை பிரகாசம் - வந்த வருட்பண்பு வினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு - வுண்மைநெறி சங்கற்ப முற்று" என்னும் வெண்பாவினால் அப்பதினான்கின் பெயரு முறையு மறிந்துகொள்க.

திருவுந்தி

இது திருவியலூர் உய்யவந்ததேவநாயனா ரருளிச்செய்தது. பதிமுதலிய மும்பொருள்களின் சொரூபவியல்பு தொகுத்தெடுத்துணர்த்துவது.

திருக்களிற்றுப்படி.

இஃதியற்றினார் திருக்கடவூருய்யவந்ததேவநாயனார். இவர் மேற்கூறிய உய்யவந்ததேவநாயனார் மாணாக்கர். இந்நூல், திருவுந்தியின் கருத்தினிது விளக்க வெழுந்தது அதற்கு வழிநூலாய் நிலவுவது. இந்நூலாசிரியர், இந்நூலின் றெய்வத்தன்மை விளக்கவேண்டி, இந்நூலைத் திருவம்பலத்தின்கண்ணதான திருக்களிற்றுப்படியின் மேற்றியிறைஞ்ச, அத்திருக்களிற்றுக்கை நிமிர்ந்து இதனைவாங்கி நடராசர் திருவடியிற் சேர்த்தலின், திருக்களிற்றுப்படியென இதற்குத் திருநாமஞ்செய்பினரென்க.

சிவஞானபோதம்.

சைவாகமங்களினுள்ளவாகிய நாற்பாதங்களுள் வைத்து ஞானபாதத்தோதிய பொருளினை யாராய்ந்து மாராய்ச்சி யிந்நூலினைக் கணெடுத்துக்கொள்ளப்பட்டது. இவ்வாராய்ச்சிக்குப் பயன் யாதோவெனவும், இது கேட்டற்குரியார் யாவரெனவும், இதனானுதலப்படும்பொரு ளியாதெனவும், இதனைப் பயப்பிக்குங் கருவியா யிதற்குமுன் னொருதலையா யுணர்தற்பாலதியாதெனவும், இதனை வழங்குதற்கிட்ட பெயரியாதெனவும், இஃதியாண்டு வழங்குவதெனவும், இதன் முதனூலியாதெனவும், இந்நூல் செய்தாரியாவரெனவும், பலவாற்றா னாசங்கை நிகழுமன்றே, அவ்வாசங்கை நீங்கி மனவெழுச்சி சேறற்பொருட் டிந்நூன்முகத் துரைக்கப்படுவதாகிய

சிறப்புப்பாயிரம்.

“மலர்தலை யுலகின் மாயிருட் டுமியப்
பலர்புகழ் ஞாயிறு படரி னல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போ லீண்டிய
பெருமையாகக் கடவுளிற் கண்டுகண் ணிருட்டாந்
தருந்துயர்க் குரம்பையி னான்மா நாடி
மடாவற நந்தி முனிகணத் தளித்த
வுயர்சிவ ஞான போத முரைத்தோன்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணைச் சுவேதவனன்
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன்
பவநனி வன்பகை கடந்த
தவரடி புனைந்த தலைமை யோனே” எனவரும்.

உயர் சிவஞானபோதமென்றது ஏனை மூன்று பாதத்தை யாராயு நூல்கட்கு மேற்பட்ட சிவஞானபோதமென்றவாறு. எனவே, அந்நூல்க ளுணர்ந்தபின்னர் இந்நூல் கேட்கற்பாலரென்பது பெற்றாம். பெறவே, முன்னர்த் தீக்கையுற்றுச் சிவாகமங்களை யோதி யதன்பின் ஏனை மூன்றுபாதங்களை யாராயு நூன்முறையே கேட்டவ்வாறொழுகி மனந்தூயராய நித்தியா நித்திய வுணர்வு தோன்றிப் பிறவிக்கஞ்சி வீடுபேற்றின்க ணவா மிக்குண்டாயவழி, அவர்க் கிந்நூ லுணர்த்துகவென்பது போந்ததெனக்கொள்க.

இப்பாயிரப்பொரு ணூலிறுதியில் “எந்தை சனற்குமரன்” என்னும் வெண்பாவாற் பெறப்படுதலின், ஈண்டுக் கூறுதல் கூறியது கூறலாம் பிறவெனின்,— ஆகாது; “எந்தைசனற் குமரன்” என்பதனாற் பெறப்பட்டதனையே மாணாக்கர்க்கு நூன்முகத் துணர்த்தற்பொருட்டு ஈண்டுத் தந்துரைத்ததாகலா னென்பது. பிருகோத்திரத்திறுதி யிற் கூறும் வரலாற்றினை நாராயணசண்டவாசிரியர் நூன்முகத்துத் தந்துரைத்துள மிக்கருத்தோடுற்றி யெனக.

இந்நூ னந்திபெருமான் பெருஞ்சிறப்பு வரலாறென்னையெனின்,— கூறுதும். மாச
ங்கார முடிவின்கண் உலகங்களை மீளப் படைத்தற்பொருட்டுப் பரமான்மாவாகிய பர
மசிவத்தினுடைய பராசத்தி குடிலையை நோக்கியவழி, வேதாகமங்கள் குடிலையினின்று
நாதவடிவாயும், அதன்பின் விந்துவடிவாயும், அதன்பி னக்கரவடிவாயு முறையே
தோன்றின. பின் னவற்றைச் சொற்றொடர்ப்படுத்துச் செய்யுளாக்கப் பிறர்க் கருளிச
செய்தற்பொருட்டுப், பரமசிவன் ஈசானமுதலிய பஞ்சப்பிரம மனுக்களாகிய சத்திகளை
திருமுடிமுதலிய வவயவங்களாகச் சகளநிட்களத் திருமேனிகொண்டருளிச், சதாசிவ
மூர்த்தியாய் நின்று, தற்புருட முதலிய நான்கு திருமுகங்களானும் வேதங்களைத்
தோற்றுவித்து, வேதங்களை யனந்ததேவர் வழியானே பிரமனுக் கருளிச்செய்து, சிவா
கமங்களைப் பிரதிசங்கிதை முறையானே பிரணவர் முதலிய பதின்மரு மகாருத்திரர்
முதலிய பதினெண்மருமாகிய விருபத்தெண் மருக்குஞ் சிவபேத முருத்திரபேத மென்ப
பகுத்துத் தொரோவொன் றொவ்வொருவருக் கருளிச்செய்து, பின்பு மகுடமுறையானே
அவ்விருபத்தெட்டினையும் வித்தியேச ரெண்மரின் முதல்வராகிய வனந்ததேவர்க் கரு
ளிச்செய்தான். அவற்றை யனந்ததேவர் நூற்றெட்டுருத்திரரின் முதல்வரா
கிய ஸ்ரீகண்டருத்திரருக் கருளிச்செய்தார். அவற்றை ஸ்ரீகண்டருத்திரர் கணங்கட்கும்
தேவர்க்கு முனிவர்க்கு மளித்தற் பொருட்டு முற்றக் ணந்திபெருமானுக் கருளிச்செய்
தார். அங்ஙன மாகமங்களெல்லாங் கேட்டருளிய நந்திபெருமானை [illegible] முதலியோர்
வணங்கி நின்று, சிவாகமந்தோறுஞ் சரியை முதலிய [illegible] பானமை
வேறு வேறாகக் கூறப்பட்டன அவற்றுள் உண்மையாய [illegible] செய்ய
வேண்டு மென்றிரந்து விண்ணப்பஞ்செய்து [illegible], [illegible]
கருணை கூர்ந்து "நன்றேவினாயினாய், அனந்த [illegible]
னன்றும, கேட்பாயாக" என்றருளிச், சதபந்தோறும் [illegible]
கருத்து வேறுபாடும் பற்றி அவ்வத்தி [illegible] சரியை முதலிய [illegible]
மாகமங்களில் வெவ்வேறாகக் கூறப்பட்டன. ஆகலான், அவற்று [illegible]
வழி யார் தீக்கை பெற்றார், அவ்வச்சமயத்தினைவழி யவரொழுக [illegible]
பாதமாவது பொருட்டன்மை யுணர்த்துவதாகல்லின், அது பல [illegible]
மையின், அவையெல்லாந் தூலாருந்தக் முறைபற்றிக் கூறப்பட்டன [illegible]
னல்லவென்பது வகுத்துணர்த்தற்பொருட்டு இறைவரா [illegible]
தாற் கூறப்பட்டது சிவஞானபோத மென்ப [illegible]
வாகமப்பொருள்களு மாறுகோளின்றி யினிது விளங்குமெனக் [illegible]
போதத்தை நந்திபெருமானுக் கருளிச்செய்தார். நந்திபெருமானும் அதனைக் கேட்டு
யானே எல்லா வையமு நீங்கி மெய்ப்பொருள் [illegible] பின்னர் [illegible] பல
ரோருள்ளுஞ் சிறந்த சனற்குமார முனிக்கருளிச்செய்தார். அவர் [illegible]
புல்லோருள்ளுஞ் சிறந்த சத்தியஞானதரிசனிகளுக் கருளிச்செய்தார். அவர் [illegible]
க்கர் பலரோருள்ளுஞ் சிறந்த பரஞ்சோதிமாமுனிக் கருளிச்செய்தார். அவர் தமிழ்
நாடு செய்த தவத்தானே திருவெண்ணெய்நல்லூரி லவதரித்தருளி மெய்யுணர்வின்
முற்றுப்பேறுடையரா யெழுந்தருளியிருந்த மெய்கண்டதேவர்பால் வந்து, சிவஞான
போதத்தை நல்கி, "இதனை யீண்டுள்ளோ ருணர்ந்துய்தற்பொருட்டு மொழிபெயர்த்
துச் செய்து பொழிப்புரைக்க" வென்றருளிப், பொழிப்புரைக்குமாறுஞ் சத்தியஞா
னதரிசனிகள்பாற் றாங் கேட்டவாறே வகுத்தருளிச்செய்து நீங்க, அவரு மவ்வாறே
மொழிபெயர்த்துப் பொழிப்புரையுஞ் செய்தருளி, தம்முடைய மாணாக்கர் பலரோ

ருள்புரிந்து சிறந்த வருணந்திகுரவர்க் களித்தருளினர். இஃதிந்நூல் வந்த வரலாறெனக் கொள்க. மொழிபெயர்ப்புரையை வடநூலார் வார்த்திகமென்பர். மொழிப்பெயரினுங் காண்டிகையெனினு மொக்கும். பொழிப்புரை பிண்டப்பொழிப்பெனவுங் கண்ணழித்துரைக்கும் பொழிப்புரையெனவு மிருவகைப்படும்.* அவற்றுளிது கண்ணழித்துக் கடாவிடைகளா னுரைக்கும் பொழிப்புரையென வுணர்ந்து கொள்க. இனி யாசிரியர் வார்த்திகப்பொழிப்பு உரைச்செய்யுளானும் பாச்செய்யுளானுஞ் செய்யப்படுமெனனும் வடமொழி மதம்பற்றி யீண்டுக் கருத்துரையு மேற்கோளு மேதுவு முரைச்செய்யுளா னுரைத்தார்; உதாரணம் பாச்செய்யுளா னுரைத்தார்.

“இச்சிவஞானபோதத்து முன்னாறு சூத்திரங்களானே பெத்தத்தி னின்ற நிலைபற்றி இலக்கணங் கூறுதலின், அவை பொதுவியலெனவும், பின்னாறு சூத்திரங்களானே முத்தியி னின்ற நிலைபற்றி யிலக்கணங் கூறுதலின், அவை சிறப்பியலெனவுமாம். இனிப் பொதுவியல் புணர்த்த நூல்கள் பொதுவெனவுஞ் சிறப்பியல் புணர்த்த நூல்கள் சிறப்பெனவுங் கூறப்படும். சிறப்பியல்பு சகசமாயுள்ளதாகலின், உண்மையெனவும் படும். பொதுவியல்பு அளவை முகத்தானு மிலக்கண முகத்தானுங் கூறப்படுங் கேட்டல் சிந்தித்த லென்னு மிருதிறத்தா னுணரப்படும். சிறப்பியல்பு சாதக முகத்தானும் பயன்முகத்தானுங் கூறப்படுங் கேட்டல் சிந்தித்த றெளித னிட்டை யென்னு நான்கு திறத்தா னுணரப்படும். கேட்டல் சிந்தித்த றெளித னிட்டைகளை வடநூலார் முறையே சிரவண மனன நிதித்தியாசன நிட்டை யென்ப. “பல பொருட்குப் பொதுவாகிய விலக்கணம் பொதுவியல்பு” என்றும் “ஒரு பொருட்கே யுரிய விலக்கணஞ் சிறப்பியல்பு” என்றும், அவ்வாறு கூறப்படும் பொதுவியல்பு சிறப்பியல்பு வேறு, “தடத்தலக்கணஞ் சொரூபலக்கண” மென்னும் வடசொற்குப் பரியாயப் பெயராய் [illegible] கூறப்படும் பொதுவியல்பு சிறப்பியல்பு வேறெனத் தெரிந்துணர்ந்து கொள்க. இவ்விரு வேறு வகைக்குஞ் சொல்லொருமை மாத்திரையே பற்றி மயங்கற்க.

சிவஞானபோதம் இங்ஙனம் பொதுவியல்புஞ் சிறப்பியல்பு மொருங் குணர்த்தலின், முழு முதனூலாம். இனிச் சிவஞானசித்தி சிவப்பிரகாச மென்பன முறையே யிவ்விலக்கணம் பெற்ற வழிநூலும் புடைநூலுமாம். மொழிபெயர்த்துக் கூறு நூல்களின் [illegible] முதலிய பெரும்பாலும் பொதுவியல்பு மாத்திரையே கூறுதலிற் பொது நூலாம். திருவுந்தி திருக்களிற்றுப்படி முதலியன சிறப்பியல்பு மாத்திரையே கூறுதலின் உண்மை நூலாமென்பது. வடமொழியினும் பவுட்கர மிருகேந்திர முதலிய சிவாகமங்கள் பெத்தத்தி னின்ற நிலைபற்றி யிலக்கணங் கூறுதலின், அவை பொது நூலாம். சருவஞானோத்தர முதலிய சிவாகமங்கள் முத்தியி னின்ற நிலைபற்றி யிலக்கணங் கூறுதலின், அவை யுண்மை நூலாம். உபநிடதங்களினுஞ் சுபால முதலிய வுபநிடதம் முலகந் தோன்றி யொடுங்கு முறைமையுந் தோற்றியொடுங்குதற் கொரு கருத்தா வுண்டென்னு மாத்திரையும் போல்வன வுணர்த்துதலிற் பொதுவெனப்படும். சாந்தோக்கிய முதலிய வுபநிடதங்கள் இருவகையுங் கூறுதலிற் பொதுவுஞ் சிறப்புமாம். அதாவசிகை அதாவசிரஞ் சுவேதாச்சுவதரமுதலிய வுபநிடதங்கள் முத்திநிலையைப்பற்றிச் சாதகமும் பயனுங் கூறுதலின், உண்மையெனப்படும். அதாவசிகை முதலிய வுபநிடதங்களிற் கூறும் பொருள்களுஞ் சிவாகமப் பொருளை நோக்குமவழிச் சூத்திரமும் பாடியமும் போலத் [illegible] முறையவாம்.

இன்னருக்குப் பற்றியே வேதம் பொது நூலெனவும் ஆகமஞ் சிறப்பு நூலெனவுந் திருமந்திர முதலியவற்றிற் கூறப்பட்டனவென வுணர்க. "வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்கலுற்றாம்" என்றதூஉம் இம்முறை தெரிந்து கூறியதென்க. இவ்வுண்மை யுணர்ந்த பொருள் கோட்லே யுரைகோண் முறையாம். இனி யிவ்வுண்மை யுணர்ந்து பொருள் கொள்ளமாட்டாதார் உபநிடதங்க ளொன்றோ டொன்றுமுரணு மெனவும், உபநிடதமுஞ் சிவாகமமுந் தம்முண் முரணுமெனவும், சிவாகமத்துள்ளு மொன்றோடொன்று முரணு மெனவு மயங்கி, ஒன்றன் பொருளை பற்றி யேனைவற்றை யிகழ்வர். அற்றேல் லஃதங்ஙனமாக; வேதாந்த சித்தாந்த நூல்கள் அங்ஙன மிரு வேறுவகைப்படுத்துக் கூறவேண்டியதென்னை? சிறப்பியல் பொன்றே கூறவமையுமாலோவெனின்,— அமையாது; ஆன்மாக்கள் அங்ஙனந் தத்தமக்கு ரிய சோபான முறையி னறிந்து வருந் தன்மைக்கேற்பத் தூலாருந்ததி நியாயமாக வுணர்த்தவேண்டு மாகலி னெனக. "புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும் புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம-வறத்துறைக ளவையடைந்து மருந்த வங்கள் புரிந்து மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ்-சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேதச் சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றுறு சைவத் திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்" என்றதூஉ மிவ்வியல்பு நோக்கியே யெனக.

இங்ஙன மிவ்விருவகை யியல்பும் வேறுவேறு கூறு மாகமங்களின் பொரு ளொருமை யுணரமாட்டாது, ஒரோவொன்றே பற்றி யைசகியவாத முதற் பல திற த்தான் வேறுபட்டுத் தம்முண் மயங்குவார்க்கு அங்ஙன மயங்காது அவற்றின் பொரு ளொருமை யுணர்த்துதற் கெழுந்தது இச்சிவஞான போதமென்றறிக. இஃதறியாதார் எல்லா வாகமப்பொருளையும் பன்னிரு சூத்திரத்தாற் றொகுத்து விளக்குதற் கெழுந் ததிந்நூலென்றுரைப்ப. மிருகேந்திரத்தின் முதற்கணணதாகிய ஒரு சூத்திரத்தானே எல்லாவாகமப்பொருளுந் தொகுத்தெடுத்து விளக்கப்பட்டனவென்பது ஆண்டே யறியக் கிடத்தலானும், மற்று மங்ஙனந் தொகுத்துக் கூறு மாகமங்கள் பலவுள வாதலானும், அதுபற்றி யிதன்கட் போந்த விசேட மின்மையானும், "நாடிக் கண்டு மயா வற வளித்த சிவஞானபோத" மென்பதற்குத் தாற்பரிய மதுவாகாமையானும், அவ் வுரை ப்பன வெல்லாம் போலியெனவொழிக. "சிவஞானபோத" மென்பதூஉம் இக்காரண த்தாற் பெற்ற பெயர். அஃதெவ்வாறெனின்,—"உயர்ஞான மிரண்டா பாருமலைகல லகலாத மன்னுபோதத் திருவருளான் ஞானத்தை தெரிய வோதுஞ் சிவாகம மென் னூலகறியச் செப்புநூலே" எனப வாகலின், பரஞான மபரஞான மெனவிர ண்டுஞ் சிவஞானமெனப்படும், அவற்றுட் பரஞானத்தைப் போதிப்ப தெல்லா வா கமங்கட்கும் பொதுவாகலின், ஈண்டுச் சிவஞான மென்றது— அவ்வபரஞானமாகிய சிவஞானமேயாம். போதித்தல்-அவற்றி னிச்சயப்பொரு ளிதுவென வுணர்த்துதலாம். ஆகவே, சைவாகமங்களின் பொரு ணிச்சய முணர்த்தலது சிவஞானபோத மெனக் காரணக் குறியாயிற்றென் றுணர்க. இப்பொருள் வடமொழிச் சிவஞானபோதத்துப பாயிரத்துஞ் சூத்திரத்திற் பிறவாற்றிற் கூறியவாறுபற்றி யுரைக்கப்பட்டது. சிவ ஞானமெனப் பொதுப்படக் கூறினுந் தலைமைபற்றி ஞானபாதமே கொள்ளப்படும். ஞானபாதத்திற்குத் தலைமை "கிரியை யென மருவுமவை யாவு ஞானங் கிடைத்தற் கிமித்தம்" என்பதனாலறிக. ஆற்றேல், ஏனை மூன்று பாதப் பொருள்களை

யாராயு நூல்களியாவை யெனின்;— அவை சோமசம்புசிவாசாரியார் செய்த கிரியா காண்டக் கிரமாவலி முதலியவா மென்க. அற்றேல், ஞானபாதப்பொரு ளாராய்ச்சி நூலும் பிற்காலத் தாசிரியன்மாரே கூறு வன்மையும்; ஆகமத்துக் கூறவேண்டாமை பிறவெனின்,— ஆசிரியன்மார் அவை யனுட்டிக்கு முறை யாராய்ப் புகுந்தாரன்றி அவற்றிற்குப் பொருளொருமை கூறப் புகுந்தாரல்லர்; "அவை சிறுபான்மை தம்முள் வேறுபாடுடைய" என்றும், "யாயார் எவ்வாகமத்தின் முறையே தீக்கை பெற்றார் அவரவர் அவ்வாகமத்தின் முறையே யனுட்டிக்க" என்றும், "எக்கோயில் எவ்வாகமத்தின் முறை பிரதிட்டை செய்யப்பட்டது அக்கோயிலுக் கவ்வாகமத்தின் முறையே பூசை விழா முதலிய நடாத்துக" என்றும், "மாறிச் செயயிற் குற்றம்" என்றும், ஆகமங்களே கூறுதலின், அவற்றிற்குப் பொரு ளொருமை காட்ட லாகாமையின். சற்பிரதாயத்தானும், ஆன்மாக்கள் கருத்து வேறுபாட்டானும், அவ்வவற்றிற் கேற்பச் சிறுபான்மை தம்முள் வேறுபடக் கூறுதல் பொருத்த முடைத் தென்பது பற்றி யவற்றைக் கூறு மாகமங்கள் சிறுபான்மை யங்ஙனம் வேறுபட நிகழ்ந்தன. இனி ஞானபாதமாவது பொருட்டன்மை யுணர்த்துவதாகலின், ஆண்டு வேறுபடுதல் [illegible] ருந்தாராயினும், ஆன்மாக்களின் மலபரிபாக தாரதம்மியத்திற் கேற்பத் தூலருசியின் முறைமைத்தாக வுணர்த்துதன் மரபென்பதுபற்றி, அங்ஙனங் கூறு மாகமங்களை, நோக்குவோர், அவை யொன்றோடொன்று முரணுவனபோலக் கருதி மயங்குவர். அங்ஙன மயங்காமைப் பொருட்டு ஞானபாதப் பொருள்களை யெல்லாம் பொது வுண்மை யென விருவகைப்படுத்து ஆராய்ச்சி செய்தொரு தலையா னுணர்த்த வேண்டுதலின், அஃதேனையோரா லாகாமையின், வேண்டுமெனக. அங்ஙன முரணுவன போலத் தோன்றுவன யாவையெனின்,—சுவாயம்புவ முதலியவற்றிற் பதார்த்த மேழென்றலும், பவுட்கர முதலியவற்றி லொன்றென்றலும்; பராக்கியை முதலியவற்றி னைந்தென்றலும், சருவஞானோத்தர முதலியவற்றி லொன்றென்றலும், இரவுரவ மிருகேந்திர முதலியவற்றின் மூன்றென்றலும், போல்வனவா மெனக. அவை யெல்லா மூன்றென றதனு ளடங்குதலின். முப்பொரு ளென்றலே எல்லாவாகமங்கட்கும் துணிபெனக் காட்டுதல்போல்வன பொரு ளொருமை கூறுதலா மென்பது."

மங்கலவாழ்த்து.

"காமிகமுதலிய சைவாகமங்களுள் ஞானபாதப்பொருளி னிகலறுத் தவற்றின் பொருளொருமை போதித்தற்கு இரவுரவாகமத்தி னெழுந்த சிவஞானபோதநூலினைத் தமிழுலக முய்யற்பொருட்டு மொழிபெயர்த்துச் செய்து மொழிப்புணர்ப்பா னெடுத்துக்கொண்ட வாசிரியர் சாத்திரத்தே யதீதத்தைப் புரியுந் தமக்கிடையூறு சிறிது மணுகாமை யறிந்தாராயினும் ஆன்றோ ராசாரம் பாதுகாத்தற்பொருட்டும், மாணாக்கர்க்கறிவுறுத்தற்பொருட்டும், முற்றக் கிடையூறு நீக்குதற்குரிய கடவுளை வாழ்த்துவதாகிய மங்கலவாழ்த்துக் கூறுகின்றார். வாழ்த்தும் வணக்கமும் பொருளியல்பு புணர்த்து மென மங்கலவாழ்த்து மூவகைப்படும். இது பொருளியல் புரைத்ததெனக் கொள்க.

"கல்லா னிழன்மலை - வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர்-நல்லார் புனைவரே"

நந்திபெருமானுக்கு இறைவ னறிவுறுத்தருளிய முதலாசிரியரென்ப துணர்த்துதற்குக் கல்லா னிழலென விடங் கூறினார். ஆண்டெழுந்தருளியிருந்த சிவாகமப்பொருளை

னொன்றோடொன்று முரணுவனவாக மலைந்து விளைவிய நந்திபெருமானுக் கிரங்கான் மலைவு தீர்த்தருளினாரென்பார் மலைவில்லாரென்றார். இல்லார் இல்லாகச் செய்தாரை யப் பண்படியிற்பிறந்த வினைப்பெயர். இனி மலைவில்லா ரென்பது மேருவை வில் லாக வுடையா ரெனக் கொண்டு, கல்லானிழலி லெழுந்தருளி யிருந்து வீட்பேறும் மலையை வில்லாக வளைத்துப் பகைவரை வென்று போகமு மளித்தருளினாரெனினு மமையும். எனவே யைந்தொழிற்கும் வினைமுதல் லென்றவாறாயிற்று. அருளியவென் பது செய்யியவென்னும்வாய்பாட்டு வினையெச்சம்: "உண்ணிய புக்" கென்றாற்போல. அது புனைவரென்னும் பிறவினைமுதல்வினைகொண்டு முடிந்தது. அருளுதல் புனைத றலைமைபற்றிக் கல்லானிழலில் வீற்றிருந்து மலைவு தீர்த்தருளிய ஆசிரியர் கருணை மீக்கூர தல். அருளிய பொல்லாரெனப் பெயரெச்ச முடிபாக வைத்துரைத்தலு மொன்று. பொன்னார் பொல்லாரென மரீஇயிற்று; சுயம்பூசூத்தி யென்றதாம். இணைமலர் அன்புத்தொகை நிலைக்களத்துப்பிறந்த வன்மொழித்தொகையாய்த் திருவடியை யுண ர்த்திற்று. இணையென்பதனைத் திருவடிக்கடையாக்கி யிருபெயரொட்டாகுபெயரென் றலு மொன்று. இதறியல்பெல்லாஞ் சூத்திரவிருத்தியி னுரைத்தாம்; ஆண்டுக் காண்க. புனைவரென்பதற்கேற்பத் திருவடியை மலராக வுருவகஞ்செய்தாரென்றலு மொன்று. நல்லார் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து முதிர்ந்தார். புனைதலை நாடலை போலடங்கிநிற்றல் ஏகார மீற்றசை. தேற்றமெனினு மமையும். இப்பாட்டு வஞ்சித் துறை. இது கல்லென்பது முதல் ஏயென்ப தீறுவாய்ப் பன்னிரு சொற்களாற் கூறியே, இந்நூல் பன்னிருசூத்திரத்தாற் செய்யப்பட்டதெனவும், அவற்றுள் முன்மூன்று சொற்க ளொவ்வோரடியாக வைத்து நான்கடியாகக் கூறவே, இந்நூலும் அவற்றுள் மும்மூன்று சூத்திர மொவ்வோரியலாக வைத்து நான்கியலாற் செய்யப்பட்டதென வும், அவற்றுள் முன்னீரடியு மொரு வினைமுடிபும் பின்னீரடியும் பிறிதோர் வினை முடிபுமாக விருவகைப்படுத்துச் செய்யவே, முன்னாறு சூத்திர மோரதிகாரமும் பின் னாறு சூத்திரம் வேறோ ரதிகாரமுமாக விரண்டதிகாரத்தாற் செய்யப்பட்ட தெனவும், குறிப்பா னுணர்த்தியவாறு காண்க. இரண்டாமோத்தின் முதற்சூத்திரம் "இதுவுமது" வென முதலோத்தி னிறுதிச் சூத்திரத்தோடு மாட்டெறியப்படுவதென்ப துணர்த்துதற்கு மலைவென்பதனை யீரடியினுஞ் சார வைத்தார். கல்லானிழலென முத லடியினிடங் கூறவே முதலோத்துப் பிரமாணங் கூறுவதென்பதூஉம், இரண்டாமடி யில் மலைவில்லா ரருளியவென்னச் செய்கை கூறவே இரண்டாமோத்திலக்கணங் கூறு வதென்பதூஉம், மூன்றாமடியிற் பொல்லா வினைமலரெனத் திருவடி கூறவே மூன்றா மோத்துச் சாதகங் கூறுவதென்பதூஉம், நான்காமடியி னல்லார் புனைவரே யென்பேறு கூறவே நான்காமோத்துப் பயன்கூறுவதென்பதூஉம், குறிப்பாற் பெறப்படும் பிறவு மிவ்வா றோர்ந்துணர்க. இங்ஙன நூனுதல் பொருளெல்லாங் குறிப்பா றுணர்த்த லட க்கிநிற்றன் மங்கலவாழ்த்திலக்கணமென் றுணர்க. இவ்வாறு நால்வகைப்படுத்தோதிய நூ லென்பது "ஈண்டளவும் பொருளியல்பும் வேண்டுஞ் செய்தி முறைமையு மெய்த மொழி முத்தியெல்லாம்"என வழிநூலாசிரியர் வகுத்தோதியவாற்றானுங் காண்க."

அவையடக்கம்.

தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வா
ரெம்மை யுடைமை யெமையிகழார் — தம்மை
யுணரா ருணரா ருடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்.

'இவ்வண்ணம் அடக்கத்தானே அவ்விறைவனு லியம்பப்பட்ட நூலுணர்ந்தார் துயர்வும் ஏனைச் சமயநூலுணர்ந்தார் இழிவும் உணர்த்தப்பட்டன. ஏனைச் சமயம் புணர்ந்து தமையுடைய தன்னுணர்வார் என்றது, அத்துவித சித்தாந்த சைவரை. தம்மை யுணரார் என்றது அகம், அகப்புறம், புறம், புறப்புறமென்னு நால்வேறு வகைப் பரசமயத்தாரை. அவருடனியைந்து தம்மிற் புணராமையாவது:—பிறவிக் குருடர் பலர் அத்தியைக் கொண்டு வேழங் காண்டல் விருப்பான் அது நின்றுழிச் சென்று கையினா லொவ்வோ ருறுப்பினைத் தைவந்து வேழமாவது முறம்போல்வ தென்றும், உரல் போல்வ தென்றும், உலக்கைபோல்வ தென்றும், மலைபோல்வ தென்றும், தம்முண் மாறுகொண் டொருவரை யொருவர் மறுத்துக் கலாம் விளைத்தல்போலச், சித்தாந்த சைவநெறி நின்று ஞானத் திருவருள் பெறுதார் தத்த முணர்விற் கேற்பச் சமய நூல்கள் ஒவ்வொன்றினை யாராய்ந்தவற்றிற் கூறு மேகதேசப் பொருள்களைப்பற்றிப் பொருவரை யொருவர் மறுத்துத் தம்முண் மாறுகொண்டு கலாம் விளைத்தலை. அங்ஙனங் கலாய்க்கின்றுழிக் கண்ணுடையா னொருவ னோக்கி, இவர் செவிமுதலிய வொவ்வோ ருறுப்புகளைப்பற்றிக் கூறிக் கலாம் விளைக்கின்றா ரெனவும் வேழந் தனியக்கூறு வேறெனவுந் தெரிந்துணர்ந்து, அவர்களை யுணர்த்த லுறின், கொடிறும் பேதையும் போலத் தாம் கொண்டதே பற்றி யவனையுந் தம்மு ளொருவனாக வைத் திழித்துக் கூறி மாறுகொண்டிடலே யன்றிப் பொருளொன்றைக் கொள்ளமாட்டார். அதுபற்றி யவன் வெகுளா தவ ரியல்பிது வென நகையாடி யொழிந்துவிடும். அதுபோல வொவ்வொரு சமயநூல்பற்றி யங்ஙனம் பிணங்குவாரை யவையெல்லா மொவ்வோ ரேகதேச வியைபுபற்றிக் கூறினவாதலான் அவைபற்றிப் பிணங்கற்க வெனவும் பொருட்டன்மை வேறெனவும் யாம் இந்நூலா னுணர்த்தப் புகின், அவர் அதனைக் கொள்ள மாட்டாது பரிசில் யாத்தார் ருங்கொண்டதேபற்றி யெம்மையுந் தம்மு ளொருவ ராக வைத்திழித்துரைப்பாராகலின், அவ்வழி யாவ வெள்ளறிவது வென் றொழிவதே யன்றி யவனைக் கொள்ளா மென்பார் கேளாம்புறனென்றார். கேட்டல் பொருளாகக் கோடல். "அது ஊறுகேளாது" என்பதனுளும் "ஒன்றும் வேட்ப மொழிதல்" என்புழியும் மதிச் புறன் புறச்சமயம்பற்றி யிகழ்ந் துரைக்கு மொழியும் புறங் கூறு மொழியு மெனப் இரட்டுற மொழிதலாற் கொள்க. புறங்கூறு மொழியா வது புறச்சமயிக ளெல்லாந் பாடாண்வாதசைவர் முதலியோர் முன்னன்றிப் புறத்தே யிகழ்ந்து கூறுமொழி."

மலைவிளக்கேயுலகிற புறவிருளினீக்கிப் பொருள்களைக் கண்ணுக்குக் காட்டுதற்குப் பனிருவகைத்தாய ஞாயிறுபோல அஞ்ஞான மூலமல விருளினீக்கிச் சிவபரம்பொருளை யான்மாவிற்குங் காட்டி யனுபூதியி னிலைபெறுவித்தற்குப் பன்னிருசூத்திர ஞானஞாயிறு யெழுந்த திம்முதனூலெனக. முழுமுதற்பொருளாயப் பரமகாருணிகனாய பரமசிவன் றிருவாய்மொழியாய ஆரிய வேதோபநிடத சாரமனைத்து மொருங்கு திரண்டதூஉம், காமிகமுதலிய சைவாகம ஞானபாத சாரமனைத்து மொருங்கு திரண்டதூஉம், தமிழ்வேத சாரமனைத்து மொருங்கு திரண்டதூஉமாகி, இறை யுயிர் மல மென்னு முப்பொருளின் றடத்த சொரூப வியலெல்லாம் ஐய விபரீதமகற்றி யங்கை நெல்லிக்கனிபோல விளக்குதலிற் றன்னை தனக்கு ஒப்பாய சிறப்பது இச்சிவஞானபோத முதனூல் அது "வேதமப சுவதன்பால் மெய்யாகம நால்வ - ரோதுந் தமிழ்வேத முள்ளூறு - போதமிகு - நெய்யி னுறுசுவையா நீள்வெண்ணெய் மெய்கண்டான் -

செந்தமிழ் நூலின் திறன்" என்னு மாணவோர் திருவாசகாநுமதிக. இது எல்லாச் சமயங்களையும் நூலறுடமபியமாகச் சோபான முறையாற் றன்னகத் தடக்கி அத்துவித வைதிகத்தூக்கும் போதியது. இது கூறு மத்துவிதஞ் சுத்தாத்துவிதம். "பொய்கண்டார் காணாப் புனிதமெனு மத்துவித - மெய்கண்ட நாதனருண் மேவுநா ளெந்நாளோ" என்றார் தாயுமானவயோகியாரும். பொய்கண்டா ரென்றது - உடன்பட்டுரைக்கும் வின் முடிவு, கேவலாத்துவித மெனவும், விசிட்டாத்துவித மெனவும், பாவனாத்துவித மெனவுங் கண்ட வேதியாசாரியர்களை.

சிவஞானபோத வியாக்கியானம்.

வடமொழிச் சிவஞானபோத நூற்கு வடமொழி வல்ல வாசிரியர் பலர், வடமொழியில் வியாக்கியானங்கள் பற்பல செய்திட்டார். வடமொழியிற் சிவாக்கிரயோகீந்திர ரியற்றிய இதன் வியாக்கியானம் மிக விரிந்தது. ஏனையோர் செய்த வியாக்கியானங்கண் மிகச் சுருங்கின. இதனை வடமொழிச் சூத்திர பதார்த்தங்களைச் ஏகான்மவாதசைவருஞ் சிவாத்துவிதசைவரு மாண்டாண்டு நலிந்து பொருள்கொண்டு தத்தஞ் சமய முடிபாக்கிச் செய்த வியாக்கியானங்களுஞ் சிலவுள. அவை போலி வியாக்கியானங்க ளாதலை ஆசிரியர் சிவஞானயோகிகள் சிவஞான மாபாடியத்துள் ஆண்டாண்டு எடுத்து விளக்கினார்.

சிவஞானமாபாடியம்.

செந்தமிழ்நாட்டிற் பொதியமலைச்சாரலின் கண்ணதாய் விளங்கும் பாவநாசத் திருப்பதிப் பாலதான விக்கிரமசிங்கபுரத்தில் அகத்திய முனிவர் வரத்தாற் றிருவவதாரஞ் செய்து திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சிவாசாரியர் சந்தானகோர ஞான பானுவாய் விளங்குந் திருவாவடுதுறை நமச்சிவாயதேசிக பரம்பரை தழைப்பத் தனி தோன்றி, அக்குரு பரம்பரையில் விளங்கிய வேலப்பதேசிக ஞானாசாரியர்பாற் சிவஞான போத ஞானோபதேச வனுக்கிரகம் பெற்று, வடமொழி தென்மொழி மாப்பெருங் கடலை நிலை கண்டுணர்ந்து, அத்துவித சிவஞானானுபூதி கைக்கொண்டு, மெய்கண்ட சிவ ஞானபோதப் பிரதிட்டாசாரியசுவாமிகளாய் விளங்கிய சிவஞானயோகிகள், தென் மொழிச் சிவஞானபோத நூற்குச் சிற்றுரை யெனப்படும் லகுவ்யாக்கியானமுஞ் சிவ ஞானபாடிய மெனப் பெயரிய மாபாடியமு மருளிச்செய்தார். சிவஞானயோகிகள் சிவ ஞானபோதத்தி னுள்ளுறை யுண்மைக் கருத்துக்க ளெல்லா நாடிக் கண்டு மலைவறத் தெளிந்து தெளித்துச் சிவஞானமாபாடிய மருளிச்செய்தலின், இம்மாபாடியத்தாற் பொருளென்னக் கொள்ளப்பட்டன வெல்லாம் மெய்ப்பொருளாய்ப் பொருளல்லவெனத் தள்ளப்பட்டன வெல்லாம் பொய்ப்பொருளா யொழிதலொருதலை யெனக.

சிவஞானமாபாடியகாரர் சிவஞானபோத [illegible] முதலிய பிரகரணங் களினுஞ் சூத்திரங்களினு மாண்டாண்டு இயைபுபற்றி யெடுத்துத் தடைவிடை களான் மிக விரித் தருளிய பலவகைத் தத்துவ நுண்பொருட் பகுதிகளும், பலப்பல யுக்திகளும், அளவில வெனக. "தன்னாற் கூறப்படும் பொருளும், அதன்கண் ஐயப்பாடும், அதற்குப் பிறர் கூறும் பக்கமும், அதனை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபும், இயைபு மென்னும் இவ்வைந்துறுப்பு நிரம்பிய நிலைக்களம், ஓர் அதிகரணமெனப்படும். இவற்று ளியைபு - சாத்திரவியைபும், அத்தியாயவியைபும், பாதவியைபும், அதிகரணவியைபுமென நால்வகைப்படும்." இவ்வியைபினை வடநூலார் சங்கதியென்பர்.

சிவஞானசித்தி.

இது சிவஞானபோத முதனூற்பொருள் பிற்காலத்தார்க்கு இனிது விளங்குமாறு விரித்தல் யாப்பாற் சகலாகமபண்டிதரென்னுங் காரணப்பெயருடைய அருணந்திசிவாசாரியர் இயற்றிய வழிநூல். இவ்வருணந்தி சிவாசாரியர் மெய்கண்ட சிவாசாரியர் மாணாக்கர். இது மேலுமுரைத்தாம்.

சிவஞானசித்தி சிவாகமார்த்தங்களுக்கெல்லாம் உரையாணியாய் நிலைபெறுவது. "சிவத்துக்கு மேற் றெய்வமில்லை, அதுபோலச் சிவஞானசித்திக்குமேற் சாத்திரமில்லை" எனவும், "பாரவிரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே - யோர் விருத்தப் பாதி போதும்" எனவும், ஆன்றோர் எடுத்துப் போற்றுவராயின், இதன் பெருமை முழுதும் எடுத்துரைத்தல் யார்க்கு மரிதெனக. இது பரபக்கஞ் சுபக்கமென இருவகைப்படும். அவற்றுள், பரபக்கத்தில் உலகாயதன், சௌத்திராந்திகன், யோகாசாரன், மாத்தியமிகன், வைபாடிகன், நிகண்டவாதி, ஆசீவகன், பட்டாசாரியன், பிரபாகரன், சத்தப்பிரமவாதி, மாயாவாதி, பாற்கரியன், நிரீச்சுரசாங்கியன், பாஞ்சராத்திரி யென்னும் பரசமயத்தோர் மதங்களும், அவற்றின் மறுப்புக்களும், கூறப்படும். இவருள் உலகாயதன் சார்வாகன். சௌத்திராந்திகன், யோகாசாரன், மாத்தியமிகன், வைபாடிகனென்னு நால்வரும், புத்தநூலோர். நிகண்டவாதி ஆசீவகனென்னு மிருவரும் அருகனூலோர், இவரெல்லாம் வேதபாகியமான புறப்புறச்சமயத்தோர். பட்டாசாரியன் பிரபாகரனென்னு மிருவரு மீமாஞ்சைநூலோர். சத்தப்பிரமவாதி மாயாவாதி பாற்கரியனென்னு மூவரும் ஏகான்மவாதம் போதிக்கும் வியாசநூலோர். நிரீச்சுர சாங்கியன் கபிலநூலோன். பாஞ்சராத்திரி வாசுதேவநூலோன். இவரெல்லாம் வைதிகத்துட்பட்ட சமயத்தோர்.

இனி இதன் சுபக்கத்துக் குரைகண்டார் மறைஞானசம்பந்ததேசிகர், சிவாக்கிரயோகிதேசிகர், ஞானப்பிரகாசமுனிவர், ஆசிரியர் சிவஞானயோகிகள், நிரம்பவழகிய தேசிகர், சுப்பிரமணியதேசிகர் முதலியோர். ஸ்வபக்கம் - சுபக்கமென்றாயிற்று.

மறைஞானதேசிகருரைமுதல் சுப்பிரமணியதேசிகருரை யீறாயுள்ளனவெல்லா மூலத்திற்கேற்பச் சித்தாந்தசைவப்பொருள் போதிப்பனவாம். ஞானப்பிரகாசமுனிவருரை மூலத்தோடு மாறுபட்ட பொருள்கொண்டு சிவசமவாதம் போதிப்பதாம். ஞானப்பிரகாசமுனிவருரை யிங்ஙன மூலத்திற் கேலாதவாறு சிவசமவாதம் போதித்தல்கண்டே ஆசிரியர் சிவஞானயோகிகள் சிவசமவாதவுரைமறுப்பென வதற்கோர் நியாயகண்டன மியற்றியிட்டார். அக்கண்டன வரலாறு சிவசமவாதவுரை மறுப்பின் வரலாற்றின் விளக்கியிட்டாம், கண்டுபிடிக்க. ஆசிரியர் சிவஞானயோகிகளியற்றிய சிவஞானசித்திப்பொழிப்புரை முதனூற்சூத்திர வதிகரணக்கூறுபாடு முறையாகத் தெரித்து மூலத்தின் மெய்ப்பொருள் விளக்கி, ஏனையுரைகளை யளக்கும் அளவையாய் நிற்பது. சிவஞானசித்தியுரைகளு ளிஃதொன்றே மிக விரித் துணர்தற்பாலது. சுப்பிரமணிய தேசிகர் மெய்கண்டசந்ததிக்கோர் பானுவான திருவாவடுதுறை நமச்சிவாயதேசிகர் மரபினவாந ஞானாசாரியர். இக்குரவர் தம்மாசிரியரிய ஞான[illegible] விளங்கிய சிவஞானயோகிகள் பொழிப்புரையின் கருத்[illegible] ங்களைத் தழுவிச் சிவஞானசித்திசுபக்கப் பதவுரை [illegible]னர்.

இருபாவிருபஃது.

இந்நூல் அருணந்திசிவாசாரியர் தமக்குச் சிவஞானபோத வுபதேசஞ் செய்தருளி மலமகற்றி வீட்டை மேவுவித்தருளிய மெய்கண்டதேவர் திருவருள்வண்ண முழுவதுங் கண்டு தெளிவித்தவருளிச்செய்தது. இஃது வெண்பா அகவல் என்றிருதிறத்தாற் பப்பத்தாய் மெய்ப்பொருள் விரித்தலின், "இருபாவிருபஃது" எனத் திருநாமம் பெற்றது.

உண்மைவிளக்கம்.

இந்நூல் மெய்கண்டசிவாசாரியர் மாணாக்கருளொருவரான திருவதிகை மனவாசகங்கடந்தார் திருவாய்மலர்ந்தருளியது. இது ஆசிரியரை முன்னிலையாக்கிச், சித்தாந்தநூல் கூறுந் தத்துவரூபாதிகளின் திறஞ் செப்புவது.

சிவப்பிரகாசம்

இது மெய்கண்டசிவாசாரியர் முதன்மாணாக்கரான வாசிரியர் சகலாகமபண்டிதர்பாற் சிவஞானபோதஞ் சிவஞானசித்தி தோத்திரஞ் சிவானுபவ மிடையுற்ற மறைஞானசம்பந்தசிவாசாரியருபதேசத்தாற் சிவஞானபோதஞ் சிவஞானசித்தி யிவையாதியவற்றைப் பெற்ற கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியர், முதனூலான சிவஞானபோதம் வழிநூலான சிவஞானசித்தியென்னு நூல்களிரண்டினது பொருளினிது விளங்குமாறு அவ்விரண்டிற்கும் புடையாக வெடுத்தருளிச்செய்தலின், அவற்றின் புடைநூலாயத், தன்னை யோதியுணர்ந்த பக்குவராறிவிற் சிவம் பிரகாசிக்கச்செய்தலிற் சிவப்பிரகாசமெனனும் பெயர்த்தாய், நிலவுஞ் சித்தாந்த ஞானநூல். உமாபதிசிவாசாரியர் தில்லைவாழந்தணர். "அடியார்க் கெளியன் சிற்றம்பலவன் கொற்றங் - குடியார்க் கெழுதியகைச் சீட்டுப் - படியின்மிசைப் - பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து - முத்திகொடுக்க முறை" யென வம்பலத்தெம்பெருமான் விடுத்த திருமுகப்பாசுரங்கொண்டு, திருவருளை வியந்து தொழுது, பெற்றான்சாம்பானுக்கு முத்திகொடுத்தருளிய வித்தக ஞானாசாரியர். வடமொழியிற் பவுட்கராகமவிருத்தி சதரத்நசங்கிரக முதலியவும், தென்மொழியிற் திருவருட்பயன் முதலிய சித்தாந்தசாத்திரங்களும், திருவாய்மலர்ந்தருளிய திருவருட்செல்வர். இன்னுமிவர் ஞானானுபூதி யற்புத வரலாறுகள் பலவுள.

திருவருட்பயன்.

இது கருவிருட்பாசந் தீரத்தலைக்கந் திருவருட்பயன் பேற உமாபதிசிவாசாரியர் கடைப்பிடித்தியற்றிய சித்தாந்த ஞானநூல். இது பதிமுதுநிலை, உயிரவைநிலை, இருண்மலநிலை, அருளதுநிலை, அருளுருநிலை, அறிவுநெறி, உயிர்விளக்கம், இன்புறுநிலை, ஐந்தெழுத்தருணிலை, அணைந்தோர்தன்மை யென அதிகாரங்கள் பத்துடையதாய், விளங்குவது.

வினாவெண்பா

இது உமாபதிசிவாசாரியர் தமது ஞானாசாரியரான மறைஞானசம்பந்தசிவாசாரியர் முன்னிறீஇ வினாவுரையாற் பாசம் விடறவுந் திருவருணைச் சந்தலைக்கூடிடவுநாடிச், செய்தருளியதோர் சித்தாந்த ஞானநூல்.

போற்றிப்பஃறொடை.

இது பந்தமும் வீடு முந்தனருளால் உயிர்க்கு நிகழு முறையினைப் படியி னெல்லோர் தெளிந்துய்ய உமாபதிசிவாசாரியர் போற்றிப்பஃறொடையிற் சாற்றி யருளியதோர் சித்தாந்த ஞானநூல்.

கொடிக்கவி.

இது மாயாமல விருளின் றேயாது குளிர்ந்து மன்னுயிராருங் கண்டு பூரணவன் சொரூபம் தனனியொளருகிச சொலவொணுவினப வருள்வாருதி திளைக்குமாற்றி அருளெழுத்தினோபெற வெடுத்து நின்மல வெற்றிக்கொடியாய் விளங்கக் கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியர் காட்டியருளிய சித்தாந்த ஞானநூல்.

நெஞ்சுவிடுதூது.

இது மருட்பகை முழுசசூ மாயோபாதியும், மாணவின முட்டுறச் சமய வுபாதியும் போகச், செப்புதற்கரிய திருவருளாளரென திருக்கடந்தை மறைஞானசம்பந்த தேசிகன வெம்பந்தம் போகும் வினைமலரமர் திருவோலக்கங் கூடி, எந்தை கைப்பல வருந்த நீராய், செங்கமலப் பூந்திருந்தா டாராயெனப் பலகாற் குறிப்பின்றாகி, அவனை பூங்கொன்றை வாங்கு தந்தொன்று, நெஞ்சைத் தூதாவிடுத்தலைப் பொருளாகக் கொண்டு, உமாபதிசிவாசாரியர் செய்தருளிய சித்தாந்த ஞானநூல்.

உண்மைநெறிவிளக்கம்.

இது தத்துவரூபம் தத்துவதரிசனம் தத்துவசுத்தி, ஆன்மரூப மான்மதரிசன மான்மசுத்தி, சிவரூபஞ் சிவதரிசனஞ் சிவயோகஞ் சிவபோக மென்னுந் தசகாரியமுங் காட்டுங் கண்ணாடி போல யாவருந் தெரியுமாறு சுருங்கக் கூறியவாறு, உமாபதி சிவாசாரிய ரருளிச்செய்த சித்தாந்த ஞானநூல்.

சங்கற்பநிராகரணம்.

இந்நூல் செய்த காலம் இன்ன தென்பது புலப்பட "பொருங்கடல் உடுத்த வுலகங் கருங்கடல் வாங்கிக் - கதிரா [illegible] உறைந்த வெண்டிங்க ளுடையுள் - [illegible]லரை புணர்ந்து மேலவா மெய்யாக - கேட்டோ [illegible] செல்லும் பொருள் - [illegible] எவ்வெவ்வகை வாலவை - [illegible] பண்பு [illegible] - [illegible] ஞானிய - மாந்த ரிதுவே பொருளெனத் [illegible] - [illegible] மறைவேறே - இசையா மாறுபாடு கூறுவ [illegible] - [illegible] ஆகி [illegible] மாச்சரை வெருளுற மய சகி - [illegible] சமய - மூவிரு தொகுத்த மேல் யதாமு - மொனறே [illegible] - [illegible] திவறலு - [illegible] சமய - [illegible] - [illegible] பொருளே [illegible] - [illegible] நூலக [illegible] ராகி - யாசா [illegible] - [illegible] - [illegible] சசன மருவா திற பய - [illegible] - [illegible] - தேரு வெண்மா [illegible] - [illegible] - [illegible] வொருதலை முதலெ திர மனமே - [illegible] - [illegible] டவாகனி - [illegible] - [illegible] திறை [illegible] மாயா - [illegible] - மறை [illegible] வின [illegible] - [illegible] - நினையே வெவரு முனனே [illegible] - [illegible] வருளின [illegible] - [illegible] தலைமை யென - மறைவை குரைத்த சொற்றரு பொருள்கொடு - [illegible] மேதகு மோது நாலவகை [illegible] - வருள்சேர மாந்தர் [illegible] - [illegible] மூம விடையமுங் கறக்க - [illegible] துயனே" என்னு நூன்முகத்தா னறிக.

இதை இயற்றியருளினார் உமாபதிசிவாசாரியார். இது மாயாவாதி, ஐக்கியவாதி, பாடாணவாதி, பேதவாதி, சிவசமவாதி, சங்கிராந்தவாதி, ஈசுரவவிகாரவாதி, நிமித்தகாரணபரிணாமவாதி, சைவவாதி யென்பார் சங்கற்பங் கூறி அளவை மூன்றும் பொருந்துமாற்றால் நிராகரித்து சித்தாந்த மேன்மை தெருட்டுஞ் சித்தாந்த ஞான நூல். இவ்வாதிகளுள் மாயாவாதி வைதிக சாத்திரத்துட்பட்டோன். ஐக்கியவாதி யகப்புறச்சமயத்தோன். ஏனை யெழுவரும் அகச்சமயத்தோர். இறுதிக்கண் ணோதிய சைவவாதி சுத்தசைவன். சுத்தசைவன் சொரூபவிலக்கணஞ் சித்தாந்தசைவத்திற் சிறிது வேறுபடக் கூறுதலின் வேறு வைக்கப்பட்டான். ஆகலின், சுத்தசைவத்தைச் சித்தாந்தத்து ளடக்கிப் பாடாணவாதி முதல் நிமித்தகாரணவாதி யீறாக வெண்ணி யகச்சைவசமயம் ஆறாகக் கொள்க. நிமித்தகாரண பரிணாமவாதி யெனினுஞ் சிவாத்துவிதவாதி யெனினு மொக்கும்.

சாத்திரமரபியல் முற்றிற்று.

ஒழிபியல்.

மேற்கூறிய நான்கியல்களி னொழிபாக வெடுத்தோத, தமிழிலக்கண விலக்கிய சாத்திரப் புலமைகளை நிரப்புமாறும், அப்புலமைகளானே இகபர வீட்டுப்பேறுகளைச் சாதித்தெய்துமாறும், ஈண்டுக் கூறலுற்றாம்.

கல்விச்சிறப்பு.

இவ்வுலகத்துக் காணப்படும் உயிர்வருக்கங்களுள், ஐம்புலவுணர்வோடு நல்லதனலனுந் தீயதன் றீதும் பகுத்துணரவல்ல மனவுணர்ச்சியு முடையராய மேம்படுமக்கள், காத்திருத்துவ போத்திருத்துவ னெனுந்தத்துவமென்னுஞ் சவிகற்பஞானம் பயக்கும் வியஞ்சக ஞான காரணமாய விளங்குவது, வித்தையாம். வித்தை யென்னுங் கல்வி யெனினும் பொருந்தும். மக்கள், இயல்பாக மனவுணர்வுடையராயினும், சுத்தமாயா காரியத் தத்துவப்பிரமரூபமாகும் வித்தையி னுபகாரமின்றிச் சவிகற்பஞான வியாபார மெய்த மாட்டார். மக்கள் இயற்கையான மனக்கருவியின் னிருவிகற்ப ஞானச் செயலியுஞ் செயற்கையான கல்வியறிவின்றிச் சவிகற்பஞானச் செயலியு மெய்து வின்றார். நிருவிகற்பக்காட்சியாவது - பெயர் சாதி குணங் கன்மம் பொருளென் றிவற்றாற் பகுத்தறிதலின்றி இஃதொன்று தோன்றுகின்றதெனப் பொருளுண்மை மாத்திரையே யறியு ஞானசத்தி. சவிகற்பக்காட்சியாவது - பெயர் சாதி முதலியவற்றாற் பொருளை யுணர்வா றுணரு ஞானசத்தி. அவையவ்வாறு காட்டுதும். மாவென்பது ஒன்றன் பெயர். அதற்கு மாத்தன்மை சாதி. வண்ணம் வடிவு முதலியன அதன் குணம். நிற்றல் தளிர்த்தல் பூத்தல் முதலியன அதன் கன்மம். மரமென நிலைபெறுதல் பொருளாகும். ஒருசாத்தன் றன் கண்ணுக்குப் புலப்படாநிற்கு மொன்றைக் கண்ணொடு கூடிய வியல்பான மனக்கரணத்தால் இஃதொன்று தோன்றுகின்றதெனப் பெயர் சாதி முதலியவற்றாற் பகுத்தறிதலின்றிப் பொருளுண்மை மாத்திரையின் முன்னறியா நிற்கும். அங்ஙன மறிவுறுகின்ற வவனே அப்பொருளை இஃதியாதோவென வையுறுதலும் அதனை வேறொன்றாக மயங்கி நிச்சயித்தலுஞ் செய்து, பின்னர் அப்பொருட்கண் மிகுத்துத் தோன்றும் மாவென்னும் பெயர் முதலிய வைந்துங் கொண்டு எழுத்தாணியன்ற சொல்லால் விகற்பித்து

அதனைப் புலப்பட அறியும். இங்ஙனமாகலின், மக்கட்குச் சவிகற்பஞானங் கலாரூபமான சொல்லா னிகழ்தல் அனுபவசித்தமாம். சாத்தன் பிறர் செவிக்குப் புலனாக வுச்சரிக்குஞ் சொல்லினொலியு மிவையைத் தானும் பொருளைத் தன்னுள் விகற்பித்தறியுமா லெனின்,— அறியாது கூறினாய்; சொற்க ளுந்தியிற் சூக்குமையாயு நெஞ்சின்கட் பைசந்தியாயுங் கண்டத்தின்கண் மத்திமையாயும் விளங்கித், தன்செவிக்குப் புலப்படுஞ் சூக்குமவைகரியாய், இறுதியிற் பிறர்செவிக்குப் புலப்படுந் தூலவைகரியாய் வெளிப்படும் ஆகலின், சாத்தன் பிறர்செவிக்குப் புலனாகாமல் உள்ளே செய்யுஞ் சவிகற்ப வியாபாரமுஞ் சொல்லா னிகழு ஞானச் செய்தியே யெனக.

கல்விமாட்சி-"இம்மை பயக்குமா லீயக் குறைவின்றாற் - றம்மை விளக்குமாற் றாமுளரா கேடின்றா - லெம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோன் - மம்ம ரறுக்கு மருந்து" "அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும் - புறங்கடை நல்லிசையு நாட்டு - முறுங்கவ லொன்று - முற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியினூங் கில்லைச் - சிற்றுயிர்க் குற்ற துணை" "தொடங்குங்காற் றுன்பமா யின்பம் பயக்கு - மடங்கொன் றறிவகற்றுங் கல்வி" "வித்யா நாம நரஸ்ய ரூபமதிகம் ப்ரச்சந்நகுப்தம் தநம் | வித்யா போககரீ யஶஸ்ஸுககரீ வித்யா குரூணாம் குரு: | வித்யா பந்துஜநோ விதேஶகமநே வித்யா பரா தேவதா | வித்யா ராஜஸு பூஜ்யதே நஹி தநம் வித்யாவிஹீந: பஶு:", என்பனவற்றா னறிக.

இன்னும், சாதி யுடலோடொழியும். கல்வி யுயிரோடு செல்லும். ஆகலால், சாதி யுயர்ச்சியினுங் கல்வி யுயர்ச்சி மிக மேம்பட்டது. அது "மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங் - கற்றா ரனைத்திலர் பாடு" "வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங் - கீழ்ப்பா லொருவன் கற்பின் - மேற்பா லொருவனு மவன்கட் படுமே" "கடைநிலத்தோ ராயினுங் கற்றறிந்தோரைத் தலைநிலத்து வைக்கப் படும்" என்பனவற்றா னுணர்க. கற்றோர்க்கு எந்நாடு மெய்யூர்ந் தம்போலுற்றுப் பொருட்கொடையும் பூசையும் உவந்து செய்தற் கேதுவாம். ஆகலின், கல்விபோலச் சிறந்த நற்பொருள் பிறிதில்லை. அது "யாதானு நாடாமா லூராமா லென்னொருவன் - சாந்துணையுங் கல்லாத வாறு" என்பதனா னறிக. அரசனுக்குத் தன்றேயத்தின்கண்ணே சிறப்புண்டு. கற்றவனுக்கு அவன் சென்றவிட மெல்லாஞ் சிறப்புண்டு. ஆகலால், மன்னனினுங் கற்றோனே சிறப்பு மிகவுடையன். அது "மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின் - மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத் - தன்றேய மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச் - சென்றவிட மெல்லாஞ் சிறப்பு" என்பதனா னறிக. ஒருவயிற் றுதித்தோருள்ளும் ஒருகுடிப் பிறந்தோருள்ளுங் கற்றோனே சிறப்புடையன். அரசனுங் கற்றோன் காட்டிய வழியே செல்லுநீரன். அது "பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளுஞ் - சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியு - மொருகுடிப் பிறந்த பல்லோருள்ளு - மூத்தோன் வருக வென்னா தவரு - ளறிவுடை யோனா றரசுஞ் செல்லும்" என்பதனா னுணர்க. கல்விப்பொருள் இம்மிக்கா ரோடு தலைப்பெய்து அறியாதனவெல்லா மறிந்தோமென்றும், யாண்டு பலவாக நரையில மாயினமென்றும், உவத்தற் கேதுவாம். அது "யாண்டு பலவாக நரையில வாகுதல் - யாங்கா கியரென வினவுதி ராயின் - மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர் - யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனு - மல்லவை செய்யான் காக்கு மதன்றலை - யான்றவிந் தடங்கிய கொள்கைச் - சான்றோர் பலர்யான் வாழு மூரே" என்பதனு

ணர்க. செல்வப்பொருள் ஒருவனுக்கு நாட்டுமட்டிற்பயிற்றுணே யுதவுதலுடைத்து. கல்விப்பொருள் எழுமையினுந் தொடர்ந்துதவுதலுடைத்து. அது "ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற் - கெழுமையு மேமாப் புடைத்து" என்பதனா னறிக. இத்தகைச் சிறப்பெல்லா முடைய கல்வியினை நல்லாசிரியரை யடுத்து அவர்க் குற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்துங் கற்றல்வேண்டும். இங்ஙனங் கற்றோர் தலையாயார்; அல்லாதார்க்கு நாணிக் கல்லாதார் என்றுங் கடையாயார். அது "உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும் - பிற்றைநிலை முனியாது கற்றனன்றே" "உடையார்முன் னில்லார்போ லேக்கற்றுங் கற்றார் - கடையரே கல்லா தவர்" என்பனவற்றா னறிக.

இனி யறியவேண்டுவன வறிதற்குரிய தன்மைகளைப் பெற்ற தந்தை தன் மக்களைக் கற்றோரவையின்கண் அவரினு மிக்கிருக்குமாறு கல்வியறிவுடைய ராக்குதல் வேண்டும். அதுவே நன்மக்களுக்குத் தந்தை செய்யற்பாலதா முபகாரம். அது "தந்தை மகற்காற்று நன்றி யவையத்து - முந்தி யிருப்பச் செயல்" "ஈன்று புறந்தருத லென்றலைக் கடனே - சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே - நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே - யொளிறுவா ளருஞ்சம முருக்கிக் - களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" "எச்சமென் றொருவன் மக்கட்குச் செய்வன - விச்சைமற் றல்ல பிற" வென்பனவற்றா னறிக. தம்மக்கள் தம்மினு மறிவுடைய ராதல் மாநிலத்து மன்னுயிர்க் கெல்லா மினிதாம். அது "தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து - மன்னுயிர்க் கெல்லா மினிது" என்பதனா லறிக.

விலங்குகளுக்கு இன்னது சொல்லல் விசாரித்தறியுங் காரணமின்மையால், அவை யெதிர்கின்ற விடயங்களை நிருவிகற்பமாகவே யறியுந் தன்மை யுடையனவாம். இனி விலங்குகளைக் காட்டிலு மக்கள் எத்துணை வேறுபாடுடையரோ அத்துணை வேறுபாடு கல்லாதமக்களைக் காட்டிலுங் கற்றறிந்தமக்க ளுடையரென்பது. "விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல் - கற்றாரோ டேனை யவர்" என்னுந் திருக்குறளு மிதனை நிலையிடுதல் காண்க. கல்லாத மக்களு முடம்புடையாராய் இலங்கக் காண்டுமாலெனின்,— கல்லாத மக்கண்மாட் டுள்ள தோற்றப் பொலிவு மெழுகுப்பாவைபோல விழுக்காடாய விரையக் கெட்டுப் பயப்பா[illegible]றி யொழிதலின், அது ஒருதா விலங்கென் றெண்ணப்படும் போலக் கொள்ளப்படுத லன்றி நுண்மா ணுழைபுலமைச் சொல்லப்படாதாம். "கல்லாதா னொட்பங் கழியநன் றாயினுங் - கொள்ளா ரறிவுடை யார்" என்னுந் திருக்குறளு மிது தேற்றுமாறு காண்க. கல்வியறிவில்லாதார் மெய்ப்பொருள் காணமாட்டாரென்பதும், அஃதுடையாரே மெய்ப்பொருள் காண வல்லுநரென்பதும், "கல்லா நெஞ்சி-னில்லா னீசன்" "கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக் கறையிலாக் கருணைமா கடலை - மற்றவ ரறியா மாணிக்க மலையை" என்றற்றொடக்கத்துத் திருவாசகங்களா னறிக. "நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன் - னுண்மை யறிவே மிகும்" என்றருளிச்செய்தது, தீவினை பலவாயினுந் தாங் கல்வி நல்வினை பலவாயினுந் தாங் கல்வி போல நன்கு செய்தற் குபகார மாகமாட்டாது, தீவினைப்பயன் விளைவிற் பின்னிருந் திரங்குதற் குபகாரமாமென்ற குறிப்பாகலின், அது கல்வி மெய்யுணர்தற்குச் சாதகமாகு மென்பதூஉங் கூறாமுணர்த்தினமை. "காதன் மிக்குறின் கற்றவுங் கைகொடா" வென்னுஞ் சிந்தாமணியு மப்பொருட்டு.

கல்வியுடைமை பொருளுடைமையென் றிரண்டு செல்வமாயினும், கல்வி இம்மை மறுமை வீடுபேறுகளை மூன்றற்குஞ் சாதகமாகலின், "நற்பொருள் செய்வா

ர்க் கிடம் பொருள் செய் வார்க்கு மஃதிடம்" என்றார் சிந்தாமணி நூலார். ஆண்டு நற் பொருளென்றது கல்விப்பொருளை. கல்விப்பொருளி னுயர்ச்சி, "கேடில் விழுச்செல் வங் கல்வி யொருவற்கு - மாடல்ல மற்றை யவை." யென்பதனானு மறிக. விலங் கொடு மக்களென்னும் பொதுச்சொல்லாற் பெண்பாலாருங் கற்றற்குரிய ரென் பது கொள்க. "குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகு - மஞ்ச ளழகு மழ கல்ல - நெஞ்சத்து, நல்லம்யா மென்னு நடுவு நிலைமையால் - கல்வி யழகே யழகு" என விதந்தெடுத்தோதுதலானும், கல்வி ஆண்பாலார் பெண்பாலா ரிருவருக்கும் பொது வாதறிக. மற்று "நுண்ணறி வோடு நூல்பல பயிலினும் - பெண்ணறி வென்பது பெரும்பே தைமைத்தே" என்ற தென்னையோவெனின்,— பெண்பாலா ரியல்பின் மன த்திட்பம் பெரிதில ராதலின், அவர்கட்படுங் கல்வி ஆண்பாலார் கட்படுங் கல்விபோ லப் பெரிது நன்மைக் கேதுவாகா தென்ற கருத்தா னெங்ஙனங் கூறினா ராதலின், அஃதொன்றே அவர் கற்கற்பாலரல்ல ரென்பது முடியாதெனக. இதனையும், சவிகற்ப ஞானங் கல்வியா னெய்தற்பால தென்பதும், ஏனைச் சிறப்பும், அது ஆண் மக்கள் பெண்மக்களென் னிருபாலார்க்கும் பொதுப்பொருளென்பதும், தந்தை மக் கட்குச் செய்யு முதவி அவரைக் கல்வி யறிவுடைய ராக்குத லென்பதும், சொல்லப்பட்டன.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக."

கல்வி, கற்பிக்க வல்ல நல்லாசிரியரும், கற்றற்குரிய நன்மாணாக்கரும், எய்தினல்லது, பயன் படாமையின், கற்பிக்க வல்ல நல்லாசிரிய ரிலக்கணமும், கற்கு நன்மாணாக்க ரிலக்கணமும், முன்ன ரெடுத்தோதிக், கற்குமாறும், கற்கப்படு நூன்முறையும், பின்ன ரெடுத்தோதுதும்.

கற்பிக்கு நல்லாசிரிய ரியல்பு

உயர்குடிப்பிறப்பும், மனத்தூய்மையும், நல்லொழுக்கமும், பலகலைப்பயிற்சி யும், வாய்மையும், மாணாக்கர்மாட் டன்புடைமையும், பொருளவாவின்மையும், நடு நிலைமைய மென்னு மெண்வகை யிலக்கணங்க ளுடையராய்க், கொடையும், ஊக்கமும், உலகியலறிவும், நிலைபெற்ற தோற்றமும், பொறையும், நிறையும், மடப்பின்மையும், அறிவும், உருவும், ஆற்றலும், புகழும், சொல்வன்மையும், மாணாக்கரால் விரும்ப படு நீர்மையும், தொன்னெறியாற் பொருந்தினோர் கற்பிக்கு நல்லாசிரிய ராதற்கு உரியரென்றறிக. அது "வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும் - வான்யாற் றன்ன தூய்மை யும் வான்யாறு - நிலம்படர்ந் தன்ன நலம்பட வொழுக்கமுந் - திங்க ளன்ன கல்வியுந் திங்களொடு - ஞாயி றன்ன வாய்மையும் யாவது - மஃகா வன்பும் வெஃகா வுள்ளமுந் - துலாக்கோ லன்ன சமனிலை யுளப்பட - வெண்வகை யுறுப்பின ராகித் திண்ணிதின் - வேளாண் வாழ்க்கையுந் தாளாண்மையு - முலகிய லறிதலு நிலையிய தோற்றமும் - பொறையு நிறையும் பொச்சாப் பின்மையு - மறிவு முருவு மாற்றலும் புகழுஞ் - சொற்பொரு ணுணர்த்துஞ் சொல் வன்மையுங் - கற்போர் நெஞ்சங் காமுறப் படுதலு - மின்னோ ரன்ன தொன்னெறி மரபினர் - பன்னருஞ் சிறப்பி னல்லாசிரியர்" என்பதனா னறிக. குலம்புரி பிறப்பு - உயர்குலத்தோர் விரும்பும் பிறப்பு. திங்கள் உவாமதி. திங்களு ஞாயிறும் போலிரு ளகற்றிப் பொருள்களைப் புலப்படக் காட்டும் பெற்றியின வாதல் போல வாய்மையுடையார் பொருள்களை ஐய விபரீத மகற்றி மெய் யுணர்த்து நீர்

மையுடைய ரென்பார், திங்களொடு ஞாயி றன்ன வாய்மையு மென்றார். - இது தொழி லுவமம். நிலையிய தோற்றமாவது— எஞ்ஞான்றுஞ் சலியா வேற்ற நீர்மை. ஆற்றல், அறிவுத்திட்பம் காயத்திட்ப மென் றிவை ; அது அறிவு முருவு மாற்றலு மென வவ்விரண்டனையுஞ் சாரவைத் தோதியதனு னறியப்படும். காயத்திட்ப மனவலி, வாக்குவலி, உடல்வலி, யென மூன்றும். அறிவுத்திட்டம் இயற்கை யறிவுவலி செயற்கை யறிவுவலி யென விரண்டாம். புகழ்—நூற் கல்வி நிறைவு மதிநுட்ப நல்லொழுக்க மென்றிவை காரணமாகத் தாமுளராய ஞான்றும் பிறரை ஞான்று முயர்ந்தோர் வாய்ப்பட்டு நிகழ்ந்து எங்கும் பரந்து நிலவு நன்கு மதிப்புச் சொல் விளக்கம். சொற்பொரு ளுணர்த்துஞ் சொல்வன்மை - வாக்படுத்துவம். முதனூ லுடையவர் கொள்கை மேன்மை, சபையி றெளிவு கட்டுரை வன்மை என்புழிக் கட்டுரை வன்மையு மது. கட்டுரைவன்மை-கேட்டார்ப் பிணிக்குஞ் சொல்வன்மை. கட்டுதல்-பிணித்தல். அது "கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் - வேட்ப மொழிவதாஞ் சொல்" என்பதனானு மறிக. கட்டுரை வினைத்தொகை. இதற்குப் பிறரெல்லாந் தொடுத்துச் சொல்லு முறைவலி யென நோக்கின்றி யுரைத்தார். இனிக் கட்டளைபத காலங்கரந்த பெயரெஞ்சு கிளவி முதனிலையாதலின், அதனைச் சுட்டியென வினையெஞ்சு கிளவி யாக்குத லிடர்ப்பாடுமாம். ஆசிரியர் இவ்வியல் புடையரா யிருந்து நூல் கற்பிப்பின் மாணாக்கர் உறுதிப் பொருள் கசடறக் கற்றுக் கைக்கொண்டு நல்லொழுக்க மெய்தி மெய்யுணர்ந்து இகபர வீடு பேற்றுறுதிப் பயன்களைத் தப்பாது தலைக் கூடுப. இவ்வியல் பில்லா ராசிரியராய்க் கற்பிக்கப்படுகின்ற மாணாக்கர் நூற்பொருள் களை ஐயமு மருட்கையு முறத்தரக் கொண்டு துணிவிலராய்ப் போலியொழுக்க மேவிய பஃறலைப்பட்ட விவேக கதியுடையராய இகபர வீடுபேற் றுறுதிப்பயன்களை நணுற மாட்டார்.

கற்கு நன்மாணாக்க ரியல்பு.

ஆசிரியன் கற்பிக்கு நூற்பொருளைக் கற்பித்தவா றுணர்தலும், கற்பித்த பொருள் பற்றுக்கோடாகக் கொண்டு சூழ்ந்து வேறு நூற்பொரு ளுணர்தலும், தம்போலக் கற்பவர்க் குபகாரிக ளாதலும், தந்தை தாய் ஆசிரியர் முதலியோர் செய்ந்நன்றி யறிதலும், தீய சிற்றினச் சார்பின்மையும், சோம்பு தடுமாற்ற மான மறவி கடுநோய வெகுளி களவு காமம் என்ற இவை யிலராதலும், ஆசிரியனை யடைந்து வழிபடுதலும், தருமநெறி தவறாமையும், ஆசிரியன் குறிப்பறிந்து நடத்தலும், கேட்ட நூற்பொருளைச் சிந்தித்தலும், பாடத்தை மறவாமற் காத்தலும், மீட்டு மாசிரியனை யடைந்து கேட்ட நூற்பொருளை ஐய விபரீத நீங்க வினாவுதலும், நூற்றுணிபுடையார் பிறர் அறிந்து வைத்தாதல் அறியாது வைத்தாதல் ஐயுற்றுத் தலை வினாவும் நூற்பொருள் வினாக்களுக்கு அவர் கொள்ளு முறையான விடை கூறுதலும், நூற்பொருளைக் கற்றோ ரவையி லவ ரனுமதி கொண்டெடுத்துப் பிரசங்கித்தலு முடையராகி, உலகநடை யறிந்தொழுகுவோர் நூல் கற்றற்குரிய நன்மாணாக்க ரென்றுணர்க. அது "சொல்லிய பொருண்மை சொல்லியாங் குணர்தலுஞ் - சொல்லிய பொருளொடு சூழ்ந்தனன் குணர்த்தலுந் - தன்னோ ரன்னோர்க்குத் தான்பயப் படுதலுஞ் - செய்ந்நன்றி யறிதலுந் தீச்சார் பின்மையு - மடிதடு மாற்ற மானம் பொச்சாப்புக் - கடுநோய் சீற்றங் களவே காம - மென்றிவை யின்மையுஞ் சென்று வழிபடுதலு - மறத்துறை வழாமையுங் குறிப்பறிந் தொழுகலுங் - கேட்டவை நினைத்தலும் பாடம் போற்றலு - மீட்டவை வினவ

னும் விடுத்தலு முரைத்தலு - முடையராகி நடையறிந் தியலுநர் - நன்மாணாக்கர்" என்பதனு லறிக. இவ்வியல்புடைய மாணாக்கரே நூல் கசடற நன்கு கற்று நற்புலமை யெய்துப. இவ்வியல் பிலரோ நூல் கற்கப் புகினும், தெளிவும் புலமை நிறைவும் திட்பமு முறுமை மேலு நல்லுறுதியுந் தலைக்கூடமாட்டார்.

கற்குமுறை.

நூல் கற்றற்குரியராய நன்மாணாக்கர் தாங் கற்கு நூலின்கட் சில பொருள் கருகிற்றாயி னப்பொழு தவற்றினைக் கண்ணழுந்தற்க. முன் கற்ற நூற்களுதல், பின்பு கற்கு நூற்களுதல் இவை வெளிற்கிடக்கும்; அதுகண்டு தெளிதுமென்று கொண்டு மனவூக்கங் குன்றாது நூலுரை கற்க. விதி விலக்குக்கள் நூலுரைகளுட் சில சொற் பொருட்கு எடுத்தோதத்தா லெய்துத லற்றுஞ் சில சொற் பொருட்கு அங்ஙன மெடுத்தோதத்தா லெய்துத லுறுதும் வரக் காணப்படின், அவற்றிற்கு விதிவிலக்கு ஆசிரியரோதாமைக்குக் காரணம் யாதென்று மனங்கலங்கற்க; ஆசிரியர் தாமெய்து வித்தன வெய்தாதனவற்றிற்கு மெய்துமாறு உபலக்கணம் பற்றி நூலுரை செய்யு நீராகலின். உபலக்கணக் கூற்றுக்கள், "காணுங் கண்ணுக்குக் காட்டுமுளம்போல்" "கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான் - றாளை வணங்காத் தலை" யென்பன போல்வன. முன்னறிதற்குப் பின்னறிவது மாறாயின, அவ்வளவில் முன்னதே விதி பின்னது வழுவென்றேனும், பின்னதே விதி முன்னது வழுவென்றேனுங் கதுமெனக்கொண்டு நூலுரைப்பொருள் சிதைவுசெய்யாது, இஃதென்னூல்விதியோ மற்றெவ்வுரை விதியோ வென் றெண்ணி நூலுரை கற்க. நூலுரைகளைச் சிலநாட் கற்ற மாத்திரையாற் புலமை யெய்திற்றிலமென் றூக்கங் குன்றற்க. நூலுரைகளைப் பலநாட் கற்று அவற்றின்கட் பயிற்றலுஞ் செய்யின், புலமை தப்பாது பலிக்கும். நூலுரைகளை விரைவா னோக்கற்க. அங்ஙன நோக்கின், யாதுந் தெரியாது. விரையாது நூலுரைகளை யுற்று நோக்கின், தெரியாத பொருளில்லை. கற்கு நூலுரைகளிற் கருத்தினை மட்டுப்படுத்திக் கற்ற நூலுரைகளிற் கருத்தினைச் சிந்தாம லிறுக்குக. நூலுரைப்பொருள்களை வரம்புசெய்யாது இருகான் முக்காற் கேட்டலிற் பயனின்று. ஆகலின், நூலுரைப்பொருள்களை வரம்பு படுத்துக் கற்க. அங்ஙனங் கற்றபின், ஒருகா லிறுப்பினு மந்நூலுரைப் புலமை யுளதாம். ஆசிரியனுக்குப் பொருள் கொடுத்தலும் பின்சென்று செல்லுதலும் பணிதலு முற்றூழி யுதவுதலுஞ் செய்து கற்க. இடம் பொருளேவல்களுடையராய்ச் சிறப்புச்செய்யினும், கல்வி விருப்பில்லாத மந்த மாந்தர்களோடு கூட்டுறவு செய்யற்க. நுண்மாணுழைபுல முடையாரைப் பெறின், சில கொடுத்து மவரோடு பழகுக. மனமிடர் நோய் முதலிய வேதுக்களாற் கலங்குஞ் செவ்வியி னூலுரை யாய்தலை யொருஞான்றுஞ் செய்யற்க. புலமைப் பேற்றிற்குச் சிறந்த கருவி யாசிரியன்பான மெய்யன்பு மெய்வழிபாடு முடையராதலாம்.

மக்களறிவு தாங் கற்கு நூலளவாக விரியுமாகலின், நல்ல நூல்களை முழுது முறையாற் கற்க. ஒருதுறைநூ லொருவகை யறிவினையே யுதவுமாகலின், பலவகை யறிவுவேண்டிப் பலவகை யறிவுநூல்களைப் பலவாறு நாடிக் கற்க. "தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக் - கற்றனைத் தூறு மறிவு" "அறிதோ றறியாமை கண்டற்றால்" "நீரளவே யாகுமா நீராம்பல் தான்கற்ற - நூலளவே யாகுமா நுண்ணறிவு" "நூல்பல கல்" என்னு முதுமொழிகளாலு மிவை துணிக. கண்ணொளி விளக்க மெய்திக் காணுடல் வியாபார நிகழ்த்துதற்கு ஞாயிற்றினொளி முதலியன வின்றியமையாத

உபகார காரணமாதல்போல, மக்க ளான்மஞானம் விளங்கிச் செய்தொழில் வன்மை யுறுதற்கு, அங்ஙனங்கூறியபடி யெங்கு நிறைந்து நிற்குங் கடவுளருட்சத்தி இன்றி யமையாத வுபகார காரணமாம். ஆகலின், அறிவு விளக்கம் வேண்டி நூலாயு நன் மாணாக்க ராசிரியவழிபாட்டினோடு ஈசுரவுபாசனையுங் கடைப்பிடித்துச் செய்துவருக. "அருளினா லாகமத்தை யறியலா மளவினாலுந் தெருளலாம்" என்பவாகலின், கற்கு நூலுரைச் சொற்பொருள்களை யென்றுந் திருவருளினோடு சேர்த்துக் கற்க.

கற்கு நூன்முறை

விதிப்படி வித்தியாரம்பஞ் செய்து நல்லாசிரியரை யடைந்து நற்றமிழ் நூல் கற்கப்புகு நன்மாணாக்கர் முன்னர்த் தமிழ் நெடுங்கணக்கு கற்றுக்கொண்டு ஆத்திசூடி கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி முதலிய வுலக நீதிநூல்களைக் கற்றுப் பின்ன ரவைகளின் பொருள்களை நன்று தெரிந்துகொள்க. அதன்பின் நிகண்டு கற்று அது கூறுஞ் சொற்பொரு ளுணர்ந்து முதுமொழிவெண்பா, நீதிநெறி விளக்கம், நாலடி, ஆசாரக்கோவை முதலிய நீதிநூல்களைக் கற்று அவற்றின் பொரு ளையு மவற்றின்கண் வரு நிகண்டிற் சொற்களையு நன்குண ரறிந்துகொள்க. அதற்குப் பின் சைவநன்மாணாக்கர் சைவாசாரியரால் வைதிகசைவசாத்திர மோதுதற்கு வேண் டுஞ் சைவ சமஸ்காரமும் வைணவ நன்மாணாக்கர் வைணவாசாரியரால் வைணவ நூ லோதுதற்கு வேண்டும் வைணவ சமஸ்காரமும் விதிப்படி பெற்று, முறையே பஞ்சாக்கர வட்டாக்கர மந்திர தந்திர செப வனுட்டான முடையராய்த், தேவாரந் திரு வாசக நாலாயிரப்பிரபந்த மென்னுந் தமிழ்வேதங்களைப் பண்முறையாகவுஞ் சுத்தா ங்கமாகவு மோதப் பழகிக்கொள்க.

அதன்மேல், நல்லியற்புலவ ரியற்றிய தமிழிலக்கணச்சுருக்கங் கற்றுக்கொண்டு, திருவிசைப்பா, திருமந்திரம், திருப்பல்லாண்டு, பதினோராந்திருமுறைப்பிரபந்தங்கள், குமரகுருபரமுனிவர் பிரபந்தங்கள், சிவப்பிரகாசமுனிவர் பிரபந்தங்கள், சிவஞான யோகிகள் பிரபந்தங்கள், ஆழ்வார்கள் பிரபந்தங்கள் முதலியவைகளையும், பெரிய புராணம், கோயிற்புராணம், காஞ்சிப்புராணம், தணிகைப்புராணம், திருவிளையாடற்புரா ணம், பிரமோத்தரகாண்டம், காசிகண்டம், பிரபுலிங்கலீலை, பாகவத முதலிய தமிழ்ப் புராணங்களையும், இராமாயணம், பாரதமென்னுந் தமிழிதிகாசங்களையு முறையாற் கற்று, இலக்கியவறி வீட்டிக்கொள்க. அதன்மேல், நன்னூல், இலக்கணவிளக்கம், யாப்பருங் கலம், காரிகை, அகப்பொருள்விளக்கம், புறப்பொருள் வெண்பாமாலை, வெண்பாப்பா ட்டியல், தண்டியலங்காரம், வீரசோழியம், நேமிநாதமென்னு மிலக்கண நூல்களை யவற்றின் காண்டிகை விருத்தியுரைகளோடு நன்குகொள்ளக் கற்றுக, கற்றவிலக்கியங்களில் இப்பஞ்சலக்கண நூல்விதிக ளமைவர நன்று பயில்க. இதுகாறுங் கூறிய வியவில க்கிய விலக்கண நூலுரைகளை முறையா லுணர்ந்துகொள்ளக் கற்றுத் தமிழ்ப்புலமை யெய் திய நன்மாணாக்கர் **இளந்தமிழ்ப்புலவர்** (F. A.) என்னுங் கல்விப் பட்டாபிதானத் துக் குரியரென் றுணர்க.

அதன்மேல், தொல்காப்பிய வெழுத்ததிகாரஞ் சொல்லதிகாரம் பொருளதிகா ரங்களை யிளம்பூரணஞ் சேனாவரைய நச்சினார்க்கினிய மென்னு முரைகளோடு நன்று கற்றுச், சிந்தாமணி, சிலப்பதிகார மணிமேகலை, சூளாமணி, நைடத மிரகுவம்ச மென் னுந் தமிழ்க்காவியங்களை, உரைகளோடு நன்று ஆராய்ந்துகொள்க.

அற்றே லக்ஷணமாக; "சேக்கிழார் சிந்தா மணிப்பயிற்சி தீதெனவே - தூக்கியுப தேசித்தார் சோமேசர்-நோக்கிற-பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல் - மக்கட் பதடி யெனல்" என்றாசிரியர் சிவஞானயோகிக ளருளிச்செய்தலின், சிந்தாமணிப் பயிற்சியுஞ் சிந்தாமணி யென்ற தீபலக்கணமாகலின், அது போலுஞ் சிலப்பதிகார மணிமேகலை சூளாமணிப் பயிற்சியுஞ் சைவ வைணவ நன்மாணாக்கர்களுக்கு ஆகாவெனின்,—அஃதொக்குமன்றாயினும், சிந்தாமணிமுதலிய காவியங்களிற் பொதுவான வுலகியல் நீதி வைராக்கியங் கூறப்படுதலானும், தொல்காப்பிய வியற்றமிழ்ப் பிரயோக மிக வருதலானும், அப்பயன் நோக்கிச் சைவ வைணவ நன்மாணாக்க ரவையுங் கற்கற்பால ரென் றெய்த்தோதினும். இனிச் சைவ வைணவ நன்மாணாக்க ரக்காவியங்களைக் கற்க வேண்டின், தத்தஞ் சமய சித்தாந்தப் பார்வையாற் கற்க. ஆத்தனூல்களிற்போல வவற்றினைக் கண்மூடிக்கற்க வென்பார், "சிந்தாமணிப் பயிற்சி தீது" என்றார். பயிறல் பலகாலுளங்கொள வழுந்தி யாராய்தல். மன மொன்றிலழுந்தின் அதன் வண்ணமாய மாறுமென்ப தனுபவ மாகலின், வேதப்புறமாய வவ்வாருகத பௌத்த காவியங்களிற் பலகாலழுந்திப் பயில்வோர் தம வைதிக நெறி கைவிட்டவை கூறுங் கொள்கை வசத்தராயவைதிகராவ ரென்பது பெரியோர் கருத்தென்க. வைதிக காவியங்களி னியல்பும், அவைதிக காவியங்களி னியல்பும், வைதிககாவியதூடணமறுப்பில் விரித்தோதினும்.

அதன்பின், தருக்கசங்கிரகதீபிகை தருக்கபரிபாடை கற்றுத் தருக்க வறிவுடையராகுக. அதன்மேல், இறையனாரகப்பொருளுரை, பிரயோகவிவேகவுரை, இலக்கணக்கொத்துரை, தொல்காப்பியசூத்திரவிருத்தி, இலக்கணவிளக்கச்சூறாவளி யென்பவற்றை மதியமையக் கற்று இலக்கணவறிவு விரியச் செய்துகொண்டு, பத்துப்பாட்டு எட்டுத்தொகை, கலம்பகம், பெருந்தேவனார்பாரத மென்னுஞ் சங்க விலக்கியங்களை யவற்றுரைகளோ டாராய்ந்து, பின்னர்த் திருக்குற டிருக்கோவை யென்னுந் தெய்வ விலக்கியங்களைப் பரிமேலழகியாருரை பேராசிரியருரைகளோ டறிவமையப் பல முறை நன்காராய்ந்து தமிழ்ப்புலமை நிரப்பிக்கொள்க.

இன்னும், தமிழ்ப் பெரும்புலமைக் கின்றியமையாத வடமொழி யிலக்கிய விலக்கண வாராய்ச்சியும், பூகோள ககோள கணிதநூலாராய்ச்சியும், தருக்கநூலாராய்ச்சியும், கூட்டிக்கொள்க. இதுகாறுங் கூறிய நூலுரைகளை இவ்வாறு கசடறக் கற்று முதிர்ந்த நன்மாணாக்கர் **முதுதமிழ்ப்புலவர் (B. A)** என்னும் பட்டாபிதானத்துக்குரிய ரென்றுணர்க.

இங்ஙனந் தமிழிலக்கண விலக்கிய முதலிய வித்தைகள் கற்று முதிர்ந்தோருட் சைவ நன்மாணாக்கர், சைவாசாரியரை யடைந்து வழிபட்டு மந்திராதிகார மாச்சஞதிகாரம யோகாதிகாரங்களை நன்று பயக்குஞ் சைவசமய விசேட தீக்கையுற்று, சைவசமயநெறி, சிவதருமோத்தரம், பரமததிமிரபானு, ஞானாமிர்தம், தத்துவப்பிரகாசம், சோமசம்புசிவாசாரியார் கிரியாகாண்டக்கிரமாவலி, சித்தாந்தசாராவலி யென்பனவற்றையும், சதுர்வேததாற்பரியசங்கிரகம், சிவதத்துவவிவேகம், சிவகர்ணாமிர்தம், பாரததாற்பரியசங்கிரகம், இராமாயணதாற்பரியசங்கிரகம், பிரமதருக்கத்தவமென்பனவற்றையுங் கற்று, வைதிக சைவவறிவுடையராய், வைதிக சைவானுட்டானஞ் கைவரப் பயின்றுகொள்க. சுத்தாத்துவிதிகளான சித்தாந்த சைவ நன்மாணாக்கர் கைவல்லியம் வேதாந்தசூடாமணி முதலிய கேவலாத்துவித வேதாந்த சாத்திரங்

களைக் கற்கவேண்டின், தஞ் சித்தாந்தப பார்வையாற் கற்க. இது விசிட்டாத்துவித வைணவ நன்மாணாக்கர்களுக்கு மொக்கும்.

சைவ நன்மாணாக்கருட் சித்தசுத்தி மிகவுடையராய் நித்தியா நித்திய விவேக வுணர்வு தோன்றிப் பிறவிக் கஞ்சி வீடுபேற்றி னவாமிகவுடைய பரிபாகிகளான நல்லோர், சித்தாந்த சைவ ஞானாசாரியரை யடைந்து வழிபாடாற்றி அகங்கார மமகாரத் தியாகஞ் செய்து, நிருவாண விஞ்ஞான தீக்ஷையுற்று, சிவஞான போதம், சிவஞானசித்தி, சிவப்பிரகாசம், திருவருட்பயன் முதலிய வத்துவித சைவ சித்தாந்த நூல்களை பதிஞான்றைப் மவற்றி னுரைகளோடும், வேதாந்த சித்தாந்த சாத திரப்பொருள் எனைத்தையு மைய விபரீதமற வடக்கி விளக்கும் சகலகலா ரூபமான சிவ ஞானமாபாடியத்திணோடும், ஞானாசாரியரை வழிபட்டு, முறையாற் கேட்டல் சிந்தித்த றெளிதல் செய்து, சிவானுபவங் கைவருமாறு சிவயோக மென்னு மத்துவித நிட்டை பெறுக. இங்ஙன ஞானாதிகாரிகளான நல்லோர் சாந்தோக்கியம், கேனம், பிரசினம், முண்டகம், மாண்டூக்கியம், தைத்திரீயம், ஐதரேயம், சாந்தோக்கியம், பிருகதாரணியகம், சுவேதாச்சுவதரம், கைவல்லியம், அதர்வசிரசு, அதர்வசிகை யென்னுஞ் சைவோப நிடதங்களையும், பவுட்கரம், மிருகேந்திரம், தேவிகாலோத்தரம், சர்வஞானோத்தர முதலிய சைவாகமங்களையும், தாஞ்சாற்றுணர்ந்த வேதாந்தத் தெளிவான திராவிட சைவ சித்தாந்தப் புலமைக் காணுக வாயாதுணர்ந்து கொள்க. ஈண்டுச் சொல்லிய வுபநிடதங்களின் மெய்ப்பொருளைக் காணாதார்க்கு துவித விசிட்டாத்துவித கேவ லாத்துவிதப் பாடிய வுரைகளாற் பேதிக்கப்பட்டிருத்தலின், சைவ சித்தாந்த ஞான குருவரு ளுபதேச மாந்திரப் பார்வையா லவற்றின் மெய்யுணர்ந்து சுத்தாத்துவித நிலைக் கடைப்பிடி யுறுதி யுறுக.

அதன்மேல், இங்ஙனங் கூறிய வேதாந்தத் தெளிவான சைவசித்தாந்த ஞானநூல் பல தெய்வத்திருவரு ளிலக்கியமான தேவாரந் திருவாசகந் திருக்கோவை யுத்தரவேத முதலிய திருமுறைகளைத் திருவருட்டுணையொன் றென்று மாராய்ந்து, ஓதிப், பரமசிவன் திருவடிக ளிழப்பிரிவறப் பொருந்துந் தியனைமுத்தி யுணமைநிலை தலைக்கூடி வாழ்க.

வைணவநல்லோர், தத்துவசேகரம், தத்துவத்திரயம், வசனபூஷண முதலிய தஞ்சமய சாத்திர முறையாற் கேட்டுச் சிந்தித்து விசிட்டாத்துவித சித்தாந்தந் தேறி, நாலாயிரப்பிரபந்தங்களைத் திருவருட் பார்வையா னென்று மாராய்ந்து, நாராயண மூர்த்தி திருவடிக் கீழிருக்குஞ் சாரூப்பிய நிலை தலைக்கூடி வாழ்க.

மேற்கூறி முத்தமிழ்ப் பட்டணையோ டிங்ஙனங் கூறிய வேதாந்த சித்தாந்த சாத்திரப்புலமையு நன்கு கைவரப்பெற்றார் முதுதமிழ்ப்பெரும்புலவர் (M. A) என னும் பட்டாபிதானத்துக் குரியரென் றுணர்க.

கல்வியறிவின்பயன்.

இனித் தமிழ்ப்புலமையா லெய்தற் பாலபேறு சாதித்தலையுமாறு கூறுதும்.

இன்னிலைபரான தமிழ்ப்புலவ ரறத்தாற்றுற் பொருளீட்டி யின்னிலைக்கு விதித்த கருமம வழாது செய்து போகந் துய்த்துச் தருமமுந் தக்கார்க்குச் செய்க. பொரு ளீட்டுங்கா லருளொடு மனபொடும் பொருந்தி யீட்டுக. என்னை? அருளொடு மன பொடும் பொருந்தி வாராத பொருள் பசுமட்கலத்து ணீர்போலச் செய்தானையுங் கொண்டழிதலின். இல்லறநெறி நிற்பார், வறியார்க்கு வேண்டுவன வுதவ லயர்

வறுமை களைய வல்லராதலும், தாமெடுத்துக்கொண்ட நல்வினையை முடிக்கவல்லராத
லும், தம் பகைவர் தருக்கறுக்க வல்லராதலும், வேண்டியின்ப நுகர வல்லராதலும்,
பொருளுடையராய வழியே யாகலின், அப்பெற்றித்தாய பொருளை நெறியா னீட்டுப
வீட்டுக. பொருளீட்டுங்கால் தமபுலனை யடக்கித் துணைக்காரணமாமென்று ஞான
மடக்கத்தன்று. என்னை? அறிவுடையார் வறியராகவும் மேனையார் செல்வராகவுங்
காணடலின். ஆகவே, அறிவுடையராதற்காகு மூழ் செல்வமுடையராதற் காகாது,
செல்வமுடையராதற்காகு மூழ் அறிவுடையராதற் காகாது. நாயனாரும் "இருவே
றுலகத் தியற்கை திருவேறு - தெள்ளிய ராதலும் வேறு" என்றெடுத் தருளிச்செய
தார். இன்னும், யாவரும் பொருளுண்மையு மதற்கு காரணமாக வெய்துவின்
பழமுன்னைவினையா னமைந்து கிடந்தன, பொருளின்மையு மதற்குகாரணமாக வெய்துவ
தன்பழ மங்ஙனமே முன்வினையா லமைந்து கிடந்தன. அவை இம்மையறிவு முய
றசியாலு மடிந்ன்மையாலு முளவாவன வென்று கொண்டு மகிழ்தலுங் கவறலு மறி
வின்மையாம். இங்ஙனமாதலின், கல்வியறிவு தெளிவியராய் நின்று நன்றுசெய்திக
ததிறைப்பொருளும் பாரதிற் றுறக்கம் வீடுபேறுக்கும் பெய்துதற்கு சாதனமாவதாமெனக.
இனிப் பொருள் பழவினையான் வருமென்று கொண்டு அதனை யீட்டு முயற்சியின்றி
மடிபுக்கிருத்தலாகாது, அதனை யூக்க முடையராகி யீட்டுக, "முயற்சி திருவினையாக்
கும்" "மடியிலான் றாளுளாள் டாமரையினாள்". "ஆக்க மதர்வினாய்ச் செல்லு
மசைவிலா - வூக்க முடையா னுழை" என்பவாகலின். இனிக் கல்வியறிவுடையார்,
பொருளைக் கல்வியினாலும் உழவினாலும் ஈட்டல் சிறப்பாம். வாணிகத்தினாலும்
சேவகத்தினாலும் பொருளீட்டு லத்துணைச் சிறப்பின்றாம். யாதினாலெனின்,— கல்வி
யுழவுதொழிலால் பொருளீட்டும் புலவர் சுவதந்திரராயிருந்து இகபரசாதனங் கலை
யுத்தாமற் செய்தற்கு வல்லுநராவர், மற்றிருவகையா னீட்டும் புலவர் கலையுட
பாரதந்திரமு முடையரா யிகபர சாதன முட்டுற்றிருந்து செய்யனீரராவர்; அதனா
லெனக

இங்ஙனம் பொருளீட்டிக் கல்வியினால் இகபர சாதனம் பேணி வாழு நற்புல
வர், ஈந்து சொற் செப்பல்களால் யாவர்க்கு முபகாரிகளாய வாழ்க. அங்ஙன முபகாரி
களாதலைப் பயன் நோக்கிச் செய்யற்க, கடனாகக்கொண்டு செய்க. இனிச் செய்யுந்
தொழிலெல்லாம் பரமேசுரார்ப்பணமாகச் செய்க. தொழில்களைத் தமக்கென்று கொ
ண்டு செய்வோ ரவற்றாற் றடக்குறுவர்; பரமேசுரார்ப்பணமாகச் செய்வோ ரவற்
றாற் றடக்குறார் அவரவற்றாற் றடக்குறாமை யொன்றே, பரமேசுர னருண்ஞா
னமு மெய்திப் பிறப்பிறப்பில் பெருவாழ்வு மெய்துப.

“கிரியையென் மருவுமவையாவு ஞானங்கிடைத்தற்கு நிமித்த”மாதலின், கருமங்
களைப் பயன்றுருக்காது பரமேசுரார்ப்பணமாகச் செய்வோர் பிரம ஞானமெய்தி வீடு
பேறு கூடுவரென்பது வேதாகமத் துணிபாம். “அன்பு மருளு மறிவுக் கடையாளம்”
என்பவாகலின், கல்வியறிவுடையா ரவ்விரண்டனையுந் தமக்கணியாகக் கொண்டு போற
றல்வேண்டும். அன்பு தொடர்புடைய வுயிர்கண் மாட்டும் அருளவ்வாறன்றி யெல்லா
வுயிர்களிடத்து நிகழு மறிவு வியாபாரமாதலின், அன்பினு மருள் சிறந்த ஞானசாத
னமாம். அன்பு இல்லறத்தா ரறிவு வியாபாரமும் அருள் துறவறத்தா ரறிவு வியாபா
ரமுமாம். இல்லறத்திற் றொடர்பு பற்றி யெழுமன்பே துறவறத்திற் றொடர்பு பற
றது அருளாய் முதிரும். நாயனாரும் “அருளென்னு மன்பீன் குழவி” யென றரு

ளிச்செய்தார். பொருட்செல்வ நல்லோர்பாலன்றிப் பூரியர்பாலு முளதாவதாம். அருட்செல்வமோ நல்லோர்பாற்றானே யுளதாவதாம். ஆதலின், அருட்செல்வமே செல்வங்களுள் வைத்துச் சிறந்த நற்செல்வமாம். நாயனாரும் "அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம் - பூரியார் கண்ணு முள" என் றெடுத்தருளிச்செய்தார். இன்னும், பொருளுடையா ரிவ்வுலக நுகர்ச்சியே யெய்துப. அருளுடையார் இவ்வுலக நுகர்ச்சியு மவ்வுலக நுகர்ச்சியுந் துய்ப்பா ரெய்துப. இன்னும், அருட்செல்வமுடையா ரிம்மையிற்றானே தெய்வத்தன்மை யுற்று எல்லா வுயிர்களாலுந் தொழப்படுந் தன்மையுடையருமாவர். இங்ஙனமாதலின், கல்வியறிவுடைய நன்மக்க ளெப்பொழுது மப்பெற்றித்தாய வருட்பெருஞ் செல்வத்தைக் குறிக்கொண்டு கடைப்பிடித் திட்டனரும். இவ்வருளற மிங்ஙனஞ்சிறந்து நேராக ஞானசாதனமாதலினன்றே, "அஹிம்ஸா பரமோ தர்ம:" என்றும், "நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங் - கொல்லாமை சூழு நெறி" "ஒன்றாக நல்லது சொல்லாமை" "அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன் - னுயிர்செகுத் துண்ணாமை நன்று" என்றும், "கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க - வெல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை பராபரமே" "கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங் கோள்களவு - கல்லாமற் கைதவரோ டிணங்காமற் கனவிலும் பொய் - சொல்லாமற் சொல்லினுஞ் சேராமற் [illegible] - செல்லாமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே" என்றும், உண்மைநூல்க ளங்ஙன முறையிட்டனவென்க. இனிச் சிவகாருண்ணியம் பேணுதி. கொலை யூனுண்போரெலா, புலவொன்றுங் குரவொன்றும் பிரமஞானப் பாதகாசிரிய ரென்று முலகத்து நிலவுகின்றார். "உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண - வண்ணாத்தல் செய்யா தளறு" "கங்கையிற் படிந்திட்டாலுங் கடவுளைப் பூசித்தாலு-மங்குலுற் றிறங்கு சோதி தானம் வள்ளலாய் வழங்கினாலுஞ்-சங்கையில் லாத ஞான தத்துவ முணர்ந்திட்டாலும்-டொங்கிப் புலால் புசிப்போன் போய் நரகடைவ னன்றே" என வுண்மைநூல்கள் முறையிடுதலை யவ ரறியார் போலும்!

யாவராயினுந் தாமனுட்டிக்காத வறத்தினைப் பிற ரனுட்டிக்கப் போதித்தல் பெரும் பேதைமையாம். நாயனாரும் "ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப் - பேதையிற் பேதையா ரில்" என் றெடுத்தருளிச் செய்தாரென்பது. குணகுற்றங்கள் பழவினை காரணமாக வெம்மனோர் மாட்டு நிகழ்தலின், குற்றச்செயலுடையராய வொருவர் தங்குற்றச்செயல்களினைக் கெடுத்து, அவை தவிர்ந்து நற்குண நற்செய்கையுடையராயக், தாமுன்செய்த குற்றங்களி னாதல்லப் பிறர்க் கெடுத்துச் சொல்லிக் குணப்பிரசங்கஞ் செய்தற் றக்கதேயாம். அவர் அவ்வாறு நன்று நாடிச் செய்யுங் குணப்பிரசங்கத்தினை முன்னைக் குற்றச் செய்தி காரணமாக வவமதித்த றக்கதன்றும்.

இனித் தமிழ்ப்புலமையுடையார் கடைப்பிடித்துச் செயற்பாலன. தங்குலநலம் பேணல், தந் தேசநன்மைபேணல், தஞ் சமயநன்மைபேணல், நன்மாணாக்கர்க்குக் கல்வி கற்பித்தல், நல்ல நூலுரைகளை யியற்றுதலென் றிவை முதலாயின. முற்காலத்துத் தமிழ்ப்புலவ ரிப்பொதுநன்மைகளைக் கடைப்பிடித்துச் செய்து புகழுடம்பு நிறுவிப் பரவாழ்வு பெற்றார். இக்காலத்துத் தமிழ்ப்புலவருட் பெரும்பாலா ரிவை செய்யாது, தங் குடும்ப வோம்புத லொன்றுமே செய்து, கல்வியறிவுப் பெரும்பயன் கொள்ளாது, வீணே காலங்கழித்திடுவர்!

இனிக் கல்வியென்னு நற்பொருட் புலமையாளர் இறைமுதற் கடவு டிருவரு ளூடி யவனையு மவனருள் பெற்ற பெரியாரையும் பாடி உய்தறேடுதலன்றிப் பொய்ம் மையாளரான வுலக மாந்தரைப் பொருட்பேறு கருதிப் பாடுதல் பெருங் குற்றமாம். "பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்" என்று சமயாசாரியரும், "ஒழிவொன் றில்லாதபல் லூழிதோ றூழி நிலாவப்போம் - வழியைத் தருநங்கள் வானவ னீசனை நிற்கப்போய்க் - கழியமிக் நல்ல வான்கவி கொண்டு புலவீர்கா - ளிழியக் கருதியோர் மானிடம் பாடலென் னாவதே" என்று ஆழ்வாரும், பணித்தருளினார்.

இனித் தஞ்சமய நன்மை நாடும் புலவர் நியாயநெறியானே யதனைப் பரிபால னஞ் செய்க. சமயாபிமானங்கொண்டு குதர்க்க சமயவாத மொரு ஞான்றுஞ் செய்யற்க. சமயங்களெல்லா மொரு முதற்கடவு ளாணையின் வெவ்வேறு வகுப்பினரா கிய வதிகாரிகள் பொருட்டுத் தோற்றுவிக்கப்பட்டு நிலைபெறுவனவாதலின், குதர்க்கத் தாற் றஞ்சமய நாட்டிப் பரசமய நிந்தித்தல் குற்றமாம். சமயங்கள் ஒரு முதல்வ னாணையிற்றோன்றிச் சோபானமாய்த் தாரதம்மிய முற்று நிலைபெறுமாறு ஞானாமிர்த மென்னுங் கிரந்தத்தில் விரித்துக் கூறினும்.

இன்னும், இக்காலத் தமிழ்ப்புலவர் சற்புத்திரரைப் பெற்று, அவரைக் கல்வியறிவு டையராக்கிக், குடும்பபார மவர்மே லிறக்கி விட்டுப், பிரபஞ்ச வைராக்கியமுற்றுத் துறந்து மெய்யுணர்ந்து அவாவறுத்துப் பரவீடு பேறு கூடு மென்னுஞ் சிறிது மில ராய்ச், "சொற்றளர்ந்து கோலூன்றிச் சோர்ந்த நடையினராய்ப் பற்கழன்று பண்டம் பழிகாறு மிற்செறிந்து' மக்கண் மனைவி யொக்கற் பற்று முறுகி, அவர்நெறிப்பட் ருவீராவர் 'அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும் - வேண்டிய வெல்லா மொருங்கு" "தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி - வலைப்பட்டார் மற்றை யவர்" என்று நாயனா ரருளிச்செய்தலின், வீடு வந்த விருவகைப்பற்றும் விட்டறுத்த, துவ வரத் துறந்து பற்றற்றான் பற்றினைப் 'பற்றுத லொருதலையாற் செயற்பால தென்க. நன்மனச் சனகருதியரு மந்திரி முதலியோர் மீது பூபாரம் வைத்து ஏகாந்தமருவியே நிட்டை கூடிப் பற்றறுத்துச் சீவன் முத்தராயினாரெனின், பரவீடுபேறு மனை வாழ்க்கை துறந்து விரதம் பேணி ஏகாந்த மருவி மெய்யுணர்ந்து அவாவறுத்தார்க்கே யுளதாவதென்பது துணிபாம் இங்ஙனமாகலின், நிலையாமை நாடி நெஞ்சிற் றுற ந்து மெய்யுணர்ந்து அவாவறுத்துச் செம்பொருண் ஞானச்செல்வராய் வாழ்தலே ஒரு நன்மக்களுக்குக் கல்வியறிவின் முக்கியப் பயனென்பது கடைப்பிடியாயிற்று. "நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து - வாழ்வாரின் வன்கணா ரில்" எனவெடுத்தருளிச் செய்தலின், நெஞ்சிற் றுறந்தென்றும். "கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ- னற்றா டொழாஅ ரெனின்;" "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுப - மற்றீண்டு வாரா நெறி."

ஒழிபியன் முற்றிற்று.

திருவாவடுதுறை மாதவச் சிவஞானயோகி சுப்பிரமணியதேசிகன் அருளுப தேசம் பெற்ற சபாபதிநாவலரியற்றிய திராவிடப்பிரகாசிகை முற்றிற்று.

இந்நூலாசிரியரியற்றிய நூல்கள்.

(௧) **சிதம்பரசபாநாதபுராணம்** — இஃது சிதம்பரமான்மிய மைந்தனு ளொன்றான ஏமசபாநாத மான்மிய மொழிபெயர்ப்பாயுள்ளது; தொல்லாசிரியர் செய்யு ளுடைத்தாய நடராசமூர்த்தி தல தீர்த்த வரலாறு உணர்த்துவது.

(௨) **சிவகர்ணாமிர்தம்** — இது அப்பய்யதீக்ஷிதயோகிகள் வடமொழியிலியற்றிய சிவகர்ணாமிர்த மொழிபெயர்ப்பாயுள்ள வசனகிரந்தம், பூர்வபக்கஞ் சித்தாந்தமென விருபகுதிப்பட்டுச் சிவபரத்துவ நாட்டுவது.

(௩) **சதுர்வேததாற்பரியசங்கிரகம்** — இது வடமொழியில் அரதத்தாசாரியரியற்றிய சதுர்வேததாற்பரியசங்கிரக மொழிபெயர்ப்பாயுள்ள வசனகிரந்தம்; பரமசிவனே நான்கு வேதங்களானு மெடுத்தோதப்படும் பரம்பொருளென்று சாதிப்பது.

(௪) **பாரததாற்பரியசங்கிரகம்** (௫) **இராமாயணதாற்பரியசங்கிரகம்** — இவ்விரண்டும் வடமொழியில் அப்பய்யதீக்ஷிதயோகிகளியற்றிய பாரததாற்பரியசங்கிரகம் இராமாயணதாற்பரியசங்கிரக மொழிபெயர்ப்பாயுள்ளன, பாரதத்தானும் இராமாயணத்தானு நாட்டப்படும் பரம்பொருள் பரமசிவனென்ப தறிவுறுத்துவன.

(௬) **யேசுமதசங்கற்பநிராகரணம்** — இது யேசுமதத்தர் கொள்கை பூர்வபக்கமாக வைத்துத் தருக்கத்திறை றெரிப்பது.

(௭) **இலக்கணவிளக்கப்பதிப்புரைமறுப்பு** — இஃது இலக்கணவிளக்கச்சூறாவளியினமே னிகழ்த்திய குதர்க்கமறுத்து அதன் நியாயபலம் விளக்கும் வசனகிரந்தம்.

(௮) **வைதிககாவியதூஷணமறுப்பு** — இது பெரியபுராணம், இராமாயணம், தணிகைப்புராணமென்னும் வைதிககாவியங்களை, அநியாயமாகத் தூஷித்துச் சிந்தாமணியென்னும் அவைதிககாவியம் பாராட்டினுரை நியாயத்தினை மறுத்து வைதிககாவியமாட்சி நிலையிட்ட வசனகிரந்தம்.

(௯) **ஞானசூடாமணி** — இது சிரவணமாதி நான்கும் பரபரஞானமா யடங்குமாறு நிரூபிப்பது.

(௧௦) **ஞானாமிர்தம்** — இது சமயங்களெல்லாம், முழுமுதற்கடவு ளொருவனருணையிற் றோன்றி அதிகாரிபேதம்பற்றித் தாரதம்மிய முற்று நிற்கு முறைமை யுணர்த்தும் வசனகிரந்தம்.

(௧௧) **திருச்சிற்றம்பலவந்தாதி.**

(௧௨) **திருவிடைமருதூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி.**

(௧௩) **மாவையந்தாதி**

(௧௪) **சிதம்பர பாண்டியநாயக மும்மணிக்கோவை.**

(௧௫) **வடகோவைச் செல்வவிநாயகரிரட்டைமணிமாலை.**

(௧௬) **நல்லைச் சுப்பிரமணியக்கடவுள் பதிகம்.**

(௧௭) **வதிரிநகர்த் தண்டபாணிக்கடவுள் பதிகம்.**

(௧௮) **புறவார் பனங்காட்டூர்ப் புறவம்மை பதிகம்.**

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி	பிழை.	திருத்தம்.
க	கூ	புயககலை	புயக்கலை
[illegible]	௮	கோனெறுடையபெண	கோனெனை
,,	[illegible]	இசையையெனறது	இசையென்றது
[illegible]	[illegible]	அவவழகு	அவவழக்கு
,,	[illegible]	இபபுடவிற	இபபுடவியிற
[illegible]	[illegible]	முடிவதூஉம	முடிவ"தூஉம்
[illegible]	க	அகததிஞா	அகததியஞர்
[illegible]	[illegible]	இறறமிழாராய்சசி	இயற்றமிழாராய்ச்சி
[illegible]	[illegible]	மறுநீாசசுணையும	மறுநீாச்சுணையும
[illegible]	[illegible]	அவிருபாறகும்	அவவிருபாற்கும
[illegible]	[illegible]	வில்லறவின்ப	இல்லறவின்ப
[illegible]	[illegible]	அரசனீதிநீதிநூனிகதை	அரசனீதிநூனிகதை
[illegible]	[illegible]	மலைவுடைதராம.	மலைவுடைடவாம.
,,	[illegible]	ஓதபபடுலொறுமம.	ஓதபபடும.
[illegible]	[illegible]	பிறநதும	பிறநதும
[illegible]	[illegible]	வகைமாநதூ	வகைமாநதூ
[illegible]	[illegible]	[illegible]	[illegible]ராணிந[illegible]
[illegible]	[illegible]	[illegible]ாகாதூ"	ஓததாகா"
[illegible]	[illegible]	[illegible]	விரொதறாநுதும
,,	[illegible]	[illegible]	மிரொதறுயு
[illegible]	[illegible]	[illegible]ததும	முணாததும
,	[illegible]	செயயபபட்டது	செய யபபட்டது
[illegible]	[illegible]	[illegible]டியலஙகாரம	சணடியலங்காரம்
[illegible]	[illegible]	யாபபுள	யாபபுள
[illegible]	[illegible]	[illegible]	[illegible]
[illegible]	[illegible]	யனை	யனைத
[illegible]	[illegible]	பினனையார	பினனையார்
[illegible]	[illegible]	ஓதியதூஉம.	ஓதியதுஉம,
[illegible]	[illegible]	யுபதேச	யுபதேச
,,	[illegible]	நமபாணடா	நமபாணடாா
[illegible]	[illegible]	திருவாசக	திருவாசக
	[illegible]	அரசாககு	[illegible]ரசாககு
[illegible]	உ	திருபபாடடுகளாலும்	திருபபாட்டுக்களாலும்
,,	உ	வாசியா	வாசிரியர்
[illegible]	[illegible]	முபபாதிசருகுறனொன்	முபபாதிருக்குறளொன
[illegible]	[illegible]	காணடாகிய	கா[illegible]கிய

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௧௩௨	௪௪	ஏகார	எகார
௧௩௪	௧௩	முலிய	முதலிய
௧௩௬	௧௧	பரம	பிரம
௧௪௪	௩௪	யதனை	யதனை
௧௪௪	௩௬	பொருலலல	பொருளல்ல
௧௪௫	௧௮	தனபால	தனபால்
௧௫௪	௩௦	முறறுறறு	முறறுறறு
௧௫௪	௩௪	பறறி	பறறிப
௧௮௪	௮	கிளக்குகிளக்கு	கிளக்கு
௨௦௨	௪	நிராகரித்து	நிராகரித்துச்
௨௦௩	௧௪	விஃது	விஃதா
,,	௧௫	விஃது	விஃதா
௨௦௭	௨௬	உறறபின	உறபின
௨௦௮	௫	ஆசமதனை	ஆகமதநே
௨௧௦	௬	தியாசகிய ருசெயது	தியாகருசெயது
௨௧௧	௪௩	கலவியறிவு	கலவியறிவு
௨௧௩	௨௩	துவவார	துவார
	௨௫	பாராபர	பாராபர

இந்நூலை கைக்கொள்வோர் படிக்கு [illegible] பிழைகளைத்
திருத்தத்தின்படி முன்னதாகத் திருத்திக்கொள்ளும்படி [illegible].